# சித்தர் இலக்கியம்

ஆய்வு நூல்

மீ.ப.சோமு



அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு

# சித்தர் இலக்கியம்

## மூன்றாம் பகுதி

ஆசிரியர்:

**மீ.ப. சோமசுந்தரம்**

**சோமு**

வெளியீடு:

**அண்ணாமலைப் பல்கலைக்கழகம்**

முதல் பதிப்பு: 1992
இரண்டாம் பதிப்பு: 2004
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

விலை: ரூ. Rs 120 -
வெளிநாடு:

மற்ற விபரங்களுக்கு:
சிறப்பு அதிகாரி
நூல் வெளியீட்டுத்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர் - 608 002.

அச்சிட்டோர்:
**ரோஜா கம்ப்யூட்டர் பிரிண்டிங்**
கும்பகோணம்.

# அணிந்துரை

(டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்கள்
இணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)

சித்தர் இலக்கியம் - ஆய்வு நூல் திட்டமிட்டபடி நிறைவேறுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

என் அருமைத் தந்தையார் அவர்கள் தமது மறைவுக்குச் சில வாரங்கள் முன்பு இந்த ஆய்வுப் பணியைத் திரு. மீ.ப. சோமசுந்தரம் அவர்கள் செய்யவேண்டும் என்று விரும்பி, இந்நூல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வாயிலாக உருவாவதற்குரிய திட்டத்தைக் கலந்து பேசினார்கள். இந்நிலையில் அவர்களுடைய மறைவுக்குப் பிறகு, தந்தையார் உருவாக்கிய திட்டத்தை நிறைவேற்றுகிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. விரிந்து பரந்த இந்த அரிய ஆய்வு நூலைப் பகுதி பகுதியாக வெளியிட்டு வழங்குகிற பணியானது, எங்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழுக்குச் செய்கிற ஒரு நிலையான தொண்டு என்று நான் கருதுகிறேன்.

திரு. மீ.ப. சோமு அவர்கள் ஆழ்ந்த மொழிப் புலமையோடு, தத்துவ நுண்ணறிவும், மேனாடுகளில் நடந்து வருகிற நவீன விஞ்ஞான ஆராய்ச்சிகளை ஒப்பு நோக்கும் ஆற்றலும் நன்கு இணைந்த ஒரு நல்லறிஞர், சில மகான்களில் நேர்முகத் தொடர்பும் அவருக்கு உண்டு. எந்தப் பணியை யாரிடம் எவ்வாறு ஒப்படைக்க வேண்டும் என்று தேர்ந்தெடுப்பதிலே வல்லமை பெற்று விளங்கிய என் தந்தையாரின் எண்ணம் நூல் வடிவில் இப்போது மலர்கிறது! இந்தச் சிறந்த நூலைத் தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்வதில் பேருவகை அடைகிறேன்.

**எம்.ஏ.எம். இராமசாமி.**

# அணிந்துரை

(பேராசிரியர் **இராம.சேதுநாராயணன்** அவர்கள்
துணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)

சித்தர் இலக்கியம் பற்றிய இந்தத் தத்துவ, ஆய்வு நூலைப் படித்ததும், என் உள்ளத்தில் ஒரு மனநிறைவு ஏற்பட்டது. நிலைத்து நிற்கக்கூடிய ஒரு மதிப்புமிக்க ஆராய்ச்சி நூலை, நமது பல்கலைக் கழகம் வெளியிடுகிறது என்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இத்தருணத்தில் இந்த ஆய்வுப் பணிக்கு வித்திட்ட வள்ளல் டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்களை நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

இந்நூலின் ஆசிரியர் மீ.ப. சோமசுந்தரம் (சோமு) அவர்கள், தமிழ் கூறும் நல்லுலகம் முழுதும் நன்கறிந்த நல்லறிஞர். புதுமைப் படைப்புகளையும், பழைமை ஆய்வுகளையும் இரண்டையுமே இயற்றி, தம்முடைய நூல்கள் பலவற்றுக்கு மதிப்புயர்ந்த விருதுகள் பெற்றவர். சாகித்திய அகாதமிப் பரிசு, தமிழக அரசின் மூன்று இலக்கியப் பரிசுகள், பாரதி தங்கப் பதக்கம், டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் இலக்கியப் பரிசு, இவற்றோடு இன்னும் பல பத்திரிகைப் பரிசுகளும் பெற்றவர். தருமை ஆதீனத்தின் "பல்கலைவித்தகர்", தமிழ் இசைச் சங்கத்தின் "இசைப் பேரறிஞர்" போன்ற பல பட்டங்கள் பெற்றவர். மூதறிஞர் ராஜாஜி தமது தத்துவ நூல்களுக்கு இவரைத் தமது இணைப்பாசிரியராகக் கொண்டு வெளியிட்டிருக்கிறார் என்றால், எந்த அளவுக்கு நமது நாட்டின் மாபெரும் அறிஞர் பெருமக்களின் நன்மதிப்பைப் பெற்றவர் இவர் என்பது கண்கூடு.

இந்த நூலில் இவருடைய விஞ்ஞான நோக்கும், எதையும் அறிவியலோடு ஆராய்கிற திறமும், இவருடைய ஆழ்ந்த இலக்கிய இலக்கணப் புலமையும், பன்மொழி அறிவும், விரிந்து பரந்த ஆங்கில ஆராய்ச்சியும், தத்துவப் பயிற்சியும், மகான்களுடன் இவருக்குள்ள

6-3



நேர்முகத் தொடர்பும். இவருடைய குடும்பத்து முன்னோர்கள் சிலர் சித்தர்களாக விளங்கிச் சுவடிகளிலே வழங்கியுள்ள ஞான உண்மைகளும்-அனைத்தும் தெளிவோடு துலங்குகின்றன. அதோடு, இவருடைய தமிழ் நடையானது புலமையும் புதுமையும் அழகாக இணைந்து இலக்கணத் திருத்தத்தோடு சரளமாக ஓடுகிற நல்ல நடையாகும். படிப்பதற்குச் சுவையும் படிக்கப் படிக்க ஆழ்ந்த கருத்துக்களை உள்ளடக்கிய பொருண்மையும் ஒளிவீசுகின்றன. இந்த அழகான நூலை எங்கள் பல்கலைக் கழகத்தின் வெளியீடாகக் கொணர்வதில் களிப்படைகிறேன்.

**இராம. சேதுநாராயணன்**

ACC NO: 12849

KOVILOOR ANDAVAR LIBRARY. KOVILOOR
A. No 12849

# முன்னுரை

சித்தர் இலக்கியம்--ஆய்வு நூலின் மூன்றாம் பகுதியை எழுதி முடித்ததும், என் மனக்கண்ணில் வந்து தோன்றி நிற்பவர் டாக்டர் ராஜா சர்.முத்தைய செட்டியார் அவர்களே.

முன் பகுதிகளில் நான் குறிப்பிட்டவாறு, இந்த ஆய்வுப் பணியில் நான் ஈடுபடுவதற்கு மூலகாரணம் செட்டிநாட்டு அரசர் அவர்களே! அன்பு நிரம்பிய அந்தப் பெருமகனாருக்குப் பணிவன்பு கலந்த ஆன்ம அஞ்சலி யைச் செலுத்துகிறேன்.

தந்தையின் மறைவுக்குப் பின்பு, தந்தையின் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தி, இப்பணியை என்னிடம் ஒப்படைக்கும்படி இயக்கிய இணைவேந்தர் டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்களுக்கு என் ஆழ்ந்த நன்றி உரியதாகும்.

இந்த நூலை அச்சிடும் பணியிலும், என் ஆய்வுப்பணி தொடரும் வகையிலும் எனக்குப் பல்லாற்றாலும் ஊக்கம் தந்து வருகிற துணைவேந்தர் பேராசியரியர் இராம.சேதுநாராயணன் அவர்களுக்கு மிக்க நன்றியுடையேன்.

சித்தர் இலக்கியத்தின் பொருண்மையை ஆய்வுசெய்து, அதன் தொகை விரிவுகளைப் பற்பல சான்றுகளுடன் விளக்கி முதல் இரண்டு பகுதிகளையும் எழுதி முடித்தேன். இதன் மூன்றாவது பகுதி சித்தர் தத்துவத்தின் இலக்கிய நூல்களை உரைக் குறிப்புகளுடன் ஆதாரமாக வழங்குகிறது.

ஒன்பதாந் திருமுறையில் நம் சான்றோர்கள் சேர்த்துள்ள கருவூர்ச் சித்தர் உள்ளிட்ட மூன்று அரும்பெருஞ் சித்தர்களின் கவிதைகளும் பதினோராந் திருமுறையில் உள்ள காரைக்கால் அம்மையாரின் பாடல்களும், பட்டினத்தடிகளின் பாடல்களும் சித்தர் தத்துவஞானத்தின் அடிப்படையில் இப்பகுதியில் விளக்கம் பெற்றுள்ளன. இவற்றைத்

தொடர்ந்து பதினோராந் திருமுறையில் காணப்பெறாத பட்டினத்தார் பாடல்களும் விளக்கம் பெற்றுள்ளன. பட்டினத்தடிகளின் இந்தப் பாடல்களிலே பலவும் சித்தர்களின் பாங்கில் அமைந்த எழிலார்ந்த அற்புத ஞானக் கவிதைகளாகச் சித்தர் தத்துவப் பொலிவுடன் ஒளி வீசுகின்றன.

இவற்றின் பொருண்மை பற்றியும் இவை தோன்றிய காலம் பற்றியும் தனியான ஓர் ஆய்வு இந்தப் பாடல்களைத் தொடர்ந்து ஒரு விளக்கக் கட்டுரையாகவே தந்திருக்கிறேன்.

சித்தர்கள் கூறுகிற நான்கு நெறிகளின் ஒருமைப் பாட்டுக்கும் இந்தப் பகுதியிலே உள்ள பனுவல்கள் தக்க சான்றுகளாகவும் மேற் கோள்களாகவும் திகழ்வதைக் காணலாம்.

இந்தத் தொகுப்பிலுள்ள பாடல்கள் எல்லாம் ஞான வேள்வியிலே எப்படிப் "பாட்டவி" யாக அமைகின்றன என்பது பற்றியும், சித்தர் வாக்காக இந்தப் பாடல்கள் விளங்குவதால் இந்தப் பாடல்களுக்குள்ளே பொதிந்துள்ள ஆன்ம ஆற்றல் பற்றியும் ஒரு தனியான விளக்கம் இந்தத் தொகுப்பின் முடிவுரையாகத் தந்துள்ளேன்.

இந்த ஆய்வுக்கு என்னிடமுள்ள சுவடிகளும், என் ஞானாசிரியர்களின் குறிப்பேடுகளும், இவற்றில் காண்கிற பாட பேதங்களும் பெரிதும் துணை செய்தன. சிவயோகியார், சுந்தர மாணிக்க யோகீசுவரர் ஆகியோரின் பதிப்புகளும், திருவாவடுதுறை ஆதீன நூல்களும், தருமை ஆதீன வெளியீடுகளும், சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தின் நூல்களும், மறுபதிப்பின்றி மறைந்துவிட்ட பழமையான சில பதிப்புக்களும் ஒப்பு நோக்குவதற்கு மிகவும் உதவின. வணக்கத்துக்குரிய ஆதீனக் குரு பரம்பரைக்கும் பதிப்பகங்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சித்தர் இலக்கிய ஆய்வுப் பணியிலே என் மன உலகில் எழுந்தருளி என்னை வழிநடத்துகிற என் குருநாதர்கள் சிக்கனம்பாறை கண்ணப்ப சுவாமிகளுக்கும், சிவயோகி இரத்தின சபாபதியாருக்கும் எனது, உள்ளார்ந்த அஞ்சலியைச் செலுத்துகிறேன்.

"பச்சை"
ஏ.ஐ. 122, எட்டாவது நேர்சாலை,
அண்ணாநகர்,
*சென்னை-600 040.*
பெப்ருவரி, 1989.

மீ.ப. சோமசுந்தரம்.

**Dr. L.B. Venkatrangan**
M.Sc., M.A., M.Phil., Ph.D.
Vice-Chancellor.

Phone : Office : 04144-238283
Res : 04144-238214
Fax : 04144-238925
04144-238080
E-mail : vc_lbv@hotmail .com

ANNAMALAI UNIVERSITY,
ANNAMALAI NAGAR P.O.608002
INDIA

# அணிந்துரை

சித்தர்களின் தத்துவத்தை, அவர்களுடைய வழிபாட்டு முறையை, அவர்களுடைய துதிப்பாடல்களை, அவர்களுடைய ஞானத்தின் பெருமையை, அவர்கள் வழிவழியாக வழங்கி வருகின்ற பல மெய்ஞ்ஞான நுட்ப ரகசியங்களை, சித்தர் நெறியைப் பின்பற்றும் மாணவர்களின் பயிற்சி முறைகளை ஆய்வுசெய்து எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் சித்தர் இலக்கியம் என்ற அரிய நூலை உயர்திரு. மீ.ப. சோமசுந்தரம் அவர்கள் அரிதின் முயன்று எழுதி இருக்கிறார்கள். மேலை நாடுகளுக்குச் சென்று அந்த மொழியிலே உள்ள சித்தர் இலக்கியத்தையும் ஆய்ந்தவர் இவர். ஆதலால் மேலை நாட்டுச் சித்தர் இலக்கியத்தை நுணுகிப்படித்து அந்த இலக்கியத்தின் குரல் திருமூலரின் குரல், கருவூராரின் குரல், சிவவாக்கியரின் குரல், பட்டினத்து அடிகளின் குரல் என்றே சொல்லத் தோன்றுகிறது என்று கூறி எந்த மொழியிலும் சித்தர்களின் மிஸ்டிஸிஸம் **(Mysticism)** என்னும் இறையனுபவம் ஒன்றாகவே இருக்கின்றது. அதன் வெளியீட்டு முறையும் அகில உலகப்பங்கிலே இருக்கிறது; என்று சான்றுகளுடன் ஆசிரியர் கூறியிருப்பது படித்து மகிழ்தற்குரியது.

சித்தர் தத்துவம் என்பது அறிவு கொண்டு ஒப்புக்கொள்ள வேண்டிய உய்த்துணரும் பார்வையோடு காணவேண்டிய விஞ்ஞான மெய்ஞ்ஞான பேரறிவுக் களஞ்சியமாகும்.

உயர்திரு மீ.ப.சோமசுந்தரம் அவர்களின் தந்தையாருக்குப் பல சித்தர்களின் நேர்முகத் தொடர்பு இருந்ததாலும், இவர்களுக்கும் பல சித்தர்களுடன் தொடர்பு இருந்ததாலும். இந்நூலை மிகவும் நல்ல முறையில் நுண்மாண் நுழைபுலத்தோடு எழுதியிருக்கிறார்கள்.

டாக்டர் இராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள் அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தின் வாயிலாகச் சித்தர் இலக்கியம் வரவேண்டும் என்று திட்டம் வகுத்தார்கள். தந்தையார் உருவாக்கிய திட்டத்தை நம் மாண்பமை இணைவேந்தர் டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு என் உளம் நிறைந்த நன்றியையும் வணக்கத்தையும் உரித்தாக்குகின்றேன். சித்தர் இலக்கியம் மூன்றாம் பகுதியை மறுபதிப்பாக அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பவளவிழா ஆண்டில் வெளியிடுவது மிகவும் பொருத்தமுடையது. இந்நூலைத் தமிழ் உலகம் படித்து நல்ல பயன் பெற வேண்டுகிறேன்.

(எல்.பி. வெங்கட்ரங்கன்)

**Dr. S. NATANASABAPATHY, Ph.D.,**
Director, CAS in Linguistics &
Dean, Faculty of Indian Languages
Annamalai University
Annamalai Nagar - 608 002.

Annamalainagar - 608 002
Tamil Nadu, India

Phone : 04144-222603 (R)
237331 (O)
Fax : 04144-238080
E-mail : natsyo24@yahoo co.in

# மதிப்புரை

சித்தர் இலக்கியம் என்ற ஆய்வு நூல் உயர்திரு. மீ.ப. சோமசுந்தரம் அவர்களால் எழுதப் பெற்றிருக்கிறது. இந்த ஆய்வு நூல் சித்தர் தமிழை ஆராய்கிறது. அந்தத் தமிழின் கவிமாண்பை, அந்தத் தமிழின் இலக்கிய மாண்புகளை, அதனுடைய ஆழ அகல நீளங்களை முந்தையோர் காட்டிய பாதையிலே சென்று காண்கிற ஓர் இலக்கிய ஆய்வு நூல் இதுவாகும்.

சங்க காலத்துக்கு முன்பு தொடங்கி இரண்டாயிரம் ஆண்டுகளாக நமது தமிழகத்தில் உலவி வருகின்ற சித்தர்களின் தமிழிலே ஒரே பண்பாடு கூடிய தனித்தன்மை, ஒருமைப்பாடு, மாறுபடாத கோட்பாடு நிலவி வருகின்றன. சித்தர் இலக்கியத்தின் குரல் ஒன்றே; அது உரைநடையோ, கவிமொழியோ எதுவாக இருந்தாலும் இந்த ஒலியின் குரல், அதனுடைய சுருதி ஒன்றே. தமிழகத்தில் மட்டுமல்லாமல் பாரத நாட்டில் மட்டுமல்லாமல் உலகெங்கிலும் சித்தர்கள் பேசுகிற குரல் ஓரே குரலாக இருக்கிறது.

'ஒன்றே குலமும்
ஒருவனே தேவனும்'

என்ற சித்தரின் குரல் உலகத்தின் ஞானக்குரல்.

இந்த ஆய்வு நூலின் பார்வையிலே மேலைநாட்டு அறிஞர்களின் கண்டுபிடிப்புக்களும் அங்கங்கே ஒப்பு நோக்கப் பெற்றிருக்கின்றன.

அத்துடன் சித்தர்களின் மெய்ஞ்ஞானப் பேருண்மைகள் அனைத்தும் விஞ்ஞான அறிவியற் பேருண்மையோடு ஒத்து இயைந்து நிற்பதைச் சுட்டிக்காட்டுகிறது இந்நூல். இவ்வாறு ஒப்பிட்டிருப்பது சித்தர்களின் இலக்கியத்திலுள்ள கோட்பாடுகள் மூட நம்பிக்கைகள் அல்ல. உண்மைகளே என்று நம்புவதற்குத் துணை செய்கிறது.

உயர்திரு மீ.ப. சோமசுந்தரம் அவர்கள் தவத்திரு கண்ணப்ப சுவாமிகளிடம் சித்தர்களின் பயிற்சிகளிலே தீட்சை பெற்றவர். இயற்றமிழிலும் சித்தர் தமிழிலும் தேர்ச்சியுடையவர். ஆதலால் இந்த அரியநூலை எழுதித் தமிழுக்கு அணிவித்திருக்கிறார்கள். சித்தர் இலக்கியம் மூன்றாம் பகுதியை மறுபதிப்பாகப் பவளவிழா ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைகிறேன்.

டாக்டர் இராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள் விரும்பியதற்கேற்ப மாண்பமை இணைவேந்தர் டாக்டர் எம்.ஏ.எம் இராமசாமி அவர்கள் சித்தர் இலக்கியம் வெளிவர உதவியிருக்கிறார்கள் அவர்களுக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் மறுபதிப்பாக வெளிவர உதவிய அண்ணாமலைப் பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் பேராசிரியர் டாக்டர் எல்.பி. வெங்கட்ராங்கன் அவர்களுக்கு என்னுடைய உளம் நிறைந்த நன்றியைப் புலப்படுத்துகிறேன். இந்நூலைத் தமிழ் ஆர்வலர்களும் அறிஞர்களும் கற்றுப் பயன் பெறுவார்கள் என்று நம்புகிறேன்.

(சு. நடனசபாபதி)

**டாக்டர் ப. தங்கராசு**
பேராசிரியர் & தலைவர்
தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

# பதிப்புரை

சித்தர் இலக்கியம் என்ற அரிய நூலை உயர்திரு. மீ.ப. சோமசுந்தரம் அவர்கள் தம்முடைய பெரும் முயற்சியால் எழுதியிருக்கிறார்கள். இந்நூலை அண்ணாமலைப்பல்கலைக்கழகம் பகுதி பகுதியாக வெளியிட்டு வருகிறது. இது தமிழுக்குச் செய்யும் மிக உயர்ந்த தொண்டாகும்.

சித்தர் இலக்கியம் மூன்றாம் பகுதியை மறுபதிப்பாக பவளவிழா ஆண்டில் அண்ணாமலைப்பல்கலைக்கழகம் வெளியிடுகிறது. இந்த நூல் மிகவும் போற்றுதற்குரிய நூலாகும். விநாயகர் அகவல், விநாயகர் வடிவங்கள், சித்தர் கொள்கை, முருகன் வழிபாடு, சித்தர் இலக்கியம் உணர்த்தும் ஞானக்கல்வி, சிவபுராணம், சித்தர் இலக்கியத்தின் ஆதாரமான அறிவியல் இரகசியங்கள் என்று பல அரிய தலைப்புக்களைக் கொண்டு விளங்குகிறது இந்நூல். விநாயகர் அகவலுக்கும் சிவபுராணத்திற்கும் இயற்றமிழ் முறையிலும் சித்தர் இலக்கிய முறையிலும் இரண்டு விளக்கம் நூல் முழுமைக்கும் கூறப்பெற்றிருப்பது ஆசிரியரின் அறிவு நுட்பத்தையும், சித்தர் இலக்கியத்தில் தோய்வையும் காட்டுகிறது.

சித்தர் இலக்கியத்தின் நுட்பத்தை விளக்க சிவானந்த போதம், நிஜானந்த போதம் நெஞ்சறி விளக்கம் என்ற அரிய நூல்களை எடுத்துக் கூறியிருப்பது இவர்களுடைய பல்நூற் பயிற்சியைப் புலப்படுத்துகிறது. விநாயகரின் முப்பத்திரண்டு படங்களையும், எந்திரங்களையும் இணைப்பாகச் சேர்த்திருப்பது மிகவும் பாராட்டுக்குரியது.

உலக நாடுகளில் உள்ள ஞானிகளின் கருத்துக்களைத் தேவையான இடங்களில் பொருத்தமுறக் கூறியிருப்பதும். பாராயணம் செய்வதால் ஏற்படும் பயனை விளக்கியிருப்பதும் நன்று. விநாயகர் அகவலின் மந்திர ஆற்றல் அனைவரையும் வளைத்து அணைக்கிறது. எல்லாருக்கும் பரவசம் என்ற பேரின்ப அனுபவத்தை ஒரு சேரத்தருகிறது. மந்திரமும் தோத்திரமும் புரிகிற ஆன்மவினை என்பது இதுவே. சொல்லும். அதன் பொருளும் அவற்றின் மந்திர ஆற்றலும் உள்ளங்களை எல்லாம் பிணைத்துப் பேரின்பம் என்கிற மின்சார ஆற்றலைப் பாய்ச்சுகிற வல்லமை இதுவேயாகும். அந்த வல்லமை அனைத்தையும் தன்னுல் அடக்கிக் கொண்டு மின்கலமாகத் திகழ்கிற ஓர் அரியநூலே ஔவையார் அருளிய விநாயகர் அகவல் என்று சித்தர் இலக்கியத்தின் நுட்பத்தை விளக்கியுள்ளார் ஆசிரியர்.

உலக ஞானிகள் கவிஞர்கள் விதி எழுதின எழுத்தை அழிக்கவே முடியாது என்று கூறியவற்றை எடுத்துக் காட்டித் தமிழ்நாட்டு ஞானி அருணகிரியார் அவன் கால்பட்டழிந்ததிங்கு என் தலைமேல் அயன் கையெழுத்தே. என்று கூறியிருப்பதையும் எடுத்துக்காட்டி இறைவனை உளமார வணங்கினால் விதியின் எழுத்தை மாற்றலாம் என்ற தமிழ்நாட்டு ஞானியின் இறை நம்பிக்கையை விளக்கியிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

சித்தர் இலக்கியத்தை அண்ணாலைப்பல்கலைக்கழகம் வெளியிட வேண்டும் என்ற இராஜா சர் முத்தைய வேளின் வேணவாவை நம் மாண்பமை இணைவேந்தர் டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நூல் மறுபதிப்பாக வெளிவர உதவிய எங்கள் மாண்பமை துணைவேந்தர் பேராசிரியர் டாக்டர் எல்.பி. வெங்கட்ரங்கன் அவர்களுக்கு என்னுடைய

உளம் நிறைந்த நன்றியையும் வணக்கத்தையும் உரித்தாக்குகிறேன். இந்நூலை எல்லோரும் படித்துப் பயன்பெற வேண்டுகிறேன்.

(ப. தங்கராசு)

அண்ணாமலைநகர்

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | இனிய கவிதையில் தத்துவக் காட்சிகள் | ... | 1 |
| 2. | ஒன்பதாம் திருமுறை | | |
| | அ) திருமாளிகைத் தேவர் | ... | 11 |
| | ஆ) சேந்தனார் | ... | 34 |
| | இ) கருவூர்த் தேவர் | ... | 52 |
| 3. | பதினோராம் திருமுறை | | |
| | அ) காரைக்கால் அம்மையார் | ... | 105 |
| | ஆ) பட்டினத்தார் | ... | 178 |
| | இ) இன்னும் சில பாடல்கள் (பட்டினத்தார்) | ... | 311 |
| 4. | பட்டினத்தடிகளின் பாடல்கள் | ... | 390 |
| 5. | கவிதை வேள்வியிலே பாட்டவி | ... | 393 |

# இனிய கவிதையில் தத்துவக் காட்சிகள்

இதற்கு முந்திய பகுதிகளில் நாம் ஆராய்ந்த பனுவல்களும், இனி ஆராயப் போகின்ற பனுவல்களும் இந்த ஆய்வுப் பணியின் ஒரு வீதிமுனை என்று சொல்லலாம்.

திருவாசகத்தின் ஞானச் செம்பொருளும், அவ்வையாரின் குறளிலும் அகவலிலும் நாம் கண்ட ஞானச் செம்பொருளும், சித்தர் கல்வியின் பற்பல பக்குவ நிலைகளை உணர்த்துவனவாக இருந்தன. அவ்வையின் குறள் முழுமையுமே ஞானச் சூத்திரங்களாக மிளிர்ந்தன. அவருடைய அகவலிலோ, தோத்திரத்தில் சாத்திரத்தைப் பொதிந்து தருவதைக் கண்டோம். திருவாசகம் இந்த இரண்டினின்றும் மாறுபட்டு, ஒரு ஞானியின் தன் அநுபவ வெளியீடாக, அவனுடைய தன் நவிற்சியாக விளங்குவதைக் கண்டோம். இனி, நாம் காணப் போகிற நூல்கள் முற்றிலும் வேறு வகையானவை.

மனித சமுதாயத்தில் பொதுமக்களின் வழிபாட்டுக்கு என்று அமைந்த பத்தி நூல்கள் எங்ஙனம் சித்தர் இலக்கியமாகத் திகழ்கின்றன என்பதை இனி நாம் விரிவாகக் காண்போம்.

சைவத் திருமுறைகளிலும், வைணவத் திவ்வியப் பிரபந்தத்திலும் நாம் காண்கிற பாடல்களிலே சித்தர் மரபு எவ்வாறு துலங்குகிறது என்பது ஓர் ஆனந்தக் களிப்பாகும். எவ்வாறு சைவத் திருமுறையில் ஒன்றாகிய எட்டாம் திருமுறையான திருவாசகம், சில பகுதிகளில் முற்றிலும் சித்தர் இலக்கியமாகப் பரிமளிக்கிறதோ, அவ்வாறே, திருமுறைகளின் மற்றத் தொகுப்புக்களிலும் சித்தர் இலக்கியத்தைக் காண்கிறோம்.

பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் நூற்றுக்கு நூறு சித்தர் இலக்கியம் என்பது கண்கூடான செய்தி. இவ்வாறே ஒன்பதாம் திருமுறையிலும், பதினோராம் திருமுறையிலும் சித்தர்களின் மரபும் ஞான இரகசியங்களும் ஆன்மப் பயிற்சி நுட்பங்களும் உள்ளடங்கிய பல பகுதிகளைக் காண்கிறோம்.

சைவத் திருமுறைகளில் இவ்வாறு சித்தர் ஞானம் பொதிந்துள்ளதற்கு ஒரு காரணம், மணிவாசகர் பெற்ற தீக்கை என்னும் ஞானக் கல்வி, வெறும் பக்தி காண்டிகளின் ஆகம முறையிலான தீக்கையாகாது. அது, ஞானி தனது ஆன்ம அநுபவத்தைத் தன் உள்ளத்திற்கு உகந்த மாணவனுக்குத் தொட்டுக் காட்டி, அநுபவ வாயிலாக உபதேசிக்கும் அரிய ஆன்மப் பயிற்சி ஆகும்.

எட்டாவது திருமுறையான திருவாசகம் போல, பத்தாவது திருமுறையான திருமந்திரமும் திருக்கைலாய நெறியிலே பெற்ற திருமூலர்

தம் சித்தர் ஞானத்தின் வெளியீடே ஆகும். தமிழகத்தில் பல நூறு ஆண்டுகளாக வழங்கி வருகிற இரகசிய ஞான நெறியின் விரிவுகள் அனைத்தையும் பேசுகிற திருமூலர், தமது குரு பரம்பரையைச் சொல்லும் போது இந்தக் கைலாய நெறியை விளக்குகிறார்.

திருமூலர் மட்டுமே என்றில்லை; அவரும், அவரைச் சார்ந்த ஞானிகளும் ஒரே ஆதிநெறியின் வழிவந்தவர்கள். ஆராய்ந்து பார்த்தால், ஞானவழி என்பதே யாவர்க்கும் ஒன்றுதான். அது சைவ உலகுக்கு மட்டு மல்லாமல், வைணவ உலகத்திற்குமே பொருந்துவதாக அமைந்துள்ளது. விட்டுச்சித்தர் அல்லது விஷ்ணுசித்தர் என்று அழைக்கப் பெறுகிற பெரியாழ்வாரும், அவருடைய மகளாகிய கோதை என்னும் ஆண்டாளும், தங்கள் பாசுரங்களிலே பேசுகிற பேச்சு பற்பல இடங்களிலே சித்தர் மொழியாகவே இருக்கிறது. திருமங்கை மன்னர் பாடல்களிலும், சித்தர் இலக்கியத்தின் மாண்பைக் காண்கிறோம். பன்னிரு ஆழ்வார்களும் தங்கள் ஞான அநுபவங்களிலே சித்தர்களாகவே விளங்கி இருக்கிறார்கள். தோத்திரப் பாடல்கள் அருளுகிற நிலையிலே, அவர்களுடைய கவிதைகளில் மன உருக்கமும், பக்தி மேம்பாடும் மேலோங்கி இருப்பதே இயல்பாகும். எனினும், அந்தத் தோத்திரங்களினூடே சித்தர் இலக்கியம் எவ்வாறு வெளியாகிறது என்பது ஓர் சுவையான இலக்கியக் காட்சியாகும்.

வைணவ இலக்கியங்கள் மட்டுமல்லாமல் சமணர்கள், சாக்கியர்கள் ஆகிய ஞானிகளின் பாடல்களிலும் பல இடங்களிலே சித்தர் இலக்கியம் பாய்ந்தோடுவதைக் காண்கிறோம்.

தமிழ்மொழியின் வளர்ச்சியிலே, தேவார காலமும், திவ்வியப் பிரபந்த காலமும், சித்தர் இலக்கியத்தைப் பக்தி மொழியிலே எடுத்து இயம்புவது போலவே, கால வரலாறு சொல்ல இயலாத பற்பல தனி நூல்களிலும் சித்தர் இலக்கியத்தைக் காண்கிறோம். இத்தகைய நூல் களில் மிகவும் புகழ்பெற்ற ஒரு தொகை நூல் பதினெண் சித்தர் பாடல்கள் என்ற தொகுப்பாகும்.

நமது ஆய்வு நூலின் தொடர்ச்சிப் பகுதியில், இத்தகைய நூல்களைச் சித்தர் கண்கொண்டு நோக்குவதே நமது குறிக்கோளாகும். வரிசைமுறை நோக்கி முதலில் திருமுறைகளின் சித்தர் பகுதியைப் பார்க்கலாம்.

பன்னிரு திருமுறைகளில் ஞானசம்பந்தரின் பாடல்களும், அப்பர் சுவாமிகளின் பாடல்களும் பெரும்பாலும் தோத்திரங்களாகவே விளங்கு கின்றன. எனினும், இவ்விருவருடைய ஆறு திருமுறைகளிலும் சித்தர்களின் பாங்கிலே அமைந்த பதிகங்கள் ஏராளமாக உள்ளன. அங்கங்கே இத்தகைய பாடல்கள் வருவதால், இந்தத் தேவார ஆய்வே ஒரு பெரும் நூலாக விரிந்துவிடும். ஏழாம் திருமுறையாகிய சுந்தரர் பாடல்களிலும் தோழமை என்னும் சகமார்க்கத்தைப் பக்தியின் பாங்கிலே கூறுகிற பகுதியும் இத்தன்மையதே. எனவே, தேவாரங்களில் உள்ள தனித்தனியான சித்தர் மரபின் வெளியீடுகளை, அவை கூறுகிற ஞானச் செம்பொருளைப் பொறுத்து, கண்டு துய்ப்பதே பொருத்தமுடையதாகும். ஆனால், எட்டு,

ஒன்பது, பத்து, பதினொன்று ஆகிய நான்கு திருமுறைகளும் அவ்வாறில்லை. எனவேதான் எட்டாம் திருமுறையாகிய திருவாசகத்தின் உட்பொருளைச் சித்தர் நோக்கில் இருந்து நாம் ஆராய்ந்தது போல, ஒன்பது, பத்து, பதினொன்று ஆகிய திருமுறைகளையும் ஆராய்வது அவசியமாகும். இந்த மூன்றில் பத்தாம் திருமுறையாகிய திருமந்திர ஆய்வு, நம்முடைய இந்த ஆராய்ச்சியின் மூன்று பகுதிகளிலுமே உள்ளீடாக ஊடும் பாவும்போல் நெய்துவந்திருப்பதால் ஒன்பதும் பதினொன்றும் ஆகிய திருமுறைகளை விரிவாகக் காண்பது இங்கே அவசியமாகிறது.

## ஒன்பதாம் திருமுறை

ஒன்பதாம் திருமுறையைப் பாடியவர் ஒன்பதின்மர் ஆவர். இந்த ஒன்பது கவிஞர்களிலே மூவர் பழம்பெரும் சித்தர்களாவர்.

ஒன்பதாம் திருமுறையின் ஆசிரியர்கள் வருமாறு: திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருத்தி நம்பி காட நம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர்.

இந்த ஒன்பது ஆசிரியர்களையும் குறிப்பிடுகிற பழைய பாடல்:

செம்பொன்மணி அம்பலத்து நிருத்த னார்க்குத்
திருவிசைப்பா உரைத்தவர்தம் திருப்பேர் சொல்லில்
பம்புபுகழ் செறிதிருமா ளிகைமெய்த் தேவர்
பரிவுடைய சேந்தனார் கருவூர்த் தேவர்
நம்பி காடவர்கோன் நற்கண்ட ராதித்தர்
நன்குயர்வே ணாட்டடிகள் திருவாலி யமுதனார்
அம்புவியோர் புகழ் புருடோத்தமர் சேதி ராயர்
ஆகஇவர் ஒன்பதின்மர் தாமுறை கண்டடைவே.

இன்னிசைக் கவிஞர்களாகிய இந்த ஒன்பது ஆசிரியர்களுள்ளே, முதல் மூவருடைய வாழ்க்கையும் சித்தர்களின் வாழ்வாகவே அமைந்திருந்ததை அவர்களுடைய வரலாறு நமக்கு எடுத்துக் கூறுகிறது. அந்த வரலாற்றை ஓரளவு இங்கு காண்போம். அப்படிக் காணும்போது தொடக்கத்திலேயே நாம் ஓர் உண்மையை உள்ளத்தில் உட்கொள்ளவேண்டும். அது என்னவென்றால், சித்தர்களுடைய வாழ்க்கையானது, சாமானிய மானுட ஆற்றல்களுக்கு அப்பாற்பட்ட பல சாதனைகளை வெளிப்படுத்துகிற பற்பல நிகழ்ச்சிகளைக் கொண்ட வியப்பான வாழ்க்கையாகும். மற்ற மனிதர்களிடமிருந்து சித்தர்கள் வேறுபடுவது இந்த ஆற்றல்களினாலேதான். எனவே இந்த வரலாறுகளைப் படிக்கும்போது, இந்த நிகழ்ச்சிகள் இவ்வாறு நடந்திருக்குமோ என்று ஐயம் எழுவது இயற்கையானாலும், நாம் படிக்கும் வாழ்க்கை வரலாறு பகுத்தறிவின் குறுகிய எல்லையைத் தாண்டிய பல அதிமானுட—அமானுடச் செயல்களை உள்ளடக்கியது என்பதை மறந்து விடக் கூடாது.

### 1. திருமாளிகைத் தேவர்

தமிழ்நாட்டின் புகைவண்டித் தடத்திலே நரசிங்கன்பேட்டை என்ற ஒரு புகைவண்டி நிலையம் இருக்கிறது. இதுவே திருவாவடுதுறைக்கு இறங்க வேண்டிய நிலையமாகும்.

இந்தத் திருவாவடுதுறையிலேதான் நமச்சிவாய மூர்த்திகள் என்ற மகான் நிறுவிய ஆதீன மடம் உள்ளது.

இந்தத் திருவாவடுதுறைக்கு மற்றும் பல பெயர்கள் உண்டு. அவற்றிலே ஒன்று 'நவகோடி சித்தர்புரம்' என்பதாகும். இந்தப் பெயருக்கு ஏற்ப, இந்தத் தலத்திலே பல மகான்கள் வாழ்ந்தார்கள் என்பதற்குரிய பல அகச்சான்றுகளும் புறச்சான்றுகளும் இன்றும் உள்ளன. நமச்சிவாய மூர்த்திகளுடைய ஜீவ சமாதியும், திருமாளிகைத் தேவருடைய ஜீவ சமாதியும், இந்த ஆதீன மடத்துக்குள்ளே இருப்பதோடுகூட, திருமூலருடைய சமாதியும் இங்குள்ள திருக்கோவிலின் ஒரு மூலையிலே இன்றும் காட்சி தருகிறது. திருமூலருடைய சிலையும் அங்குக் காண்கிறோம். அவர் தவம் இயற்றிய படர் அரச மரமும் இன்றும் இங்கே காணலாம். இன்னும் பல சித்தர்கள் நடமாடிய ஞானச் சுவடுகளும் இங்கே காண்கிறோம்.

இந்த நவகோடி சித்தர் புரத்திலே, மிகவும் புகழ்பெற்ற மகானாகிய போகர் என்னும் போகநாதர், பற்பல ஞானத் திருவிளையாடல்கள் செய்து வாழ்ந்து வந்தார். இவருடைய மாணவர்களுள் ஒருவரே திருமாளிகைத் தேவர். இன்னொரு சீடர் கருவூர்ச் சித்தர்.

திருமாளிகைத் தேவர் சைவ வேளாளர் மரபிலே உதித்தவர். சோழ மன்னர்களுக்குத் தீக்கை அருளும் குருமார்களே இந்தக் குடும்பத்தினர்.

திருவாவடுதுறையில் சைவர்களிலே ஐந்து பிரிவினர் இருந்தார்கள். இவர்களுக்கு ஐந்து கொத்தார் என்று பெயர். பரி ஏறும் பெரியோர், தெய்வப் படிமப் பாதம் வைத்தோர், மாணிக்கக் கூத்தர், குருராயர், சைவராயர் என்ற இந்த ஐந்து கொத்தாரிலே, திருமாளிகைத் தேவர் சைவராயர் மரபிலே வந்தவர். இந்த மரபினர்கள் வாழ்ந்துவந்த மடம், பெரிய மடம் என்ற பொருளில் 'மாளிகை மடம்' என்று அழைக்கப்பட்டது. இதையொட்டியே இவரும் மாளிகைத் தேவர் என அழைக்கப்பட்டார்.

போகர் தமது சீடர்கள் இருவரிலே திருமாளிகைத் தேவருக்குக் கூத்தப்பெருமானை வழிபடுகின்ற ஞானச் செயல்முறைகளையும், கருவூர்த் தேவருக்கு அன்னை வழிபாட்டின் நுட்பங்களையும் கற்பித்தார்.

கால அடைவிலே ஒருநாள், ஞான ஆசானாகிய போகர், தமது பாதுகையைத் திருமாளிகைத் தேவரிடம் கொடுத்து, அதனை வழிபட்டவாறு திருவாவடுதுறைத் தலத்திலேயே இருந்து, அன்பர்களுக்கு மெய்ப்பொருளை உணர்த்துமாறு கட்டளையிட்டு, அங்கிருந்து புறப்பட்டார். திருமாளிகைத் தேவர் தமது குருவின் ஆணையைச் சிரமேற் கொண்டு, அவ்வாறே செய்து வந்தார். அவ்வாறே செய்து ஞான நெறியிலே சமாதியோகம் உள்ளிட்ட பல முறைகளைப் பயின்றும் பயிற்றுவித்தும் வாழ்ந்து, மாசிலாமணியீசர் கோயிலுக்குத் தென்புறம் திருமடம் ஒன்று நிறுவி, அங்கு வாழ்ந்து வந்தார்.

இவ்வாறு அவர் திருவாவடுதுறையில் இருந்தபோதுதான், சேந்தனாரோடு சிதம்பரத்துக்குச் சென்று, திருவிசைப்பாப் பதிகங்களால் கூத்தப் பிரானின் கழலை ஏத்தினார் என்றும், திருவாவடுதுறை மாசிலாமணியீசரையும் அம்பிகையையும் திருவிசைப்பாப் பதிகங்களால் பாடிப் பரவினார் என்றும் இவருடைய வரலாறு கூறுகிறது.

இவருடைய வரலாற்றில் காணப்பெறுகின்ற அற்புதங்கள் பலவாம்.

ஒரு நாள் காவிரியில் குளித்துவிட்டு வழிபாட்டுக்குரிய பூக்களோடு திருமஞ்சனக் குடத்துடன் மடத்துக்கு அவர் திரும்பிக் கொண்டிருந்தபோது, எதிரே ஒரு பிண ஊர்வலம் மிகவும் குறுகிய பாதையில் வந்துக் கொண் டிருப்பதைக் கண்டார். எட்டிச் செல்வதற்கு இடம் இல்லை. தமது வழி பாட்டுப் பொருள்களுக்கு தூய்மைக் கெடாதவாறு, திருமஞ்சனக் குடத்தை உயரத் தூக்கி வானத்தில் வீசினார். அந்தக் குடம் கீழே விழாதவாறு அந்தரத்தில் இருந்தது. மேல் புறத்தில் இருந்த பிள்ளை யாருக்கு, சித்தர் முறைப்படி ஞானவணக்கம் செலுத்தினார். உடனே ஓர் அற்புதம் நிகழ்ந்தது. விநாயகர் அருளால், பிணம் உயிர்பெற்று நடந்து சென்றதாம். வரலாறு கூறுகிறது. இதையொட்டி இன்றும் அந்தப் பிள்ளையாருக்குக் "கொட்டுத் தவிர்த்த கணபதி" என்ற பெயர் வழங்குகிறது.

இவருடைய வரலாற்றில் காணப்பெறுகிற இன்னொரு அற்புத நிகழ்ச்சி வருமாறு :

மகப்பேரற்ற சில பார்ப்பனப் பெண்கள் திருமாளிகைத் தேவரை வணங்கி வரம் பெற்றார்கள். இதன் பயனாக மகப்பேறு அடைந்தார்கள். ஆனால், அந்தக் குழந்தைகள் திருமாளிகைத் தேவரின் சாயலிலே இருந்தமை கண்டு, சந்தேகம் கொண்ட அந்தணர்கள், அக்காலத்தில் ஆட்சி புரிந்த 'காடவர்கோன் கழற்சிங்கனின்' (கி. பி. 825--850) சிற்றரசனான நரசிங்க மன்னனிடம் முறையிட்டனர். நரசிங்க மன்னன் வீரர்களை அனுப்பி திருமாளிகைத் தேவரைக் கயிற்றினால் கட்டி இழுத்து வரும்படி பணித்தான். சித்தரின் ஞான விளையாட்டினால், வீரர்கள் சித்தம் மயக்குற்றுத் தங்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் கயிற்றால் பிணித்துக்கொண்டு, மன்னனை அடைந்தார்கள். இதுகண்டு மேலும் வெகுண்ட மன்னன், படைத் தலைவர்களை அனுப்பினான். சித்தரின் திருவிளையாடலினால், அந்தப் படைவீரர்களே ஒருவரை ஒருவர் மாய்த்துக்கொண்டனர். இதை அறிந்த மன்னன், தானே படையுடன் சென்றான். அப்பொழுது நிகழ்ந்த அற்புதம் என்னவென்றால் கோயில் மதில்மீது இருந்த நந்திகளெல்லாம் ஒருங்கிணைந்து ஒரே நந்தியாகி, அந்தப் பெருநந்திதேவர் அரசனை இழுத்துவந்து சித்தர்முன் நிறுத்தினார். இந்நிலையிலே ஞானியின் ஆற்றலை உணர்ந்து கொண்ட மன்னன், சித்தரின் திருவடிகளை வணங்கினான். திருமாளிகைத் தேவர் அவனுக்கு அருள் புரிந்தார். இந்த அரசன் வந்து தங்கிய இடமே நரசிங்கன்பேட்டை என்று இன்றளவும் வழங்குகின்றது. கோவிலின் மதில் மீதும் நந்திகள் இல்லை. கோவிலுக்குள் உள்ள நந்தியின் உருவம் மிகமிகப் பெரியதாகும்.

இந்த அற்புதங்களைத் தவிர, இன்னும் சில அமானுட நிகழ்ச்சி களையும் அவருடைய வரலாறு கூறுகிறது. சுடுகாட்டில் எரிந்து கொண்டிருந்த ஒரு பிணத்தின் புகையிலிருந்து நறுமணம் கமழும்படி ஒரு சமயம் திருமாளிகைத் தேவர் ஓர் அற்புதம் நிகழ்த்தினார். கொங் கணவர் என்னும் மகானுடைய வற்றாத கமண்டல நீரை வற்றச்

செய்தார். சுவாமிக்கு நிவேதனம் காட்டிய பயிற்றஞ் சுண்டலைத் தமது மடத்துக்குள் பாத்தி கட்டி விதைத்து, முளைக்கச் செய்தார். திருவீழி மிழலையில் மக்கள் இழுக்க முடியாது தவித்த திருவிழாத் தேரை, தேர் வடங்களைக் கழற்றிவிட்டுத் தமது சித்தியினால் ஓடுமாறு செய்தார். இந்த அற்புதங்களையெல்லாம் தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் பின்வருமாறு பாடுகிறார் :

குடங்கள் விசும்பிடை நிறுவிக் குணபம்நடந்
திட இயக்கிக் கொடிஞ்சிப் பொற்றேர்
வடங்கழற்றி ஓட்டிமதில் நந்திகளை
வரவழைத்து வரைநன் காட்டின்
உடம்பின்எழ புகைமாற்றிக் கொங்கணர்பாத்
திரம்சுவற்றி உணவ தாய்வெந்
திடும்பயறு முளைசெய்தெமக்(கு) அருள்திருமா
ளிகைத் தேவர் இணைத்தாள் போற்றி

திருவாவடுதுறையில் ஆதீன மடத்துக்குள்ளே தனியான திருக் கோவிலில் எழுந்தருளியுள்ள திருமாளிகைத் தேவரின் உருவம் நான்கு கைகளோடு அமைந்திருக்கிறது. ஞான வலிமையினால் குருபூசைக்கும் சிவ பூசைக்குமாக மேலும் இரண்டு ஞானக் கரங்கள் பெற்றார் என்று கூறப்பெறுகிறது. திருவாவடுதுறைக் கோவில் உச்சிக்கால பூசை முடிந்ததும், அங்குப் பூசைச் செய்யும் அதே சிவாசாரியார் மடத்துக்குள் வந்து, திருமாளிகைத் தேவருக்கும் வழிபாடு இயற்றுகிறார். இதன் பின்னரே மடத்தில் பந்திவிருந்து படைக்கப்பெறுகிறது.

இவருடைய காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு என்று அறிஞர் உலகம் அறுதி செய்திருக்கிறது. இன்று நமக்குக் கிடைத்துள்ள திருமாளிகைத் தேவரின் பாடல்களிலே தோத்திரங்களாக அமைந்த பதிகங்களே உள்ளன. அப்பதிகங்கள் தில்லை அம்பலத்தானைப் பாடு வனவாக உள்ளன. வை இஒன்பதாம் திருமுறையில் ஆரம்பத்தில் காணப்பெறுகிற நான்கு திருவிசைப்பாத் திருப்பதிகங்களே ஆம்.

ஏற்கனவே நான் தொடக்கத்தில் குறிப்பிட்டவாறு, இந்த வரலாற்றிலே காணப்பெறுகிற சில நிகழ்ச்சிகள் விவாத அறிவுக்குப் பொருந்துவனவாக இல்லையென்பது உண்மையே. ஆனால் மகான்களுடைய வாழ்க்கையில். இவை போன்ற பல நிகழ்ச்சிகளை நாம் காண்கிறோம். எலும்பைப் பெண்ணாக்குவதும், சூலை நோயைத் தீர்ப்பதும் நமது நாட்டுப் பெரியோர்களின் வாழ்வில் மட்டுமே நிகழ்வன அல்ல. உலக நாடுகள் பலவற்றிலும் வாழ்ந்த, வாழ்ந்து வருகிற ஞானிகளின் வாழ்வில் இத்தகைய நிகழ்ச்சிகள் நூற்றுக்கணக்கில் காணப் பெறுகின்றன. இறைவனுடைய புத்திரர்கள் என்று அழைக்கப் பெறுகிற எல்லா நாட்டுச் சித்தர்களின் வாழ்வுக்கும் இது பொருந்தும். அதிகம் சொல்வானேன்? ஏசு பெருமானுடைய வாழ்விலும், நபிகள் நாயகத்தின் வாழ்விலும் கூடப் பற்பல அற்புதங்களைப் பார்க்கிறோம் அல்லவா !

## 2. சேந்தனார்

சேந்தனாருடைய வரலாறு பற்றிப் பல சர்ச்சைகள் இன்றளவும் நடந்து முடிவுபெறாமல் நிற்கின்றன. அவற்றில் ஒன்று அவர் பிறந்த ஊரைப் பற்றியது.

சேந்தனார் தோன்றியது திருவெண்காட்டிற்கு அருகில் உள்ள நாங்கூர் என்ற ஊர் என்பது சிலருடைய கருத்தாகும். வேறு சிலர் அவருடைய ஊர் செப்புரை என்றும், திருவீழிமிழலை என்றும் கூறுவர். இன்னும் சிலர் திருவிசைப்பாவின் ஆசிரியராகிய சேந்தனார் வேறு; திருப்பல்லாண்டு பாடிய சேந்தனார் வேறு என்று கூறி, முன்னவர் திருவீழிமிழலையில் தோன்றியவர் என்றும், பின்னவர் நாங்கூரில் உதித்தவர் என்றும் கூறுவர். துடிசைகிழார் போன்ற அறிஞர்களின் கருத்து இது.

சேந்தனாரும் திருமாளிகைத் தேவரும் ஒருவரே என்பது மு. இராகவையங்கார் போன்ற அறிஞர்களின் கருத்தாகும். இதற்கு ஆதாரமாக இந்த அறிஞர் கூறுகின்ற சான்றுகள் வருமாறு:

இராசராச சோழன் ஆட்சியில் (கி.பி. 985 முதல் 1014) திருவீழி மிழலைக் கோவிலில் நந்தாவிளக்கு வைத்த ஜெயந்தன் என்பவனைச் 'சிவஞானி' என்றும், 'திருமாளிகைத் தேவர்' என்றும் கல்வெட்டு குறிக்கிறது. ஜெயந்தன் என்பதே சேந்தன் என மருவிற்று. அன்றியும் திருவிசைப்பாவில் திருமாளிகைத் தேவரின் நான்கு பதிகங்களை அடுத்துச் சேந்தனார் பாடிய மூன்று பதிகங்கள் அமைந்திருக்கின்றன. கடைசிப் பதிகத்தின் கடைசிப் பாடலில்,

> "செழுந்திரட் சோதிச் செப்புரைச் சேந்தன்
> வாய்ந்த சொல்லிவை"

என்றே வருகிறது. எனவே இப்பதிகங்கள் அனைத்தையும் பாடியவர் ஒருவரே என்பது இவ் அறிஞர் கருத்தாகும். செப்புரை என்ற பெயரும் இதில் வருவது இங்கே குறிப்பிடத்தக்கது.

திருவெண்காட்டிற்கு அருகில் உள்ள நாங்கூரில் தோன்றியவர் சேந்தனார் என்ற கருத்தை ஒட்டிய சில செய்திகள் வருமாறு:

சேந்தனார் பட்டினத்து அடிகளின் தலைமைக் கணக்கராகப் பணி செய்தார். அதுகாலை பட்டினத்தாரின் கட்டளைப்படி அவரது பண்டாரத்தைத் திறந்து, அதில் உள்ள பொருள்களை எல்லோரும் அள்ளிக்கொள்ளுமாறும் செய்தார். அப்பொழுது பட்டினத்தாரின் சுற்றத்தார்கள் முறையீடு செய்யக் கேட்ட சோழ மன்னன், சேந்தனாரைச் சிறையிலிட்டான். இதுகண்டு பட்டினத்தார் கீழ்க்கண்ட பாடலைப் பாடியதாக வரலாறு:

> மத்தளை தயிருண் டானும்
> மலர்மிசை மன்னி னானும்
> நித்தமும் தேடிக் காணா
> நிமலனே அமல மூர்த்தி
> செய்த்தளைக் கயல்பாய் நாங்கூர்ச்
> சேந்தனை வேந்த னிட்ட
> கைத்தளை நீக்கி என்முன்
> காட்டுவெண் காட்டு ளானே

பட்டினத்தாரின் ஞான ஆற்றலினால் விடுதலை பெற்ற சேந்தனார் தமது குடும்பத்துடன் சிதம்பரம் சென்று அங்கே விறகு வெட்டி விற்று வாழ்ந்து வந்தார். விறகு விற்று வந்த பணத்திலிருந்து, தினமும் ஓர் அடியவருக்கு உணவு படைத்து வந்தார். ஒரு நாள் கூத்தப் பெருமானே ஒரு திருத்தொண்டர் வடிவத்தில் சேந்தனாரின் இல்லத்திற்கு வந்தார். சேந்தனார் அவருக்குக் களி உணவு வழங்கினார். இறைவன் அந்த உணவை ஏற்றுக்கொண்டு, அதன் ஒரு பகுதியைத் தமது திருமேனியிலே காட்டினார் என்று வரலாறு கூறுகிறது. கோயில் திருப்பண்ணியர் விருத்தம் போன்ற சான்றுகள் இந்நிகழ்ச்சியை அறிவுறுத்துகின்றன. சிவஞான சுவாமிகள் இயற்றியுள்ள ஒரு பாடலில் சேந்தனார் நடராசப் பெருமானுக்குத் தவிட்டை அமுதாக வழங்கினார் என்ற செய்தியைக் காண்கிறோம்.

ஒரு சமயம் மார்கழித் திருவாதிரையில் சிதம்பரம் தேர் ஓடாது தடைப்பட்டு நின்றிடவே, சேந்தனார் அத்தேர் ஓடி நிலைக்கு வருமாறு செய்தார் என்று கூறப்படுகிறது.

திருக்கடலூருக்கு அருகில் உள்ள திருவிடைக்கழி என்ற தலத்திலே ஒரு திருமடம் அமைத்து, அங்கே சேந்தனார் கந்தவேளுக்கு வழிபாடு இயற்றி வந்தார் என்று தெரிகிறது. இம்மடத்துக்கு அக்காலத்து மன்னன் வழங்கிய நிலப்பகுதி 'சேந்தன் மங்கலம்' என்ற பெயரில் திருவிடைக்கழிக்கருகில் இன்றும் காணப் பெறுகிறது. இந்த ஊரில் சேந்தனார் வழிபட்ட திருக்கோயில் இன்று அழிந்து விட்டது. ஆனால், அங்குக் கிடைத்த சிவலிங்கத்தைப் பொதுமக்கள் விசலூரில் ஒரு சிறு கோயில் எடுத்து எழுந்தருளச் செய்துள்ளனர்.

சேந்தன்மங்கலம் என்ற ஊர் இன்று இசுலாமியர்களின் உறைவிடமாக உள்ளது.

இவருடைய காலம் ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்குதி, பத்தாம் நூற்றாண்டின் தொடக்கம் என முடிவு செய்யப்பட்டுள்ளது. இவர் இயற்றிய பாடல்கள் மூன்று திருவிசைப்பாப் பதிகங்களும், ஒரு திருப்பல்லாண்டுப் பதிகமும் ஆகும். திருவிசைப்பா மூன்றும், திருவீழிமிழலை திருவாவடுதுறை, திருவிடைக்கழி ஆகிய மூன்று தலங்களைப் பற்றியவை. திருப்பல்லாண்டு தில்லையம்பதிக்கு அருளிச் செய்ததாகும்.

## 3. கருவூர்த் தேவர்

சித்தர் உலகிலே மிகவும் புகழ்பெற்றவர் கருவூர்த் தேவர். இவர் செய்த அற்புதங்களைப் பற்றிய செய்திகள் பற்பலவாம். இவற்றிலெல்லாம் மிகவும் புகழ்பெற்றது, இராசராச சோழனுடைய கோரிக்கையை இவர் நிறைவேற்றிய மாபெரும் நிகழ்ச்சியாகும்.

கருவூர்ச் சித்தரின் சிலையைக் கருவூரில் உள்ள பசுபதீசுவரர் கோவிலிலும் தஞ்சை பெரிய கோவிலிலும் இன்றும் காணலாம். இவர் இயற்றிய திருப்பதிகங்கள் பத்தாகும். அவை ஒன்பதாம் திருமுறையில் காணப்பெறுகின்றன. இந்தப் பத்துப் பதிகங்களும் கோயில், அதாவது

சிதம்பரம், திருக்களந்தை, ஆதித்தேச்சுரம், திருக்கீழ்க்கோட்டூர், மணியம்பலம், திருமுகத்தளை, திரைலோக்கிய சுந்தரம், கங்கைகொண்ட சோழேச்சரம், திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை திருவிடைமருதூர் ஆகிய பத்து சிவத்தலங்களிலும் எழுந்தவை.

கருவூர்ச் சித்தர் வாழ்ந்த காலம் பத்து, பதினோராம் நூற்றாண்டுகளாம். இவர் யோகசித்தி கைவரப்பெற்றுக் காய கல்பம் உண்டு, பல்லாண்டுகள் மனித உடலோடு வாழ்ந்தவர் என இவர் வரலாறு கூறுகிறது.

இவர் தோன்றியது கொங்குநாட்டில் உள்ள கருவூரில் ஆகும். பிறந்த ஊரை இணைத்து இவர் பெயரைக் கருவூர்ச் சித்தர் என்றே தமிழ் நூல்கள் அழைக்கின்றன. இவருடைய இயற்பெயர் இன்னதென்று தெரியவில்லை.

கருவூர்ச் சித்தர் அந்தணர் குலத்தில் உதித்தவர் என்றும், வேதாகமங்களை நன்கு கற்றவர் என்றும் கூறப்படுகிறது. போக முனிவரிடம் இவர் ஞானம் பயின்றதோடு பின்னர், இவருடைய பாங்கும் செயல்களும் மாறுபட்டு, இனம், குலம், கல்வி ஆகிய அனைத்தையும் கடந்த மாபெரும் ஞானியாகப் பரிணமித்தார். இவருடைய செயல்கள் சிலவற்றைப் பார்த்தால் ஒரு பித்தனுடைய செயல்கள் போன்று நுனிப்புல் மேய்வார் கருதுவர். ஆனால் அவை ஒரு மகானின் ஞானச் செயல்களாம்.

கருவூர்த் தேவர் கொங்குநாடு, வடநாடு, தொண்டை நாடு, நடுநாடு என்னும் தமிழ்மண்டலப் பகுதிகள் அனைத்தையும் சுற்றிப் பார்த்துவிட்டு, திருநெல்வேலி வட்டாரத்தைச் சேர்ந்த திருப்புடைமருதூர் என்னும் அரிய தலத்திற்குச் சென்று, அந்தப் புண்ணியத் தலத்திலே எம்பெருமானிடமே திருவடி தீட்சை பெற்றார் என்று ஒரு செய்தி கூறப்படுகிறது. இந்த மகான் நெல்லையிலும் திருக்குற்றாலத்திலும் பல நாட்கள் தங்கியிருந்து, பின்னர்ப் பொதிகை மலையின் காட்டுக்குள்ளே அகத்தியரின் அருள்பெற்று அந்த மலைக்காடுகளிலேயே வாழ்ந்தார் என்று தெரிகிறது.

தஞ்சை மன்னன் இராசராச சோழன் (கி.பி. 985—1014) தன்னுடைய ஆசை முழுவதையும் செலுத்திப் பெருவுடையாருக்கு ஆலயம் எழுப்பியது தமிழ் கூறும் நல்லுலகம் நன்கு அறிந்த வரலாறாகும். இந்த ஆலயத்தைக் கட்டி முடித்த சோழன், பெருவுடையார்க்கு அஷ்டபந்தன மருந்து சார்த்தினான். ஆனால் பலமுறை இந்த மருந்து கொண்டு அழுக்கியும் சிவலிங்கம் ஆவுடையாருடன் சேராமல், மருந்தானது இளகாமல் இறுகிக் கொண்டிருந்தது. சிவலிங்கம் ஆவுடையாருடன் ஒட்ட மறுத்தது. இது கண்ட இராசராசன் மிகவும் மனம் வருந்தினான். கண்ணீர் வடித்தான். இதுகண்ட போகமுனிவர் பொதிகை மலையில் அப்போது இருந்த தமது மாணவராகிய கருவூர்த் தேவரை உடனே தஞ்சைக்கு வருமாறு மன அலைகளினால் செய்தி அனுப்பினார். கருவூர்த் தேவர் தமது குருவின் ஆணைப்படி உடனே தஞ்சைக்கு வந்து, சிவலிங்கம் ஆவுடையாரோடு இணையாமல் இருப்பதைக் கண்டார். இதன் பிறகு அவர் செய்த செயல்

பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட ஒரு ஞானியின் செயலாகும். என்ன செய்தார் கருவூரார் என்பதைத் தஞ்சைக் கோயிலின் வரலாறு இன்றளவும் எழுத்து வடிவிலே உண்மைச் செய்தியாக நமக்கு வழங்குகிறது. அந்த நிகழ்ச்சி வருமாறு:

மருந்து இளகாமல் இருப்பதைக் கண்ட கருவூர்ச் சித்தர், ஒரு மகானுடைய சிரிப்பினோடு தமது வாயில் குதப்பிக் கொண்டிருந்த வெற்றிலைத் தம்பலத்தையே மருந்தில் உமிழ்ந்தார். உடனே என்ன நேர்ந்தது என்றால், இளக மறுத்த மருந்து நெகிழ்ந்து, உருகி இலிங்கத்தை ஆவுடையாரோடு இணைத்துவிட்டது.

இராசராச சோழனுக்கு இந்த அற்புதச் செயலைக் கண்டு மெய் சிலிர்த்தது. நன்றிப்பெருக்கினால் ஆனந்தக் கண்ணீர் வடித்த இராசராச சோழன், அதே பெரிய கோவிலில் இந்தச் சித்தருக்கும் சிலை எழுப்பி, ஒரு தனியான சந்நிதியை அமைத்தான். இன்றைக்கும் இதை நாம் காணலாம்.

தஞ்சையிலிருந்து ஒரு சித்தனுடைய ஞான வெறியோடு புறப்பட்ட கருவூர்த் தேவர், திருவரங்கம் சென்று சிலநாள் தங்கிவிட்டு, பின்னர்த் தமது பிறந்த ஊராகிய கருவூரை வந்தடைந்தார். கருவூரில் இருந்த வைதிக அந்தணர்கள் இவரை அந்தண ஒழுக்கத்திலிருந்து நெறிதவறியவர் என்று பழி சொல்லி, இவருக்குப் பல தொல்லைகள் தந்தார்கள். கருவூரார் இந்த வைதிகர்களுக்கு அஞ்சியவர் போலத் தோற்றம் காட்டி, ஆனிலை ஆலயத்தை அடைந்து, கருவறையில் இருந்த சிலையோடு ஒன்றினார் என்று வரலாறு கூறுகிறது.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் ஒன்பதாம் திருமுறையில் காணப்பெறுகிற ஒன்பது கவிஞர்களிலே இந்த மூன்று கவிஞர்களும் சித்தர்களாக வாழ்ந்து, சித்தர்களின் கோணத்திலிருந்தே பதிகங்கள் பாடியவர்கள். இசைப் பாக்களாக இந்தத் துதிப்பாடல்கள் அமைந்த போதிலும், இவற்றின் உட்கிடையிலே சித்தரின் ஞானம் கனல்கிறது. எனவே, இந்த மூன்று சித்தர்களின் இலக்கியத்தையும் யோக முறையிலே அணுகுவது இந்த ஆய்வுக்குப் பொருந்துவதாகும். இந்த மூன்று சித்தர் களின் பாடல்களையும் சொற்பொருள் தேர்வதோடு நில்லாமல் அந்தச் சொற்களுக்குள்ளே உள்ள ஞானப்பொருள் எப்படி நீறுபூத்த நெருப்பாகக் கிளறும்போது அனலை வீசுகிறது என்ற நோக்கிலே, அதற்குரிய குறிப்புக் களுடன் பார்க்கலாம்.

—x—

# ஒன்பதாம் திருமுறை

## அ. திருமாளிகைத் தேவர்

### திருவிசைப்பா

### 1. கோயில்

**பண்—பஞ்சமம்**

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்குந் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே. 1

---

1. இறைவன் உயிர்களுக்கு இரங்கி உபகாரங்கள் செய்கிறான். ஒன்று காட்டுகிற உபாயம். மற்றது காண்கிற உபாயம்!

இதுவே சித்தர்களின் ஞானக் கல்விக்கு அடிப்படை! இந்த நுட்பமான கருத்தே இப்பாடலின் ஞானப் பொருளாகும்.

அவனை 'விளம்புமா விளம்ப' வேண்டும் என்ற கோரிக்கையின் உட்கிடை இதுவே.

இக் கருத்து பற்றியே 'சிவஞானபோதம்' பதினோராவது சூத்திரத்தின் உரையினுள்ளே இந்தப் பாடலே எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது!

'விளக்கு' என்பதை 'ஒளிவளர் விளக்கு' என்றது, சித்தர் இலக்கியம் கூறுகிற நந்தா விளக்கும் தூண்டா விளக்குமான அகவிளக்கையே!

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறஎறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கி னுள்ஒளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ!
அடல்விடைப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மால்அறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே! 2

தற்பரம் பொருளே! சசிகண்ட சிகண்டா!
சாமகண்டா! அண்ட வாணா!
நற்பெரும் பொருளாய்! உரைகலந் துன்னை
என்னுடை நாவினால் நவில்வான்
அற்பன்என் உள்ளத் தளவிலா உன்னைத்
தந்தபொன் னம்பலத் தரசே!
கற்பமாய், உலகாய், அல்லைஆ னாயைத்
தொண்டனேன் கருதுமா கருதே. 3

---

2. இருட்பிழம்பு – ஆணவமலம்; அறியாமைக்குக் காரணமானது.

'சோதியுட்சோதி' என்றது முன்பகுதிகளில் நாம் ஆராய்ந்த ஒளி அநுபவத்தின் கருத்தை உள்ளடக்கிய மொழித்தொடராகும்.

உயிருக்குயிராக நின்று, ஒளியினுக்கு ஒளியாவது அகச்சுடர்! ஆன்ம சோதியின் அனுபவத்திலே சித்தர்கள் கண்ட ஒளி நுட்பம் இதுவே.

3. அண்டம் என்று இங்கே குறித்தது, அக உலகத்தை.

அவ்வையின் அகவலிலே ஒளி உடம்பு பற்றிய விளக்கத்தை இங்கே ஒப்பிட்டுப் பார்த்தால் 'சிதாகாசம்' என்று பொருள் துலங்கக் காணலாம்.

பெருமையிற் சிறுமை பெண்ணொடா ணாய்என்
　　பிறப்பிறப் பறுத்தபே ரொளியே!
கருமையின் வெளியே! கயற்கணாள் இமவான்
　　மகள்உமை யவள்களை கண்ணே!
அருமையின் மறைநான் கோலமிட் டரற்றும்
　　அப்பனே! அம்பலத் தமுதே!
ஒருமையிற் பலபுக் குருவிநின் றாயைத்
　　தொண்டனேன் உரைக்குமா றுரையே. 4

கோலமே! மலை வானவர் கோவே!
　　குணங்குறி இறந்தோர்க் குணமே!
காலமே! கங்கை நாயகா! எங்கள்
　　காலகா லா! காம நாசா!
ஆலமே அமுதுண் டம்பலம் செம்பொற்
　　கோயில்கொண் டாடவல் லானே!
ஞாலமே! தமியேன் நற்றவத் தாயைத்
　　தொண்டனேன் நணுகுமா நணுகே. 5

---

4. பிறப்பிறப்பறுத்த பேரொளி – சித்தர்களுடைய தத்துவத்தின் நுட்பம் ஒளியினுடைய ஆற்றல். என்பதே. முன் பகுதிகளிலே பார்த்திருக்கிறோம்.

பிறப்பு இறப்புக்களை அறுக்கவல்ல தெய்வ ஆற்றல் எங்ஙனம் இயங்குகிறது என்பதை நான்கு நெறிகளிலே பேசுகிற ஞானிகள் தங்களுடைய ஆன்ம அநுபவத்தை ஒளியாக விளக்கியிருப்பதைச் சித்தர் இலக்கியம் முக்கியம் கொடுத்து விளக்குகிறது.

ஞானம் பயில்கின்ற மாணவனுக்கு நெற்றிக்கு நேரே துலங்கு கின்ற ஒளியானது எங்ஙனம் பிறப்பிறப்பை அறுக்க வல்லது என்பதை முன்பகுதிகளிலே ஆராய்ந்துள்ளோம். இந்த ஒளி பெண்மைத் தத்துவமான மதியிலும், ஆண்மைத் தத்துவமான கதிரிலும் இயைபு கொண்டு, பின் பிடரியோடு பிணைந்து செயற் படுகிற முறையே ஞானிகளின் ஒளியனுபவமாகும். இதை மனத்துள் கொண்டு இந்தப் பாடலை நோக்க வேண்டும். அப்போது 'கருமையின் வெளி' என்பதற்கும், 'கயற்கண்' என்பதற்கும் உள்ள சிறப்புப் பொருள் புலனாகும்.

5 'காலம்', 'கங்கை நாயகா', 'காலகாலா' என்ற விளிகள் உட்பொருள் கொண்டவை.

காலம் என்ற தத்துவமாக விளங்குகிற ஆற்றலும், அந்தக் காலத்திற்குக் காலமாக அமைந்து எமனை உதைத்த திருவடியும் சித்தர்கள் இலக்கியத்தில் வருகிற உருவகங்கள் என்பதை ஏற்கனவே சிவயோகியின் உரைகொண்டு பார்த்துள்ளோம்.

நீறணி பவளக் குன்றமே! நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே!
வேறணி புவன போகமே! யோக
வெள்ளமே! மேருவில் வீரா!
ஆறணி சடைஎம் அற்புதக் கூத்தா!
அம்பொன்செய் அம்பலத் தரசே!
ஏறணிகொடிஎம் ஈசனே! உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே. 6

தனதன்நற் றோழா! சங்கரா! சூல
பாணியே! தாணுவே! சிவனே!
கனகநற் றூணே! கற்பகக் கொழுந்தே!
கண்கள்மூன் றுடையதோர் கரும்பே!
அனகனே! குமர விநாயக சனக!
அம்பலத் தமராசே கரனே!
நுன்கழ லிணையென் நெஞ்சினுள் இனிதாத்
தொண்டனேன் நுகருமா நுகரே. 7

---

6. நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே – யோகமும் ஞானமும் பயில்வார்க்கு நெற்றிக்கு நேரே தோன்றும் ஒளியோடு பிடரிக் கண்ணாகிய மையமும் தொழிற்படுகிறது.

ஆன்மாவைப் பிணைத்துள்ள மலங்களை எரிக்கவல்ல ஆற்றலுடையது காமனைக் காய்ந்த இந்த நெற்றிக்கண் நெருப்பே ஆகும். முப்புரம் எரித்த கதையின் உருவகத்தை விளக்குகிற திருமூலரும் 'முப்புர மாவது மும்மல காரியம்' என்று கூறியதன் நுட்பம் இதுவே.

7. கனகநற்றூண் – மாசில்லாது நிலையாக நிற்கின்ற பொன்னொளியோடு கூடிய இறையாற்றல். இதுவே மனிதனை அமரனாக்கி அவனுக்கு இறைமை வழங்குகிற தெய்வப் பேராற்றலாகும். இந்த ஆற்றல் இயங்குவது யோகிகள் குறிப்பிடுகிற இடகலை, பிங்கலை, சுழுமுனை ஆகிய மூன்று மையங்களின் வாயிலாகவே!

இந்த ஆற்றல் இயங்கும்போது கரும்பின் தேறல் போன்ற நீர் சுரப்பது சித்தர்களின் அநுபவம் ஆகும். அந்த அமுத அநுபவத்தை உள்ளடக்கிய உருவகமே 'கண்கள் மூன்றுடைய கரும்பு' என்னும் தொடர்.

திறம்பிய பிறவிச் சிலதெய்வ நெறிக்கே
திகைக்கின்றேன் றனைத்திகை யாமே
நிறம்பொன்னும் மின்னும் நிறைந்தசே வடிக்கீழ்
நிகழ்வித்த நிகரிலா மணியே!
அறம்பல திறங்கண் டருந்தவர்க் கரசாய்
ஆலின்கீழ் இருந்தஅம் பலவா!
புறஞ்சமண் புத்தர் பொய்கள்கண் டாயைத்
தொண்டனேன் புணருமா புணரே. 8

தக்கன்நற் றலையும் எச்சன்றன் றலையும்
தாமரை நான்முகன் தலையும்
ஒக்கவிண் டுருள ஒண்டிருப் புருவம்
நெறித்தரு ளியஉருத் திரனே!
அக்கணி புலித்தோ லாடைமேல் ஆட
ஆடப்பொன் னம்பலத் தாடும்
சொக்கனே! எவர்க்கும் தொடர்வரி யாயைத்
தொண்டனேன் தொடருமா தொடரே. 9

---

8. ஆலின்கீழ் இருந்த அம்பலவா · ஆலமரத்தின் அடியில் அமர்ந்து ஞானத்தை உபதேசித்த இறைவனை நமது தமிழ் இலக்கியம் மனம் உருக்கும் பல பாடல்களிலே, மிகமிக அழகுடன் வருணனை செய்துள்ளது.

இந்தக் கவிதைகளின் எழில் ஒருபுறம் இருக்க, பரஞ்சோதி முனிவர் போன்ற ஞானக் கவிஞர்கள் 'சொல்லாமற் சொல்கின்ற' என்றே இந்த உபதேசத்தை அழைக்கின்றதைப் பார்க்கிறோம்.

உண்மையில் சித்தர்கள் வழங்குகிற ஞானம் முழுமையுமே, தொட்டுணர்த்துவதும், செயலிலே காண்பிப்பதுமாகிய அநுபவக் கல்வியே ஆகும். எனவேதான் தட்சிணாமூர்த்தி என்ற இந்தத் திருவுருவத்தைக் குருமுதல்வன் என்றே ஞான நூல்கள் அழைக்கின்றன.

அதனாலேதான் திருமாளிகைத் தேவரும் ஆலின்கீழ் இருந்த அண்ணலை 'அருந்தவர்க்கு அரசே' என்று அழைக்கிறார். ஆலமரம் என்பது ஞானநிழல் தருகிற குருவருளை உள்ளடக்கிய உருவகம்.

9. தக்கனையும் எச்சனையும் தலையறுத்த நிகழ்ச்சியும், நான்முகன் தலையைவிண்ட செய்தியும் புருவம் நெறித்தலோடு இசைத்துப் பாடுகிற உருவகமும், ஞானக்கண்ணின் ஆற்றலை விளக்குவதாகும். திருச்சாழலிலும், திருவுந்தியாரிலும் இதே செய்திகள் வந்துள்ளமை ஒப்பு நோக்கற்பாலது.

மடங்கலாய்க் கனகன் மார்புகீண் டானுக்
கருள்புரி வள்ளலே! மருளார்
இடங்கொள்முப் புரம்வெந் தவியவை திகத்தேர்
ஏறிய ஏறுசே வகனே!
அடங்கவல் லரக்கன் அரட்டிரு வரைக்கீழ்
அடர்த்தபொன் னம்பலத் தரசே!
விடங்கொள்கண் டத்தெம் விடங்கனே உன்னைத்
தொண்டனேன் விரும்புமா விரும்பே. 10

மறைகளும் அமரர் கூட்டமும் மாட்டா
தயன்திரு மாலொடு மயங்கி
முறைமுறை முறையிட் டோர்வரி யாயை
மூர்க்கனேன் மொழிந்தபுன் மொழிகள்
அறைகழல் அரம்சீர் அறிவிலா வெறுமைச்
சிறுமையிற் பொறுக்கும்அம் பலத்துள்
நிறைதரு கருணா நிலயமே! உன்னைத்
தொண்டனேன் நினையுமா நினையே. 11

---

10. இப்பாடலில் வந்துள்ள 'வைதிகத் தேர்' என்ற சொல்லாட்சி வியத்தகு ஆழ்ம்கொண்ட ஞானமொழியாகும். வேதத்தைக் குதிரையாகக்கொண்ட தேர் என்று சொல்லின் பொருள் விரியும்.

ஆனால் சித்தர்களின் ஏட்டிலே தேர் இவர்தல் என்பதற்கும், பரியேற்றம் என்பதற்கும் உள்ள ஞானச் செம்பொருள் முன்பகுதி களிலே விரிவாக ஆராயப்பெற்றுள்ளது. இந்தப் பொருள் கொண்டு முப்புரம் எரித்த நிகழ்ச்சியும் அரக்கனை வரையின்கீழ் அடர்த்த நிகழ்ச்சியும் உருவகமாகின்றன.

மும்மலம் அழிந்தமையும் (கீழ்நோக்கும் ஆற்றலாகிய இச்சைகள் அழிந்தமையும்) சித்தர்களின் அநுபவங்களாகத் திகழ்வது குண்டலினி ஆகிய நெருப்பாற்றலை மேல்நோக்கிச் செலுத்துவதன் வாயிலாகவே.

11. 'நினையுமா நினையே' – இறைவனே உணர்த்தினால் அல்லாமல் உயிர்களுக்குத்தாமே உணரும் இயல்பு இல்லை. இது காரணம் பற்றியே சித்தர்கள் காரண குருவையும், பரமகுருவையும் உள்ளிருந்து இயக்குகிற ஒளியாகிய குருவையும் அடிக்கடி, நமக்கு நினைவூட்டுகிறார்கள்.

திருமாளிகைத் தேவரும் இந்த உண்மையை வற்புறுத்துகின்ற நிலையிலேயே இப்பதிகம் முழுதும் 'விளம்புமா விளம்பே' என்றும், 'பணியுமா பணியே' என்றும் பற்பல வடிவங்களிலும் பாடி 'நினையுமா நினையே' என்று முடிக்கின்றார்.

## பாதாதி கேசம்

### 2. கோயில்

பண்—பஞ்சமம்

**திருவுரு**

உயர்கொடி யாடை மிடைபட லத்தின்
ஓமதூ மப்பட லத்தின்
பயர்நெடு மாடத் தகிற்புகைப் படலம்
பெருகிய பெரும்பற்றப் புலியூர்
சியரொளி மணிகள் நிரந்துசேர் கனகம்
நிறைந்தசிற் றம்பலக் கூத்தா!
மயரறும் அமரர் மகுடந்தோய் மலர்ச்சே
வடிகள்என் மனத்துவைத் தருளே. 12

**திருவடி**

கருவளர் மேகத் தகடுதோய் மகுடக்
கனகமா ளிகைகலந் தெங்கும்
பெருவள முத்தீ நான்மறைத் தொழிலால்
எழில்மிகு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் தெய்வப் பதிவிதி நிதியந்
திரண்டசிற் றம்பலக் கூத்தா!
உருவளர் இன்பச் சிலம்பொலி அலம்பும்
உன்அடிக் கீழதென் உயிரே. 13

---

12. கூத்தப் பெருமானுடைய திருவுருவத்தை ஓவியம் போலச் சித்தரிக்கிறது இந்தப் பாடல். தோற்றத்தில் வெளித் தோற்றத்தை இயம்புகிற பாங்கிலே அமைந்திருப்பினும், தில்லை என்பதும் சிற்றம்பலம் என்பதும் ஞானிகள் குறிப்பிடுகிற உடல் மையங்கள் என்பதை நினைவிற் கொண்டு இந்தப் பாடலை நோக்கினால், 'திருவடி வைத்தல்' என்னும் ஞானச்செயல் புலனாம்.

13. ஞான மார்க்கத்தில் செல்வோரும், யோக மார்க்கத்தில் பயிற்சி செய்வோரும், காலின் சிலம்பொலியைக் கேட்பது என்ற அநுபவம் பெறுகிற பக்குவநிலை ஏற்கனவே ஒலியைப் பற்றிய ஞான இரகசியப் பகுதியிலே விளக்கம் பெற்றுள்ளது.

### திருக்கணைக்கால்

வரம்புரி வாளை மிளிர்மடுக் கமலம்
கரும்பொடு மாந்திடு மேதி
பிரம்பிரி செந்நெற் கழனிச்செங் கழுநீர்ப்
பழனஞ்சூழ் பெரும்பற்றப் புலியூர்ச்
சிரம்புரை முடிவா னவர்அடி முறையால்
இறைஞ்சுசிற் றம்பலக் கூத்தா!
நிரந்தரம் முனிவா நினைதிருக் கணைக்கால்
நினைத்துநின் றொழிந்ததென் நெஞ்சே. 14

### திருத்துடை

தேர்மலி விழவிற் குழலொலி, தெருவில்
கூத்தொலி, ஏத்தொலி, ஒத்தின்
பேரொலி பரந்து கடலொலி மலியப்
பொலிதரு பெரும்பற்றப் புலியூர்ச்
சீர்நில விலயத் திருநடத் தியல்பிற்
றிகழ்ந்தசிற் றம்பலக் கூத்தா!
வார்மலி முலையாள் வருடிய திரள்மா
மணிக்குறங் கடைந்ததென் மதியே. 15

---

14. சிரம்புரைமுடி – உச்சிக்குமேல் உள்ள ஞான நிலைகளும், அந்த மகுடத்தில் நிகழ்கிற ஆன்ம அநுபவங்களுமே சித்தர்களின் கல்வியிலே உள்ள நுட்பமான பயிற்சி முறைகள்! ஒளி உடம்பு வளர வளர ஒளி அநுபவங்கள் கைகூடுகின்றன. எல்லாவற்றுக்கும் அடிப்படை திருவடிப் பேறேயாகும்!

15. குழலின் ஒலி, கூத்தின் ஒலி முதல், கடல் ஒலிவரை இந்த ஒலிகள் அனைத்தும் எழுந்தொலிக்கிற அரங்கமே திருச்சிற்றம்பலமாகும்!

திருக்கூத்து தரிசனம் பற்றி நீண்ட நெடும் அநுபவ வெளியீடாகத் திகழ்கிற திருமூலரின் பாடல்கள் இந்த அநுபவங்களைப் 'பின்னிக் கிடந்த பேரன்போடு' எடுத்துக் கூறுகிற தன்மையை இங்கே ஒப்பு நோக்கலாம்.

## திருவுடை

நிறைதழை வாழை நிற்கொடி நெடுந்தெங்
கிளங்கமு குளங்கொள்நீள் பலமாப்
பிறைதவழ் பொழில்சூழ் கிடங்கிடைப் பதண
முதுமதிற் பெரும்பற்றப் புலியூர்ச்
சிறைகொள்நீர்த் தரளத் திரள்கொள்நித் திலத்த
செம்பொற்சிற் றம்பலக் கூத்தா!
பொறையணி நிதம்பப் புலயதன் ஆடைக்
கச்சுநூல் புகுந்ததென் புகலே. 16.

## திருவுந்தி

அதுமதி இதுஎன் றலந்தலை நூற்கற்
றழைப்பொழிந் தருமறை யறிந்து
பிதுமதி வழிநின் றொழிவிலா வேள்விப்
பெரியவர் பெரும்பற்றப் புலியூர்ச்
செதுமதிச் சமணும் தேரரும் சேராச்
செல்வச்சிற் றம்பலக் கூத்தா!
மதுமதி வெள்ளத் திருவயிற் றுந்தி
வளைப்புண்டென் உளம்மகிழ்ந் ததுவே. 17

---

16. 'வாழை, தெங்கு, கமுகு, பலா, மா என்பவற்றின் மேல் பிறைதவழ் பொழில் என்றவாறு' என்பது மரபுவழி உரையாகும். 'வாம வழிபாடு' என்னும் சித்தர் ஞானத்திலே, தாயின் துணைக்கொண்டு தாதையைக் கூடுகிற நுட்பம் கூறப்பெற்றது.

17. 'உந்தி' என்னும் ஞான மையம் ஆன்மப் பயிற்சியிலே முக்கியமான இடத்தை வகிக்கிறது. கீழ்நோக்கி இழுக்கின்ற ஆற்றல்களை மேலெழுப்பிச் சிற்றம்பலம் சேர்வது என்பது, ஆடல்வல்லானுடைய திருவருட் செயலில் நிகழ்வதாகும். அந்த அநுபவம் சித்திக்கும்போது ஏற்படும் ஆனந்த நெகிழ்ச்சி ஈடு இணையற்றதாகும்.

## திருவயிறு முதலியன

பொருவரைப் புயத்தின் மீமிசைப் புலித்தோல்
பொடியணி பூணநூல் அகலம்
பெருவ்ரை புரைதிண் தோளுடன் காணப்
பெற்றவர் பெரும்பற்றப் புலியூர்த்
திருமரு.வுதரத் தார்திசை யடைப்ப
நடஞ்செய்சிற் றம்பலக் கூத்தா!
உருமரு வுதரத் தனிவடந் தொடர்ந்து
கிடந்ததென் உணர்வுணர்ந் துணர்ந்தே. 18

## திருக்கரங்களும் திருவாயும்

கணிஎரி, விசிறுகரம், துடி, விடவாய்க்
கங்கணம், செங்கைமற் றபயம்
பிணிகெட இவைகண் டுன்பெரு நடத்திற்
பிரிவிலார் பெரும்பற்றப் புலியூர்த்
திணிமணி நீல கண்டத்தென் னமுதே!
சீர்கொள்சிற் றம்பலக் கூத்தா!
அணிமணி முறுவற் பவளவாய்ச் செய்ய
சோதியுள் அடங்கிற்றென் அறிவே. 19

---

18. உணர்வுணர்ந்துணர்ந்தே – தானே தனக்குள் துய்க்கிற இன்பத் துக்கும், வெளியிலிருந்து வழங்கப்பெறுகிற புறக்காட்சித் துய்ப்புக்கும் அடிப்படையிலேயே வேற்றுமை உண்டு.

'புளிக் கண்டவர்க்குப் புனல் ஊறுவது' ஒருவகை அநுபவம். புளியை நினைக்கும்போதே புனல் ஊறுவது இன்னொரு வகையான அநுபவம். இந்த இரண்டோடு மூன்றாவதாக வைத்து எண்ண வேண்டிய அநுபவம், உணர்த்த உணரும் பேருணர்வாகிய அநுபவமாகும்.

19. சோதியுள் அடங்கிற்றென் அறிவே – இதுவே அறிவுக்கு அறிவாகிய பேரறிவிலே தோய்ந்த ஞான அநுபவமாகும்.

ஆர்வத்தினால் பெறுகிற இன்பம் வேறு, அறிவுகொண்டு அறிவுக் குள்ளே பெறுகிற ஞான அநுபவம் வேறு. இந்த ஞான அநுபவமே சித்தர்கள் கூறுகிற சீவன் முத்தி நிலை!

## திருமுகம்

திருநெடு மால், இந் திரன்அயன், வானோர்
திருக்கடைக் காவலில் நெருக்கிப்
பெருமுடி மோதி உகுமணி முன்றிற்
பிறங்கிய பெரும்பற்றப் புலியூர்ச்
செருநெடு மேரு வில்லின்முப் புரந்தீ
விரித்தசிற் றம்பலக் கூத்தா!
கருவடி குழைக்கா தமலச்செங் கமல
மலர்முகம் கலந்ததென் கருத்தே. 20

## திருமுடி

ஏர்கொள்கற் பகமொத் திருசிலைப் புருவம்,
பெருந்தடங் கண்கள்மூன் றுடையுன்
பேர்கள்ஆ யிரம்நூ றாயிரம் பிதற்றும்
பெற்றியோர் பெரும்பற்றப் புலியூர்ச்
சீர்கொள்கொக் கிறகும், கொன்றையும் துன்று
சென்னிச்சிற் றம்பலக் கூத்தா!
நீர்கொள்செஞ் சடைவாழ் புதுமதி மத்தம்
நிகழ்ந்தஎன் சிந்தையுள் நிறைந்தே. 21

---

20. கருவடி குழைக்காது அமலச் செங்கமல மலர்முகம் - பெரிய நீண்ட குழைக்காதினை உடைய தூய்மையான (அமலம்—தூய்மை) முகம் என்றவாறு.

இங்கே தூய்மை என்பது ஒளிபற்றி! ஒலியும் ஒளியும் இணைந்த ஆன்ம அநுபவத்துக்குத் தோற்றுவாய் ஒளிமுகமே!

21. திருமுடிக்கு வாயிலாக அமைவது முக்கண்ணாற்றலே! செஞ்சடையிலே மதிவாழ்கிறது என்பதன் உருவகம், சித்தர் இலக்கியத்திலே பல இடங்களிலும் பேசப் பெறுகிற இடைகலைப் பயிற்சியும், இடது கண்ணின் வழியான பயிற்சியும் இணைந்த ஞானக் கல்வியின் அடிப்படையே. ஒளி உடம்பின் ஆதாரமாக நிற்பது சிந்தையுள் இயங்குகிற சந்திரனின் ஆற்றல் வழிவந்த ஞான வலிமை.

### பணிவு

காமனக் காலன், தக்கன், மிக் கெச்சன்
படைக்கடைக் கணித்தவன் அல்லாப்
பேய்மனம் பிறிந்த தவப்பெருந் தொண்டர்
தொண்டனேன் பெரும்பற்றப் புலியூர்ச்
சேமநற் றில்லை வட்டங்கொண் டாண்ட
செல்வச்சிற் றம்பலக் கூத்தா!
பூமல ரடிக்கீழ்ப் புராணபூ தங்கள்
பொறுப்பர்என் புன்சொலின் பொருளே. 22

## 3. கோயில்

பண்—பஞ்சமம்

'உறவாகிய யோகமும் போக முமாய்
உயிராளீ!' என்னும்என் பொன்; 'ஒருநாள்,
சிறவா தவர்புரஞ் செற்ற கொற்றச்
சிலைகொண்டு பன்றிப்பின் சென்றுநின்ற
மறவா!' என்னும்; 'மணிநீ ரருவி
மகேந்திர மாமலை மேல்உறையும்
குறவா!' என்னும்; 'குணக் குன்றே' என்னும்;
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. 23

---

22. 'தில்லை வட்டம் கொள்ளல்' என்பது ஞானாசிரியன் உபதேசிக்கிற நயனதீட்சையின் உட்பொருளாகும். தொட்டுக் காட்டுகிற மையத்தின் ஞான இயக்கம் இதுவே.

23. இந்தப் பாடலிலிருந்து தொடங்குகிற அடுத்த பதிகம் பிறிதொரு துறையைச் சார்ந்ததாகும்.

தில்லை நடராசப் பெருமானிடம் தன் உள்ளத்தைப் பறிகொடுத்த தலைவியின் நிலையை எடுத்துக் கூறுகிறது இந்தப் பதிகம். எடுத்துச் சொல்வது யார்? செவிலித்தாய்! 'மகேந்திர மலை' என்பது முன் பகுதிகளில் மலையைப் பற்றி விளக்கம் செய்யப் பெற்ற உருவகத் தோடு ஒப்புநோக்கும் தன்மையது.

'காடாடு பல்கணம் சூழக் கேழற்
கடும்பின் நெடும்பகல் கான்நடந்த
வேடா! மகேந்திர வெற்பா!' என்னும்;
வினையேன் மடந்தைவிம் மாவெருவும்;
'சேடா!' என்னும்; செல்வர் மூவாயிரர்
செழுஞ்சோதி அந்தணர் செங்கைதொழும்;
'கோடா!' என்னும், 'குணக் குன்றே!' என்னும்;
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. 24

'கானே வருமுரண் ஏனம் எய்த
களிஆர் புளினநற் காளாய்!' என்னும்;
'வானே தடவு நெடுங்குடுமி
மகேந்திர மாமலை மேல்இருந்த
தேனே!' என்னும்; 'தெய்வ வாய்மொழியார்
திருவாளர் மூவா யிரவர் தெய்வக்
கோனே!' என்னும்; 'குணக் குன்றே!' என்னும்;
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. 25

---

24. காடு என்பதும் கணங்கள் சூழ நடனம் ஆடுவது என்பதும் சித்தர் பார்வையில் உருவகமாகக் காண்பதன் நுட்பம் ஏற்கனவே விளக்கப் பெற்றுள்ளது.

கேழல் - பன்றி. சேடன் - பெருமை பொருந்தியவன். செழுஞ் சோதி என்பது வேள்வித்தீயைக் குறிப்பதாக மரபுவழி உரை கூறும். சோதி என்பது அகச்சுடர் என்பது ஞானியர் பொருளாகும்.

25. மகேந்திர மலை என்பது உச்சி மையம். அதில் இருந்த தேன் என்பது ஞான அநுபவத்தின் துய்ப்பாகும். தெய்வ வாய்மொழி என்பது வேதத்தைக் குறிப்பதாகச் சமயிகள் பொருள் கூறுவர்.

ஒலி அநுபவத்தின் நுட்பம் இதுவே என்பது ஞானியர் உரை. வானைத் தடவுகிற நெடுங்குடுமி என்பதன் உருவக எழில் உய்த்துணர்ந்து துய்த்தற்குரியது!

'வெறியேறு பன்றிப்பின் சென்றொருநாள்
விசயற் கருள்செய்த வேந்தே!' என்னும்;
'மறியேறு சாரல் மகேந்திரமா
மலைமேல் இருந்த மருந்தே!' என்னும்;
'நெறியே!' என்னும்; 'நெறிநின்ற வர்கள்
நினைக்கின்ற நீதிவே தாந்தநிலைக்
குறியே!' என்னும்; 'குணக் குன்றே!' என்னும்;
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. 26

'செழுந்தென்றல், அன்றில்,இத் திங்கள், கங்குல்,
திரைவீரை தீங்குழல், சேவின்மணி
எழுந்தின்றென் மேற்பகை யாட வாடும்
எனைநீ நலிவதென்! என்னே!' என்னும்;
'அழுந்தா மகேந்திரத் தந்தரப்புட்
கரசுக்கரசே! அமரர் தனிக்
கொழுந்தே!' என்னும்; 'குணக் குன்றே!' என்னும்;
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. 27

---

26. நெறிநின்றவர்கள்.........குறியே. இத்தொடர் கூறுகிற ஞானப் பொருளையே 'நடுவுநின்றார்' என்னும் திருமந்திரம் இயம்புகிறது. இதன் விரிவு முன்பகுதியில் காண்க.

27. அன்றில் - துணையை விட்டுப்பிரியாத பறவை. யோகம் என்னும் ஐக்கியத்திற்கு இஃது உருவகமாயிற்று. திரைவீரை - அலைவீசுகிற கடல். சே - எருது.

ஆன்ம ஏக்கம் என்பது இணைந்திருந்த ஒன்று, இணைந்திருந்த ஒன்றைப் பிரிந்து மீண்டு இணைவதற்காகத் தவிக்கிற நிலை. இந்த நிலையே உயிர் பரம்பொருளை எண்ணி ஏங்குகிற நிலையாகும். இதைக் காதலியின் ஏக்கத்திலே ஏற்றிப் புனித நாட்டம் என்னும் பேரின்ப வேதனையைச் சித்தரிக்கிறது, அழகிய இப்பாடல்!

'வண்டார் குழல்உமை நங்கை முன்னே
மகேந்திரச் சாரல் வராகத் தின்பின்
கண்டார் கவலவில் லாடி வேடர்
கடிநாயுடன்கை வளைந்தாய்!' என்னும்;
'பண்டாய மலரயன், தக்கன், எச்சன்,
பகலோன் தலை, பல், பசுங்கண்,
கொண்டாய்!' என்னும்; 'குணக் குன்றே!' என்னும்;
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. 28

௪

'கருப்பாய்ப் பறைகறங் கக்கடுவெஞ்
சிலையும், கலையும், கவணும் கைக்கொண்
டுடுப்பாய தோல் செருப்புச், சுரிகை
வராகம்முன் ஓடு விளிஉளைப்ப
நடப்பாய்! மகேந்திர நாத! நாதாந்தத்
தரையாளன் பார்க்குநா தாந்தபதம்
கொடுப்பாய்!' என்னும்; 'குணக் குன்றே!' என்னும்;
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. 29

---

28. அம்மையும் வேடிச்சியாகி வேடந்தாங்கி அப்பனுடன் சென்றாள் என்பது புராணக்கதை. அம்மை உடன்செல்ல அப்பனாகிய கோலமே ஞானப்பாதையில் நிகழ்கின்ற பக்குவச் செலவாகும்.

29. நாதாந்தப் பதம் என்பது திருமாளிகைத் தேவர் கையாள்கிற ஓர் அரிய சொற்றொடராகும்.

வேதம் என்றும், வேதாந்தம் என்றும், பல நூல்களிலே சொல்லாட்சி வருகிறது. ஆனால் நாதம் என்றும் நாதாந்தம் என்றும் சொல்வது சித்தர் இலக்கியத்திற்கே உரிய ஓர் சொல்லாட்சியாகும்.

திருமந்திரத்தில் 'ஆறு அந்தம்' என்பதை மொழிகிற திருமூலர் 'நாதத்தின் அந்தம்' என்று குறிப்பிடுகிறார். 'வேதத்தின் அந்தமும்' இந்த ஆறில் இடம்பெறுகிறது.

'சேவேந்து வெல்கொடி யானே!' என்னும்;
'சிவனே! என் சேமத் துணையே!' என்னும்;
'மாவேந்து சாரல் மகேந்திரத்தின்
வளர்நாயகா! இங்கே வாராய்' என்னும்;
'பூவேந்தி மூவா யிரவர் தொழப்
புகழேந்து மன்று பொலிய நின்ற
கோவே!' என்னும்; 'குணக்குன்றே!' என்னும்;
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. 30

'தரவார் புனம்சுனைத் தாழ்அருவி,
தடங்கல் லுறையும் மடங்கலமர்
மரவார் பொழில்எழில் வேங்கை எங்கும்
மழைசூழ் மகேந்திர மாமலைமேற்
சுரவா!' என்னும்; 'சுடர்நீள் முடிமால்
அயன்இந் திரன்முதல் தேவர்க்கெல்லாம்
குரவா!' என்னும்; 'குணக்குன்றே!' என்னும்;
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. 31

---

30. 'பூவேந்தி......கோவே' என்னும் வரிகள் கவினெழில் நிரம்பிய திருக்கோல ஓவியம்!

உள்முகமாக நடராஜ மூர்த்தியைக் கண்டு தொழுவார்களின் அகக்காட்சி அநுபவமும் இத்தகைய எழில் நிரம்பிய கோலமேயாகும்.

31. தரவார் புனம் - உயர்ந்து நீண்டு பரவிய புனம். சுனைத்தாழ் அருவி-சுனையிலிருந்து கொட்டுகின்ற அருவி. அடர்ந்துள்ள காடும் அதில் நீர்வீழ்ச்சி கொட்டுவதும் உடம்பாகிய வனத்தின் ஞானச்செயல்கள். புறத்தே காண்கிற அண்ட அநுபவங்கள் ஒரு ஞானிக்கு அகத்தே நிகழ்கிற பிண்ட அநுபவங்களாவது இவ்வாறே!

"திருநீ றிடாஉருத் தீண்டேன்" என்னும்;
திருநீறு மெய்திரு முண்டந் தீட்டிப்
பெருநீல கண்டன் திறங்கொண் டிவள்
பிதற்றிப் பெருந்தெரு வேதிரியும்;
'வருநீ ரருவி மகேந்திரப்பொன்
மலையில் மலைமகளுக் கருளும்
குருநீ' என்னும்; 'குணக்குன்றே' என்னும்;
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. 32

'நற்றாய்!' என்னும்; 'உன்னையன்றி மற்றொன்
றுணரேன்' என்னும்; உணர் வுண்கலக்கப்
பெற்றாய் ஐந்தெழுத் தும்பிதற்றிப்
பிணிதீர்வெண் ணீறிடப் பெற்றேன்' என்னும்;
'கற்றாய சோதி மகேந்திரம் சூழ
மனத்திருள் வாங்கிச் சூழாத நெஞ்சில்
குற்றாய்!' என்னும்; 'குணக்குன்றே!' என்னும்;
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. 33

---

32. முண்டம் – நெற்றி. திருநீறு இடுதலும், திருநீறு தீட்டுதலும் தொண்டு நெறியில் அமைந்துள்ளமை போன்றே, யோகஞான நெறிகளிலும் அறிவியற் செயல்களாக நிகழ்கின்றன.

33. கற்றாய சோதி மகேந்திரம் – நுண்ணுடல் என்பது ஒளியின் வளர்ச்சியினால் முன்னேற முன்னேற, மகேந்திர நிலையாகிய உச்சிஒளி துலங்குகிற பான்மையை எடுத்துக் காட்டுகிறது.

"மன இருள் நீங்கி, ஒளிவளராத நெஞ்சில் பொருந்தாதவன் இறைவன்" என்பது சிந்தித்துணர வேண்டிய பகுதியாகும்.

"வேறாக உள்ளத் துவகைவிளைத்
தவனிச் சிவலோக, வேதவென்றி
மாறாத மூவா யிரவரையும்
எனையும் மகிழ்ந்தாள வல்லாய்!" என்னும்;
"ஆறார் சிகர மகேந்திரத்துன்
அடியார் பிழைபொறுப்பாய்! அமுதோர்
கூறாய்!" என்னும்; 'குணக்குன்றே!' என்னும்;
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. 34

## 4. கோயில்

**பண்—காந்தாரம்**

இணங்கிலா ஈசன் நேசத்
திருந்தசித் தத்தி னேற்கு
மணங்கொள்சீர்த் தில்லை வாணன்
மாணவடி யார்கள் வண்மைக்
குணங்களைக் கூறா வீறில
கோறைவாய்ப் பீறற் பிண்டப்
பிணங்களைக் காணா கண்;வாய்
பேசாதப் பேய்க ளோடே. 35

---

34. இப் பாடலில் பல சொற்றொடர்கள் ஞானப்பொருள் பொதிந்து பொலிவனவாம்.

அவனிச் சிவலோகம் — Heaven upon Earth, என்று ஆங்கில ஞானிகள் சொல்லுகிற சொல்லாட்சி! தில்லையே பூவுலகின் சொர்க்கம் என்பது மரபாகும். ஏனென்றால் வானளாவிய நடனத்தை ஆடும் திருவடிகள் அந்தத் தில்லை மண்ணிலேதான் பாதம் பதித்தாடுகின்றன!

வேதவென்றி - வேதத்திற்கு வாகை என்பது ஞானத்தின் கொடுமுடியேயாகும்! இது வேதம் ஓதுவதால் பெறுகிற வெற்றி என்பது சமயிகளின் பொருள். வேதப் பயிற்சியினால் பெறுகிற வெற்றி என்பது ஞானச் செம்பொருள்!

ஆறார் சிகரம் - பல ஆறுகள் அடர்ந்தோடிக் கலக்கிற மலை உச்சி என்ற பொருளிலே, ஞானச் சுரப்பிகளையும், அநுபவ நீரூற்று நிலைகளின் தன்மையையும், இந்த அநுபவ நிலையின் சங்கமத்தையும் உணர்த்துகிறது.

35. அடியார்களின் குழுவிலே சேர்ந்த பிறகு, உள்ளமானது வேறு இனஞ்சேரலை விரும்புவதில்லை. சாதாரண உலகியலிலே காண்கிற இதே உண்மை ஆன்ம இயலிலும் அவ்வாறே திகழ்கிறது.

வெளியே செல்லும் புலன்கள் அகத்தே ஒருமிக்கத் தொடங்கி விட்டால், புறச்செயல்களிலே மனம் பற்றுவதில்லை. ஒடுங்கும் யோகியின் நிலையும் இதுவே.

எட்டுரு விரவி என்னை
ஆண்டவன் ஈண்டு சோதி
விட்டிலங் கலங்கல் தில்லை
வேந்தனைச் சேர்ந்தி லாத
துட்டரைத் தூர்த்த வார்த்தைத்
தொழும்பரைப் பிழம்பு பேசும்
பிட்டரைக் காணா கண்;வாய்
பேசாதப் பேய்க ளோடே. 36

அருட்டிரட் செம்பொற் சோதி
யம்பலத் தாடு கின்ற
இருட்டிரட் கண்டத் தெம்மான்
இன்பருக் கன்பு செய்யா
அரட்டரை, அரட்டுப் பேசும்
அழுக்கரைக் கழுக்க ளாய
பிரட்டரைக் காணா கண்;வாய்
பேசாதப் பேய்க ளோடே. 37

---

36. ஈண்டு சோதி – மிகுந்து கூடிய ஒளி. இதன் இயல்பு 'இயங்குதலே'யாம்! இறைவனைச் சாராது பிற அடிமைப் பணியில் நிற்போரைத் தொழும்பர் என்றார்.

தொழும்பர் – அடிமைகள். பிட்டர் - புல்லர்கள். தில்லைப் பெருமானைச் சார்ரது ஒழுகு வாரைக் கண்ணால் காணேன்; காதினால் அவர் சொல்லும் கேளேன் என்றவாறு.

37. அடியாருக்கடியாரின் பெருமையும், அவரைச் சாராதார் நொய்ம்மையும் இப்பாடலிலே ஓதப் பெறுகின்றன. அரிட்டர், அழுக்கர், பிரட்டர் போன்ற சொற்கள் அவற்றின் ஒலிப்பிலேயே அவர்களின் இழிதகைமையை உணர்த்துகின்றன.

துணுக்கென அயனும் மாலும்
தொடர்வருஞ் சுடராய், இப்பால்
அணுக்கருக் கணிய செம்பொன்
அம்பலத் தாடிக் கல்லாச்
சிணுக்கரைச், செத்தற் கொத்தைச்
சிதம்பரைச், சீத்தை ஊத்தைப்
பிணுக்கரைக் காணா கண்;வாய்
பேசாதப் பேய்க ளோடே. 38

திசைக்குமிக் குலவு கீர்த்தித்
தில்லைக்கூத் துகந்து தீய
நசிக்கவெண் ணீற தாகும்
நமர்களை நணுகா நாய்கள்
அசிக்கஆ ரியங்கள் ஓதும்
ஆதரைப் பேத வாதப்
பிசுக்கரைக் காணா கண்;வாய்
பேசாதப் பேய்க ளோடே. 39

---

38. சிணுக்கர், சீத்தை, ஊத்தைப் பிணுக்கர் போன்ற சொற்கள் அன்னாரின் புன்மையை இயம்புவதோடு, அவர்மாட்டு நமக்கு எழுகின்ற அருவருப்பையும் வெறுப்பையும் உணர்த்துகின்றன.

சித்தர் பாடல்களிலே சொற்பொருள் உணர்த்துகிற பொருளோடு, இத்தகைய சொல்லாட்சியின் ஒலிப்பொருள் உணர்த்துகிற உட்பொருளும் நன்கு அமைந்திருப்பதைக் காணலாம். சிவ வாக்கியருடைய பல பாடல்களிலே இத்தகைய சொல்லாட்சிகளைச் சந்திக்கிறோம்.

39. நமர்கள் – நம்மவர்கள்; நமரங்கள்.

‘ஆடர வாட ஆடும்
அம்பலத் தமுதே’ என்னும்
சேடர்சே வடிகள் சூடாத்
திருவிலா உருவி னாரைச்
சாடரைச், சாட்கை மோடச்
சழக்கரைப் பிழைக்கப் பிட்கப்
பேடரைக் காணா கண்;வாய்
பேசாதப் பேய்க ளோடே.

உருக்கினன் உள்ளத் துள்ளே
ஊறலந் தேறல் மாறாத்
திருக்குறிப் பருளுந் தில்லைச்
செல்வன்பால் செல்லுஞ் செல்வில்
அருக்கரை, அள்ளல் வாய
கள்ளரை, அவியாப் பாவப்
பெருக்கரைக் காணா கண்;வாய்
பேசாதப் பேய்க ளோடே. 41

---

40. ஆடரவு ஆட ஆடும் அம்பலத் தமுதே – கூத்தனுடைய ஆட்டத்திலே அரவாடுதல் ஓர் அங்கமாகும்.

யோகிகளும் ஞானிகளும் தங்கள் அக அரங்கிலே கூத்தப் பெருமானின் நடனம் நிகழ்வதைக் காணுவதற்கான பயிற்சியிலே ‘அரவு ஆடுதல்’ முக்கியம் பெறுகிறது. மூச்சுப் பயிற்சியாளர்கள் சுவாசமாகிய அரவை ஆட்டுகிறார்கள். செந்நெறி நிற்பாரோ என்றால், குண்டலினியாகிய அரவத்தைப் படம் எடுத்து ஆடும்படி செய்து நடனம் காணுகிறார்கள். இருவரும் அமுதை உண்ணுகிறார்கள்.

41. உள்ளத்தே உருக்கி அதனுள்ளே தேன் ஊறுதலை – இயக்கி, அந்தத் தேறல் நீங்காது ஊறும்படி அருளுகிற ஆடலரசின் தன்மையை அழகாகக் கூறுகிற இந்த அடிகள், அத்தகைய ஆன்ம அநுபவம் கைவரப்பெறாத பாவப் பெருக்கரின் இழிவையும் நன்கு சித்தரிக்கின்றன.

செக்கர்ஒத் திரவி நூறா
யிரந்திரள் ஒப்பாந் தில்லைச்
சொக்கர், அம்பலவர் என்னும்
சுருதியைக் கருத மாட்டா
எக்கரைக் குண்டாம் மிண்ட
எத்தரைப் புத்த ராதிப்
பொக்கரைக் காணா கண்;வாய்
பேசாதப் பேய்க ளோடே. 42

எச்சனையைத் தலையைக் கொண்டு
செண்டடித் தியம் ஏறி
அச்சங்கொண் டமரர் ஓட
நின்றஅம் பலவற் கல்லாக்
கச்சரைக் கல்லாப் பொல்லாக்
கயவரைப் பசுநூல் கற்கும்
பிச்சரைக் காணா கண்;வாய்
பேசாதப் பேய்க ளோடே. 43

---

42. குண்டு – தாழ்வு. மிண்டர் – கொடியவர். எத்தர் – ஏமாற்றுகிறவர்; வஞ்சனையாளர். பொக்கர் – பொய்யர்கள். செக்கர் வானத்தைப்போலே பவளம் ஒத்த மேனியர்.

‘சதகோடி சூரியப்பிரபஞ்சம்’ என்று வடமொழிக் கவிச்சொற்கள் இந்த மேனியிலிருந்து சுடர்கிற பிரகாசத்தை வர்ணனை செய்கின்றன. ‘இரவி நூறாயிரத் திரள்’ என்ற சொற்றொடரின் அழகோடு இந்த வர்ணனையும் இங்கே ஒப்புநோக்கி மகிழற்பாலது.

43. கச்சர் – வெறுத்து ஒதுக்கப்பட்டவர். பிச்சர் – பித்தர்கள்.

விண்ணவர் மகுட கோடி
மிடைந்தொளி மணிகள் வீசும்
அண்ணல்அம் பலவன் கொற்ற
வாசலுக் காசை யில்லாத்
தெண்ணரைத், தெருள உள்ளத்
திருளரைத், திட்டை முட்டைப்
பெண்ணரைக் காணா கண்;வாய்
பேசாதப் பேய்க ளோடே. 44

சிறப்புடை அடியார் தில்லைச்
செம்பொன்அம் பலவற் காளாம்
உறைப்புடை அடியார் கீழ்க்கீழ்
உறைப்பர்சே வடிநீ றாடார்
இறப்பொடு பிறப்பி னுக்கே
இனியராய் மீண்டும் மீண்டும்
பிறப்பரைக் காணா கண்;வாய்
பேசாதப் பேய்க ளோடே. 45

---

44. அம்பலவாணன் கொற்ற வாசல் - முற்பகுதிகளிலே அகவாசல் திறப்பது பற்றிப் பழைய ஞான உரைகளிலிருந்து சில பகுதிகள் மேற்கோள் காட்டி 'வாசல்' என்பதன் உட்பொருள் விரிவாக விளக்கப் பெற்றுள்ளது. தெண்ணர் என்பதன் மரூஉ தொண்ணர் என்று வந்தது என ஒரு பழைய உரை கூறுகிறது. 'திட்டை முட்டை' என்பன பகுப் பற்ற பிண்டத்தை உணர்த்துவதாகவும் இதே உரை கூறுகிறது. 'பெண்ணர்' என்றது பேடியர் என்ற பொருளிலே வந்த வசைச்சொல்! அத்தகையவரிடம் ஏற்படுகின்ற வெறுப்பை இந்த வசை உணர்த்துகிறது.

45. சிறப்பு என்றது ஆன்ம பரிபக்குவமாகிய பெருஞ் சிறப்பையாகும். உறைப்பு என்றது தங்கள் பயிற்சியிலும் தங்கள் சாதனையிலும் கொண்டுள்ள பிடிப்பை! அதாவது உறுதிப்பாட்டை! கீழ்க்கீழ் - அடியவர், அடியவர்க்கடியவர், அடியவர்க்கடியவர்க் கடியவர் என்பது போலே! பிறப்பிறப்பாகிய சுழலிலே சிக்குண்டு மீண்டும் மீண்டும் உலகவாழ்விற்கு வந்து வந்துசெல்கிற பாவிகளை ஞானச் சீற்றத்தோடு இந்தப் பாடலின் கடைசி அடிகள் இயம்புகின்றன.

சிற்றினஞ் சேராமை என்பது ஞானியர் உலகிலே எத்தனை உறுதிப்பாட்டுடன் நிலவுகிறது என்ற உண்மைக்கு இந்தப் பாடல்கள் தக்க சான்றுகளாய் அமைந்துள்ளன என்பது தேற்றம்!

# (ஆ) சேந்தனார்

## திருவிசைப்பா

### 1. திருவீழிமிழலை

**பண்—பஞ்சமம்**

*ஏகநா யகனை, இமையவர்க் கரசை,*
*என்னுயிர்க் கமுதினை, எதிர்இல்*
*போகநா யகனைப், புயல்வணற் கருளிப்*
*பொன்னெடுஞ் சிவிகையா ஊர்ந்த*
*மேகநா யகனை, மிகுதிரு வீழி*
*மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்*
*யோகநா யகனை யன்றிமற் றொன்றும்*
*உண்டென உணர்கிலேன் யானே.* 46

---

46. எதிரில் - ஒப்பில்லாத. இதற்கு இது எதிர் என்று பிறிதொன்றில்லாத. புயல்வண்ணன் - நீலமேகசியாமளனாகிய திருமால். ஒரு கற்பத்தில் திருமால் சிவனை மேக வடிவங்கொண்டு தாங்கினமையால், அந்தக் கற்பம் 'மேகவாகன கற்பம்' என்று பெயர் பெற்றதாகப் புராணம்! விண்ணிழி விமானம் என்பதற்குச் சமயிகள் கூறுகிற விளக்கம் திருமாலினால் விண்ணுலகினின்றும் கொணரப் பெற்ற திருவீழிமிழலைக் கோயிலின் விமானம் என்பது! யோக நெறியினில் விண்விழிவிமானம் என்பது முற்பகுதிகளில் விளக்கப்பெற்றுள்ளது.

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்,
கரையிலாக் கருணைமா கடலை,
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்,
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்,
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே. 47

மண்டலத் தொளியை விலக்கியான் நுகர்ந்த
மருந்தை, என்மாறிலா மணியைப்,
பண்டலர் அயன்மாற் கரிதுமாய் அடியார்க்
கெளியதோர் பவளமால் வரையை,
விண்டலர் மலர்வாய் வேரிவார் பொழில்சூழ்
திருவீழி மிழலையூர் ஆளும்
கொண்டலங் கண்டத் தெம்குரு மணியைக்
குறுகல் வினைகுறு காவே. 48

---

47. மனமணிவிளக்கு என்பது சித்தர் ஞானம் கூறுகிற அகவிளக்கு. புலன்கள் மணிவிளக்காகப் பரிணமிக்கிற தன்மையைத் திருமூலர் பாடுகிறார். இறைமை என்பது மனமணி விளக்கு!

48. மண்டலம் – கதிர்வட்டம். மண்டலப் பயிற்சி என்பது கதிர் வட்டத்தை விலக்கி ஒளியினுக்குள் ஒளியை உணர்கிற தந்திரமே! வேரி – தேன். குருமணி – பரம குருவாகிய இறைவன்.

தன்னடி நிழற்கீழ் என்னையும் தகைத்த
    சசிஞால மவுலியைத், தானே
என்னிடைக் கமலம் மூன்றினுள் தோன்றி
    எழுஞ்செழுஞ் சுடரினை அருள்சேர்
மின்னெடுங் கடலுள் வெள்ளத்தை, வீழி
    மிழலையுள் விளங்குவெண் பளிங்கின்
பொன்னடிக் கடிமை புக்கினிப் போக
    விடுவனோ பூண்டுகொண் டேனே! 49

"இத்தெய்வ நெறிநன்" றென்றிருள் மாயப்
    பிறப்பறா இந்திர சாலப்
பொய்த்தெய்வ நெறிநான் புகாவகை புரிந்த
    புராணசிந் தாமணி வைத்த
மெய்த்தெய்வ நெறிநான் மறையவர் வீழி
    மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
அத்தெய்வ நெறியிற் சிவமலா தவமும்
    அறிவரோ அறிவுடை யோரே! 50

---

49. கமலம் மூன்றினுள் – முழுதும் சித்தர் ஞானப்பொருள் பொதிந்த சொற்றொடர். ஆறு ஆதார நிலைகளிலே மேலே மூன்றும் ஞான அநுபவத்திலே பரம்பொருளோடு கலந்து துய்க்கிற பேரின்ப நிலையங்களாம். இந்த மூன்றும் மூன்று மலர்கள், மூன்று தாமரைகள். அக உலகிலே துய்க்கிற ஆனந்தத்தின் வெளியீடாதலால், அருளைக் கடலாகவும் இன்பத்தை வெள்ளமாகவும் உருவகம் செய்தார்.

50. புராண சிந்தாமணி – பழைமைக்கெல்லாம் பழைமையான பரம்பொருள். சிந்தாமணி என்று மொழிந்தது மெய்ஞ்ஞானத்தோடு இயைந்த சித்தர் மொழியாகும்.

அக்கனா அனைய செல்வமே சிந்தித்
தைவரோ டழுந்தியான் அவமே
புக்கிடா வண்ணம் காத்தெனை ஆண்ட
புனிதனை, வனிதைபா கனை, எண்
திக்கெலாங் குலவும் புகழ்திரு வீழி
மிழலையான் திருவடி நிழற்கீழ்ப்
புக்குநிற் பவர்தம் பொன்னடிக் கமலப்
பொடியணிந் தடிமைபூண் டேனே. 51

கங்கைநீர் அரிசிற் கரைஇரு மருங்கும்
கமழ்பொழில் தழுவிய கழனித்
திங்கள்நேர் தீண்ட நீண்டமா ளிகைசூழ்
மாடநீ டுயர்திரு வீழித்
தங்குசீர்ச் செல்வத் தெய்வத்தான் தோன்றி
நம்பியைத் தன்பெருஞ் சோதி
மங்கைஓர் பங்கத் தென்னரு மருந்தை
வருந்திநான் மறப்பனோ இனியே. 52

---

51. ஐவரோடழுந்தியான் அவமே புக்கிடாவண்ணம் - புலன்கள் செல்கிற வழியோடு சென்று உலக வாதனைகளிலே அழுந்தி வீணாகாமல். பற்று விடுவதற்குப் பற்றவேண்டிய பற்று அவனே. அவனுடைய திருவடியே காத்துப் புரக்கவல்லது. அந்தத் திருவடிக்கீழ் நிற்பவர்களுடைய திருவடியின் கீழ் பதிந்துள்ள துகளை நான் அணிந்து அடிமை பூண்டேன்! இந்த அடியாரின் அடிப்பொடிக்கு எந்தக் குறையும் இல்லை என்றபடி!

52. கங்கையின் தண்ணீர் போன்று புனலோடும் அரிசில் ஆற்றின் கரைமீது உள்ளதும், இரு பக்கமும் சோலை சூழ்ந்ததும், வயல்களை உடையதும், சந்திரனைத் தழுவுகிற உயர்ந்த மாபெரும் மாளிகைகள் சூழ்ந்ததும், நீண்டுயர்ந்த மாடங்களோடு கூடியதுமான திருவீழிமிழலை.

ஆயிரங் கமலம் ஞாயிறா யிரமுக்
கண்முக கரசர ணத்தோன்,
பாயிருங் கங்கை பனிநிலாக் கரந்த
படர்சடை மின்னுபொன் முடியோன்,
வேயிருந் தோளி உமைமண வாளன்
விரும்பிய மிழலைசூழ் பொழிலைப்
போயிருந் தேயும் போற்றுவார் கழல்கள்
போற்றுவார் புரந்தரா திகளே. 53

எண்ணில்பல் கோடி சேவடி முடிகள்,
எண்ணில்பல் கோடிதிண் டோள்கள்,
எண்ணில்பல் கோடிதிருவுரு நாமம்
ஏர்கொள்முக் கண்முகம் இயல்பும்
எண்ணில்பல் கோடி எல்லைக்கப் பாலாய்
நின்றைக்குற் றந்தணர் ஏத்தும்
எண்ணில்பல் கோடி குணத்தர்ஏர் வீழி
இவர்நம்மை ஆளுடை யாரே. 54

---

53. திருவீழிமிழலைக் கோயிலுக்குட் சென்று போற்ற முடியாவிடினும், அதனைச் சுற்றிப் பரந்துள்ள சோலைக்குள் சென்று, அந்த அமைதியைப் போற்றி அநுபவிக்கிறவர்களுடைய பாதங்களை வணங்கினாலே போதும்; யார் அவர்கள்? இந்திரன் முதலான தேவ பதவியே அவர்களுக்குக் கிட்டும்! அந்தக் கழலை வணங்குவார்கள் இந்திராதியர்களே என்பதன் குறிப்பு அது!

54. எண்ணில் பல்கோடி என்பது அளவற்றது என்ற பொருளில் வந்தது. தில்லையில் அந்தணர் மூவாயிரவர் என்பதுபோலே, வீழியிலே அந்தணர் ஐந்நூற்றுவர்! இந்தப் பாடலோடு ஒப்பு நோக்கவல்ல மற்றொரு திருமுறைப் பாடல்:

"ஆயிரம் தாமரை போலும் ஆயிரம் சேவடி யானும்
ஆயிரம் பொன்வரை போலும் ஆயிரம் தோள்உடை யானும்
ஆயிரம் ஞாயிறு போலும் ஆயிரம் நீள்முடி யானும்
ஆயிரம் பேர்உகந் தானும் ஆரூர் அமர்ந்தஅம் மானே!"

தக்கன், வெங் கதிரோன், சலந்தரன், பிரமன்,
சந்திரன், இந்திரன், எச்சன்,
மிக்க நெஞ் சரக்கன், புரம்கரி, கருடன்
மறலி வேள் இவர்மிகை செகுத்தோன்
திக்கெலாம் நிறைந்த புகழ்த்திரு வீழி
மிழலையான் திருவடி நிழற்கீழ்ப்
புக்கிருந் தவர்தம் பொன்னடிக் கமலப்
பொடியணிந் தடிமைபூண் டேனே. 55

உளங்கொள மதுரக் கதிர்விரித் துயிர்மேல்
அருள்சொரி தரும்உமா பதியை,
வளங்கிளர் நதியும் மதியமும் சூடி
மழவிடை மேல்வரு வானை
விளங்கொளி வீழி மிழலைவேந் தேஎன்
றாந்தனைச் சேந்தன்தா தையையான்
களங்கொள அழைத்தால் பிழைக்குமோ அடியேன்
கைக்கொண்ட கனகக்கற் பகமே. 56

---

55. அரக்கன் என்றது இங்கே இராவணனை. கரி - யானை, கயாசுரன். வேள் - மன்மதன். இந்திரனைத் தோள் நெரித்ததும், கருடனை இடப தேவரால் அலைப்பித்ததும், பிற குறிப்புகளும் புராணங்களிலே வருகிற நிகழ்ச்சிகள். இப்பாடலிலும் அடியார்களின் அடிப்பொடியை அணிந்து கொண்ட உவகை பேசப்படுகிறது.

56. இந்தப் பாடலின் ஆசிரியர் சேந்தன். பாடல் பெறுகிற மூர்த்தி சேர்ந்தனின் தந்தை, முருகச் செவ்வேளின் தந்தையாகிய சிவ பெருமான். களம்கொள - கண்முன் வந்து நிற்குமாறு! அழைத்தேன், என் அழைப்பு தப்பாது, அவன் வந்து தோன்றுவான் என்றபடி!

பாடலங் காரப் பரிசில்கா சருளிப்
    பழுத்தசெந் தமிழ்மலர் சூடி
நீடலங் காரத் தெம்பெரு மக்கள்
    நெஞ்சினுள் நிறைந்துநின் றானை
வேடலங் காரக் கோலத்தின் னமுதைத்
    திருவீழி மிழலையூர் ஆளும்
கேடிலன் கீர்த்திக் கனககற் பகத்தைக்
    கெளுமுதற் கெவ்விடத் தேனே. 57

## 2. திருவாவடுதுறை

பண்—பஞ்சமம்

பொய்யாத வேதியர் சாந்தைமெய்ப்
    புகழாள ராயிரம் பூசுரர்
மெய்யே திருப்பணி செய்சீர்
    மிகுகா விரிக்கரை மேய
ஐயா திருவா வடுதுறை
    யமுதேயென் றுன்னை யழைத்தக்கால்
மையார் தடங்கண் மடந்தைக்கொன்
    றருளா தொழிவது மாதிமையே. 58

---

57. எம் பெருமக்கள் என்று சுட்டியது, அப்பரையும் சம்பந்தரையுமே. தமிழை வாங்கிக் கொண்டு பரிசளித்த பான்மையைச் சுந்தரரும் பாடுகிறார் :

“இருந்து நீர் தமிழ் கேட்கும்
இச்சையால் காசுநித்தல் நல்கினீர்
அருத்தண் வீழி கொண்டீர்
அடியேற்கும் அருளுதிரே!”

58. இந்தத் திருப்பதிகம் செவிலி கூற்றாய் அமைந்தது. காவிரிக் கரையில் உள்ள பல புண்ணியத்துறைகளில் மிகவும் புகழ்வாய்ந்த ஒரு துறையே ஆவடுதுறையாகும். ‘சாந்தை’ என்பது அந்தக் கோயிற் றலத்தைச் சார்ந்த அந்தணாளர் உறைவிடமாகிய ஊராகும். இங்கே தில்லை மூவாயிரவரும், வீழிமிழலை ஐந்நூற்றுவரும் இயம்பப் பெறுவதுபோலே ஆயிரவர் அந்தணர் என்று கூறப்பெறுகிறது.

மாதி மணங்கம ழும்பொழில்
மணிமாட மாளிகை வீதிசூழ்
சோதி மதிலணி சாந்தைமெய்ச்
சுருதி விதிவழி யோர்தொழும்
ஆதி யமரர் புராணனாம்
அணிஆ வடுதுறை நம்பிநின்ற
நீதி யறிகிலள், பொன்னெடுந்
திண்டோள் புணர நினைக்குமே. 59

நினைக்கும் நிரந்தர னேயென்னும்
நிலாக்கோலச் செஞ்சடைக் கங்கைநீர்
நனைக்கும் நலங்கிளர் கொன்றைமேல்
நயம்பேசும் நன்னுதல் நங்கைமீர்
மனக்கின்ப வெள்ள மலைமகள்
மணவாள நம்பிவண் சாந்தையூர்
தனக்கின்பன் ஆவடு தண்டுறைத்
தருணேந்து சேகரன் என்னுமே. 60

---

59. மாதி - தலைவி. நீ இருக்கும் பெருமையை, உனது நிலையை அறியாமல் அவள் உன் திண்ணிய தோள்களைக் கூடவேண்டும் என்று நினைக்கிறாள்! ஆதி மரர் புராணன் என்பது அவனுடைய பழமையையும், அணுக ஒண்ணாத உயர்வையும், பெருமையையும், உச்சிநிலையையும் உணர்த்துகிற சொற்கள்.

60. நிரந்தரன் என்பது தாணுவாய் நிலைத்து நிற்கும் பரம்பொருளை. மலைமகள் மணவாளன், நம்பி, தருணேந்து சேகரன் ஆகிய பெயர்கள் எல்லாம் இறைமையின் பற்பல பண்பு நிலைகளை உருவகித்துச் சொல்கிற திருநாமங்கள். சிற்றுயிர் பேருயிரைக் கூடுவது என்ற புணர்ப்பின்பாற்பட்ட காதற் பாடல்களிலே இத்தகைய திருநாமங்களை அடுக்கடுக்காகச் சொல்லி விளிப்பது ஓர் உத்தியாகும்.

தருணேந்து சேகர னேயெனுந்
தடம்பொன்னித் தெற்கரைச் சாந்தையூர்ப்
பொருணேர்ந்த சிந்தை யவர்தொழப்
புகழ்செல்வ மல்குபொற் கோயிலுள்
அருணேர்ந்த மர்திரு வாவடு
துறையாண்ட ஆண்டகை யம்மானே
தெருணேர்ந்த சித்தம் வலியவா
திலக நுதலி திறத்திலே. 61

திலக நுதல்உமை நங்கைக்கும்
திருவா வடுதுறை நம்பிக்கும்
குலக அடியவர்க் கென்னையாட்
கொடுத்தாண்டு கொண்ட குணக்கடல்
அலதொன் றறிகின்றி லேமெனும்
அணியும்வெண் ணீறஞ் செழுத்தலால்
வலதென் றிலள்இதற் கென்செய்கேன்
வயல்அந்தண் சாந்தையர் வேந்தனே. 62

---

61. 'சேகரனே' என்றது தலைவியின் மொழியாகும். 'அம்மானே' என்றது செவிலி கூற்று. சித்தம் – இத்தனை துன்பம் அநுபவிக்கின்ற தலைவியின் வேதனைகளைப் பார்த்து நிற்கிற, தெளிவாகக் கண்டு கொண்டுள்ள, உனது மனம்! வலியவா – இத்தனை கல்லாக இருக்கிறதே, அந்தோ!

62. காதல் என்ற நோயின் தன்மை முற்றிவிட்டது. அந்த நிலையிலே திருநீற்றை எடுத்துப் பூசுவதும், அஞ்செழுத்தை ஓதுவதுமே வைத்தியமாக இருக்கிறது! இந்த இரண்டும் தவிர வேறு எந்த மருந்தும் வேலை செய்யாத நிலை இந்தத் தலைவிக்கு.

வேந்தன் வளைத்தது மேருவில்;
அரவுநாண்; வெங்கணை செங்கண்மால்;
போந்த மதிலணி முப்புரம்
பொடியாட வேதப்புர வித்தேர்ச்
சாந்தை முதல்அயன் சாரதி;
கதிஅருள் என்னுமித் தையலை
ஆந்தண் திருவா வடுதுறை
யான்செய்கை யார்அறி கிற்பரே. 63

கிற்போம் எனத்தக்கன் வேள்விபுக்
கெடுத்தோடிக் கெட்டஅத் தேவர்கள்
சொற்போலும் மெய்ப்பயன் பாவிகாள்
என்சொல்லிச் சொல்லும்இத் தூமொழி
கற்போல் மனங்கனி வித்தஎம்
கருணால யாவந்திடாய் என்றாற்
பொற்போ பெருந்திரு வாவடு
துறையாளி பேசா தொழிவதே. 64

---

63. திரிபுரம் எரித்தது எவ்வாறு! மேருவே வில்; பாம்புதான் வில்லின் நாண்; அம்பு திருமால்; வேதமே குதிரை; அயனே தேரோட்டி. சாடியது முப்புரத்தை! இப்படிப்பட்ட வேந்தனுக்கு ஆட்பட்டு, அந்தக் காதல் நோயிலே வருந்துகிற இந்த ஆத்மாவுக்கு, 'கதி அருள்' என்று கூவுகிற இந்தத் தையலுக்கு என்ன நேரும் என யார் அறிவார்? அவன் திருவுளப் பாங்கு ஏதோ?

64. பொற்போ - பெற்றியோ, பெருந்தன்மையோ. இத்தனை துன்பமுற்று, இத்தனை அவதிக்குள்ளாகிற தலைவிக்கு இரங்காமல் இருப்பது எந்த வகையில் நியாயம்?

ஒழிவொன்றி லாஉண்மை வண்ணமும்
உலப்பிலன் ஊறின்ப வெள்ளமும்
மொழிவென்றி லாப்பொன்னித் தீர்த்தமும்
முனிகோடி கோடியா மூர்த்தியும்
அழிவொன்றி லாச்செல்வச் சாந்தையூர்
அணிஆ வடுதுறை ஆடினாள்
இழிவொன்றி லாவகை யெய்திநின்
றிறுமாக்கும் என்னிள மானனே. 65

மானேர் கலைவளை யுங்கவர்ந்
துளங்கொள்ளை கொள்ள வழக்குண்டே
தேனே அமுதேஎன் சித்தமே
சிவலோக நாயகச் செல்வமே
ஆனேஅ லம்பு புவனபொன்னி
அணிஆ வடுதுறை அன்பர்தம்
கோனேநின் மெய்யடி யார்மனக்
கருத்தை முடித்திடுங் குன்றமே. 66

---

65. திருவாவடுதுறைக்கு 'நவகோடி சித்தர்புரம்', என்று ஒரு பெயர் உள்ளது. அதனை நினைவுபடுத்துகிற பாங்கிலே இப்பாடலின் சொல்லாட்சி அமைந்துள்ளது. சாந்தையூர் சார்ந்து அணிசெய்கிற திருவாவடுதுறையிலே இவள் நீராடினாள். அதனால் பேருவகை அடைந்தாள். அந்த இறுமாப்பிலே இருக்கின்றாள் என் இளமான்! செவிலி கூற்றாலே மகளின் உவகை உள்ளிருந்து பொங்குபுனலாகிப் பெருகி வருகிறது!

66. காதற்பாட்டின் பாங்கிலே கலைகவர்தல், வளைகவர்தல் ஆகிய திரு(ட்டு) விளையாடல்கள் பேசப்படுகின்றன! உரிமையோடு இறைவனுடன் நம் கவிஞர்கள் இவ்வாறெல்லாம் விளையாடியிருக்கிறார்கள். 'வாழ்ந்து போதிரே' என்று தம்பிரான் தோழர் இறைவனை வைகிறார்ரே, இதெல்லாம் எதைக் காட்டுகிறது? ஞானிகள் இறைவன்மாட்டு எத்தகைய சொந்தம் கொண்டாடினார்கள் என்பதையே!

குன்றேந்தி கோகன கத்தயன்
அறியா நெறிஎன்னைக் கூட்டினாய்
யென்றேங்கி ஏங்கிஅ ழைக்கின்றாள்
இளவல்லி எல்லைக டந்தனள்
அன்றேஅ லம்பு புனற்பொன்னி
அணிஆ வடுதுறை யாடினாள்
நன்றே யிவள் நம் பரமல்லள்
நவலோக நாயகன் பாலளே. 67

பாலும் அமுதமும் தேனுமாய்
ஆனந்தந் தந்துள்ளே பாலிப்பான்
போலும்என் ஆருயிர்ப் போகமாம்
புரகால காம புராந்தகன்
சேலுங் கயலுந் திளைக்கும்நீர்த்
திருவா வடுதுறை வேந்தனோ
டாலு மதற்கே முதலுமாம்
அறிந்தோம் அரிவைபொய் யாததே. 68

---

67. "துறைக்கண் ஆடினாள், அன்றே; இவள் நம்பரம் அல்லள்; நன்றே, நவலோக நாயகன் பாலளே" என்று கூட்டுக. பரம் – விசாரிப்பு. நம்பரம் அல்லள் – நம்மைச் சார்ந்தவளில்லை. இனி அவள் பரபக்கம் ஆகினாள்!

68. ஆவடுதுறை அரனுக்குப் பிச்சியாகி, அந்தக் காதல் நோயிலே துயருற்ற தலைவி பொய்க்கவில்லை. அவளுடைய முயற்சி பலித்தது. அவளுடைய காதல் வென்றது.

சேலும் கயலும் திளைக்கின்ற நீர்வளம் மிகுந்த திருவாவடுதுறை வேந்தனை மனத்துள் நிரப்பியவாறு அந்த விளையாடலுக்கே முந்தி முந்தி முனைகிறாள். அவளுடைய வெறியார்ந்த சொற்கள் பொய்யில்லை, மெய்யான மொழிகளே.

இவ்வாறு கூறுமுகத்தான் சீவன் சிவத்தைத் துய்த்த பேரின்ப யோகத்தை நுட்பமாக உணர்த்துகிறது இந்தச் சித்தர் மொழி.

தோற்றத்தில் காதற்பாட்டாக அமைந்து, உட்கிடையிலே ஞானச் செம்பொருளைத் தாங்கி வருகிற இனிய கவிதை இது!

## 3. திருவிடைக்கழி

பண்—பஞ்சமம்

மாலுலா மனந்தந் தென்கையிற் சங்கம்
வவ்வினான் மலைமகள் மதலை
மேலுலாந் தேவர் குலமுழு தாளுங்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தன்என் சேந்தன்
என்னும்என் மெல்லியல் இவளே. 69

இவ்வளைவார் இளமென் கொங்கைபீர் பொங்க
எழில்கவர்ந் தான் இளங்காளை
கவளமா கரிமேற் கவரிசூழ் குடைக்கீழ்க்
கனகக்குன் றெனவருங் கள்வன்
திவளமா ளிகைசூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
குவளைமா மலர்க்கண் நங்கையாள் நயக்குங்
குழகன்நல் லழகன்நம் கோவே. 70

---

69. இந்தப் பதிகம் முருகப் பெருமான் மீது எழுந்தது. செவிலி கூற்றாக அமைந்த காதற்பதிகம்! என் மனத்தில் மயக்கம் தந்து என் கைவளைகளைக் கவர்ந்தான் என்று என் மகள் சொல்லுகிறாள் எனச் செவிலி கூற்று தொடங்குகிறது! திருடர்கள் இந்தக் காலத்திலும் பெண்குழந்தைகளை மயக்கிக் கைவளையல்களைத் திருடிப்போகிற நிகழ்ச்சி பார்க்கிறோம் அல்லவா! அப்படி வருகிறது பாடல்!

70. பீர் – பசலை. முருகன் இளங்காளையாக இருப்பதால், எந்த வாலிபச் சேட்டைகளும் தாங்கக்கூடிய பருவம்! எனவே எத்தனை பழியையும் அந்த அழகனாகிய குழகன் (இளைஞன்) மீது சுமத்தலாம். எல்லாம் உரிமையும் சொந்தமும் கொண்டாடுகிற கவி உறவினால்!

கோவினைப் பவளக் குழமணக் கோலக்
குழாங்கள்சூழ் கோழிவெல் கொடியோன்
காவனற் சேனை யென்னக்காப் பவன்என்
பொன்மைமே கலைகவர் வானே
தேவிளற் றலைவன் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
தூவிநற் பீலி மாமயி லூருஞ்
சுப்பிர மண்ணியன் றானே. 71

தானமர் பொருது தானவர் சேனை
மடியச்சூர் மார்பினைத் தடிந்தோன்
மானமர் தடக்கை வள்ளல்தன் பிள்ளை
மறைநிறை சட்டறம் வளரத்
தேனமர் பொழில்சூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
கோனமர் கூத்தன் குலஇளங் களிறென்
கொடிக்கிடர் பயப்பதுங் குணமே. 72

---

71. சுப்பிரமண்ணியன் என்றே பாடல் வருகிறது! தோகை மயிலில் ஏறிவருகிற குமரன் அவன்!.

தே – தெய்வம். தூவி – சிறகு. பீலி – தோகை.

72. சட்ட அறம் – திருத்தமான அறம். தருமம் திருத்தமாக நடைபெற வேண்டி, தேனமர் பொழில்சூழ் திருவிடைக்கழியில் கோயில் கொண்டருளிய கூத்தன்மகன், என் மகளுக்கு இந்த அதருமத்தைச் செய்தது எப்படிச் சரியாகும் என்ற கேள்வியை உள்ளடக்கிப் பேசுகிறாள் செவிலித்தாய்!

குணமணிக் குருளைக் கொவ்வைவாய் மடந்தை
படுமிடர் குறிக்கொளா தழகோ
மணமணி மறையோர் வானவர் வையம்
உய்யமற் றடியனேன் வாழத்
திணமணி மாடத் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
கணமணி பொருநீர்க் கங்கைதன் சிறுவன்
கணபதி பின்னிளங் கிளையே. 73

கிளையிளஞ் சேய்அக் கிரிதனைக் கீண்ட
ஆண்டகை கேடில்வேற் செல்வன்
வளையிளம் பிறைச்செஞ் சடைஅரன் மதலை
கார்நிற மால்திரு மருகன்
திளையிளம் பொழில்சூழ் திருவிடைக் கழிய
திருக்குரா நீழற்கீழ் நின்ற
முளையிளங் களிறென் மொய்குழற் சிறுமிக்
கருளுங்கொல் முருகவேள் பரிந்தே. 74

---

73. இளமையும் அழகும் இணைந்த சிங்கக்குட்டியாகிய குருளை அவன்! என் மகளை என்ன பாடுபடுத்துகிறான், இது அழகோ!

74. இந்த வம்புக்கு நாயகனான நம்பியின் பூர்வோத்திரமும் பேசுகிறாள் செவிலி. கிரவுஞ்ச மலையைக் கீண்டியவன் வேலாயுதன். பிறைசூடியின் பிள்ளை. திருமாலின் மருகன்.

திருவிடைக்கழியில் திருக்குரா நீழலில் வந்து நிற்கிறான் பாருங்கள் என்று கள்வனைச் சுட்டிக்காட்டுகிறாள், செவிலி! நாடகப் பண்போடு பேசுகிற அழகுக் கவிதை இது! செவிலியின் உணர்ச்சியிலே பாசமும் பிணைப்பும் பேசுகின்றன!

பரிந்தசெஞ் சுடரோ பரிதியோ மின்னோ
பவளத்தின் குழவியோ பசும்பொன்
சொரிந்தசிந் துரமோ தூமணித் திரளோ
சுந்தரத் தரசிது என்னத்
தெரிந்தவை திகர்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
வரிந்தவெஞ் சிலைக்கை மைந்தனை அஞ்சொல்
மையல்கொண் டையுறும் வகையே. 75

வகைமிகும் அசுரர் மாளவந் துழிஞை
வானமர் விளைத்தா ளாளன்
புகைமிகும் அனலிற் புரம்பொடி படுத்த
பொன்மலை வில்லிதன் புதல்வன்
திகைமிகு கீர்த்தித் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
தொகைமிகு நாமத் தவன்திரு வடிக்கென்
துடியிடை மடல்தொடங் கினளே. 76

---

75. தன்னுடைய மகள் இந்த இளைஞனுடைய வடிவத்தைக் கண்டு எவ்வாறெல்லாம் மயங்குகிறாள் என்பதை விரிவாக எடுத்துக்கூறுகிறாள் செவிலி. மதிமயக்கம் என்ற சொல்லுக்கு உரையாக அமைகிறது இந்தப் பாடல்!

76. மடலேறுதல் என்பது மகளிருக்கு இல்லை என இலக்கணம் கூறுகிறது.

"கடலன்ன காமம் உழப்பினும் பெண்டிர்
மடல் ஏறுதல் இல்லை"

என்பது பொய்யாமொழி.

எனினும் மகள் படுகிற அளவில்லாத துன்பத்தை உணர்த்துகிற முறையிலே இந்த வரி வருகிறது. இந்தப் பாடலில் 'மடல்' என்பது 'மயல்' என்றும் வேறு பாடத்தோடு சில ஏடுகளில் காணப்படுகிறது. 'உழிஞை அமர்' என்பது முற்றுகை செய்து புரிகிற போர்.

தொடங்கினள் மடல்என் றணிமுடித் தொங்கற்
புறஇத ழாகிலும் அருளான்
இடங்கொளக் குறத்தி திறத்திலும் இறைவன்
மறத்தொழில் வார்த்தையும் உடையன்
திடங்கொள்வை திகர்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
மடங்கலை மலரும் பன்னிரு நயனத்
தறுமுகத் தமுதினை மருண்டே. 77

மருண்டுறை கோயில் மல்குநன் குன்றப்
பொழில்வளர் மகிழ்திருப் பிடவூர்
வெருண்டமான் விழியார்க் கருள்செயா விடுமே
விடலையே எவர்க்குமெய் யன்பர்
தெருண்டவை திகர்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
குருண்டபூங் குஞ்சிப் பிறைச்சடை முடிமுக்
கண்ணுடைக் கோமளக் கொழுந்தே. 78

---

77. இங்கே முருகனுடைய கோலம் ஆறுமுகமும் பன்னிரண்டு கண்களுமாகக் காட்சி தருகிறது. பூமாலை தராவிட்டாலும், புற இதழையாவது தரலாமே, அதுவும் இல்லை.

78. மல்கு – வளங்கள் நிரம்பிய. 'கோமளக் கொழுந்தே' என்பதை முருகனுக்குரிய அடைமொழியாகக் கொண்டு, அழகின் குருத்து என்று பொருள் கொள்வதுண்டு. எனினும் பிறைச்சடையும், முக்கண்ணும் கூறப்பெறுதலால் கோமளம் என்ற சொல்லினைச் சிவனுக்குரியதாகக் கொண்டு, அந்தக் கோமளத்தின் கொழுந்தாகிய முருகன் என்று கொள்ளலாம். பிடலை – காளை; குருண்ட – சுருண்ட.

கொழுந்திரள் வாயார் தாய்மொழி யாகத்
 தூர்மொழி அமரர்கோ மகனைச்
செழுந்திரட் சோதிச் செப்புறைச் சேந்தன்
 வாய்ந்தசொல் லிவைசுவா மியையே
செழுந்தடம் பொழில்சூழ் திருவிடைக் கழியில்
 திருக்குரா நீழற்கீழ் நின்ற
எழுங்கதி ரொளியை ஏத்துவார் கேட்பார்
 இடர்கெடும் மாலுலா மனமே. 79

---

79. இந்தப் பாடலின் ஆசிரியரே தாம் இத்திருப்பதிகத்தைச் செவிலி கூற்றாக வழங்கினார் என்பதைச் சொல்லுகிறார்.

சுவாமி என்ற சிறப்புப் பெயர் முருகனுக்கே பொருந்துவதாகும். 'சுவாமிமலை' என்றபடி!

திருக்குரா நீழலின் கீழ் கதிரொளி எழுகிறது என்பதுபோல வருகிற சொல்லாட்சி இன்புறற்பாலது.

திருக்குரா நீழலில் எழுந்தருளியுள்ள ஒளிவடிவான முருகனை, மரத்தின் நிழற்கீழ் சூரியன் உதித்து எழுகிறது என்று சொல்வதுபோல் சித்திரிப்பது, கவிப்பண்பொடு கூடிய சொல்லாட்சியாகும்.

சித்தர்களுடைய இலக்கியத்திலே மரநிழல் என்பதை ஞானநிழல் என்றும், முதுகுத் தண்டை மரம் என்றும், அதன் உச்சியை ஞானம் என்றும் சொல்லி அந்த மர நிழலில் ஒளி உதயத்தை வியந்து கூறியிருக்கிறார்கள்.

# (இ) கருவூர்த் தேவர்

## திருவிசைப்பா

### 1. கோயில்

பண்—புறநீர்மை

கணம்விரி குடுமிச் செம்மணிக் கவைநாக்
    கறையணற் கட்செவிப் பகுவாய்
பணம்விரி துத்திப் பொறிகொள்வெள் ளெயிற்றுப்
    பாம்பணி பரமர்தங் கோயில்
மணம்விரி தருதே மாம்பொழில் மொழுப்பின்
    மறைதவழ் வளரிளங் கமுகந்
திணர்நிரை அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
    திருவளர் திருச்சிற்றம் பலமே. 80

---

80. இத் திருப்பதிகம் தில்லையைப் பற்றியது. கோயில் என்ற சிறப்புப் பெயருக்கு உரிய இத்தலமே சிவபெருமானுக்கு உகந்த சிறந்த தலம் என்ற பொருளைப் பல பல கவிமொழிகளிலே அழகாகக் கூறுகிறது இந்தப் பதிகம்.

கவைநா – பிளவுபட்ட நா. கறை – நஞ்சு. அணல் என்பது இங்கு ஆகுபெயராகி வாயைக் குறித்தது. கூத்தப் பெருமானுடைய உடம்பிலே பாம்பு அணியாக அமைந்ததன் உட்பொருள் விநாயகர் அகவலில் வருகிற பாம்புடன் புணர்த்தி ஏற்கனவே விளக்கம் செய்யப் பெற்றுள்ளது.

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
ஏழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை யென்றால்
அஞ்சலென் றருள்செய்வான் கோயில்
கைவரும் பழனம் குழைத்தசெஞ் சாலிக்
கடைசியர் களைதரு நீலம்
செய்வரம் பரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 81

தாயினே ரிரங்குந் தலைவவோ என்றும்
தமியனேன் துணைவவோ என்றும்
நாயினேன் இருந்து புலம்பினால் இரங்கி
நலம்புரி பரமர்தம் கோயில்
வாயினே ரரும்பு மணிமுருக் கலர
வளரிளஞ் சோலைமாந் தளிர்செந்
தீயினே ரரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 82

---

81. 'பிறவிப் பௌவ நீர்' என்றது நீந்துதற்கு அரியதாகிய பிறவிக் கடலை. ஐம்புலன்களை உடன்பிறந்த ஐவரும் என்று கருவூர்த் தேவராகிய சித்தர் குறிப்பிடுகிறார்.

'அஞ்சலென்று அருள்செய்வான் கோயில்' என்று வருகிற சொற்றொடர் முந்திய திருமுறைகளின் அடிகளை நினைவு படுத்துவதாய் அமைந்துள்ளது.

82. ஞானப் பயிற்சிகளிலே தேர்ந்தவரும், எத்தனையோ அற்புதச் செயல்களை நிகழ்த்தியவருமான கருவூர்ச் சித்தர் என்ற முனிவர் பெருமான், பத்தி செய்யும் ஒரு தொண்டனுடைய நிலையிலிருந்து ஆர்வமும் உருக்கமும் விம்மிப் பொங்குகிற கனி மொழியிலே இந்தப் பாடலைப் புனைந்து தருகிறார்.

துந்துபி குழல்யாழ் மொந்தைவான் இயம்பத்
தொடர்ந்திரு டியர்கணம் துதிப்ப
நந்திகை முழவம் முகிலென முழங்க
நடம்புரி பரமர்தங் கோயில்
அந்தியின் மறைநான் காரணம் பொதிந்த
அரும்பெறல் மறைப்பொருள் மறையோர்
சிந்தையில் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே.. 83

கண்பனி யரும்பக் கைகள்மொட் டித்தென்
களைகணே ஓலமென் றோலிட்
டென்பெலா முருகும் அன்பர்தங் கூட்டத்
தென்னையும் புணர்ப்பவன் கோயில்
பண்பல தெளிதேன் பாடிநின் றாடப்
பனிமலர்ச் சோலைசூழ் மொழுப்பிற்
செண்பகம் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 84

---

83. துந்துபி முதலிய வாத்தியங்கள் முழங்குவதையும், அவை வானளாவி ஒலிப்பதையும், நந்தி தேவர் மேகம் போன்ற மத்தளம் வாசிப்பதையும், முனிவர்கள் குழு துதிப்பதையும் சொல்லிக் கூத்தனுடைய நடனத்தை அழகாக வருணனை செய்கிறது இந்தப் பாடல்.

மறையவர்கள் சிந்தையில் 'மறைப் பொருள் அரும்புகிறது' என்ற சொற்றொடர்தான், இந்தப் பாடலை அருளியவர் ஞான அனுபவம் பெற்ற சித்தர் என்பதை உணர்த்துகின்றது. மறைப் பொருள் சிந்தையில் அரும்புகின்ற அந்த மாபெரும் அநுபவமே சித்தர்களின் கல்விக்குரிய குறிக்கோளாகும். இதனைத்தான் திருமூலர் 'பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல்' சிவமணம் சீவனில் பூப்பதாக இயம்புகிறார்.

84. மொட்டித்து – குவிந்து. களைகண் – பற்றுக்கோடு. மொழுப்பு – மேலிடம். பரிபக்குவமடைந்த மகான் சாமானிய மனித இதயத்தின் ஒலியாக இந்தப் பாடலை வழங்குகிறார்.

அந்த எளிவந்த தன்மையும் பணிவும் படிப்பவரின் உளத்தைச் சிலிர்க்கச் செய்கின்றன.

இந்தப் பாடலில் வருகிற அன்பர் கூட்டத்தை அருவ அடியார்களின் திருக்கூட்டம் என்ற சித்தர் உரையோடு இணைத்துப் பார்ப்பதற்கு இடமிருக்கிறது.

நெஞ்சிட ரகல அகம்புகுந் தொடுங்கும்
நிலைமையோ டிருள்கிழித் தெழுந்த
வெஞ்சுடர் சுடர்வ போன்றொளி துளும்பும்
விரிசடை யடிகள்தங் கோயில்
அஞ்சுடர்ப் புரிசை ஆழிசூழ் வட்டத்
தகம்படி மணிநிரை பரந்த
செஞ்சுடர் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 85

பூத்திரள் உருவம் செங்கதிர் விரியாப்
புந்தியில் வந்தமால் விடையோன்
தூத்திரட் பளிங்கிற் றோன்றிய தோற்றந்
தோன்றநின் றவன்வளர் கோயில்
நாத்திரள் மறையோர்ந் தோமகுண் டத்து
நறுநெயால் மறையவர் வளர்த்த
தீத்திரள் அரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 86

---

85. அகம், உள்ளத்தையும் நுண்ணுடலையும் குறிக்கிறது. வெஞ்சுடர் என்பது சூரியனுடைய கதிர்கள். இப்பாடலில் வருகின்ற வெஞ்சுடர், அஞ்சுடர், செஞ்சுடர் ஆகிய மூன்றும் குண்டலினி யோகத்தைப் பற்றிய பகுதியிலே விரிவாக விளக்கம் செய்யப்பட்டுள்ளன.

முன் மூளை, பின் மூளை ஆகிய இரண்டு பகுதிகளின் இயக்கமும், உச்சியிலுள்ள சுரப்பிகளின் இயக்கமும், ஒளிஉடம்பின் அதிர்வுகளும் பற்றிய விளக்கங்களோடு ஒப்புநோக்கிப் பார்க்க வேண்டிய ஒரு சித்தர் பாடல் இது.

86. புந்தி – மனம். தூத்திரள் பளிங்கில் தோன்றிய தோற்றம் – பரிசுத்தமான பளிங்குத் திரளினின்றும் எழுகின்ற காட்சி, சிவபெருமானது திருமேனி நீற்றினால் பளிங்குபோன்று காண்கிறது என்பது சமயிகள் உரை.

இதனுடைய ஞானநுட்பம் ஒரு திருமந்திரத்தால் நன்கு துலங்கும். அது 'பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே' என்ற வரியில் அடங்கும்.

சீர்த்ததிண் புவனம் முழுவதும் ஏனைத்
திசைகளோ டண்டங்க ளனைத்தும்
போர்த்ததம் பெருமை சிறுமைபுக் கொடுங்கும்
புணர்ப்புடை அடிகள்தங் கோயில்
ஆர்த்துவந் தமரித் தமரரும் பிறரும்
அலைகடல் இடுதிரைப் புனிதத்
தீர்த்தநீர் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 87

பின்னுசெஞ் சடையும் பிறைதவழ் மொழுப்பும்
பெரியதங் கருணையுங் காட்டி
அன்னைதேன் கலந்தின் னமுதுகந் தளித்தாங்
கருள்புரி பரமர்தங் கோயில்
புன்னைதேன் சொரியும் பொழிலகங் குடைந்து
பொறிவரி வண்டினம் பாடும்
தென்னதேன் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 88

---

87. இந்தப் பூமியைச் சூழ்ந்து நிற்கின்ற திசைகளும் அண்டங்களும், இந்த நிலமும் வானும், இந்திரன் முதலியோரது உலகங்களும் அனைத்தும் சேர்ந்து மிகச் சிறிதாகத் தோன்றும்படி அத்தனை பெரியவன் இறைவன்.

அதாவது எல்லா உலகங்களின் பெருமைகளும் தன்னுடைய ஆற்றலுக்குள்ளே ஒடுங்கிவிடக்கூடிய அத்தனை பெரியவனே இறைவன். அந்தப் பெருமையை அவன் ஒவ்வொரு நொடியும் தனது கூத்தினால் இயக்கி வருகின்றான்.

சாட்டி நிற்கின்ற அண்டங்கள் அனைத்தையும் சாட்டையில்லாத பம்பரம் போன்று ஆட்டுவிப்பதே கூத்தப்பெருமானுடைய நடனமாகும்.

88. நடனமாடுகின்ற இறைவன் தேன்கலந்து இன்னமுது ஊட்டுகின்ற பான்மையை ஞானிகள் பற்பல பயிற்சி நிலைகளிலே விளக்கி யிருக்கிறார்கள்.

இதையே ஒரு பக்திப் பாடலின் வடிவத்திலே உட்பொதிந்து தருகிறது இந்தக் கவி எழில் நிரம்பிய பாடல்.

உம்பர்நா டிம்பர் விளங்கியாங் கெங்கும்
ஒளிவளர் திருமணிச் சுடர்கான்
றெம்பிரான் நடஞ்செய் சூழலங் கெல்லாம்
இருட்பிழம் பறஎறி கோயில்
வம்புலாங் கோயில் கோபுரம் கூடம்
வளர்நிலை மாடமா ளிகைகள்
செம்பொனால் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 89

இருந்திரைத் தரளப் பரவைசூ ழகலத்
தெண்ணிலங் கண்ணில்புன் மாக்கள்
திருந்துயர்ப் பருவத் தறிவுறு கருவூர்த்
துறைவளர் தீந்தமிழ் மாலை
பொருந்தருங் கருணைப் பரமர்தங் கோயில்
பொழிலகங் குடைந்துவண் டுறங்கச்
செருந்திநின் றரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 90

---

89. உம்பர்நாடு – அமரர் விண்ணுலகம். இம்பர் விளங்கியாங்கு – இந்த உலகத்திற்கு வந்து திகழ்வது போலே. எங்கும் ஒளிவளர் - எல்லா இடத்திலும் ஒளியை வீசுகிற. திருமணிச்சுடர் – இரத்தினங் களைப் போன்று ஒளியானது. கான்று – கனன்று.

நடராச மூர்த்தியின் நடனமானது வானுலகம் மண்ணுலகுக்கு வந்தது போன்று ஒளிவீசிக்கொண்டு நிகழ்கிறது. இவ்வரிகளின் ஞானப்பொருள் உடம்பாகிய கோவிலிலே ஒளிவீசிக்கொண்டு நடக்கின்ற பேரான்ம நடனத்தை உருவகிப்பதாகும்.

90. அங்கண் என்பது அங்கை என்பது போலக் கண்ணுக்குள் உள்ள கண். இத்தகைய பார்வை பெறாத அஞ்ஞானிகள் புன்மாக்கள் எனப்பட்டனர்.

இந்தக் கடல்சூழ்ந்த அகலமாகிய நிலத்திலே எண்ணற்ற புன்மாக்கள் அங்கண் இல்லாதவர்களேயாம். அத்தகையவர்கள் பரிபாகம் பெறுவதற்கென்று தோன்றிய நடனமூர்த்தியின் கோவிலே, திருவளர் திருச்சிற்றம்பலமாகும்.

'திருந்து உயிர்ப் பருவத்து அறிவுறு' என்றது திருந்திய பரிபாக நிலையிலே ஞானம் பெறுகின்ற அனுபவத்தையே.

இத்தகைய ஆன்ம ஞானம் ஏற்படுவதற்குத் துணை செய்ய வேண்டியது இறைவனுடைய கருணையே ஆகும். இறைவனே உடற் கோயிலினுள் உள்ள சிற்றம்பலத்திலே ஒளி நடமாடி உடம்பு தருவதற்கு முன்வர வேண்டும். இதற்குக் காரணமாக அமைவது பரம்பொருளின் எல்லையற்ற கருணையே. இதைத்தான் 'பொருந்தருங் கருணைப் பரமர்' என்று கருவூர்த்தேவர் குறிப்பிடுகிறார்.

## 2. திருக்களந்தை ஆதித்தேச்சரம்

பண்—புறநீர்மை

கலைகடம் பொருளும் அறிவுமாய் என்னைக்
கற்பினிற் பெற்றெடுத் தெனக்கே
முலைகடந் தருளுந் தாயினும் நல்ல
முக்கணான் உறைவிடம் போலும்
மலைகுடைந் தனைய நெடுநிலை மாட
மருங்கெலாம் மறையவர் முறையோத்
தலைகடல் முழங்கும் அந்தண்நீர்க் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 91

சந்தன களபம் துதைந்த நன்மேனித்
தவளவெண் பொடிமுழு தாடும்
செந்தழ லுருவிற் பொலிந்துநோக் குடைய
திருநுத லவர்க்கிடம் போலும்
இந்தன விலங்கல் எறிபுனந் தீப்பட்
டெரிவதொத் தெழுநிலை மாடம்
அந்தணர் அழலோம் பலைபுனற் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 92

---

91. கலைகளின் பொருளும் அந்தப் பொருள்களின் வாயிலாகப் பெறுகின்ற அறிவும் ஒன்றுகூடிய பிறவியே ஞானக் குழந்தையாகிய உயிராகும். இது 'கற்பினிற் பெற்றெடுத்த' ஆன்ம ஞானம். இதைப் பெற்றெடுத்துப் பாலூட்டி வளர்க்கிற தாயின் அன்பு எத்தகையது! அதையும்விட சாலப் பரிந்து அருள்கிறவன் மூன்று கண்களை உடைய பரம்பொருள் என்பது ஞானச் செம்பொருள்.

92. அந்தணர்கள் வேள்வித் தீயைக் கண்ணும் கருத்துமாக வளர்க்கிறார்கள். இதை வெட்டப்பட்ட காட்டில் விறகுமலை தீப்பட்டு எரிவதற்கு உவமை கூறுகிறது இந்தப் பாடல்.

இதன் விரிவான ஞானப்பொருள் தழல் ஓம்புதல் பற்றிய சித்தர் பாடல்களிலே மேலும் விளக்கம் பெறுகிறது.

கரியரே இடந்தான்; செய்யரே யொருபால்;
　　கழுத்தில்ஓர் தனிவடம் சேர்த்தி
முரிவரே; முனிவர் தம்மொடால் நிழற்கீழ்
　　முறைதெரிந் தோருடம் பினராம்
இருவரே; முக்கண் நாற்பெருந் தடந்தோள்
　　இறைவரே; மறைகளுந் தேட
அரியரே; ஆகில் அவரிடம் களந்தை
　　அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 93

பழையராந் தொண்டர்க் கெளியரே; மிண்டர்க்
　　கரியரே பாவியேன் செய்யும்
பிழையெலாம் பொறுத்தென் பிணிபொறுத் தருளாப்
　　பிச்சரே; நச்சரா மிளிருங்
குழையராய் வந்தென் குடிமுழு தாளுங்
　　குழகரே; ஒழுகுநீர்க் கங்கை
அழகரே; ஆகில் அவரிடம் களந்தை
　　அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 94

---

93. இறைவனுடைய வடிவத்தின் இயைபையும் முரணையும் கூறுவதுபோல் மொழிந்து ஞான நிலையை உணர்த்துகிறது இந்த அரிய பாடல்.

ஒரு பக்கம் இறைவனுடைய நிறம் கறுப்பு; மற்றொரு பக்கம் சிவப்பு. இது அம்மையப்பன் ஆகிய நிலை. கழுத்தில் எலும்பின் வடம். ஆலநிழலிலே முனிவர் தம்மொடு இருக்கை. அவர் ஒருடம்பில் இருவரான மூர்த்தி. தோள்கள் நான்கு; கண்கள் மூன்று. அவரை மறைகள் தேடித்திரிகின்றன; அவற்றுக்குள் அவர் அகப்படுவதில்லை.

94. பழமையான தொண்டர்களுக்கு எளிமையாய் உதவுகிற கருணையின் மூர்த்தி அவர். மிண்டர்களாகிய கொடியோர்க்கு என்றும் அகப்படாதவர்.

குழைந்த அன்பொடு வந்து அடியவர்கள் குடிமுழுதும் ஆளும் பண்பாளர், நச்சரா மிளிர்கின்றவர். கங்கைநீர் ஒழுகி வழிகின்ற அழகர்.

பவளமே மகுடம்; பவளமே திருவாய்;
பவளமே திருவுடம் பதனில்
தவளமே களபம்; தவளமே புரிநூல்
தவளமே முறுவல்; ஆடரவர்
துவளுமே; கலையும் துகிலுமே யொருபால்;
துடியிடை இடமருங் கொருத்தி
அவளுமே; ஆகில், அவரிடம் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 95

நீலமே கண்டம்; பவளமே திருவாய்;
நித்திலம் நிரைத்திலங் கினவே
போலுமே முறுவல்; நிறையஆ னந்தம்
பொழியுமே திருமுகம்; ஒருவர்
கோலமே அச்சோ! அழகிதே யென்று
குழைவரே கண்டவர்; உண்ட
தாலமே; ஆகில், அவரிடம் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 96

---

95. சிவனுடைய கோலம் எங்ஙனம் இருக்கிறது என்றால் மகுடமும் வாயும் மேனியும் சிவப்பானவை. உடம்பில் பூசுகின்ற நீறு வெண்மை நிறம். முப்புரிநூல் வெண்மை நிறமானது. அவருடைய புன்முறுவலோ முத்துப்போற் புன்னகை. இது சிவப்பும் வெண்மையும் கலந்த இறைமேனி.

களபம் – பூசும் சாந்து. சிவபெருமானுடைய சாந்து திருநீறே யாகும். இங்கே கலை என்றது தோல் ஆடையை. துகில் என்றது நல்லாடையை. இடமருங்கில் துடிபோலும் இடையை உடைய அம்மை இருப்பதால்.

96. சிவனுடைய கழுத்து நீலநிறம். வாய் பவளநிறம். முறுவலோ நித்திலமாகிய முத்து. இந்தத் திருக்கோலத்தைக் கண்டவர்கள் அதன் அழகிலே குழைந்து விடுவார்கள். ஆனால் அவர் உண்டதோ ஆலமாகிய கொடிய விடம்.

முரண்பாடு போல் தோன்றுகின்ற இந்தக் கோலங்களை அடுக்கி மொழிவதால், இந்த முரண்பாடுகளின் ஒருமைப்பாட்டிலே உதிக்கின்ற யோகமாகிய புணர்ப்பு உணர்த்தப்படுகிறது. அதுவே களந்தையின் ஆதித்தேச்சரமாகும்.

திக்கடா நினைந்து நெஞ்சிடிந் துருகுந்
திறத்தவர் புறத்திருந் தலச,
மைக்கடா அனைய என்னையாள் விரும்பி
மற்றொரு பிறவியிற் பிறந்து
பொய்க்கடா வண்ணங் காத்தெனக் கருளே
புரியவும் வல்லரே; எல்லே
அக்கடா வாகில், அவரிடம் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 97

மெய்யரே மெய்யாக்; கிடுதிரு வான
விளக்கரே; எழுதுகோல் வளியாள்
மையரே; வையம் பலிதிரிந் துறையும்
மயானரே; உளங்கலந் திருந்தும்
பொய்யரே பொய்யர்க்; கடுத்தவான் பளிங்கின்
பொருள்வழி இருள்கிழித் தெழுந்த
ஐயரே யாகில் அவரிடம் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 98

---

97. ஒருவருக்கு ஞானம் வருவது முற்பிறவியில் செய்த தவத்தின் பயன் என்று சித்தர் இலக்கியம் பேசுகிறது. இதை நினைவிற் கொண்டு இந்தப் பாடலுக்குப் பொருள் கொள்ள வேண்டும்.

98. மெய்ஞ்ஞானமாகிய உண்மையறிவைப் பெற்றவர்களுக்கு மெய்யர் என்றே பெயரிடுகிறார் சித்தர். இப்படிப்பட்ட மெய்யருக்கு மெய்யராக விளங்குபவர் பரமகுருவாகிய கடவுளே. இவர் அவர்களுக்கு விளக்காக விளங்குபவர்.

'இடு திருவான விளக்கு' என்றால் ஏற்றப்பட்ட விளக்கு. பொருள் என்னவென்றால் இருளை அகற்றி ஒளியைத் தருபவன் இறைவனே என்பதாம். இப்படிப்பட்டவர் பொய்யர்க்குப் பொய்யராகவே விளங்குகிறார்.

பளிங்கின் பொருள் என்றது முத்தான்மாக்களை. 'இருள் கிழித்து எழுதலாவது' காரண குருவின் சொல்லாலும் செயலாலும் பக்குவிகளுக்கு மெய்யுணர்வு உதிப்பதே.

குமுதமே திருவாய்; குவளையே களமும்;
　　குழையதே இருசெவி; ஒருபால்
விமலமே கலையும் உடையரே; சடைமேல்
　　மிளிருமே பொறிவரி நாகம்;
கமலமே வதனம்; கமலமே நயனம்;
　　கனகமே திருவடி நிலை;நீர்
அமலமே யாகில், அவரிடம் களந்தை
　　அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 99

நீரணங் கசும்பு கழனிசூழ் களந்தை
　　நிறைபுகழ் ஆதித்தேச் சரத்து
நாரணன் பரவுந் திருவடி நிலைமேல்
　　நலமலி கலைபயில் கருவூர்
ஆரணம் மொழிந்த பவளவாய் சுரந்த
　　அமுதம் ஊறியதமிழ் மாலை
ஏரணங் கிருநான் கிரண்டிவை வல்லோர்
　　இருள்கிழித் தெழுந்த சிந்தையரே. 100

---

99. குமுதம் என்று இங்கே குறித்தது செவ்வாம்பல் மலரினை. குவளை என்றது நீலோற்பல மலரை. சிவனுடைய வாய் குமுதம் போன்றது. அவனுடைய கழுத்து குவளை போன்றது. களம் என்றால் கழுத்து. இரண்டு செவிகளில் ஒன்றிலே குழை (தோடு) உள்ளது. ஒரு பக்கம் விமலமான (தூய்மையான) மேகலை உள்ளது. சடைமேல் நாகம். முகமும் நயனமும் தாமரை. அவருடைய திருவடி தங்கமாம்.

100. இந்தப் பாடலிலே பலன் சொல்லுகின்ற அடிகளில் ‘இருநான் கிரண்டு’ என்ற சொற்றொடர் வருகிறது. இது எட்டும் இரண்டும் கூடிய பத்தாகும். பத்துப்பாடல்கள் என்று நேராகச் சொல்லாமல் எட்டும் இரண்டும் என்று வருவிக்கும் வண்ணம் மொழிந்ததில் சித்தர்களுடைய பாங்கு துலங்குகின்றது. ஏனென்றால் சித்தர்களின் ஞானக் கல்விக்கு அடிப்படையான எழுத்தாக விளங்குவது எட்டும் இரண்டுமே. தமிழ்மாலையில் உள்ள எட்டும் இரண்டுமே இந்தத் தமிழ் மாலையில் இடம் பெறுகின்றன. இதுவே ‘இருள்கிழித்து எழுகின்ற சிந்தனைக்கு’ வேண்டிய மந்திர உபதேசமாகும்.

## 3. திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம்

**பண்—பஞ்சமம்**

தளிரொளி மணிப்பூம் பதம்சிலம் பலம்பச்
சடைவிரித் தலையெறி கங்கைத்
தெளிரொளி மணிநீர்த் திவலைமுத் தரும்பித்
திருமுகம் மலர்ந்துசொட் டச்சொட்டக்
கிளரொளி மணிவண் டறைபொழிற் பழனங்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வளரொளி மணியம் பலத்துள் நின்றாடும்
மைந்தன்என் மனங்கலந் தானே. 101

துண்டவெண் பிறையும் படர்சடை மொழுப்பும்
சுழியமும் சூலமும் நீல
கண்டமும் குழையும் பவளவாய் இதழும்
கண்ணுதல் திலகமும் காட்டிக்
கெண்டையும் கயலும் உகளும்நீர்ப் பழனங்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வண்டறை மணியம் பலத்துள் நின்றாடும்
மைந்தன்என் மனங்கலந் தானே. 102

---

101. இந்தப் பதிகம் காதலியின் பேச்சாகவே அமைந்துள்ளது. மணியம்பலம் என்பது மாணிக்கச்சபையைக் குறிக்கும் என்று சமயிகள் பொருள் கூறுகிறார்கள். மணிநாதம் கேட்கின்ற ஞானசபை என்பது ஞான உட்பொருளாகும். இந்தப் பாடல் முழுதும் ஒளிக்கு முக்கியம் கொடுத்து வருவது இந்த உட்பொருளை அழுத்தம் கொடுத்துப் பேசுகிறது.

102. இறைவனுடைய கோலத்தை அங்கங்களின் அழகோடு அழுத்திச் சொல்லி, அவை மனத்தொடு கலந்த தன்மையைப் பேசுகிறாள் தலைவி. மொழுப்பு – முடி. சுழியம் – கொண்டை. இங்கே தலையைச் சுற்றி வளைத்து நிற்கிற பாம்பு. சந்திரனும் பாம்பும், சூலமும் நீலக்கழுத்தும் தெய்வ ஆற்றலை விளக்குகிற அங்கங்கள்.

திருநுதல் விழியும் பவளவாய் இதழும்
 திலகமும் உடையவன் சடைமேற்
புரிதரு மலரின் தாதுநின் றூதப்
 போய்வருந் தும்பிகாள், இங்கே
கிரிதவழ் முகிலின் கீழ்த்தவழ் மாடங்
 கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வருதிறல் மணியம் பலவனைக் கண்டென்
 மனத்தையும் கொண்டுபோ துமினே. 103

தெள்ளுநீ றவன்நீ றென்னுடல் விரும்பும்
 செவிஅவன் அறிவுநூல் கேட்கும்;
மெள்ளவே அவன்பேர் விளம்பும்வாய்; கண்கள்
 விமானமே நோக்கிவெவ் வுயிர்க்கும்;
கிள்ளைபூம் பொதும்பிற் கொஞ்சிமாம் பொழிற்கே
 கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வள்ளலே மணியம் பலத்துள் நின்றாடும்
 மைந்தனே என்னும்என் மனனே. 104

---

103. போய்வரும் தும்பிகளை இப்போது இவருக்காகப் போய்வரும்படி கூறுகிறாள் தலைவி. "போகும் போது என் மனத்தையும் கொண்டு போமின்" என்கிறாள். இயல்பாகப் போய்வருகிற தும்பிகளுக்கு ஒரு பணியைத் தந்து, அந்தப் பணியின் நிமித்தம் இப்போது போய்வரும்படி சொல்வது காதலின் நயத்தை எடுத்துக் காட்டுகிற உத்தியாகும்.

104. உடம்பும், செவியும், வாயும், கண்ணும், எல்லாம் அவன்மயமாக நின்று நாடுகின்றன. உடம்பு அவன் உடம்பின் நீற்றை விரும்புகிறது. செவி அவனுடைய பெருமையின் அறிவுநூலையே கேட்கிறது. வாயோ அவன் பெயரையே சொல்கிறது; மெள்ள உச்சரித்த வண்ணமாக இருக்கிறது! மனம் அவனையே கூப்பிடுகிறது! 'அனன்யம்' என்ற நிலை இதுவே!

தோழியாம் செய்த தொழில்என் எம்பெருமான்
துணைமலர் சேவடி காண்பான்
ஊழிதோ றூழி உணர்ந்துளங் கசிந்து
நெக்குநைந் துளங்கரைந் துருக்கும்
கேழலும் புள்ளு மாகிநின் றிருவர்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வாழிய மணியம் பலவனைக் காண்பான்
மயங்கவும் மாலொழி யோமே. 105

என்செய்கோம் தோழி, தோழிநீ துணையா
இரவுபோம்; பகல்வரு மாகில்
அஞ்சலோ என்னான் ஆழியும் திரையும்
அலமரு மாறுகண் டயர்வன;
கிஞ்சுக மணிவாய் அரிவையர் தெருவிற்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மஞ்சணி மணியம் பலவவோ என்று
மயங்குவன் மாலையம் பொழுதே. 106

---

105. சிவபிரானைக் காதலித்த தலைவி இந்தக் காதலை 'விட்ட குறை, தொட்ட குறை' என்கிறாள். பல பிறப்புக்களில் அவனிடம் உள்ளம் கசிந்ததன் பயனே இப்பிறப்பில் அவன்மீது உண்டாகின்ற இந்தக் காதலாகும். உயிருக்குப் பரம்பொருளிடம் பிணைந்துள்ள தொடர்பு நிலையான கொத்தடிமை ஆவணமாகும்.

ஆண்டானுக்கும் அடிமைக்கும் ஒருங்கே இன்பமும் நன்மையும் தருகின்ற ஓர் அடிமை ஆவணம் இது. மற்றக் கொத்தடிமைக்கும் இதற்கும் உள்ள வேறுபாடு இதுவே. இந்த அடிமை ஆவணத்தையே திருமூலர் பாடுகிறார்:

"என்தாயோ டென்னப்பன் ஏழேழ் பிறவியும்
அன்றே சிவனுக் கெழுதிய ஆவணம்
ஒன்றா யுலகம் படைத்தான் எழுதினான்
நின்றான் முகில்வண்ணன் நேரெழுத் தாயே."

106. இரவும் பகலும் கழிவது எங்ஙனம் எனின், இரவு தோழியின் துணையினால் கழிந்து விடுகிறது. ஆனால் பகல் அப்படி இல்லை. கடலும் அலையும் அலமருகின்றன. தோழிக்கு இந்த ஓசை அயர்வு தருகின்றது. 'அம்பலவோ' என்று ஓலமிடுகிறாள் அவள். வடநூல்களிலும் ஞானிகள் ஜீவபிரும்ம ஐக்கியத்தை விளக்கும் போது அதற்குமுன் நிகழ்கிற ஜீவ தாபத்தை இவ்வாறே உணர்த்துகிறார்கள்.

தழைதவழ் மொழுப்பும் தவளநீற் றொளியும்
சங்கமும் சகடையின் முழக்கும்
குழைதவழ் செவியும் குளிர்சடைத் தெண்டும்
குண்டையும் குழாங்கொடு தோன்றும்
கிழைதவழ் கனகம் பொழியுநீர்ப் பழனங்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மழைதவழ் மணியம் பலத்துள் நின்றாடும்
மைந்தர்தம் வாழ்வுபோன் றதுவே. 107

தன்கை மழலைச் சிலம்பொடு சதங்கை
தமருகம் திருவடி திருநீ
றின்னகை மழலை கங்கைகொங் கிதழி
இளம்பிறை குழைவளர் இளமான்
கின்னரம் முழவம் மழலையாழ் வீணை
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மன்னவன் மணியம் பலத்துள் நின்றாடும்
மைந்தன்என் மனத்துள்வைத் தனனே. 108

---

107. தழை – வில்வம். மொழிப்பு – முடி. சங்கம் – சங்கு வளையல். சகடை – உடுக்கை. தெண்டு – திரட்சி. குண்டை – எருது. இப்பாடல் அவருடைய தோற்றத்தின் அணிகளை ஓவியமாக வரைகிறது. அம்மையப்பனாக அவன் வருவதால் இருபால் அழகும் ஒருபால் அமைந்து காண்கிறது.

108. மழலைச் சிலம்பு – மெல்லிசை எழுப்புகிற சிலம்பு. இவ்வாறே கங்கையின் ஒலியும் மழலை ஒலி. யாழின் ஒலியும் அவ்வாறே.

ஞானிகளுக்கு இவை அனைத்தும் அக உலகின் ஒலிகளானதால் இவ்வாறு அவற்றுக்கு அடைமொழி தரப்படுகிறது. தன் அணி பணிகளாக உள்ள சிலம்பு முதல் மான் ஈறாயினவற்றையெல்லாம் என் மனத்து வைத்தான் என்பது, இறைவன் நேரில் வந்து ஞானம் உணர்த்துகிற ஆன்ம நிகழ்ச்சியை உருவகிக்கின்றது.

மணியம்பலத்துள் நின்றாடுகிற மன்னவன் என் மனத்துள் ஞானப் பேரன்பைப் பதித்து அருளினான் என்பது பொருள்.

யாதுந் நினைவ தெவரையா முடைய
 தெவர்களும் யாவையும் தானாய்ப்
பாதுகை மழலைச் சிலம்பொடு புகுந்தென்
 பனிமலர்க் கண்ணுள்நின் றகலான்
கேதகை நிழலைக் குருகென மருவிக்
 கெண்டைகள் வெருவுகீழ்க் கோட்டூர்
மாதவன் மணியம் பலத்துள் நின்றாடும்
 மைந்தன்என் மனம்புகுந் தானே. 109

அந்திபோல் உருவும் அந்தியிற் பிறைசேர்
 அழகிய சடையும் வெண்ணீறும்
சிந்தையால் நினையிற் சிந்தையுங் காணேன்;
 செய்வதென்! தெளிபுனல் அலங்கற்
கெந்தியா உகளுங் கெண்டைபுண் டரீகங்
 கிழிக்குந்தண் பணைசெய்கீழ்க் கோட்டூர்
வந்தநாள் மணியம் பலத்துள் நின்றாடும்
 மைந்தனே அறியும்என் மனமே. 110

---

109. இப்பாடலில் நீ என்பது தோழியை நோக்கி. கேதகை – தாழை. குருகு – கொக்கு. மாதவன் – மாபெரும் தவக்கோலம் கொண்ட பெருமான். 'எவர்களும் யாவையும் தானாய்' என்றது, உயர்திணை அஃறிணை இரண்டையும் இணைத்துக் கூறியவாறு. 'கண்ணுள் நின்று அகலான்' என்றது அகக் கண்ணின் காட்சியே.

110. சிந்தையானது அவனிடம் பறிபோய் விட்டது. இந்நிலையிலே சிந்தையால் நினைப்பதற்குச் சிந்தையும் காணாத நிலையில் நிற்கிறாள் தலைவி. இதைத்தான் திருமூலரும் ''யான் அவர் ஆனபின் யாரை நினைவது'' என்கிறார். 'வந்த நாள்' என்று இந்தப் பாடலிலே வருகிற குறிப்பு 'என்று நீ அன்று நான்' என்ற ஞானச் சொற்றொடரை நினைவூட்டுகிறது. என் மனநிலையை அவன் ஒருவனே அறிவான் என்று மொழிவதன் தத்துவம் மனத்திற்கு மனமாக நிற்பது உயிருக்கு உயிராகிய பரம்பொருளே என்பதாம். காணும் கண்ணுக்குக் காட்டும் உளம் என்ற நிலை இதுவே.

கித்திநின் றாடும் அரிவையர் தெருவிற்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மத்தனை மணியம் பலத்துள் நின்றாடும்
மைந்தனை ஆரணம் பிதற்றும்
பித்தனேன் மொழிந்த மணிநெடு மாலை
பெரியவர்க் ககலிரு விசும்பின்
முத்தியா மென்றே உலகர்ஏத் துவரேல்
முகமலர்ந் தெதிர்கொளுந் திருவே. 111

### 4. திருமுகத்தலை

**பண்—பஞ்சமம்**

புவனநா யகனே! அகவுயிர்க் கமுதே!
பூரணா! ஆரணம் பொழியும்
பவளவாய் மணியே! பணிசெய்வார்க் கிரங்கும்
பசுபதீ! பன்னகா பரணா!
அவனிஞா யிறுபோன் றருள்புரிந் தடியேன்
அகத்திலும் முகத்தலை மூதூர்த்
தவளமா மணிப்பூங் கோயிலும் அமர்ந்தாய்
தனியனேன் தனிமைநீங் குதற்கே. 112

---

111. கித்தி – மாதர்களின் விளையாட்டு. மத்தன் – உன்மத்தன் ஆகிய பித்தனாம் பிறைசூடி. பெரியவர்க்கு – பக்குவிகளுக்கு. இந்தப் பாடலில் 'அகல் இரு விசும்பு' என்றது மேல்நிலையான முதிர்வு நிலையே.

கருவூர்த் தேவர் இந்தப் பதிகத்தின் பொருள் வைப்பிலே கவிஎழிலையும் விரகதாபத்தையும் முக்கியமாகக் கொண்டு, இந்த உணர்ச்சிகளுக்கு ஒவ்விய முறையிலே தமது கற்பனையை வெளியிடுகிறார். ஆனால், அதே சமயம் இந்தப் பதிகத்தின் ஆசிரியர் பரிபக்குவம் அடைந்த ஒரு ஞானி என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இந்த உண்மை இந்தப் பதிகத்தின் காதல் வெளியீட்டினுள்ளே ஆன்மநேய ஏக்கமாகப் பொதிந்துள்ளது என்ற அடிப்படை மிகவும் முக்கியமாகும். இந்த அடிப்படையிலிருந்துதான் இறை இன்பம் என்பது சிற்றின்பத்தின் பான்மைகள் கொண்டதாக இருப்பினும், அது மாசில்லாத இறைமைக்கலவி யாகும். கலவிதான் ஆயினும் அது உடலின் கலவி இல்லை உயிர்ப் புணர்ப்பாகிய கலவி. இதுவே இப்பதிகத்தின் மாண்பாகும்.

112. பன்னக ஆபரணன் – பாம்பாகிய அணிகலன்களை அணிந்தவன். இதன் விரிவு குண்டலினி யோகத்தில் கூறப்பட்டது.

பசுபதி – உயிர்கட்குத் தலைவன். அடியேனுடைய அகத்திலும் திருமுகத்தலைக் கோயிலிலும், உள்ளும் புறமும் அமர்ந்தாய் என்கிறார்.

'அக உயிர்க்கு அமுதம்' என்பது சித்தர் மொழி.

புழுங்குதீ வினையேன் வினைகெடப் புகுந்து
புணர்பொரு ளுணர்வுநூல் வகையால்
வழங்குதேன் பொழியும் பவளவாய் முக்கண்
வளரொளி மணிநெடுங் குன்றே!
முழங்குதீம் புனல்பாய்ந் திளவரால் உகளும்
முகத்தலை யகத்தமர்ந் தடியேன்
விழுங்குதீங் கனியாய் இனியஆனந்த
வெள்ளமாய் உள்ளமா யினையே. 113

கன்னகா உள்ளக் கள்வனேன் நின்கண்
கசிவிலேன் கண்ணின்நீர் சொரியேன்
முன்னகா மொழியேன் ஆயினும் செழுநீர்
முகத்தலை யகத்தமர்ந் துறையும்
பன்னகா பரணா! பவளவாய் மணியே!
பாவியேன் ஆவியுள் புகுந்த
தென்னகா ரணம்நீ ஏழைநா யடியேற்
கெளிமையோ பெருமையா வதுவே. 114

---

113. விழுங்கு தீங்கனியாகவும், இனிய ஆனந்த வெள்ளமாகவும் ஆன தன்மையை அழகாகக் கூறுகிறது இந்தப் பாடல். வினைகெடப் புகுதல் என்பதே தொண்டு நெறிக்கும் யோகநெறிக்கும் பொதுவான சொற்றொடராகும்.

114. "என்னுடைய குற்றங்கள் இத்தனையாக இருந்தும் நீ என்னுள்ளே புகுந்தனை" என்று சொல்லுவதிலே உள்ள நயம், தனது சிறுமையை வற்புறுத்துவதே! அதோடு அவனுடைய எளிவந்த தன்மையை அழுத்தம் கொடுத்துச் சொல்வதற்குமாகும். ஆவியுள் புகுந்தது என்பது அவனது ஆட்கொளும் தன்மையைத் துலாம்பரமாகச் சொல்வதற்காகவே.

கேடிலா மெய்ந்நூல் கெழுமியுஞ் செழுநீர்க்
　　கிடையனா ருடையஎன் னெஞ்சிற்
பாடிலா மணியே! மணியுமிழ்ந் தொளிரும்
　　பரமனே! பன்னகா பரணா!
மேடெலாஞ் செந்நெற் பசுங்கதிர் விளைந்து
　　மிகத்திகழ் முகத்தலை மூதூர்
நீடினா யெனினும் உள்புகுந் தடியேன்
　　நெஞ்செலாம் நிறைந்துநின் றாயே. 115

அக்கனா அனைய செல்வமே சிந்தித்
　　தைவரோ டென்னொடும் விளைந்த
இக்கலாம் முழுதும் ஒழியவந் துள்புக்
　　கென்னையாள் ஆண்ட நாயகனே!
முக்கணா யகனே! முழுதுல கிறைஞ்ச
　　முகத்தலை யகத்தமர்ந் தடியேன்
பக்கலா னந்தம் இடையறா வண்ணம்
　　பண்ணினாய் பவளவாய் மொழிந்தே. 116

---

115. நூல் கெழுமியும் – நூல்களை விரும்பிக் கற்றும். கிடை என்பது தண்ணீரில் கிடக்கின்ற 'தக்கை' என்றும், 'நெட்டி' என்றும் வழங்குகிற சடைப்பூண்டு. மணி உமிழ்ந்து ஒளிரும் பரமன் – இதுவே ஒளிமயமான பரம்பொருளின் இலக்கணம். பக்தி செய்வோர் பரஞ்சோதி என்று இந்த ஒளிப்பிழம்பை அஞ்சலி செய்கிறார்கள். யோகிகள் அகஒளியைக் கண்டு துய்க்கிறார்கள். ஞானமாகிய சன்மார்க்கத்தாரோ எனில், 'ஒளியில் ஒளிபோய் ஒளிந்தவாறு' என்று துதிக்கிறார்கள்!

116. இறைவனே ஆசிரியனாக வந்து உபதேசம் செய்த குறிப்பு இந்தப் பாடலின் முக்கிய பகுதியாகும். ஆசிரியனைக் கடவுளாகப் போற்றுவது என்பது வேறு. கடவுளே ஆசிரியனாக வந்தருள்வது வேறு. போக முனிவரிடம் இவர் உபதேசம் பெற்றது முதலாவது வகை. தென்பாண்டி நாட்டுத் திருப்புடைமருதூரில் இறைவனிடமே தீட்சை பெற்றது இரண்டாவது வகை! இவ்விரண்டோடு நெல்லையம்பதியில் நெல்லையப்பரே கருவூர்த்தேவரை அழைத்துக் காட்சிதந்த நிகழ்ச்சியையும் இணைத்துப் பார்க்க வேண்டும்.

புனல்பட உருகி மண்டழல் வெதும்பிப்
பூம்புனல் பொதிந்துயிர் அளிக்கும்
வினைபடு நிறைபோல நிறைந்தவே தகத்தென்
மனம்நெக மகிழ்ந்தபே ரொளியே!
முனைபடு மதில்மூன் றெரித்த நாயகனே!
முகத்தலை யகத்தமர்ந் தடியேன்
வினைபடும் உடல்நீ புகுந்துநின் றமையால்
விழுமிய விமானமா யினதே. 117

விரியும்நீ ராலக் கருமையின் சாந்தின்
வெண்மையும் செந்நிறத் தொளியும்
கரியும்நீ றாடுங் கனலும்ஒத் தொளிருங்
கழுத்தில்ஓர் தனிவடங் கட்டி
முரியுமா றெல்லாம் முரிந்தழ கியையாய்
முகத்தலை யகத்தமர்ந் தாயைப்
பிரியுமா றுளதே பேய்களோம் செய்த
பிழைபொறுத் தாண்டபே ரொளியே. 118

---

117. 'அழலில் வெதும்புவதற்கு முன்னே புனல்சிறிது படினும் குழைந்து போவதாகிய நீர்ச்சால், அழலில் வெதும்பிய பின்னர்ப் புனலை நிறையக் கொண்டும் நிலைத்து நின்று உயிர்களைக் காப்பாற்றுவது போல, நீ என் மனத்தில் வேதகத்தைப்போல வருவதற்கு முன்பு இவ்வுலகத்தைச் சிறிது பற்றினும் என்மனம் அதனுள் அகப்பட்டு மீளமாட்டாது மயங்கி உன்னை நினைத்தற்கு உதவவில்லை. நீ வந்த பின் அதை நிரம்பப்பற்றினும் அதனுள் அகப்படாது நின்று உன்னைநான் எப்பொழுதும் நினைத்தற்குத் துணையாய் நிற்கின்றது'' என்பது 'முதுபெரும்புலவர் அருணை வடிவேலனார் உரையாகும். வேதகம் – இரசகுளிகை, இரும்பையும் பொன்னாக்க **வல்லது!**

118. விரியும்நீர் ஆலம் – விரிகடலில் விளைந்த ஆலமாகிய கருவிடத்தை. அக உடம்பாகிய கடலைக் கடையும்போது முதலில் விடம் தோன்றுகிறது. அது ஆலகால விடம்; அதைக் கழுத்தில் அடக்குவது என்பது சித்தர்களின் பயிற்சி. இந்த உடம்பு இறையுடம்பாக மாறும் போது பாம்புகள் அணியாவதும், கழுத்திலே விடம் தங்கி உட்செல்லாமல் நின்றுவிடுவதும், தலையிலே பிறையும் கங்கையும் **விளங்குவதும் ஆம்!**

என்னைஉன் பாத பங்கயம் பணிவித்
தென்பெலாம் உருகநீ எளிவந்
துன்னைஎன் பால்வைத் தெங்கும்எஞ் ஞான்றும்
ஒழிவற நிறைந்தஒண் சுடரே!
முன்னைஎன் பாசம் முழுவதும் அகல
முகத்தலை யகத்தமர்ந் தெனக்கே
கன்னலும் பாலும் தேனும் ஆரமுதும்
கனியுமாய் இனியைஆ யினையே. 119

அம்பரா! அனலா! அனிலமே! புவிநீ
அம்புவே! இந்துவே! இரவி
உம்பரால் ஒன்றும் அறிவொணா அணுவாய்
ஒழிவற நிறைந்தஒண் சுடரே!
மொய்ம்பராய் நலஞ்சொல் மூதறி வாளர்
முகத்தலை யகத்தமர்ந் தெனக்கே
எம்பிரா னாகி ஆண்டநீ மீண்டே
எந்தையும் தாயும் ஆயினையே. 120

---

119. இறைவன் தன்னை ஆட்கொண்ட விதத்தை மெய்யுருகிப் பாடுகிறார் சித்தர். உன்னை என்பால் வைத்தது மட்டுமா? எங்கும் எஞ்ஞான்றும் ஒழிவற நிறைந்த ஒண்சுடராக நிலைத்து ஒளிர்கின்ற மெய்ஞ்ஞானச் சுடராக நந்தாது ஒளி வீசுகிறபேறு, மிகப்பெரிய பேறன்றோ! கன்னலும் பாலும் தேனும் ஆரமுதும் கனியுமாய்த் தித்திக்கிற அநுபவம் அன்றோ அது!

120. இந்தப் பாடலில் இறைவனுடைய அட்ட மூர்த்தங்களுள் ஏழு இடம் பெறுகின்றன, இயமானன் தவிர! அம்பரன் – விண்ணுருவாய் நிற்பவன். அனலன் – நெருப்பின் வடிவானவன். அனிலம் – காற்று. புவி – நிலம். அம்பு – தண்ணீர். இந்து – சந்திரன். இரவி – சூரியன். நுண்ணிய அணுவாய் – மிகவும் நுட்பமான பொருளாகி. மொய்ம்பர் – ஆற்றல் மிக்கவர். மீண்டே – அவற்றோடுகூட, அவற்றுக்கு மேலும்.

மூலமாய் முடிவாய் முடிவிலா முதலாய்
முகத்தலை யகத்தமர்ந் தினிய
பாலுமாய் அமுதாம் பன்னகா பரணன்
பனிமலர்த் திருவடி யிணைமேல்
ஆலைஅம் பாகின் அனையசொற் கருவூர்
அமுதுறழ் தீந்தமிழ் மாலை
சீலமாப் பாடும் அடியவ ரெல்லாம்
சிவபதம் குறுகிநின் றாரே. 121

ANDAV.. A. No. 12849. LIBRARY KOVIL

### 5. திரைலோக்கிய சுந்தரம்

**பண்—காந்தாரம்**

நீரோங்கி வளர்கமலம்
நீர்பொருந்தாத் தன்மையன்றே!
ஆரோங்கி முகம்மலர்ந்தாங்
கருவினையேன் திறம்மறந்தின்
றூரோங்கும் பழிபாரா
துன்பாலே விழுந்தொழிந்தேன்;
சீரோங்கும் பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. 122

---

121. மூலம் – ஆதியான முதல். ஆலையம்பாகு – கரும்பாலையில் வந்த பாகு. சீலமா – நெறிமுறையாக, ஒழுக்கமாக. இந்தப் பாடலின் உறுதிப்பாட்டை நோக்கவேண்டும். இது சித்தரின் வாக்கு என்பதற்கேற்பு, இதனுள் உள்ள சொல்லாட்சி உறுதிக்கு உறுதி யளிக்கிறது. கடைசி வரியிலே 'சிவபதம் குறுகி நிற்பாரே' என்னாமல் 'நின்றாரே' என்று இறந்தகால வினையிலே சொன்னது உறுதியான துணிவு பற்றி!

122. இந்தப் பதிகம் கோடைத் திரைலோக்கிய சுந்தரன் மீது எழுந்த காதற் பாடல்களால் ஆகியது! கோடை என்பது ஊரின் பெயர். 'திரைலோக்கியம்' என்பதும் 'திரைலோக்கிய சுந்தரம்' என்பதும் கோயிலின் பெயர்! அந்த மூர்த்தி திரைலோக்கிய சுந்தரன்! இந்த முதலாவது பாடல் தலைவியின் கூற்று. நீரிலே முளைத்த தாமரை மலர்மீது நீர் ஒட்டுவதில்லை. அவ்வாறே உன்பால் விழுந்து அழுந்தியும் உன் தண்ணளி எனக்கு இன்னும் கிட்டவில்லை.

நையாத மனத்தினனை
    நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த
    அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி
    கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்?கோடைத்
    திரைலோக்கிய சுந்தரனே. 123

அம்பளிங்கு பகலோன்பால்
    அடைபற்றாய் இவள்மனத்தின்
முன்பளிந்த காதலும்நின்
    முகந்தோன்ற விளங்கிற்றால்;
வம்பளிந்தகனியே! என்மருந்தே!
    நல்வளர் முக்கட்
செம்பளிங்கே! பொழிற்கோடைத்
    திரைலோக்கிய சுந்தரனே. 124

---

123. அற்புதமான கவியழகு நிரம்பிய பாடல் இது. தத்துவப் பொருளையெல்லாம் மறந்துவிட்டு இதை ஒரு காதற்பாடலாகவே பாவித்துப் பார்த்தாலும், இந்தக் கவிதையின் எழிலும் உருக்கமும் மாட்சிமை பொருந்தியவை! கருவூரார் என்னும் ஞானசித்தர் எத்தகைய அருங்கவிஞர் என்பதற்கு இந்தப் பாடல் ஓர் அழகிய சான்றாகும். 'மகிழ்ச்சியாக இருந்த என்னைத் துன்பப்படுத்துவதற்கு என்றே நீ வீதியிலே உலா வந்தாய்!' என்று சொல்வதிலே உள்ள இன்ப வேதனைதான் சீவன் சிவன்பால் கொண்ட உறவு!

124. இந்தப் பாடலிலிருந்து செவிலி கூற்று தொடங்குகிறது. 'பளிங்குக் கல்லின் எதிரொளி வீச்சும், அடுத்தது காட்டும் தன்மையும் பகலவனுடைய முன்னிலையிலேதான் நிகழ்வன. இருளில் அல்ல. அவ்வாறே நீ தோன்றியதும் உன் முன்னிலையில் இவளுடைய உயிரேக்கம் செயற்படத் தொடங்கிற்று!' என்று செவிலி கூறுவது ஆன்ம ஒழுக்கத்தை உள்ளடக்கிய பேச்சு! உயிரின் இயல்பு இறைவனை அடைவதே. எனினும் ஆணவ இருளில் இந்த நாட்டம் செயற்படுவதில்லை. ஆணவமலம் ஒழிந்து நீங்க ஒளி வேண்டும். அதன் முன்னிலையில் உயிரின் நாட்டம் உள்ளிருந்து கிளர்ந்து எழுகிறது. இதனை "சூரியன் சந்நிதியிற் சுடுமாறுபோல் ஆரியன் முன்னம் அற்ற மலங்களே" என்ற திருமந்திரத்தோடு ஒப்பு நோக்கலாம்.

மைஞ்ஞின்ற குழலாள்தன்
மனம்தரவும் வளைதாரா
திஞ்ஞின்ற கோவணவன்
இவன்செய்த் தியார்செய்தார்?
மெஞ்ஞின்ற தமர்க்கெல்லாம்
மெஞ்ஞிற்கும் பண்பினுறு
செய்ஞ்ஞன்றி யிலன்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. 125

நீவாரா தொழிந்தாலும்
நின்பாலே விழுந்தேழை
கோவாத மணிமுத்தம்
குவளைமலர் சொரிந்தனவால்;
ஆவாஎன் றருள்புரியாமல்
அமரர்கணம் தொழுதேத்தும்
தேவரதென் பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. 126

---

125. 'என்ன அக்கிரமம், இது!' என்பதுபோல வருகிறது தாக்குதல்! மனத்தைக் கொடுத்தவளுக்கு, வளையலையாவது — அவளுடைய வளையல்கள் அவை—தரவேண்டாமா! மட்டில்லாத அன்பினால் வருகிறது வார்த்தை—பகைமையினால் அல்ல! இப்படியெல்லாம் பரம்பொருளோடு விளையாடுகிற பரம்பரைதான் நமது தமிழ்ப் பரம்பரை. அதோடு இறைவனைத் தோழனாகப் பாவிக்கிற சகமார்க்கத்தாருக்குச் சொல்லவா வேண்டும்!

126. குவளை மலர் – கண்கள். கோவாத முத்தம் – முத்து முத்தாகச் சொரிகிற கண்ணீர்த் திவலைகள். தென்பொழில் – அழகிய சோலை. அவன் வாராதொழிந்தான். ஆனால் அவன் நிலை என்ன? அவன்பாலே விழுந்து அழுகிறாள். இரக்கப்பட்டாவது, ஐயோ, பாவம் (ஆ, ஆ) என்றாவது அருள்செய்ய வேண்டும் தேவா!

முழுவதும்நீ யாயினும்இம்
    மொய்குழலாள் மெய்ம்முழுதும்
பழுதெனிலே நினைந்தோராள்;
    பயில்வதும்நின் னொருநாமம்
அழுவதும்நின் திறம்நினைந்தே;
    அதுவன்றோ பெறும்பேறு!
செழுமதில்சூழ் பொழிற்கோடைத்
    திரைலோக்கிய சுந்தரனே. 127

தன்சோதி எழுமேனித்
    தமனியப்பூச் சாய்க்காட்டாய்
உன்சோதி எழில்காண்பான்
    ஓரிடவும் உருக்காட்டாய்;
துஞ்சாகண் ணிவளுடைய
    துயர்தீரும் ஆறுரையாய்;
செஞ்சாலி வயற்கோடைத்
    திரைலோக்கிய சுந்தரனே. 128

---

127. மெய்ம்முழுதும் பழுதென நினைந்து அதை அவள் கவனிப்ப தில்லை; ஓர்வதில்லை என்றதன் குறிப்பு என்னவென்றால், சரியாக அவள் உண்ணுவதில்லை, குளிப்பதில்லை, அணிமணிகள் புனைவதில்லை. இந்த உடம்புகொண்டு துய்க்கின்ற இன்பமாகிய நின்பேற்றை அடையாத நிலையில் இந்த உடம்பையே அவள் வெறுக்கிறாள்.

காதல் நிலையில் எழுந்த இந்தப் பாடலுக்கு ஆன்மப் பொருள் கூறுகிற பெரியோர்கள் ஜீவன் முக்தி நிலையிலிருப்போருக்கும் பரமுக்தி நிலைக்கண் வேட்கை இருக்கின்ற திண்மையை இந்தப்பாடல் சித்திரிக்கிறது என்பார்கள்.

'அதுவன்றோ பெறும்பேறு' என்பதில் உள்ள உட்பொருள் என்னவென்றால், இந்த உடம்பைப் பெற்றுள்ளதன் பயன் இறை யின்பத்தைத் துய்ப்பதேயாகும் என்பதே.

128. துஞ்சா என்ற சொல் சாதாரணமான பொருளில் தூங்காத நிலையையே உணர்த்துகிறது. ஆனால் துஞ்சாத கண் என்பது சித்தர் இலக்கியத்தில் 'காணாத கண்' என்று பேசப்படுகிறது. கேளாத செவியினால் கேட்பதும், காணாத கண்ணினால் காண்பதுமே ஆன்ம அநுபவங்களாம். தூங்குகிற கண் துஞ்சுவதுண்டு. ஆனால் காணாத கண்ணுக்குத் தூக்கம் இல்லை. அதோடு காணாத கண் என்பது புறத்தே புலப்படாத கண், அதாவது வெளிப்பார்வையிலே காணாத கண் என்னும் பொருள் தரும்.

அரும்பேதைக் கருள்புரியா
தொழிந்தாய்;நின் அவிர்சடைமேல்
நிரம்பாத பிறைதூவும்
நெருப்பொடுநின் கையிலியாழ்
நரம்பாலும் உயிரீந்தாய்;
நளிர்புரிசைக் குளிர்வனம்பா
திரம்போது சொரிகோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. 129

ஆறாத பேரன்பி
னவர்உள்ளம் குடிகொண்டு
வேறாகப் பலர்சூழ
வீற்றிருத்தி; அதுகொண்டு
வீறாடி இவன்உன்னைப்
பொதுநீப்பான் வரைந்தின்னம்
தேறான்தென் பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. 130

---

129. பேதை – உணர்ச்சி வசப்பட்டு, அறிவு நிலை மயங்கிய காதலி யாகிய தலைவி. அரும்பேதை – இப்படி ஒரு பெண்ணைக் காண்பதரிது. அத்தனை செறிந்த காதலின் வயமானவள்! நரம்பால் என்றது அந்த நரம்பிலிருந்து உதிக்கிற உள்ளம் கவர்கிற இசையினால் என்ற பொருளிலே! நளிர் - குளிர்ச்சி. வனம் - சோலை. புரிசை – மதில் சூழ்ந்த. பாதிரம் போது – பாதிரிப் பூ.

130. வீறாடி – பெருமையோடு தற்புகழ்ந்து. "உன்னைப் பொது நீப்பான்" என்றது ஆழ்ந்து பொருள் கொள்ளற்குரிய சொற்றொடர். தன் ஒருத்திக்கே உரியவன், நீ பொதுவான எல்லாருக்கும் உரியவன் அல்லன் என்ற பொருளிலே இச்சொற்றொடர் வருகிறது. இங்ஙனம் அனைவருக்கும் தலைவனான உன்னை இவளே தனியுரிமை கொண்டது தேறாத மனநிலையின் மயக்கம் என்கிறாள் செவிலி! ஏனென்றால் நீயோ "வேறாகப் பலர்சூழ வீற்றிருப்பவன்".

சரிந்ததுகில், தளர்ந்தஇடை,
அவிழ்ந்தகுழல், இளந்தெரிவை
இருந்தபரி சொருநாள்கண்
டிரங்காய்எம் பெருமானே!
முரிந்தநடை மடந்தையர்தம்
முழங்கொலியும் வழங்கொலியும்
திருந்துவிழ வணிகோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. 131

ஆரணத்தேன் பருகிஅருந்
தமிழ்மாலை கமழவரும்
காரணத்தின் நிலைபெற்ற
கருவூரன் தமிழ்மாலை
பூரணத்தால் ஈரைந்தும்
போற்றிசைப்பார் காந்தாரம்
சீரணைத்த பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. 132

---

131. துகில் சரிந்தது; இடை தளர்ந்தது; குழல் அவிழ்ந்தது – இந்தப் பரிசை அதாவது பரிதாபத்துக்குரிய இந்தப் பெருமையை(!) நீ பார்த்தாவது ஒரு நாள் இரங்க வேண்டும், எம்பெருமானே! முரிந்த நடை – அசைகிற நடை. முழங்கொலி – பாடுகிற பாட்டொலி. வழங்கொலி – இசைக்கருவிகள் கொண்டு வழங்குகிற ஒலி.

132. இந்தப் பதிகம் காந்தாரப் பண்ணில் அருளிச் செய்தது என்று ஒன்பதாந் திருமுறையில் இப்பதிகத்தின் தலைப்பிலேயே குறிக்கப் பெற்றுள்ளது. இந்தக் குறிப்புக்குரிய அகச்சான்று இந்தப் பாடலிலேயே காணுகிறோம்.

கருவூரார் தமது பதிகத்தை நிறைவு செய்யும் பாங்கிலே பலனைச் சொல்லும்போது, இந்தப் பத்துப் பாடலையும் முழுமையாக, பூரணத்தால், காந்தாரத்திலே இசைப்பவர்கள் என்று பொருள் சொல்வதைவிட, பூரணத்தால் என்பதற்குப் பதில் பூரணத்தார் என்ற பாடத்தைக் கொண்டு, இப்படி இசைப்பவர்கள் பூரணமானோர், அதாவது, முழுமை பெறுவோர்கள் ஆவர் என்று சில அறிஞர்கள் உரை செய்துள்ளார்கள். அதோடு நிலைபெற்ற என்ற அடைச்சொல்லைத் தமிழ் மாலையொடு புணர்ப்பதா அல்லது 'கருவூரன்' என்னும் சொல்லோடு புணர்ப்பதா என்ற ஆராய்ச்சியும் உண்டு. இரண்டும் பொருத்தமே. நிலைபெற்றது தமிழ்மாலை, நிலைபெற்றவர் காயகற்பம் உண்டு அமரவாழ்வு பெற்ற கருவூர்ச்சித்தர்!

## 6 கங்கைகொண்ட சோளேச்சரம்

பண்—பஞ்சமம்

அன்னமாய் விசும்பு பறந்த்யன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னைஆள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்!
முன்னம்மால் அறியா ஒருவனாம் இருவா!
முக்கணா! நாற்பெருந் தடந்தோட்
கன்னலே! தேனே! அமுதமே! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 133

உண்ணெகிழ்ந் துடலம் நெக்குமுக் கண்ணா
ஓலம்என் றோலமிட் டொருநாள்
மண்ணின்நின் றலரேன்; வழிமொழி மாலை
மழலையஞ் சிலம்படி முடிமேற்
பண்ணிநின் றுருகேன்; பணிசெயேன் எனினும்,
பாவியேன் ஆவியுள் புகுந்தென்
கண்ணின்நின் றகலான் என்கொலோ! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 134

---

133. இந்தப் பதிகம் எம்பெருமான் தமக்கு எளிவந்து அருள்பாலித்த பெருங்கருணைத் திறத்தை நன்றியுணர்வோடு உளம் நெகிழ்ந்து போற்றுகிறது. ஞானத்தின் அநுபவங்களும் அங்கங்கே பொதிந்து வருகின்றன. தோத்திரத்தின் இயல்பிலே சாத்திரத்தின் உண்மைகளை விரவித் தருகிறது. அங்ஙனே - அந்த இடத்திலே. ஆள்விரும்பி – ஆண்டுகொள்ள விருப்பமுற்று. இருவன் – இரு தன்மையுடைய ஒருவன். அதாவது சிவனும் சக்தியுமானவன். அப்பனும் அம்மையுமான மூர்த்தி.

134. அவனுடைய கருணையின் மேன்மையை வியந்து பாடியது. தகுதிக்குரிய செயல் ஏதுமில்லா என்னை ஆண்டுகொண்டது என்ன காரணத்தால்? கருணையினாலேயே என்பது கருத்து.

அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டே?
அன்பொடு தன்னைஅஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளம்அள் ளூறும்
தொண்டருக் கெண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும், பைம்பொன்மா ளிகையும்,
பவளவா யவர்பணை முலையும்,
கற்பகப் பொழிலும் முழுதுமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 135

ஐயபொட் டிட்ட அழகுவா ணுதலும்,
அழகிய விழியும்வெண் ணீறும்
சைவம்விட் டிட்ட சடைகளும் சடைமேல்
தரங்கமுஞ் சதங்கையுஞ் சிலம்பும்
மொய்கொள் எண்திக்கும் கண்டநின் தொண்டர்
முகம்மலர்ந் திருகண்நீர் அரும்பக்
கைகள்மொட் டிக்கும் என்கொலோ! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 136

135. அள்ளூறும் – பெரிதும் உருக்கமுடைய. தன்னை அடைந்தவருக்கு இத்தனை மாண்புகள் செய்கிறவன் அவன். இந்தத் தெய்வத்தைவிட அற்புதமான தெய்வம் பிறிதில்லை என்றவாறு!

இக உலகத்தில் இன்பங்கள் அனைத்தும் வழங்குகிறான் எனக் கூறினும், கனகம் என்பதும், பொற்குவை என்பதும், பொன்மாளிகை என்பதும் உருவகங்கள்.

136. விட்டிட்ட – எடுத்துக்காட்டுகிற, அடையாளமாய் அறிவிக்கிற. சைவம் – சிவவேடம், அந்தச் சிவவேடம் துலங்குகிற தனிப்பண்பே சடையாகும். எட்டுத்திசையிலும் இந்தக் காட்சி கண்டுருகும் தொண்டர்கள் முகம் மலர்ந்து இரண்டு கண்ணும் நீர்மல்க கைகூப்பி நிற்கும் நிலை ஓர் ஓவியமாகச் சித்திரம் கொள்கிறது.

கருதிவா னவனாம்! திருநெடு மாலாம்!
சுந்தர விசும்பின் இந்திரனாம்
பருதிவா னவனாம்! படர்சடை முக்கட்
பகவனாம்! அகஉயிர்க் கமுதாம்!
எருதுவா கனனாம் எயில்கள்மூன் றெரித்த
ஏறுசே வகனுமாம்! பின்னும்
கருதுவார் கருதும் உருவமாம்! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 137

அண்டம்ஓர் அணுவாம் பெருமைகொண் டணுஓர்
அண்டமாம் சிறுமைகொண் டடியேன்
உண்டஊன் உனக்காம் வகையென துள்ளம்
உள்கலந் தெழும்பரஞ் சோதி!
கொண்டநாண் பாம்பாப் பெருவரை வில்லிற்
குறுகலர் புரங்கள்மூன் றெரித்த
கண்டனே! நீலகண்டனே! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 138

---

137. அவன் ஒருவனே என்றாலும், பல தோற்றங்களில் அவன் காட்சி தருகிறான். ஒருவனே பல வடிவங்களைத் தாங்கி நிற்கிறான். சுருதி வானவன் – வேத முதல்வன். விசும்புளாரின் தலைவனான இந்திரனைச் சுந்தர விசும்பின் இந்திரன் என்றவாறு. "ஆருருவ உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்" என்ற அப்பர் திருமொழி இங்கே நினைவு கூரத்தக்கது. சேவகன் – வீரன்.

138. உண்ட ஊன் நுகர்தல் என்பது பிராரத்த வினை. 'அவனே தானே ஆகிய' நிலையில் பிராரத்த வினை ஆகாமை உணர்த்தியவாறு. இறைபணியில் நிற்பவர் எல்லாத் துய்ப்பினையும் சிவனுக்கு அர்ப்பணம் செய்வது, பிராரத்தம் தாக்காமைப் பொருட்டே! 'இவனுக்குச் செய்தது, எனக்குச் செய்தது என்று உடனாய் நின்று ஏற்றுக் கொள்ளுதல்' என்பது சிவஞான சித்தி.

மோதலைப் பட்ட கடல்வயி றுதித்த
முழுமணித் திரளமு தாங்கே
தாய்தலைப் பட்டங் குருகிஒன் றாய
தன்மையில் என்னைமுன் ஈன்ற
நீதலைப் பட்டால் யானும்அவ் வகையே;
நிசிசரர் இருவரோ டொருவர்
காதலிற் பட்ட கருணையாய்! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 139

தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்
டித்திலங் கொருகூ றுன்கண்வைத் தவருக்
கமருல களிக்கும்நின் பெருமை
பித்தனென் றொருகாற் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யுங்
கைத்தலம் அடியேன் சென்னிமேல் வைத்தகங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 140

139. அலைப்பட்ட – அலை நிரம்பிய, அலை வீசுகிற. முழுமணித் திரளமுது – குற்றமற்ற மணித்திரள் போன்ற வெண்ணிற அமுது. ஆங்கே – அதே இடத்தில். என்னை முன் ஈன்றது என்றால் ஆதியாய் உயிர்களுக்கு அம்மையப்பனாய் நிற்பவன். நிசிசரர் – அசுரர். இருவரோடு ஒருவர் என்றது திரிபுரம் எரித்த காலத்தில் தமது தூய்மையால் அழியாமல் நின்று இறைவனை அடைந்த மூவர்.

140. பிழைத்தவை – செய்த தவறுகளை. கைத்தலம் என்றது இங்கே பரிச தீட்சையையும் (அபயகரத்தோடு சேர்த்து) உணர்த்துகிறது. "அடியேன் சென்னிமீது கைத் தலம் வைத்த" என்று குறிப்பிடுவது இறைவனே குருநாதனாக வந்து தீட்சை தந்த அநுபவத்தை என்க.

பண்ணிய தழல்காய் பாலளாம் நீர்போற்
பாவமுன் பறைந்து பா லனைய
புண்ணியம் பின்சென் றறிவினுக் கறியப்
புகுந்ததோர் யோகினிற் பொலிந்து
நுண்ணியை யெனினும் நம்பநின் பெருமை
நுண்ணிடை யொடுங்கநீ வந்தென்
கண்ணினுண் மணியிற் கலந்தனை! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 141

அங்கைகொண் டமரர் மலர்மழை பொழிய
அடிச்சிலம் பலம்பவந் தொருநாள்
உங்கைகொண் டடியேன் சென்னிவைத் தென்னை
உய்யக்கொண் டருளினை! மருங்கிற்
கொங்கைகொண் டனுங்குங் கொடியிடை காணிற்
கொடியளென் றவிர்சடை முடிமேற்
கங்கைகொண் டிருந்த கடவுளே! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 142

---

141. பண்ணிய – பற்ற வைத்த. தழல்காய் – நெருப்பு எரிகிற. பாலில் கலந்துநின்ற தண்ணீர் நெருப்பின் சூட்டிலே ஆவியாக மாறிப் பாலினின்று நீங்கிவிடுகிறது. அவ்வாறே நின் அருளினால் என் பழம் வினை அந்த நீர்போல் நீங்கியது. பாலைப் போலப் புண்ணியம் நின்று நலம் தருகிறது. பறைதல் – நீங்குதல். யோகு – யோகம். புகுந்ததோர் யோகு – உடம்பினுள் புகுந்த இணைப்பு என்னும் யோகம்! கண்ணினுள் மணியிற் கலந்தது என்பதே இந்த யோகத்தின் சித்தியாகும் என்பது சித்தர் ஞானம்!

142. 'உமாதேவியின் அருகில் அல்லது மருங்கில் இருந்தால் சீற்றம் கொள்ளுவாள் என்று, கங்கையைத் தலைமேல் வைத்துக் கொண்டான்' என்றவாறு! தலைமீது கங்கை பொழிவதன் ஞான உருவகம் முன்னர் விளக்கப்பட்டுள்ளது. 'உம்கையை என்தலை மீது வைத்து என்னை உய்யக்கொண்டருளியது' என்பது இறைவன் நேரில் வந்து தந்த உபதேசத்தை.

மங்கையோ டிருந்தே யோகுசெய் வானை
வளர்இளந் திங்களை முடிமேற்
கங்கையோ டணியுங் கடவுளைக் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானை
அங்கையோடேந்திப் பலிதிரி கருவூர்
அறைந்தசொல் மாலையால் ஆழிச்
செங்கையோ டுலகில் அரசுவீற் றிருந்து
திளைப்பதும் சிவனருட் கடலே. 143

## 7. திருப்பூவணம்

பண்—பஞ்சமம்

திருவருள் புரிந்தாள் ஆண்டுகொண் டிங்ஙன்
சிறியனுக் கினியது காட்டிப்
பெரிதருள் புரிந்தா னந்தமே தரும்நின்
பெருமையிற் பெரியதொன் றுளதே?
மருதர சிருங்கோங் ககில்மரம் சாடி
வரைவளங் கவர்ந்திழி வையைப்
பொருதிரை மருங்கோங் காவண வீதிப்
பூவணம் கோயில்கொண் டாயே. 144

---

143. 'மங்கையோடு இருந்தே' யோகம் இயற்றுகிற தன்மையே சித்தர்கள் வழங்குகிற பரியங்கிக்கல்வியின் தனிச்சிறப்பாகும்.

'ஒன்றிலும் தோய்விலனாய், ஒன்றொடொன் றொவ்வா வேடம் ஒருவனே தரித்துக்கொண்டு நிற்பான்' என்ற சிவஞான சித்தியாரை இங்கே நினைவூட்டுகிறார். அருணைவடிவேலனார் தமது உரையிலே! அதோடு 'நேரிழையைக் கலந்திருந்தே புலன்கள் ஐந்தும் வென்றானை' என்னும் அப்பர் வாக்கையும் இங்கே ஒப்புநோக்க வேண்டும்.

'அங்கை ஓடு ஏந்திப் பலிதிரி கருவூர்' என்று இப் பாடலிலே வருகிற சொற்கள் முக்கியமானவை. கருவூர்ச் சித்தர் தமது நிலையைத் தாமே கூறுகிற இச்சொற்றொடர் ஒரு சிறந்த அகச்சான்றாகும். அதாவது கருவூரார் பழைய ஞான நூல்களிலே வர்ணிக்கப் பெறுகிற அத்தனை இலக்கணங்களும் பொருந்திய ஒரு மாபெரும் சித்தர்!

144. இங்ஙனம் – இந்த உலகிலே. மலைவளம் சொல்வான், மருது, அரசு, கோங்கு, அகில் ஆகிய மரங்கள் என்றார். மலைபடு பொருள் கஸ்தூரி குங்குமம் முதலியன என்பது பழைய உரை. ஆவணவீதி – கடைவீதி.

பாம்பணைத் துயின்றோன் அயன்முதல் தேவர்
பன்னெடுங் காலம்நிற் காண்பான்
ஏம்பலித் திருக்க என்னுளம் புகுந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்
தேம்புனற் பொய்கை வாளைவாய் மடுப்பத்
தெளிதரு தேறல்வாய்ந் தொழுகும்
பூம்பணைச் சோலை ஆவண வீதிப்
பூவணம் கோயில்கொண் டாயே. 145

கரைகடல் ஒலியின் தமருகத் தரையிற்
கையினிற் கட்டிய கயிற்றால்
இருதலை ஒருநா இயங்கவந் தொருநாள்
இருந்திடாய் எங்கள்கண் முகப்பே
விரிதிகழ் விழவின் பின்செல்வோர் பாடல்
வேட்கையின் வீழ்ந்தபோ தவிழ்ந்த
புரிசடை துகுக்கும் ஆவணவீதிப்
பூவணம் கோயில்கொண் டாயே. 146

---

145. ஏம்பலித்து - எய்த்து வருந்தி. அயனும் திருமாலும் ஆகிய கடவுளர்களே நின்னைக் காண இயலாமல் தேடித் தேடித் தவித்துத் தடுமாறி வருந்தி நிற்கின்றனர். ஆனால் நீயோ எளியேனுடைய உள்ளத்தில் நீயாகவே வந்து புகுந்தாய். அந்த எளிமையை நான் ஒருநாளும் மறக்க மாட்டேன்.

146. கரைகடல் - கரைந்து ஒலிசெய்கின்ற. தமருகத்திலிருந்து இறை ஒலி என்பதே சிவயோகமாகும்! பாடல் வேட்கையின் - அந்த இசையின்மீது எழுந்த இச்சையினால். வீழ்ந்த - அவிழ்ந்த. துகுக்கும் - உதிர்க்கின்ற. அவிழ்ந்த - மலர்ந்த.

கண்ணியல் மணியின் குழல்புக் கங்கே
கலந்துபுக் கொடுங்கினேற் கங்ஙன்
நுண்ணியை யெனினும், நம்ப! நின்பெருமை
நுண்ணிமை யிறந்தமை அறிவன்
மண்ணியல் மரபின் தங்கிருள் மொழுப்பின்
வண்டினம் பாடநின் றாடும்
புண்ணிய மகளிர் ஆவண வீதிப்
பூவணம் கோயில்கொண் டாயே. 147

கடுவினைப் பாசக் கடல்கடந் தைவர்
கள்ளரை மெள்ளவே துரந்துன்
அடியிணை இரண்டும் அடையுமா றடைந்தேன்
அருள்செய்வாய்; அருள்செயா தொழிவாய்;
நெடுநிலை மாடத் திரவிருள் கிழிக்க
நிலைவிளக் கலகில்சா லேகப்
புடைகிடந் திலங்கும் ஆவண வீதிப்
பூவணம் கோயில்கொண் டாயே. 148

---

147. கண்மணியே சித்தர் இறைவனோடு கலந்த மையம் என்பது நுட்பமான அநுபவ ஞானமாகும். 'அவன் என் கண்ணுளானே' என்றும், 'கண்ணுள் மணியை' என்றும், இன்னும் பலவாறாகவும், இந்த ஒளிநுட்ப ஞானத்தைப் பெரியோர்கள் மொழிந்துள்ளார்கள். நுண்ணிமை – நுட்பம். 'அங்ஙன் நுண்ணியை' என்றால் என் கண்மணியின் நுட்பத்திலே நீயும் நுட்பமாக நின்றாய் என்று பொருள்!

148. துரந்து – ஒட்டி. அடையுமாறு அடைதல் – முறைப்படி சேர்தல். இதனை 'விதிவழி' என்று சான்றோர் கூறுவர். 'நீ எனக்குத் திருவருள் வழங்குவாய் அல்லது வழங்காதிருப்பாய். அது உனது உளப்பாங்கு. ஆனால் நான் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டேன். இதில் மாற்றம் இல்லை' என்றவாறு. கிழிக்க – நீக்குதற்காக. நிலைவிளக்கு – நந்தா விளக்கு. சாலேகப்புடை – சாளரத்துக்கு வெளியே.

செம்மனக் கிழவோர் அன்பு தாஎன்றுன்
சேவடி பார்த்திருந் தலச
எம்மனம் குடிகொண் டிருப்பதற் கியான்ஆர்?
என்னுடை அடிமைதான் யாதே?
அம்மனங் குளிர்நாட் பலிக்கெழுந் தருள
அரிவையர் அவிழ்குழற் சுரும்பு
பொம்மென முரலும் ஆவண வீதிப்
பூவணம் கோயில்கொண் டாயே. 149

சொன்னவில் முறைநான் காரணம் உணராச்
சூழல்புக் கொளித்தநீ யின்று
கன்னவில் மனத்தென் கண்வலைப் படும்இக்
கருணையிற் பெரியதொன் றுளதே?
மின்னவில் கனக மாளிகை வாய்தல்
விளங்கிளம் பிறைதவழ் மாடம்
பொன்னவில் புரிசை ஆவண வீதிப்
பூவணம் கோயில்கொண் டாயே. 150

---

149. கிழவோர் – தகைமையுடையவர், அடியார்கள். செம்மனக் கிழவோர் – மனம் செம்மையான சான்றோர். சிவத் திருவிழாக்களில் 'பிட்சாடணர்' என்னும் கோலத்திலே உற்சவர் திருவீதி உலா வருகிற விழாவும் ஒன்று என்பது இந்தப் பாடலிலே இடம் பெறுகிறது. குளிர்நாள் – மகிழ்ச்சி அடையக்கூடிய திருநாள். அரிவையரது கூந்தல் அவிழ்தல் என்பது காதல் மயக்கத்தைக் காட்டுகிற சித்திரம்.

150. சொற்களை நவில்கிற முறை என்பது கட்டளைப்படி ஓதுகின்ற முறைமையாகும். 'அப்படி ஓதுகின்ற நால்வேதத்துக்கும் பிடி கொடாதவனாகிய நீ, கல்மனத் தகுதிய எனது கண்வலையில் பட்டாய்!' என்றவாறு! இந்தக் கருணை ஒப்பற்ற மாபெரும் கருணை!

பூவணம் கோயில் கொண்டெனை ஆண்ட
புனிதனை, வனிதை, பாகனை, வெண்
கோவணங் கொண்டு வெண்டலை ஏந்தும்
குழகனை, அழகெலாம் நிறைந்த
தீவணன் றன்னைச் செழுமறை தெரியுந்
திகழ்கரு வூரனேன் உரைத்த
பாவணத் தமிழ்கள் பத்தும்வல் லார்கள்
பரமன துருவமா குவரே. 151

## 8. திருச்சாட்டியக்குடி

பண்—பஞ்சமம்

பெரியவா! கருணை இளநிலா வெறிக்கும்
பிறைதவழ் சடைமொழுப் பவிழ்ந்து
சரியுமா சுழியம் குழைமிளிர்ந் திருபால்
தாழ்ந்தவர் காதுகள்! கண்டம்
கரியவா! தாழும் செய்யவாய் முறுவல்
காட்டுமா! சாட்டியக் குடியார்
இருகைகூம் பினகண் டலர்ந்தவா முகம்! ஏழ்
இருக்கையில் இருந்தஈ சனுக்கே. 152

---

151. இந்தப் பாடலின் சொற்களும், கவிநயமும் குழைவு கொண்ட, கனிவு கொண்ட, இசைமை புணர்ந்த இனிமையோடு திகழ்வன! கோவணம் அணிந்து வெண்தலை ஏந்திய அழகன்! இளையோன்! அதாவது தாருகாவனத்து முனிபத்தினியரிடம் பிச்சைக்குச் சென்ற போது, இளைஞனாய் அல்லவா சென்றான் எம்பெருமான்! அவன் வண்ணம் தீயின் வண்ணம்! அத்தனை சிவந்த இளைஞன்!

152. இளநிலா – தண்மை நிலவு. மொழுப்பு – முடி. சுழிஅம்குழை – சுழித்துத் துலங்குகிற குண்டலம். ஏழ்இருக்கை – ஏழுநிலைகள் அமைந்த விமானம் திகழ்கிற சாட்டியக்குடிக்கோயில். சாட்டியக்குடிச் சான்றோர்கள் இருகை கூப்புவது கண்டு இறைவன் முகம் மலர்கிறது!

பாந்தள்பூ ணாரம்; பரிகலங் கபாலம்;
    பட்டவர்த் தனம்எரு; தன்பர்
வார்ந்தகண் ணருவி மஞ்சன சாலை;
    மலைமகள் மகிழ்பெருந் தேவி;
சாந்தமும் திருநீ; றிருமறை கீதம்
    சடைமுடி; சாட்டியக் குடியார்
ஏந்தெழில் இதயங் கோயில்மா ளிகைஏழ்
    இருக்கையுள் இருந்தஈ சனுக்கே. 153

தொழுதுபின் செல்வ தயன்முதற் கூட்டம்;
    தொடர்வன மறைகள்நான்; கெனினும்
கழுதுறு கரிகா டுறைவிடம்; போர்வை,
    கவந்திகை கரியுரி; திரிந் தூண்;
தழலுமிழ் அரவம் கோவணம்; பளிங்கு
    சபவடம் சாட்டியக் குடியார்
இழுதுநெய் சொரிந்தோம் பழல்ஒளி விளக்கேழ்
    இருக்கையில் இருந்தஈ சனுக்கே. 154

---

153. பாந்தள் – பாம்பு. பூணாரம் – அணிகிற மாலை. பரிகலம் – உண்ணுகிற பாத்திரம். கபாலம் – பிரமனது மண்டை ஓடு. பட்டவர்த்தனம் – அரசவிருது. வார்ந்த – சொரிகின்ற. மஞ்சன சாலை – குளிக்கும் அறை. சாந்தம் – மேனிப்பூச்சு. மாலை என்பது பாம்பு. உண்கலம் மண்டை ஓடு. அரசவிருது என்பது எருது. அன்பர் கண்ணருவியே குளியிடம்! அரசமாதேவி மலையைச் சார்ந்தவள். களபம் என்பது திருநீறு. எல்லாம் விசித்திர சித்தக் கோலம், என்று நகைப்பதுபோலக் காதலை வெளியிடுகிறது இந்த அரிய பாடல்.

154. காதலி செய்கிற கிண்டல் விளையாட்டைப்போல, ஞானசித்தர் இறைவனை வஞ்சப்புகழ்ச்சி செய்கிறார். அற்புதமான பாடல். அன்பின் தொழுது செல்வது அயன் முதலிய பெரியார் குழு! அவனைத் தொடர்வன வேதங்கள்! என்றாலும் அவர் வசிப்பது பேய்கள் வதிகிற சுடுகாடு. போர்த்துவதும் உண்ணுவதும், யானைத்தோலும் பிச்சையுமே. அவருடைய உடை என்ன? தழலை உமிழ்கிற பாம்புதான் கோவண ஆடை. பளிங்காகிய படிகமணிதான் ஜபமாலை. சாட்டியக் குடியார் எரிக்கிற தீதான் அவருடைய தீப விளக்கு! கவந்திகை - உணவு. கழுது – பேய். கரிகாடு – சுடுகாடு. போர்வையானது கரிஉரி, கவந்திகையானது திரிந்தூண், அதாவது தெருப்பிச்சை.

பதிகம்நான் மறை;தும் புருவும்நா ரதரும்
பரிவொடு பாடுகாந் தார்ப்பர்;
கதியெலாம் அரங்கம்; பிணையல்மூ வுலகில்
கடியிருள் திருநடம் புரியும்
சதியிலார் கதியில் ஒலிசெயும் கையில்
தமருகம்; சாட்டியக் குடியார்
இதயமாம் கமலம்; கமலவர்த் தனைஏழ்
இருக்கையில் இருந்தஈ சனுக்கே. 155

திருமகன் முருகன்; தேவியேல் உமையாள்;
திருமகள் மருமகன் தாயாம்
மருமகன் மதனன்; மாமனேல் இமவான்;
மலையுடை யரையர்தம் பாவை
தருமலி வளனாம்; சிவபுரன்; தோழன்
தனபதி; சாட்டியக் குடியார்
இருமுகம்; கழல்மூன் றேழுகைத் தலம்ஏழ்
இருக்கையில் இருந்தஈ சனுக்கே. 156

155. காந்தர்ப்பர் – கந்தருவர். ஆர்கலியில் – கடலைப் போலே. கதியில் என்பதைக் கலியில் என்றே அறிஞர்கள் பாடம் கொண்டுள்ளார்கள்.

156. மருமகன் தாய் என்றது தங்கை என்ற உறவை. உமையைத் திருமாலின் தங்கை என்று சொல்வதுபோல, திருமகளைச் சிவ பெருமானின் தங்கை என்பதும் ஒரு வழக்கு என்பர் பழைய உரைகாரர்.

தருமலி என்பது தருமனை என்றிருக்க வேண்டும் என்பர் அருணைவடிவேலனார். 'முகம் இரண்டு; பாதம் மூன்று; கைத்தலம் ஏழு' என்ற கணக்கு வருமாறு: உமையொரு பாகனின் முகம் ஆணும் பெண்ணும் இரண்டுமாக இருப்பதால் இரண்டு; இறைவனின் இடது பாதமும் இறைவியின் வலதுபாதமும் ஒன்றாய்விடுவதால் பாதம் மூன்று; இறைவனின் இடக்கை இரண்டில் ஒன்றும், அம்மையின் வலக்கை இரண்டில் ஒன்றும் ஒன்றாகி விடுவதால் கைத்தலங்கள் ஏழு!

அனலமே! புனலே! அனிலமே! புவனி
அம்பரா! அம்பரத் தளிக்கும்
கனகமே! வெள்ளிக் குன்றமே! என்றன்
களைகணே! களைகண்மற் றில்லாத்
தனியனேன் உள்ளம் கோயில்கொண் டருளும்
சைவனே! சாட்டியக் குடியார்க்
கினியதீங் கனியாய் ஒழிவற நிறைந்தேழ்
இருக்கையில் இருந்தவா றியம்பே. 157

செம்பொனே! பவளக் குன்றமே! நின்ற
திசைமுகன் மால்முதற் கூட்டத்
தன்பரா னவர்கள் பருகும்ஆ ரமுதே!
அத்தனே! பித்தனே னுடைய
சம்புவே! அணுவே! தாணுவே! சிவனே!
சங்கரா! சாட்டியக் குடியார்க்
கின்பனே! எங்கும் ஒழிவற நிறைந்தேழ்
இருக்கையில் இருந்தவா றியம்பே! 158

---

157. அனிலம் - காற்று. அம்பரா — வானமாய் உள்ளவனே. களை கண் — துணை.

அம்பரத்து அளிக்கும் கனகம் என்றது நல்வினையாளர் துய்க்கும் வானின்பத்தை என்க.

158. சம்பு - இன்பத்தின் முதலாக இருப்பவன். இன்பத்தின் தோற்றம் அவனே.

தாணு — அசைவில்லாமல் நிலைபேறுடையவன். சங்கரன் — நல்லதே செய்பவன்.

செங்கணா போற்றி! திசைமுகா போற்றி!
சிவபுர நகருள்வீற் றிருந்த
அங்கணா போற்றி! அமரனே போற்றி!
அமரர்கள் தலைவனே போற்றி!
தங்கணான் மறைநூல் சகலமுங் கற்றோர்
சாட்டியக் குடியிருந் தருளும்
எங்கணா யகனே போற்றி!ஏ ழிருக்கை
யிறைவனே போற்றியே போற்றி! 159

சித்தனே, அருளாய்; செங்கணா, அருளாய்;
சிவபுர நகருள்வீற் றிருந்த
அத்தனே, அருளாய்; அமரனே அருளாய்;
அமரர்கள் அதிபனே, அருளாய்;
தத்துநீர்ப் படுகர்த் தண்டலைச் சூழல்
சாட்டியக் குடியுள்ஏ ழிருக்கை
முத்தனே அருளாய்; முதல்வனே அருளாய்;
முன்னவா துயர்கெடுத் தெனக்கே. 160

---

159. சிவபெருமான் ஒருவனே மும்மூர்த்திகளாகவும் தோன்றுகிறான். அவனே அமரன். அவனே அமரர்கள் தலைவன். அவன்தான் சாட்டியக்குடியிலே இருந்து அருள்புரிகிறவன். செங்கணா – திருமாலே. திசைமுகா – பிரம்மதேவனே. அமரனே – தேவனே. அமரர்கள் தலைவனே – இந்திரனே!

எல்லாம் அவனே, அவனே எல்லாம் என்ற மனநிலையை அடுக்குமொழிகளிலே ஒவ்வொரு கோலமாகச் சொல்லி விளக்கி வணக்கம் செலுத்துகிறார், 'போற்றி போற்றி' என்று!

160. சித்தனே என்றே எம்பெருமானை விளிக்கிறார் இந்தச் சித்தர் பெருமான். ஆம்; அவன் எல்லாம் வல்ல சித்தன். சித்தர்களுக்கெல்லாம் சித்தன் அல்லவா! செங்கணன் – நெருப்புக்கண் உடையவன். அமரன் – தெய்வ வடிவினன். படுகர் – குளம். தண்டலை – சோலை. அருளாய், அருளாய் என்று மீண்டும் மீண்டும் வருவது முறையீட்டுக் கவியின் பாங்காகும்.

தாட்டரும் பழனப் பைம்பொழிற் படுகர்த்
தண்டலைச் சாட்டியக் குடியார்
ஈட்டிய பொருளாய் இருக்கும்ஏ ழிருக்கை
இருந்தவன் திருவடி மலர்மேற்
காட்டிய பொருட்கலை பயில்கரு வூரன்
கழறுசொன் மாலைஈ ரைந்தும்
மாட்டிய சிந்தை மைந்தருக் கன்றே
வளரொளி விளங்குவா னுலகே. 161

## 9. தஞ்சை இராசராசேச்சரம்

பண்—பஞ்சமம்

உலகெலாம் தொழவந் தெழுகதிர்ப் பரிதி
நன்றுநூ றாயிர கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம் பச்சோ!
அங்ஙனே யழகிதோ! அரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர்வெண் டிங்கள்
இலகுலாம் பதணத் திஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 162

---

161. பழனமும், குளமும், சோலையும் நிரம்பிய சாட்டியக்குடி என்ற வர்ணனை விரியும். பொருள் – மெய்ப்பொருள். மாட்டிய சிந்தை – ஈடுபட்டுப் பிணைந்த உள்ளம். இந்த ஈடுபாடே ஒளி மிகுந்த விண்ணைத் தரவல்லது என்பது தேற்றம்.

162. பரிதி – சூரியன். நூறாயிரம் சூரியர்களின் ஒளி ஒன்றுகூடி இலங்குகிற ஒரு சூரியன் உண்டானால், அந்த வெளிச்சம் எப்படி யிருக்கும்! அத்தகைய ஒளியை உடைய திருவுடம்பை உடையவன் எம்பெருமான்! அரணம் – கோட்டை; இஞ்சி – மதில்; பதணம் – மதில் மேடை.

நெற்றியிற் கண்ணென் கண்ணினின் றகலா;
நெஞ்சினில் அஞ்சிலம் பலைக்கும்
பொற்றிரு வடிஎன் குடிமுழு தாளப்
புகுந்தன; போந்தன வில்லை;
மற்றெனக் குறவென்! மறிதிரை வடவாற்
றிடுபுனல் மதகில்வாழ் முதலை
எற்றுநீர்க் கிடங்கின் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 163

சடைகெழு மகுடம் தண்ணிலா விரிய
வெண்ணிலா விரிதரு தரளக்
குடைநிழல் விடைமேற் கொண்டுலாப் போதும்
குறிப்பெனோ? கோங்கிண ரனைய
குடைகெழு நிருபர் முடியொடு முடிதேய்ந்
துக்கசெஞ் சுடர்ப்படு குவையோங்
கிடைகெழு மாடத் திஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 164

---

163. 'நெஞ்சினில் சிலம்பலைக்கும் திருவடி நீங்காது நிலைபெறப் புகுந்தன' என்பதே சித்தர்களின் இறையனுபவமாகும். அந்தச் சிலம்பொலி இரவும் பகலும் கேட்டுக் கொண்டேயிருக்கும் அவர்களுக்கு! போந்தன இல்லை – அந்தத் திருவடிகள் நெஞ்சைவிட்டு அகல்வன அல்ல! வடவாறு - தஞ்சையின் வடக்குப்புறத்தே ஓடுகிற நதி. இருபுனல் மதகு – அந்த ஆற்றில் கட்டப்பட்ட வாய்க்கால் மதகு. கிடங்கு – அகழி.

164. மகுடத்திலிருந்து நிலவு விரிகிறது. அதே சமயம் வெண்ணிலா விரிகின்ற தரளம் அதாவது முத்துப்பதித்த வெண்கொற்றக்குடை! குறிப்பு என்னோ என்றால், பெண்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளவே என்ற கருத்து! கோங்கு – கோங்கமலர். இணர் – பூங்கொத்து. கோங்கம்பூக் கொத்துப் போன்ற குடை என்றவாறு.

முடிகள் ஒன்றோடொன்று (அத்தனை. சிற்றரசர் கூட்டம்). தோய்வதால் உதிர்கின்ற செஞ்சுடர்க் குவியல்கள் (குவை) நிரம்பி யுள்ளன.

வாழிஅம் போதத் தருகுபாய் விடயம்
வரிசையின் விளங்கலின் அடுத்த
சூழலம் பளிங்கின் பாசல ராதிச்
சுடர்விடு மண்டலம் பொலியக்
காழகில் கமழு மாளிகை மகளிர்
கங்குல்வாய் அங்குலி கெழுமி
யாழொலி சிலம்பும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 165

எவருமா மறைகள் எவையும்வா னவர்கள்
ஈட்டமும் தாட்டிருக் கமலத்
தவருமா லவனும் அறிவரும் பெருமை
அடல்அழல் உமிழ்தழல் பிழம்பர்
உபரிமா கடலின் ஒலிசெய்மா மறுகில்
உறுகளிற் றரசின் ஈட்டம்
இவருமால் வரைசெய் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 166

---

165. காழ் - வயிரம். அங்குலி கெழும - விரல்கள் பொருந்த. கருத்து என்னவென்றால், வடவாற்றின் வெண்மையான அலைகளில் சோலைப் பூக்களும் தழைகளும் மண்டுவதால் தஞ்சையைச் சுற்றிலும் பச்சிலையும் பூவும் தீட்டிய ஓவியச்சுவர் எழுந்து நிற்பது போலக் காட்சி தரும். தஞ்சை நகரத்து மாதரார் இரவும் பகலும் யாழை மீட்டி இராச ராசேச்சரமுடையாரைப் பாடுவர்.

166. தாள் திருக்கமலத்தவர் - தண்டினை உடைய தாமரை மலர்மேல் இருக்கும் பிரம்மதேவர். தழல் - நெருப்பு. பிழம்பர் - வடிவினர். சோதி வடிவாகி நின்றவர் என்க.

அருளுமா றருளி ஆளுமா றாள
அடிகள்தம் அழகிய விழியும்
குருளும்வார் காதும் காட்டியான் பெற்ற
குயிலினை மயல்செய்வ தழகோ!
தரளவான் குன்றில் தண்ணிலா ஒளியும்
தருகுவால் பெருகுவான் தெருவில்
இருளெலாங் கிழியும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 167

தனிப்பெருந் தாமே முழுதுறப் பிறப்பின்
தளிர்இறப் பிலையுதிர் வென்றால்
நினைப்பருந் தம்பாற் சேறலின் றேனும்
நெஞ்சிடிந் துருகுவ தென்னோ!
கனைப்பெருங் கலங்கற் பொய்கையங் கழுநீர்ச்
சூழல்மா ளிகைசுடர் வீசும்
எனைப்பெரு மணஞ்செய் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 168

---

167. குருள் – சடைமுடி. அடிகள் – தலைவர். இந்தப் பாடல் செவிலி கூற்றாக அமைந்துள்ளது. கண்ணையும் காதையும் காட்டிக் கருணை காட்டாமல் மயக்கி வாட்டுவது, என் மகளை இப்படிப் படுத்துவது, இவர்க்கு அழகோ என்கிறாள் தாய்! குவால் – மாடங்களின் கோலம். தரளவான் குன்றில் – முத்தினால் ஆன ஒரு மலையைப் போலே! இருளெலாம் கிழிகின்ற இந்தச் சீமையில், இதை உடையவர் இவ்வாறு துன்பம் தருவது அழகோ! யான் பெற்ற குயிலினை மயல் செய்வது அழகில்லை என்றவாறு.

168. பொய்கைகளில் உள்ள மலர்கள், கழுநீர்ப்பூக்கள், சுற்றிலுமுள்ள மாளிகைகளில் தம் மணத்தை உண்டாக்குகிற தஞ்சை என்பது பின்னிரண்டு அடிகளில் அமைந்துள்ள பொருள் என்பர் அருணையார்.

பன்னெடுங் காலம் பணிசெய்து பழையோர்
தாம்பலர் ஏம்பலித் திருக்க
என்னொடுங் கோயில் நெஞ்சுவீற் றிருந்த
எளிமையை யென்றுநான் மறக்கேன்
மின்னெடும் புருவத் திளமயி லனையார்
விலங்கல்செய் நாடக சாலை
இன்னடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 169

மங்குல்சூழ் போதின் ஒழிவற நிறைந்து
வஞ்சகர் நெஞ்சகத் தொளிப்பர்;
அங்கழற் சுடராம் அவர்க்கிள வேனல்
அலர்கதி ரனையர்; வாழியரோ!
பொங்கெழில் திருநீ றழிபொசி வனப்பிற்
புனல்துளும் பவிர்சடை மொழுப்பர்
எங்களுக் கினியர் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 170

---

169. தஞ்சையில் அந்தக் காலத்தில் நாடக சாலைகள் பல இருந்தன என்று நாம் தற்பெருமையில் பேசுவதாகச் சிலர். நம்மவர்களிலே சிலர், குறைகூறுகிறார்கள். இது மடமை என்பதற்கு இந்தப் பாடலில் வருகிற அகச்சான்றே சாலும். ஏற்கனவே மாதர்களின் பாடலையும், இசைமாதர்களையும் பற்றிய சொற்றொடர்கள் கருவூரார் பதிகத்தில் பார்த்துள்ளோம். இராஜராஜனுடைய ஆட்சியோடு இந்தச் சித்தர் பெருமானின் தொடர்பு குறித்த செய்திகள் கற்பனை யில்லை, வரலாறு! அதோடு இராஜராஜன் தான் நிறுவிய பெரிய கோயிலிலே இசைக்கும் கூத்திற்கும் செய்த ஏற்பாடுகளும் விடுத்த நிவந்தங்களும் பற்றிய கல்வெட்டுக்கள் இன்றும் சான்று பகர்கின்றன!

170. மங்குல் சூழ்போதின் – மேகம் சூழ்ந்த சூரியனைப் போலே. அங்கு – நெஞ்சிலே. அழல்சுடராம் அவர்க்கு – எரியும் சுடர் போன்ற அன்பு கனலும் உள்ளத்தவர்க்கு. வேனல் அலர்கதிர் அனையர் – வேனிற் காலத்து ஞாயிறு போலப் பேரொளி சுடர்கிறவர்.

தனியர்எத் தனைஓ ராயிர வருமாந்
தன்மையர் என்வயத் தினராங்
கனியர்அத் தருதீங் கரும்பர்வெண் புரிநூற்
கட்டியர் அட்டஆ ரமிர்தர்;
புனிதர்பொற் கழலர்; புரிசடா மகுடர்;
புண்ணியர்; பொய்யிலா மெய்யர்க்
கினியரெத் தனையும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 171

சரளமந் தார சண்பக வகுள
சந்தன நந்தன வனத்தின்
இருள்விரி மொழுப்பின் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவரை
அருமருந் தருந்தி அல்லல்தீர் கருவூர்
அறைந்தசொன் மாலைஈ ரைந்தின்
பொருள் மருந்துடையார் சிவபத மென்னும்
பொன்னெடுங் குன்றுடை யோரே. 172

---

171. 'தனியர் .. தன்மையர்' என்பது 'ஏகன் அனேகன் இறைவன்' என்னும் சிவ புராண அடியை நினைவூட்டுகிறது. கரும்பர் – கரும்பைப் போன்று இனியர். 'அட்ட ஆரமிர்தர்' என்பது நன்கு காய்ச்சிய, அதனால் நன்கு சுவையேறிய திரட்டுப் பாலைப் போன்றவர். தவள்புரி நூற்கட்டியர் என்பதில் கட்டியர் என்றால் அணிந்துகொண்டவர் என்று பொருள். 'என் உலகத்தினராம் கனியர்' என்று தொடங்கி, 'மெய்யர்க்கு எத்தனையும் இனியர்' என்றார்.

172. சரளம் – தேவதாரு. வகுளம் – மகிழம் பூ. நந்தவனத்தில் இருள்விரி மொழுப்பு – நந்தவனத்தின் நிழல் விழுகிற முடி, உச்சி. அத்தகைய உச்சியை உடைய இஞ்சி (மதில்) சூழ்ந்த தஞ்சை என்றார்.

அருமருந்து – காயகற்பம். இந்தப் பாடலை அருளிய கருவூர்த் தேவர் என்னும் சித்தர் பெருமான் காயகற்பம் உண்டு நெடுநாள் உடம்போடு வாழ்ந்தார் என்றும், பிறகு இவர் தமது இச்சைப்படியே இறைவனோடு ஒன்று கலந்தார் என்றும் வரலாறு கூறுகிறது. அதனையே இந்தத் திருப்பாடலில் கருவூராரே கூறுகிறார் "அருமருந்து அருந்தி அல்லல் தீர் கருவூர்" என்று!

சொன்மாலை ஈரைந்தின் பொருள்மருந்து – இந்த மொழி மாலையின் பொருளாகிய அமிர்தத்தை. உடையோர் – உட்கொண்டவர்கள். சிவபதம் என்பது பொன்னெடும் குன்றமாகும். அதுவே மேருமலை, அதுவே கயிலாயம். அதுவே சகஸ்ர தளம் என்ற சித்தர் ஞானமலை உச்சியாகும்!

## 10. திருவிடைமருதூர்

பண்—பஞ்சமம்

*வெய்யசெஞ் சோதி மண்டலம் பொலிய*
*வீங்கிருள் நடுநல்யா மத்தோர்*
*பையசெம் பாந்தள் பருமணி யுமிழ்ந்து*
*பாவியேன் காதல்செய் காதில்*
*ஐயசெம் பொன்தோட் டவிர்சடை மொழுப்பின்*
*அழிவழ கியதிரு நீற்று*
*மையசெய் கண்டத் தண்டவா ணவர்கோன்*
*மருவிடந் திருவிடை மருதே.* 173

*இந்திர லோக முழுவதும் பணிகேட்*
*டிணையடி தொழுதெழத் தாம்போய்*
*ஐந்தலை நாக மேகலை யரையா*
*அகந்தொறும் பலிதிரி யடிகள்*
*தந்திரி வீணை கீதமுன் பாடச்*
*சாதிகின் னரங்கலந் தொலிப்ப*
*மந்திர கீதம் தீங்குழல் எங்கும்*
*மருவிடந் திருவிடை மருதே.* 174

---

173. சிவபெருமானது செவியில் தோடு இருப்பது போலவே, பாம்பும் குழைபோல விளங்குகிறது, அம்மையப்பனாகிய கோலத்திலே! ஞாயிறு உதிக்கும் மண்டலம் போன்று ஒளிமிகுந்து காட்சி தருகிறான் எம்பெருமான். எனினும் அந்த ஒளிமண்டலத்தின் மருங்கிலேயே இருளும் அகலாதிருப்பது போல, கருமையான கழுத்தும் தோன்றுகிறது. நீலகண்ட மூர்த்தியல்லவா அவன்?

174. எம்பெருமானை இந்திரலோகம் முழுதும் வணங்கி அவனுக்கு ஏவல் செய்கிறது. ஆனால் அவனோ ஐந்தலை நாகத்தை அரையிலே சுற்றிக்கொண்டு வீடுதோறும் சென்று பிச்சை எடுக்கிறான்! அடிகள் என்றது இந்த நகைப்புடனேயே வருகிற சொல்! இசை முழக்குகிற திருவிடைமருதூரில் கோயில்கொண்ட பெருமான் இவ்வாறு உள்ளான்!

பனிபடு மதியம் பயில்கொழுந் தன்ன
பல்லவம் வல்லியென் றிங்ஙன்
வினைபடு கனகம் போலயா வையுமாய்
வீங்குல கொழிவற நிறைந்து
துனிபடு கலவி மலைமக ளுடனாய்த்
தூங்கிருள் நடுநல்யா மத்தென்
மனனிடை யணுகி நுணுகியுள் கலந்தோன்
மருவிடந் திருவிடை மருதே. 175

அணியுமிழ் சோதி மணியினுள் கலந்தாங்
கடியனே னுள்கலந் தடியேன்
பணிமகிழ்ந் தருளும் அரிவைபா கத்தன்
படர்சடை விடமிடற் றடிகள்
துணியுமி ழாடை அரையில்ஓர் ஆடை
சுடர்உமிழ் தரஅத னருகே
மணியுமிழ் நாக மணியுமிழ்ந் திமைப்ப
மருவிடந் திருவிடை மருதே. 176

---

175. பனிபடுமதி – குளிர்ந்த சந்திரன். கொழுந்து – தளிர்; ஒரே தங்கம் பல பணிகளாய் நிற்பது போல எல்லாப் பொருள்களுமாய் நிற்கிற ஒருவன் என்றபடி. நடுநல் யாமத்து என் மனனிடை அணுகி – தலைவியின் கூற்றுப்போல் வருகிறது. யாருக்கும் தெரியாமல், யானும் உணராதவாறு என்னுள்ளே வந்து புகுந்தான் என்றவாறு.

176. அணிஉமிழ் சோதி – அழகை உமிழ்கிற ஒளி. மணியினுள் கலந்தாங்கு – அந்த ஒளி எப்படி இரத்தின மணியினுள் கலந்து நிற்கிறதோ அப்படியே! என்னுள் கலந்து – என் உள்ளத்துக்குள்ளே கலந்துவிட்டான்! உமிழ் என்ற சொல் மீட்டும் மீட்டும் வந்து பாடலுக்கே அழகுதந்து, ஒலி எழிலை உமிழ்கிறது!

பந்தமும் பிரிவும் தெரிபொருட் பனுவற்
படிவழி சென்றுசென் றேறிச்
சிந்தையுந் தானுங் கலந்ததோர் கருவி
தெரியினுந் தெரிவறா வண்ணம்
எந்தையுந் தாயும் யானுமென் றிங்ஙன்
எண்ணில்பல் லூழிக ளுடனாய்
வந்தணு காது நுணுகியுள் கலந்தோன்
மருவிடந் திருவிடை மருதே. 177

எரிதரும் கரிகாட் டிடுபிண நிணமுண்
டேப்பமிட் டிலங்கெயிற் றழல்வாய்த்
துருகழல் நெடும்பேய்க் கணமெழுந் தாடுந்
தூங்கிருள் நடுநல் யாமத்தே
அருள்புரி முறுவல் முகிழ்நிலா எறிப்ப
அந்திபோன் றொளிர்திரு மேனி
வரியர வாட ஆடும்எம் பெருமான்
மருவிடந் திருவிடை மருதே. 178

---

177. எத்தனை சாத்திரங்கள் படித்தாலும், எத்தனை அறிவுச் செறிவு பெற்றாலும், இறைவன் பிறவிதோறும் தொடர்கிற பான்மையும், அவன் நம்முள் உறைகிற தன்மையும் புலப்படுவதில்லை. அது அநுபவ ஞானத்தின் பாற்பட்டது. தெரியினும் தெரிவுறா வண்ணம் – ஆராய்ந்தாலும் விளங்காதபடி (உடனாய் உள்கலந்தோன்) என்றவாறு. வந்து அணுகாது கலந்தோன் – வேறாய் நின்று, பின்னர்வந்து கலப்பது என்றின்றி பண்டே ஒன்றாயிருந்து, பின்னர் விளங்கும்படி தோன்றினான் என்றபடி.

178. எரிதரு – நெருப்பு எரிகின்ற. கரிகாடு – சுடுகாடு. துருகழல் – பிணத்தைத் தேடி ஓடுகின்ற கால். அருள்புரி முறுவல் முகில்நிலா எறிப்ப – அருள் தருகின்ற புன்னகையாகிய இளநிலவு தோன்ற. நிலாவைச் சொன்னதால் அதற்கு இயைய மேனியை அந்தி போன்று ஒளிர்கின்ற செக்கர் என்றார்.

எழிலையாழ் செய்கைப் பசுங்கலன் விசும்பின்
இன்துளி படநனைந் துருகி
அழலையாழ் புருவம் புனலொடுங் கிடந்தாங்
காதனேன் மாதரார் கலவித்
தொழிலை ஆழ்நெஞ்சம் இடர்படா வண்ணம்
தூங்கிருள் நடுநல்யா மத்தோர்
மழலையாழ் சிலம்ப வந்தகம் புகுந்தோன்
மருவிடந் திருவிடை மருதே. 179

வையவாம் பெற்றம் பெற்றம்ஏ றுடையார்
மாதவர் காதல்வைத் தென்னை
வெய்யவாஞ் செந்தீப் பட்டஇட் டிகைபோல்
விழுமியோன் முன்புபின் பென்கோ
நொய்யவா றென்ன வந்துள்வீற் றிருந்த
நூறுநூ றாயிர கோடி
மையவாங் கண்டத் தண்டவா ணவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. 180

---

179. இந்தப் பாடலை ஆழ்ந்து நுணுகிப் பார்த்தாலன்றி இதன் உட்பொருள் மயக்கமே தரும். அதற்கு உறுதுணையாக இங்கே நினைவுகூர வேண்டிய ஒரு பாடல் சிவஞான சித்தியாரில் உளது. அதை ஒப்புநோக்க வேண்டும்.

"நாடுகளிற் புக்குழன்றும் காடுகளிற் சரித்தும்
நாகமுழை புக்கிருந்தும் தாகமுதல் தவிர்ந்தும்
நீடுபல காலங்கள் நித்தராய் இருந்தும்
நின்மலஞா னத்தையில்லார் நிகழ்ந்திடுவர் பிறப்பில்;
ஏடுதரு மலர்க்குழலார் முலைத்தலைக்கே இடைக்கே
எறிவிழியின் படுகடைக்கே கிந்தும் இறை ஞானம்
கூடுமவர் கூடரிய வீடும் கடிக்
குஞ்சித்த சேவடியும் கும்பிட்டே இருப்பர்."

180. வைஅவாம் பெற்றம் பெற்று - வைக்கோலை உண்கிற எருதினை ஊர்தியாகக் கொண்டு. இட்டிகை - செங்கல். இச்செங்கல் களிமண்ணால் ஆக்கப்பட்டது. நீரில் கரைவது. இதுவே தீயில் வெந்தபின் நீரில் கரையாத திண்மை பெற்றது. பாசத்தால் கட்டுண்ட நான் திண்மைஞானம் பெற்றது இவ்வாறே.

கலங்கலம் பொய்கைப் புனல்தெளி விடத்துக்
கலந்தமண் ணிடைக்கிடந் தாங்கு
நலங்கலந் தடியேன் சிந்தையுட் புகுந்த
நம்பனே! வம்பனே னுடைய
புலங்கலந் தவனே! என்றுநின் றுருகிப்
புலம்புவார் அவம்புகார் அருவி
மலங்கலங் கண்ணிற் கண்மணி யனையார்
மருவிடந் திருவிடை மருதே. 181

ஒருங்கிரு கண்ணின் எண்ணில்புன் மாக்கள்
உறங்கிருள் நடுநல்யா மத்தோர்
கருங்கண்நின் றிமைக்குஞ் செழுஞ்சுடர் விளக்கங்
கலந்தெனக் கலந்துணர் கருவூர்
தருங்கரும் பனைய தீந்தமிழ் மாலை
தடம்பொழில் மருதயாழ் உதிப்ப
வருங்கருங் கண்டத் தண்டவா னவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. 182

---

181. 'சேற்றால் கலங்கல் பெற்ற நீர், தேற்றாங் கொட்டை சேர்ந்ததனால் தெளிவுபெற்ற பின்னர் அச்சேற்றோடேயிருப்பினும் கலங்கல் இன்றித் தெளிந்தே நிற்றல் போல – என்பது முதல் அடியின் பொருள் என்பார் அருணைவடிவேலனார்.

182. இறைவன் நடுநல் யாமத்தில் வந்து ஆட்கொண்டதாகக் கருவூரார் பல இடங்களில் மொழிவதன் நுட்பத்தைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். உறங்கும் அளவில் மனோன்மணி வருவது பற்றித் திருமூலரும் பாடுகிறார். நள்ளிருளில் நட்டம் பயிலும் மூர்த்தி நடுஇரவில் வந்து ஆட்கொள்கிறான் என்பது சித்தர்களின் யோக இரகசியமாகும். நடுராத்திரி என்று அழைக்கப் பெறுகிற மையத்திலேதான் யோகிகளும் ஞானிகளும் இறைவனைக் கூடுகிறார்கள் என்பது சித்தர் வாக்கு. கருவூரார் உணர்த்துவதும் இதுவே!

இந்த ஆய்வுப் பகுதியிலே ஒன்பதாந் திருமுறையிலிருந்து சேர்க்கப் பெற்ற பாடல்கள் இந்த அளவில் நிறைவுறுகின்றன. அதனால் மற்றப் பாடல்கள் இவற்றின் தரத்தோடு இணை நிற்பன அல்ல என்பதன்று கருத்து. சித்தர் இலக்கியம் என்ற வகையிலே ஒன்பதாந் திருமுறையிலிருந்து மூன்று சித்தர்களின் பாடல்களை இங்கே ஆராய்ந்தோம். இந்த மூவரும் ஞான சித்தர்கள் என்பது வரலாற்றுத் தெளிவுடைய உண்மையாகும்.

இதையொட்டி இங்கே இந்தப் பாடல்களின் பண்ணமைதி பற்றி ஒரு கருத்தை வற்புறுத்த விரும்புகிறேன்.

தேவாரத் திருமுறைகளிலாகட்டும் அல்லது மற்றத் திருப்பாடல் களிலாகட்டும், பதிகங்களின் பண்களிலே மந்திர ஆற்றல் உள்ள பண்கள் என்று சில குறிப்பிட்ட பண்கள் ஆளப்படுகின்றன. சான்றாக, வியாழக் குறிஞ்சி, அந்தாளிக் குறிஞ்சி, பஞ்சமம் முதலிய பண்கள் இத்தகைய தெய்வ ஆற்றலைத் தமது ஏறோசை இறங்கோசை அமைப்பிலே தாங்கி நிற்கின்றன.

இந்தப் பண்களிலே ஒன்பதாந் திருமுறையில் பஞ்சமம் என்ற பண் இருபத்தொரு பதிகங்களுக்குரிய பண்ணாகத் திகழ்கிறது! அதாவது சித்தர்களுடைய பாடல்கள் இசைப்பாக்களாக அமையும் போது பெரும்பாலான பதிகங்கள் மந்திர ஆற்றல் நிரம்பிய பண்களிலேயே அமைந்துள்ளன என்பதை இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன். ஒன்பதாந் திருமுறையில் நாம் பார்த்த பதிகங்களின் சொற்கள் மந்திரச் சொற்கள். அவற்றின் பண்ணும் மந்திரப் பண்ணே என்பது மிகமிக நுட்பமான ஒரு பேருண்மையாகும்.

இனி, சைவத் திருமுறைகளிலே பத்தாந் திருமுறை முழுமையும் திருமூலர். அது சித்தர் இலக்கியம் என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை.

பதினோராந் திருமுறையில் பட்டினத்தடிகள், காரைக்கால் அம்மையார் இருவருடைய பனுவல்களையும் சித்தரிலக்கியக் கண்கொண்டு பார்ப்போம்.

# பதினோராம் திருமுறை

## (அ) காரைக்காலம்மையார்

இந்தப் பகுதி பதினோராம் திருமுறையிலுள்ள இருபெரும் சித்தர் இலக்கியங்களை ஆய்வு செய்கிறது.

இந்தத் திருமுறையின் வைப்பு வரிசையிலே காரைக்காலம்மையாரின் பாடல்கள் முன்னதாக வைக்கப்பெற்றுள்ளன. இந்த வரிசையை ஒட்டி நாமும் அம்மையாரின் பாடல்களையே முதலில் ஆய்வோமாக.

காரைக்காலம்மையாரின் வாழ்வே ஒரு ஞானியின் வாழ்வாகும். இந்த வரலாறு பெரிய புராணத்தில் விரிவாகக் கூறப்படுகிறது. இல்லறத்தில் இவர் இருக்கும்பொழுது ஒரு புலவராகவோ செய்யுளாக்கும் திறமை உடையவராகவோ தோன்றவில்லை. அடியார்களுக்குத் தொண்டு செய்கின்ற ஒரு நல்லொழுக்கச் சீலராகவே இவரை நாம் காண்கிறோம். ஆனால் அவருடைய இல்லறத்தில் நடந்த தெய்வீகமான நிகழ்ச்சிகளும், கணவனுடைய துறவும் அவருடைய உள்ஞானத்தை முன்னறிவிப்பாக உணர்த்துகின்றன. பின்னர் அவர் தம்முடைய ஊன் உடம்பை உதறி எற்பு உடம்பைப்பெற்று வெளிவருகின்ற விநாடியிலிருந்து சித்தர்களுக்குள்ள இலக்கணத்தோடும், ஞான அநுபவங்களோடும், அருட்கவிஞராகப் பரிணமிக்கிறார்.

காரைக்காலம்மை தம்மை அடிக்கடி 'பேய்' என்றே அழைத்துக் கொள்கின்றார். அவருடைய பாடல்களும் இந்தத் தத்துவத்தின் வெளியீடுகளாகத் திகழ்கின்றன. சித்தர் இலக்கியத்தின் கண்கொண்டு இதைப் பார்த்தால் ஒரு நுட்பம் புலனாகும். அதாவது பூத உடல் அல்லது ஊன் உடல் என்பது பிரகிருதி மாயையாகிய பெருவுடலாகும். பேய் என்றது நுண் உடலாகிய ஞான உடம்பாகும்.

இந்தச் சித்தர் ஞானச் செம்பொருளை மனத்திற்கொண்டு காரைக்காற்பேய், அம்மை, அருளிய பாடல்களையும் நாம் நோக்கவேண்டும்.

காரைக்காலம்மையார்

அருளிச் செய்த

## திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்

பண் – நட்டபாடை

கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள்நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலொர் பெண்பேய்
தங்கி யலறி யுலறு காட்டில்
தாழ்சடை யெட்டுத் திசையும் வீசி
அங்கங் குளிர்ந்தன லாடு மெங்கள்
அப்ப னிடந்திரு ஆலங் காடே. 1

1. காரைக்கால் அம்மையாருடைய பாடல்கள் பதி[illegible]ராம் திருமுறையில் மூன்று பனுவல்களாக அருளிச் செய்யப்பெ[illegible]ான. இவை மூத்த திருப்பதிகம், இரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி ஆகிய மூன்றுமாம்.

காரைக்கால் அம்மையார் தமது இல்லற வாழ்வைத் துறந்து, பேய்க்கோலம் பூண்ட பின்பு அருளிய பாடல்கள் இவை. அம்மையார் ஊன் உடம்பை உதறிவிட்டு எலும்புடலைத் தாங்கி, அவ்வுடல் கொண்டு, தலைகீழாய் நடந்து, கயிலை சென்றார் என்றும், அவரை எம்பெருமான் அம்மையே என்று அழைத்து அருள்செய்தார் என்றும், பின்னர் அவரைத் திருவாலங்காடு சென்று தமது ஊர்த்துவ தாண்டவத்தைக் கண்டவாறு, திருவடிக் கீழிருந்து என்றும் மாறா இன்பம் நுகரும் வண்ணம் பணித்தார் என்றும் பெரிய புராணம் கூறுகின்றது.

தமிழகத்தின் சித்தர் பரம்பரையிலே காரைக்கால் அம்மையார் ஒரு ஞானக்கவிஞர் என்றும், சித்தர் மரபிலே தோய்ந்த ஆன்மப் பேராற்றல் பெற்றவர் என்றும் தமிழுலகம் நன்கறியும் அவருடைய பாடல்கள் இந்த உண்மைக்கு அரிய சான்றுகளாகத் திகழ்கின்றன.

திரங்கி – சுருக்கமுற்று; குண்டு – குழிவீழ்ந்த. பங்கி – தலைமயிர். பரடு – காலின் கணு. கணைக்கால் – முழங்காலின் கீழ்ப்பகுதி. உலறு – சீற்றத்தோடு ஒலி எழுப்புகிற.

கள்ளிக் கவட்டிடைக் காலைநீட்டிக்
கடைக்கொள்ளி வாங்கி மசித்துமையை
விள்ள எழுதி வெடுவெடென்ன
நக்கு வெருண்டு விலங்குபார்த்துத்
துள்ளிச் சுடலைச் சுடுபிணத்தீச்
சுட்டிட முற்றுஞ் சுளிந்துபூழ்தி
அள்ளி அவிக்கநின் றாடுமெங்கள்
அப்ப னிடந்திரு ஆலங்காடே. 2

வாகை விரிந்துவெண் நெற்றொலிப்ப
மயங்கிருள் கூர்நடு நாளையாங்கே
கூகையொ டாண்டலை பாடஆந்தை
கோடதன் மேற்குதித் தோடவீசி
ஈகை படர்தொடர் கள்ளிநீழல்
ஈமம் இடுசுடு காட்டகத்தே
ஆகங் குளிர்ந்தன லாடுமெங்கள்
அப்ப னிடந்திரு ஆலங்காடே. 3

---

2. கவடு – இடையிடம் அல்லது சந்து. கடைக்கொள்ளி – எரிகிற கட்டையின் கரி உள்ள பகுதி. வாங்கி – இழுத்து. மசித்து – நைத்து. விள்ள – விளங்க. வெடுவெடென்ன நக்கு – கடுமையாகச் சிரித்து, சீற்ற நகை எனினும் ஒக்கும். விலங்குபார்த்து – குறுக்கே நோக்கி. சுளிந்து – சினந்து. பூழ்தி – புழுதி.

3. வாகை – வாகை மரம். நமது தமிழகத்தில் நெடுங்காலமாக வழங்கிவருகிற ஒரு நம்பிக்கை என்னவென்றால், பேய் பிசாசுகள் வாகை மரத்தின் அடியில் குழுமிக் கூத்தாடும் என்பதாகும். இது காரணம் பற்றி இந்த மரத்தை அறிஞர்கள் இல்லங்களில் வைக்க ஒப்புவதில்லை. நெற்று – உலர்ந்த பழம் அல்லது காய்; தேங்காய் நெற்று என்பது போல. இருள்கூர் நடுநாள் - இருள் மிக்க நள்ளிரவு. அகநானூறு, மணிமேகலை போன்ற பழைய நூல்களிலும் நடுநாள் என்ற சொல் இதே பொருளில் வந்துள்ளது. கூகை – கோட்டான்.

ஆண்டலை – ஆண்டலை என்று பழந்தமிழ் அழைக்கின்ற ஓர் பறவை. இது கோழி இனங்களில் ஒன்று. இதன் உறைவிடம் மயானமே ஆகும். நள்ளிரவில் இந்தப் பறவை இனம் கூட்டமாக வந்து ஒலிக்கும் என்றும், இதன் தலை ஆண்மகன் தலையை ஒத்து, உடல் பறவை உடலாக அமைந்திருக்கும் என்றும் கூறுவர். ஈகை – இண்டன் கொடி. ஈமம் – பிணம் சுடுவதற்குரிய விறகின் அடுக்கு. 'கரிபுற விறகின் ஈம ஒள்ளழல்' என்பது புறநானூறு.

குண்டிலோ மக்குழிச் சோற்றைவாங்கிக்
குறுநரி தின்ன அதனைமுன்னே
கண்டிலோ மென்று கனன்றுபேய்கள்
கையடித் தோடிடு காடரங்கா
மண்டல நின்று குணாலமிட்டு
வாதித்து வீசி யெடுத்தபாதம்
அண்ட முறநிமிர்ந் தாடுமெங்கள்
அப்ப னிடந்திரு ஆலங்காடே. 4

விழுது நிணத்தை விழுங்கியிட்டு
வெண்தலை மாலை விரவப்பூட்டிக்
கழுதுதன் பிள்ளையைக் காளியென்று
பேரிட்டுச் சீருடைத் தாவளர்த்துப்
புழுதி துடைத்து முலைகொடுத்துப்
போயின தாயை வரவுகாணா(து)
அழுதுறங் கும்புறங் காட்டிலாடும்
அப்ப னிடந்திரு ஆலங்காடே. 5

---

4. குண்டு – பாத்தி, வரம்பு. மண்டலம் – வட்டம். குணாலமிட்டு – ஆவேசத்தோடு கூக்குரலிட்டு. இந்த உடம்புக்குள்ளே இன்னல் செய்கிற தீய மலங்களைப் பேய்கள் என்று உருவகித்தல் சித்தர் மரபாகும். சகஸ்ர தளமாகிய உச்சி மையத்திலே உள்ள அம்பலத்தில் சீவனாகிய சிவலிங்கத்தின் கூத்து நடைபெறும் போது, இந்தப் பேய்களும் ஆடுகின்றன என்பது அக உலகின் ஆன்ம அநுபவ நிகழ்ச்சியாகும்.

5. விழுது – வெண்ணெய்; இங்கே எரிகின்ற புலால் துண்டிலிருந்து ஒழுகுகிற கொழுப்பு. நிணம் – கொழுப்பு. இந்தப் பாடலில் பேய்களை மனித இயல்புடன் சித்திரிக்கிறார் காரைக்கால் அம்மையார்.

ஒரு தாய்ப் பேயானது தன் சேய்ப் பேயினிடம் எப்படி ஓர் அன்னையின் அன்பைச் செலுத்துகிறது என்பதையும், அந்தப் பிள்ளைப் பிசாசுக்கு எங்ஙனம் பிள்ளைப் பாசம் மேலிடுகிறது என்பதையும் ஓவியமாக வரைகிறார் அம்மையார்.

ஏதோ உலகியலிலே நடைபெறுகின்ற இல்லற தருமம்போன்று பேய் உலகிலும் அந்த மயான வாழ்க்கை அமைந்துள்ளது என்று வருணனை செய்வதிலே ஒரு நகைச்சுவையும், அந்த நகைச்சுவையினூடு ஒரு பரிவும் துலங்கக் காண்கிறோம். எழில் நிரம்பிய காட்சிகளை அழகுணர்ச்சியோடு சித்திரிக்கிற கவியாற்றல், பயானகம், பீபத்சம், இளிவரல், நகை முதலிய மெய்ப்பாடுகளையும் சித்திரிக்க வல்லதாய் இருக்கிறது என்பதற்கு இந்தப் பாடல் சான்றாகும்.

பட்டடி நெட்டுகிர்ப் பாறுகாற்பேய்
பருந்தொடு கூகை பகண்டைஆந்தை
குட்டி யிடமுட்டை கூகைப்பேய்கள்
குறுநரி சென்றணங் காடுகாட்டிற்
பிட்டடித் துப்புறங் காட்டிலிட்ட
பிணத்தினைப் பேரப் புரட்டிஆங்கே
அட்டமே பாயநின் றாடுமெங்கள்
அப்ப னிடந்திரு ஆலங்காடே.

சுழலும் அழல்விழிக் கொள்ளிவாய்ப்பேய்
சூழ்ந்து துணங்கையிட் டோடியாடித்
தழலுள் எரியும் பிணத்தைவாங்கித்
தான்தடி தின்றணங் காடுகாட்டிற்
கழலொலி யோசைச் சிலம்பொலிப்பக்
காலுயர் வட்டணை யிட்டுநட்டம்
அழலுமிழ்ந் தோரி கதிக்கஆடும்
அப்ப னிடந்திரு ஆலங்காடே. 7

---

6. பட்டு – பட்டுப் போன்ற. நெட்டுகிர் – நீளமான நகம். பாறு கால் – வருக்கின்ற கால். பகண்டை – ஒருவகைப் பறவை. அணங்கு – பேய்மகள். பிட்டு – அடித்து. அட்டம் – எட்டு திக்குகள்.

7. துணங்கை – கூத்தில் ஒருவகை. தடி – ஊன். வட்டணை – ஒரு வகை விளையாட்டு, தாளமிட்டு ஆடுவது ஓரி – சடை. கதிக்க – ஒலிக்க. இந்தப் பாடலில் அப்பனுடைய ஆடலோடு பேய்களின் ஆடலும் விரிவாகப் பேசப்படுகிறது.

பேய் என்ற சொல் வெறுப்புக்கு உரிய சொல் அன்று. தமிழ் நாட்டில் 'பேய்ச்சி' என்றே பெண்களுக்குப் பெயரிடுகிற மரபு இருந்து வருகிறது. ஆழ்வாரும் ஓரிடத்தில் 'பேயரே எனக்கு யாரும் யானுமோர் பேயனாய்ப் போயொழிந்தேன்' என்றார். அண்மைக் காலத்துப் பாரதியாரும் இம் மரபை ஒட்டியே, 'பேயவள் காண் எங்கள் அன்னை', என்று அம்மையைப் பாடுகிறார். காரைக்கால் அம்மையாரையே காரைக்காற்பேய்' என்பது வழக்கு.

நாடும் நகருந் திரிந்துசென்று
    நன்னெறி நாடி நயந்தவரை
வேத மூடி முதுபிணந் திட்டமாடே
    முன்னிய பேய்க்கணஞ் சூழச்சூழக்
காடும் கடலும் மலையுமண்ணும்
    விண்ணுஞ் சுழல அனல்கையேந்தி
ஆடும் அரவப் புயங்கனெங்கள்
    அப்ப னிடந்திரு ஆலங்காடே. 8

துத்தங் கைக்கிளை விளரிதாரம்
    உழையிளி ஓசைபண் கெழுமப்பாடிச்
சச்சரி கொக்கரை தக்கையொடு
    தகுணிதந் துந்துபி தாளம்வீணை
மத்தளங் கரடிகை வன்கைமென்தோல்
    தமருகங் குடமுழா மொந்தைவாசித்(து)
அத்தனை அமைவினோ டாடுமெங்கள்
    அப்ப னிடந்திரு ஆலங்காடே. 9

---

8. நன்னெறி – சன்மார்க்கம். நாடி நயந்தவரை – வே[illegible]கையுடன் அணுகிய சான்றோர்களை.

மூடி முதுபிணத்து இட்டமாடே – துணியினால் மூடி முதுபேயின் பக்கத்தில். முன்னிய – அணுகிய. புயங்கன் – சிவன் ஆடுகிற நடனங்களில் புயங்கம் என்பது ஒருவகைக் கூத்து. இந்தக் கூத்தை ஆடுகிற சிவனுக்குப் புயங்கன் என்று பெயர்.

9. தமிழகத்தில் அந்தக் காலத்தில் வழங்கிவந்த இசைக் கருவிகளின் வகைகளை மிகுந்த நுட்பத்தோடு அம்மையார் இந்தப் பாடலிலே அமைத்துத் தருகிறார்.

சச்சரி – ஒரு தாளவாத்தியம். இதுவே ஓரோவழி சிறுபறை என்றும் வழங்குகிறது. கொக்கரை – சங்குவாத்தியம். தக்கை – பம்பை என்னும் தாளவாத்தியம். தகுணிதம் – பேரிகை. துந்துபி – முரசு. கரடிகை – முழுதும் தோலினாற் செய்யப்பட்ட பறை போன்ற ஒரு தாளவாத்தியம். இதன் ஓசை கரடியின் ஓசை போன்று இருக்கும் என்று பழைய இசைநூல்கள் இலக்கணம் கூறுகின்றன.

வன்கை – இதுவும் கொட்டு வகைகளில் ஒன்று. மென்தோல் – மெல்லிய தோலினால் செய்யப்பெற்ற கேடகம் என்ற இசைக் கருவி. தமருகம் – உடுக்கை. குடமுழா – திருவாரூர் முதலிய சில கோவில்களில் உள்ள ஐந்து முகங்கள் கொண்ட தோல் வாத்தியம். கோவிலில் பூசையின் போது வாசிக்கப்பெறுவது. வடமொழியிலே பஞ்சமுக வாத்தியம் என்று அழைப்பார்கள். மொந்தை என்பது ஒரே கண்ணுள்ள பறை வாத்தியம்.

புந்தி கலங்கிப் பொறிமயங்கி
இறந்தவ ரைப்புறங் காட்டிலிட்டுச்
சந்தியில் வைத்துக்கடமை செய்து
தக்கவர் இட்டசெந் தீவிளக்கா
முந்தி அமரர் முழவினோசை
திசைகது வச்சிலம் பார்க்கஆர்க்க
அந்தியின் மாநட மாடுமெங்கள்
அப்ப னிடந்திரு ஆலங்காடே. 10

ஒப்பினை யில்லவன் பேய்கள்கூடி
ஒன்றினை ஒன்றடித் தொக்கலித்துப்
பப்பினை யிட்டுப் பகண்டைபாடப்
பாடிருந் தந்நரி யாழமைப்ப
அப்பனை அணிதிரு ஆலங்காட்டுள்
அடிகளைச் செடிதலைக் காரைக்காற்பேய்
செப்பிய செந்தமிழ் பத்தும்வல்லார்
சிவகதி சேர்ந்தின்ப மெய்துவாரே. 11

---

10. புந்தி – அந்தக் கரணங்களில் ஒன்றாகிய புத்தி. பொறி – புலனறிவு. கடமை – இறுதிக்கடன். திசைகதுவ – திசைதோறும் பரவ.

11. ஒக்கலித்து – ஆரவாரம் செய்து, கூட்டமாக நின்று வெற்றி ஒலிகள் எழுப்பி. பப்பினையிட்டு – பரவி வளையமாகச் சூழ்ந்து நின்று, மண்டலமிட்டு.

பகண்டை – இரவிலே ஒலி எழுப்பும் ஒருவகைப் பறவை. இது சுடுகாட்டுப் பறவை இனங்களில் ஒன்று. பாடு இருந்து – அருகில் அமர்ந்து. செடிதலை – செடிபோன்று அடர்ந்த கூந்தல் பரந்த தலை. தலை செடியாகக் கிடக்கிறது என்று உலக வழக்கில் இருப்பது காண்க.

காரைக்காற் பேய் என்றே அம்மை தம்மை அழைத்துக் கொள்வதையே இப்பாடலில் காண்கிறோம். மயானம் என்கிற சுடுகாட்டை வடமொழியிலே ருத்ர பூமி என்றே அழைப்பார்கள். இது போலவே தமிழிலும் சுடலை என்ற வழக்கு நிலவுகிறது. நடராச மூர்த்தியைச் சுடலை முத்து என்றும், சுடலை ஆடும் பெருமான் என்றும் கூறுகிற தமிழ் வழக்காறு இன்றளவும் காண்கிறோம்.

இசைக்கு ஆடும் பெருமான் என்றும், இசைக்கன், இசைக்கி என்றும் வழங்கிவருகிற தமிழ்ப் பெயர்கள் எல்லாம் மயான ருத்ர மூர்த்தியை வழிபடுகிற வண்ணத் தமிழ்ப் பெயர்களாம்.

பண் – இந்தளம்

எட்டி இலவம் ஈகை சூரை
காரை படர்ந்தெங்குஞ்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி
சோர்ந்த குடர்கௌவப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற்
பறைபோல் விழிக்கட்பேய்
கொட்ட முழவம் கூளி பாடக்
குழக னாடுமே. 1

நிணந்தான் உருகி நிலந்தான் நனைப்ப
நெடும்பற் குழிகட்பேய்
துணங்கை எறிந்து சூழ நோக்கிச்
சுடலை நவிழ்ந்தெங்கும்
கணங்கள் கூடிப் பிணங்கள் மாந்திக்
களித்த மனத்தவாய்
அணங்கு காட்டில் அனல்கை யேந்தி
அழக னாடுமே. 2

---

1. இலவம் – பருத்தி மரம். இதனைக் காட்டுப்பஞ்சு மரம் என்றும் அழைப்பார்கள். சூரை – ஒருவகைக் கொடி. இதற்குச் சூரல் என்றும் ஒரு பெயர். காரை – காட்டுச் செடி. பட்ட – இறந்துபட்ட. கூளி – பெண்பூதம். குழகன் – அழகன்.

2. நவிழ்ந்து – அவித்து, வேகவைத்து. மாந்தி – வயிறு நிரம்ப உண்டு. அணங்கு காட்டில் – பேய்கள் கூடுகிற சுடுகாட்டில்.

சிவபெருமானுக்கு மயானத்தையும் நந்தியாகிய ஏறு ஊர்தியையும் இணைக்கின்ற சமய மரபு பலநூறு ஆண்டுகளாகத் தமிழகத்தில் நிலவி வருகின்றது.

சிவனைத் தென்னாடுடைய சிவன் என்று தென்னாட்டுக்கு உரிய கடவுளாக நமது முன்னோர்கள் கொண்டது, புறச்சான்றுகளும், அகச்சான்றுகளும் நிரம்பிய ஒரு வழிபாட்டு மரபாகும்.

சுடலை மாடன் என்ற மிகப்பழைய தமிழ்ப் பெயரிலே மயானமும் நந்தியும் இணைந்துள்ளன. இவ்வாறே மாடன் என்ற ஆண்பாற் பெயரும், மாடத்தி என்ற பெண்பாற் பெயரும் நந்தியையும், நந்தினியையும் நினைவூட்டுகிற தூய தமிழ்ச் சொற்களாம். தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் உரைகாரர்கள் மேற்கோள் காட்டும் ஒரு பழைய தமிழ்ப்பாடல் 'பூண்ட பறையையும் பூதத்தையும் நீண்ட சடையையும் மலைமகளையும்' ஓவியமாக வரைந்து காட்டுகிறது.

புட்கள் பொதுத்த புலால்வெண் தலையைப்
புறமே நரிகவ்வ
அட்கென் றழைப்ப ஆந்தை வீச
அருகே சிறுகூகை
உட்க விழிக்க ஊமன் வெருட்ட
ஓரி கதித்தெங்கும்
பிட்க நட்டம் பேணும் இறைவன்
பெயரும் பெருங்காடே. 3

செத்த பிணத்தைத் தெளியா தொருபேய்
சென்று விரல்சுட்டிக்
கத்தி யுறுமிக் கனல்விட் டெறிந்து
கடக்கப் பாய்ந்துபோய்ப்
பத்தல் வயிற்றைப் பதைக்க மோதிப்
பலபேய் இரிந்தோடப்
பித்தர் வேடங் கொண்டு நட்டம்
பெருமா னாடுமே. 4

---

3. பொதுத்த – அலகினால் குத்தித் துளைத்த; 'புட்கள் பொதித்த புலால் வெண்தலை' என்பது ஒரு பிணத்தலையைப் பறவைகள் குத்தித் துளைத்ததைக் குறிப்பிடுகிறது.

புறமே நரிகவ்வ – வெளியே (அந்தத் தலையை) நரி கவ்வி இழுக்க. அட்க – நெருங்க வேண்டும் என்று. உட்க – அச்சம் கொள்ள. ஊமன் – பெருங்கோட்டான்; பெரிய கோட்டான். ஓரி – முதிய நரி. கதித்து – கூவி. பிட்க – பிடுங்க, பிய்க்க.

4. பத்தல் வயிறு – நீண்டு ஒடுங்கிய வயிறு. இரிந்து ஓட – பல திசைகளிலும் பிரிந்து ஓட; பதைபதைத்து ஓட.

கலிங்கத்துப் பரணி என்ற பிற்காலத்து நூலிலே பேய்களையும் அவற்றின் வெறி விளையாட்டுக்களையும் செயங்கொண்டார் என்ற புலவர் பல நிலைகளிலே நூற்றுக்கணக்கான பாடல்களில் சித்திரித்திருக்கின்றார்.

பாலை நிலத்தையும் போர்க்களத்தையும், காளியையும் கூளியையும் பேய்க்கணங்களையும் அவர் வருணனை செய்கிற முறை அகளங்கன் என்னும் மன்னனுடைய ஆற்றலையும், கருணாகரத் தொண்டைமான் என்னும் படைத்தலைவனின் ஆற்றலையும் தொடர்புபடுத்திய படலமாம். ஆனால் காரைக்கால் அம்மையார் நம் கண்முன் நிறுத்துகிற பேய்கள் எல்லாம் இறைவனோடு தொடர்புகொண்ட பேய்க்கணங்கள். இவற்றின் நிலை சிவனுடைய நடனத்திலே தோய்ந்த நிலையாகும்.

முள்ளி தீந்து முளரி கருகி
மூளை சொரிந்துக்குக்
கள்ளி வற்றி வெள்ளில் பிறங்கு
கடுவெங் காட்டுள்ளே
புள்ளி யுழைமான் தோலொன் றுடுத்துப்
புலித்தோல் பியற்கிட்டுப்
பள்ளி யிடமும் அதுவே யாகப்
பரம னாடுமே. 5

வாளைக் கிளர வளைவால் எயிற்று
வண்ணச் சிறுகூகை
மூளைத் தலையும் பிணமும் விழுங்கி
முரலும் முதுகாட்டில்
தாளிப் பனையின் இலைபோல் மயிர்க்கட்
டழல்வாய் அழல்கட்பேய்
கூளிக் கணங்கள் குழலோ டியம்பக்
குழக னாடுமே. 6

---

5. முள்ளி – முள்ளி என்னும் செடி. முளரி – விறகு. உக்கு – இற்றுப்போய். வெள்ளில் – விளா மரத்தின் ஒருவகை. பியல் – பின்புறம்.

இந்தப் பாடலில் சிவபெருமானுடைய மான்தோலும் புலித் தோலும் ஆகிய கோலங்கள் இடம்பெறுகின்றன.

6. வாளை கிளர – (வாள் – ஐ) ஒலியை எழுப்ப. முதல் வரியில் வருகிற வருணனை வாயிலிருந்து தீ உமிழ்கிற கொள்ளிவாய்ப் பிசாசினைக் குறிக்கும் என்று கொள்ளவும் இடமுண்டு. முரலும் – ஓலமிடுகிற; கத்துகிற. முதுகாடு – சுடுகாடு. கூளிக்கணங்கள் – பூத கணங்கள்.

இந்தப் பாடலில் வருகின்ற பேய்கள் ஒலியையும் ஒளியையும் எழுப்புவனவாகக் காட்சி தருகின்றன. அழல்வாயும் சுழல்கண்ணும் கொண்டு முரல்கின்ற பேய்களாக இவை சூழ்ந்து நிற்கின்றன. இந்தச் சூழலிலே எம்பெருமானாகிய குழகன் நட்டம் இடுகிறான்.

நொந்திக் கிடத்த சுடலை தடவி
நுகரும் புழுக்கின்றிச்
சிந்தித் திருந்தங் குறங்குஞ் செறுபேய்
சிரமப் படுகாட்டின்
முந்தி அமரர் முழவி னோசை
முறைமை வழுவாமே
அந்தி நிருத்தம் அனல்கை யேந்தி
அழக னாடுமே. 7

வேய்க ளோங்கி வெண்முத் துதிர
வெடிகொள் சுடலையுள்
ஓயும் உருவில் உலறு கூந்தல்
அலறு பகுவாய
பேய்கள் கூடிப் பிணங்கள் மாந்தி
அணங்கும் பெருங்காட்டில்
மாயனாட மலையான் மகளும்
மருண்டு நோக்குமே. 8

---

7. நொந்தி – வெந்து; வறண்டு. அதாவது உண்ணுவதற்குப் பிணங்களைத் தவிர வேறு எதுவும் விளையாத நிலம் என்றவாறு. புழுக்கு – உணவின் எச்சம்.

இந்தப் பாடலில் மூன்று, நான்காவது அடிகளிலே இறைவனுடைய நடனம் 'சேணுயர் நெறிமுறை' வழுவாமல் இலக்கணத் தூய்மையோடு நடைபெறுகிறது என்று அம்மையார் பாடுகிறார், 'முறைமை வழுவாமே அழகனாடுமே' என்று. சிவனுடைய இந்த நடனத்திற்கு அந்திநிருத்தம் என்று பெயர். இதுவே, 'நடுநாட் கூத்து' என்றும், 'நள்ளிரவு நட்டம்' என்றும் 'நிசி நடனம்' என்றும் பல பெயர்களில் அழைக்கப்பெறுகிறது. இந்த நடனத்திற்குரிய இன்றியமையாத உறுப்பு கையில் ஏந்திய நெருப்பாகும். அதாவது அந்தி நிருத்தம் என்பது அனல் ஏந்தி ஆடுகிற நடனமாகும்.

8. வேய்கள் – மூங்கில்கள். ஓயும் உருவில் – ஆடி ஓய்ந்த நிலையில் உலறு – நிமிர்ந்து நிற்கும். பகுவாய் – பிளந்த வாயையுடைய. அணங்கும் – அச்சுறுத்துகிற. மாயன் – சிவன்.

இங்கே மாயமான நுட்ப நடனம் ஆடுகின்ற தன்மை நோக்கி ருத்திர மூர்த்தியை மாயன் என்றார். மலையான் மகள் – மலையத்துவசன் மகளாகிய பார்வதி.

கடுவன் உகளும் கழைசூழ் பொதும்பிற்
கழுகும் பேயுமாய்
இடுவெண் தலையும் ஈமப் புகையும்
எழுந்த பெருங்காட்டில்
கொடுவெண் பிறையும் புனலுந் ததும்பக்
கொள்ளென் றிசைபாடப்
படுவெண் துடியும் பறையுங் கறங்கப்
பரம னாடுமே. 9

குண்டை வயிற்றுக் குறிய சிறிய
நெடிய பிறங்கற்பேய்
இண்டு படர்ந்த இருள்சூழ் மயானத்
தெரிவாய் எயிற்றுப்பேய்
கொண்டு குழவி தழுவ வெருட்டிக்
கொள்ளென் றிசைபாட
மிண்டி மிளிர்ந்த சடைகள் தாழ
விமல னாடுமே. 10

---

9. கடுவன் – ஆண்குரங்கு. உகளும் – பாய்ந்து செல்கிற; தாவிச் செல்கிற. கழை – மூங்கில். பொதும்பு – புதர். புனல் – கங்கை. கொள் – ஒலிக்குறிப்பு. துடி – உடுக்கை. கறங்க – ஒலிசெய்ய.

10. குண்டை வயிறு – பருத்துத் தடித்துக் கொழுத்த வயிறு. பிறங்கல் – மலை. பிறங்கற் பேய் – பெரிய பேயாகிய மலைப் பிசாசு. எரிவாய் எயிற்றுப்பேய் – கொள்ளிவாய்ப் பிசாசு. மிண்டி மிளிர்ந்த – நெருக்கமாக அடர்ந்து ஒளி வீசுகிற. ஒளிர்சடை என்பது இதுவே.

இந்தப் பாடலில் பேய்கள் நிகழ்த்துகிற இசை பற்றிய குறிப்பைக் காணலாம். இந்தப் பேய்களும் கொள்ளென்று இசை பாடுவதாக அம்மையார் கூறுகிறார். மயானம் முழுதும் இசைமயமாக இருக்கும் போது பேய்களுமே அந்தச் சுருதியிலே சேர்ந்து கொள்கின்றன என்ற நயம் உய்த்து உணரற்பாலதாகும்.

சூடும் மதியஞ் சடைமே லுடையார்
சுழல்வார் திருநட்டம்
ஆடும் அரவம் அரையில் ஆர்த்த
அடிகள் அருளாலே
காடு மலிந்த கனல்வாய் எயிற்றுக்
காரைக் காற்பேய்தன்
பாடல் பத்தும் பாடி யாடப்
பாவ நாசமே. 11

---

11. சித்தர்களுடைய பயிற்சி முறையிலே சந்திரன் என்னும் இடப்பாகம் மிகவும் முக்கியமானதாகும். முன் பகுதிகளிலே நாம் ஏற்கனவே பார்த்துள்ள விளக்கங்களின்படி இடது கண்ணாகிய வாமபாக விழியும், இடப்பக்கத்து மூச்சாகிய இடகலையும், இடப்பக்கத்து நெற்றியும், இடது காதுமே கூட சந்திரனுடைய இயக்கங்கள் கொண்ட உடற் பகுதியாம்.

ஞானிகள் தாயுடன் சென்று தாதையைக் கூடுதல் என்று குறிப்பிடுவது உடம்பின் இடது பக்கத்திலே புரிகின்ற சில ஞானச் செயல்களினால் வலப்பக்கத்துப் பிங்கலையாகிய சூரியகலையும், வலக் கண்ணாகிய கதிரும் எழுந்து இயங்குகின்றன. ஒளியும் ஒலியுமாகிய ஞான அநுபவங்கள் இந்தப் பயிற்சியின் வாயிலாக ஒரு ஞானி பெறுகிறான். இந்த ஞான அநுபவந்தான் அகஉடம்பிலே உள்ள ஒளி அரங்கிலே நடக்கிற சிவ நடனமாகும்.

'முப்பாலும் பாழாகி முடிவில் ஒரு சூனியமான' இடமே இந்த ஒளிநடனத்துக்குரிய ருத்திர பூமியாகும். அங்கே கள்ளப் புலன்கள் ஐந்தும் காளா மணி விளக்காக எரிகின்றன. ஆன்மாவை ஒட்டிய மலங்கள் எல்லாம் பேய்க்கணங்களாக நட்டமிடுகின்றன.

சிவனுடைய நடனம், அந்த நள்ளிரவுக் கூத்து இந்த உடம்பின் சிதாகாசப் பெருவெளியிலே நடைபெறுகிறது. இதைத்தான் திருமூலரும் "நாதம் கொண்டாடினான் ஞானானந்தக் கூத்தே" என்று தம்முடைய திருமந்திரத்திலே பாடுகிறார். இந்த நடனத்தையே காரைக்காலம்மையும் தமது அழகிய பாடல்களிலே பாடிப்பாடி ஆடுகிறார்.

## திருஇரட்டை மணிமாலை

கிளர்ந்துந்து வெந்துயர் வந்தடும்
போதஞ்சி நெஞ்சமென்பாய்
தளர்ந்திங் கிருத்தல் தவிர்திகண்
டாய்தள ராதுவந்தி
வளர்ந்துந்து கங்கையும் வானத்
திடைவளர் கோட்டுவெள்ளை
இளந்திங் களும்மெருக் கும்மிருக்
குஞ்சென்னி ஈசனுக்கே. 1

ஈசன் அவனல்லா
தில்லை எனநினைந்து
கூசி மனத்தகத்துக்
கொண்டிருந்து—பேசி
மறவாது வாழ்வாரை
மண்ணுலகத் தென்றும்
பிறவாமைக் காக்கும் பிரான். 2

---

இரட்டை மணிமாலை என்ற செய்யுளமைப்பு கட்டளைக்கலித் துறையும் வெண்பாவும் மாறிமாறி வரும்படி அந்தாதித் தொடையாகப் பாடப்படுவதாகும். இரட்டை மணிமாலை என்ற இந்தப் பனுவல் அமைப்பே காரைக்கால் அம்மையார் முதன்முதலாகச் செய்தது என்று கூறுகிறார்கள். ஏனென்றால் இந்த இரட்டை மணிமாலைக்கு முன்னர்த் தோன்றியதாக வேறோர் இரட்டை மணிமாலை இதுவரை கிடைத்ததில்லை.

1. கிளர்ந்து உந்து – உள்ளத்திலிருந்து வேகத்தோடு வந்து தள்ளுதல். அடும்போது – வருத்தும்போது. விளர்ந்து உந்து – தண்ணீர் பெருகி அலைவீசுகிற.

2. கூசி - வாடி. பிறவாமை – பிறவாமல். ஈசனுடைய திருவடிகளை மறவாது வாழ்வதே பிறவிச் சுழலிலிருந்து தப்புவதற்கு ஓரே வழி என்பதைக் காரைக்காலம்மையார் இந்தப் பாடலிலே வற்புறுத்திக் கூறுகிறார்.

பிரானென்று தன்னைப்பன் னாள்பர
    வித்தொழு வாரிடர்கண்
டிரானென்ன நிற்கின்ற ஈசன்கண்
    டீர்இன வண்டுகிண்டிப்
பொராநின்ற கொன்றைப் பொதும்பர்க்
    கிடந்துபொம் மென்றொரைவாய்
அராநின் றிரைக்குஞ் சடைச்செம்பொன்
    நீள்முடி அந்தணனே. 3

அந்தணனைத் தஞ்சமென்
    றாட்பட்டார் ஆழாமே
வந்தணைந்து காத்தளிக்கும்
    வல்லாளன்—கொந்தணைந்த
பொன்கண்டாற் பூணாதே
    கோள்நாகம் பூண்டானே
என்கண்டாய் நெஞ்சே இனி. 4

---

3. இனவண்டு – வண்டினங்கள். கிண்டி – கிளறி. பொராநின்ற – ஒன்றோடொன்று மோதுகிற. கொன்றைப் பொதும்பர் – கொன்றைச் செறிவு.

ஐவாய் அரா – ஐந்து வாயினை உடைய பாம்பு. அதாவது ஐந்து தலைப் பாம்பு. இதையே திருநாவுக்கரசர். 'அஞ்சுகொலாம் அவர் ஆடரவில் படம்' என்று பாடுவார்.

4. ஆழாமே – பிறவிக் கடலில் அழுந்தாமல். காத்தளிக்கும் – காத்து அருள்கின்ற. கொந்தணைந்த பொன் – வேலைப்பாடுகள் செய்யப்பெற்ற பொன் அணிபணிகள். கோள்நாகம் – நச்சுப்பாம்பு.

வல்லாளன் என்று இந்தப் பாடலில் குறிப்பிட்டது வல்லவன் என்ற பொருளில் மட்டுமல்லாமல் இந்த உடம்பின் மைய ஆற்றல் களையெல்லாம், ஆன்ம வல்லமைகளையெல்லாம் ஆண்டு ஒருமுகப் படுத்தக்கூடிய பேராற்றல் உடையான் என்ற பொருளிலும் ஆம்.

இனிவார் சடையினிற் கங்கையென்
பாளைஅங் கத்திருந்த
கனிவாய் மலைமங்கை காணில்என்
செய்திதை யிற்சிலையால்
முனிவார் திரிபுரம் மூன்றும்வெந்
தன்றுசெந் தீயின்மூழ்கித்
தனிவார் கணையொன்றி னால்மிகக்
கோத்தஎஞ் சங்கரனே. 5

சங்கரனைத் தாழ்ந்த
சடையானை அச்சடைமேற்
பொங்கரவம் வைத்துகந்த
புண்ணியனை—அங்கொருநாள்
ஆவாவென் றாழாமற்
காப்பானை எப்போதும்
ஓவாது நெஞ்சே உரை. 6

---

5. வார்சடை – நெடுஞ்சடை. அங்கத்திருந்த – பாதி உடம்பை இடம்கொண்ட. என்செய்தி – என்ன செய்வாய். முனிவார் – பகைவருடைய. திரிபுரம் மூன்றும் – நிலைபேறில்லாமல் அங்கிங்கு திரிகின்ற தன்மையவான மூன்று புரங்களையும். தனிவார் கணை – ஒப்பற்ற நீண்ட அம்பு.

6. அங்கொருநாள் – உயிர் பிரிகின்ற அந்த ஒரு நாளிலே. ஓவாது – ஒய்வு ஒழிவில்லாமல், இடையறாமல். ஆகுகின்ற காலத்தில் அவனை ஒய்வு ஒழிவின்றித் தொழுதால் அந்தக் கடைசிநாள் ஆ ஆ என்று ஆழ வேண்டியது இல்லை. அவன் அந்தத் துன்பத்திலிருந்து, அந்த வேதனையிலிருந்து காப்பாற்றுவான்.

உரைக்கப் படுவது மொன்றுண்டு
கேட்கிற்செவ் வான்தொடைமேல்
இரைக்கின்ற பாம்பினை 'என்றுந்
தொடேல்இழிந் தோட்டத்தெங்குந்
திரைக்கின்ற கங்கையும் தேனின்ற
கொன்றையும் செஞ்சடைமேல்
விரைக்கின்ற வன்னியும் சென்னித்
தலைவைத்த வேதியனே. 7

வேதியனை வேதப்
பொருளானை வேதத்துக்
காதியனை ஆதிரை நன்
னாளானைச் – சோதியான்
வல்லேன மாய்ப்புக்கு
மாலவனும் மாட்டாறு
கில்லேன மாவென்றான் கீழ். 8

---

7. இழிந்து ஓட்டத்து எங்கும் திரைக்கின்ற – இறங்கிப் பெருகி எங்கும் அலை வீசுகின்ற. விரைக்கின்ற - மணம் வீசுகின்ற. சென்னித்தலை – திருமுடியில்.

செவ்வான் தொடைமேல் – சிவந்த அந்தி வானத்தின் பிறை மீது. இரைக்கின்ற -- சினந்து சீறுகிற பாம்புக்குச் சந்திரன் அஞ்சும் என்பது பற்றி இவ்வாறு கூறினார்.

8. ஆதிரை நன்னாளானை – திருவாதிரை என்னும் விண்மீனுக்குரிய நாயகனான சிவனை. இக்கருத்தை முத்தொள்ளாயிரம் போன்ற இலக்கியங்களிலும் "ஆதிரையான் ஆதிரையான் என்றென் றயருமால்" என்பது போன்ற வரிகளில் காண்கிறோம்.

மூங்கிலில் சிவபெருமான் திருவாதிரை நாளில் தோன்றினார் என்று புராணம் கூறுகின்றது. அதுபற்றியே சிவனை ஆதிரைநாயகன் என்று திருமுறைகளிலும் வேறு பல சமய நூல்களிலும் கூறக் காண்கிறோம்.

இதனுடைய சித்தர் தத்துவம் என்னவென்றால், ஆணவ இருளினின்றும் விடுவித்து ஆன்மாக்களுக்கு ஒளிகாட்டுகிற நாளே திருவாதிரை என்பது. தட்சிணாயனம் முடிந்து மறைந்து உத்தராயணம் தோன்றுதற்கு அறிகுறியாக இத்திருவிழா மார்கழித் திருவாதிரையில் கொண்டாடப் படுகிறது. இதுவே சிதம்பரம் நடராசருக்கும் திருவாதிரைக்கும் உள்ள இயைபு.

கீழா யினதுன்ப வெள்ளக்
கடற்றள்ளி உள்ளுறப்போய்
வீழா திருந்தின்பம் வேண்டுமெண்
பீர்விர வார்புரங்கள்
பாழா யிடக்கண்ட கண்டனெண்
தோளன்பைம் பொற்கழலே
தாழா திறைஞ்சிப் பணிந்துபன்
னாளுந் தலைநின்மினே. 9

தலையாய ஐந்தினையுஞ்
சாதித்துத் தாழ்ந்து
கலையா யினஉணர்ந்தோர்
காண்பர்—தலையாய
அண்டத்தான் ஆதிரையான்
ஆலாலம் உண்டிருண்ட
கண்டத்தான் செம்பொற் கழல். 10

---

9. கடல் தள்ளி – கடலை நீந்திக் கடந்து. விரவார் – பகைவர்கள். கண்டன் – வீரன். பைம்பொன் கழலே – தூய தங்கத் திருவடிகளே. தாழாது – காலம் தாழ்த்தாமல். தலைநின்மினே – தலைப் பட்டிருங்கள்.

10. தலையாய ஐந்து – மந்திரங்களில் தலைமைபெற்ற ஐந்தெழுத்து. சாதித்து – ஓதிச் சித்தி பெற்று. தலையாய அண்டத்தான் – மேலுலகத்தில் இருப்பவன். அதாவது தத்துவங்களைக் கடந்தவன். ஐந்தினைச் சாதித்தல் என்பதற்கு ஞானிகள் சிலர் பஞ்ச சுத்தியையும் குறிப்பிடுவது உண்டு.

கழற்கொண்ட சேவடி காணலுற்
றார்தம்மைப் பேணலுற்றார்
நிழற்கண்ட போழ்தத்து நில்லா
வினைநிக ரேதுமின்றித்
தழற்கொண்ட சோதிச்செம் மேனிஎம்
மானைக்கைம் மாமலர்தூய்த்
தொழக்கண்டு நிற்கிற்கு மோதுன்னி
நம்மடுந் தொல்வினையே. 11

தொல்லை வினைவந்து
சூழாமுன் தாழாமே
ஒல்லை வணங்கி
உமையென்னும்—மெல்லியலோர்
கூற்றானைக் கூற்றுருவம்
காய்ந்தானை வாய்ந்திலங்கு
நீற்றானை நெஞ்சே நினை. 12

---

11. கழலை அணிந்த சேவடியைக் காணலுற்றவரே தம்மைப் பேணலுற்றவர்கள்; அதாவது பேணிக் கொண்டவர்கள் என்பதே முதலடியின் பொருள்.

12. தொல்லை வினை – பழவினை. ஒல்லை – விரைவில். மெல்லியலோர் கூற்றானை – மெல்லியலாகிய உமையைஒரு கூறில் வைத்தவனை கூற்று உருவம் காய்ந்தானை – எமனை வென்று வீழ்த்தியவனை.

'காலத்தே தொழுமின்' என்றும், 'அப்போதைக் கிப்போதே' என்றும் பெரியோர்கள் கூறுவது காலம் தாழ்த்தாமல் அவனை வணங்கி அருள்பெற வேண்டும் என்பதை வற்புறுத்தவே. சித்தர்களும் இந்த உடம்பில் வலிமை இருக்கும்பொழுதே இந்த உடம்பாலயத்தில் செய்ய வேண்டிய ஆன்ம பூசனைகளை விரைவிலே செய்ய வேண்டும் என்று வற்புறுத்துவர்.

நினையா தொழுதிகண் டாய்நெஞ்ச
மேஇங்கொர் தஞ்சமென்று
மனையா ளையுமக்கள் தம்மையுந்
தேறியோ ராறுபுக்கு
நன்னயாச் சடைமுடி நம்பன்நந்
தாதைநொந் தாதசெந்தீ
அனையான் அமரர் பிரான்அண்ட
வாணன் அடித்தலமே. 13

அடித்தலத்தால் அன்றரக்கன்
ஐஞ்ஞான்கு தோளும்
முடித்தலமும் நீமுரித்த
வாறென்—முடித்தலத்தில்
ஆறாடி ஆறா
அனலாடி அவ்வனலின்
நீறாடி நெய்யாடி நீ. 14

---

13. நினையா தொழுதி – நினைந்து வணங்கி. தேறி – தெளிவடைந்து ஓராறு – கங்கை. நொந்தாத – அணையாத.

14. அரக்கன் என்று இங்கே குறிக்கப்பெறுபவன் இராவணன், அவனுக்குத் தலைகள் பத்து என்பதும், தோள்கள் இருபது என்பதும் நன்கறிந்த செய்திகள். அவன் கயிலாய மலையை அசைத்த நிகழ்ச்சியும், அப்போது சிவன் அதை அழுத்திய நிகழ்ச்சியும் தேவாரத் திருமுறை அன்பர்கட்கு நன்கு தெரிந்த கவிமொழிச் செய்தியாகும். இதையே அம்மையார் இங்கே குறிப்பிடுகிறார்.

ஐஞ்ஞான்கு தோள் – ஐநான்கு தோள்; அதாவது இருபது தோள்கள். முடித்தலமும் – முடிகளையும். ஆறாடி – ஆறு ஆடி; கங்கை ஆடி. ஆறா அனலாடி – தணியாத தீயாடி. அவ்வனலின் நீறு ஆடி – அந்த நெருப்பினின்றும் பூக்கின்ற திருநீற்றை ஆடி. இங்கே ஆடிஆடி என்று ஒலிநயத்தோடு வருகின்ற சொல் அணிந்து, தாங்கி, அணைத்து ஆகிய பொருள்களில் வருவதாகும்.

நீநின்று தானவர் மாமதில்
மூன்றும் நிரந்துடனே
தீநின்று வேவச் சிலைதொட்ட
வாறென் திரங்குவல்வாய்ப்
பேய்நின்று பாடப் பெருங்கா
டரங்காப் பெயர்ந்துநட்டம்
பேய்நின்று பூதந் தொழச்செய்யும்
மொய்கழற் புண்ணியனே. 15

புண்ணியங்கள் செய்தனவும்
பொய்நெறிக்கட் சாராமே
எண்ணியோ ரைந்தும்
இயைந்தனவால்—திண்ணிய
கைம்மாவி னீருரிவை
மூவுருவும் போர்த்துகந்த
அம்மானுக் காட்பட்ட அன்பு. 16

---

15. தானவர் – அரக்கர். நிரந்துடனே – அந்தக் கணத்திலேயே தரைமட்டமாகும்படி. சிலைதொட்ட ஆறு என் – வில்லில் அம்பு பூட்டிய விதம் என்ன. திரங்கு – சுருண்ட. பெருங்காடு – சுடுகாடு. அரங்கா - அம்பலமாக, சபையாக.

16. ஓரைந்தும் – ஐம்புலன்களும். இடைந்தன – ஒருப்பெற்றன. திண்ணிய கைம்மாவின் ஈர் உரிவை – வலிமை மிக்க யானையின் தோலை. மூவுருவும் - உமை, முருகன், சிவன் என்னும் மூன்று உருவாகிய சோமாஸ்கந்தம்.

யானையைக் கைம்மா என்று அழைப்பது கையை உடைய மிருகம் என்று பொருள்படும். யானையின் அமைப்பு அதனுடைய தும்பிக்கையினுக்கே முக்கியம் தருவதாகும். எனவே யானையைக் கைம்மா என்கிறது நம் தமிழ்மொழி. அந்த நயமான சொல்லை இங்கே ஆள்கிறார் அம்மையார். இந்தப் பாடலிலே வருகிற மூவுரு என்பதற்கு மும்மூர்த்திகள் என்று பொருள்கொண்டு அயன், அரி, அரன் என்று உரைப்பாரும் உண்டு.

அன்பால் அடைவதெவ் வாறுகொல்
மேலதோ ராடரவம்
தன்பால் ஒருவரைச் சாரவொட்
டாதது வேயுமன்றி
முன்பா யினதலை யோடுகள்
கோத்தவை யார்த்துவெள்ளை
என்பா யினவும் அணிந்தங்கொர்
ஏறுகந் தேறுவதே. 17

ஏறலால் ஏறமற்
றில்லையே எம்பெருமான்
ஆறெலாம் பாயும்
அவிர்சடையார்—வேறொர்
படங்குலவு நாகமுமிழ்
பண்டமரர் சூழ்ந்த
தடங்கடல்நஞ் சுண்டார் தமக்கு. 18

---

17. ஆடரவம் – ஆடும் பாம்பு. ஆர்த்தல் – பொருந்தி நிரைத்தல். ஏறு – எருது. 'எம்பெருமானே உன்னை நெருங்குவது எப்படி? உன் மேனியிலே பாம்பு படம் எடுத்து ஆடுகிறது. நெருங்கிக் கோத்த தலையோடுகள் உடம்பிலே புரளுகின்றன. வெள்ளை எலும்புகளே மாலையாக ஆடுகின்றன. எருது வேறு பாய்ந்து வரக்கூடியது. இந்நிலையில் உன்னை அன்பால் அடைவது எப்படி' என்ற வினா எழுகிறது.

18. படங்குலவு நாகம் – படம் எடுத்து வளைந்து நிற்கிற பாம்பு. பண்டு – முன்னொரு நாள். உமிழ்நஞ்சு – முன்னொரு நாளில் நாகம் உமிழ்ந்த கடல் நஞ்சாகிய ஆலால விடம்.

நஞ்சை உண்ட சிவனுக்கு வேறு ஊர்தி இல்லை. எருதே அவனுடைய வாகனம். கடலில் பாம்புகொண்டு கடைவதும், அப்போது அது நஞ்சை உமிழ்வதும், பிறகு அந்த நஞ்சைக் கழுத்திலே அடக்கிக் கொள்வதும் எவ்வாறு சித்தர் ஞானத்தில் உருவகம் என்னும் அணியாக விளங்குகிறது என்பது முன்பகுதிகளில் விளக்கம் பெற்றுள்ளது.

தமக்கென்றும் இன்பணி செய்திருப்
    பேமுக்குத் தாமொருநாள்
எமக்கென்று சொன்னால் அருளாங்கொ
    லாம்இணை யாதுமின்றிச்
சுமக்கின்ற பிள்ளைவெள் ளேறொப்ப
    தொன்றுதொண் டைக்கனிவாய்
உமைக்கென்று தேடப் பொறாதுட
    னேகொண்ட உத்தமரே. 19

உத்தமராய் வாழா
    துலந்தக்கால் உற்றார்கள்
செத்த மரமடுக்கித்
    தீயாமுன்—உத்தமனாய்
நீளாழி நஞ்சுண்ட
    நெய்யாடி தன்திறமே
கேளாழி நெஞ்சே கிளர்ந்து. 20

---

19. என்றும் – எந்நாளும். செய்திருப்பேமுக்கு – செய்துள்ள எங்களுக்கு ஒன்று – ஒருசொல். அருளாங்கொலாம் – அருளாகி விடுமோ. இணை – ஒப்பு. தொண்டைக்கனி – கொவ்வைப்பழம்.

தமக்கென்று ஒரு வெள்ளை எருதை ஊர்தியாகத் தேர்ந்து கொண்ட சிவன் உமையம்மைக்கும் அவ்வாறு ஓர் ஊர்தியைத் தேர்ந்தெடுக்கப் பொறாமல் அவளையும் சேர்த்துத் தம்முடன் ஒருபாகத்து வைத்துக் கொண்டார் என்றவாறு.

20. உலந்தக்கால் – மரணம் அடைந்தபோது. செத்தமரம் அடுக்கி – உலர்ந்த மரமாகிய விறகினை அடுக்கி. தீயாமுன் – தீயினுக்கு இரையாக்குவதற்கு முன்பு. நீள்ஆழி – பெரியகடல். ஆழி நெஞ்சே – ஆழ்ந்துள்ள மனமே. கிளர்ந்து – விரைந்தெழுந்து.

எவை எவற்றிலோ ஆழ்ந்து கிடக்கின்ற மனமே நீ மரணம் வந்து உற்றார் உன்னைத் தீக்கு இரையாக்குவதற்கு முன்னமே விரைந்தெழுந்து நெய்யாடியின் திறத்தைக் காது குளிரக் கேள் என்று நெஞ்சுக்கு அறிவுறுத்துகிறார் காரைக்கால் அம்மையார்.

## அற்புதத் திருவந்தாதி

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர். 1

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரு நெறிபணியா ரேனுஞ்—சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்(கு)
அன்பறா தென்நெஞ் சவர்க்கு. 2

அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோம் என்றும்
அவர்க்கேநாம் அன்பாவ தல்லாற்—பவர்ச்சடைமேற்
பாகாப்போழ் சூடு மவர்க்கல்லான் மற்றொருவர்க்
காகாப்போம் எஞ்ஞான்றும் ஆள். 3

---

1. மெய்ஞ்ஞானம் சித்தி பெற்றதும் காரைக்கால் அம்மையார் பாடிய பனுவல் அற்புதத் திருவந்தாதியே என்று அறிஞர்கள் கூறுவதுண்டு. அறிவதற்கு அரிதான ஞானப் பொருண்மைகளைத் தாங்கி நிற்பதாலும், ஆன்ம அனுபவங்களின் வெளியீடாக இருப்பதாலும் இவ்வாறு கூறுவது பொருந்துவதாக இருப்பதோடு, 'அற்புதம்' என்ற சிறப்புக்கு உரியதாகவும் இந்த நூல் திகழ்கிறது.

இந்த முதலாவது பாட்டில் 'அன்றே சிவனுக்கு ஆட்பட்ட தன்மை' பேசப்படுகிறது. காதல் சிறந்து – திருவடியில் அன்பு கனிந்து. நிறம் – ஒளி, வண்ணம். ஞான்ற – தொக்கிய, பொருந்திய. மைஞ்ஞான்ற – கருநிறம் பொருந்திய. இடர் – பிறவித் துன்பம்.

2. படரும் நெறி – பற்றிச்செல்ல வேண்டிய மார்க்கம். சுடர் உரு – ஒளிவடிவம். என்பு – எலும்பு மாலை. எரி ஆடு – நெருப்பைக் கையில் ஏந்தி ஆடுகின்ற. என்பு அறா – எலும்புமாலை எப்போதும் இலங்குகிற.

3. அவர்க்கே – சிவபெருமானுக்கே. எழுபிறப்பும் – பிறவிகள் தோறும். பவர்க்கடை – நெருங்கி அடர்ந்த சடைமுடி. பாகாப் போழ் – பாகம்படாத துண்டுச் சந்திரன், அதாவது இளம்பிறை. ஆகாப்போம் – ஆளாக மாட்டோம். அவர் ஒருவருக்கே என்றென்றும் அடியாவோம். அவரையன்றி வேறொருவருக்கு எந்நாளும் பணிதல் இல்லேம்.

ஆளானோம் அல்லல்
அறிய முறையிட்டாற்
கேளாத தென்கொலோ
கேளாமை—நீளாகஞ்
செம்மையா னாகித்
திருமிடறு மற்றொன்றாம்
எம்மையாட் கொண்ட இறை. 4

இறைவனே எவ்வுயிருந்
தோற்றுவிப்பான் தோற்றி
இறைவனே ஈண்டிறக்கஞ்
செய்வான்—இறைவனே
எந்தாய் எனஇரங்கும்
எங்கள்மேல் வெந்துயரம்
வந்தால் அதுமாற்று வான். 5

---

4. அல்லல் - துன்பம். நீளாகம் – நீண்ட உடல். திருமிடறு – அழகான கழுத்து. உடம்பு முழுதும் பவளச் சிவப்பு, கழுத்து மட்டும் நீலக் கருநிறம்! கேளாமை - கேளாதிருத்தற்குரிய காரணம். அவன் எவ்வாறிருந்தாலும் நாம் அவனுக்கு ஆளாகியே நிற்கிறோம் என்றது, தமது ஈடுபாட்டை வலியுறுத்தவே! அவனுடைய உதாசீனத்தை வலியுறுத்துவதற்காக அன்று!

உயிர்போனாலும் நான் மாறமாட்டேன் என்று சொன்னால், மரணத்தை வலியுறுத்துகிறதாகாது அந்த மொழி, தனது மாறாத தன்மையை, தனது உறுதிப்பாட்டை வன்மையாக உணர்த்துவதே அதன் நோக்கம். அவ்வாறே வெளியிட்டுள்ள உறுதிப்பாடே இதுவும் என்று கொள்ளவேண்டும்.

5. படைத்தலும், காத்தலும், நீக்குதலுமாகிய முச்செயல்களையும் இயற்றுபவன் இறைவனேயாம். எவ்வுயிரும் என்று இங்கே குறிப்பிட்டது, நிற்பனவும் நடப்பனவுமாகிய பொருள்களை என்று கொள்வதன்றி, பிரளயாகலர், விஞ்ஞானகலர், சகலர் என்னும் மூவகை உயிரையும் குறிப்பதாகக் கொள்வது சிறப்புடைத்தாகும். இறக்கம் – இறப்பு, அழித்தல். இரங்கும் – இரக்கம் கொள்ளுவான். அதாவது அவன் கருணாமூர்த்தி என்றவாறு.

வானத்தான் என்பாரும்
என்கமற் றும்பர்கோன்
தானத்தான் என்பாருந்
தாமென்க—ஞானத்தால்
முன்நஞ்சத் தாலிருண்ட
மெய்யொளிசேர் கண்டத்தான்
என்நெஞ்சத் தானென்பன் யான். 6

யானே தவமுடையேன்
என்நெஞ்சே நன்னெஞ்சம்
யானே பிறப்பறுப்பான்
எண்ணினேன்—யானேஅக்
கைம்மா உரிபோர்த்த
கண்ணுதலான் வெண்ணீற்ற
அம்மானுக் காளாயி னேன். 7

---

6. வானத்தான் – விண்ணுலகோன். உம்பர்கோன் தானத்தான் – தேவேந்திரனாக இருப்பவன் என்றும், இந்திரனுக்கும் தலைவனாக இருப்பவன் என்றும் அறிஞர்கள் பொருள் கொள்ளுகிறார்கள். ஆறுமுகத் தம்பிரான் என்ற அறிஞர் 'தானத்தான்' என்பதற்கு விண்ணுக்கு வேறாகிய மண்ணகத்தான் என்று பொருள்கொண்டுள்ளார். உம்பர்கோன் என்பதற்குச் சிவபிரான் என்றும், உம்பர்கோன் வானத்தான் என்றும், தானத்தான் என்றும், தனித்தனியே பிரித்து இவ்வாறு பொருள் கொண்டார்.

முன்நஞ்சத்தால் – முன்னொருநாள் உண்ட நஞ்சு காரணமாக. இந்தப் பாடலின் கருத்து, இறைவன் அடியார்களின் நெஞ்சினில் அடக்கம் என்பதேயாம்.

7. கைம்மா – ஆனை. கைம்மா உரி – ஆனையின் தோல். வெண்ணீற்று அம்மான் – வெண்மையான திருநீற்றை அணிந்த சிவபெருமான். கண்ணுதலான் – நெற்றிக் கண்ணை உடையவன்.

இப்பாடலில் அம்மையார் சிவனுக்குத் தாம் ஆளாகிய தன்மையை எண்ணிப் பர்வசமடைகிறார். தாம் ஆளாகியதன் பேரின்ப அநுபவத்தை நாளும் தாம் துய்த்துவருகிற நிலையிலே அந்தப் பேரின்ப உவகையை இவ்வாறு விளக்குகிறார்.

ஆயினேன் ஆள்வானுக்
கன்றே பெறற்கரியன்
ஆயினேன் அஃதன்றே
ஆமாறு—தூய
புனற்கங்கை ஏற்றானோர்
பொன்வரையே போல்வான்
அனற்கங்கை ஏற்றான் அருள். 8

அருளே உலகெலாம்
ஆள்விப்ப தீசன்
அருளே பிறப்பறுப்ப
தானால்—அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும்
விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவ தெனக்கு. 9

---

8. ஆள்வானுக்கு - ஆட்கொள்கிற இறைவனுக்கு, சிவபெருமானுக்கு. ஆமாறு - ஆகவேண்டிய பக்குவம். அன்றே - ஆளான அன்றே. பெறற்கு அரியன் ஆயினேன் - பெறுவதற்கு அரிய பேற்றினைப் பெற்றேன்.

ஓர் பொன்வரையே போல்வான் - ஒரு மகாமேரு கிரியை ஒத்தவன். 'அனற்கங்கை ஏற்றான்' என்பதை அனல், கம், கை என்று பிரித்து, நெருப்பையும் கபாலத்தையும் கையில் ஏற்றவன் என்று சில அறிஞர்கள் பொருள் கொள்வர். வேறு சிலர் அனற்கு அங்கை ஏற்றான் என்று பிரித்து அங்கையில் அனலை ஏந்துபவன் என்று கூறுவர்.

9. இறைவனுடைய திருவருளே உலகத்தை இயக்குகின்ற மாபெரும் சட்டமாக நின்று நிலவி வருகிறது. ஆங்கில ஞானிகள் இதைத்தான் LAW என்று கொட்டை எழுத்தில் அழைக்கிறார்கள். வடமொழியாளர் 'நியதி' என்று இதை அழைப்பார்கள். சித்தர்கள் இதையே கருணை என்ற இயல்பையும் சேர்த்து அருள் என்பார்கள். அம்மையார் இக் கருத்தையே இப்பாடலில் எடுத்தியம்புகிறார்.

அருளே - சிவபெருமானுடைய திருவருளே. மெய்ப்பொருளை - மெய்யான வீடுபேற்று நிலையை. இறைவனுடைய திருவருள் என்று எல்லாவற்றையும் நோக்குவார்க்கு ஆகாத பொருள் ஏதும் இல்லை என்றபடி.

எனக்கினிய எம்மானை
ஈசனையான் என்றும்
மனக்கினிய வைப்பாக
வைத்தேன்—எனக்கவனைக்
கொண்டேன் பிரானாகக்
கொள்வதுமே இன்புற்றேன்
உண்டே எனக்கரிய தொன்று. 10

ஒன்றே நினைந்திருந்தேன்
ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றையென் உள்ளத்தி
னுள்ளடைத்தேன்—ஒன்றேதான்
கங்கையான் திங்கட்
கதிர்முடியான் பொங்கெரிசேர்
அங்கையாற் காளாம் அது. 11

---

10. மனக்கினிய – மனத்துக்கு இனிமையான. வைப்பு – காப்பீடான பொருள், சேமநிதி அல்லது வைப்பு நிதி. பிரான் – தலைவன். உண்டே – உண்டோ என்ற வினாவாக எழுந்து இல்லை என்று பொருள் தருவது. எனக்கு இனிமையான இறைவனை நான் எக்காலத்திலும் எனக்கு இனிதாகிய வைப்புநிதியாக வைத்துக் கொண்டேன். எனக்கு அவனையே பிரானாகக் கொண்டேன். அப்படி நான் கொண்ட வினாடியிலிருந்து நான் இன்பம் அடைந்தேன். எனக்கு அரிதாவது என்று ஒன்றும் இல்லை. ஏனென்றால் என் செயல், எனது முயற்சி என்பது தனியாக இல்லை. என்னுள் நிற்கிற அவனே எல்லாம் செய்கிறான் என்றவாறு.

11. ஒன்றே – சிவபிரானுக்கு ஆளாகி நிற்கும் அந்த ஒன்றையே (நினைத்திருந்தேன்) ஒன்றே துணிந்தொழிந்தேன் – அந்த ஒன்றே தேர்ந்துகொண்டு மற்றவை யாவற்றையும் நீக்கிவிட்டேன். 'ஆளாம் அது' என்ற சொற்றொடர், ஒன்றே என்பதன் பொருளாகக் கொண்டு கூடுகிறது. நினைத்திருந்த ஒன்று, துணிந்த ஒன்று, உள்ளத்தின் உள்ளடைத்த ஒன்று ஆகிய அந்த ஒன்று எரிசேர் அங்கையாற்கு ஆளாவதாகிய ஒன்றே என்றவாறு.

அதுவே பிரானாமா
　　றாட்கொள்ளு மாறும்
அதுவே இனியறிந்தோ
　　மானால்—அதுவே
பனிக்கணங்கு கண்ணியார்
　　ஒண்ணுதலின் மேலோர்
தனிக்கணங்கு வைத்தார் தகவு. 12

தகவுடையார் தாமுளரேல்
　　தாரகலஞ் சாலப்
புகவிடுதல் பொல்லாது
　　கண்டீர்—மிகவடர
ஊர்ந்திடுமா நாகம்
　　ஒருநாள் மலைமகளைச்
சார்ந்திடுமேல் ஏபாவந் தான். 13

---

12. பிரானாமாறு – தலைவனாகி நிற்கின்ற திறம். ஆட்கொள்ளும் ஆறு – உயிர்களை ஆளாகக் கொண்டு அருள்கின்ற தன்மை. தகவு – தன்மை. பனிக்கு அணங்கு கண்ணியார் – கங்கை நதியின் தண்மையில் குளிர்ந்தாடுகிற கொன்றைமாலை அணிந்தவர். ஒண்ணுதலின் மேல் – அழகிய நெற்றியின் மீது. ஓர் தனிக்கண் அங்கு வைத்தார் – ஒப்பற்ற நெற்றிக்கண்ணை வைத்துக் கொண்டவர்.

பிரானாகிற தன்மையும் ஆட்கொள்ளும் தன்மையும் அவருடைய கோலத்தின் சிறப்புக்களிலே துலங்குகின்றன. கொன்றை மாலையும் கங்கை நதியும் நெற்றிக் கண்ணும் அவருடைய தனிச்சிறப்புக்கள். பிரான் என்ற தகவுக்கு இவை அடையாளமாகும். சான்றுமாகும். இதை உணர்ந்து கொண்டால் அந்த ஆண்டானுக்கு அடிமையாக நிற்கும் அநுபவத்திலே தயக்கமில்லாத உறுதியும் பேரின்பமும் உதிக்கின்றன.

13. சிவபெருமானுடைய கோலத்தில் உள்ள முரண்பாடுகளை அன்பு கெழுமிய நகைச்சுவையோடு இந்தப் பாடல் சித்திரிக்கிறது.

தார் அகலம் – பாம்பாகிய மாலை பொருந்திய மார்பு. மிகஅடர – மிகவும் துன்புறுத்த. சார்ந்திடுமேல் – என்றாவது ஒருநாள் சார்ந்து தொல்லை உண்டாக்கும் என்றார். ஏபாவந்தான் – அந்தோ, பழியாகும் அல்லவா? கருத்து என்னவென்றால் மார்பிலே மாலையாக வளைந்து தொங்குகின்ற பாம்பானது என்றாவது ஒருநாள் உமை அம்மையை நெருங்குமானால் அது பெரிய பழிக்கு இடமாகுமல்லவா என்றவாறு. ஈடுபாட்டினால் உரிமையோடு எழுகிற ஓர் நகைச்சுவை இந்தப் பாடலிலே ஊடுருவி நிற்கிறது.

தானே தனிநெஞ்சந்
தன்னை உயக்கொள்வான்
தானே பெருஞ்சேமஞ்
செய்யுமால்—தானேயோர்
பூணாகத் தாற்பொலிந்து
பொங்கழல்சேர் நஞ்சுமிழும்
நீணாகத் தானை நினைந்து. 14

நினைந்திருந்து வானவர்கள்
நீள்மலராற் பாதம்
புனைந்தும் அடிபொருந்த
மாட்டார்—நினைந்திருந்து
மின்செய்வான் செஞ்சடையாய்
வேதியனே என்கின்றேற்(கு)
என்செய்வான் கொல்லோ இனி. 15

---

14. சேமம் – காப்பு. பெருஞ்சேமம் – பெருங்காவல். ஆகம் – மார்பு. ஆகத்தால் பூணாகப் பொலிந்து நஞ்சுமிழும் நீள் நாகத்தான் என்று கூட்டிப் பொருள் கொள்ளவும். நஞ்சுமிழக் கூடிய பாம்பாயினும் சிவனுடைய மேனியிலே ஆபரணமாகப் பொலிகிறது என்பது கருத்து. பூண் – அணி. நீள் நாகத்தான் – நீண்ட பாம்பை அணிந்த சிவபெருமான்.

15. நினைந்திருந்து – எண்ணி எண்ணி. மலராம் பாதம் புனைந்தும் மலர்கொண்டு திருவடிகளைத் தூவி வழிபட்டும். அடி பொருந்த மாட்டார் – திருவடிப் பேற்றினை அடையமாட்டார்கள். மின்செய் – ஒளி வீசுகின்ற. வான் – மேலான.

ஞான மையங்களை உணர்ந்து தேறாமல் வெறும் சடங்குகளையே இயற்றி வழிபடுகிறவர்கள் மெய்யை உணரமாட்டாமல் துன்புறு கிறார்கள். இந்நிலையில் அவன் எனக்கு அருள் செய்கின்ற முறை எப்படியோ என்று மயங்குவது போலே சொல்லி, பிறர்க்கு இல்லாத பேறு தமக்குக் கிட்டியதை, 'மொழியாது மொழிதல்' என்னும் உத்தியின் பாற்பட்டு இங்ஙனம் பேசுகிறார். இதற்கு அடுத்துவரும் பாடலே சான்றாகும்.

இனியோநாம் உய்ந்தோம்
இறைவன்தாள் சேர்ந்தோம்
இனியோ ரிடரில்லோம்
நெஞ்சே—இனியோர்
வினைக்கடலை ஆக்குவிக்கும்
மீளாப் பிறவிக்
கனைக்கடலை நீந்தினோம் காண். 16

காண்பார்க்குங் காணலாந்
தன்மையனே கைதொழுது
காண்பார்க்குங் காணலாம்
காதலாற்—காண்பார்க்குச்
சோதியாய்ச் சிந்தையுளே
தோன்றுமே தொல்லுலகுக்(கு)
ஆதியாய் நின்ற அரன். 17

---

16. 'இனியோ நாம் உய்ந்தோம்' என்ற சொற்றொடரில் வருகிற 'ஓ' உவகையின் வெளியீடான ஒலிக்குறியாம். இனிமேல் நமக்கு எத்தகைய கேடும் இல்லை. ஒகோ நாம் உய்ந்துவிட்டோம். இறைவனுடைய தாளிற் சேர்ந்துவிட்டோம். இனி ஓர் இடரும் இல்லோம்.

இவ்வாறு நெஞ்சை அமைத்துக்கொண்டு பேசுகிறார் அம்மையார். வினையாகிய கடலை ஆக்குவிப்பது பிறவியாகிய கடல். வினையும் பிறவியும் ஒன்றை ஒன்று சார்ந்து நிற்பதால் அது மீளாத கடலாக நிற்கிறது. கனை – ஒலிக்கின்ற. இந்த ஒலி கடலை நாம் கடந்து தாண்டிவிட்டோம் என்று தமது நெஞ்சொடு பேசுகிறார் அம்மையார்.

17. 'காண்பார்க்கும்' என்ற மொழியில் வருகிற காண்பார் சகமார்க்கத்தராகிய யோகியர்கள். 'கைதொழுது காண்பார்' என்பது தாச மார்க்கமாகிய தொண்டு நெறியாலும், சற்புத்திரமார்க்கமாகிய நன்மகவு நெறியாலும் சென்று கைகொண்டு வழிபாடு இயற்றுகின்ற அடியார்களை.

'காதலால் காண்பார்' என்று குறிப்பிடுவது அகப் பார்வையிலே உள்ளத்தைச் செலுத்தி மன உணர்வின் ஆன்ம நேய உலகிலே இறையாற்றலைத் துய்ப்பார்களை. தொண்டு நெறியாளரும் நன்மகவு நெறியாளரும் இறைவனைக் குரு, இலிங்கம், சங்கமம் என்ற மூன்று நிலைகளில் காண்கிறார்கள். யோகியர் உடலுக்குள்ளே ஏற்படுகிற அநுபவத்தால் காண்கிறார்கள். காதலாற் காண்பவர்களாகிய ஞானிகளோ ஒளிவடிவிலே தம் சிந்தையுள்ளே இறைவனைக் காண்கிறார்கள்.

அரனென்கோ நான்முகன்
என்கோ அரியாம்
பரனென்கோ பண்புணர
மாட்டேன்—முரணழியத்
தானவனைப் பாதத்
தனிவிரலாற் செற்றானை
யானவனை எம்மானை இன்று. 18

இன்று நமக்கெளிதே
மாலுக்கும் நான்முகற்கும்
அன்றும் அளப்பரியன்
ஆனானை—என்றுமோர்
மூவா மதியானை
மூவே ழுலகங்கள்
ஆவானைக் காணும் அறிவு. 19

---

18. முரண் - வலிமை. தானவன் - அரக்கனாகிய இராவணன். செற்றானை - ஒடுக்கினானை. பண்பு - தன்மை. இத்தகைய வல்லமையுள்ள எம்பெருமான் மும்மூர்த்தி நிலைகளிலும் காட்சி தருகிறான். அவனை அரன் என்று சொல்வார்? அயன் என்று சொல்வார்? அரி என்று சொல்லவா? இந்த மூன்று பேர்களிலுமே அவனை அழைப்பது சாலும் என்றவாறு.

19. இன்று நமக்கு எளியவனாகி எளிவந்து அமர்ந்தான். ஆனால் அன்றும் இன்றும் என்றும் மாலுக்கும் அயனுக்கும் அளப்பரியனாக நிற்பவன். மூவாத இளம்பிறையை அணிந்தவன். மூவா மதியான். 'மூவேழுலகங்களாவன்' என்றது இறைவனுடைய முழுமுதற் தன்மையையும், எங்குமாகி நிற்கும் வியாபகத்தையும் உணர்த்தியவாறு. 'மூவாமதி' என்றதனால் என்றும் ஒரே நிலையில் இளம்பிறையாகவே நிற்கும் தன்மையை.

அறிவானுந் தானே
அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான்
தானே—அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே
விரிசுடர்பார் ஆகாசம்
அப்பொருளுந் தானே அவன். 20

அவனே இருசுடர்தீ
ஆகாச மாவான்
அவனே புவிபுனல்காற்
றாவான்—அவனே
இயமான னாயட்ட
மூர்த்தியுமாய் ஞான
மயமாகி நின்றானும் வந்து. 21

---

20. விரிசுடர் – ஞாயிறும் திங்களும். 'பார் ஆகாசம்' என்பது மண்ணும் விண்ணும் மற்றும் நீர், நெருப்பு, காற்று ஆகியவற்றையும் சேர்த்து. அறிவான் – அறிகின்றவன். அறிவிப்பான் – அறியச் செய்கிறவன். அறிவாய் அறிகின்றான் – அறிவினுக்குள்ளே அறிவாக நின்று அறிகின்றவன். அறிகின்ற மெய்ப் பொருளும்தானே – அறிகின்றவனே அறியப்படும் பொருளாகவும் நிற்கிறான் என்றபடி. இந்தப் பாடலின் மேல்விளக்கம் அடுத்த பாடலிலே விரிவுறுகிறது.

ஐம்பூத வடிவாயும், சூரிய சந்திரராயும், அறிகின்ற அறிவும், அறிவிக்கின்ற அறிவும் தானேயாகியும் அறிவதும் அறியப்படுவதும் தானே என்ற தன்மையுமாகி நிற்கிற பரம் பொருள் நிலை அடுத்த பாடலில் மேலும் விளக்கம் பெறுகிறது.

21. இருசுடர் - ஞாயிறும் திங்களும். இயமானன் – ஆன்மா. அட்ட மூர்த்தங்கள் என்பன: மண், புனல், தீ, காற்று, வான்வெளி, ஞாயிறு, திங்கள், உயிர்.

அட்டமூர்த்தங்களைச் சொல்லி இந்த அட்டமூர்த்தங்களும் அவனே என்று உணர்த்தி அதன்பின் அட்டமூர்த்தியுமாய் என்று சொல்வானேன்; அந்த எட்டினையும் தனித்தனியே பொருந்துகிற மூர்த்திகளும் எட்டு என்பதாம்.

வந்திதனைக் கொள்வதே
யொக்குமிவ் வாளரவின்
சிந்தை யதுதெரிந்து
காண்மினோ—வந்தோர்
இராநீ ரிருண்டனைய
கண்டத்தீர் எங்கள்
பிரானீர்உம் சென்னிப் பிறை. 22

பிறையும் புனலும்
அனலரவுஞ் சூடும்
இறைவர் எமக்கிரங்கா
ரேனும்—கறைமிடற்ற
எந்தையார்க் காட்பட்டேம்
என்றென் றிருக்குமே
எந்தையறா உள்ளம் இது. 23

---

22. இராநீர் – இருண்டமேகம். இறைவனுடைய கழுத்து கார்முகிலைப் போன்று கருமையாய் இருக்கிறது. இருண்டனைய கண்டத்தீர் – நீலமேகம் இருண்டு தோன்றுவது போன்ற கழுத்தை உடையவரே. பிரானீர் – பெருமானே.

இந்தப் பாடலில் உள்ள மென்மையான நகைச்சுவை என்ன வென்றால் உம்முடைய அணியாகிய பாம்பின் மனம் நீர் அணிந்துள்ள சென்னிப் பிறையையே குறியாக இருக்கிறது. ஆகையினால் அந்த இயல்பைத் தெரிந்து கொஞ்சம் கவனமாக இருப்பீர்.

இந்த அடிகளின் ஞானப்பொருள் மூச்சாகிய பாம்பையும், பார்வையாகிய சந்திரனையும் உள்ளடக்கியதாகும். ஒளியும் ஒலியும் வெவ்வேறான ஆற்றல்கள். எனினும் அவை ஒன்று சேர்ந்து மையங் கொள்கின்றன. இந்த முரண்பாட்டின் இணைப்பில் ஒன்றை ஒன்று பகைக்காமல் இரண்டும் ஒருமைப்பாட்டுடன் இயங்கும்படி செய்வதே ஞானயோகமாகும்.

23. பிறை – பிறைச்சந்திரன். புனல் – கங்கை. அனல் அரவு – அனலும் அரவும் என்றும் கொள்ளலாம். அல்லது நஞ்சுத் தீயை உமிழ்கின்ற பாம்பு என்றும் கொள்ளலாம். 'எம் தை அறா உள்ளம்' என்று எந்தையறா என்பதைப் பிரித்துப் பொருள் கொண்டால் இறைவர் எமக்கு இரங்காவிட்டாலும் எம்முடைய பதிந்த உள்ளம் அதாவது பிணைபட்ட உள்ளம் ஆட்பட்டோம் என்றென்றே இருக்கும். சில அறிஞர்கள் தயா உள்ளம் என்று பொருள் கொண்டு தயா என்பது தையா என வந்தது என்று கூறுவர்.

இதுவன்றே ஈசன்
திருவுருவம் ஆமா(று)
இதுவன்றே என்றனக்கோர்
சேமம்—இதுவன்றே
மின்னுஞ் சுடருருவாய்
மீண்டாயென் சிந்தனைக்கே
இன்னுஞ் சுழல்கின்ற திங்கு. 24

இங்கிருந்து சொல்லுவதென்
எம்பெருமான் எண்ணாதே
எங்கும் பலிதிரியும்
எத்திறமும்—பொங்கிரவில்
ஈமவனத் தாடுவதும்
என்னுக்கென் றாராய்வோம்
நாமவனைக் காணலுற்ற ஞான்று. 25

24. மீண்டாய் – மீண்டும் மீண்டும். இன்னும் சுழல்கின்றது – தோன்றி மறைந்த மின்சுடர் உருவம் என் உள்ளத்தில், என் நினைவில், என் எண்ண அலைகளிலே மீண்டும் மீண்டும் சுழன்று கொண்டே இருக்கிறது.

25. எண்ணாதே – ஒன்றும் வித்தியாசமாக எண்ணாமலே, அந்தச் செயலை இழிவாகக் கருதாமல். பலிதிரியும் – பிச்சை ஏற்று அலைகிறான் எம்பெருமான். எத்திறமும் – எல்லா இடத்திலும், அதாவது இழிவு எண்ணாமல் எல்லா இடத்திற்கும் சென்று பிச்சை எடுக்கிறான். ஈமவனத்து – சுடுகாட்டில். என்னுக்கு – எதற்காக. எம்பெருமான் பிச்சை ஏற்றுத் திரிவதும், சுடுகாட்டில் ஆடுவதும் முதலான செயல்களை அவனைக் காணாமல் இங்கிருந்து கொண்டு என்ன சொல்ல இருக்கிறது. நாம் அவனைக் காணலுற்ற ஞான்று இவை பற்றி ஆராய்வோம்.

சிவபெருமான் ஆண்டியாகத் திரிவதும் சுடுகாட்டில் ஆடுவதும் ஆகிய செயல்களின் தத்துவம் பாசத்தால் கட்டுண்ட உயிர்களுக்கு விளங்கா; மலங்கள் நீங்கித் திருவருள் ஞானம் கைவரப்பெற்ற போதுதான் புரியும் என்றவாறு.

ஊழிக்காலத்தில் உலகம் அழியும்போது அந்த நிலையை ஈமம் என்பதும், அந்நிலையிலிருந்து உலகம் மீளவும் உண்டாகும் பொருட்டுச் சிவபெருமான் ஆடும் திருக்கூத்தை ஈமக்கூத்து என்று அழைப்பதும் ஞான மரபாகும்.

அன்றியும் இறைவன் பொங்கிரவில் ஈமவனத்து ஆடுவதன் தத்துவம், ஆணவ இருளில் மூழ்கிய உயிர்கள் தத்தளிக்கும் போது அவைகளை விட்டுப் பிரியாமல் அவைகளை நெறிப்படுத்துவான் வேண்டி, இறைவன் இருளிலே ஒளியாய் நின்று ஆடுகிறான் என்பதே.

ஞான்ற குழற்சடைகள்
பொன்வரைமேல் மின்னுவன
போன்ற கறைமிடற்றான்
பொன்மார்பின்—ஞான்றெங்கு
மிக்கயலே தோன்ற
விளங்கி மிளிருமே
அக்கயலே வைத்த அரவு. 26

அரவமொன் றாகத்து
நீநயந்து பூணேல்
பரவித் தொழுதிரந்தோம்
பன்னாள்—முரணழிய
ஒன்னார்தம் மூவெயிலும்
ஓரம்பால் எய்தானே
பொன்னாரம் மற்றொன்று பூண். 27

---

26. ஞான்ற குழல் சடைகள் – தொங்குகிற சுருண்ட சடைகள். மிக்க அயலே – மிகுந்த அருகில். அங்கு அயலே வைத்த அரவு – எலும்பு மாலையின் அருகே வைத்த பாம்பு. பாம்பானது பொன் மார்பில் மிளிர்கிறது என்றபடி. இந்த வரிகளில் உள்ள உருவகம் ஒருபுறமிருக்க, இந்த அடிகளிலே சித்திரிக்கப்பெறுகிற எழில் ஓவியத்தை நோக்க வேண்டும். காரைக்காலம்மையின் கவிமாண்புக்கு இப்பாடல் ஓர் அழகிய எடுத்துக்காட்டாகும்.

27. நாங்கள் உன்னைத் தொழுது கேட்டுக் கொள்கிறோம். நீ பாம்பை மாலையாக அணிந்துகொள்ள வேண்டாம். அதைத் தூக்கி எறிந்துவிட்டு ஒரு பொன்னாரத்தைப் பூண்டுகொள். இந்த வேண்டுகோளில் பக்தன் குழந்தைபோன்று அன்பிலே குழைந்து வேண்டுகிற பாசம் வெளியாகிறது. அச்சத்துக்குள்ளே ஒளிர்கிற கவியெழிலை நோக்குக.

பூணாக ஒன்று
புனைந்தொன்று பொங்கதளின்
நாணாக மேன்மிளிர
நன்கமைத்துக்—கோணாகம்
பொன்முடிமேற் சூடுவது
மெல்லாம் பொறியிலியேற்
கென்முடிவ தாகஇவர். 28

இவரைப் பொருளுணர
மாட்டாதா ரெல்லாம்
இவரை இகழ்வதே
கண்டீர்—இவர்தமது
பூக்கோல மேனிப்
பொடிபூசி என்பணிந்த
பேய்க்கோலங் கண்டார் பிறர். 29

---

28. ஒன்று பூணாக - ஒரு பாம்பை அணிகலனாக. ஒன்று - மற்றொரு பாம்பை. அதளின் நாணாக - புலித்தோலின்மீது அரை ஞாண் கயிறாக. கோணாகம் - கோள்நாகம். இன்னொரு நச்சுப் பாம்பை. பொறியிலியேற்கு - அறிவற்ற எனக்கு. என் முடிவதாக இவர் - இவருடைய செய்கை என்ன விளைவிலே முடியப் போகிறதோ?

பாம்பாகிய குண்டலினி மண்டலமிடுகிற மையங்களைத் தெய்வத்தின் பற்பல கோலங்களிலே, பலவாறாகப் புனைந்து வடிவமைத்தார்கள். ஞானம் கைவந்த தமிழகச்சிற்பிகள், ஒலியைத் தமருகமாகவும் வேறுபல இசைக்கருவிகளாகவும் காட்டினார்கள். ஒளியை நெற்றிக்கண்ணாகவும், நெருப்பாகவும் காண்பித்தார்கள். அமுதம் சுரக்கின்ற அநுபவத்தைக் கங்கையாகவும் குளிர் சந்திரனாகவும் எடுத்துக்காட்டினார்கள். எண்ண அதிர்வுகளை நடனமாக உருவகித்தார்கள். எல்லாம் தாண்டிநின்ற வெட்டவெளியை, அந்தச் சூனியமான பாழ்வெளியை மயானமாகக் காட்டினார்கள். உணர்வின் இயல்புகளைப் பாவனை நிலைகளிலே உருவகித்தார்கள். இவற்றையெல்லாம் மனத்திற் கொண்டு இத்தகைய பாடல்களை அணுக வேண்டும்.

29. எம்பெருமானுடைய கோலத்தின் தத்துவங்களை உணர முடியாதவர்கள் அந்த முரண்பாடுகளையும் அவற்றின் விசித்திரத் தன்மைகளையும் கண்டு ஏளனம் செய்வார்கள். இவர்கள் பொருள் காணாமல் மருள் கொண்டு மயங்குவார்கள். மெய்க்கோலம் உணராமல் பேய்க்கோலம் கண்டு இகழ்வார்கள். இந்த நிலையைப் பாடுகிறார் அம்மையார்.

பிறரறிய லாகாப்
பெருமையருந் தாமே
பிறரறியும் பேருணர்வுந்
தாமே—பிறருடைய
என்பே யணிந்திரவில்
தீயாடும் எம்மானார்
வன்பேயுந் தாமும் மகிழ்ந்து. 30

மகிழ்தி மடநெஞ்சே
மானுடரில் நீயும்
திகழ்தி பெருஞ்சேமஞ்
சேர்ந்தாய்—இகழாதே
யாரென்பே யேனும்
அணிந்துழல்வார்க் காட்பட்ட
பேரன்பே இன்னும் பெருக்கு. 31

---

30. இந்தப் பாட்டில் பிறர் என்பது மூன்று முறை வருகிறது. முதலாவது 'பிறர்' மெய்ஞ்ஞானம் இல்லாதவர்கள்; அதாவது, மலங்களின் வாதனைக்கு உள்ளானவர்கள். இருளில் வாழ்பவர்கள். இரண்டாவது அடியில் வருகிற 'பிறர்' மெய்ஞ்ஞானிகள். இவர்கள் அறிகின்ற பேருணர்வே இறைஞானமாகும். மூன்றாவது தனிச்சீரில் வருகின்ற 'பிறர்' என்பதற்கு நான்முகன் முதலான பிறருடைய என்று பொருள். இவர்களுடைய எலும்பை அணிந்து கொண்டு இரவிலே எம்பெருமான் வன்பேயும் தானுமாக மகிழ்ந்து ஆடுகிறான் என்ற வாறு. பிறருடைய என்பு என்பதற்கு இறந்தவர்களுடைய எலும்பு என்று பொர்ருள் கொள்வாரும் உளர்.

31. மகிழ்தி – மகிழ்ச்சி அடைவாயாக. மானுடரில் நீயும் திகழ்தி – மனிதர்களிலே நீ ஒளிமிகுந்து விளங்குவாயாக. பெருஞ்சேமம் – வலிமையான பாதுகாப்பு. யாரென்பேயேனும் – இறந்தவர்களில் எவருடைய எலும்பாக இருந்தாலும். அதை இகழாமல் (அணிந்து கொள்கிற.)

பெருகொளிய செஞ்சடைமேற்
பிள்ளைப் பிறையின்
ஒருகதிரே போந்தொழுகிற்
றொக்கும்—தெரியின்
முதற்கண்ணான் முப்புரங்கள்
அன்றெரித்தான் மூவா
நுதற்கண்ணான் தன்மார்பின் நூல். 32

நூலறிவு பேசி
நுழைவிலா தார்திரிக
நீல மணிமிடற்றான்
நீர்மையே—மேலுலகத்(து)
எக்கோலத் தெவ்வுருவாய்
எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத் தவ்வுருவே யாம். 33

---

32. பெருகொளிய – மிகுந்த ஒளியையுடைய. முதற்கண்ணான் – முதன்மையாக இருப்பவன். மூவா நுதற்கண்ணான் – ஆற்றல் மிகுந்த நெற்றிக்கண்ணை உடையவன். பிள்ளைப் பிறை – இளம் பிறை. அவனுடைய மார்பின் நூல் எப்படிக் காட்சி தருகிறது என்றால், தலையில் அணிந்த இளம்பிறையிலிருந்து ஒரு கதிர் கீழே இறங்கி வந்து மார்பிலே ஒழுகுவது போன்று எழில் ஒளி வீசுகிறது!

இந்தப் பாடலில் காரைக்கால் அம்மையாரின் அழகுணர்ச்சியும், அதை எழிலோடு வெளியிடுகிற கவியாற்றலும் நன்கு துலங்குகின்றன. ஞானக்கவிஞர் என்ற நிலைக்கு ஏற்ப ஞானப் பேருண்மையும் கவியாற்றலும் ஒருங்கே இணைந்த பாடல் இது.

33. நூலறிவு - வெறும் படிப்பு. நுழைவிலாதார் – மெய்ஞ்ஞானத்தின் வழியிலே நுழைந்து பாராதவர்கள்; அதாவது அகப்பார்வை இல்லாதவர்கள். நீர்மையே – இயல்பே. எந்த வடிவத்தில், எந்தக் கோலத்தில், எத்தவங்கள் செய்பவருக்கும் எம்பெருமான் அந்தந்த உருவமாய், அந்தந்தக் கோலமாய் வந்து ஆட்கொள்ளுகிறான் என்பதே தத்துவமாகும்.

ஆமா றறியாவே
வல்வினைகள் அந்தரத்தே
நாமாளென் றேத்தார்
நகர்மூன்றும்—வேமா(று)
ஒருகணையாற் செற்றானை
உள்ளத்தால் உள்ளி
அருகணையா தாரை அடும். 34

அடுங்கண்டாய் வெண்மதியென்
றஞ்சி இருள்போந்
திடங்கொண் டிருக்கின்ற
தொக்கும்—படங்கொள்
அணிமிடற்ற பேழ்வாய்
அரவசைத்தான் கோல
மணிமிடற்றி னுள்ள மறு. 35

---

34. ஆமாறு அறியாவே – பயன்தரும் வழியை, கைகூடும் நெறியை அறியாமல் நிற்பதோடு, என்ன விளையும் என்பதை வினைகள் அறிய மாட்டா. முன்பின் சிந்தியாமலே அவை தம் கடன்களை ஆற்றும் என்றவாறு. நாம் ஆள் – நாம் சிவபெருமானுக்கு அடியேம். வேமாறு – வேகும்படி. வல்வினைகள் அடும் என்று கூட்டிப் பொருள்கொள்ள வேண்டும். முப்புரத்தையும் செற்றானை உள்ளத்தால் உள்ளி அருகு அணையாதவர்களை: வல்வினைகள் அடும் என்றவாறு. அடும் – துன்புறுத்தும். அவை ஆமாறு அறியா.

35. அடும் – அழிக்கும். அணிமிடற்ற பேழ்வாய் அரவு – தொண்டையையும் திறந்த வாயையும் உடைய பாம்பு. கோலமணி மிடற்றில் – அழகிய நீலமணிக்கு ஒப்பான கழுத்தில். இடங்கொண்டு இருக்கின்றது – இடத்தைப் பிடித்துக்கொண்டு இருக்கின்றது (மறு). அரவு அசைத்தான் – பாம்பினைக் கச்சாக அணிந்த சிவன். அவனுடைய கழுத்திலே உள்ள மறு எப்படி இருக்கிறது என்பதை அம்மையார் ஒரு தற்குறிப்பேற்றமாகக் கூறுகிறார். இருளானது தன்னை வெண்மதி அழித்துவிடும் என்று அஞ்சிக் கழுத்திலே தனக்கென்று ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்து கொண்டதுபோல் தோற்றம் தருகிறது.

மறுவுடைய கண்டத்தீர்
வார்சடைமேல் நாகம்
தெறுமென்று தேய்ந்துழலும்
ஆ ஆ—உறுவான்
தளரமீ தோடுமேல்
தானதனை யஞ்சி
வளருமோ பிள்ளை மதி. 36

மதியா அடலவுணர்
மாமதில்மூன் றட்ட
மதியார் வளர்சடையி
னானை—மதியாலே
என்பாக்கை யாலிகழா
தேத்துவரேல் இவ்வுலகில்
என்பாக்கை யாய்ப்பிறவார் ஈண்டு. 37

---

36. தெறும் என்று – வருத்தும் என்று. சடைமேல் இருக்கின்ற நாகம் தன்னைத் துன்புறுத்தும் என்று அஞ்சி மதியானது தேய்ந்து உழலும் அன்றோ. ஆனால் இளம்பிறை வளர்பிறையாக வளர்வது எப்படி?

37. அடலவுணர் – போர் புரிகின்ற அரக்கர்கள். அட்ட – அழியும்படி செய்த. மதியார் – சந்திரன் பொருந்திய.

மதியாலே – அறிவினாலே. என்புயாக்கையால் இகழாது – எலும்புமாலை அணிந்த மேனியன் என்ற காரணத்தினால் அவனை இகழாமல். ஏத்துவரேல் – வழிபடுவார்களானால். என்பு யாக்கையாய்ப் பிறவார் ஈண்டு – இந்த உலகிலே என்புடல் எடுத்து இங்கு வந்து பிறவார்கள்.

சிவன் என்புமாலை அணிந்த உடம்பினன் என்பது கண்டு இகழாமல் அவனை ஏத்தினால் அப்படி ஏத்துவோர்க்கு என்பாலாகிய உடற்பிறவி இனி இல்லை என்றபடி.

ஈண்டொளிசேர் வானத்
தெழுமதியை வாளரவந்
தீண்டச் சிறுகியதே
போலதே—பூண்டதோர்
தாரேறு பாம்புடையான்
மார்பில் தழைத்திலங்கு
கூரேறு காரேனக் கொம்பு. 38

கொம்பினையோர் பாகத்துக்
கொண்ட குழகன்றன்
அம்பவள மேனி
அதுமுன்னஞ்—செம்பொன்
அணிவரையே போலும்
பொடியணிந்தால் வெள்ளி
மணிவரையே போலும் மறித்து. 39

---

38. தார் – கொன்றை மாலை. இளம்பிறையானது வாள் அரவம் தீண்டச் சிறுகியது போல் தோற்றம் தருகிறது. அவனுடைய மார்பிலே மாலையின் மீது ஏறுகின்ற பாம்பும், செறிந்து ஒளிவீசுகின்ற (தழைத்திலங்கு) கூர்மையான ஏனக்கொம்பு அணியாகத் திகழ்கின்றது. ஏனக்கொம்பு – பன்றியின் கொம்பு.

பன்றியின் கொம்பு என்றது வராக அவதாரத்தில் முரித்த கொம்பைச் சிவபெருமான் தமது மார்பில் அணிந்துள்ளார் என்ற புராணத்தை ஒட்டி.

39. கொம்பு – பூங்கொடி போன்ற உமை அம்மை. குழகன் – எழிலனாகிய சிவபெருமான். இயற்கையெழிலைத் துய்க்கும் பான்மையிலே இறையெழில் சித்தரிக்கப் பெறுகிறது!

அவனுடைய சிவந்த பவளம் போன்ற மேனி செம்பொன் அணிவரையாகிய மேருமலையைப் போன்று காட்சி தருகின்றது. அதே மேனி திருநீறு அணிவதால் வெள்ளிப் பனிமலையாகிய கயிலை மலை போன்று காட்சி தருகின்றது. மறித்து – அதுவே மீண்டும்.

மறித்து மடநெஞ்சே
　　வாயாலுஞ் சொல்லிக்
குறித்துத் தொழுதொண்டர்
　　பாதம்—குறித்தொருவர்
கொள்ளாத திங்கட்
　　குறுங்கண்ணி கொண்டார்மாட்(டு)
உள்ளாதார் கூட்டம் ஒருவு. 40

ஒருபால் உலகளந்த
　　மாலவனாம் மற்றை
ஒருபால் உமையவளாம்
　　என்றால்—இருபாலும்
நின்னுருவ மாக
　　நிறந்தெரிய மாட்டோமால்
நின்னுருவம் மின்னுருவோ நேர்ந்து. 41

---

40. மடநெஞ்சே, மீண்டும் மீண்டும் தொண்டர்களின் திருவடியைத் தொழுவாயாக; வாயாலும் அஞ்சலி சொல்லித் தொட்டு வணங்குவாயாக. திங்கள் குறுங்கண்ணி கொண்டார் – சந்திரனாகிய தலைமாலையைச் சூடிக்கொண்ட சிவபெருமான். உள்ளாதார் – நினையாதவர்கள். கூட்டம் ஒருவு – அவர்களுடைய உறவை அறவே நீக்கிவிடு.

அடியார்களை உறவுகொள்வது எப்படி முக்கியமோ அவ்வாறே பாவிகளின் உறவை விட்டு நீங்குவதும் முக்கியமாகும். முந்தியது உடன்பாட்டு நெறி. பிந்தியது எதிர்மறை நெறி.

41. சிவபெருமானுடைய கோலம் மகிமை வாய்ந்தது. சங்கர நாரணனும் உமையொரு பாகனுமாகிய இறைவனே சிவபெருமான். அதாவது ஒரு பக்கம் உலகளந்த திருமால்; மறுபக்கம் உமையம்மை.

திருமாலும் உமையும் இருவருமே நீலநிறம். சிவனோ என்றால் மின்னலின் உருவம். இந்த நிலையை மிகுந்த சதுரப்பாட்டுடன் படம் பிடித்துக் காட்டுகிறார் காரைக்கால் அம்மையார். இரண்டு மேகங்களுக்கு நடுவிலே தோன்றுகிற ஒரு மின்னலின் உருவம் என்றபடி.

நேர்ந்தரவங் கொள்ளச்
சிறுகிற்றோ நீஅதனை
ஈர்ந்தளவே கொண்டிசைய
வைத்தாயோ—பேர்ந்து
வளங்குழவித் தாய்வளர
மாட்டாதோ என்னோ
இளங்குழவித் திங்கள் இது. 42

திங்க ளிதுசூடிச்
சில்பலிக்கென் றூர்திரியேல்
எங்கள் பெருமானே
என்றிரந்து—பொங்கொளிய
வானோர் விலக்காரேல்
யாம்விலக்க வல்லமே
தானே அறிவான் தனக்கு. 43

---

42. நேர்ந்து – எதிர்ப்பட்டு. அரவம் – பாம்பு. ஈர்ந்து – பிளந்து. குழவித்தாய் – குழந்தைத் தன்மையதான இளம்பிறை. அதையே இளங்குழவித் திங்கள் என்றும் அம்மை சொல்கிறார்.

இளம்பிறையானது ஒரே நிலையில் வளர்ச்சியோ தேய்வோ இல்லாமல் அதே இளம்பிறையாக எப்பொழுதும் ஒரே வடிவத்தில் இருப்பதற்குக் காரணம் கேட்பதாய் அமைந்திருக்கிறது இந்தப்பாடல்.

43. சில்பலி – வீடு வீடாகச் சென்று ஏற்கும் சிறுபிச்சை. பொங்கொளிய வானோர் – பேரொளி படைத்த தேவர்கள்.

வல்லமே - ஆற்றல் உடையோமா, இல்லை என்றபடி. தானே அறிவான் – பிறர் அறிவித்தல் இன்றி எல்லாவற்றையும் தானே அறிகின்ற பேரறிவு படைத்த எம்பெருமான்.

உலகம் முழுதிற்கும் அளிதந்து இன்ப அமுதை வழங்குகிற சந்திரனைச் சூடியவர் சிறு பிச்சைக்கென்று இல்லந்தோறும் திரிதல் வேண்டாம் என்பது குறிப்பு. வானவர்களே அதை விலக்கவில்லை என்றால் நாம் எப்படி விலக்க முடியும் என்றபடி.

தனக்கே அடியனாய்த்
தன்னடைந்து வாழும்
எனக்கே அருளாவா
றென்கொல்—மனக்கினிய
சீராளன் கங்கை
மணவாளன் செம்மேனிப்
பேராளன் வானோர் பிரான். 44

பிரானவனை நோக்கும்
பெருநெறியே பேணிப்
பிரானவன்றன் பேரருளே
வேண்டிப்—பிரானவனை
எங்குற்றான் என்பீர்கள்
என்போல்வார் சிந்தையினும்
இங்குற்றான் காண்பார்க் கெளிது. 45

---

44. மனக்கு – மனத்துக்கு. தனக்கே அடியனாய் – அவனுக்கே, சிவபெருமானுக்கே அடிமையாகி. தன் அடைந்து – அவனையே தலைவனாக அடைந்து. அருளாவாறு – திருவருள் செய்யாத காரணம். சீராளன் – எல்லாச் சிறப்புகளும் நிரம்பியவர்.

தனக்கே என்று வருகிற ஏகாரம் வேறு ஒருவருக்கு இல்லாமல் அவர் ஒருவருக்கே என்பதை வலியுறுத்த வந்த தேற்றேகாரம்.

45. பிரான் – தலைவன். நோக்கும் – மனத்தால் நினைக்கின்ற. இறைவனை வழிபடுகின்ற பெருநெறியை மேற்கொண்டு அவனுடைய பேரருளையே வேண்டுதல் செய்து, அந்தப் பெருமான் எங்குற்றான் என்று கேட்டீர்களானால் சொல்கிறேன்.

என்னைப் போன்ற அடியார்களின் சிந்தையிலும், இங்கு என்னிடத்தில் எழுந்தருளியுள்ளான். மெய்யோடு காண்பவர்களுக்கு அவன் எளியன் என்றபடி.

எளிய திதுவென்றே
ஏழைகாள் யாதும்
அளியீர் அறிவிலீர்
ஆஆ—ஒளிகொள்மிடற்(று)
எந்தையராப் பூண்டுழலும்
எம்மானை உள்நினைந்து
சிந்தையராய் வாழுந் திறம். 46

திறத்தான் மடநெஞ்சே
சென்றடைவ தல்லாற்
பெறத்தானு மாதியோ
பேதாய்—நிறத்த
இருவடிக்கண் ஏழைக்
கொருபாக மீந்தான்
திருவடிக்கட் சேருந் திரு. 47

---

46. அளியீர் – வழங்கமாட்டீர்கள். ஒளி கொள்மிடற்று எந்தை – ஒளிர்கின்ற நீல நிறமான கழுத்தை உடைய என் அப்பன். அராப்பூண்டுழலும் எம்மானை – பாம்பை அணிந்து கொண்டுவிட்ட எம்பெருமானை.

உள் நினைந்த சிந்தையராய் வாழும் திறம் மிகவும் எளிது அறிவிலிகள் இதை உணர்வதில்லை என்றபடி.

47. பேதாய் – பேதையே. நிறத்த – ஒளியுடைய. இருவடிக்கண் ஏழை – இரண்டு வகிர்ந்த வடுப்போலும் கண்களுடைய உமை அம்மைக்கு. ஏழை – மெல்லியல். திறத்தால் – இடையறாது நினைக்கும் தியான வழிபாட்டினால். பெறத்தானும் ஆதியோ – சென்றடைவது தவிர வேறு வழியில் திருவடி சேரும் திரு ஆகிய பெரும்பேற்றைப் பெறுதற்கு உன்னால் முடியுமோ?

வழிபாடு ஒன்றே வழி என்பதை வற்புறுத்துகிறது இந்தப் பாடல்.

திருமார்பில் ஏனச்
செழுமருப்பைப் பார்க்கும்
பெருமான் பிறைக்கொழுந்தை
நோக்கும்—ஒருநாள்
இதுமதியென் றொன்றாக
இன்றளவுந் தேறா(து)
அதுமதியொன் றில்லா அரா. 48

அராவி வளைத்தனைய
அங்குழவித் திங்கள்
விராவு கதிர்விரிய
வோடி—விராவுதலாற்
பொன்னோடு வெள்ளிப்
புரிபுரிந்தாற் போலாவே
தன்னோடே ஒப்பான் சடை. 49

---

48. ஏனம் – பன்றி. செழு – அழகிய. மருப்பு – கொம்பு. ஏனச்செழு மருப்பை – சிவபெருமானுடைய மார்பில் அணியப் பெற்றுள்ள பன்றியின் அழகிய கொம்பை. ஒருநாள் – ஒருநாளிலும், என்றைக்குமே. தேறாது – தெளியாமல், தெளிவுபெற முடியாமல். மதியொன்றில்லா அரா – அறிவில்லாத பாம்பு.

கருத்து என்னவென்றால் அறிவற்ற பாம்பானது ஏன மருப்பையும் இளம்பிறையையும் மாறிமாறி நோக்குகிறது. மதியின்மையினால் இந்த இரண்டில் எது சந்திரன் என்று அதனால் தெரிந்துகொள்ள இயலவில்லை.

49. இப்பாட்டின் முதலாவது அடியில் கோடு போன்று வளைந்த இளம்பிறையாகிய குழவித் திங்களுக்கு நம் ஞானக் கவிஞர் ஓர் அழகிய அடைமொழி தருகிறார். அராவி வளைத்தனைய இளம்பிறை என்கிறார்.

அராவுதல் என்றால் பொற்கொல்லர் இரம்பம் கொண்டு அராவுதலைக் குறிக்கின்றது. இளந்திங்கள் வெள்ளியை அராவி வளைத்தது போன்று தோற்றம் தருகின்றது. விராவுதல் – பொருந்துதல்.

சிவபெருமானுடைய சடை பொன்னிறமாக இருப்பதால் அதன் மீது பிறையின் ஒளி படர்வதானது பொன்னும் வெள்ளியும் சேர்த்துப் புரிபுரியாகத் திரித்ததுபோல் அந்தச் சடையானது தோற்றம் தருகிறது.

சடைமேலக் கொன்ற
　　தருகனிகள் போந்து
புடைமேவித் தாழ்ந்தனவே
　　போலும்—முடிமேல்
வலப்பாலக் கோல
　　மதிவைத்தான் பங்கின்
குலப்பாவை நீலக் குழல். 50

குழலார் சிறுபுறத்துக்
　　கோல்வளையைப் பாகத்(து)
எழிலாக வைத்தேக
　　வேண்டா—கழலார்ப்பப்
பேரிரவில் ஈமப்
　　பெருங்காட்டிற் பேயோடும்
ஆரழல்வாய் நீயாடும் அங்கு. 51

---

50. வலப்பால் – வலப்பக்கம். குலப்பாவை – உமை அம்மை. குழல் – கூந்தல். புடை – அருகில். உமை அம்மையின் நீலநிறக் கூந்தல் சிவன் சடைமேல் உள்ள கொன்றையின் கனிகள் கரிய நிறத்தில் நீண்டு தொங்குவது போல் காட்சி தருகின்றது.

51. கழல்ஆர்ப்ப – வீரக்கழல் ஒலிப்ப. ஈமப்பெருங்காடு – சுடுகாடு. ஆரழல்வாய் – நிறைந்த நெருப்பினிடத்து. குழலார் – கூந்தல் அடர்ந்த. சிறுபுறத்துக் கோல்வளை – பிடரியை உடைய உமையம்மை.

பெண்மை உள்ளத்தின் பாங்கோடு இந்த வேண்டுகோள் வருகிறது. இந்த உணர்ச்சிக்குள்ளே துடிக்கிற அன்பினூடு ஒரு நகைச்சுவை இழையோடுவதை உய்த்துணர வேண்டும்.

அங்கண் முழுமதியம்
செக்கர் அகல்வானத்
தெங்கும் இனிதெழுந்தா
லொவ்வாதே—செங்கண்
திருமாலைப் பங்குடையான்
செஞ்சடைமேல் வைத்த
சிரமாலை தோன்றுவதோர் சீர். 52

சீரார்ந்த கொன்றை
மலர்தழைப்பச் சேணுலவி
நீரார்ந்த பேரியாறு
நீத்தமாய்ப்—போரார்ந்த
நாண்பாம்பு கொண்டசைத்த
நம்மீசன் பொன்முடிதான்
காண்பார்க்குச் செவ்வேயோர் கார். 53

---

52. அங்கண் – அழகிய இடமகன்ற. செக்கர் – சிவப்பு. திருமாலைப் பங்குடையான் – திருமாலை ஒரு பங்கிலே வைத்தவன். செக்கர் வானம் செஞ்சடைக்கும், சிரமாலை பல முழு மதியங்கள் எழுவது போன்ற வரிசைக்கும் ஒப்பாம்.

சிவபெருமானுடைய செஞ்சடையும் அதில் உள்ள மதியமும் ஞான நிலையங்களின் உருவகமாம். நீல மேனியினை உடைய திருமாலை ஒரு பங்கில் அமைத்துடைய தத்துவம் நீலநிறமும் செந்நிறமும் இணைகின்ற யோகதத்துவத்தைக் குறிப்பதாகும். குணங்களுக்கும் இயல்புகளுக்கும் உள்ள வண்ணங்களைச் சித்தர் இலக்கியம் ஆழமாக ஆய்ந்து சொல்லியுள்ளது.

53. சேண் - வானத்தில். பேரியாறு – கங்கை. நீத்தம் – பெருக்கம். நாண்பாம்பு – பாம்பையே நாணாகக் கொண்டு. அரையிலே கட்டிக் கொண்டு. செவ்வே - அழகிய. கொன்றையும், கங்கை நதியின் புனற்பெருக்கும் கார்காலத்தைக் குறிப்பன. கார் – கார்காலம்.

கொன்றை மலர்கள் தழைத்தலாலும், கங்கைநதி பெருகிப் பொழிவதாலும் இறைவனுடைய பொன்முடி பார்ப்பதற்கு அழகிய கார்காலம் போன்று தோன்றுகின்றது.

காருருவக் கண்டத்தெங்
　　கண்ணுதலே எங்கொளித்தாய்
ஒருருவாய் நின்னோ
　　டுழிதருவான்—நீருருவ
மேகத்தாற் செய்தனைய
　　மேனியான் நின்னுடைய
பாகத்தான் காணாமே பண்டு. 54

பண்டமரர் அஞ்சப்
　　படுகடலில் நஞ்சுண்டு
கண்டங் கறுத்ததுவும்
　　அன்றியே—உண்டு
பணியுறுவார் செஞ்சடைமேற்
　　பால்மதியி னுள்ளே
மணிமறுவாய்த் தோன்றும் வடு. 55

---

54. கார் உருவக் கண்டத்து – கருமை ஊடுருவி நிற்கின்ற கழுத்தை உடைய. நின்னோடு உழிதருவான் – உன் உடம்பில் பங்குகொண்டு உன்னைப் பிரியாமல் திரிபவன். உழிதரல் – உடன் செல்லுதல்.

நீருருவ மேகத்தாற் செய்தனைய மேனியான் – தண்ணீரையே தன்னுடைய வடிவமாகக் கொண்டுள்ள முகிலினால் செய்தது போன்ற மேனியை உடைய திருமால். பண்டு – முன்னொரு நாளில். உன்னுடைய உடம்பிலேயே இருக்கின்ற திருமால் உன்னை அடிமுடி தேடிய நாளில் காண முடியாமல் எங்கே போய் ஒளித்துக் கொண்டாய் என்றவாறு.

55. பண்டு – முன் நாளில். படுகடலில் – கடையப்பெற்ற கடலில். பணியுறுவார் செஞ்சடைமேல் – பாம்பு பொருந்தி நிற்கிற நீண்ட செஞ்சடையின் மீது. மணிமறு - நீலமணி போன்ற கரிய களங்கம். கருத்து என்னவென்றால், கழுத்தில் கருப்பு ஒரு வடு; பால்மதி யினுள்ளே மற்றொரு வடு என்பதாம்.

வடுவன் றெனக்கருதி
　　நீமதித்தி யாயின்
சுடுவெண் பொடிநிறத்தாய்
　　சொல்லாய்—படுவெண்
புலாற்றலையி னுள்ளூண்
　　புறம்பேசக் கேட்டோம்
நிலாத்தலையிற் சூடுவாய் நீ. 56

நீயுலக மெல்லாம்
　　இரப்பினும் நின்னுடைய
தீய அரவொழியச்
　　செல்கண்டாய்—தூய
மடவரலார் வந்து
　　பலியிடார் அஞ்சி
விடஅரவம் மேலாட மிக்கு. 57

---

56. வடு – குற்றம். படுவெண் புலால் தலையில் – நான்முகனின் புலால் பொருந்திய தலையில், பிரம கபாலத்தில். உள்ளூண் – அதன் உள்ளே வைத்து உண்ணுகின்ற உணவை. புறம்பேச – பழிகூற.

சுடுவெண்பொடிநிறத்தாய் – சுட்ட வெண்ணீறு அணிந்தவனே. மண்டை ஓட்டில் பிச்சை ஏற்று உண்டதற்கு ஒரு மாற்றுப்போல உள்ளது நிலவை அணிந்துகொண்டது என்றவாறு.

57. மடவரலார் – பெண்கள். பலி – பிச்சை. அரவு ஒழியச் செல் கண்டாய் – பாம்பாகிய அணிகலனைக் கழற்றிவிட்டுச் செல்வாயாக. விட அரவம் மேலாட – நச்சுப் பாம்பானது உன் மேலிருந்து கொண்டு படம் எடுத்து ஆட.

நீ உலகம் முழுவதும் திரிந்தாலும் உன்னுடைய பாம்பைக் கண்டு அஞ்சிப் பெண்கள் உனக்குப் பிச்சையிட மாட்டார்கள். ஆகையால் நீ பாம்பணியைக் களைந்துவிட்டுச் செல்ல வேண்டும் என்றவாறு.

மிக்க முழங்கெரியும்
வீங்கிய பொங்கிருளும்
ஒக்க உடனிருந்தா
லொவ்வாதே—செக்கர்போல்
ஆகத்தான் செஞ்சடையும்
ஆங்கவன்றன் பொன்னுருவில்
பாகத்தாள் பூங்குழலும் பண்பு. 58

பண்புணர மாட்டேன்நான்
நீயே பணித்துக்காண்
கண்புணரு நெற்றிக்
கறைக்கண்டா—பெண்புணரும்
அவ்வுருவோ மாலுருவோ
ஆனேற்றாய் நீறணிவ
தெவ்வுருவோ நின்னுருவ மேல். 59

---

58. செக்கர் – சிவப்பு. ஆகத்தான் – உடலை உடையவன். பூங்குழல் – அழகிய கருங்கூந்தல். சிவத்தின் உருவம் தீயின் நிறம். அம்மையின் உருவம் நீல நிறம். ஒன்று நெருப்பு; மற்றொன்று இருள்.

இவ்வாறே சிவபெருமானின் சடை. செம்பொன் நிறம். அம்மையின் கூந்தல் கரிய நிறம். இந்த இணைப்பு தீயும் இருளும் ஒன்றாய் இருப்பது போன்ற காட்சியைத் தருகிறது.

59. ஆன் ஏற்றாய் – எருதை ஊர்தியாகக் கொண்டவனே. பண்புணர மாட்டேன் – இந்தத் தத்துவத்தை என்னால் தெரிந்து கொள்ள இயலவில்லை. நீயே பணித்துக்காண் – நீயே விளக்கி அருளவேண்டும். கண்புணரும் நெற்றி – கண்பொருந்திய நெற்றி (கண்ணுதல்).

பெண்புணரும் அவ்வுருவோ – உமை அம்மையோடு கூடிய அந்த வடிவமோ. மாலுருவோ – திருமாலோடு அமைந்த உருவமோ.

நீ திருநீறு அணிந்துகொள்வது இந்த இரண்டு உருவத்தில் எதன்மீது என்ற அந்தத் தத்துவம், அந்தப் பண்பு எனக்குப் புரியவில்லை. நீயே விளக்கி அருளவேண்டும் என்றபடி.

மேலாய மேகங்கள்
கூடியோர் பொன்விலங்கல்
போலாம் ஒளிபுதைத்தா
லொவ்வாதே—மாலாய
கைம்மா மதகளிற்றுக்
காருரிவை போர்த்தபோ(து)
அம்மான் திருமேனி அன்று. 60

அன்றுந் திருவுருவங்
காணாதே ஆட்பட்டேன்
இன்றுந் திருவுருவங்
காண்கிலேன்—என்றுந்தான்
எவ்வுருவோ நும்பிரான்
என்பார்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவம் ஏது. 61

---

60. மேலாய மேகங்கள் – பெரும் முகில்கள். பொன்விலங்கல் – பொன்மலை. கார் உரிவை – யானையின் கரிய தோல்.

ஏழு மேகங்களும் சேர்ந்து ஒரு பொன்மலையை மூடி, அதன் ஒளியை மறைத்தாலும் அந்தக் காட்சியானது சிவபெருமான் யானைத் தோலைத் தன் மேனியிலே போர்த்தியதற்கு ஈடாகாது.

61. அன்றும் – ஆதியிலும், அதாவது இந்நிலையை நான் அடைவதற்கு முன்பே; இதற்கு ஞானப்பொருள் என்னவென்றால் இந்தத் 'தொந்தம்' முற்பிறவிகளிலிருந்தே தொடர்ந்து வருவது. இன்றும் – இந்நிலையை, இந்தப் பேய்நிலையை அடைந்த (ஞான பரிபக்குவ) நிலையிலும்; இந்தப் பிறவியிலும் என்றும் கொள்க.

'கண்டதும் காதல்' என்று வழக்கு இருக்கிறது. இதுவோ காணாதே, காதல்! அன்றும் உன்னைக் காணாமலேயே உனக்கு ஆளானேன். இன்றும், இன்னமும் உன் உருவத்தைச் சிவப்போ, கறுப்போ என்று கண்டறியேன்! உன் காதலன் எப்படியிருப்பான் என்று கேட்கிறவர்களுக்கு என்ன மறுமொழி சொல்லப் போகிறேன். உனக்கு உருவம் என்ற ஒன்று ஏது?

ஏநொக்கும் ஏதொவ்வா
தேதாகும் ஏதாகா(து)
ஏதொக்கும் என்பதனை
யாரறிவார்—பூதப்பால்
வில்வேட னாகி
விசயனோ டெற்றநாள்
வல்வேட னாய வடிவு. 62

வடிவுடைய செங்கதிர்க்கு
மாறாய்ப் பகலே
நெடிதுலவி நின்றெறிக்குங்
கொல்லோ—கடியுலவு
சொன்முடிவொன் றில்லாத
சோதியாய் சொல்லாயால்
நின்முடிமேல் திங்கள் நிலா. 63

---

62. பூதம் – இறந்த காலம். கழிந்த காலத்தில் கிராத வேடம் கொண்டான் சிவபிரான் என்று அர்ச்சுனனைத் தொடர்பு படுத்துகிற புராணக்கதை கூறும். கிராத வேடம் இழிவான வேடம் என்று அவர் இகழவில்லை. இறைவனுக்கு உயர்வு தாழ்வு கிடையாது என்பதை உணர்த்தியபடி.

எது உனக்கு ஒவ்வும், எது ஒவ்வாது, எது பிடிக்கும், எது பிடிக்காது என்பதெல்லாம் மனிதமனத்தின் உலக இயல்பு. இறைவனுடைய நிலை அதுவன்று.

63. வடிவுடைய செங்கதிர் – அழகிய செஞ்சூரியன்.

கடியுலவு – நீ உலவுகிற. சொன்முடிவு ஒன்று இல்லாத – சொற்களால் முடிவு கட்டிச் சொல்ல முடியாத. சோதியாய் – ஒளியின் வடிவமாக இருப்பவனே.

நிலா இலங்கு வெண்மதியை
நேடிக்கொள் வான்போல்
உலாவி யுழிதருமா
கொல்லோ—நிலாவிருந்த
செக்கரல் வானமே
யொக்குந் திருமுடிக்கே
புக்கரவங் காலையே போன்று. 64

காலையே போன்றிலங்கும்
மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும்
வெண்ணீறு—மாலையின்
றாங்குருவே போலுஞ்
சடைக்கற்றை மற்றவர்க்கு
வீங்கிருளே போலும் மிடறு. 65

---

64. நிலா இலங்கும் – பிறைச்சந்திரன் பொருந்தியிருக்கிற. நேடிக் கொள்வான் – தேடிக்கொள்வான். உழிதருமா – திரியுமாறு. காலையே – காற்றையே. புக்கு – புகுந்து.

செக்கர் அவ்வானமே ஒக்கும் – அழகிய செவ்வானத்தை ஒத்திருக்கும். திருமுடி செவ்வானத்தை ஒத்திருக்கிறது என்றும், அந்தத் திருமுடியிலே திங்கள் பொருந்தி நிற்கிறது என்றும் சித்திரமாக வரைந்துகாட்டுவதன் பொருள் முன்பகுதியில் சித்தர்களது ஞானக் கல்வியின் நுட்பங்களிலே விளக்கப்பட்டுள்ளது.

65. நேரந்தோறும் நிறங்கள் மாறி மாறி எழில் தருகிறபான்மை முழுதும், சிவபெருமான் திருமேனியில் திகழ்கிறது என்பது இந்தப் பாடலின் கருத்தாகும். காலைப் பொழுதின் பவள நிறமே அவனுடைய திருமேனி.

நண்பகலின் காட்சி போன்று பளிச்சென்று இலங்குகிறது திருநீறு. அவனுடைய சடைக்கற்றையோ மாலையின் உருவமாகிய செக்கர் போன்று திகழ்கிறது. அவனுடைய நீலமான கழுத்து எப்படி இருக்கிறது? இரவின் இருள் போன்றது அது!

மிடற்றில் விடமுடையீர்
உம்மிடற்றை நக்கி
மிடற்றில் விடங்கொண்ட
வாறோ—மிடற்றகத்து
மைத்தாழ் இருள்போலும்
வண்ணங் கரிதாலோ
பைத்தாடும் நும்மார்பிற் பாம்பு. 66

பாம்பும் மதியும்
மடமானும் பாய்புலியும்
தாம்பயின்று தாழருவி
தூங்குதலால்—ஆம்பொன்
உருவடிவில் ஓங்கொளிசேர்
கண்ணுதலான் கோலத்
திருவடியின் மேய சிலம்பு. 67

---

66. வைத்தாடும் – படம் எடுத்து ஆடுகின்ற. உமது கழுத்தில் நஞ்சு இருக்கிறது. பாம்பும் நச்சுப் பாம்பு. அந்த நஞ்சு அதற்கு எப்படி வந்தது? உமது கழுத்தை நக்கி நக்கி அது விடம் பெற்றதோ?

மைத்தாழ் இருள் – மையை இறக்கியது போன்ற கருமை. சிவபெருமானுடைய கழுத்தில் நஞ்சு தங்கியதை வைத்து, அரவோடு பிணைத்தவாறு இப்படி ஒரு வினாவை எழுப்புகிறார் அம்மையார்.

67. சிவபெருமானுடைய காலில் வீரச் சின்னமான கழல், வீரகண்டை அணியாக விளங்குகிறது. இது வீரத்தின் அணிகலன் அல்லவா, சிவனாகிய ஆண்டிக்கு எப்படிப் பொருந்தும் என்ற கேள்வி எழுகிறது அல்லவா?

ஒன்றுக்கொன்று வைரிகளான, பகைமை கொண்ட பாம்பும் சந்திரனும், மானும் புலியும் தமக்குள்ளே போரிடாமல் சமன்பட்டு இணையும்படிக் கூட்டிவைத்த சிவனுடைய ஆற்றல் எத்தகைய வீர சாதனை! அதுமட்டுமா? வேகமாகப் பூமியையே பிளக்கவந்த கங்கையைச் சடையிலே அடக்கிய தன்மை எளிதா? எனவே சிவனுக்கு வீரக்கழல் சாலும்!

சிலம்படியாள் ஊடலைத்
தான்தவிர்ப்பான் வேண்டிச்
சிலம்படிமேற் செவ்வரத்தஞ்
சேர்த்தி—நல்லம்பெற்று
எதிராய செக்கரினும்
இக்கோலஞ் செய்தான்
முதிரா மதியான் முடி. 68

முடிமேற் கொடுமதியான்
முக்கணான் நல்ல
அடிமேற் கொடுமதியோங்
கூற்றைப்—படிமேற்
குனியவல மாம்அடிமை
கொண்டாடப் பெற்றோம்
இனிஅவலம் உண்டோ எமக்கு. 69

---

68. சிலம்பு அடியாள் – சிலம்பணிந்த பாதத்தினளான உமையம்மை! சிலம்பு அடிமேல் – அந்தச் சிலம்பையணிந்த பாதத்தின் மீது (உமையொரு பாகம்). செவ்வரத்தம் – செம்பஞ்சுக் குழம்பை.

உமையம்மையின் ஊடலைத் தணிப்பதற்காகச் சிவன் என்ன செய்தான்? சிலம்பணிந்த பாதத்தில் உள்ள சிவப்பையே தலைமீதும் பூசிக்கொண்டு செஞ்சடைக் கோலம் செய்துகொண்டு விட்டான்!

69. கொடுமதியான் – வளைந்த திங்களைச் சூடியவன். நல்ல அடி – அவனுடைய நற்றிருவடியை. மேற்கொடு – எங்கள் தலைமீது கொண்டு. அதாவது சிவன் திருவடிகளைச் சென்னியில் சூடினோம். எனவே, கூற்றை, எமனை, நாங்கள் மதிக்க மாட்டோம். ஒரு பொருட்டாக எண்ணமாட்டோம்.

படிமேல் – உலகத்தில். குனியவலம் ஆம் – தொண்டு செய்தற்கு வல்லமை தருகிற. இனி அவலம் உண்டோ எமக்கு? இனி எங்களுக்குத் துன்பம் ஏது? இல்லை என்றவாறு.

எமக்கிதுவே பேராசை
என்றும் தவிரா(து)
எமக்கொருநாள் காட்டுதியோ
எந்தாய்—அமைக்கவே
போந்தெரிபாய்ந் தன்ன
புரிசடையாய் பொங்கிரவில்
ஏந்தெரிபாய்ந் தாடும் இடம். 70

இடப்பால வானந்
தெழுமதியை நீயோர்
மடப்பாவை தன்னருகே
வைத்தால்—இடப்பாகங்
கொண்டாள் மலைப்பாவை
கூறொன்றுங் கண்டிலங்காண்
கண்டாயே முக்கண்ணாய் கண். 71

---

70. என்றும் தவிராது – ஒருநாளும் நீங்காது. எமக்கொருநாள் காட்டுதியோ – ஒருநாள் எங்களுக்குக் காண்பிக்க வேண்டும். எரிபாய்ந்தன்ன – எரிகிற நெருப்பு பிடித்துக் கொண்டது போல. புரிசடை – முறுக்கிய சடை. ஏந்துஎரி – கையில் ஏந்திய நெருப்பு.

அவனுடைய எரி ஏந்தியவாறு பாய்ந்தாடுகிற இடத்தைக் காட்ட வேண்டும் என்று கேட்கிறார் அம்மை. சித்தர்களின் மொழியிலே சொல்வதாயிருந்தால், கூத்தப் பெருமான் நெருப்பேந்தி ஆடுகிற இடமே ஞான அரங்கமாகும்! அதைக் காண்பதே ஞானப் பயிற்சியின் குறிக்கோளும் பயனும் ஆம்.

71. மடப்பாவை – கங்கை. மலைப்பாவை – உமையம்மை. கண்டாயே – தெரிந்து கொள்வாய். கண் – எண்ணிப்பார். உமா தேவியை மதி மறைப்பதால் உமையம்மையின் கூறு ஒன்றையும் நாம் காண இயலவில்லை.

கண்டெந்தை என்றிறைஞ்சிக்
    கைப்பணியான் செய்யேனேல்
அண்டம் பெறினும்
    அதுவேண்டேன்—துண்டஞ்சேர்
விண்ணாளுந் திங்களாய்
    மிக்குலகம் ஏழினுக்குங்
கண்ணாளா ஈதென் கருத்து. 72

கருத்தினால் நீகருதிற்
    றெல்லாம் உடனே
திருத்தலாஞ் சிக்கெனநான்
    சொன்னேன்—பருத்தரங்க
வெள்ளநீ ரேற்றான்
    அடிக்கமலம் நீவிரும்பி
உள்ளமே எப்போதும் ஓது. 73

---

72. கைப்பணி - கைத்தொண்டு. திங்களாய் - சந்திரனைத் தலையில் சூடியவனே! கண்ணாளா - கண்ணோட்டம் உள்ளவனே. கருணை வாய்ந்தவனே.

துண்டம்சேர் - துண்டமாகப் பொருந்திய. என் அப்பனே என்று உன்னை வணங்கித் தொண்டு செய்வதே எனக்கு விருப்பமுடைய பெரும் பேறாகும்.

இந்த உலகம் முழுதும் ஆளுகிற வாய்ப்பு வந்தாலும் அதை நான் விரும்பவில்லை. உனது தொண்டே எனது பேறாகக் கருதுகிறேன் என்றவாறு. "அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே" என்ற ஆழ்வார் வாக்கையும் இதனோடு ஒப்பிடுக. அப்பர் சுவாமிகளும் பல இடங்களில் இக்கருத்தை வெளியிடுகிறார்.

73. திருத்தலாம் - திருத்தமாகப் பெறலாம். பருத்தரங்க வெள்ள நீர் - பெரிய அலைகள் வீசுகிற கங்கை வெள்ளத்தை. சிக்கென - உறுதியாக.

ஓத நெடுங்கடல்கள்
அத்தனையும் உய்த்தட்ட
ஏது நிறைந்தில்லை
யென்பரால்—பேதையர்கள்
எண்ணா திடும்பலியால்
என்னோ நிறைந்தவா
கண்ணார் கபாலக் கலம். 74

கலங்கு புனற்கங்கை
யூடாட லாலும்
இலங்கு மதியிலங்க
லாலும்—நலங்கொள்
பரிசுடையான் நீள்முடிமேற்
பாம்பியங்க லாலும்
விரிசடையாம் காணில் விசும்பு. 75

---

74. கண்ணார் – இடம் அகன்ற. கபாலக் கலம் – பிச்சைப் பாத்திரமாகிய ஓடு. ஓதம் – குளிர்ச்சி பொருந்திய. உய்த்து அட்ட – இட்டு நிரப்பியும். நிறைந்தில்லை – நிறையவில்லை.

பேதையர்கள் – தாருகாவனத்துப் பெண்டிர்.

கடல்கள் அத்தனையையும் செலுத்தி நிரப்பினாலும், நிரம்பாது உனது கபாலமாகிய பிச்சை ஓடு என்பார்கள். அப்படியிருக்கும்போது, தாருகாவனத்துப் பெண்கள் யோசித்துப்பாராமல் இட்ட பிச்சையினால், எப்படி நிறைந்திருக்கும் அது!

75. கங்கை ஊடலாலும் – கங்கை நதி ஊடுருவி நிற்பதாலும். சிவபெருமானுடைய சடை விசும்பாக, அதாவது, வானமாகவே காட்சி தருகிறது. ஏனென்றால் அந்தச் சடையிலே வான்பொருள்கள் அத்தனையும் உள்ளன அல்லவா?

கங்கை நதி ஓடுகிறது; மதி ஒளி வீசுகிறது; வானத்தில் உள்ள பாம்புகள் (இராகு, கேது) இங்கேயும் உள்ளன!

விசும்பின் விதியுடைய
    விண்ணோர் பணிந்து
பசும்பொன் மணிமகுடந்
    தேய்ப்ப—முசிந்தெங்கும்
எந்தாய் தழும்பேறி
    ஏபாவம் பொல்லாவாம்
அந்தா மரைபோல் அடி. 76

அடிபேரிற் பாதாளம்
    பேரும் அடிகள்
முடிபேரில் மாமுகடு
    பேரும்—கடகம்
மறிந்தாடு கைபேரில்
    வான்திசைகள் பேரும்
அறிந்தாடும் ஆற்றா தரங்கு. 77

---

76. விசும்பின் விதியுடைய – வான உரிமை கொண்ட தேவர்கள். அவர்கள் பாதத்திலே விழுந்து விழுந்து வணங்குவதால், அவர்களுடைய தலைமகுடங்கள் தோய்ந்து தோய்ந்து உராய்ந்து, பாதம் கன்றிப்போய்ச் சிவந்துவிட்டது. தாமரை போன்ற திருவடியில் தழும்பு ஏறிவிட்டது.

முசிந்து – கன்றி. பல தனிப்பாடல்களில் அரசர்களுடைய மாத்தில் சிற்றரசர்களின் முடி தாக்குவதால் வடு ஏற்பட்டதாக வருகிற கருத்து இதனோடு ஒப்பிடற்பாலது.

77. முகடு - வான்முகடு. மறிந்து – கீழும் மேலுமாகத் தாக்குகிற. அரங்கு ஆற்றாது – சபை தாங்கமாட்டாது. சிவபெருமானுடைய அடியும் முடியும் கைகளும் கட்டுப்பட்டு அடங்குவன அல்ல. அடி பெயர்ந்தால் பாதாளம் பெயரும்.

அடிகளாகிய சிவபெருமானுடைய முடிபெயர்ந்தால் வான்முகடே தவிடு பொடியாகிவிடும். கைபெயர்ந்தால் வானத்துத் திசைகளே பெயர்ந்துவிடும். அதாவது அங்கங்கள் உலகங்களைக் கடந்து செல்வன. எனவே, அரங்கு தாங்காது என்ற உணர்வுடன் இறைவன் ஆடுகிறான். என்றவாறு.

நடராசனுடைய கூத்துக்கு அடியிலே ஒரு மனித உருவம் கிடக்கிறது. அவன் ஆடுவது நிராலம்ப நடனம். கீழே பட்டும் படாமலும், எத்திசைக்கும் யாருக்கும் எந்த நோவும் ஏற்படாதவாறு உலகளாவிய முறையில் அந்த மாயக் கூத்து நடைபெறுகிறது என்பதே தத்துவப் பொருளாம்.

அரங்கமாய்ப் பேய்க்காட்டில்
ஆடுவான் வாளா
இரங்குமோ எவ்வுயிர்க்கும்
ஏழாய்—இரங்குமேல்
என்னாக வையான்தான்
எவ்வுலகம் ஈந்தளியான்
பன்னாள் இரந்தாற் பணிந்து. 78

பணிந்தும் படர்சடையான்
பாதங்கள் போதால்
அணிந்தும் அணிந்தவரை
யேத்தத்—துணிந்தென்றும்
எந்தையார்க் காட்செய்யப்
பெற்ற இதுகொல்லோ
சிந்தையார்க் குள்ள செருக்கு. 79

---

78. ஏழாய் – ஏழையாய், சிவபெருமான், இரங்குமேல், திருஉளம் இரங்குவாரானால் எவ்வுலகத்தைத்தான் கொடுத்தருள மாட்டான். (எவ்வுலகம் ஈந்தளியான்), எத்தகைய மேன்மையோடு தான் வைக்கமாட்டான் (என்னாக வையான்) என்றவாறு.

79. சிந்தை என்பதை உவகைப் பெருக்கினால் சிந்தையார் என்று உயர்திணையாகக் கூறினார். செருக்கு – இறுமாப்பு. படர் சடையானுடைய பாதங்களைப் பணிவதும். போதினால், பூவினால் அணிசெய்வதும், அவன் பாதங்களைச் சூடிய அடியார்களைப் போற்றுதலும் ஆகிய செயலினால் உள்ளம் இறுமாந்தது என்றவாறு, இது மாசற்ற ஓர் பெருமிதம் ஆகும்.

செருக்கினால் வெற்பெடுத்த
எத்தனையோ திண்தோள்
அரக்கனையும் முன்னிறுத்த
தஃதே—திருத்தக்க
மாலயனுங் காணா
தரற்றி மகிழ்ந்தேத்தக்
காலனையும் வென்றுதைத்த கால். 80

காலனையும் வென்றோம்
கடுநரகங் கைகழன்றோம்
மேலை இருவினையும்
வேரறுத்தோம்—கோல
அரணார் அவிந்தழிய
வெந்தீயம் பெய்தான்
சரணார விந்தங்கள் சார்ந்து. 81

---

80. சிவபெருமானுடைய திருவடிகளின் வல்லமைகளை இந்தப்பாடல் கூறுகிறது. ஆணவத்தினால் கயிலை மலையை எடுத்த பல தோள்கள் கொண்ட அரக்கனாகிய இராவணனை முன்பு இறுத்தது, நசுக்கியது அதுவே.

மாலும் அயனும் காணாமல் அரற்றிப் பின்னர் பக்தியுடன் ஏத்திய திருவடியும் அதுவே. அந்தத் திருவடியே காலனையும் வென்று உதைத்த காலாகும். இராவணனை நசுக்கியது ஆணவ மலத்தை ஒழித்தவாறு. மாலும் அயனும் காணாதது உலக மயக்கமும் அறிவும் காணமுடியாதது. அதாவது மயக்கமும் கன்மமும் கடந்த நிலை. காலனை வென்றுதைத்தது என்பது காலங்கடந்த தத்துவமாய் அது நிற்பதேயாம்.

81. கோல அரணார் – அழகிய முப்புரத்தார். சிவபெருமானுடைய திருவடித் தாமரைகளை, சரணாரவிந்தங்களை நாம் சார்ந்துள்ளமையினால், காலனை வென்றவர்கள் ஆனோம்.

கொடுநரகம் ஆகிய தீவினைப் பயனின் துய்ப்பை ஒழியுமாறு செய்துவிட்டோம். இனி நம்மை வந்து பொருந்தக் கூடிய பிறவிக்கு ஏதுவாகிய இருவினைகளையும் வேரறுத்து விட்டோம் என்றபடி.

சார்ந்தார்க்குப் பொற்கொழுந்தே
ஒத்திலங்கிச் சாராது
சேர்ந்தார்க்குத் தீக்கொடியின்
பெற்றியதாம்—தேர்ந்துணரில்
தாழ்சுடரோன் செங்கதிருஞ்
சாயுந் தழல்வண்ணன்
வீழ்சடையே என்றுரைக்கும் மின். 82

மின்போலும் செஞ்சடையான்
மாலோடும் ஈண்டிசைந்தால்
என்போலும் காண்பார்கட்
கென்றிரேல்—தன்போலும்
பொற்குன்றும் நீல
மணிக்குன்றுந் தாமுடனே
நிற்கின்ற போலும் நெடிது. 83

---

82. சார்ந்தார்க்கு – அவனுடைய திருவடிகளைச் சேர்ந்தவர்களுக்கு. பொற்கொழுந்து – பொன்னால் ஆகிய கொழுந்து. தீக்கொடியின் – தீக்கொழுந்தின். பெற்றியதாம் – தன்மை உடையதாம்.

தாழ்சுடரோன் – தங்கி வீழும் கதிர்களை உடையோனாகிய சூரியனின். செங்கதிரும் – சூரியனுடைய சிவந்த கரங்களும். சாயும் – தோற்றுப்போகும்படியான. தழல்வண்ணன் – தீயின் நிறங் கொண்ட சிவபெருமான். வீழ்சடை – தாழ்ந்து தொங்குகிற சடை. இப்பாடல், சிவபெருமானுடைய சடை அடியவர்களுக்குப் பொற்கொழுந்துபோல் பயன்செய்யும் என்றும், அல்லாதவர்க்குத் தீக்கொழுந்துபோல துன்புறுத்தும் என்றும் கூறியவாறு.

83. என்போலும் – எவ்வாறு இருக்கும். காண்பார்கட்கு - பார்ப்பவர்கட்கு. என்றிரேல் – என்று கேட்பீர்களானால். தன்போலும் பொற்குன்றும் – தன்னை ஒத்த மேருமலையும். நீலமணிக்குன்றும் – இந்திரநீல பருவதமும்.

மின்னலைப் போன்ற செஞ்சடையனாகிய சிவபெருமான் திருமாலோடு இணைந்த உருவமாக நிற்கும்போது, சங்கர நாரணனான உருவம், பார்ப்பதற்கு எப்படி இருக்கும் என்று கேட்பீர்களானால் மேரு மலையும் இந்திர நீல பருவதமும் இணைந்து நிற்பதுபோல் காட்சி தரும் என்றபடி.

நெடிதாய பொங்கெரியுந்
தண்மதியும் நேரே
கடிதாங் கடுஞ்சுடரும்
போலும் — கொடிதாக
விண்டார்கள் மும்மதிலும்
வெந்தீயி னாலழியக்
கண்டாலும் முக்கணான் கண். 84

கண்ணாரக் கண்டும்என்
கையாரக் கூப்பியும்
எண்ணார எண்ணத்தால்
எண்ணியும்—விண்ணோன்
எரியாடி என்றென்றும்
இன்புறுவன் கொல்லோ
பெரியானைக் காணப் பெறின். 85

---

84. விண்டார்கள் - பகைவர்களுடைய. அழியக் கண்டாலும்- அழியும்படி செய்தாலும். எரி - நெருப்பு; மதி - சந்திரன். கடுஞ்சுடர் - சூரியன்.

முப்புரம் எரித்த முக்கணானின் கண் எப்படி இருக்கும் என்ற நெருப்பும், சந்திரனும், சூரியனும் போல் இருக்கும் என்றபடி. சிவபெருமானுடைய மூன்று கண்கள் சூரியனும் சந்திரனும் அக்கினியுமாம். சிவபெருமானை உள்ளத்தில் நிறுத்திச் சீவனைச்சிவனாக்கி வழிபடும் ஞானிகளின் கண்களும் சூரிய சந்திர நெருப்பின் இயக்கங்களேயாம். முப்புரம் எரிவதற்கு அந்த இறையாற்றலே துணை செய்கிறது.

85. எண்ணார - மனமார. எரியாடி - கையில் தீ ஏந்தி ஆடும் சிவ பெருமான்.

அவனை நான் காணும்போது எப்படியெல்லாம் நான் இன்புறுவேன் தெரியுமா?

கண்ணின் ஆசை முழுதும் அடங்குமாறு கண்ணாரக் காண்பேன். கையின் வலு முழுதும் அடங்கும்படி கையாரக் கூப்பி வணங்கி நிற்பேன். மனத்தின் எண்ணம் முற்றும் நிறையும்படியாக எண்ணத்தால் எண்ணி எண்ணி ஒடுங்கி நிற்பேன்.

பெறினும் பிறிதியாதும்
வேண்டாம் நமக்கீ(து)
உறினும் உறாதொழியு
மேனுஞ்—சிறிதுணர்த்தி
மற்றொருகண் நெற்றிமேல்
வைத்தான்றன் பேயாய
நற்கணத்தி லொன்றாய நாம். 86

நாமாலை சூடியும்
நம்மீசன் பொன்னடிக்கே
பூமாலை கொண்டு
புனைந்தன்பாய்—நாமோர்
அறிவினையே பற்றினால்
அற்றே கெடுமே
எறிவினையே என்னும் இருள். 87

---

86. பிறிதியாதும் - வேறொன்றும். அதாவது இறைவனுக்கு அடிமையாக நிற்கும் நிலையைத் தவிர்த்து வேறொன்றும். பேயாய நற்கணத்தில் – பேய்க்கணம் என்று அழைக்கப்பெறுகிற மெய்யாகவே நல்லனவாகிய கணங்களுள் சேர்ந்து. ஒன்றாய நாம் – ஒரு பேயாகவே ஆகிவிட்ட நாம்.

சிவபெருமான் பேய்களோடு சுடுகாட்டில் ஆடுபவர் என்பதாலும், காரைக்காலம்மையும் பேயின் வடிவையே விரும்பிக் கேட்டுப் பெற்றதாலும் அம்மை இவ்வாறு கூறுகிறார்.

87. நாமாலை – பாமாலை, நாவினால் தொடுக்கப்பட்ட சொன் மாலையாகிய பாடல்கள். அறிவினையே பற்றினால் – அறிவு வடிவமாகிய பேரறிவனாகிய சிவபெருமானையே சார்ந்தால். அற்றே கெடுமே – அன்றே, அப்பொழுதே அழிந்துவிடும்.

நாம் அவனை வழிபடுகின்ற முறை பாமாலை சூடியும் பூமாலை கொண்டு புனைந்தும் என்பதாம். அறிவினைப் பற்றுகின்ற செந்நெறியிலே நாமாலை சூடுவதென்பது அண்ணாக்குக் கொண்டு செய்கின்ற தவம். அடியிலே பூமாலை புனைவது என்பது திருவடி ஞானம் என்ற தத்துவ விளக்கத்திலே விரிவாகக் கூறப்பெற்றுள்ளது.

இருளின் உருவென்கோ
மாமேகம் என்கோ
மருளின் மணிநீலம்
என்கோ—அருளெமக்கு
நன்றுடையாய் செஞ்சடைமேல்
நக்கிலங்கு வெண்மதியும்
ஒன்றுடையாய் கண்டத் தொளி. 88

ஒளிவில்லி மன்மதனை
ஒண்பொடியா நோக்கித்
தெளிவுள்ள சிந்தையினிற்
சேர்வாய்—ஒளிநஞ்சம்
உண்டவா யஃதிருப்ப
உன்னுடைய கண்டமிருள்
கொண்டவா றென்னிதனைக் கூறு. 89

---

88. எமக்கு – எம்பொருட்டு. அருள் நன்றுடையாய் – நல்லருள் உடையவனாகிய பெருமானே. நக்கிலங்கு வெண்மதியம் – மலர்ந்து நகுவது போன்ற ஒளியைச் செய்கின்ற திங்கள். மருளின் – மயக்கம் இல்லாத. மணி நீலம் – ஒளிசெய்கின்ற நீலநிறக் கல்.

நீலமான கழுத்தின் ஒளியை இருளின் உருவம் என்பதா, நீர் நிரம்பிய மேகம் என்பதா, அல்லது நீலமணி என்பதா.

89. ஒளிவில்லி மன்மதனை – ஒளி பொருந்திய வில்லை உடைய வனாகிய வலிமை மிகுந்த காமனை. வில்லி – வில்லை உடையவன்.

மன்மதனை என்ற சொல் சில ஏடுகளில் வன்மதனை என்று காண்கிறது. உலகம் முழுதையும் தனது ஆற்றலினால் காதல் மயக்கிலே ஆழ்த்துகிற வலிமை உடையவன் என்ற பொருளில் இந்தப் பாடத்தைக் கொள்வாரும் உண்டு.

சிவபெருமான் மன்மதனைப் பொடியாகும்படி நெற்றிக்கண்ணால் தீய்த்தெரித்தான். ஆனால் அதே கோபாவேச மூர்த்தி அன்பு மிகுந்தவனாய், ஞானத் தெளிவுள்ள நெஞ்சங்களிலே சென்று கூடி அமர்ந்து கொள்கிறான்.

இப்படிப்பட்ட சிவபெருமான் வானவருக்காக அன்றொருநாள் நஞ்சை உண்டு, வாயினால் உட்கொண்டு கழுத்திலே அடக்கிக் கொண்டான். ஆனால் அந்த வாய் நஞ்சினை உண்டதற்குச் சான்றாக நஞ்சின் பதிவோ கருமையோ ஏதும் இல்லாமல் எப்பொழுதும் போலவே இருக்கிறது. கழுத்து மட்டும் இருட்டாகக் காட்சி தருகிறது. நஞ்சை உண்ட வாயினுக்கு இல்லாத நீலம், கழுத்துக்கு மட்டும் எப்படி ஏறியது?

கூறெமக்கீ தெந்தாய்
குளிர்சடையை மீதழித்திட்(டு)
ஏற மிகப்பெருகின்
என்செய்தி—சீறி
விழித்தூரும் வாளரவும்
வெண்மதியும் ஈர்த்துத்
தெழித்தோடுங் கங்கைத் திரை. 90

திரைமருவு செஞ்சடையான்
சேவடிக்கே ஆளாய்
உரைமருவி யாமுணர்ந்தோங்
கண்டீர்—தெரிமினோ
இம்மைக்கும் அம்மைக்கும்
எல்லாம் அமைந்தொழிந்தோம்
எம்மைப் புறனுரைப்ப தென். 91

---

90. தெழித்து – ஒலிசெய்து. இறைவனே உனக்கு நேரக்கூடிய இடர்ப்பாடு ஒன்று இருக்கிறது. அதை எப்படி நீ தவிர்க்கிறாய் என்பதை எமக்குச் சொல். உன் தலைமீது இரைந்து விழுகின்ற கங்கையின் அலைவெள்ளம் பாம்பையும் சந்திரனையும் அடித்துக் கொண்டு ஓடி, சடையின் மீதும் அழிவு செய்தால் நீ என் செய்வாய்? இதை எமக்குக் கூறுக எம் அப்பனே!

91. உரை மருவி – சிவன் அருளிய ஆகம அளவையின்படி நின்று. தெரிமினோ – அறிந்துகொள்வீராக. இம்மை – இப்பிறவி நிலை. அம்மை – மறுமை. புறத்துரைப்பது – இழித்துக் கூறுவது.

'திரை மருவு செஞ்சடை' என்றது கங்கை பாய்ந்தோடுகின்ற சிவனுடைய செஞ்சடையை. அவனுடைய சேவடிக்கே ஆளாகி அவனைப் பற்றிய ஞான மொழிகளின் வழியில் நின்று யாம் அவனை உணர்ந்துவிட்டோம். ஆகையினால் இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டியன எமக்கு அமைந்தன என்றபடி.

என்னை யுடையானும்
ஏகமாய் நின்றானும்
தன்னை யறியாத
தன்மையனும்—பொன்னைச்
சுருளாகச் செய்தனைய
தூச்சடையான் வானோர்க்(கு)
அருளாக வைத்த அவன். 92

அவன்கண்டாய் வானோர்
பிரானாவான் என்றும்
அவன்கண்டாய் அம்பவள
வண்ணன்—அவன்கண்டாய்
மைத்தமர்ந்த கண்டத்தான்
மற்றவன்பால் நன்னெஞ்சே
மெய்த்தமர்ந்தன் பாய்நீ விரும்பு. 93

---

92. என்னையுடையானும் – என்னை ஆட்கொண்டவனும். ஏகமாய் நின்றானும் – ஞானிகள் ஞானமொழியிலே 'கேவலம்' என்று வடமொழியிலும், 'ஓர் தனிமை' என்று தமிழிலும் அழைக்கின்ற ஒருவனாய் நின்றவனும்.

இதனையே அப்பர் சுவாமிகள், "உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே" என்று பாடுகிறார். தன்னை அறியாத தன்மையன் என்ற இந்த அடி நமக்குத் திருவாசகத்தை நினைவூட்டுகிறது. "தன்பெருமை தானறியாத் தன்மையன் காண்சாழலே". செய்து அனைய – செய்தாற் போன்ற. பொன்னை, தங்கத்தைச் சுருள் சுருளாகச் செய்தது போன்ற தூய பொற்சடையான் என்றபடி.

93. அம்பவள வண்ணன் – அழகிய பவள நிறத்தவன். மைத்து – கரிய நிறம்கொண்டு. அப்படிப்பட்ட சிவன் வானோர் பிரானாவான், என்றும் அவன் அழகிய பவள வண்ணம் கொண்டவன், கருமையான கழுத்தை உடையவன். அவனிடம் என் நல்ல நெஞ்சமே, மெய்த்தமர்ந்து உண்மையாய்ப் பதிந்து அன்பாய் நீ விரும்பி, பக்தி செய்வாயாக!

விரும்பினால் நீபிரிய
கில்லாயோ வேறா
இருப்பிடமற் றில்லையோ
என்னோ—பொருப்பன்மகள்
மஞ்சுபோல் மால்விடையாய்
நிற்பிரிந்து வேறிருக்க
அஞ்சுமோ சொல்லாய் அவள். 94

அவளோர் குலமங்கை
ஆகத் தகலாள்
இவளோர் சலமகளும்
ஈதே—தவளநீ(று)
என்பணிவீர் என்றும்
பிரிந்தறியீர் ஈங்கிவருள்
அன்பணிவார் சொல்லுமினிங் கார். 95

---

94. மஞ்சுபோல் – மேகம் போன்ற. பொருப்பின் மகள் – மலையரசன் மகளாகிய உமையம்மை. மேகத்தைப் போன்ற முகில் நிறம் கொண்ட மால் விடையவனே!

நீ உமையம்மையை உன் உடம்பின் பங்கிலே கொண்டது எது காரணம் பற்றி? விருப்பத்தினால் நீ பிரிவதில்லையா? அவளுக்கு வேறான ஓர் இருப்பிடம் இல்லையா? அல்லது அவள் உன்னைப் பிரிந்து வேறாய் இருக்க அஞ்சுகிறாளா? சொல்லாய் என்றபடி.

95. அவள் – உமையம்மை. சலமகள் – கங்கை. தவளநீறு – வெண்மையான திருநீறு. அன்பு அணியார் – அன்பினால் அண்மை உடையவர். அண்மை – நெருக்கம். சொல்லுவீர் – கூறுவீராக.

ஆர்வல்லார் காண
அரனவனை அன்பென்னும்
போர்வை யதனாலே
போர்த்தமைத்துச்—சீர்வல்ல
தாயத்தால் நாமுந்
தனிநெஞ்சி லுள்ளடைத்து
மாயத்தால் வைத்தோம் மறைத்து. 96

மறைத்துலக மேழினிலும்
வைத்தாயோ அன்றேல்
உறைப்போடும் உன்கைக்கொண்
டாயோ—நிறைத்திட்
டுளைந்தெழுந்து நீயெரிப்ப
மூவுலகும் உள்புக்(கு)
அளைந்தெழுந்த செந்தீ யழல். 97

---

96. தாயத்தால் – உரிமையால். ஆண்டவனைக் காண்பதற்கு அன்பு ஒன்றே செவ்விய வழியாகும். அந்த அன்பு பிறர் கண்ணுக்குப் புலனாகாது. ஆண்டவனது அன்பென்னும் போர்வையினால் போர்த்தி வைத்து உரிமையோடு நாமும் அவனை நெஞ்சினுள் அடைத்து, அந்த நெஞ்சகமாகிய கண்ணுக்குத் தெரியாத மாயத்தில் நாம் அடைத்து வைத்தோம் என்றபடி.

97. நீ எரிப்ப உளைந்தெழுந்து – நீ எரிப்பச் சுடர்விட்டு எழுந்து, மூவுலகும் நிறைத்திட்டு, உள்புக்கு, அளைந்து (மற்றப் பொருள்களோடு கலந்து) என்று வரிசைப்படுத்திப் பொருள் கொள்ள வேண்டும்.

உறைப்போடு – கனலோடு. அளைந்து எழுந்த செந்தீ அழலை மறைத்து ஏழுலகில் எங்கே வைத்தாயோ? அல்லது கனலோடு சேர்த்து உன் கைக்குள் கொண்டுவிட்டாயோ என்று ஞானக்கனலை வியந்து கூறுகிறார் அம்மையார்.

அழலாட அங்கை
சிவந்ததோ அங்கை
அழகால் அழல்சிவந்த
வாறோ—கழலாடப்
பேயாடு கானிற்
பிறங்க அனலேந்தித்
தீயாடு வாய்இதனைச் செப்பு. 98

செப்பேந் திளமுலையாள்
காணவோ தீப்படுகாட்(டு)
அப்பேய்க் கணமவைதாங்
காணவோ—செப்பெனக்கொன்
றாகத்தா னங்காந்
தனலுமிழும் ஐவாய
நாகத்தா யாடும் நடம். 99

---

98. கழலாட – வீரக்கழல்கள் ஆடும்படி. பிறங்க – விளங்க.

தீயாடுவாய் – தீயினைக் கையிலேந்தி ஆடுகிறவனே. இந்த உண்மையை எங்களுக்குச் சொல். தீயைக் கையிலேந்தி ஆடியதால் உன் உள்ளங்கை சிவந்ததா? அல்லது, உள்ளங்கையின் அழகினால் நெருப்புச் சிவந்ததா? இந்த இரண்டில் எது உண்மை என்று எங்களுக்குச் சொல்.

99. செப்பு ஏந்து – செப்புப் போன்ற. தீப்படுகாடு – சுடுகாடு. செப்பெனக்கு ஒன்றாக – இரண்டில் ஒன்றை எனக்குச் சொல்.

உமையம்மை காணுவதற்கோ, அல்லது அந்தப் பேய்க்கணங்கள் தான் காணுவதற்கோ, இந்த இரண்டில் எதற்காக நீ நடனம் ஆடுகிறாய்? ஒன்றாகச் சொல். அங்காந்து – வாய்திறந்து. ஐவாய நாகத்தாய் – ஐந்துவாய்ப் பாம்பை அணிந்தவனே.

நடக்கிற் படிநடுங்கும்
நோக்கிற் றிசைவேம்
இடிக்கில் உலகனைத்தும்
ஏங்கும்—அடுக்கல்
பொருமேறோ ஆனேறோ
பொன்னொப்பாய் நின்னே(று)
உருமேறோ அன்றோ உரை. 100

உரையினால் இம்மாலை
அந்தாதி வெண்பாக்
கரைவினாற் காரைக்காற்
பேய்சொற்—பரவுவார்
ஆராத அன்பினோ
டண்ணலைச்சென் றேத்துவார்
பேராத காதல் பிறந்து. 101

---

100. படி – உலகம். இடிக்கில் – ஆர்ப்பரித்தல். நோக்கில் – கனன்று பார்த்தால். அடுக்கல் பொரும் ஏறு – மலையில் திரிந்து எல்லா விலங்குகளையும் போர் செய்கிற சிங்க ஏறு, ஆண்சிங்கம். ஆண்ஏறு – காளை. பொன்னொப்பாய் – பொன்மேனியனே. உரும் ஏறோ – ஆண் இடி என்கிற இடியேறோ.

நடந்தால் உலகம் நடுங்கும்; நோக்கினால் திசை வெந்துவிடும். இடிபோன்று கர்ஜித்தால் உலகம் அனைத்தும் நடுங்கும்; ஏங்கும். நீ ஊர்கின்ற எருது சிங்கமோ? அல்லது இடபயேறோ? இல்லையோ? சொல்வாயாக!

101. கரைவினால் – உருகிக் கரைந்த பேரன்பினால். பேராத – நீங்காத. பரவுவார் – பாடிப் பரவுகிறவர்கள். ஆராத அன்பு – மட்டற்ற பேரன்பு. காரைக்கால் பேய் – காரைக்காற் பேய் என்று வழங்கும் காரைக்கால் அம்மையாகிய என்னுடைய. சொல் – பாடலை; அந்தாதி வெண்பாப் பாடலை. பரவுவார் – இந்த அந்தாதியைப் போற்றிப் பணிந்து வாழ்வார்கள், பேரின்பம் துய்ப்பார்கள் என்றவாறு.

# (ஆ) பட்டினத்தடிகள்

## அருளிய பாடல்கள்

### 1. கோயில் நான்மணிமாலை

பூமேல் அயன்அறியா
    மோலிப் புறத்ததே
நாமே புகழ்ந்துஅளவை
    நாட்டுவோம்—பாமேவும்
ஏத்துஉகந்தான் தில்லை
    இடத்துஉகந்தான் அம்பலத்தே
கூத்துஉகந்தான் கொற்றக் குடை. 1

---

1. இந்த நான்மணிமாலையையும், இதைத் தொடர்ந்து வருகிற பதினோராந் திருமுறைப் பனுவல்களையும் பாடியருளியவர் திருவெண்காட்டு அடிகள் எனவும், காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்த பட்டினத்து அடிகள், பட்டினத்துப் பிள்ளையார் எனவும் வழங்குகிற மாபெரும் சித்தராவார். இவருடைய வரலாற்றின் ஒரு சிறு நிகழ்ச்சியை ஏற்கனவே சேந்தனாரின் வரலாற்றிலே பார்த்தோம்.

பட்டினத்தார் என்ற பெயரில் வழங்கிய ஞானியர்கள் இருவருண்டு என்று சிலரும், மூவர் என்று வேறு சிலரும் கூறுகிறார்கள். இந்தக் கருத்துவேறுபாடுகளை ஆராய்ந்து முடிவு காண்பதற்குரிய சரித்திரச் சான்றுகள் போதுமான அளவு இல்லை. எனினும் பதினோராந் திருமுறையில் இடம்பெறாத சில நூல்களும், பல தனிப்பாடல்களும் பட்டினத்தாரின் பெயரில் வழங்குகின்றன.

இவை போக்கிலும் நடையிலும் வெவ்வேறு ஆசுகளில் அமைந்திருந்த போதிலும், பாடல்களின் பாங்கு இவை அனைத்திலுமே சித்தர் இலக்கியத்தின் பாங்காகவே மிளிர்கின்றமை ஒரு சுவை மிகுந்த தன்மையாகும். கோயில் நான்மணிமாலையில் உள்ள இந்தப் பாடல் நடராஜனாகிய சக்கரவர்த்தியின் குடையை ஏத்துகிறது.

குடைகொண்டுஇவ் வையம் எலாங்குளிர்
வித்துஎரி பொன்திகிரிப்
படைகொண்டு இகல்தெறும் பார்த்திவர்
ஆவதில் பைம்பொன்கொன்றைத்
தொடைகொண்ட வார்சடை அம்பலத்
தான், தொண்டர்க்கு ஏவல்செய்து
கடைகொண்ட பிச்சைகொண்டு உண்டு இங்கு
வாழ்தல் களிப்புடைத்தே. 2

களிவந்து அமுதூறிக்கல் மனத்தை எல்லாம்
கசியும் படிசெய்து கண்டறிவார் இல்லா
வெளிவந்து அடியேன் மனம்புகுந்தது என்றால்
விரிசடையும் வெண்ணீறும் செவ்வானம் என்ன
ஒளிவந்த பொன்நிறமும் தொல்நடமும் காட்டும்
உடையான் உயர்தில்லை அம்பலம்ஒன்று அல்லால்
எளிவந்து இனிப்பிறர்பால் சென்றவர்க்குப் பொய்கொண்டு
இடைமிடைந்த புன்மொழியால் இச்சைஉரை யோமே. 3

---

2. இறைவன் அரசனாகவும் ஆண்டியாகவும் ஒருமித்து விளங்குகிற வாழ்வின் களிப்பை வியந்து பாடியது. வையகத்துக்கு அவன் வேந்தன். அதும் அவனுடைய தலைமை நிலைமையை உயர்த்துகிறது. ஆனால் அடியார்களுக்கோ அவன் எளிவந்த மூர்த்தியாவான்.

3. களிவந்த அமுது – உவகை வரும்படி செய்கிற அமுது. கண்டறிவார் – அறிந்து உணர்கின்றவர். வெளிவந்து – ஒளியுருவிலே வந்து. ஒளிவந்த – ஒளிவீசுகின்ற. தொன்னடம் – தொன்மையான கூத்து. ஆதியான ஒலி அதிர்வு.

உரையின் வரையும் பொருளின் அளவும்
இருவகைப் பட்ட எல்லையும் கடந்து
தம்மை மறந்து நின்னை நினைப்பவர்
செம்மை மனத்தினும் தில்லைமன் றினும்நடம்
ஆடும் அம்பல வாண! நீடு
குன்றக் கோமான் தன்திருப் பாவையை
நீல மேனி மால்திருத் தங்கையைத்
திருமணம் புணர்ந்த ஞான்று பெருமநின்
தாதவிழ் கொன்றைத் தாரும் ஏதம்இல்

வீர வெள்விடைக் கொடியும் போரில்
தழங்கும் தமருகப் பறையும் முழங்குலித்
தெய்வக் கங்கை யாறும் பொய்தீர்
விரையாக் கலியெனும் ஆணையும் நிரைநிரை
ஆயிரம் வகுத்த மாயிரு மருப்பின்

வெண்ணிறச் செங்கண் வேகமும் பண்ணியல்
வைதிகப் புரவியும் வான நாடும்
மையறு கனக மேருமால் வரையும்
செய்வயல் தில்லை யாகிய தொல்பெரும் பதியும்என்று
ஒருபதி னாயிரம் திருநெடு நாமமும்

---

4. வரை - வரம்பு, எல்லை. குன்றக் கோமான் - இமவான், மலையரசன். நடமாடும் - கூத்தினைப் புரிகின்ற.

தம்மை மறப்பதும், நின்னை நினைப்பதும் ஞானவழிபாட்டின் தன்மையாகும். அத்தகைய செம்மையான மனத்தையுடைய ஞானிகளிடம் இறைவன் வதிகிறான். அதாவது அந்தச் செம்மை மனத்திலும் தில்லை மன்றிலும் திருக்கூத்து இயற்றுகிறான் அவன்! ஞான்று - காலம். தாது - மகரந்தம். ஏதமில் - குற்றமற்ற.

தமருகம் - உடுக்கை. பொய்தீர் - நிலையான. விரையாக்கலி - பிசகாத, தவறாத, பதறாத, மறை

வைதிகப்புரவி - வேதமாகிய குதிரை. மையறு - களங்கம்.

உரிமையிற் பாடித் திருமணப் பந்தருள்
அமரர் முன்புகுந்து அறுகு சாத்திநின்
தமர்பெயர் எழுதிய வரிநெடும் புத்தகத்து
என்னையும் எழுத வேண்டுவன் நின்னருள்
ஆணை வைப்பில் காண்ஒணா அணுவும்
வானுற நிமிர்ந்து காட்டும்
கானில்வால் நுளம்பும் கருடன்ஆ தலினே. 4

ஆதரித்த மாறும்
அறிந்திலன்என்று அஃது அறிந்தே
காதலித்த நாயேற்கும்
காட்டுமே—போதகத்தோல்
கம்பலத்தான் நீள்நாக
கங்கணத்தான் தென்புலியூர்
அம்பலத்தான் செம்பொன் அடி. 5

---

தீர்ந்த - மாசில்லாத. தமர் - அடியவர்கள். வைப்பில் - உலகிலே. நின்னருள் ஆணைவைப்பில் - நின்னுடைய அருளாகிய ஆணையே, சட்டத்திலெல்லாம் பெரிய சட்டமான அந்த நீதி நெறியே உலகை இயக்குகிறது. எனவே உலகத்தை அந்த அருளாணையின் வைப்பு என்றார். நுளம்பு - கொசு.

தமர் பெயர் எழுதிய புத்தகத்திலே தம் பெயரையும் எழுத வேண்டும் என்ற கோரிக்கையிலுள்ள ஆன்ம நேயத்தோடு, கவியெழிலையும் உய்த்து உணரவேண்டும்.

5. ஆதரித்த - ஆசைப்பட்டுப் பின்தொடர்ந்த. போதகத் தோல் - யானையின் தோல், கரிஉரி. கம்பலத்தான் - போர்வையாக அணிந்து கொண்டவன். நாக கங்கணம் - பாம்பாகிய காப்பு.

அடிஒன்று பாதலம் ஏழிற்கும்
அப்புறம் பட்டதுஇப்பால்
முடிஒன்றுஇவ் அண்டங்கள் எல்லாம்
கடந்தது முற்றும் வெள்ளைப்
பொடிஒன்று தோளெட்டுத் திக்கின்
புறத்தன பூங்கரும்பின்
செடிஒன்று தில்லைச்சிற் றம்பலத்
தான்தன் திருநடமே. 6

நடமாடி ஏழ்உலகும் உய்யக் கொண்ட
நாயகரே நான்மறையோர் தங்க ளோடும்
திடமாட மதில்தில்லைக் கோயில் கொண்ட
செல்வரே உமதருமை தோரா விட்டீர்
இடமாடி இருந்தவளும் விலக்கா விட்டால்
என்போல்வார்க்கு உடன்நிற்க இயல்வது அன்று
தடமாலை முடிசாய்த்துப் பணிந்த வானோர்
தஞ்சுண்டாய் அங்குஅருதீ நஞ்சுண் டீரே. 7

---

6. அடிஒன்று - ஒரு திருவடி. முடி - எம்பெருமானே, உனது முடி. வெள்ளைப் பொடி - திருநீறு. ஒன்று - பொருந்திய.

சிவபெருமானுடைய உலகளாவிய திருக்கூத்தை ஓவியமாகத் தீட்டுவதன் வாயிலாக, யோகிகளும் ஞானிகளும் கூறுகிற 'திருக்கூத்து தரிசனம்' என்னும் ஆன்மஞான அநுபவத்தை இயம்புகிறார் பட்டினத்தார் என்னும் மெய்ஞ்ஞான சித்தர்!

7. நடமாடி - உமது நடனத்தைப் புரிந்தருளி. திடமாடம் - திண்மையான மாளிகை. இடமாடு - இடது பக்கம். மாடு - பக்கம். தடமாலை - மிகப் பெரிய மாலை. தஞ்சு உண்டாய் - தஞ்சம் கொடுக்கக் கூடிய கருணை மூர்த்தியாக.

நஞ்சுஉமிழ் பகுவாய் வெஞ்சின மாசுணம்
தன்முதல் முருக்க நெல்முதற் சூழ்ந்த
நீர்ச்சிறு பாம்புதன் வாய்க்குஎதிர் வந்த
தேரையை வவ்வி யாங்கு யான்முன்

கருவிடை வந்த ஒருநாள் தொடங்கி
மறவா மறலி முறைபிறழ் பேழ்வாய்
அயில்தலை அன்ன எயிற்றுஇடைக் கிடந்தாங்கு
அருள்நனி இன்றி ஒருவயிறு ஓம்பற்குப்
பல்உயிர் செகுத்து வல்லிதின் அருந்தி

அயர்ந்தனன் இருந்தும் போலும் பெயர்ந்துநின்று
எண்தோள் வீசிக் கண்டோர் உருகத்
தொல்எயில் உடுத்த தில்லை மூதூர்
ஆடும் அம்பலக் கூத்தனைப்
பாடுதல் பரவுதல் பணிதலோ இலமே. 8

இலவுஇதழ்வாய் வீழ்வார்
இகழ்வார் அவர்தம்
கலவி கடைக்கணித்தும்
காணேன்—இலகும்ஒளி
ஆடகம்சேர் அம்பலத்தே
ஆளுடையார் நின்றுஆடும்
நாடகம்கண்டு அன்பான நான். 9

---

8. மாசுணம் – பெரிய நெடும்பாம்பு. முருக்க – கொல்லுவதற்காக. பேழ்வாய் – பிளந்தவாய். அயில்தலை – வேலின் நுனி. செகுத்து – கொன்று. வல்லிது – வலிமை.

அயர்ந்தனன் – சோர்வடைந்தனன். தொல்எயில் – பழைமையான மதில்.

9. வீழ்வார் – விரும்பி அடர்ப்பார். கடைக்கணித்தும் – கடைக் கண்ணாலே கூட. ஆடகம் – பொன். ஆடகம்சேர் அம்பலம் – பொன்னம்பலம். நாடகம் – தெய்வத் திருக்கூத்து. அன்பு ஆன – அன்பின் மயமான (நான்).

நானே பிறந்த பயன்படைத் தேன்அயல் நாரணன்எம்
கோனே எனத்தில்லை அம்பலத் தேநின்று கூத்துஉகந்த
தேனே திருவுள்ளம், ஆகிஎன் தீமைஎல் லாமறுத்துத்
தானே புகுந்துஅடி யேன்மனத் தேவந்து சந்திக்கவே. 10

சந்து புனைய வெதும்பி மலரணை
தங்க வெருவி இலங்கு கலையொடு
சங்கு கழல நிறைந்த அயலவர்
தம்சொல் நலிய மெலிந்து கிளியொடு

பந்து கழல்கள் மறந்து தளிர்புரை
பண்டை நிறமும் இழந்து நிறையொடு
பண்பு தவிர அனங்கன் அவனொடு
நண்பு பெருக விளைந்த இனையன

நந்தி முழவு தழங்க மலைபெறு
நங்கை மகிழ அணிந்த அரவுகள்
நஞ்சு பிழிய முரன்று முயலகன்
நைந்து நரல அலைந்த பகீரதி

அந்தி மதியொடு அணிந்து தி(ல்)லைநகர்
அம்பொன் அணியும் அரங்கும் நடம்நவில்
அங்கண் அரசை அடைந்து தொழுதிவன்
அன்று முதல்எதிர் இன்று வரையுமே. 11

---

10. அயன் – பிரமன். என – என்று வணங்க. கூத்துகந்த தேனே – திருக்கூத்து இயற்றிடும் தேன்போலும் தித்திக்கும் எம்பெருமானே, தீமை – தீய வினைகள். மறுத்து - நீக்குதல் செய்து. தானே புகுந்து – எளிவந்து. சந்திக்கவே – கூடி நிற்கவே.

11. சந்து – சாந்து, சந்தனம். புனைய – பூசிக்கொள்ள. வெதும்பி – வெந்துபோய், வெம்மையடைந்து. வெருவி - அஞ்சி நடுங்கி. இலங்கு தலையொடு – அணிந்திருந்த ஆடையோடு. சங்கு - வளையல்கள்.

பந்து கழல்கள் - பந்தாகிய கழற்சிக்காய்கள். பண்பு தவிர - குணமும் மாறி. பாரதியாரின் 'குணம் உறுதியில்லை, எதிலும் குழப்பம் வந்ததடி' என்ற பாடலை நோக்குக.

முரன்று - சீற்றம் கொண்டு. நைந்து - துன்பமடைந்து, நலிந்து. நரல - அலற. அலைந்த – அலைவீசுகிற. பகீரதி - பகீரதியாகிய கங்கை.

நடம்நவில் - கூத்து இயற்றுகின்ற. அடிதோறும் 48 எழுத்தாலான சந்த விருத்தம் இது. தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றலாகும்.

வரைஒன்று நிறுவி அரவொன்று பிணித்துக்
கடல்தட வாக மிடலொடும் வாங்கித்
திண்தோள் ஆண்ட தண்டா அமரர்க்கு
அமிர்துணா அளித்த முதுபெருங் கடவுள்

கடையுகம் சென்ற காலத்து நெடுநிலம்
ஆழிப் பரப்பில் ஆழ்வது பொறாஅது
அஞ்சேல் என்று செஞ்சேல் ஆகித்தன்
தெய்வ உதரத்துச் சிறுசெலுப் புரையிற்
பௌவம் ஏழே பட்டது பௌவத்தோடு

உலகு குழைந்து ஒருநாள் உண்டதும்
உலகம் மூன்றும் அளந்துழி அங்குஅவன்
ஈரடி நிரம்பிற்றும் இலவே தேரில்
உரைப்போர்க்கு அல்லது அவன்குறைவு இன்றே
இளையன் ஆகிய தனிமுதல் வானவன்

கேழல் திருஉரு வாகி ஆழத்து
அடுக்கிய ஏழும் எடுத்தனன் எடுத்தெடுத்து
ஊழி ஊழி கீழுறக் கிளைந்தும்
காண்பதற்கு அரியநின் கழலும் வேண்டுபு
நிகில லோகமும் நெடுமறைத் தொகுதியும்

---

12. வரை - மந்தர மலை. அரவு - வாசுகியாகிய பெரும்பாம்பு. தடவாக - தாழியாக. தடவு - தாழி. கடலே பாலைக் கடையும் தாழி என்னும் பெரிய பாத்திரமாக, பானையாக! திருப்பாற் கடலைக் கடைந்த நிகழ்ச்சி இங்கே விரிவோடு பேசப்படுகிறது.

செஞ்சேல் - சிவப்பு நிறங்கொண்ட சேல்மீன். செலு - மீனின் செதிள். புரை - பள்ளம். பௌவம் - கடல்.

இளையன் - இப்படிப்பட்டவன், மேலே சொன்னவாறு இந்த இயல்புகள், திறங்கள் நிரம்பியவன்.

கேழல் - பன்றி. கிளைத்தும் - தோண்டிப் பறித்து அகழ்ந்து நிகில - எல்லா. நிகில லோகமும் - அனைத்து உலகையும்.

அகில சராசரம் அனைத்தும் உதவிய
பொன்னிறக் கடவுள் அன்னம் ஆகிக்
காண்டி லாதநின் கதிர்நெடு முடியும்
ஈங்கிவை கொண்டு நீங்காது விரும்பிச்
சிறிய பொதுவில் மறுவின்றி விளங்கி

ஏவரும் காண ஆடுதி அதுஎனக்கு
அதிசயம் விளைக்கும் அன்றே அதிசயம்
விளையாது மொழிந்தது எந்தை வளையாது
கல்லினும் வலித்து நல்லிதிற் செல்லாது
தான்சிறிது ஆயினும் உள்ளிடை நிரம்ப

வான்பொய் அச்சம் மாயா ஆசை
மிடைந்தன கிடப்ப இடம்பெறல் அருமையில்
ஐவர் கள்வர் வல்லிதிற் புகுந்து
மண்மகன் திகிரியில் எண்மடங்கு சுழற்ற
ஆடுபு கிடந்த பீடுஇல் நெஞ்சத்து

நுழைந்தனை புகுந்து தழைந்தநின் சடையும்
செய்ய வாயும் மையமர் கண்டமும்
நெற்றியில் திகழ்ந்த ஒற்றை நாட்டமும்
எடுத்த பாதமும் தடுத்தசெங் கையும்
புள்ளி ஆடையும் ஒள்ளிதின் விளங்க

---

அதிசயம் விளைக்கும் - வியப்பை உண்டாக்குகிறது. விளையாது - வணங்கிப் பணியாமல்..

மிடைந்தன - நெருங்கிக் குவிந்தன. மண்மகன் - குயவன். திகிரி - உருளை, சக்கரம். ஆடுபு - ஆடி. பீடு - பெருமை.

தழைந்த - செறிந்த. செய்யவாய் - சிவந்த வாய். மையமர் கண்டம் - நஞ்சுண்ட கழுத்து. நாட்டம் - கண். தடுத்த - தடுத்தாட் கொண்ட, அஞ்சேல் என்கிற அபயம் தருகிற.

நாடகம் ஆடுதி நம்ப கூடும்
வேதம் நான்கும் விழுப்பெரு முனிவரும்
ஆதி நின்திறம் ஆதலின் மொழிவது
பெரியதில் பெரியை என்றும் அன்றே
சிறியதில் சிறியை என்றும் அன்றே

நிறைபொருள் மறைகள் நான்குநின் அறைகழல்
இரண்டொடும் அறிவினில் ஆர்த்து வைத்த
மறையவர் தில்லை மன்றுகிழ வோனே! 12

கிழவருமாய் நோய்மூப்புக்
கீழ்ப்பட்டுக் காமத்து
உழவரும்போய் ஓயுமா
கண்டோம்—மொழிதெரிய
வாயினால் இப்போதே
மன்றில் நடமாடும்
நாயனார் என்றுரைப்போம் நாம்! 13

நாமத்தி னால்என்றன் நாத்திருந் தேன்நறை மாமலர்சேர்
தாமத்தி னால்உன் சரண்பணி யேன்சார்வ தென்கொடுநான்
வாமத்தி லேயொரு மானைத் தரித்தொரு மானைவைத்தாய்
சேமத்தி னால்உன் திருத்தில்லை சேர்வதோர் செந்நெறியே. 14

---

ஆதி - முதற்காரணம். பெரியதில் பெரியை - நின்னைவிடப் பெரியது என்று ஒன்றில்லாத அத்தனை பெரியவன் நீ. சிறியதில் சிறியை - நின்னைவிடச் சிறியது ஒன்றில்லாத அத்தனை நுண்மை யானவன் நீ! இதே கருத்து சித்தர் இலக்கியத்தில் பற்பல இடங்களில் வருவதை ஒப்பு நோக்குக!

13. காமத்துழவர் - காமச் சேற்றிலே உழுது கொண்டிருப்பவர். காமத்திலே உழல்கிற சிற்றின்ப உழவர்கள்! மொழி தெரிய - ஓதுகிற பாஷை நன்றாகப் புரியும்படியாக. ஓயுமா கண்டோம் - இளைத்து விழுதலைப் பார்த்துள்ளோம்.

14. தாமம் - பூமாலை. நாமம் - ஐந்தெழுத்து. சரண் - திருவடி. வாமம் - இடது பக்கம்.

நெறிதரு குழலை அறல் என்பர்கள்
நிழல்எழு மதியம் நுதல் என்பர்கள்
நிலவினும் வெளிது நகைஎன்பர்கள்
நிறம்வரு கலசம் முலை என்பர்கள்

அறிகுவது அரிதுஇவ் இடை என்பர்கள்
அடியிணை கமல மலர் என்பர்கள்
அவயவம் இனைய மடமங்கையர்
அழகியர் அமையும் அவர்என்செய

மறிமழு உடைய கரன் என்கிலர்
மறலியை முனியும் அரன் என்கிலர்
மதிபொதி சடில தரன் என்கிலர்
மலைமகள் மருவு புயன் என்கிலர்

செறிபொழில் நிலவு தி(ல்)லை என்கிலர்
திருநடம் நவிலும் இறை என்கிலர்
சிவகதி அருளும் அரசு என்கிலர்
சிலர்நரகு உறுவர் அறிவின்றியே. 15

---

15. நெறி - வகிடு. நெறிதரு குழல் - வகிர்ந்த கூந்தலை. அறல் - கருமணலடுக்கு. நிழல் - நிலாவொளி. நுதல் - நெற்றி. நகை - பல்.

இடை - இடுப்பு. கமலமலா - தாமரை.

கரன் - (மழுவை உடைய) கையன். சடிலம் - சடை. இப்படியெல்லாம் நலம் பயக்கும் மொழிகளைச் சொல்கிற அறிவு இல்லாமல் நரகுக்குச் செல்கிறார்கள் என்றபடி.

தில்லை என்பது யாப்பு நோக்கித் திலை என்று வந்தது. சொல்ல வேண்டிய மொழிகளாகிய "மறிமழுவுடைய கரன், மறலியை முனியும் அரன்..." என்பன போன்ற நன்மொழிகளைச் சொல்லி உய்யும் அறிவு இல்லாமல், 'நெறிதரு குழலை அறல்' எனவும், 'நுதல்' எனவும், 'நகை' எனவும், 'முலை' எனவும், 'இடை' எனவும் புன்மொழிகளைச் சொல்லி நரகம் புகுகின்றார்கள்!

அறிவில் ஒழுக்கமும் பிறிதுபடு பொய்யும்
கடும்பிணித் தொகையும் இடும்பை ஈட்டமும்
இனையன பலசரக்கு ஏற்றி வினைஎனும்
தொல்மீ காமன் உய்ப்ப அந்நிலைக்

கருவெனும் நெடுநகர் ஒருதுறை நீத்தத்துப்
புலன்எனும் கோள்மீன் அலமந்து தொடரப்
பிறப்புஎனும் பெருங்கடல் உறப்புகுந்து அலைக்கும்
துயர்த்திரை உவட்டி பெயர்ப்பிடம் அயர்த்துக்
குடும்பம் என்னும் நெடுங்கல் வீழ்த்து

நிறைஎனும் கூம்பு முரிந்து குறையா
உணர்வுஎனும் நெடும்பாய் கீறிப் புணரும்
மாயப் பெயர்ப்படு காயச் சிறைக்கலம்
கலங்குபு கவிழா முன்னம் அலங்கல்
மதியுடன் அணிந்த பொதிஅவிழ் சடிலத்துப்

பையரவு அணிந்த தெய்வ நாயக
தொல்எயில் உடுத்த தில்லை காவல
வம்பலர் தும்பை அம்பல வாணநின்
அருள்எனும் நலத்தார் பூட்டித்
திருவடி நெடுங்கரை சேர்த்துமா செய்யே. 16

---

16. பிறவிக்கடலின் கப்பற் பயணத்தை மிக்க அழகுடன் சித்திரிக்கிறது இந்தப் பாடல். பிறிதுபடு - வேறுபடுத்துகிற அல்லது விபரீதம் விளைக்கின்ற. இடும்பை ஈட்டம் - துன்பச்சுமை. இனையன - இத்தகைய. கலங்குபு - கலங்கி. கவிழா - கவிழ்ந்து போவதற்கு. அலங்கல் - மாலை.

கப்பலிலே உள்ள சரக்குகள் அறிவில்லாத ஒழுக்கம், பொய்கள், கடும்பிணித் தொகை முதலிய மூட்டைகள்! கப்பலை ஓட்டுபவன், மீகாமன் யார்? வினை என்ற பழைய பேர்வழி! கரு என்னும் ஒரு நகர்த்துறை நீரிலே புலன் என்ற பொல்லாத கோள்மீன், திமிங்கிலம் தொடர்கிறது.

பிறப்பு என்ற பெருங்கடலிலே காயச்சிறையாகிய கலம், கப்பல் புகுந்து, குடும்பம் என்கிற கல்வீழ்ந்து, நிறை கட்டுப்பாடு என்கிற கூம்பு முறிய, உணர்வு என்னும் பாய்மரம் கிழிந்து இந்தக் கப்பல் கவிழ்ந்து போவதற்கு முன்னால்.

சடிலம் - சடை. பை - நச்சுப்பை. தொல் எயில் உடுத்த - தொன்மையான மதில்கள் சூழ்ந்த. நலத்தார் - பாதுகாப்பான. வடத்தில் பூட்டி - கட்டி. நெடுங்கரை - நிலையான வீடு பேறு.

இந்தக் கப்பல் கவிழ்வதற்கு முன்பு, எம்பெருமானே, உனது அருள் என்னும் கயிற்று வடத்திலே இதைக் கட்டிக் கரையிலே இழுத்துக் கரைசேர்க்க வேண்டும்; உனது திருவடியாகிய நிலையான வீடுபேறு என்னும் கரையிலே சேர்க்க வேண்டும் என்றவாறு.

செய்ய திருமேனிச்
சிற்றம் பலவருக்குஎன்
தையல் வளைகொடுத்தல்
சாலுமே—ஐயன்தேர்
சேயே வரும்அளவில்
சிந்தாத மாத்திரமே
தாயே நமதுகையிற் சங்கு. 17

சங்கிடத் தான்இடத் தான்தன தாகச்
சமைந்து ஒருத்தி
அங்கிடத் தான்தில்லை அம்பலக் கூத்தற்கு
அவிர்சடைமேல்
கொங்கிடத் தார்மலர்க் கொன்றைஎன்
றாய்எங்கை நீயும்ஒரு
பங்கிடத்தான் வல்லையேல் இல்லையேல்
உன்பசப்பு ஒழியே. 18

ஒழிந்தது எங்கள்உறவு என்கொலோ எரியில்
ஒன்ன லார்கள்புரம் முன்னொர்நாள்
விழிந்துள ரிந்ததுதுக ளாக வென்றிசெய்த
வில்லி தில்லைநகர் போலியார்
சுழிந்த உந்தியில் அழுந்தி மேகலை
தொடக்க நின்றவர் நடக்கநொந்து
அழிந்த சிந்தையினும் வந்ததாகிலும் ஓர்
சிந்தை யாய்ஒழிவது அல்லவே. 19

---

17. செய்ய - சிவந்த. தையல் - மகள். சாலும் - பொருத்தமே. சேயேவரும் அளவில் - தொலை தூரத்தில் வரும்போதே. சிந்துதல் - கழன்று வீழ்தல்.

18. சங்கிடத்தான் - சங்கை இடப்பக்கம் உடைய திருமால். ஒருத்தி - உமை. அவிர் - ஒளிவீசுகிற. கொங்கு - வாசனை.

19. எரியில் - தீயினால். ஒன்னலர் - பகைவர். துகள் - நீறு. போலியார் - போன்றோர். ஒரு சிந்தையாய் - ஒருமனமாக. இது, தலைவன் வாரானாகத் தலைவி வருந்தல்.

அல்லல் வாழ்க்கை வல்லிநிற் செலுத்தற்குக்
கைத்தேர் உழந்து கார்வரும் என்று
வித்து விதைத்தும் விண்பார்த்து இருந்தும்
கிளையுடன் தவிரப் பொருளுடன் கொண்டு

முளைமுதிர் பருவத்துப் பதியென வழங்கியும்
அருளா வயவர் அம்பிடை நடந்தும்
இருளுறு பவ்வத்து எந்திரம் கடாஅய்த்
துன்றுதிரைப் பரப்பில் குன்றுபார்த்து இயங்கியும்
ஆற்றல் வேந்தற்குச் சோற்றுக் கடன்பூண்டும்

தாள்உழந்து ஓடியும் வான்உழந்து உண்டும்
அறியா ஒருவனைச் செறிவந்து தெருட்டியும்
சொல்பல புனைந்தும் பற்றன கழறியும்
குடும்பப் பாசம் நெடுந்தொடர்ப் பூட்டி
ஐவர் ஐந்துஇடத்து ஈர்ப்ப நொய்தின்

பிறந்தாங்கு இறந்தும் இறந்தாங்கு பிறந்தும்
கணத்திடைத் தோன்றிக் கணத்திடைக் கரக்கும்
கொப்புள் செய்கை ஒப்பின் மின்போல்
உலப்புஇல் யோனிக் கலக்கத்து மயங்கியும்
நெய்எரி வளர்த்துப் பொய்முகில் பெயல்தரும்

---

20. அல்லல் - துன்பம். கைத்து - கையகத்தில் உள்ளது. ஏர் - உழவு. வித்து விதைத்தும் - விதைகள் தூவியும். விண்பார்த்து இருந்தும் - மாரிபெய்யும் என்று வான் பார்த்திருந்தும்.

உழவு என்ற படப்பிடிப்புக்குத் தக்கனே பிற செயல்களை அடுக்கிக் கூறுகிறது இந்த உருவகம்.

வேந்தன் - அரசர்க்கு அரசன். பாசம் - கயிறு. தொடர் - சங்கிலி. நொய்து - எளிமை. கணம் - கண்ணிமைக்கும் நேரம். கரக்கும் - மறையும். கொப்புள் - நீர்க்குமிழி. ஒப்பில் - ஒப்பற்ற, நிகரில்லாத.

உலப்புஇல் - அளவற்ற. யோனி - பிறவி. எரி - வேள்வித்தீ.

தெய்வ வேதியர் தில்லை மூதூர்
ஆடகப் பொதுவில் நாடகம் நவிற்றும்
கடவுள் கண்நுதல் நடம்முயன்று எடுத்த
பாதப் போதும் பாய்புலிப் பட்டும்
மீது யாத்து அசைத்த வெள்ளெயிற்று அரவும்

சேய்உயர் அகலத்து ஆயிரம் குடுமி
மணிகிடந்து இமைக்கும் ஒருபேர் ஆரமும்
அருள்பொழிந்து அலர்ந்த திருவாய் மலரும்
நெற்றியில் திகழ்ந்த ஒன்றை நாட்டமும்
கங்கை வழங்கும் திங்கள் வேணியும்

கண்ணிடைப் பொறித்து மனத்திடை அழுத்தியாங்கு
உள்மகிழ்ந்து உரைக்க உறுதவம் செய்தனன்
நான்முகன் பதத்தின் மேல்நிகழ் பதந்தான்
உறுதற்கு அரியதும் உண்டோ
பெறுதற்கு அரியதோர் பேறுபெற் றேற்கே. 20

பெற்றோர் பிடிக்கப் பிழைத்துச் செவிலியர்கள்
சுற்றோட ஓடித் தொழாநிற்கும்—ஒற்றைக்கைம்
மாமறுகச் சீறியசிற் றம்பலத்தான் மான்தேர்போம்
கோமறுகில் பேதைக் குழாம். 21

---

மூதூர் - தொன்மையான தலம். ஆடகம் - பொன். பொது - அம்பலம். நாடகம் - திருக்கூத்து.

வேணி - சடை. அருள்பொதிந்து அலர்ந்த - அருண்மணம் கொண்டு பூத்த, திருவாய் மலர்.

பெறுதற்கரிய பேறு பெற்றுவிட்ட எனக்கு உறுவதற்கு அரியது என்று எதுவும் இருக்கிறதா? இல்லை.

21. சுற்று - சூழ்ந்து சுற்றி. ஒற்றைக் கைம்மா - தும்பிக்கை யானை. மான்தேர் - புரவி பூட்டிய தேர்.

பெற்றோர்களின் பிடிப்பிலிருந்து திமிறி, செவிலியர்கள் சூழ்ந்தோட அவர்களுக்கும் முந்தி ஓடிக் கைதொழும். எது? பேதைக் குழாம்.

பேதைஎங் கேஇனித் தேறிஉய்
　　வாள்பிர மன்தனக்குத்
தாதைதன் தாதைஎன்று ஏத்தும்
　　பிரான்தண் புலிசைப்பிரான்
கோதையும் தாமத்தன் கொன்றை
　　கொடான் இன்று கொல்லஎண்ணி
ஊதையும் காரும் துளியொடும்
　　கூடி உலாவியவே! 22

உலவு சலதி வாழ்விடம் அமரர்
　　தொழஉ ணாஎன நுகரும் ஒருவர்
　　ஊழியின் இறுதி ஒருவர் ஆழிய

புலவு கமழ்க ரோடிகை உடைபுனிதர்
　　பூசுரர் புலிசை அலர்செய் போதுஅணி
　　பொழிலின் நிழலின் வாழ்வதோர்

கலவ மயில்அ னார்சுருள் கரிய
　　குழலி னார்குயில் கருது மொழியி
　　னார்கடை நெடியவிழியி னார்இதழ்

இலவில் அழகி யார்இடை கொடியின்
　　வடிவி னார்வடிவு எழுதும் அருமை
　　யார்எனது இதயம் முழுவதும் ஆள்வரே. 23

---

22. தேறி - தெளிந்து. புலிசை - திருப்புலியூராகிய தில்லை. உய்வாள் - கடைத்தேறுவாள்! கோதை - மாலை. ஊதை - வாடை. இது கூதிர்கண்டு நற்றாய் இரங்கலாகும்.

23. சலதி - கடல். ஆழிய புலவு - உள்ளாழ்ந்த ஊனின். புலவு கமழ் - ஊனின் நாற்றம் அடிக்கிற. கரோடிகை - தலைமாலை. இஃது அடிதோறும் 36 எழுத்தாலான அளவியல் சந்தவிருத்தம்.

வடிவு எழுதும் அருமையார் - எழுதுவதற்கு வராத அழகிய வடிவம் உடையவர்கள்.

ஆள்எனப் புதிதின்வந்து அடைந்திலம் அத்தநின்
தாளின் ஏவல் தலையின் இயற்றி
வழிவழி வந்த மரபினம் மொழிவதுஉன்
ஐந்தெழுத்து அவைஎம் சிந்தையிற் கிடத்தி

நனவே போல நாள்தொறும் பழகிக்
கனவிலும் நவிற்றும் காதலேம் வினைகெடக்
கேட்பதும் நின்பெரும் கீர்த்தி மீட்பதும்
நின்நெறி அல்லாப் புன்னெறி படர்ந்த
மதியில் நெஞ்சத்தை வரைந்து நிதிஎன

அருத்திசெய் திருவது உருத்திர சாதனம்
காலையும் மாலையும் கால்பெயர்த்து இடுவதுஉன்
ஆலயம் வலம்வரு தற்கே சால்பினில்
கைகொடு குயிற்றுவது ஐய நின்னது
கோயிற் பல்பணி குறித்தே ஓயாது

உருகி நின்நினைந்து அருவி சோரக்
கண்ணில் காண்பதுஎவ் வுலகினும்காண் பனஎல்லாம்
நீயே யாகி நின்றதோர் நிலையே நாயேன்
தலைகொடு சார்வதுஉன் சரண்வழி அல்லால்
அலைகடல் பிறழினும் அடாதே அதனால்

---

ஆள் - அடிமை. அத்த - முதல்வனே. தாள் - திருவடி. ஏவல் - கட்டளை. மரபு - வழிவழியாக.

நனவு - விழிப்பு நிலை.

உருத்திரன் - சிவபெருமான். அருத்தி - நாட்டம், வேட்கை. துணைப் பொருள், கருவி 'சாதனம்' எனப்பட்டது. சால்பு - நிறைவு. குயிற்றுவது - இயற்றுவது, செய்வது.

24. சரண் - திருவடி. பிறழினும் - மாறுபட்டாலும். அடாது - பொருந்தாது.

பொய்த்தவ வேடர் கைத்துஅகப் படுத்தற்கு
வஞ்சச் சொல்லின் வார்வரை போக்கிச்
சமயப் படுகுழி சமைத்தாங்கு அமைவயின்
மானுட மாக்களை வலியப் புகுத்தும்
ஆனா விரதத்து அகப்படுத்து ஆழத்து

வளைஉணர்வு எனக்கு வருமோ உயர்தரும்
நுரையும் திரையும் நொப்புறு கொட்பும்
வரையில் சீகர வரியும் குரைகடற்
பெருத்தும் சிறுத்தும் பிறங்குவ தோன்றி
எண்ணில ஆகி இருங்கடல் அடங்கும்

தன்மை போலச் சராசரம் அனைத்தும்
நின்னிடைத் தோன்றி அடங்கும்நீ
ஒன்றினும் தோன்றாய் ஒன்றினும் அடங்காய்
வானோர்க்கு அரியாய் மறைகளுக்கு எட்டாய்
நான்மறை யாளர் நடுவுள்புக்கு அடங்கிச்
செம்பொன் தில்லை மூதூர்
அம்பலத்து ஆடும் உம்பர்நா யகனே. 24

நாய்அனைய என்னைப்
பொருட்படுத்தி நன்குஅளித்துத்
தாய்அனைய னாய்அருளும்
தம்பிரான்—தூயவிரை
மென்துழாய் மாலோடு
அயன்தேட வியன்தில்லை
மன்றுளே ஆடும் மணி. 25

---

உயர்தரும் - ஒலிக்கும். நொப்பு - தடை. கொட்பு - சுழற்சி.

கண்ணால் காண்பது அனைத்தும் எல்லா உலகிலும் காண்பது அனைத்தும் நீயேயாகி நின்றதோர் நிலை என்ற அநுபவமே ஞானிகள் இலக்கணம் வகுக்கிற ஒருமை என்பது. பொய்த்தவத்தின் வேடங்களைப் புனைந்தவர் என்றது, வேடம் தவவேடமாகிச் செயல்கள் பொய்யாக இருப்பதை என்க.

25. தூய - நலம் சிறந்த. வியன் - பெருமை மன்று - பொன்னரங்கம்.

அயனும் மாலும் தேடிக் காணாத பெருமான், தில்லைமன்றிலே ஆடுகிற அந்தச் சபாரத்தினமாகிய மணி, நாய் போன்ற இந்த இழிய என்னையும் பொருட்படுத்தித் தாயனைய வாஞ்சையோடு அருள் செய்தான் என்றபடி.

மணிவாய் முகிழ்ப்பத் திருமுகம்
வேர்ப்பஅம் மன்றுக்கெல்லாம்
அணியாய் அருள்நடம் ஆடும்
பிரானை அடைந்துருகிப்
பணியாய் புலன்வழி போம்நெஞ்ச
மேஇனிப் பையப்பையப்
பிணியாய்க் கடைவழி சாதிஎல்
லோரும் பிணம்என்னவே. 26

என்னாம் இனிமட வரலாய் செய்குவது
இனமாய் வண்டுகள் மலர்கிண்டித்
தென்னா எனமுரல் பொழில்சூழ் தில்லையுள்
அரனார் திருமுடி அணிதாமம்
தன்னால் அல்லது தீராது என்இடர்
தகையாது உயிர்கரு முகில்ஏறி
பின்னா நின்றது துணிவா டையும்வர
வீசா நின்றது பேசாயே. 27

---

26. ஒளி பொருந்திய அழகிய வாயில் புன்முறுவல் பூக்க, திருமுகத்தில் வேர்வை அரும்ப, மன்றத்துக்கே எழில் கூட்டுகிற நடனத்தைப் புரிகிறான் எம்பெருமான். அவனை நாடாத நெஞ்சத்தை வெகுண்டுரைக்கின்றது இந்தப் பாடல்.

27. மடவரல் - இளம்பாவை. முரல் - ஒலிக்கிற. தாமம் - மாலை. தகையாது - முற்றுப்பெறாது, முடிவடையாது. கார்காலம் வந்தது, காதல் நோய் மேலும் அதிகமாகத்தான் செய்யும்! அது தீர்வதற்கு வழி தாமம் ஒன்றே, வேறுவழியில்லை. கார்காலம் கண்டு தலைவி தோழியிடம் கூறுவது இது.

பேசு வாழி பேசு வாழி
ஆசையோடு மயங்கி மாசுறு மனமே
பேசு வாழி பேசு வாழி
கண்டன மறையும் உண்டன மலமாம்

பூசின மாசாம் புணர்ந்தன பிரியும்
நிறைந்தன குறையும் உயர்ந்தன பணியும்
பிறந்தன இறக்கும் பெரியன சிறுக்கும்
ஒன்றொன்று ஒருவழி நில்லா அன்றியும்
செல்வமொடு பிறந்தோர் தேசொடு திகழ்ந்தோர்

கல்வியிற் சிறந்தோர் கடும்திறல் மிகுந்தோர்
கொடையிற் பொலிந்தோர் படைப்பில் பயின்றோர்
குலத்தின் உயர்ந்தோர் நலத்தினின் வந்தோர்
ஏனையர்எங் குலத்தினர் இறந்தோர் அனையவர்
பேரும் நின்றில போலும் தேரின்

நீயும் அஃதுஅறிதி அன்றே மாயப்
பேய்த்தேர் போன்று நீப்பரும் உறக்கத்துக்
கனவே போன்று நனவுபெயர் பெற்ற
மாய வாழ்க்கையை மதித்துக் காயத்தைக்
கல்லினும் வலிதாக் கருதிப் பொல்லாத்

---

28. ஒன்றாவது நிலையில்லை என்பதை மிக அழகான மொழியில் மிகவும் பொருத்தமான பல சான்றுகளைச் சொல்லி மெய்ப்பிக்கிறார் அடிகள்.

கண்ணால் பார்ப்பது மறைந்து விடுகிறது. அதாவது காட்சி நிலையில்லை. உடம்பிலே ஒன்றைப் பூசினால் அது அப்படியே அழுக்காகப் போய்விடுகிறது. சந்தனம், பூசியது அதோடு சரி, அழுக்காகிவிடும். சேர்ந்தது பிரிகிறது, நாடகசாலையில் கூடுகிற கூட்டம்போலே! நிறைந்துள்ள பானை காலியாகத்தான் செய்யும். உயர்ந்தன வளையும். பிறந்தன இறக்கும். பெரிதாயிருப்பவை சுருங்கும்.

எல்லாரும், எத்தனை சிறந்தவரானாலும் மறைந்தனர், மறைந்தொழிந்தனர். காந்தியையே நாம் மறந்துவிட்டோம் என்பது போல, யோசித்துப் பார்த்தால் பெயரும் நிற்பதில்லை போலும்!

பேய்த்தேர் - கானல் நீர்.

தன்மையர் இழிவு சார்ந்தனை நீயும்
நன்மையில் திரிந்த புன்மையை ஆதலின்
அழுக்குடைப் புலன்வழி இழுக்கத்தின் ஒழுகி
வளைவாய்த் தூண்டிலின் உள்இரை விழுங்கும்
பன்மீன் போலவும்

மின்னுபு விளக்கத்து விட்டில் போலவும்
ஆசையாம் பரிசத்து யானை போலவும்
ஓசையின் விளிந்த புள்ளுப் போலவும்
வீசிய மரணத்தின் வண்டு போலவும்
உறுவது உணராச் செறுவுழிச் சேர்ந்தனை

நுண்நூல் நூற்றுத் தன்கைப் பருக்கும்
அறிவுஇல் கீடத்து நுந்துழி போல
ஆசைச் சங்கிலிப் பாசத் தொடர்ப்பட்டு
இடர்கெழு மனத்தினோடு இயற்றுவது அறியாது
குடர்கெழு சிறையறைக் குறங்குபு கிடத்தி

கறவை நினைந்த கன்றுஎன இரங்கி
மறவா மனத்து மாசுஅறும் அடியார்க்கு
அருள்சுரந்து அளிக்கும் அற்புதக் கூத்தனை
மறையவர் தில்லை மன்றுள் ஆடும்
இறையவன் என்கிலை என்நினைந் தனையே. 28

---

இழிவு சார்ந்தனை - இழிவை அடைந்தாய். கனவே போன்றது நனவு என்று பெயர் தாங்கிய இந்த மாயமான வாழ்க்கை. இந்த உடம்பு கல்லாக நிற்கும் என்று கருதி அதனால் இழிவு பெற்றாய்.

தூண்டிலின் வளைந்த கொக்கியில் இரை விழுங்குகிற மீனைப் போலவும், விளக்கிலே வீழ்கிற விட்டிலைப் போலவும், ஆசையினால் இன்னற்படுகிற யானை போலவும், ஓசையில் மயங்கி வீழும் பறவையாகிய அசுணம் போலவும், வாசனையினால் கவரப்பெறுகிற வண்டு போலவும். நுந்துழி - தள்ளுகிற சிறு தொளை. செறுவழி - படுகிற இடம்.

நினையார் மெலியார் நிறைஅழியார் வாளாப்
புனைவார்க்குக் கொன்றை பொதுவோ—அனைவீரும்
மெச்சியே காண வியன்தில்லை யான்அருள்என்
பிச்சியே நாளைப் பெறும். 29

பெறுகின்ற எண்ணிலி தாயரும்
பேறுஉறும் யானும் என்னை
உறுகின்ற துன்பங்கள் ஆயிர
கோடியும் ஒய்வொடு சென்று
இறுகின்ற நாள்களும் ஆகிக்
கிடந்த இடுக்கண் எல்லாம்
அறுகின் றனதில்லை ஆளுடை
யான்செம்பொன் அம்பலத்தே. 30

அம்பலவர் அங்கணர் அடைந்தவர் தமக்கே
அன்புடையர் என்னும் இதுஎன்? ஆனையை உரித்துக்
கம்பலம் உவந்தருளு வீர்மதனன் வேவக்
கண்டருளு வீர்பெரிய கால்அறி யாதே
வம்பலர் நிறைந்துவசை பேசஒரு மாடே
வாடைஉயிர் ஈரமணி மாமையும் இழந்துஎன்
கொம்புஅல் மருந்தகைமை கண்டுதகவு இன்றிக்
கொன்றைஅரு ளீர்கொடியிர் என்றுஅருளு வீரே. 31

---

29. நிறையழியார் - கட்டுப்பாட்டை இழக்க மாட்டார்கள். அதாவது மோகத்தினால் தளர்ந்து போய்விட மாட்டார்கள். வியன் - பெருமை.

30. பெறுகின்ற எண்ணிலி தாயரும் - எத்தனை பிறவிகள் அத்தனை தாய்மார்களும். அறுகின்றன - இதோ என்னைவிட்டு நீங்கி வீழ்கின்றன. 'எண்ணரிய தாயும் இளைப்பாற' என்ற அடியோடு ஒப்புநோக்க இடமுண்டு, 'எண்ணிலி தாயரும்' என்ற சொற்றொடரை!

31. கம்பலம் - போர்வை. மதனன் வேவக் கண்டருளுவீர் - காமன் சாம்பலாகும்படி ஒரு பார்வை பார்த்தருளினீர்! ஒருமாடே - ஒரு பக்கத்தில், ஒரு மூலையில் எனினுமாம். அலமருதல் - மயங்கித் துன்புறல். தலைவி தனது குறையைத் தலைவனுக்கு உணர்த்துமாறு தோழிக்குக் கூறுவதாக அமைந்துள்ள பாடல் இது.

அருளு வாழி அருளு வாழி
புரிசடைக் கடவுள் அருளு வாழி
தோன்றுழித் தோன்றி நிலைதவக் கறங்கும்
புற்புதச் செவ்வியின் மக்கள் யாக்கைக்கு

நினைப்பினும் கடிதே இளமை நீக்கம்
அதனினும் கடிதே மூப்பின் தொடர்ச்சி
அதனினும் கடிதே கதும்என மரணம்
வாணாள் பருகி உடம்பை வறிதாக்கி
நாள்நாள் பயின்ற நல்காக் கூற்றம்

இனைய தன்மையது இதுவே இதனை
எனதுஎனக் கருதி இதற்கொன்று தொடங்கிச்
செய்தன சிலவே செய்வன சிலவே
செய்யா நிற்பன சிலவே அவற்றிடை
நன்றுஎன்ப சிலவே தீதுஎன்ப சிலவே

ஒன்றினும் படாதன சிலவே என்று இவை
கணத்திடை நினைந்து களிப்பவும் கலுழ்பவும்
கணக்கில் கோடித் தொகுதி அவைதாம்
ஒன்றுஒன்று உணர்வுழி வருமோ அனைத்தும்
ஒன்றா உணர்வுழி வருமோ என்றுஒன்று

---

32. தோன்றுவழி - தோன்றும் இடத்தில், தோன்றும் காலத்தில். கறங்கும் - சுற்றுகிற. புற்புதம் - நீர்க்குமிழி. இளமை மாறுவது கொடிதே. அதனைவிடக் கொடியது மூப்பின் தொடர்ச்சி. அதனைவிடக் கொடுமை திடீரென்று வருகிற மரணம். கதுமென - திடீரென்று. நாள் நாள் - பலநாள். வறிதுஆக்கி - பயனற்றதாகச் செய்து. நல்கா - மனம் இரங்காத.

இப்படிப்பட்ட உடம்பை எனது என்று கருதி, இதற்காக என்றே செய்தன சில, செய்வன சில, நல்லவை என்று சில, தீயவை என்று சில, இரண்டிலும் சாராதன சில, கணத்திலே நினைத்துக் களிப்பதும் கவலைப்படுவதும் கணக்கில்லாதன.

தெளிவுழித் தேறல் செல்லேம் அளிய
மனத்தின் செய்கை மற்றுஇதுவே நீயே
அரியை சாலாம் பெரும தெரிவுறில்
உண்டாய்த் தோன்றுவ யாவையும் நீயே
கண்டனை அவைநினைக் காணா அதுதான்

நின்வயின் மறைந்தோ அல்லை உன்னை
மாயாய் மன்னினை நீயே வாழி
மன்னியும் சிறுமையில் கரந்தோய் அல்லை
பெருமையில் பெரியோர் பெயர்த்தும் நீயே
பெருகியும் சேணிடை நின்றோய் அல்லை.

தேர்வோர்க்குத் தம்மினும் அணியை நீயே
நண்ணியும் இடைஒன்றின் மறைந்தோய் அல்லை
இடையிட்டு நின்னை மறைப்பதும் இல்லை
மறைப்பினும் அதுவும்
நீயே யாகி நின்றதோர் நிலையே

அஃதான்று
நினைப்பரும் காட்சி நின்நிலை இதுவே
நினைப்புறும் காட்சி என்நிலை அதுவே
இனிநனி இரப்பதுஒன்று உடையன் மனம்மருண்டு
புன்மையில் நினைத்துப் புலன்வழி படரினும்

---

மனத்தின் செயல் இப்படியெல்லாம் இருக்கிறது. இந்நிலையில் நீ ஒருவனே, எம்பெருமானே, அரிய பொருள். சால அரியை. நீ அவற்றைப் பார்க்கிறாய், அவை உன்னைக் காணமாட்டா! இந்த இடத்தில் கம்பருடைய அடிகள் நினைவுகூரத்தக்கன! 'நீ அறிதி எப்பொருளும், அவை உன்னை நிலை அறியா மாமாயை என்கொலோ!'

நினைப்பதற்கு அரிதான காட்சிதான் நினது நிலை. எங்கள் நிலை என்ன? நினைப்புறுங் காட்சி! என்றாலும் இனி ஆர்வத்தோடு யாசிப்பது ஒன்று, உன்னிடம் இரப்பது ஒன்று, உடையோம். அஃது என்ன?

உலக மகான்கள் அனைவரும் ஒரே குரலில் இறைவனிடம் இடுகிற கோரிக்கை இதுவே. எல்லா நாட்டு ஞானிகளும் கடவுளிடம் கேட்கிற வரம் இதுவே. அஃது என்ன?

நின்வயின் நினைந்தேன் ஆகுதல் நின்வயின்
நினைக்ருமோ நினைக்கப் பெறுதல் அனைத்தொன்று
நீயே அருளல் வேண்டும் வேய்முதிர்
கயிலை புல்லென எறிவிசும்பு வறிதாக
இம்பர் உய்ய அம்பலம் பொலியத்
திருவளர் தில்லை மூதூர்
அருநடம் குயிற்றும் ஆதிவா னவனே. 32

வானோர் பணிய மணிஆ சனத்துஇருக்கும்
ஆனாத செல்வத்து அரசுஅன்றே — மானாகம்
பந்திப்பார் நின்றாடும் பைம்பொன்னின் அம்பலத்தே
வந்திப்பார் வேண்டாத வாழ்வு. 33

வாழ்வுஆ கவும் தங்கள் வைப்புஆகவும்
மறை யோர்வணங்க
ஆள்வாய் திருத்தில்லை அம்பலத்தாய்
உன்னை அன்றிஒன்றைத்
தாழ்வார் அறியாச் சடிலநஞ்சு
உண்டிலை ஆகில்அன்றே
மாள்வார் சிலரையன்றோ தெய்வமாக
வணங்குவதே. 34

---

புன்மையாக நினைத்துப் புலன்களின் வழியிலே சென்றபோதிலும் உன்னை நினைக்கிறவர்களாக ஆகுதல், நின்வயின் நினைந்தேம் ஆகுதல், உன்னிடம் நினைக்கும் முறையில் நினைக்கும் பேறு பெறுதல், அத்தகைய ஒன்றை நீயே, எனக்கு அருள வேண்டும். உன்னை நினைப்பதற்கு நீ வரம் தரவேண்டும் என்கிறார் அடிகள். வரங்களில் எல்லாம் பெரிய வரம் இதுதானே!

33. ஆனாத - குறைவற்ற. அம்பலத்தில் தொழுகிற அடியவர்கள் அந்தத் தொண்டு வாழ்வையே விரும்புவார்.

34. மறையோர் – தில்லைவாழ் அந்தணர். தாழ்வார் – வணங்குவார். மாள்வார் சிலரை – அன்று அந்த நஞ்சை நீ உண்ணவில்லை என்றால் யார் மாண்டிருப்பார்களோ அந்தச் சிலரை.

வணங்கும்இடை யீர்வறிது வல்லிஇடை யாளமேல்
மாரசர மாரிபொழி யப்பெறு மனத்தோடு
உணங்கிஇவள் தானும்மெலி யப்பெறும் இடர்க்கே
ஊதைஎரி தூவிஉல வப்பெறும் அடுத்தே
பிணங்கிஅர வோடுசடை யாடநட மாடும்
பித்தர்என வும்இதயம் இத்தனையும் ஓரீர்
அணங்குவெறி யாடும்மறி யாடும்அது ஈரும்
மையறையும் அல்லலையும் அல்லதுஅறி யீரே. 35

ஈரவே ரித்தார் வழங்கும் சடிலத்துக்
குதிகொள் கங்கை மதியின்மீது அசைய
வண்டுஇயங்கு வரைப்பின் எண்தோள் செல்வ!
ஒருபால் தோடும் ஒருபால் குழையும்

இருபாற் பட்ட மேனி எந்தை
ஒல்ஒளிப் பழனத் தில்லை மூதூர்
ஆடகப் பொதுவில் நாடகம் நவிற்றும்
இமையா நாட்டத்து ஒருபெரும் கடவுள்
வானவர் வணங்கும் தாதை யானே. 36

---

35. வணங்கும் இடை – துவள்கின்ற இடை, இடுப்பு. மாரசரம் – மன்மதனுடைய அம்புகள். வணங்கி – வாடி, வருந்தி. எரிதூவி – தீப்பொறி போன்று சுடுகிற துளிகளைத் தூவி. ஊதை – வாடை. பிணங்கி – மாறுபாடு கொண்டு. இஃது அடிதோறும் முப்பது எழுத்தாலான ஆளவியல் சந்த விருத்தம்.

36. ஈரம் – தண்மை. வேரி – வாசனை. தார் – மாலை. ஆடகப் பொது – பொன்னம்பலம். ஒருபக்கம் தோடு, ஒருபக்கம் குழை என்று இருபாற்பட்ட – அதாவது ஆண்பால், பெண்பால் இரண்டும் கூடிய, வானவர் வணங்கும் – அமரர்கள் வணங்குகிற. தாதையான் – அப்பன்.

மதுமழை பொழியும் புதுமந் தாரத்துத்
தேன்இயங்கு ஒருசிறைக் கானத்து இயற்றிய
தெய்வ மண்டபத்து ஐவனை அமளிச்
சிங்கம் சுமப்ப ஏறி மங்கையர்
இமையா நாட்டத்து அமையா நோக்கத்

தம்மார்பு மருகச் செம்மாந்து இருக்கும்
ஆனாச் செல்வத்து வானோர் இன்பம்
அதுவே எய்தினும் எய்துக கதும்எனத்
தெறுசொல் ஆளர் உறுசினம் திருகி
எற்றியும் ஈர்த்தும் குற்றம் கொளீஇ

ஈர்ந்தும் போழ்ந்தும் எற்றுபு குடைந்தும்
வார்ந்தும் குறைந்தும் மதநாய்க்கு ஈந்தும்
செக்குஉரல் பெய்தும் தீநீர் வாக்கியும்
புழுக்குடை அழுவத்து அழுக்கிஅல் சேற்றுப்
பன்னெடும் காலம் அழுத்தி இன்னா

---

எனக்கு என்ன நேர்ந்தாலும் அக்கறையில்லை. உனது பாதத்தை, கூத்தாடும் திருவடியை அடையவும் அணுகவும் கிடைத்தது இருக்கிறதே அது மிகப்பெரிய செல்வம். கிடையாச்செல்வம் அது. அது கிடைத்துவிட்டது. இனி என்னானால் என்ன? கவலையே இல்லை.

வானோர் இன்பமாகிய சொர்க்கம் எய்தினும் எய்துக; அல்லது எற்றியும் இழுத்தும் மதநாய்க்குக் கொடுத்தும் செக்கிலே போட்டும், இன்னும் என்னென்ன உண்டோ அத்தனை துன்பத்துக்கும் உள்ளாக்குகிற நரகமே வந்தாலும் வரட்டும். கடுந்துயரம் நிரயம் சேரினும் சேர்க! என்னை நல்லவன் என்னட்டும், அல்லது நல்லவன் அல்லன் என்று சொல்லட்டும்.

இவ்வாறெல்லாம் மேலே உள்ள வரிகளிலும் இனித் தொடர்கிற வரிகளிலும் மாறுபாடான இன்ப துன்பங்களை மீட்டிமீட்டி வரிசைப் படுத்தி அடுக்குகிறார் அடிகள்.

சொர்க்கமோ, நரகமோ, இன்பமோ, துன்பமோ, நல்லபேரோ, கெட்ட பேரோ, எது எப்படி வந்தாலும் வராவிட்டாலும் அவற்றையெல்லாம் பற்றிய சிந்தனை இனி நமக்கில்லை.

உலக வழக்கிலே வானுலக வாழ்வு என்றும், மேலுலக இன்பம் என்றும் பல இன்ப சுகங்களைக் கூறுகிறது சமுதாயம்.

வரையில் தண்டத்து மாறாக் கடுந்துயர்
நிரயம் சேரினும் சேர்க உரையிடை
ஏனோர் என்னை ஆனாது விரும்பி
நல்லன் எனினும் என்க அவரே
அல்லன் எனினும் என்க நில்லாத்

திருவொடு திளைத்துப் பெருவளம் சிதையாது
இன்பத்து அழுந்தினும் அழுந்துக அல்லாத்
துன்பம் துதையினும் துதைக முன்பில்
இளமையொடு பழகிக் கழிமூப்புக் குறுகாது
என்றும் இருக்கினும் இருக்க அன்றி

இன்றே இறக்கினும் இறக்க ஒன்றினும்
வேண்டலும் இலனே வெறுத்தலும் இலனே
ஆண்தகைக் குரிசில்நின் அடியரொடும் குழுமித்
தெய்வக் கூத்துநின் செய்ய பாதமும்
அடையவும் அணுகவும் பெற்ற
கிடையாச் செல்வம் கிடைத்த லானே. 36

ஆன்ஏறே போந்தால் அழிவுண்டே அன்புடை
நானேதான் வாழ்ந்திடினும் நன்றன்றே—வானோங்கு
வாமான் பொழில்தில்லை மன்றைப் பொலிவித்த
கோமானை இத்தெருவே கொண்டு. 37

---

இவ்வாறே நரக வாழ்வு என்று பலவிதமான துன்பங்களையும் தண்டனைகளையும் கடுமையான வகையிலே உலகோர் சொல்லி நரகத்தைச் சித்திரிக்கிறார்கள்.

இத்தனை வகைகளையும் கவிநடையிலே இந்தப் பாடல் எடுத்து இயம்புகிறது.

இன்பத்து அழுந்தினும் சரி அல்லால் துன்பத்தில் தோய்ந்தாலும் சரி. மூப்பு வாராமல் என்றும் இளமையாக இருப்பினும் சரி அல்லது இன்றே மரணம் வந்தாலும் வரட்டும். ஏனென்றால் கிடையாச் செல்வம் எனக்கு இப்போதே கிடைத்துவிட்டது! இனி எதைப்பற்றியும் கவலை இல்லை என்றபடி.

37. ஆனேறு – காளை, விடைஊர்தி. வாமம் – எழில். மன்று – அம்பலம். கோமான் – நடராஜமூர்த்தியாகிய ஆடலரசன்! ஏ, விடை ஊர்தியே, நீ இத்தெரு வழியே ஆடல் அரசனை ஏற்றிக் கொண்டு போந்தால், அழிவுக்கு இடமாகும்! – இது விரகதாபத்தின் வெளியீடு!

கொண்டல்வண் ணத்தவன் நான்முகன்
இந்திரன் கோமகுடத்து
அண்டர்மிண் டித்தொழும் அம்பலக்
கூத்தனுக்கு அன்பு செய்யா
மிண்டர்மிண் டித்திரி வார்எனக்கு
என்இனி நான்அவன்தன்
தொண்டர் தொண்டர்க்குத் தொழும்பாய்த்
திரியத் தொடங்கினனே. 38

தொடர நரைத்தங்க முன்புள வாயின
தொழில்கண் மறுத்துஒன்றும் ஒன்றி இடாதுஒரு
சுளிவு தலைக்கொண்டு புன்புலை வாரிகள்
துளைஒழு கக்கண்டு சிந்தனை ஒய்வொடு

நடைகெட முற்கொண்ட பெண்டிர் பொறாஒரு
நடலை நமக்குஎன்று வந்தன பேசிட
நலிஇரு மற்குஅஞ்சி உண்டி வெறாவிழு
நரக உடற்குஅன்பு கொண்டுஅலை வேன்இனி

மிடல்ஒடி யப்பண்டு இலங்கையர் கோன்ஒரு
விரலின் அழுக்குண்டு பண்பல பாடிய
விரகு செவிக்கொண்டு முன்புஉள தாகிய
வெகுளி தவிர்த்துஅன்று பொன்றி இடாவகை

---

38. கொண்டல் வண்ணத்தவன் – திருமால். நான்முகன் – பிரமன். மிண்டர் – செருக்கர்கள், ஆணவிகள். மிண்டி – நெருங்கி, கூட்டம் பெருகி. அம்பலக் கூத்தனுக்கு அன்பு செய்யாத செருக்கர்களின் கூட்டம் அதிகமாவதற்கு, அப்படி அதிகமானால் அது பற்றி, எனக்கு ஒன்றுமில்லை. ஒரு சிந்தனையும் கிடையாது தொழும்பாய் – அடிமைத் தொண்டு இயற்றுபவனாக, தொண்டனாக.

39. நரைத்தங்கம் – நரை விழுந்து அங்கம் எல்லாம். சிந்தனை ஓய்வு – மனத்தளர்ச்சி. முதுமை வந்து அதனால் ஏற்படுகிற அவலங்களை உணர்ச்சியோடு இந்த வரிகள் படம்பிடித்துக் காட்டுகின்றன. ஒவ்வோர் அடியிலும் ஐம்பத்திரண்டு எழுத்துக்கள். இதுவும் அளவியல் சந்த விருத்தமாகும்.

நடலை – துன்பம். நலி – வருத்துகிற, இன்னல் செய்கிற. இருமற்கு அஞ்சி – இருமலுக்குப் பயந்து. மிடல் – வலிமை. ஒடிய – நலிந்துபோன. பொன்றி இடவகை – அழிந்து போகாதவாறு. சதுர் – மேன்மை தருவது.

திடமருள் வைக்கும் செழுஞ்சுடர் ஊறிய
தெளி அமுதத்தின் கொழுஞ்சுவை நீடிய
தில்லைநக ரில்செம்பொன் அம்பலம் மேவிய
சிவனை நினைக்கும் தவம்சதுர் ஆவதே. 39

சதுர்முகன் தந்தைக்குக் கதிர்விடு கடவுள்
ஆழி கொடுத்த பேரருள் போற்றி
முயற்சியொடு பணிந்த இயக்கர் கோனுக்கு
மாநிதி இரண்டும் ஆனாப் பெருவளத்து

அளகை ஒன்று தளர்வுஇன்றி நிறுவிய
செல்வம் கொடுத்த செல்வம் போற்றி
தாள்நிழல் அடைந்த மாணிக் காக
நாள்முறை பிறழாது கோள்முறை வலித்துப்
பதைத்துவரும் கூற்றைப் படிமிசைத் தெறிக்க

உதைத்துயிர் அளித்த உதவி போற்றி
குலைகுலை குலைந்த நிலையாத் தேவர்
படுபேர் அவலம் இடையின்றி விலக்கிக்
கடல்விடம் அருந்தின கருணை போற்றி
தவிராச் சீற்றத்து அவுணர்மூ எயில்

---

உலக வாதனைகளிலே சிக்குண்டு அலைந்த நான், இனி மேன்மை தருகிற பாதையிலே சேர்ந்து விட்டேன். அம்பலம் மேவிய சிவனை நினைக்கும் தவம் கூடினேன். அது மேன்மை தருவதாகும்.

40. நான்முகனுடைய தந்தையாகிய திருமாலுக்குச் சக்கரம் தந்தவனே எம்பெருமான். கதிர்விடு கடவுள் – ஒளி வீசுகிற தெய்வம். அவனுக்கு வணக்கம். அவனது அருள், பேரருள், போற்றி.

குபேரனுக்குச் சங்கநிதி, பதுமநிதி இரண்டும் தந்து குறைவில்லாத அளகாபுரியை அமைத்துத் தந்த அந்தச் செல்வம் கொடுத்த செல்வத்துக்கு வணக்கம், செல்வம் போற்றி.

மார்க்கண்டனுடைய உயிரைக் கவரவந்த எமனை உதைத்து அந்தச் சிறுவனுக்கு உயிர் வழங்கிய உதவிக்கு வணக்கம். உதவி போற்றி. மாணி – பிரம்மச்சாரியான மார்க்கண்டேயன். கடலின் நஞ்சை உண்டு, தேவர்களின் அவலத்தை நீக்கினான். அந்த நஞ்சுண்ட கருணைக்கு வணக்கம். கருணை போற்றி!

ஒல்அனல் கொளுவி ஒருநொடி பொடிபட
வில்ஒன்று வளைத்த வீரம் போற்றி
பூமன் கரும்பொடு பொடிபட நிலத்துக்
காமனைப் பார்த்த கண்ணுதல் போற்றி
தெய்வ யாளி கைமுயன்று கிழித்துஎனக்

கரிஒன்று உரித்த பெருவிறல் போற்றி
பண்டு பெரும்போர்ப் பார்த்தனுக் காகக்
கொண்டு நடந்த கோலம் போற்றி
விரல்பதம் ஒன்றில் வெள்ளிமலை எடுத்த
அரக்கனை நெரித்த ஆண்மை போற்றி

விலங்கல் விண்டு விழுந்தென முன்னாள்
சலந்தரன் தடிந்த தண்டம் போற்றி
தாதையை எறிந்த வேதியச் சிறுவற்குப்
பரிகலம் கொடுத்த திருஉளம் போற்றி
நின்முதல் வழிபடத் தன்மகன் தடிந்த

தொண்டர் மனையில் உண்டல் போற்றி
வெண்ணெய் உண்ண எண்ணுபு வந்து
நந்தா விளக்கை நுந்துபு பெயர்த்த
தாவுபுல் எலிக்குழு உலகு ஆள
நெய்தினில் அளித்த கைவளம் போற்றி

---

40. திரிபுரம் எரித்த வீரம் போற்றி. காமனை எரித்த நெற்றிக்கண் போற்றி. யானைத்தோல் உரித்த திறலுக்கு வணக்கம். பெருவிறல் போற்றி. விறல் – வலிமை, வீரம். அர்ஜுனனுக்காக நடந்து சென்ற வேட்டுவர் கோலம் போற்றி. வெள்ளிமலையை எடுத்த இராவணனை அப்படியே நெரித்த அந்த ஆண்மை போற்றி!

ஒவ்வொரு அருள் நிகழ்ச்சியாகச் சிவன் பெருமையை எடுத்தோதுகிற புராணக் கதைகளிலிருந்து அடுக்கடுக்காகச் சொல்லுகிறது இந்தப் பாடல்.

ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒரொரு அம்சத்தை, அதன் மகிமையை உணர்த்துவதால் அந்தந்த இயல்பைப் போற்றி வணங்குகிறது கவிமொழி!

பொங்குஉளை அழல்வாய்ப் புகைவிழி ஒருதனிச்
சிங்கம் கொன்ற சேவகம் போற்றி
வரிமிடற்று எறுழ்வலி மணிஉகு பகுவாய்
உரகம் பூண்ட ஒப்பனை போற்றி
கங்கையும் கடுக்கையும் கலந்துழி ஒருபால்

திங்கள் சூடிய செஞ்சடை போற்றி
கடவுள் இருவர் அடியும் முடியும்
காண்டல் வேண்டக் கனற்பிழம்பு ஆகி
நீண்டு நின்ற நீளம் போற்றி
ஆலம் பில்கும்நின் சூலம் போற்றி

கூறுதற்கு அரியநின் ஏறு போற்றி
ஏக வெற்பன் மகிழும் மகட்குஇடப்
பாகம் கொடுத்த பண்பு போற்றி
தில்லை மாநகர் போற்றி தில்லையுள்
செம்பொன் அம்பலம் போற்றி அம்பலத்து

ஆடு நாடகம் போற்றி என்றுஆங்கு
என்றும் போற்றினும் என்தனக்கு இறைவ
ஆற்றல் இல்லை ஆயினும்
போற்றி போற்றிநின் பொலம்பூ அடிக்கே.

---

இந்தக் கதைகள் அனைத்தும் ஞானிகளின் உருவகமேயாம். திரிபுரம் எரித்த உருவகத்தைத் திருமூலர் 'முப்புர மாவது மும்மல காரியம்' என்று விளக்கம் செய்கிறார். இவ்வாறே ஒவ்வொன்றும் ஒவ்வோர் உருவகமாகும் என்பதை ஞானியர்கள் பல இடங்களில் விளக்கிக் கூறியுள்ளமை அந்தந்த நூலிற் காணலாம்.

நிகழ்ச்சிகளின் பெருமைகளுக்கு வணக்கம் சொல்லி, உறுப்புக்களின் உயர்வினை வணங்கி, பரிவாரத்தை வணங்கி, ஊர்தியைப் போற்றி, பாகம் கொடுத்த பண்பு போற்றி, தில்லை மாநகரைப் போற்றி, செம்பொன் அம்பலமும், அங்கே நடைபெறும் நாடகமும் போற்றுகிறது பாடல்.

இப்படிப் பெருமைகளைப் போற்றிக் கொண்டே வந்த அடிகள் தயங்கி நிற்கிறார். என்று என்று ஒவ்வொன்றாகப் போற்றினும், நாளெல்லாம் போற்றினாலும், எனக்கு அதற்குரிய ஆற்றல் இல்லை. என்றாலும் என் போற்றி அனைத்தும் உனது திருவடிக்கே, தங்கப் பூவடிக்கே, நின் பொலம்பூவடிக்கே என்று திருவடியிலே வணங்குகிறார் பட்டினத்து அடிகள்!

## 2. திருக்கழுமல மும்மணிக்கோவை

திருவளர் பவளப் பெருவரை மணந்த
மரகத வல்லி போல ஒரு கூறு
இமையச் செல்வி பிரியாது விளங்கப்
பாய்திரைப் பரவை மீமிசை முகிழ்த்த

அலைகதிர் பரிதி ஆயிரம் தொகுத்த
வரன்முறை திரியாது மலர்மிசை இருந்துஎனக்
கதிர்விடு நின்முகம் காண்தொறும் காண்தொறும்
முதிரா இளமுலை முற்றாக் கொழுந்தின்
திருமுகத் தாமரை செவ்வியின் மலரநின்

தையல் வாள்நுதல் தெய்வச் சிறுபிறை
இளநிலாக் காண்தொறும் ஒளியொடும் புணர்ந்தநின்
செவ்வாய்க் குமுதம் செவ்வி செய்யநின்
செங்கைக் கமலம் மங்கை வனமுலை
அமிர்த கலசம் அமைவின் ஏந்த

மலைமகள் தனாது நயனக் குவளைநின்
பொலிவினொடு மலர மறையோர் கழுமலம்
நெறிநின்று பொலிய நாகர் நாடு
மீமிசை மிதந்து மீமிசை உலகம்
கீழ்முதல் தாழ்ந்து இங்கு

---

1. கழுமலம் என்பது சீர்காழிக்கு உரிய பன்னிரண்டு பேர்களுள் ஒன்று. இந்தத் தலத்தில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானை அகவல், வெண்பா, கலித்துறை என்னும் மூவகைப் பாக்களால் ஏத்துகிறது இந்த மும்மணிக் கோவை.

இந்தக் கோவையில் முதலாவது பன்னிரண்டு பாடல்களே பட்டினத்தடிகள் அருளியவை என்றும், பதின்மூன்று முதல் முப்பது வரை உள்ள பாடல்கள் இவருடைய பனுவலிலிருந்து காணாமற்போகவே வேறு ஒருவர் பாடிச் சேர்த்தார் என்றும் சில ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

இமயச்செல்வி – உமையம்மை. பரவை – கடல். முகிழ்த்த – பூத்த. அலைகதிர் – பாயும்கதிர். செவ்வி – அழகு.

நயனக் குவளை – கண்ணாகிய கருங்குவளை மலர். நாகர் நாடு – நாகர் உலகமாகிய பாதாள உலகம், பாதளம். மீமிசை மிதந்து – மேலே எழுந்து வந்து. மீமிசை உலகம் கீழ்முதல் தாழ்ந்து – மேலுலகம் கீழே ஆழ்ந்துபோய்.

ஒன்றா வந்த குன்றா வெள்ளத்து
உலகமூன் றுக்கும் களைகண் ஆகி
முதலில் காலம் இனிதுவீற்று இருந்துழித்
தாதையொடு வந்த வேதியச் சிறுவன்
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த

அன்னா யோஎன்று அழைப்பமுன் நின்று
ஞான போனகத்து அருள்அட்டிக் குழைத்த
ஆனாத் திரளை அவன்வயின் அருள
அந்தணன் முனிந்து தந்தார் யார்என
அவனைக் காட்டுவன் அப்ப வானார்

தோஒடு உடைய செவியன் என்றும்
பீஇடு உடைய பெம்மான் என்றும்
கையில் சுட்டிக் காட்ட
ஐயநீ வெளிப்பட்டு அருளினை ஆங்கே. 1

அருளின் கடல்அடியேன் அன்புஎன்னும் ஆறு
பொருளின் திரள்புகலி நாதன்—இருள்புகுதும்
கண்டத்தான் என்பாரைக் காதலித்துக்
கைதொழுவார்க்கு
அண்டத்தார் தாமார் அதற்கு. 2

---

களைகண் – பாதுகாப்பு. வேதியச் சிறுவன் – திருஞானசம்பந்தர். இந்தப் பாடலில் பட்டினத்து அடிகள் திருஞானசம்பந்தருக்கு அம்மை ஞானப்பால் ஊட்டிய நிகழ்ச்சியைச் சித்திரிக்கிறார். தாதையொடு வந்த வேதியச் சிறுவன், தகப்பனாருடன் வந்த வேதியச் சிறுவனாகிய பாலறாவாயன் என்று பெயர்பெறப் போகும் ஞானசம்பந்தர்,

அன்னாயோ – அம்மாவோ. அட்டிக் குழைத்த – சேர்த்துக் குழைத்த. அந்தணன் – தந்தையாகிய சிவபாத இருதயர். முனிந்து – சினங்கொண்டு. தந்தார் யார் என – பால்கொடுத்தவர் யார் என்று கேட்க. அவனைக் காட்டுவன் – அவனை நான் காட்டுகிறேன். அப்ப – தந்தையே. சுட்டிக்காட்ட – கையினால் வானத்தே சுட்டிக் காட்ட.

சீர்காழித் தலத்துக்குரிய பாடலாதலால் இந்த வரலாறு விரிவாகவே கூறப்பெறுகிறது. ‘தோடுடைய செவியன்’, ‘பீடுடைய பெம்மான்’ ஆகிய சொற்றொடர்கள் சம்பந்தருடைய தொடக்கத் தேவாரத்திலேயே வந்துள்ளமை காண்க.

2. புகலிநாதன் – சீர்காழித் தலைவனாகிய சிவபெருமான். இருள் புகுதும் – நஞ்சுக்கறை பொருந்துகிற.

ஆரணம் நான்கிற்கும் அப்பால்அவன் அறியத் துணிந்த
நாரணன் நான்முக னுக்குஅரி யான்நடு வாய்நிறைந்த
பூரணன் எந்தை புகலிப் பிரான்பொழில் அத்தனைக்கும்
காரணன் அந்தக் கரணம்கடந்த கருப்பொருளே. 3

கருமுதல் தொடங்கிப் பெருநாள் எல்லாம்
காமம் வெகுளி கழிபெரும் பொய்எனும்
தூய்மைஇல் குப்பை தொலைவுஇன்றிக் கிடந்ததை
அரிதின் இகழ்ந்து போக்கிப் பொருதிறல்

மைஇருள் நிறத்து மதனுடை அடுசினத்து
ஐவகைக் கடாவும் யாப்புஅவிழ்த்து அகற்றி
அன்புகொடு மெழுகி அருள்விளக்கு ஏற்றித்
துன்ப இருளைத் துரந்து முன்புறம்
மெய்எனும் விதானம் விரித்து நொய்ய

3. ஆரணம் – வேதம். நடு – பொது. பொழில் – இவ்விடத்தில் உலகம். அந்தக்கரணம் – மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கும்.

வேதங்கள் நான்கிற்கும் அகப்படாமல் அப்பால் நிற்பவன் இறைவன், சிவபெருமான். அவனை அறிவதற்காக முனைந்து நின்ற திருமாலுக்கும் பிரமனுக்கும் அறிய முடியாதபடி பொதுவில் நிறைந்து நின்ற முழுமுதற் கடவுள். உலகங்கள் அத்தனைக்கும் காரணன் அவனே. அவன் அந்தக் கரணங்களைக் கடந்து நிற்கும் கருப் பொருளாகிய பரம்பொருள் ஆவான்.

4. கருமுதல் – கருவுற்ற நாளில் இருந்து. தொடங்கி – ஆரம்பித்து. பெருநாள் – வாழ்நாள். தூய்மைஇல் – தூய்மை இல்லாத மலங்கள். தொலைவு இன்றி – அழியாமல். ஐவகைக் கடாவும் – ஐம்பொறி களாகிய கடாக்கள். யாப்பு – பிணைப்பு. விதானம் – மேற்பரப்பு.

பிறவியில் உயிர் எப்படி மும்மலச் சிக்கலுக்கு உள்ளாகிறது. ஐம்பொறிகளும் எவ்வாறு அமைந்து அந்த ஐம்பொறிக் கடாக்கள் மனத்தைத் துன்புறுத்துகின்றன, பின்னர் அந்தப் பிணைப்புக்களை எல்லாம் அவிழ்த்து அகன்று உள்ளமாகிய வீட்டை அன்பு கொண்டு துடைத்து மெழுகி, அதில் அருள் விளக்கை ஏற்றி, அங்கிருந்து துன்ப இருளை வெருட்டி, மெய்ஞ்ஞானம் எனும் மேற்பரப்பை விரித்து, ஞானிகள் இந்த உடம்பாகிய ஆலயத்தை இறைவனுக்கு உரிய உறைவிடமாகச் செய்கின்ற திருத்தும் பணியை விரிவாகக் கூறுகிறது இப்பாடல்.

கீழ்மையில் தொடர்ந்து கிடந்தஎன் சிந்தைப்
பாழ்அறை உனக்குப் பள்ளிஅறை ஆக்கிச்
சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவிசு
எந்தைநீ இருக்க இட்டனன் இந்த
நெடுநில வளாகமும் அடுகதிர் வானமும்

அடையப் பரந்த ஆதிவெள் ளத்து
நுரைஎனச் சிதறி இருசுடர் மிதப்ப
வரைபறித்து இயங்கும் மாருதம் கடுப்ப
மாலும் பிரமனும் முதலிய வானவர்
காலம் இதுஎனக் கலங்கா நின்றுழி

மற்றவர் உய்யப் பற்றிய புணையாய்
மிகநனி மிதந்த புகலி நாயக
அருள்நனி சுரக்கும் பிரளய விடங்கநின்
செல்வச் சிலம்பு மெல்என மிழற்ற
அமையாக் காட்சி இமையக்
கொழுந்தையும் உடனே கொண்டிங்கு
எழுந்தரு ளத்தகும் எம்பெரு மானே. 4

---

சிந்தை என்ற பாழ் அறையானது நொய்யக் கீழ்மையில் தொடர்ந்து கிடந்தது. அந்தப் பாழ் அறையை உனக்கு உரிய பள்ளி அறையாக்கினேன். சிந்தையாகிய தாமரையை நீ இருப்பதற்கு உரிய செழுமலர்ப் பூந்தவிசாக, பூவாசனமாக இட்டேன்.

உலக ஒடுக்கமும், அதன் தோற்றமும் ஆகிய பிரளய நிகழ்ச்சிகளை இந்த வரிகள் சித்தரிக்கின்றன.

நிலப்பரப்பும் வானமும் ஒருசேர அடைத்துப் பரந்தது வெள்ளம். அதில் சூரியனும் சந்திரனும் நுரை போலச் சிதறி மிதக்கிறார்கள். சூறாவளிக் காற்று மலையைப் பறித்து அடிக்கிறது. திருமாலும் அயனும் வானவர்களும் இதுகண்டு கலங்கா நின்றனர். (கலங்கா நின்றுழி – கலங்கிப் போய் நின்றபோது).

இந்தப் பிரளயத்தின் போது கலங்கிய அவர்கள் உய்வதற்காக நீயே கட்டை மரமாக, புணையாய் மிதந்தாய். புகலி நாயக – சீர்காழித் தலைவனே. பிரளய விடங்க – ஊழிக் காலத்திலும் அழியாத சுயம்புவே. இமயக் கொழுந்து – பார்வதி.

மானும் மழுவும் திருமிடற்றில் வாழும்இருள்
தானும் பிறையும் தரித்திருக்கும்—வானவர்க்கு
வெள்ளத்தே தோன்றிக் கழுமலத்தே வீற்றிருந்துஎன்
உள்ளத்தே நின்ற ஒளி. 5

ஒளிவந்த வாபொய் மனத்துஇருள் நீங்கஎன் உள்ளவெள்ளம்
தெளிவந்த வாவந்து தித்தித்த வாசிந்தி யாததொரு
களிவந்த வாஅன்பு கைவந்த வாகடை சார்அமையத்து
எளிவந்த வாநம் கழுமல வாணர்நம் இன்னருளே. 6

அருள்பழுத்து அளித்த கருணை வான்கனி
ஆரா இன்பத் தீராக் காதல்
அடியவர்க்கு அமிர்த வாரி நெடுநிலை
மாடக் கோபுரத்து ஆடகக் குடுமி

மழைவயிறு கிழிக்கும் கழுமல வாணநின்
வழுவாக் காட்சி முதிரா இளமுலைப்
பாவை யுடன்இருந்த பரம யோகி
யான்ஒன்று உணர்த்துவன் எந்தை மேனாள்
அகில லோகமும் அனந்த யோனியும்

---

5. மானும் மழுவும் கழுத்து நஞ்சும் பிறையும் தரித்திருக்கக் கூடிய ஒளி அவனே, என் உள்ளத்தே நின்ற ஒளி. வெள்ளத்தே தோன்றியவன்—ஊழிக்காலத்திலும் அழியாமல் தோன்றிய பரம்பொருள்.

6. ஒளிவந்தவா – ஒளியைச் செய்தவனே. களிவந்தவா – உவகை தருபவனே.

7. ஆரா இன்பம் – தெவிட்டாத இன்பம். ஆடகக் குடுமி – தங்கச் சிகரங்கள். மழைவயிறு – மேகத்தின் வயிறு.

நிகிலமும் தோன்றநீ நினைந்தநாள் தொடங்கி
எனைப்பல யோனியும் நினைப்புஅரும் பேதத்து
யாரும் யாவையும் எனக்குத் தனித்தனித்
தாயர் ஆகியும் தந்தையர் ஆகியும்
வந்தி லாதவர் இல்லை யான்அவர்

தந்தையர் ஆகியும் தாயர் ஆகியும்
வந்துஇ ராததும் இல்லை முந்து
பிறவா நிலனும் இல்லை அவ்வயின்
இறவா நிலனும் இல்லை பிறிதில்
என்னைத் தின்னா உயிர்களும் இல்லை, யான்அவை

தம்மைத் தின்னாது ஒழிந்ததும்இல்லை, அனைத்தே
காலமும் சென்றது யான்இதன் மேல்இனி
இளைக்குமாறு இலனே நாயேன்
நந்தாச் சோதிநின் அஞ்செழுத்து நவிலும்
தந்திரம் பயின்றதும் இலனே தந்திரம்
பயின்றவர் பயின்றதும் இலனே ஆயினும்
இயன்றதோர் பொழுதில் இட்டது மலராச்
சொன்னது மந்திரம் ஆக என்னையும்
இடர்ப்பிறப்பு இறப்புஎனும் இரண்டின்
கடற்படா வகைக் காத்தல்நின் கடனே. 7

---

நிகிலமும் – மற்றெல்லாப் பொருள்களும். எனக்கு நீ தந்த பிறவிகளிலே தாயாக வந்தவர்கள் பலர்; தந்தையானார் பலர். அப்படி வந்திலாதவரே இல்லை எனலாம். யானும் அவருடைய தந்தையாராகியும் தாயராகியும் வந்திராததும் இல்லை.

இரண்டின் கடல் – பிறப்பு இறப்பு ஆகிய இரண்டின் கடலும். நான் பிறவாத நிலம் இல்லை; பிறவிதோறும் நான் இறவாத நிலமும் இல்லை. என்னைத் தின்னாத உயிர்களும் இல்லை; யான் அவற்றைத் தின்னாது ஒழிந்ததும் இல்லை.

அஞ்செழுத்து நவிலும் தந்திரம் – அஞ்செழுத்தை ஓதுகின்ற சித்தர்களின் ஞானப்பயிற்சி முறையாகிய தந்திரத்தை. பயின்றவர் பயின்றதும் இலனே – அந்த இரகசியங்களைப் பயின்றவர்களோடு நான் பயின்றதும் இல்லை. என்றாலும் நான் இட்டதையே மலராகவும் சொன்னதையே மந்திரமாகவும் ஏற்கவேண்டும் என்றவாறு.

கடலான காமத்தே கால்தாழ்வர் துன்பம்
அடலாம் உபாயம் அறியார்—உடலாம்
முழுமலத்தை ஓர்கிலார் முக்கண் பெருமான்
கழுமலத்தைக் கைதொழா தார். 8

தொழுவாள் இவள்வளை தோற்பாள்
இவள் இடர்க்கே அலர்கொண்டு
எழுவாள் எழுகின்றது என்செய
வோஎன் மனத்திருந்தும்
கழுவா மணியைக் கழுமல
வாணனைக் கையிற்கொண்ட
மழுவா ளனைக்கண்டு வந்ததுஎன்
றால்ஓர் வசையில்லையே. 9

வசைஇல் காட்சி இசைநனி விளங்க
முன்னாள் நிகழ்ந்த பன்னீர் உகத்து
வேறுவேறு பெயரின் ஊறுஇன்று இயன்ற
மையறு சிறப்பின் தெய்வத் தன்மைப்

புகலி நாயக இகல்விடைப் பாக
அமைநாண் மென்தோள் உமையாள்
குன்று குனிவித்து வன்தோள் அவுணர்
மூஎயில் எரித்த சேவகத் தேவ
இளநிலா முகிழ்க்கும் வளர்சடைக் கடவுள்நின்

8. கால் தாழ்வர் - மூழ்கி ஆழ்ந்து போவார்கள். அடலாம் உபாயம் — வென்று கடைத் தேறுவதற்குள்ள வழியை. ஓர்கிலார் - ஆராய்ந்து தெரிந்துகொள்ள மாட்டார்கள்.

9. இந்தப் பாடல் தோழி அறத்தொடு நிற்றலாகும். தலைவியின் நிலை எவ்வாறு இருக்கிறது? திக்கு நோக்கித் தொழுகிறாள்; வளைகளைத் தோற்கிறாள்; பழிச்சொல் எழும்படி நடந்து கொள்கிறாள். மனத்திலிருந்து நீக்க முடியாத தலைவனாகிய கழுமல வாணனை, கையில் மழுவாயுதம் கொண்டவனைக் காதலித்த இந்தப் பெண்ணின் நிலை இவ்வாறு என்று தலைவிக்காக ஏங்குகிறாள் தோழி.

நெற்றியில் சிறந்த ஒற்றை நாட்டத்துக்
காமனை விழித்த மாமுது தலைவ
வானவர் அறியா ஆதி யானே
கல்லா மனத்துப் புல்லறிவு தொடர
மறந்து நோக்கும் வெறுந்தண் நாட்டத்துக்

காண்தொறும் காண்தொறும் எல்லாம் யாண்டை
ஆயினும் பிறவும் என்னதும் பிறரதும்
ஆவன பலவும் அழிவன பலவும்
போவதும் வருவதும் நிகழ்வதும் ஆகித்
தெண்ணீர் ஞாலத்துத் திரண்ட மணலினும்

எண்ணில் கோடி எனப்பல ஆகி
இல்லன உளவாய் உள்ளன காணாப்
பன்னாள் இருள்வயின் பட்டேன் அன்னதும்
அன்னது ஆதலின் அடுக்கும்அது என்னில்
கண்புலன் தெரியாது கொட்புறும் ஒருவற்குக்

---

10. இந்தப் பாடல் புகலி நாயகனின் வரலாறும் வல்லமையும் வரிசைப்படுத்திக் கூறுகிறது. நாமம் பலவாகியும், தெய்வத்தன்மை மிகுந்தும், வலிமை பொருந்திய காளையின் மீது இவர்ந்தும், மெல்லிய தோளை உடைய உமையம்மையின் கொழுநனாகத் திகழ்ந்தும், அவுணருடைய மூன்று கோட்டைகளை எரித்தும், வீரனாக விளங்கி வரும் தேவன் அவன். மலையையே வளைத்து முப்புரத்தைப் பொடி செய்த அந்த வீரத் தலைவன், இளம்பிறை அரும்புகிற வளர்சடைக் கடவுள்.

நெற்றியில் சிறப்போடு திகழ்கிற ஒற்றைக் கண்ணினால் காமனை ஒழித்த தொன்மைத் தலைவன் அவன். வானவரின் அறிவைக் கடந்த ஆதிமூர்த்தி அவன். அப்படிப்பட்ட கடவுளின் திருவருள் தமக்குக் கிடைத்த மாண்பைப் பாடுகிறார் அடிகள்.

இந்த உலகத்தில் திரண்ட மணலினும் எண்ணிக்கையில் அதிகமான நிலையில் பன்னாள் இருளில் திணறினேன்.

இல்லன உளவாகியும் உள்ளன காணாமலும் உற்ற வேதனை அத்தனையாகும்.

கண்தெரியாது சுற்றிச் சுழல்கின்ற ஒருவனுக்குக் குழி வழியாகவும், வழி குழியாகவும் ஒன்றிலொன்று தடுமாறுகிற நிலையில் திடீரென்று வந்தது என்னுடைய திருவருள் நாட்டம். உன்னுடைய கருணையினால் அதை நான் பெற்றேன் என்பதை அடுத்துவரும் வரிகளிலே பாடுகிறார்.

குழிவழி ஆகி வழிகுழி ஆகி
ஒழிவுஇன்று ஒன்றின் ஒன்று தடுமாற
வந்தால் போல வந்தது எந்தைநின்
திருவருள் நாட்டம் கருணையாற் பெறலும்
யாவையும் எனக்குப் பொய்யெனத் தோன்றி

மேவரும் நீயே மெய்யெனத் தோன்றினை
ஓவியப் புலவன் சாயல்பெற எழுதிய
சிற்ப விகற்பம் எல்லாம் ஒன்றித்
தவிராது தடவினர் தமக்குச்
சுவராய்த் தோன்றும் துணிவுபோன் றனவே. 10

எனவே எழுந்திருந்தாள் என்செய்வாள் இன்னம்
சினஏறு காட்டுதிரே என்னும்—இனவேகப்
பாம்புகலி யாநிமிரும் பன்னாச் சடைமுடிநம்
பூம்புகலி யான்இதழிப் போது. 11

---

மாமுது தலைவ - மிகப்பழைய தலைவனே. அன்னது - அத்தன்மையது. கொட்புறும் - சுழல்கின்ற. அழியக் கூடியன எல்லாம் எனக்குப் பொய்யாகத் தோன்றின. நீ ஒருவனே மெய்யாகத் தோன்றினாய்.

உலக வாழ்வில் மயங்கிச் சுழல்கின்ற மனம் எத்தனையோ தவிப்புகளுக்கு உள்ளாகிறது. பார்க்க வேண்டியவை புலன்களிலிருந்து தவறுகின்றன. தவறான காட்சிகள் புலனை விட்டு அகலாது நிற்கின்றன.

இந்நிலையில் கண் தெரியாத குருடன் தடுமாறுவது போலே வாழ்க்கைப் பாதையில் பல குழிகளில் விழ வேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்தத் துன்பங்களிலிருந்து விடுதலை தருவது கருணையினால் பெற வேண்டிய கடவுளின் திருவருள் நாட்டமே. அதுவே குருடனுக்குக் கிடைக்கின்ற கண்பார்வை ஆகும் என்றபடி.

11. கலியா நிமிரும் - சீறி எழுகின்ற. பாம்பு கலியா நிமிரும் - சிவனுடைய சடையிலிருக்கும் பாம்பு சீறிக்கொண்டு எழுவதற்கு இடம் உண்டு. இதழி - கொன்றை மாலை.

போதும் பெறாவிடில் பச்சிலை உண்டு
புனல்உண்டு எங்கும்
ஏதும் பெறாவிடில் நெஞ்சுண்டு
இன்றே இணையாகச் செப்பும்
சூதும் பெறாமுலைப் பங்கர்தென்
தோணி புரேசர் வண்டின்
தாதும் பெறாத அடித்தா
மரைசென்று சார்வதற்கே. 12

சார்ந்தவர்ப் புரக்கும் ஈர்ஞ்சடைப் பெரும
கருணை முதுவெள்ளம் பெருகு திருநயன
கைவல நெல்லியம் கனியது போலச்
சைவசித் தாந்தத் தெய்வஆ கமத்தை

வரன்முறை பகர்ந்த திருமலர் வாய
பவளவரை மீதில் தவளமின் என்னச்
செப்பரு மார்புஅணி முப்புரி நூல
பேர்இகல் ஆணவக் கார்இரு ளினுக்கும்
மின்தொடர் வல்வினை வன்தொட ரினுக்கும்

---

12. போதும் பெறாவிடில் – மலரைப் பெறாமல் போய் விட்டால், அந்த நிலையிலும், பச்சிலையும் புனலும் உண்டு. எங்கும் ஏதும் பெறாவிடில் நெஞ்சம் இருக்கிறதல்லவா?

இறைவனுடைய அருளைப் பெறுவதற்கு வழி இல்லாமற் போய்விடவில்லை. அவனுடைய அடித்தாமரையைச் சென்று சார்வதற்குப் பூ இல்லை என்றால் என்ன கவலை! பச்சிலை இருக்கிறது; புனல் இருக்கிறது. நிவேதனத்திற்கு வேறு எதுவும் கிடைக்கவில்லையென்றால், நெஞ்சம் இருக்கிறதல்லவா? அது போதுமே, நெஞ்சுண்டன்றே.

13. இந்தப் பாடலுக்குப் பிறகு வருகிற பதின்மூன்று தொடங்கி முப்பது வரை உள்ள பாடல்கள் பட்டினத்து அடிகள் இயற்றிய பாடல்கள் அல்ல என்றும், பிற்சேர்க்கை என்றும் கூறப்பெறுவதை முன்னரே பார்த்தோம். அந்தப் பாடல்களினுள் ஆழ்ந்து புகாது போயினும் அவற்றை இங்கே மேற்கோளாக இணைத்துள்ளேன்.

மாமைமா மாயை ஆயபே யினுக்கும்
அஞ்சல்என்று அமைத்த சஞ்சமென் கரதல
அருமறைச் சிரத்தும் பெருமைமெய் அன்பர்
துங்கஇத யத்தும் தங்கும்பொற் பாத
துன்னிய பயோதரம் மின்னின மிடைதலின்

அளப்பரும் பெருமை வளத்தினை விளைத்தலின்
சந்திர திலகம் சிந்துரம் மருவலின்
உறுகண் தீரவந்து உறுமுழை உறுதலின்
சாதமுறை சுழீஇச் சோதிமீது அமர்தலின்
பணைஎழு மரவம் பிணையொடு மேவலின்

காமரஞ் செவ்வழி காமரின் எய்தலின்
அளகை எதிர்எனும் ஆசைஉற்று உறைதலின்
நாடகம் மருவி நீடறை பெறுதலின்
நாட்டியத் தோகை ஈட்டம்அங்கு அணைதலின்
அகத்தியன் மன்னும் மகத்துவம் சிவணிலின்

மலையா சலம்என நிலைசேர் மாடம்
மாளிகை சூழ்ந்த சூளிகைப் புரிசை
நேமிமால் வரைஎனப் பூமிமீது இலங்கும்
காழிமா நகரத்து ஊழிதோறு அமர்ந்த
அமையா அன்பின் உமையாள் கொழுந

தெரியநான் முகன்பணி பெரியநா யகநின்
பொன்மலர்ப் பாதம் சென்னிவைத்து இறைஞ்சுதும்
மேற்படும் இதயப் பாற்கடல் நடுவுள்
பரம்பரை தவறா வரம்பெறு குரவன்
மருள்அற இரங்கி அருளிய குறிஎனும்

நிந்தையில் கனக மந்தரம் நிறுவி
மாண்அறிவு என்னும் தூண்இடைப் பிணித்த
நேசம் என்னும் வாசுகி கொளுவி
மதித்தல் என்னும் மதித்தலை உஞற்றிய
பேரா இன்பச் சீர்ஆ னந்தப்

பெறல்அரும் அமுதம் திறனொடும் பெற்று
ஞானவாய் கொண்டு மோனமாய் உண்டு
பிறப்புஇறப்பு என்னும் மறப்பெரும் பயத்தால்
பன்னாள் பட்ட இன்னாங்கு அகற்றி
என்னையும் தன்னையும் மறந்திட்டு
இன்ப மேலீடு எய்துதல் பொருட்டே. 13

பொருள்ஆசை பெண்ஆசை பூஆசை என்னும்
மருள்ஆசை யாம்மாசை மாற்றித்—தெருள்ஞான
வேந்தராய் வாழலாம் மெய்அன்பால் நன்னெஞ்சே
பூந்தராய் நாதரைநீ போற்று. 14

### தலைவி கூற்று

போற்றும் பழமறை வாசிப்
புனிதர் புகலிவெற்பன்
ஆற்றும் தவத்தினைக் கண்டே
நகைத்தது அணிகொள்முல்லை
தூற்றும் புயல்வட காற்றோ
அடிக்கத் தொடங்கும்மதிக்
கீற்றுஇலங்கு எனது மனம்குழம்பு
ஆகக் கிடைத்ததுஇன்றே. 15

இன்றுஎன உளதுஎன அன்றுஎன ஆம்என
உரைதரு நூலையும் பொருளையும் தனித்தனி
பல்விதம் ஆகச் சொல்வகைச் சமயம்
ஆகிய பயம்பில் போகுதல் குறித்த

நிலைஇல் துறைபல நிலைஉள துறைசில
பொருந்திடும் உலகப் பெருங்கடல் இடத்தின்
மயிர்நூல் கிடத்திப் பயில்வுறு தோல்எனும்
வன்புறு பலகையின் அன்புஎனும் ஆணியில்
நரம்புஎனப் பெரிய உரம்பெறு கயிற்றின்

வெரிந்உறும் என்புஎனும் பரிய கூம்பில்
ஐம்பொறி ஆகிய மொய்ம்புறு வாய்தலில்
காயம்என அமைத்த மாயநா வாயில்
இருவினை என்ன வருசரக்கு ஏற்றி
காமம்உ லோபம் ஏமம்மா மோகம்

இதம்உறு குரோதம் மதம்மாற் சரியம்என்று
உரைபெறு யவணர் நிறைஉற இருத்தி
நெடுநீர் என்னப் படுநெடு நாணில்
தங்கிய மடிஎனும் நங்குரம் சேர்த்தி
அற்றம்இல் மனம்எனப் பெற்றபாய் விரித்துத்

தடையா ஆசைக் கடுவளி துரப்பத்
தானம் ஆதி யானதீ வுகளில்
செல்வுழிச் சென்று புல்வுழிப் புல்லி
இவ்வாறு இயங்கும் அவ்வாறு அதனுள்
முன்பார் கால வன்பார் தாக்கத்

தொக்குறு மரக்கலம் பக்குவிட்டு அம்ம
அக்கடல் நீர்உள் புக்குஅறிவு அழியுழி
மறலி என்னும் சுறவுபிடித்து ஈர்ப்பக்
கடுநரகு என்னும் படுகுழி அழுந்தி
உளதுய ரினுக்கோர் அளவுஇலை அதனால்

இம்முறை இயங்குதல் செம்மைஅன்று என்று
முற்றுஉணர் பெரியோய் அற்றம்இல் வலியோய்
ஓதாது உணர்ந்த நாதா தீத
அருஉருபு என்னும் பொருள்முழுது உடையோய்
யாவரும் நின்வயம் மேவரப் புரிவோய்

கரைஉறும் இன்பப் புரைதவிர் நிமல
சாந்தணி வனமுலை ஏந்திழை பாக
ஞானமா மணம்நிறை மோனமா மலரே
வித்தகம் பழுத்த முத்திவான் கனியே
பரைமுதல் ஐம்பணை நிறைபெறக் கிளைத்த

திருத்தகு நீழல் அருட்பெரும் தருவே
பத்திகொள் நித்திலம் ஒத்துற நிரைத்த
பசும்பொனில் செய்த தசும்புபல தொக்க
தோற்றம் போல வீற்றுவீற்று அமைந்த
தீங்கனி பணைதொறும் தாங்குமா தளையும்

வித்துரு மத்தினை ஒத்தசெந் தளிரும்
ஒளிவயி டூரியக் குளிர்மது மலரும்
மேல்இடு வண்டுஎனும் நீலமா மணியும்
மரகதம் என்ன விரவுகாய்த் திரளும்
மறுஇல்மா மணிஎனும் நறியசொல் கனியும்

கிடைத்தசீர் வணிகரிற் படைத்தமாந் தருவும்
எண்திசை சூழ்ந்து விண்தொடும் புகலி
மேவிய பெரும ஆவிநா யகனே
கணபணக் கச்சைப் பணஅரசு அசைத்த
மட்டலர் புழுகுஅணி சட்டை நாயகன்

என்னும்மீ காமன் மன்னினன் புரப்பநீ
வீற்றுஇனிது இருக்க ஏற்றமெய்ப் பிரணவத்
தோணியே பற்றுஎனத் துணிந்து
காண்உறும் அறிவொடு கண்டுகொண் டேனே.

கண்டேன் புகலிக் கருத்தனைத்தன் மெய்ஞ்ஞான
வண்தேன்உண் டேமகிழும் வண்டானேன்—பண்டே
அளியனும்ஆ னேன்மனமெய் ஆர்பதம்வேறு இன்றிக்
குளிர்சிவா னந்தம் இலங்கும். 17

கும்பிட்ட பத்தர்க்கு அழியாத
இன்பம் கொடுக்கும் முத்தர்
வம்பிட்ட கொங்கை உமைபாகர்
சண்பையர் வந்திலரேல்
கொம்பிட்ட கோழிக் கொடிவேந்தன்
கொச்சையைக் கொல்வதனால்
அம்பிட்ட கண்சிற் றிடைச்சிக்குஎன்
னோபயன் ஆகுவதே. 18

ஆகுவா கனனைத் தோகைவா கனனை
உற்றசீர் மகார்எனப் பெற்றசுந் தரனே
ஞானவா ரிதியில் ஆனவார் அமுதே
கற்றவர் கருதும் நல்தவக் கரும்பே

இருள்குறும்பு எறிந்த அருள்கலா மதியே
கதிர்த்தொகை குன்றாது உதித்தசெங் கதிரே
நிறைந்தஅன்பு அலரின் உறைந்தசெந் தேனே
துன்பம்ஒன்று அறியா இன்பவா ரிதியே
மறைமுடி விளக்கும் சுடர்விடு மணியே

விறல்அரி பிரமன் பெறலரும் பொருளே
சிற்பநூல் முழுதும் அற்பமின்று உணர்ந்த
ஓவியர் அற்புதம் மேவுகைத் தொழிலர்
சுத்தவெண் படிகப் பித்திகைத் தலத்தின்
நவமணி தெளித்துக் குவவின கூர்நுதித்

தூரியம் கொண்டு சீரிதின் குயிற்றும்
இமைப்பிலா நாட்டத்து அமைப்பரும் கலாப
நீலமே காரமும் கோலம்ஆர் குயிலும்
துப்புஅமர் வளைவாய் ஒப்பறு பச்சைத்
தகைசிறைக் கிளியும் புகைநிறப் புறவும்
மேல்நிமிர் தூவிப் பால்நில அனமும்
நன்மது நிகர்த்த இன்மொழிப் பூவையும்
இனம்எனக் கருதி மனம்உவந்து அணைத்த
உயர்நிலை பெற்ற மயில்முதற் பறவையும்
கூறுபட நோக்கினர் வேறுபாடு அறியா
வளனொடு செறிந்த அளவிலா மாடத்து
உறைதரு கற்பு நிறைகுல மடவார்
அளிமுரல் குழலும் ஒளிகிளர் முகமும்
குலாவிய புருவமும் நிலாவிரி குழையும்
நறியமென் சொல்லும் சிறியநுண் இடையும்
தத்துநீர் உவரி முத்தமா லிகையும்
பிரளய வெள்ளத் திரளினும் அழியாத்
திருநகர் இதுஎனக் கருதிவான் முகிலும்
சந்திர விம்பமும் இந்திர தனுவும்
இலங்குசெங் கதிரும் துலங்குவான் அமுதும்
வாரா மின்னும் தாரா கணமும்
ஒருங்குவந் திருந்த பெருந்திறன் ஏய்ப்பக்
காட்சியில் பொலிந்த மாட்சிமை சிறந்த
காழிநா யகனே வாழிபூ ரணனே
ஏர்தரும் பொன்கிரி சேர்கருங் கொடியும்
பொன்நிறம் ஆம்எனச் சொன்னதொன் மொழியும்
ஏதம்இல் நிறைமதிச் சீதள நிலவால்
ஆகும்மெய் உருப்பம் தீரும் என்பது
மொழிதரும் இரத குளிகைதற் சேர்ந்த
காளிமச் சீர்உண நீள்இயல் கனகம்
ஆம்எனக் கூறும் தோம்அறு மொழியும்
கருட தியானம் மருள்தப வந்தோர்
நோக்கினில் தவிரும் தீக்கடு என்றலும்
ஆயிரம் கிரணத்து அலர்கதிர் முன்னம்
பாயிருள் கெடும்எனப் பகர்பழ மொழியும்

அங்கண்மா ஞாலத்து எங்கணும் ஒப்ப
இயலும் பட்டாங்கு அயல்அல என்னல்
சரத மெய்ஞ்ஞான வரதநிற் சேர்ந்த
பேதையேன் பாசத் தீவினை அகற்றித்
திருவருள் செல்வம் பெருகுமாறு உதவி

அளித்தருள் பேரின்பு ஆகும்
களித்திடு முத்திக் காழிவான் கனியே. 19

**தோழி அன்னத்தைத் தூது விடல்**

காழிக்கு வேந்தர் கருணா லயர்முனம்நீ
காழிக் குமாரன் கவிகையினை—ஆழிக்கண்
கண்டமட்டில் சூடகமும் கார்விழியில் கங்கணமும்
கொண்டனள்என்று அன்னமே கூறு. 20

கூறும் செனைக் குடில்நெடு நாள்நுழை கூன்முழுதும்
ஆறும் படிக்கு மருந்துளதோ சண்பை வாணர்கொண்ட
நீறும் திருஎழுத்து ஓரைந்தும் கண்டியும் நித்தநிதம்
தேறும் பொருள்என்று உணராத மாயச்
செருக்கினர்க்கே. 21

செருக்குடன் இகலித் தருக்கமே தேற்றி
எம்ம னோரின் இறந்து பிறந்து உழலும்
மம்மரில் பெரிய வானவர் குழுவை
மெய்ப்பொருள் என்று கைப்பொருள் உதவியும்

வழுத்தியும் நெஞ்சத்து அழுத்தியும் வறிதே
புறவார் பசும்புல் கறவாக்கல்பசு
வாயிடைச் செருகித் தூயநீர் உதவி
அரும்சுவைப் பால்கொளப் பெருஞ்சுரை வருடும்
பேதையர் போலவும் ஓதுநஞ்சு அமரும்

எட்டியை விரும்பி மட்டுநீர்த் தேக்கி
ஈநுழை கல்லா மேல்நிமிர் வேலி
உறும்படி அமைத்து நறுங்கனி கொள்ளக்
கருதி முயலும் திருஇலி போலவும்
இலகுவால் அரிசி உலைப்பெய எண்ணி

வெற்றுஉமி குற்றும் பற்றிலர் போலவும்
அருநிலம் உழுதுஅதில் எருமிகப் பெய்து
வித்துஇட்டு ஆங்கே விளைபயன் கொள்ளச்
சித்தத்து உன்னும் மத்தர் போலவும்
வாழ்நாள் அனைத்தும் வீழ்நாள் ஆக்கி

இம்மையும் மறுமையும் செம்மையில் பொருந்தாது
இடர்உறு மாந்தர் புடவியில் பலரால்
அன்னவாறு எளியனும் உன்னி மதிமயங்காது
எய்ப்பினில் உதவும் மெய்ப்பொருள் ஆகி
என்றும்ஓர் இயல்பொடு நின்றகா ரணநின்

சேவடித் தாமரைப் பூவினைப் புனைந்து
நாத்தழும்பு ஏற ஏத்திஉள் உருகிப்
பெருகிய அன்புஎன வருநீர் நிறைந்த
இதய வாவிப் பதுமமா மலரின்
குணன்எனப் பொருந்து மணமாம் நின்னைக்

கண்டுஇறு மாந்து பண்டைவா தனைதீர்ந்து
அறைகடல் அழுந்து நிறைகுடம் அதுபோன்று
அசைவுஅற்று இருக்க இசையத் தருதி
நிலைமிகப் பொருந்திப் புலமுறை சாரலால்
உந்திய வன்ன உருமரு வுதலால்

மந்திரத்து உறுசுடர் மகத்துஉயர் தலினால்
இதம்பயில் இசைகொள் பதம்கலந்து உறுதலால்
வேதமே ஒப்புஎன ஓதுகோ புரமும்
ஒழுக்குநெறி சிறிதும் வழுக்கில் அதனால்
நாற்பதப் பிரிவின் மேற்பதம் அதனால்

பலகலை ஒளிர்மதி நிலவிய அதனால்
முத்தரை வியக்கும் பத்திமை அதனால்
சிவஆகமம் எனஒளிர் தவாமணி மேடையும்
வெள்ளைவா ரணம்மேல் கொள்ளும்ஆங்கு அதனால்
கள்தா மரைபல மட்டுஆர் தலினால்

அஞ்சுமந் தாரம் விஞ்சிஒங் குதலால்
இந்திரன் எனப்பொலி மந்திர வாவியும்
எங்கணும் நிறைந்த எம்குரு நாதா
கருவலி தொலைக்கும் பெருமலை மருந்தே
கருணைசூல் கொண்ட பெரியவான் முகிலே

சிற்றிடைக் கருங்கண் பொற்றொடிக் கரத்தால்
ஆகம்ஆர் வனமுலை அணையும்
போகம்ஆர் இதழிப் பூங்கண் ணியனே. 22

### தோழி கூற்று

கண்நின்று ஒளிரும் கருமணியின் உள்ஒளிபோல்
உண்நின்று ஒளிரும் ஒளிவிளக்குஎன்று—எண்ணிப்
புகலிப் பெருமானைப் புண்ணியனைப் போற்றில்
அகலுமே பாசஇருள் அன்று. 23

### மாலை கண்டு இரங்கல்

இருள்அந் தகன்வரின் ஈர்எயி
றேபிறை ஏய்ந்தசெவ்வான்
சுருள்குஞ்சி பாசம் எனஅந்தி
வந்தது தோகைசொற்றேன்
பருகும் புகலிப் பிரான்எனும்
பானுப் பலகிரணம்
பெருகும் படிவந்து உதித்தால்
மின்ஆவி பெறுகுவளே. 24

பெறுவது பெற்ற உறுதிஉத் தமர்கட்கு
ஆயினும் சிறந்த நேயநெஞ் சினனே
யாகக் கழனியின் யோகத் தபோதனர்
ஆன பேர்உழவர் மானமோடு ஆக்கிய

முயலகன் என்னும் இயல்பெரும் சுரும்பை
உதிரம் என்னும் முதிர்சாறு ஒழுக
நகைஎனும் முத்தம் தொகையுறத் தோன்றச்

சுந்தரப் பதம்எனும் எந்திர ஆலைஇட்டு
அரைத்துஅக வயிரம் கரைத்தவித் தகனே

குங்குமக் கொங்கை அங்கயல் செங்கண்
பெண்அரசி பிரியா வண்ணமெய்ப் பாக
பாடலம் புன்னை ஏடுஅவிழ் இலஞ்சி
வெளியகற் பூரம் களிகொள் கத்தூரி
நறுமணம் எவையும் உறுமுறை பொருந்தி

உண்ணீர் பெற்ற தண்ணீர்ப் பந்தரும்
நெய்கமழ் கருணையும் குய்கமழ் கறியும்
மதிதரு நிலவுஎனப் புதியவெண் தயிரும்
வருக்கையின் கனியும் சருக்கரைக் கட்டியும்
முதல்உப கரணம் பதனொடு மரீஇத்

தளவுஅரும்பு என்ன வளம்மலி போனகம்
மாதவர் எவர்க்கும் ஆதுலர் எவர்க்கும்
நல்நயத் துடன்அருள் அன்னசத் திரமும்
பாடகச் சீரடியும் பால்மொழி மடவார்
நாடகத் தொழில்பயில் நீடுஅரங்கு எவையும்

கலைபயில் கழகமும் பலர்பயில் மன்றமும்
உள்ளன கரவாது உவந்துஎதிர்ந்து அளிக்கும்
வள்ளியோர் வாழும் மணிநெடு வீதியும்
பூமகள் உறையுள் ஆம்என விளங்கும்
பெரும்புகழ்க் காழி விரும்புசங் கரனே

ஏந்துஎழிற் புவன வேந்தன்நீ ஆதலின்
வளமலி நான்முகக் களமர்உன் ஏவலின்
உரம்பெறு குலவரைக் குறும்புஅகப் பட்ட
மண்டலம் என்னும் கண்டநீள் வயலுள்
சராசரத் தொகுதி வராயவித்து இட்டுப்

பாதவம் மிருகம் பறவை மானிடர்
ஆதிப் பைங்கூழ் அமைத்தனர் நிற்ப
மாஉறை மருமக் காவ லாளர்

வளமையின் ஓம்ப விளைவுமுற் றியபின்
புரிபயன் பெறுவான் அரிதர இயற்றி

மெய்வலிக் கூற்றுவக் கைவினை மாக்களில்
புலாலுடை யாக்கை பலாலம்அது அகற்றி
அற்றம்இல் உயிர்எனப் பெற்றநெல் திரளைப்
பூதசா ரத்தனுப் பூத மகாதனு
பூதபரி ணாமம் புகல்உறு யாக்கை

மூவகைப் பண்டியின் மேவர ஏற்றிப்
பொன்நிலம் நிரயம் இந்நிலம் என்னும்
இடம்தொறும் ஆங்குஅவை அடங்கவைத்து அவற்றுள்
ஒருசில வற்றைநின் திருவடி வீட்டில்
சேர்த்தனை அன்னது கூர்த்து நோக்கில்

அரசுகொள் கடமை ஆறில்ஒன்று என்னும்
புரைதீர் முறைமை புதுக்கினை போலும்
அதனால்
மாசுகம் நீயும் வண்மை
பேசுக கருணைப் பெரியநா யகனே. 25

### தோழி தலைவனிடம் பிரியா வரம் வேண்டல்

பெருமானே கூடிப் பிரிந்தாலும் மங்கைக்கு
ஒருவாது அருள்வரம் ஒன்றுண்டே—திருமால்
விடையாய்! புகலி விமலா! மவுன
விடையாய்! பிரியா விடை! 26

விடையம் பொருள்என்று உணராத
மார்க்கம் விரும்புமழுப்
படையும் புயக்கரத்து எம்தாதை
ஞான பரமஎன்றுஎண்
சடைஅம் புனல்அணி வேணு
புரேசன்அம் தாள்மலர்தூ
விடையம் பொருள்என்று இருநீ
என்றுஉண்மை விளம்பினனே. 27

விளம்புவன் யான்ஒன்று உளம்புகும் நெறியால்
எழுத்தின் உறழாது வழுத்து பொருளின்றிக்
குறிப்பொடு படாது வெறித்தபுன் சொல்லே
ஆயினும் பயந்ததம் சேய்அவர் சொலும்மொழி

குழலினும் யாழினும் அழகிதாம் அதுபோல்
நல்தாய் ஆகிஎன் பெற்றாய் என்சொல்
திருச்செவிக் கேறும் பொருத்தம் உண்டுஅதனால்
கேட்டி கேட்டி வாட்டம்இல் பெரியோய்
மதுமழை பிலிற்றிப் புதுமணம் விரித்துப்

பற்பல உதவும் கற்பகத் தருவும்
நந்தா வளன்அருள் சிந்தா மணியும்
வாமமா மேனிய காம தேனுவும்
அருளிய ஏவல் வரன்முறை கேட்பக்
கடவுளர் அணிமணித் தடமகு டங்கள்

கால்துணை வருடப் போற்றினர் இறைஞ்சி
முனிவர் ஆசி நனிபல மொழியக்
கரம்பயில் கவரி அரம்பையர் இரட்டக்
கின்னரர் விபஞ்சி நன்னரம்பு உளரா
இசைஅமுது இருஞ்செவி மிசைஎடுத்து ஊற்ற

முடங்குஉளைச் செங்கண் மடங்கல்அணை நாப்பண்
அமுதுஉகு மென்சொல் குமுதமென் செவ்வாய்
இந்திராணி வந்து அருகு இருப்பக்
கருமுகில் ஆயிரம் திருமலர் பூத்துச்
செங்கதிர்ச் சேகரம் தங்கவீற் றிருந்த

பெருந்திறல் கடுப்ப இருந்துவிண் புரக்கும்
அண்ணல் புரந்தரப் பண்ணவன் அரசும்
பழமறை கனிந்து மழவுபெற்று இருந்த
செந்நாத் தவிசின் முன்னாள் தங்கிப்
பனுவ லாட்டி இனிதுஉவந் திருப்ப

வண்டுபாண் முரன்று கிண்டுபு துதைந்து
பொற்றாது உண்ணா முற்றா இன்பப்
பிரசம்உற்று இருந்த வரசரோ ருகத்தன்
நெருக்கிய புவனப் பெருக்கினைத் தனது
திண்ணிய மனத்திடை எண்ணியாங்கு இயற்றி

எம்மால் எவையும் இயன்றன என்னச்
செம்மாந் திருக்கும் சிறிய வாழ்க்கையும்
திதலைபூத்து அலர்ந்து மதகளிறு இகலி
வருமுலை சுமந்த திருமகள் பச்சைப்
பசும்துழாய் அலங்கல் அசும்புதேன் துளித்துக்

கடிகமழ் மார்பில் குடிபுகுந்து இருப்பத்
தண்நிலவு எனவிரி வெண்ணிறப் பாற்கடல்
ஒல்ஒலித் தரங்கம் மெல்அடி வருடக்
காமர்தென் கால்எனும் சாமரை அசையத்
துத்திநெய் பரந்து பைத்தபை அகலில்

அணிகிளர் பலகதிர் மணிவிளக்கு ஒளிரக்
கடிகைவளர் அரவ நெடயபூ அணைமேல்
மறுஇலா நீல வரைகிடந்து என்ன
அறிதுயில் அமர்ந்த அச்சுதன். வாழ்க்கையும்
அழியா இன்பம்என்று ஒழியாது உரைப்பினும்

கற்றவர் கருத்தின் உற்று நோக்குழி
இந்திர சாலம் முந்துநீள் கனவு
வெண்தேர் போல உண்டெனத் தோன்றி
இலவாம் ஆதலின் நலம்அல ஆங்குஅவை
நிலைபேறு உடையது நின்அருள் செல்வம்

அன்னதே பெறுதற்கு உன்னினேன் தமியேன்
அதனால்
எளிதினின் இரங்கி அளிசுரந் தருளுதி
மரகதத்து இடையிடை தரளம்இட்டு இழைத்த
அரமியம் அதனை விரிகுழை பொதுளி

அரும்பிய புன்னைப் பெரும்பொழில் எனவும்
ஆடக அலங்கல் அணிஅணி நிறைத்த
சேடுயர் நீல்நிறச் செய்குன்று அதனைத்
துணர்த்தபூங் கொன்றை மணத்தகா எனவும்
மொய்க்கும்வண் சிறைஅளி மைக்கரு நிறங்கள்

பளிங்குஅரிந்து இயற்றிய துளங்குஒளி மாடப்
பித்திகைத் தலத்திடைப் பத்திபாய் தலினால்
வந்ததுஇங்கு இரவுஎனச் சந்தத மடவார்
வார்முலை ஆடவர் மார்பிடைக் குளிப்பப்
புல்லிய கலவிப் புதியதேன் நுகரும்

மல்லல்அம் காழி வளநகர் வாண
குறிகுணம் கடந்த மறுஇல்மா மணியே
உறைபொருள் எங்கணும் நிறைபரி பூரணம்
அந்தம் ஆகி முந்தையே தவிர்த்த
அனாதி முத்த எனாதி நித்த

அருஉரு இல்லா ஒருபெரும் பொருளே
அளவையின் அடங்காது ஒளிர்சுக நேய
உலகுமெய் அன்பர் பருகும்ஆர் அமுதே
நலம்கனி பெரிய நாயகி
கலந்தபேர் இன்பில் களித்தபண் ணவனே. 28

### தோழி கூற்று

பணம்அஞ்சு அரையிருக்கப் பாவையரைச் சும்மா
புணர்கின்றீர் என்று புகலப்—புணர்வார்க்கு
அரைக்காசு தந்தனம்என் றார்புகலி யார்மா
அரைக்காசுஎன் றாள்அதற்கு மான். 29

மானைக் கலந்த மணவாளன்
காழி வரதன் செங்க
ணானைப் புரந்தவன் பக்தர்க்கு
முத்தி அளித்தருளும்
ஏனைப் பெரும்பொருள் கல்விமெய்ச்
செல்வம் இருந்தளிப்பார்
தேனைத் தரும்செழும் தாமரை
நாமகள்செந் திருவே. 30

## 3. திருவிடைமருதூர் மும்மணிக் கோவை

தெய்வத் தாமரைச் செவ்வியின் மலர்ந்து
வாடாப் புதுமலர்த் தோடுஎனச் சிவந்து
சிலம்பும் கழலும் அலம்பப் புனைந்து
கூற்றின் ஆற்றல் மாற்றிப் போற்றாது

வலம்புரி நெடுமால் ஏனம்ஆய் நிலம்புக்கு
ஆற்றலின் அகழத் தோற்றாது நிமிர்ந்து
பத்தி அடியவர் பச்சிலை இடினும்
முத்தி கொடுத்து முன்னின்று அருளித்
திகழ்ந்துளது ஒருபால் திருஅடி அகம்சேந்து

மறுஇல், கற்பகத்து உறுதளிர் வாங்கி
நெய்யில் தோய்த்த செவ்வித்து ஆகி
நூபுரம் கிடப்பினும் நொந்து தேவர்
மடவரல் மகளிர் வணங்குபு வீழ்த்த
சின்னப் பன்மலர் தீண்டிடச் சிவந்து

பஞ்சியும் அனிச்சமும் எஞ்ச எஞ்சாத்
திருவொடும் பொலியும் ஒருபால் திருவடி
நீலப் புள்ளி வாள்உகிர் வேங்கைத்
தோலின் கலிங்கம் மேல்விரித்து அசைத்து
நச்சுஎயிற்று அரசக் கச்சையாப் புறுத்துப்

---

1. திருவிடைமருதூர் என்ற புகழ்மிக்க திருத்தலத்தில் கோயில் கொண்ட சிவபெருமான் மீது அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறை என்னும் மூன்று பாடல் இனங்களால் அருளப்பெற்றது இந்த நூல்.

தோடு – இதழ். அகழ் – தோண்டு. சேந்து – சிவந்து.

சிவனுடைய தன்மை இருபால் எழிலும் ஒருபால் நிற்கும் அற்புத எழிலாகும். உமையொரு பங்கனாகக் கோலமீ தருகிற இந்தக் கடவுட் திருவடிவமே சித்தர் ஞானத்து மெய்த்தவத்திற்கு உருவக எடுத்துக் காட்டாகும்.

யோகிகளும் ஞானிகளும் சந்திர கலையையும் சூரிய கலையையும் உடம்பினுள் இயக்குகிற கல்வியை விளக்கம் செய்துள்ள ஞான இலக்கியங்கள் அனைத்தும் ஒளியிலும் ஒலியிலும் இந்தப் பான்மையையே விளக்கித் தமது பயிற்சிக்கு இந்தத் தத்துவத்தையே கையாள்கின்றன.

பொலிந்துஉளது ஒருபால் திருஇடை இலங்குஒளி
அரத்த ஆடை விரித்துமீது உறீஇ
இரங்குமணி மேகலை ஒருங்குடன் சாத்திய
மருங்கிற்று ஆகும் ஒருபால் திருஇடை
செங்கண் அரவும் பைங்கண் ஆமையும்

கேழல் கோடும் வீழ்திரள் அக்கும்
நுடங்கு நூலும் இடம்கொண்டு புனைந்து
தவளநீறு அணிந்ததுஓர் பவளவெற்பு என்ன
ஒளியுடன் திகழும் ஒருபால் ஆகம்
வாடும் வடமும் ஏர்பெறப் புனைந்து

செம்மாந்து அணிந்து குங்குமம் எழுதிப்
பொன்தா மரையின் முற்றா முகிழ்என
உலகுஏழ் ஈன்றும் நிலையில் தளரா
முலையுடன் பொலியும் ஒருபால் ஆகம்
அயில்வாய் அரவம் வயின்வயின் அணிந்து

மூஇலை வேலும் பூவாய் மழுவும்
தமருகப் பறையும் அமர்தரத் தாங்கிச்
சிறந்துஉளது ஒருபால் திருக்கரம் செறிந்த
சூடகம் விளங்கிய ஆடகக் கழங்குஉடன்
ஒம்என் பந்தும் அம்மென் கிள்ளையும்

தரித்தே திகழும் ஒருபால் திருக்கரம்
இரவியும் எரியும் விரவிய வெம்மையின்
ஒருபால் விளங்கும் திருநெடு நாட்டம்
நவ்வி மானின் செவ்வித்து ஆகிப்
பாலில் கிடந்த நீலம் போன்று

குண்டுநீர்க் குவளையில் குளிர்ந்து நிறம்பயின்று
எம்மனோர்க்கு அடுத்த வெம்மைநோய்க்கு இரங்கி
உலகுஏழ் புரக்கும் ஒருபால் நாட்டம்
நொச்சிப் பூவும் பச்சை மத்தமும்
கொன்றைப் போதும் மென்துணர்த் தும்பையும்

---

இடது பக்கம் பெண்மைக் கோலமும் வலது பக்கம் ஆண்மைக் கோலமுமாகக் காட்சி தருகிற வடிவத்தை, ஒவ்வொரு பாகமாக உவமை அழகுடன் இயம்பி, மனத்தில் ஈடுபாடு உண்டாகும் வண்ணம் கவிமொழிகளால் இந்தப் பாடல் ஏத்தித் துதிக்கிறது.

இந்த வர்ணனையே இவ்வடிகளில் தொடர்கிறது.

கங்கை ஆறும் பைங்கண் தலையும்
அரவும் மதியமும் விரவித் தொடுத்த
சூடா மாலை சூடிப் பீடுகெழு
நெருப்பில் திரித்துஅனைய உருக்கினர் சடிலமொடு
நான்முகம் கரந்த பால்நிற அன்னம்

காணா வண்ணம் கருத்தையும் கடந்து
சேண்இகந்து உளதே ஒருபால் திருமுடி பேணிய
கடவுள் கற்பின் மடவரல் மகளிர்
கற்பக வனத்துப் பொன்பூ வாங்கிக்
கைவைத்துப் புனைந்த தெய்வ மாலை

நீலக் குழல்மிசை வளைஇ மேல்நிவந்து
வண்டும் தேனும் கிண்டுபு திளைப்பத்
திருவொடு பொலியும் ஒருபால் திருமுடி
இனைய வண்ணத்து நினைவரும் காட்சி
இருவயின் உருவும் ஒருவயிற்று ஆகி

வலப்பால் நாட்டம் இடப்பால் நோக்க
வாள்நுதல் பாகம் நாணுதல் செய்ய
வலப்பால் திருக்கரம் இடப்பால் வனமுலை
தைவந்து வருட மெய்ம்மயிர் பொடித்தாங்கு
உலகம் ஏழும் பன்முறை ஈன்று.

---

வலது பக்கத்திலே ஆற்றலும், இடது பக்கத்திலே கருணையும் இணைந்ததே இந்த அம்மையப்பனின் உருவம். ஆற்றல் எப்போதும் அச்சம் தருவது. அன்பு எப்போதும் அரவணைப்பது. இந்த இரண்டு தன்மைகளுக்கும் இசைய, அங்கங்களின் அமைப்பும் அவற்றின் வெப்ப தட்பங்களும் பேசப் பெறுகின்றன.

கற்பக வனத்தின் பொற்பூவைத் தொடுத்துக் கைவைத்துப் புனைந்த தெய்வமாலை எப்படி இருக்கும்?

நீலக்குழல் மிசை அது நிவந்து தேன் பிலிற்றி வண்டுகள் திளைக்கும்படி திகழ்கிறது! இது, உமையின் பங்கிலே உள்ள திருவொடு பொலியும் திருமுடி.

மற்றையப் பங்கு அரவும் மதியமும் சேர்ந்து விளங்குகிற பான்மை முன்னடிகளில் உணர்த்தப் பெற்றது!

மருதுஇ ம் கொண்ட ஒருதனிக் கடவுள்நின்
திருவடி பரவுதும் யாமே நெடுநாள்
இறந்தும் பிறந்தும் இளைத்தமை மறந்தும்
சிறைக்கருப் பாசயம் சேரா
மறித்தும் புகாஅ வாழ்வுபெறல் பொருட்டே. 1

பொருளும் குலனும் புகழும் திறனும்
அருளும் அறிவும் அனைத்தும்—ஒருவர்
கருதாஎன்பு ஆர்க்கும் கறைமிடற்றாய் தொல்லை
மருதா என்பார்க்கு வரும். 2

வருந்தேன் இறந்தும் பிறந்தும்
மயக்கும் புலன்வழிபோய்ப்
பொருந்தேன் நரகில் புகுகின்றி
லேன்புகழ் மாமருதில்
பெருந்தேன் முகந்துகொண்டு உண்டு
பிறிதொன்றில் ஆசையின்றி
இருந்தேன் இனிச்சென்று இரவேன்
ஒருவரை யாதொன்றுமே. 3

---

வலப்பகுதியில் உள்ள நாட்டமாகிய வலக்கண், இடப்பால் நாட்டத்தை நாடுகிறது! அதாவது அப்பனின்கண் அம்மையை நோக்குகிறது! வலது கரம் இடது மார்பைத் தடவுகிறது. மெய்ம்மயிர் பொடிப்ப ஏழுலகமும் பன்முறை பெறப்படுகின்றன!

அடிகள் சொல்லுகிறார்: "நெடுநாள் இறந்தும் பிறந்தும் சோர்ந்து விட்ட காரணத்தால், மீண்டும் இந்தச் சுழலில் புகாமல் மெய்யான வாழ்வுபெறுதற் பொருட்டுத் திருவடி பரவுதும் யாமே" என்று!

2. பொருள் – எல்லாச் செல்வமும். குலனும் – நல்லுயர்வு தரும் நற்சார்பும்.

இத்தனையும் 'மருதா' என்பார்க்குத் தாமாகவே வந்துசேரும் என்றபடி.

3. மாமருதாகிய திருவிடைமருதூரில் பெருந்தேனை அள்ளி உண்டு வேறெதிலும் ஆசையில்லாமல் இருந்தேன். வேறு யாரிடமும் சென்று எதுவும் கோரேன்.

இறந்தும் பிறந்தும் வருந்துகிற செயல் இனி எனக்கு இல்லை. புலன்வழி செல்ல மாட்டேன். நரகத்தில் புகமாட்டேன்.

இவ்வாறு உறுதியுடன் வருகிறது பாடல்!

ஒன்றினொடு ஒன்று சென்றுமுகில் தடவி
ஆடுகொடி நுடங்கும் பீடுகெழு மாளிகை
தெய்வக் கம்மியர் கைம்முயன்று வகுத்த
ஓவநூல் செம்மைப் பூஇயல் வீதி

குயில்என மொழியும் மயில்இயல் சாயல்
மான்மாற விழிக்கும் மானார் செல்வத்து
இடைமருது இடங்கொண்டு இருந்த எந்தை
சுடர்மழு வலங்கொண்டு இருந்த தோன்றல்
ஆரணம் தொடராப் பூரண புராண

நாரணன் அறியாக் காரணக் கடவுள்
சோதிச் சுடர்ஒளி ஆதித் தனிப்பொருள்
ஏக நாயக யோக நாயக
யான்ஒன்று உணர்த்துவது உளதே யான்முன்
நனந்தலை உலகத்து அனந்த யோனியால்

பிறந்துழிப் பிறவாது கறங்கெனச் சுழன்றுழீஇத்
தோற்றும் பொழுதின் ஈற்றுத் துன்பத்து
யாய்உறு துயரமும் யான்உறு துயரமும்
இறக்கும் பொழுதின் அறப்பெருந் துன்பமும்
நீஅலது அறிகுநர் யாரே அதனால்

---

4. பீடுகெழு – பெருமை நிறைந்த, உயர்வான பெரிய. ஆதி – காரணம். நனந்தலை – அகன்று பரந்த இடம். அனந்தம் – அளவில்லாத.

மாளிகையின் கொடிகள் வானம் அளாவியவை என்பதை எவ்வாறு சொல்கிறார்? ஒன்றினோடு ஒன்று சென்று மேகத்தைத் தடவியவாறு ஆடுகின்றன.

வீதிகள் எல்லாம் தெய்வக் கம்மியரின் கைவண்ணம் துலங்குகிற எழில் நிரம்பிய வீதிகள்! பேச்சு குயில், சாயல் மயில், பார்வை மான் என்னும் பெண்கள்.

எல்லாம் நிரம்பிய இடைமருதில் எழுந்தருளியுள்ள என் அப்பன், ஒளிவீசுகிற மழுவை வலங்கொண்டு காட்சிதரும் பெருமான். வேதங்களால் தொடரமுடியாத மூர்த்தி. நாரணனால் அறிய ஒண்ணாத ஆதி இறை! ஒப்பற்ற தலைவன், யோகநாயகன்! அப்படிப் பட்டவனை முன்னிலைப்படுத்தி வேண்டித் தமது விண்ணப்பத்தை மொழிகிறார்.

பிறப்பும் இறப்பும் ஆகிய துன்பங்கள். பெறுகிற தாய் உறுகிற துன்பம், பிறக்கிற எனது துன்பம், மரண வாதனை, இவற்றை யெல்லாம் உன்னைத் தவிர வேறு யார் அறிவார்?

யான்இனிப் பிறத்தல் ஆற்றேன் அஃதான்று
உற்பயம் துடைத்தல் நின்பிடித்து அல்லது
பிறிதுஒரு நெறியின் இல்லைஅந் நெறிக்கு
வேண்டலும் வெறுத்தலும் ஆண்டுஒன்றில் படரா
உள்ளம்ஒன்று உடைமை வேண்டும் அஃதன்றி

ஐம்புலன் ஏவல் ஆணைவழி நின்று
தான்அலது ஒன்றைத் தான்என நினையும்
இதுஎனது உள்ளம் ஆதலின் இதுகொடு
நின்னை நினைப்பது எங்ஙனம் முன்னம்
கல்புனை ஆகக் கடல்நீர் நீந்தினர்

என்பிறர் உளரோ இறைவ கற்பம்
கடத்தல்யான் பெறவும் வேண்டும் கடத்தற்கு
நினைத்தல்யான் பெறவும் வேண்டும் நினைத்தற்கு
நெஞ்சுநெறி நிற்கவும் வேண்டும் நஞ்சுபொதி
உறைஎயிற்று உரகம் பூண்ட
கறைகெழு மிடற்றுஎம் கண்நுத லோயே. 4

---

நான் இனிப் பிறத்தலைத் தாங்க மாட்டேன். பிறப்பை ஒழிப்பது உன்னைச் சார்வது தவிர வேறு வழியில் இயலாது.

அதற்கு உள்ளத்தின் ஒருமையே வேண்டும்; அதோடு ஐம்புலனின் ஆணைவழியில் தானல்லாத ஒன்றைத் தான் என்று நினைக்கிற இயல்புடையது என் உள்ளம். இதுகொண்டு நின்னை நினைப்பது எப்படி?

கல்லைப் புணையாகக் கொண்டு கடல்நீரை நீந்தியவர் 'எற்பிறர் உளரோ இறைவ' என்ற கேள்வியில் ஒரு ஞானி, ஒரு சித்தனுடைய உள்ளம் எத்தகைய அகப்பார்வை உடையது என்பது துலங்குகிறது. பிறவிச் சுழலை நான் கடக்கவும் வேண்டும், கடத்தற்கு நான் நினைத்தல் என்ற நிலையையும் பெறவேண்டும். நினைத்தற்கு நெஞ்சு நெறியிலே நிற்கவும் வேண்டும், 'நடுவு நின்றார்க் கன்றி' இது கைகூடாதாகலின்!

தனக்கு உள்ளே தான் புகுவது என்ற நினைவுநிலையே அந்த விண்ணப்பத்தின் உட்பொருளாகும்.

கண்என்றும் நம்தமக்கோர் காப்புஎன்றும் கற்றிருக்கும்
எண்என்றும் மூலஎழுத்து என்றும்—ஒண்ணை
மருதஅப்பா என்றும் வழுத்தாரேல் மற்றும்
கருதஅப்பால் உண்டோ கதி. 5

கதியா வதுபிறி துயாதென்றும்
இல்லை களேபரத்தின்
பொதியா வதுசுமந் தால்விழப்
போம்இது போனபின்னர்
விதியாம் எனச்சிலர் நோவதுஅல்
லால்இதை வேண்டுநர்யார்
மதியா வதுமரு தன்கழ
லேசென்று வாழ்த்துவதே. 6

KANDASAMY LIBRARY, KOVILOOR
A. No. 12849

வாழ்ந்தனம் என்று தாழ்ந்தவர்க்கு உதவாது
தன்உயிர்க்கு இரங்கி மன்உயிர்க்கு இரங்காது
உண்டிப் பொருட்டால் கண்டன வெஃகி
அவிஅடு நர்க்குச் சுவைபல பகர்ந்தே

ஆரா உண்டி அயின்றனர் ஆகித்
தூராக் குழியைத் தூர்த்துப் பாரா
விழுப்பமும் குலனும் ஒழுக்கமும் கல்வியும்
தன்னில் சிறந்த நன்மூ தாளரைக்
கூஉய்முன் நின்றுதன் ஏவல் கேட்கும்

---

5. எண் – அளவை. ஒண்ணை – ஒன்றை. ஒண்ணை என்பதற்கு ஒண்ணாத மையம் என்று பொருள்கொண்டு அந்த மையத்தில் நிலைகொண்டுள்ள இறையாற்றலை அழைப்பதாகக் கூறுகிற விளக்கத்துக்கும் இடமுண்டு.

6. களேபரம் – எலும்பு, உடம்பு. பொதி – சுமை.

7. தாழ்ந்தவர் – வணங்குவோர். அவி – சமையல். ஆரா – தெவிட்டாத. அயின்றனர் – உண்டனர். மூதாளர் – சான்றோர். கூஉய் – கூப்பிட்டு. புல்லர் – அற்பர்கள். ஒரீஇ – விடுத்து, நீக்கி.

சிறாஅர்த் தொகுதியின் உறாஅப் பேசியும்
பொய்யொடு புன்மைதன் புல்லர்க்குப் புகன்றும்
மெய்யும் மானமும் மேன்மையும் ஒரீஇத்
தன்னைத் தேறி முன்னையோர் கொடுத்த
நன்மனைக் கிழத்தி ஆகிய அந்நிலைச்

சாவுழிச் சாஅந் தகைமையின் ஆயினும்
மேவுழி மேவல் செல்லாது காவலொடு
கொண்டோள் ஒருத்தி உண்டிவேட்டு இருப்ப
எள்ளுக்கு எண்ணெய் போலத் தள்ளாது
பொருளின் அளவைக்குப் போகம்விற்று உண்ணும்
அருளில் மடந்தையர் ஆகம் தோய்ந்தும்

ஆற்றல் செல்லாது வேற்றோர் மனைவயின்
கற்புடை மடந்தையர் பொற்பு நனிகேட்டுப்
பிழைவழி பாராது நுழைவழி நோக்கியும்
நச்சிவந்த நல்கூர் மாந்தர்தம்

விச்சையில் படைத்த வெவ்வேறு காட்சியின்
அகமலர்ந்து ஈவார் போல முகமலர்ந்து
இனிது மொழிந்தாங்கு உதவுதல் இன்றி
நாளும் நாளும் நாள்பல குறித்தவர்
தாளின் ஆற்றலும் தவிர்த்துக் கேள்இகழ்ந்து

இகமும் பரமும் இல்லை என்று
பயம்இன்று ஒழுகிப் பட்டிமை பயிற்றி
மின்னின் அனையதன் செல்வத்தை விரும்பித்
தன்னையும் ஒருவர் ஆக உன்னும்
ஏனையோர் வாழும் வாழ்க்கையும் நனைமலர்ந்து

---

தன்னுயிர்க்கு இரங்குதலும், மன்னுயிர்க்கு இரங்காதலுமாகிய மனநிலையில் மற்ற அடிகளின் பொருள் முழுதும் அடங்கிவிடுகிறது. அதோடு மெய்யும் மானமும் மேன்மையும் விடுத்து நிற்கிற நிலையிலே இழிதகைமை நன்கு துலங்குகிறது.

'பொருளின் அளவைக்குப் போகம் விற்றுண்ணும் அருளில் மடந்தையர் ஆகம் தோய்ந்தும்' என்ற சொற்களில் காண்கிற உணர்ச்சியும், சத்தியமும் ஒப்பற்ற வகையிலே உள்ளத்தில் பதிகின்றன. ஞானக் கவிஞனுடைய சொல்லாற்றலின் திறம் அது.

இந்தப் பாடலின் மேலே கண்ட அடிகள் அனைத்தும் பட்டினத்தடிகளின் தனித்தன்மை அப்படியே ஒலிக்கும் முறையிலே கவிப் பண்புடன் பேசுகின்றன.

யோசனை கமழும் உற்பல வாவியில்
பாசடைப் பரப்பில் பால்நிற அன்னம்
பார்ப்புடன் வெருவப் பகுவாய் வாளைகள்
போர்த்தொழில் புரியும் பொருகா விரியும்
மருதமும் சூழ்ந்த மருத வாண

சுருதியும் தொடராச் சுருதி நாயக.
பத்தருக்கு எய்ப்பினில் வைப்புஎன உதவும்
முத்திக் காள மூவா முதல்வநின்
திருவடி பிடித்து வெருவரல் விட்டு
மக்களும் மனைவியும் ஒக்கலும் திருவும்

பொருள்என நினையாதுஉன் அருளினை நினைந்து
இந்திரச் செல்வமும் எட்டுச் சித்தியும்
வந்துழி வந்துழி மறுத்தனர் ஒதுங்கிச்
சின்னச் சீரை துன்னல் கோவணம்
அறுதல் கீளொடு பெறுவது புனைந்து

சிதவலோடு ஒன்றுஉ தவுழி எடுத்தாங்கு
இடுவோர் உளர்எனில் நிலையில்நின்று அயின்று
படுதரைப் பாயலில் பள்ளிமேவி ஓவாத்
தகவுஎனும் அரிவையைத் தழீஇ மகவுஎனப்
பல்உயிர் அனைத்தையும் ஒக்கப் பார்க்கும்நின்

---

இகம் – இம்மை. பரம் – மறுமை. பட்டிமை – பொய். நனை – அரும்பு. யோசனை – நெடுந்தூரம், இரண்டு நாழிகை வழித்தொலைவு என்பர். உற்பலம் – நீலோற்பலம். வாவி – தடாகம். பாசடை – பாசி. பார்ப்பு – குஞ்சு. வெருவி – அச்சத்தோடு. பகுவாய் – திறந்த வாயுடன். எய்ப்பினில் வைப்பு – காப்பீட்டு நிதி.

நினது அருளையே பொருள் என்று கொள்ளுதல், இந்திரப்தவியும், அட்டமா சித்தியும் மறுத்தல், புனைவது கோவணம், இடுவோர் உளரெனில் நிலையில் நின்று அயிர்தல், தரையாகிய பாயலிலே பள்ளிமேவுதல், தழுவுதல் தகவு என்னும் பெண்ணை, எல்லா உயிர் களையும் மகவாகப் பார்த்தல், ஆகிய இந்த இயல்புகளைத் தெய்வத் தன்மையுடைய தொண்டர்களின் முழு இலக்கணத்தை, சொல் நயத்தோடு பேசுகிறது இந்த ஞான வரிகள்!

அப்படிப்பட்ட நின் அடியார்களின் அடியார்க்கு அடியேன் ஆகி, மெய்த்தொண்டு இயற்றி, அவர் காலால் இட்டதைத் தலையாலே ஏற்று – இவ்வாறு மேலேமேலே செல்கிறது பாடல். ஞானிகளின் இயல்பை உணர்ந்த ஓர் ஞானியினாலேதான் இப்படிப்பட்ட ஒரு கவிதையை வழங்கமுடியும்!

செல்வக் கடவுள் தொண்டர் வாழ்வும்
பற்றிப் பார்க்கின் உற்றநா யேற்குக்
குளப்படி நீரும் அளப்பரும் தன்மைப்
பிரளயச் சலதியும் இருவகைப் பொருளும்
ஒப்பினும் ஒவ்வாத் துப்பிற்று ஆதலின்

நின்சீர் அடியார் தம்சீர் அடியார்க்கு
அடிமை பூண்டு நெடுநாள் பழகி
முடலை யாக்கையொடு புடைபட்டு ஒழுகிஅவர்
கால்தலை ஏவல்என் நாய்த்தலை ஏற்றுக்
க்ண்டது காணின் அல்லதொன்று
உண்டோ மற்றுஎனக்கு உள்ளது பிறிதே. 7

பிறிந்தேன் நரகம் பிறவாத வண்ணம்
அறிந்தேன் அனங்கவேள் அம்பில்—செறிந்த
பொருதவட்ட வில்பிழைத்துப் போந்தேன் புராணன்
மருதவட்டம் தன்னுள்ளே வந்து. 8

வந்திக்கண் டாய்அடி யாரைக்கண்
டால்மற வாதுநெஞ்சே
சிந்திக்கண் டாய்அரன் செம்பொன்
கழல்திரு மாமருதைச்
சந்திக்கண் டாய்இல்லை ஆயின்
நமன்தமர் தாம்கொடுபோய்
உந்திக்கண் டாய்நிர யத்துஉன்னை
வீழ்த்தி உழக்குவரே. 9

---

8. நரகத்திலிருந்து தப்பினேன், பிறவியை வென்றேன். மன்மதனுடைய அம்பிலிருந்து பிழைத்தேன். எப்படி? மருத வட்டத்திற்குள் வந்து!

9. அடியாரைக் கண்டால், நெஞ்சமே, வணங்கு. அரனுடைய செம்பொற்கழலை மறவாது சிந்திப்பாயாக! மாமருதைப் போய்ச் சந்தித்து நில். இல்லையென்றால் என்ன ஆகும் தெரியுமா? நமன் தமர்கள் கொண்டுபோய் உந்தித்தள்ளி நரகத்தில் வீழ்த்தி இன்னலிழைப்பார்கள்!

உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ
கழப்பின் வாராக் கையறவு உளவோ
அதனால்
நெஞ்சப் புனத்து வஞ்சக் கட்டையை
வேர்அற அகழ்ந்து போக்கித் தூர்வைசெய்து

அன்புஎன் பாத்தி கோலி முன்புற
மெய்எனும் எருவை விரித்துஆங்கு ஐயம்இல்
பத்தித் தனிவித்து இட்டு நித்தலும்
ஆர்வத் தெள்நீர் பாய்ச்சிநேர் நின்று
தடுக்குநர்க்கு அடங்காது இடுக்கண் செய்யும்

பட்டி அஞ்சினுக்கு அஞ்சிஉள் சென்று
சாந்த வேலி கோலி வாய்ந்தபின்
ஞானப் பெருமுளை நந்தாது முளைத்துக்
கருணை இளந்தளிர் காட்ட அருகாக்
காமக் குரோதக் களைஅறக் களைந்து
சேமப் படுத்துழிச் செம்மையின் ஓங்கி

---

10. உழைப்பு – சில ஏடுகளில் இது 'உழப்பு' என்று பாடம் பெறுகிறது; ஊக்கம் அல்லது முயற்சி என்ற பொருளில். கழப்பு – மிடி, சோம்பர். கையறவு – இன்னல்.

இந்தப் பாடலில் ஞானமாகிய உழவு சித்திரிக்கப் பெறுகிறது. நெஞ்சமாகிய வயலில், வஞ்சமாகிய கட்டையை, மரத்தை, வேரோடு தோண்டி நிலத்தை நன்றாகத் திருத்தி, அன்பு என்ற பாத்தி வெட்டி, மெய் என்ற எருவை இட்டு, ஐயம் இல்லாத பக்தி என்னும் வித்தை விதைத்து, ஆர்வம் என்னும் தண்ணீரை நித்தமும் பாய்ச்சி, எத்தனை தடுத்தாலும் அடங்காமல் தொல்லை தருகிற அடங்காத மாடுகள் ஐந்தும் உள்ளே மேய்ந்துவிடாதபடி.

பட்டி – அடங்கா மாடு.

இந்த ஐம்புல மாடுகள் ஞானப்பயிரை மேய்ந்து விடாதபடி சாந்தம் என்னும் வேலியை அமைத்துவிட்டால், பிறகு, ஞானமாகிய பெருமுளை முளைத்துவிடும். கருணை என்ற இளந்தளிர் எழும். அருகில் முளைக்கிற களைகளாகிய காமக் குரோதங்களைப் பிடுங்கிக் களையெடுத்துவிடவேண்டும்.

மெய்ம்மயிர்ப் புளகம் முகிழ்த்திட்டு அம்எனக்
கண்ணீர் அரும்பிக் கடிமலர் மலர்ந்து
புண்ணிய
அஞ்சுஎழுத்து அரும்காய் தோன்றி நஞ்சுபொதி
காள கண்டமும் கண்ஒரு மூன்றும்
தோள்ஒரு நான்கும் சுடர்முகம் ஐந்தும்
பவள நிறம்பெற்றுத் தவளநீறு பூசி
அறுசுவை அதனினும் உறுசுவை உடைத்தாய்க்
காணினும் கேட்பினும் கருதினும் களிதரும்
சேண்உயர் மருத மாணிக்கத் தீங்கனி
பையப் பையப் பழுத்துக் கைவர
எம்ம னோர்கள் இனிதுஇனிது அருந்திச்
செம்மாந்து இருப்பச் சிலர்இதின் வாராது
மனம்எனும் புனத்தை வறும்பாழ் ஆக்கிக்
காமக் காடு மூடித் தீமைசெய்
ஐம்புல வேடர் ஆறுஅலைத்து ஒழுக
இன்பப் பேய்த்தேர் எட்டாது ஓடக்
கல்லா உணர்வுஎனும் புல்வாய் அலமர
இச்சைவித்து உதிர்த்துழி யான்எனப் பெயரிய
நச்சு மாமரம் நனிமிக முளைத்துப்

---

அப்படிச் செய்தால் விளைச்சல் எப்படி இருக்கும்? கண்ணீர் அரும்பும். தெய்வ மணம் பூக்கும். ஐந்தெழுத்தாகிய அரிய காய் தோன்றிவிடும்.

இந்தப் பயிரில் விளைகிற கனி எத்தகையது? காளகண்டம், மூன்றுகண், நான்குதோள், ஐந்து ஒளிமுகம், பவளநிறம், முத்துப் போன்ற வெண்ணீறு பூசிய மேனி!

அதோடு, காண்பதற்கும், கேட்பதற்கும், எண்ணுவதற்குமே இனிப்பாயிருக்கிற மருத மாணிக்கக் கனியானது மெல்ல மெல்லப் பழுத்துக் கையிலே கிட்டும்.

இது சித்தர்களின் ஞானப் பேச்சாகச் செய்யுள் வடிவில் துலங்குகிற ஞான உழவும் அதன் பயனும் பற்றிய அரிய கட்டுரையாகத் திகழ்கிறது.

இந்த ஞான உழவைக் கைவரப் பெறாதார் மனமாகிய நிலத்தைப் பாழாக்கிக் காமக்காடு மூடும்படி விட்டுவிடுவார்கள். 'ஐம்புல வேடர்' என்று சித்தாந்த வேதம் கூறுகிற அந்த ஐவரும் ''ஆறு அலைத்த ஒழுக இச்சைவித்து உயிர்த்துழி'' என்ன நேர்கிறது?

பொய்என் கவடுகள் போக்கிச் செய்யும்
பாவப் பல்தழை பரப்பிப் பூஎனக்
கொடுமை அரும்பிக் கடுமை மலர்ந்து
துன்பப் பலகாய் தூக்கிப் பின்பு
மரணம் பழுத்து நரகிடை வீழ்ந்து
தமக்கும் பிறர்க்கும் உதவாது
இமைப்பில் கழியும் இயற்கையோர் உடைத்தே. 10

உடைமணியின் ஓசைக்கு ஒதுங்கி அரவம்
படம்ஒடுங்கப் பையவே சென்றங்கு—இடைமருதர்
ஐயம் புகுவது அணிஇழையார் மேல்அனங்கன்
கையம் புகவேண்டிக் காண். 11

காணீர் கதிஒன்றும் கல்லீர்
எழுத்துஅஞ்சும் வல்லவண்ணம்
பேணீர் திருப்பணி பேசீர்
அவன்புகழ் ஆசைப்பட்டுப்
பூணீர் உருத்திர சாதனம்
நீறுஎங்கும் பூசுகிலீர்
வீணீர் எளிதோ மருதப்
பிரான்கழல் மேவுதற்கே. 12

---

'யான்' என்னும் ஆணவ நச்சுமரம் முளைக்கிறது.

ஞான உழவின் அறுவடையை விரிவாகச் சொன்ன அடிகள் இந்த விபரீத விளைச்சலைப் பற்றியும் கூறுகிற பான்மை என்னவென்றால்,

கொடுமை அரும்புகிறது. கடுமை மலர்கிறது. துன்பப் பலகாய் தொங்கக் காணலாம். பின்பு மரணம் பழுத்து நரகத்தில் வீழ்கிறது.

இத்தகைய மனிதரால் தமக்கும் பயனில்லை. மற்றவர்களுக்கும் இல்லை.

11. மணி – சதங்கை. ஐயம் புகுதல் – ஆண்டியாகப் பிச்சை ஏற்கச் செல்லுதல். கையம்புகவேண்டி – கை அம்பு உகவேண்டி.

12. கதி – புகல், மேல்நிலைக்குரிய வழி. கல்லீர் – கற்றுக் கொள்ள மாட்டீர்கள். வீணீர் – வீணாகப் போகிறீர்களே!

மேவிய புன்மயிர்த் தொகையோ அம்மயிர்
பாவிய தோலின் பரப்போ தோல்இடைப்
புகவிட்டுப் பொதிந்த புண்ணோ புண்ணிடை
ஊறும் உதிரப் புனலோ கூறுசெய்து

இடை-இடை நிற்கும் எலும்போ எலும்பிடை
முடைகெழு மூளை விழுதோ வழுவழுத்து
உள்இடை ஒழுகும் வழும்போ மெள்ளநின்று
ஊரும் புழுவின் ஒழுங்கோ நீர்இடை
வைத்த மலத்தின் குவையோ வைத்துக்

கட்டிய நரம்பின் கயிறோ உடம்பிற்குள்
பிரியாது ஒறுக்கும் பிணியோ தெரியாது
இன்னது யான்என்று அறியேன் என்னை
ஏதினும் தேடினன் யாதினும் காணேன்
முன்னம்
வரைத்தனி வில்லால் புரத்தை அழல்ஊட்டிக்

கண்படை ஆகக் காமனை ஒருநாள்
நுண்பொடி ஆக நோக்கிஅண் டத்து
வீயா அமரர் வீயவந்து எழுந்த
தீவாய் நஞ்சைத் திருஅமுது ஆக்கி
இருவர் தேடி வெருவர நிமிர்ந்து

---

13. இந்த உடம்பைப் பட்டினத்தடிகள் இகழ்கிற பாங்கே தனிப் பண்போடு கூடியது. நன்றாக இருப்பவனுக்குமே அருவருப்பு உண்டாகும்படி அந்த வர்ணனை இந்த உடம்பின் இழிதகைமையைப் பிரித்துப் பிரித்து அலசும்! இது அடிகளின் கவிகளில் உள்ள தனித் தன்மை. இந்தப் பண்புக்கு இப்பாடலும் சான்று தருகிறது.

இந்த உடம்பைக் கூறு கூறாக அலசுகிறது பாடலின் மொழி.

நான் என்று சொல்வது இந்த மலக்கூட்டின் எந்தப் பகுதியை? இத்தனை அருவருப்பான உடற்கூறுகளில் நான் எது என்பதை அறியேன். எல்லாவற்றிலும் தேடினேன். என்னைக் காணேன்! என்கிறார் பட்டினத்தடிகள்.

இதற்கு மேலே வருகிற ஞானவரிகள் வேறு விதமானவை. மலத்திலிருந்து மாண்புக்கு ஏறுகிறது கவிதை! சிவபெருமானைக் கூறத் தொடங்கும்போதே பாடலின் 'சுருதி' மாறிவிடுகிறது. ஒவ்வொரு மாட்சிச் செயலையும் அழகோடு இயம்புகிறது அடிகளின் தமிழ்!

பாலனுக்கு ஆகக் காலனைக் காய்ந்து
சந்தன சரள சண்பக வகுள
நந்தன வனத்திடை ஞாயிறு வழங்காது
நவமணி முகிழ்த்த புதுவெயில் எறிப்ப
எண்ணரும் கோடி இருடிகணங் கட்குப்

புண்ணியம் புரக்கும் பொன்னி சூழ்ந்த
திருவிடை மருத பொருவிடைப் பாக
மங்கை பங்க கங்கைநா யகநின்
தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
மாயப் படலம் கீறித் தூய

ஞான நாட்டம் பெற்றபின் யானும்
நின்பெரும் தன்மையும் கண்டேன் காண்டலும்
என்னையும் கண்டேன் பிறரையும் கண்டேன்
நின்நிலை அனைத்தையும் கண்டேன் என்னை
நின்னைக் காணா மாந்தர்
தன்னையும் காணாத் தன்மை யோரே. 13

ஓராதே அஞ்செழுத்தும் உன்னாதே பச்சிலையும்
நேராதே நீரும் நிரப்பாதே—யாராயோ
எண்ணுவார் உள்ளத்து இடைமருதர் பொற்பாதம்
நண்ணுவாம் எண்ணும்அது நாம். 14

---

வகைவகையான பூக்கள் பூத்த நந்தவனத்திடையே, பூநிழல் அடியில் முனிவர்களுக்குப் புண்ணியம் புரக்கின்ற காவிரிநதி சூழ்ந்த திருவிடைமருதின் நாயகனே! விடைப்பாகனே, மங்கை பங்கனே, கங்கைத் தலையனே, தலைவனே, உன் தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்துவிட்டது! மாயத்திரையைக் கிழித்து விட்டேன்!

தூய்மையான் ஞானப்பார்வை பெற்றேன். அதனால், அந்த ஞானக்கண் கொண்டு உன் பெரிய தன்மையைக் கண்டு கொண்டேன். இவ்வாறு நின்னைக் காண இயலாத மக்கள் தம்மைத் தாமே பார்க்கத் தெரியாதவர்களே!

14. ஓர்தல் - தியானித்தல். உன்னுதல் - உச்சரித்தல். பச்சிலை நேர்தல் - அர்ச்சித்தல். நீர் நிரப்புதல் - அபிடேகம் செய்தல், திருமஞ்சனம் ஆட்டுதல்.

நாமே இடையுள்ள ஆறுஅறி வாம்இனி
நாங்கள் சொல்லல்
ஆமே மருதன் மருத
வனத்தன்ன மன்னவரைப்
பூமேல் அணிந்து பிழைக்கச்செய்
தார்ஒரு பொட்டும் இட்டார்
தாமே தளர்பவ ரைப்பாரம்
ஏற்றுதல் தக்கதன்றே. 15

அன்றினர் புரங்கள் அழலிடை அவியக்
குன்று வளைத்துஎய்த குன்றாக் கொற்றவ
நுண்பொடி அணிந்த எண்தோள் செல்வ
கயிலை நடந்தனைய உயர்நிலை நோன்தாள்
பிறைசெறிந்து அன்ன இருகோட்டு ஒருதிமில்
பால்நிறச் செங்கண் மால்விடைப் பாக
சிமையச் செங்கோட்டு இமையச் செல்வன்
மணிஎனப் பெற்ற அணிஇயல் அன்னம்
வெள்ளைச் சிறுநகைக் கிள்ளைப் பிள்ளை
குயில்எனப் பேசும் மயில்இளம் பேடை
கதிர்ஒளி நீலம் கமலத்து மலர்ந்தன
மதர்அரி நெடுங்கண் மானின் கன்று
வருமுலை தாங்கும் திருமார்பு வல்லி
வையம் ஏழும் பன்முறை ஈன்ற

---

15. இந்தப் பாடல் தலைவன் தலைவியது நலத்தைப் பாராட்டிக் கூறியது என்ற குறிப்பும் அறிஞர்கள் தந்துள்ளார்கள். மேல் – மேலிடமாகிய தலை.

16. அன்றினர் – பகைவர். அழல் – நெருப்பு. அவிய – வேகும்படியாக. குன்று வளைத்து எய்து – மேரு மலையை வில்லாக வளைத்து நாண் ஏற்றி எய்து. கொற்றவ – வாகை சூடியவனே. நுண்பொடி – திருநீறு. சிமையம் – உச்சி. இமையச் செல்வன் – இமவான் என்னும் மலையரசன்.

மணிஎனப் பெற்ற – இரத்தின மணி போன்று பெற்றெடுத்த (இமவான் மகளாகிய) அணியியல் அன்னம் – அழகு கொஞ்சுகின்ற அன்னம். வெள்ளைச் சிறுநகை – வெண்மையான சிறிய பற்கள். கிள்ளைப் பிள்ளை – கிளிப்பிள்ளை. கதிர்ஒளி நீலம் கமலத்து மலர்ந்தன – ஒளி வீசுகின்ற நீலக்குவளை மலர் கமல மலருக்குள் பூத்தது போல.

ஐய திருவயிற்று அம்மைப் பிராட்டி
மறப்பஅரும் செய்கை அறப்பெரும் செல்வி
எமைஆள் உடைய உமையாள் நங்கை
கடவுள் கற்பின் மடவரல் கொழுந
பவள மால்வரைப் பணைக்கை போந்துஅனைய

தழைசெவி என்னதோள் தலைவன் தந்தை
பூவலர் குடுமிச் சேவல்அம் பதாகை
மலைதுளை படுத்த கொலைகெழு கூர்வேல்
அமரர்த் தாங்கும் குமரன் தாதை
பொருதிடம் பொன்னி புண்ணியம் புரக்கும்

மருதிடம் கொண்ட மருத வாண
நின்னது குற்றம் உளதோ நின்நினைந்து
எண்ணஅரும் கோடி இடர்ப்பகை களைந்து
கண்உறு சீற்றத்துக் காலனை வதையா
இறப்பையும் பிறப்பையும் இகந்து சிறப்பொடு

தேவர் ஆவின் கன்றுஎனத் திரியாப்
பாவிகள் தமதே பாவம் யாதெனில்
முறியாப் புழுக்கல் முப்பழம் கலந்த
அறுசுவை அடிசில் அட்டுஇனிது இருப்பப்
புசியாது ஒருவன் பசியால் வருந்துதல்

---

கருத்து என்னவென்றால், தாமரை போன்ற முகத்தில் குவளை போன்ற கண்கள் என்பதாம். உமையம்மையைப் பற்றிய கவிமொழிகள் எழில் நிரம்பிய கவிப்பண்போடு திகழ்கின்றன. உமையம்மை இந்த உலகம் ஏழையும் பலமுறை ஈன்ற அழகிய வயிற்றை உடையவள் என்கிறார் பட்டினத்தார்.

பணைக்கை – பனைமரம் போன்ற கை. பதாகை – கொடி. புழுக்கல் – சோறு. அடிசில் – உணவு. அட்டு – சமைத்து.

இந்த வரிகளில் முருகனைப் பற்றிய குறிப்பு முக்கியமானதாகும். குமரனுக்குச் சேவற் கொடி என்று கூறப்படுவதும், அவனுடைய கூர்வேல் மலையைத் துளைத்தது என்பதும், அவன் அமரரைக் காப்பதற்காகப் போரிட்டான் என்பதும் ஆகிய புராணச் செய்திகள் பட்டினத்தடிகளுடைய கவிதையிலும் வழங்கப்பெற்றுள்ளமை முருக வழிபாட்டில் உள்ள வரலாற்று நிகழ்ச்சிகட்கு அழுத்தம் கொடுக்கிறது.

அயினியின் குற்றம் அன்று வெயிலின்வைத்து
ஆற்றிய தெண்ணீர் நாற்றமிட் டிருப்ப
மடாஅ ஒருவன் விடாஅ வேட்கை
தெண்ணீர்க் குற்றம் அன்றுகண் ணகன்று
தேன்துளி சிதறிப் பூந்துணர் துறுமி

வாலுகம் கிடந்த சோலை கிடப்ப
வெள்ளிட வெயிலில் புள்ளிவெயர் பொடிப்ப
அடிபெயர்த்து இடுவான் ஒருவன்
நெடிது வருந்துதல் நிழல்தீங்கு அன்றே. 16

அன்றென்றும் ஆம்என்றும் ஆறு சமயங்கள்
ஒன்றொன்றொடு ஒவ்வாது உரைத்தாலும்—என்றும்
ஒருதனையே நோக்குவார் உள்ளத்து இருக்கும்
மருதனையே நோக்கி வரும். 17

நோக்கிற்றுக் காமன் உடல்பொடி யாக நுதிவிரலால்
தாக்கிற்று அரக்கன் தலைகீழ்ப் படத்தன் சுடர்வடிவாள்
ஒக்கிற்றுத் தக்கன் தலைஉருண்டு ஓடச் சலந்தரனைப்
போக்கிற்று உயிர்பொன்னி சூழ்மருது ஆளுடைப் புண்ணியமே. 18

---

அரிசியைச் சமைத்து முப்பழமும் கலந்த அறுசுவை உணவை வைத்திருக்கும்போது ஒருவன் அதைச் சாப்பிடாமல் பசியால் வருந்தினால் அது யாருடைய குற்றம்? அது உணவின் குற்றமா? இல்லை. அயினி - உணவு. அவ்வாறே, பாவிகளுடைய குற்றம் அவர்களுடைய குற்றமே தவிர, அந்தக் குற்றத்தைப் புறத்தே சாரும்படி செய்வது பொருந்தாது. நிழல் தருகின்ற சோலை இருக்கும்போது ஒருவன் வியர்த்து விறுவிறுத்து வெயிலில் நடந்தான் என்றால் அது நிழலின் குற்றம் ஆகாது அல்லவா?

17. ஆறு சமயங்களும் தம்முள் இணங்கியும் பிணங்கியும் வாதிட்ட போதிலும் மெய்ப்பொருள் ஒன்றே. உள்ளத்து மருதனை நோக்கு வாரின் ஞானசித்தி அதுவே.

18. பொன்னி சூழ்ந்த மருதை ஆளுகின்ற அந்தப் புண்ணியமாகிய பரம்பொருள் எத்தகைய அருஞ்செயல்கள் செய்தது? மன்மதனைப் பொடியாகும்படி நோக்கிற்று. இராவணனை அவனுடைய தலை நொறுங்குமாறு விரலால் அழுத்திற்று. தக்கனுடைய தலை உருண்டோடும்படி வாளை ஓங்கிற்று. இந்தப் பாடலில் வரும் ஒக்கிற்று என்ற வினைச்சொல் ஓங்கிற்று என்ற சொல்லே! எதுகை நோக்கி வல்லோசை பெற்றது.

புண்ணிய புராதன புதுப்பூங் கொன்றைக்
கண்ணி வேய்ந்த கைலை நாயக,
காள கண்ட கந்தனைப் பயந்த
வாளரி நெடுங்கண் மலையாள் கொழுந,

பூத நாத, பொருவிடைப் பாக,
வேத கீத, விண்ணோர் தலைவ,
முத்தி நாயக, மூவா முதல்வ,
பத்தி யாகிப் பணைத்தமெய் அன்பொடும்
நொச்சி ஆயினும் கரந்தை ஆயினும்

பச்சிலை இட்டுப் பரவும் தொண்டர்
கருவிடைப் புகாமல் காத்தருள் புரியும்
திருவிடை மருத திரிபு ராந்தக
மலர்தலை உலகத்துப் பலபல மாக்கள்
மக்களை மனைவியை ஒக்கலை ஒரீஇ

மனையும் பிறவும் துறந்து நினைவரும்
காடும் மலையும் புக்குக் கோடையில்
கைம்மேல் நிமிர்த்துக் கால்ஒன்று முடக்கி
ஐவகை நெருப்பின் அழுவத்து நின்று
மாரி நாளிலும் வார்பனி நாளிலும்

நீரிடை மூழ்கி நெடிது கிடந்தும்
சடையைப் புனைந்தும் தலையைப் பறித்தும்
உடையைத் துறந்தும் உண்ணாது உழன்றும்
காயும் கிழங்கும் காற்றுஉதிர் சருகும்
வாயுவும் நீரும் வந்தன அருந்தியும்

---

19. இந்தப் பாடல் ஓதுதல் என்னும் மரபை ஏற்று இறைவனுடைய பெருமைகளை ஒவ்வொன்றாகக் கூறி அழைக்கின்றது. புராதனன் - பழமையானவன். கந்தன் - முருகன். வாளரி - ஒளிபொருந்திய, செவ்வரி படர்ந்த.

திருவிடைமருதூர் இறைவனுடைய திருவருள் இருந்தவாறு எங்ஙனம் என்றால், நொச்சியோ, கரந்தையோ ஏதோ ஒரு பச்சிலை இட்டு வழிபடுகிற தொண்டரும் பிறவிச் சுழலில் சிக்காமல் தப்பி விடுவார்கள். இந்நிலையில் தவம் புரிகிற சான்றோர் நிலை எவ்வாறு இருக்கிறது? மக்களையும் மனைவியையும் சுற்றத்தையும் நீங்கி, இல்லத்தையும் பிற சொத்துக்களையும் துறந்து, காடும் மலையும் புகுந்து, கோடையில் கையை மேலே நிமிர்த்தி, காலை முடக்கி, நெருப்பில் நின்று, தவம் புரிகிறார்கள்.

களரிலும் கல்லிலும் கண்படை கொண்டும்
தளர்வுறும் யாக்கையைத் தளர்வித்து ஆங்கவர்
அம்மை முத்தி அடைவதற் காகத்
தம்மைத் தாமே சாலவும் ஒறுப்பர்
ஈங்கிவை செய்யாது யாங்கள் எல்லாம்

பழுதின்று உயர்ந்த எழுநிலை மாடத்தும்
செழுந்தாது உதிர்ந்த நந்தின வனத்தும்
தென்றல் இயங்கும் முன்றில் அகத்தும்
தண்டாச் சித்திர மண்டப மருங்கிலும்
பூவிரி தரங்க வாவிக் கரையிலும்

மயிற்பெடை ஆலக் குயிற்றிய குன்றிலும்
வேண்டுழி வேண்டுழி ஆண்டுஆண்டு இட்ட
மருப்பின் இயன்ற வாளரி சுமந்த
விருப்புறு கட்டில் மீமிசைப் படுத்த
ஐவகை அமளி அணைமேற் பொங்கத்

தண்மலர் கமழும் வெண்மடி விரித்துப்
பட்டினுள் பெய்த பதநுண் பஞ்சின்
நெட்டணை அருகாக் கொட்டைகள் பரப்பிப்
பாயல் மீமிசைப் பரிபுரம் மிழற்றச்
சாயல் அன்னத்தின் தளர்நடை பயிற்றிப்

---

மழைக்காலத்திலும் பனிக்காலத்திலும் நீரில் மூழ்கி, தரையில் படுத்து, சடைபுனைந்தும், தலையை மழுக்கியும், ஆடைகள் இன்றியும், பட்டினி இருந்தும், காயும் கிழங்கும் சருகும், காற்றும் தண்ணீரும் கிடந்தவற்றை உண்டு, இப்படியெல்லாம் யாக்கையை வருத்தி, மறுமை முத்தி பெறுவதற்காகத் தம்மைத் தாமே படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் எங்கள் நிலை என்ன? எல்லாவித வசதிகளையும், சுகங்களையும், பெண்ணின்பத்தையும் குறைவின்றி அநுபவிக்கிறோம்.

இன்பத்தின் துய்ப்பு முறை வசதி படைத்த மக்களுக்கு எவ்வாறெல்லாம் இயல்கிறது என்பதை இந்த அடிகள் வரிசை வரிசையாக மொழிகின்றன.

பழுது – குற்றம். தண்டா – குறையாத. தரங்கம் - அலை. வாவி – தடாகம். மருப்பின் இயன்ற – தந்தத்தினால் ஆகிய. வாளரி சுமந்த கட்டு – சிம்மாசனம்.

மடி – ஆடை. கொட்டை – தலையணை. பரிபுரம் – சிலம்பு. குறங்கு – தொடை. கலிங்கம் – ஆடை. கவற்றி – கவர்ந்திழுத்து. பண்வர – இனிய ஒலி எழும்ப. நுசுப்பு – இடை.

பொன்தோ ரணத்தைச் சுற்றிய துகில்என
அம்மென் குறங்கின் ஒம்என் கலிங்கம்
கண்ணும் மனமும் கவற்றிப் பண்வர
இரங்குமணி மேகலை மருங்கில் கிடப்ப
ஆடரவு அல்குல் அரும்பெறல் நுசுப்பு
வாட வீங்கிய வனமுலை கதிப்ப
அணிஇயல் கழுகை அலங்கரித் ததுபோல்
மணிஇயல் ஆரம் கதிர்விரித்து ஒளிர்தர
மணிவளை தாங்கும் அணிகெழு மென்தோள்
வரித்த சாந்தின் மிசைவிரித்து இட்ட
உத்த ரியப்பட்டு ஒருபால் ஒளிர்தர
வள்ளை வாட்டிய ஒள்ளிரும் காதொடு
பவளத் தருகாத் தரளம் நிரைத்தாங்கு
ஒழுகி நீண்ட குமிழ்ஒன்று பதித்துக்
காலன் வேலும் காம பாணமும்
ஆல காலமும் அனைத்தும்இட்டு அமைத்த
இரண்டு நாட்டமும் புரண்டுகடை மிளிர்தர
மதியென மாசறு வதனம் விளங்கப்
புதுவிரை அலங்கல் குழல்மிசைப் பொலியும்
அம்சொல் மடந்தையர் ஆகம் தோய்ந்தும்

---

இந்த வரிகள் உலக இன்பத்தின் செம்பகுதியாகிய சிற்றின்பத்தை எப்படியெல்லாம் துய்த்து, அந்த இன்பத்திற்குத் துணையாய அணி பணிகளை எவ்வாறெல்லாம் பயன்படுத்தி ஆடவர் மகிழ்கிறார்கள் என்பதைப் படம் பிடிக்கின்றன.

காலனுடைய வேலும், மன்மதனுடைய அம்பும், ஆலகால நஞ்சும் அனைத்தையும் இட்டு அமைத்த இரண்டு கண்கள் என்று வருகிறது பாடல். அழகிகளாகிய பெண்களின் கண்கள் ஆடவருக்குத் தருகிற கவர்ச்சி அநுபவம் எத்தகையது என்பதே கருத்து.

இத்தனை அழகும் அணி பணிகளும் கொண்ட மாதராருடைய ஆகம் தோய்ந்தும், உடலொடு கூடியும் எங்களுடைய வாழ்க்கை கழிகிறது. அதோடு, வேலைப்பாடுகள் அமைந்த தங்கத்தட்டில் உணவு உண்கிறோமா? இனிது அருந்தாது, ஆடினர்க்கு என்றும், பாடினர்க்கு என்றும் அளவில்லாமல் கொடுக்கிறோம். அதோடு, வகைவகையான மேனிப்பூச்சும் புனைபணிகளும் வாசனைப் பொடி தூவிய மாலைகளுமாக ஐந்து புலன்களும் துய்ப்பதோடு மைந்தரும் சுற்றமும் கூடிக் களிப்பிலே ஆழ்ந்திருந்தோம்.

சின்னம் பரப்பிய பொன்னின் கலத்து
அறுசுவை அடிசில் வறிதுஇனிது அருந்தாது
ஆடினர்க்கு என்றும் பாடினர்க்கு என்றும்
வாடினர்க்கு என்றும் வரையாது கொடுத்தும்
பூசுவன பூசியும் புனைவன புனைந்தும்

தூசின் நல்லன தொடையில் சேர்த்தியும்
ஐந்து புலன்களும் ஆர ஆர்ந்து
மைந்தரும் ஒக்கலும் மனமகிழ்ந்து ஓங்கி
இவ்வகை இருந்தோம் ஆயினும் அவ்வகை
மந்திர எழுத்தைந்தும் வாயிடை மறவாது

சிந்தை நின்வழி செலுத்தலின் அந்த
முத்தியும் இழந்திலம் முதல்வ அத்திறம்
நின்னது பெருமை யன்றோ என்எனில்
வல்லான் ஒருவன் கைம்முயன்று எறியினும்
மாட்டா ஒருவன் வாளா எறியினும்

நிலத்தின் வழாஅக் கல்லேபோல்
நலத்தின் வழார்நின் நாமம்நவின் றோரே. 19

நாமம்நவிற்றாய் மனனே நாரியர்கள் தோள்தோய்ந்து
காமம் நவிற்றிக் கழிந்தொழியல்—ஆமோ
பொருதவனத்து ஆனைஉரி போர்த்தருளும் எங்கள்
மருதவனத் தானை வளைந்து. 20

---

இத்தனை இன்பங்களுக்கு நடுவிலே நின் ஐந்தெழுத்தை வாயினால் மறவாமல் உச்சரித்ததோடு மனத்தையும் உன்வழி செலுத்தலினால் அந்த முத்தியையும் நாங்கள் இழந்துவிடவில்லை. முதல்வனாகிய இறைவனே! அது உன்னுடைய பெருமையே. ஏனெனில், ஒருவன் வல்லமையோடு கையை ஓங்கிக் கல்லை எறிந்தாலும் வல்லமை மாட்டாத ஒருவன் வெறுமனே எறிந்தாலும் எறிந்த கல் நிலத்தில் விழத்தானே செய்யும்! அவ்வாறே அந்த எறிந்த கல்லைப் போலவே உன் நாமத்தை நவின்றவர்கள் நலங்களிலிருந்து தவற மாட்டார்கள். கல் நிலத்தில் விழுவதுபோல அவர்கள் நலத்தில் ஆழ்வார்கள்.

20. நாமம் – பெயர். நாரியர்கள் – பெண்கள். தோய்தல் – அழுந்துதல். பொருத – போர் புரிந்த. வனம் – காடு. ஆனைஉரி – ஆனைத்தோல்.

வளையார் பசியின் வருந்தார்
பிணியின் மதனன் அம்புக்கு
இளையார் தனங்கண்டு இரங்கிநில்
லார்இப் பிறப்பினில்வந்து
அளையார் நரகினுக்கு என்கட
வார்பொன் அலர்ந்தகொன்றைத்
தளையான் இடைமரு தன்அடி
யார்அடி சார்ந்தவரே. 21

அடிசார்ந் தவர்க்கு முடியா இன்பம்
நிறையக் கொடுப்பினும் குறையாச் செல்வம்
மூலமும் நடுவும் முடிவும் இகந்து
காலம் மூன்றையும் கடந்த கடவுள்

உளக்கணுக்கு அல்லாது ஊன்கணுக்கு ஒளித்துத்
துளக்கற நிமிர்ந்த சோதித் தனிச்சுடர்
எறுப்புத் துளையின்இரு செவிக்கு எட்டாது
உறுப்பில்நின்று எழுதரும் உள்ளத்து ஓசை
வைத்த நாவின் வழிமறுத்து அகத்தே

தித்தித்து ஊறும் தெய்வத் தேறல்
துண்டத் துணையில் பண்டை வழிஅன்றி
அறிவில் நாறும் நறிய நாற்றம்
ஏனைய தன்மையும் எய்தாது எவற்றையும்
தானே ஆகி நின்ற தத்துவ

---

21. வளையார் பசியின் வருந்தார் – பசியினால் துவண்டுபோகார். வருந்தார் பிணியின் – நோயினால் வருந்தமாட்டார்கள். மதனன் அம்புக்கு இளையார் – காமனுடைய அம்பிற்குத் தோற்றுப் போகார். அடியார் அடிசார்ந்தவர் – அடியவருக்கு அடியவர்.

22. முடியா இன்பம் – முடிவில்லாத இன்பம் கிட்டும். அதோடு நிறைந்த செல்வம் குறையாது நிற்கும்.

உள்ளத்தின் கண்ணுக்கு அல்லாமல், அதாவது ஊனக்கண்ணால் இல்லை, உள்ளத்தின் கண்ணினால் மட்டுமே காணக்கூடிய. பரம் பொருளானது ஊனக்கண்ணுக்கு ஒளித்துவிடுகிறது. அதோடுகூட, இந்த வரிகளில் சித்தர் இலக்கியத்தின் நுட்பமான ஒளி அநுபவத்தையும் பட்டினத்தடிகள் எடுத்துக் கூறுகிறார்.

தோற்றுவது எல்லாம் தன்னிடைத் தோற்றித்
தோற்றம் பிறிதில் தோற்றாச் சுடர்முளை
விரிசடை மீமிசை வெண்மதி கிடப்பினும்
இருள்விரி கண்டத்து ஏக நாயக
சுருதியும் இருவரும் தொடர்ந்துநின்று அலமர
மருதிடம் கொண்ட மருத மாணிக்க
உமையாள் கொழுந ஒருமூன் றாகிய
இமையா நாட்டத்து என்தனி நாயக
அடியேன் உறுகுறை முனியாது கேண்மதி
நின்அடி பணியாக் கல்மனக் கயவரொடு
நெடுநாள் பழகிய கொடுவினை ஈர்ப்பக்
கருப்பா சயம்எனும் இருள்சிறை அறையில்
குடர்என் சங்கிலி பூண்டு தொடர்பட்டுக்
கூட்டுச் சிறைப்புழுவின் ஈட்டுமலத்து அழுந்தி
உடனே வருந்தி நெடுநாள் கிடந்து
பல்பிணிப் பெயர்பெற்று அல்லல் படுத்தும்
தண்ட ளாளர் மிண்டிவந்து அலைப்ப
உதர நெருப்பில் பதைபதை பதைத்தும்
வாதமத் திகையின் மோதமொத் துண்டும்
கிடத்தல் நிற்றல் நடத்தல் செல்லாது

---

ஊனக் கண்ணுக்குத் தெரியாமல் உள்ளத்தின் கண்ணுக்குத் தெரிவது ஒளி அநுபவமாகும். இவ்வாறே, ஒலி அநுபவம் எப்படி இருக்கிறது என்றால், அது இரு செவிகளுக்கும் எட்டுவதில்லை. அந்த ஒலி உடம்புக்குள்ளிருந்து வருவது. அதுவே உறுப்பில் நின்று இழிதரும் உள்ளத்தோசை என்றார் பட்டினத்தடிகள்.

அதோடு நாவின் அகத்து உள்ளே தித்திக்கும்படி ஊறுகின்ற தேன் அது. சுரப்பிகளின் இந்தத் தேனூற்றைப் பற்றி முன்பகுதிகளில் விளக்கம் கூறப்பெற்றுள்ளது.

கேண்மதி – கேட்பாயாக. கருப்பாசயம் – கருப்பை. தண்டளாளர் – தண்டனை தருகின்ற ஏவலாளர். மிண்டிவந்து – நெருங்கிவந்து. உதரநெருப்பு – வயிற்றுத்தீ. அடியேன் உறுகுறை கேண்மதி என்று முந்திய அடியில் சொன்னதை இந்த அடிகளில் விரிவாக விளக்குகின்றார். ஆசைத்தளையில் அகப்பட்டு, பெரியோர் பிழைத்தும், பிறர்பொருள் கவர்ந்தும், பரிவு செய்யாது வாழ்ந்தும், பல்லுயிர் செகுத்தும், பிறர் மனைவியரின் தோற்றம் புகழ்ந்தும், பொய் பல கூறியும் வாழ்விலே செய்துள்ள தவறுகளை வரிசைப் படுத்துகிறார் பின் அடிகளிலே. அதற்கு முன்னுரையாக, நெடுநாள் பழகிய கொடுவினையின் ஈர்ப்பை இங்கே விளக்குகிறார்.

இடங்குறை வாயிலின் முடங்கி இருந்துழிப்
பாவப் பகுதியில் இட்டுக் காவல்
கொடியோர் ஐவரை ஏவி நெடிய
ஆசைத் தளையில் என்னையும் உடலையும்
பாசப் படுத்திப் பையென விட்டபின்

யானும் போந்து தீதினுக்கு உழன்றும்
பெரியோர்ப் பிழைத்தும் பிறர்பொருள் வெளவியும்
பரியாது ஒழிந்தும் பல்உயிர் செகுத்தும்
வேற்றோர் மனைவியர் தோற்றம் புகழ்ந்தும்
பொய்பல கூறியும் புல்லினம் புல்லியும்

ஐவரும் கடுப்ப அவாவது கூட்டி
ஈட்டின கொண்டு மீண்டு வந்துழி
இட்டுழி இடாது பட்டுழிப் படாஅது
இந்நாள் இடுக்கண் எய்திப் பன்னாள்
வாடுபு கிடப்பேன் வீடுநெறி காணேன்

நின்னை அடைந்த அடியார் அடியார்க்கு
என்னையும் அடிமை யாகக் கொண்டே
இட்ட பச்சிலைகொண்டு ஒட்டி நன்கறிவித்து
இச்சிறை பிழைப்பித்து இனிச்சிறை புகாமல்
காத்தருள் செய்ய வேண்டும்
தீத்திரண் டன்ன செஞ்சடை யோனே. 22

---

புல்லினம் புல்லுதலாகிய சிற்றினம் சேர்கின்ற தீமையானது மேலும் பல தவறுகளுக்கு வழி வகுக்கிறது. அந்தத் தவறுகளையெல்லாம் இந்த வரிகள் விரிவு செய்கின்றன. பன்னாள் வாடுபு கிடத்தலும் வீடுநெறி காணாது உழலுதலும் ஆகிய இடுக்கண்கள் எல்லாம் இவ்வாறு தோன்றி வளர்கின்றன.

ஆசைத்தளை – காமமாகிய விலங்கு. பாசப்படுத்தி – பிணைத்து. பரியாது – பரிவுசெய்யாமல். தோற்றம் புகழ்தல் என்பது இடக்கரடக்கல்; அதனைத் தொடர்ந்து செய்கிற தீயசெயல்களையும் உள்ளடக்கியவாறு.

அடியவர்தம் அடியவர்க்கு என்னை அடிமையாகக் கொண்டு இந்தச் சிறையிலிருந்து நான் பிழைத்து, இனிச் சிறைபுகாமல் என்னைக் காத்தருள வேண்டும்.

சடைமேல் ஒருத்தி சமைந்திருப்ப மேனிப்
புடைமேல் ஒருத்தி பொலிய—இடையேபோய்ச்
சங்கே கலையே மருதற்குத் தான்கொடுப்பது
எங்கே இருக்க இவள். 23

இருக்கும் மருதினுக்குள்
இமையோர்களும் நான்மறையும்
நெருக்கும் நெருக்கத்தும்
நீளகத்துச்சென்று மீளஒட்டாத்
திருக்கும்அறுத்துஐவர் தீமையும்
தீர்த்துச்செவ் வேமனத்தை
ஒருக்கும் ஒருக்கத்தின் உள்ளே
முளைக்கின்ற ஒண்சுடரே. 24

சுடர்விடு சூலம் ஏந்தினை என்றும்
விடைஉகந் தேறிய விமல என்றும்
உண்ணா நஞ்சம் உண்டனை என்றும்
கண்ணாற் காமனைக் காய்ந்தனை என்றும்
திரிபுரம் எரித்த சேவக என்றும்
கரிஉரி போர்த்த கடவுள் என்றும்
உரகம் பூண்ட உரவோய் என்றும்
சிரகம் செந்தழல் ஏந்தினை என்றும்
வலந்தரு காலனை வதைத்தனை என்றும்

---

23. இந்தப் பாடல் தோழியின் கூற்றாகும். தலைவனுடைய மோகத்தின் பாற்பட்ட தலைவி வளையும் கலையும் இழந்து நின்ற நிலைநோக்கித் தோழி கூறியவாறாம். சிவனுடைய சடையிலே கங்கை என்ற மங்கை இருக்கிறாள். பங்கில் உறைகிறாள் இன்னொரு மங்கை. இந்நிலையில் இவள் சங்கையும் ஆடையையும் இழப்பது இவனுடைய மேனியில் எங்கே போய் இருப்பதற்கு? அங்கே இடம் இல்லையே என்றவாறு.

24. திருக்கு – கோணல். ஐவர் – ஐம்பொறிகள். ஒருக்கம் – ஒடுக்கம். ஒண்சுடர் – ஒளிவீசும் சுடராகிய இறைவனின் வடிவம். யோகிகள் கூறுகிற மன ஒடுக்கத்தின் உள்ளே முளைக்கின்ற ஒண்சுடரே இறைவன் என்றவாறு.

25. சூலம் – மூவேல். சேவக – வீரனே. உரகம் – பாம்பு. சிகரம் – மண்டையோடு. உரவோய் – உயர்ந்தவனே, திறல் உடையோனே, பெருமை மிக்கவனே.

சலந்தரன் உடலம் தடிந்தனை என்றும்
அயன்சிரம் ஒருநாள் அரிந்தனை என்றும்
வியந்தவாள் அரக்கனை மிதித்தனை என்றும்
தக்கன் வேள்வி தகர்த்தனை என்றும்
உக்கிரப் புலிஉரி உடுத்தனை என்றும்

ஏனமும் அன்னமும் எட்டாது அலமர
வானம் கீழ்ப்பட வளர்ந்தனை என்றும்
செழுநீர் ஞாலம் செகுத்துஉயிர் உண்ணும்
அழல்விழிக் குறளினை அமுக்கினை என்றும்
இனையன இனையன எண்இலி கோடி

நினைவரும் கீர்த்தி நின்வயிற் புகழ்தல்
துளக்குறு சிந்தையேன் சொல்லளவு ஆதலின்
அளப்புஅரும் பெருமைநின் அளவுஅலது ஆயினும்
என்தன் வாயில் புன்மொழி கொண்டு
நின்னை நோக்குவன் ஆதலின் என்னை

இடுக்கண் களையா அல்லல் படுத்தாது
எழுநிலை மாடத்துச் செழுமுகில் உறங்க
அடித்துத் தட்டி எழுப்புவ போல
நுண்துகில் பதாகை கொண்டுகொண்டு உகைப்பத்
துயிலின் நீங்கிப் பயிலும் வீதித்

---

உக்கிரம் - வெகுளி. புலிஉரி - புலிஅதள்.

இந்தப் பாடல் வரிகளில் நஞ்சம் உண்டது, காமனைக் காய்ந்தது, திரிபுரம் எரித்தது, யானைத்தோல் போர்த்தது, பாம்பு பூண்டது, மண்டையோடும் தீயும் ஏந்தியது, காலனை வதைத்தது, சலந்தரன் உடலம் தடிந்தது, அயன் சிரம் அரிந்தது, அரக்கனை மிதித்தது, தக்கன் வேள்வி தகர்த்தது, புலித்தோல் உடுத்தது ஆகிய சிவனின் பண்புகள் கூறப்பெற்றன.

ஏனம் - பன்றி. அலமர - மயங்கித் திணற. இப்படிப்பட்ட எண்ணில்லாத பெருமைகளை என் சொல்லளவுக்குத்தான் சொல்ல முடிகிறது. ஆனால் உன்கீர்த்தி அளப்பரும் பெருமையது. அந்த அளவுக்கு என்னால் சொல்ல இயலாது எனினும் என்னுடைய புன்மொழிகொண்டு உன்னை நோக்குகிறேன். அதனால் என்னை ஈடேற்ற வேண்டும் என்றவாறு.

துளக்குறுசிந்தை - நிலையில்லாமல் ஆடுகிற மனம். அளப்பரும் பெருமை - அளவிடுதற்கு அரிய பெருமை. புன்மொழி - புல்லியசொல்.

திருமருது அமர்ந்த தெய்வச் செழும்சுடர்
அருள்சுரந்து அளிக்கும் அற்புதக் கூத்தன்
கல்லால் எறிந்த பொல்லாப் புத்தன்
நின்நினைந்து எறிந்த அதனால்
அன்னவன் தனக்கும் அருள்பிழைத் தின்றே. 25

இன்றிருந்து நாளை இறக்கும் தொழிலுடைய
புன்தலைய மாக்கள் புகழ்வரோ—வென்றிமழு
வாளுடையான் தெய்வ மருதுடையான் நாயேனை
ஆளுடையான் செம்பொன் அடி. 26

அடிஆ யிரம்தொழில் ஆயின
ஆயிரம் ஆயிரம்பேர்
முடிஆ யிரம்கண்கள் மூவா
யிரம்முற்றும் நீறணிந்த
தொடிஆ யிரம்கொண்ட தோளிரண்
டாயிரம் என்று நெஞ்சே
படியாய் இராப்பகல் தென்மரு
தாளியைப் பற்றிக்கொண்டே. 27

---

அருள்சுரந்து வழங்குகின்ற அற்புதமான கூத்தன்நீ. சாக்கியன் கல்லால் எறிந்தான். ஆனால் அவன் உள்ளம் உன்னை நினைந்தது. எனவே அவனுக்கும் நீ அருள் வழங்கத் தவறவில்லை என்றவாறு.

26. இன்றைக்கு இருந்து நாளைக்கு மடிகின்ற நிலையில் உள்ள மக்கள் அவனுடைய செம்பொன் அடியினைப் புகழ மாட்டாதவர்களே. அவன் வெற்றிமழு வாள் உடையவன். தெய்வ மருதுடையவன். நாயேனை ஆளுடையவனும் ஆவான்.

27. அவனுடைய திருவடி ஆயிரம். தொழிலாயின ஆயிரம். பேரும் ஆயிரம். முடி ஆயிரம். கண்களோ மூவாயிரம் (முக்கண்கள் என்றபடி). தொடி – வளையல்.

கொண்டலின் இருண்ட கண்டத்து எண்தோள்
செவ்வான் உருவில் பைஅரவு ஆர்த்துச்
சிறுபிறை கிடந்த நெறிதரு புன்சடை
மூவா முதல்வ முக்கண் செல்வ

தேவ தேவ திருவிடை மருத
மாசுஅறு சிறப்பின் வானவர் ஆடும்
பூசத் தீர்த்தம் புரக்கும் பொன்னி
அயிரா வணத்துறை ஆடும் அப்ப
கைலாய வாண கௌரி நாயக

நின்னை வணங்கிப் பொன்னடி புகழ்ந்து
பெரும்பதம் பிழையா வரம்பல பெற்றோர்
இமையா நெடுங்கண் உமையாள் நங்கையும்
மழைக்கண் கடத்துப் புழைக்கைப் பிள்ளையும்
அமரர்த் தாங்கும் குமர வேளும்

சுரிசங் கேந்திய திருநெடு மாலும்
வான்முறை படைத்த நான்முகத்து ஒருவனும்
தாருகற் செற்ற வீரக் கன்னியும்
நாவின் கிழத்தியும் பூவின் மடந்தையும்
பீடுயர் தோற்றத்துக் கோடி உருத்திரரும்

ஆனாப் பெருந்திரள் வானோர் தலைவனும்
செயிர்தீர் நாற்கோட்டு அயிரா வதமும்

---

28. கொண்டலின் இருண்ட – முகில்போன்று கரிய. எண்தோள் – எட்டுத் தோள்களை உடைய. பைஅரவு – படம் விரிக்கும் பாம்பு. ஆர்த்து – அணிந்து. புன்சடை – சுருண்ட சடை. மூவா முதல்வ – மூப்பில்லாத ஆதியே.

பூச...அப்ப – பூசத் திருநாளன்று காவிரி வந்து பொங்குகிற அயிராவணத்துறையில் நீராடுகிற அப்பனே!

இமையா நெடுங்கண் உமையாள் – இமையாத கண்களை உடைய உமைஅம்மை. மழைக்கண் கடந்து – மழைநீர் போன்று மதநீர் சொரிகின்ற வாயை உடைய. புழைக்கைப் பிள்ளை – தும்பிக்கை உடைய பிள்ளையார். அமரர்த் தாங்கும் – தேவர்களைப் பாதுகாத்த. குமரவேளும் – முருக மைந்தனும்.

சுரிசங்கு – சுழியை உடைய வலம்புரிச் சங்கு. நாவின் கிழத்தி – கலைமகள். பூவின் மடந்தை – திருமகள். வானோர் தலைவன் – இந்திரன். அயிராவதம் – நான்கு கொம்புகளையுடைய அயிராவதம் என்னும் இந்திரனின் யானை.

வாம்பரி அருக்கர் தாம்பன் னிருவரும்
சந்திரன் ஒருவனும் செந்தீக் கடவுளும்
நிருதியும் இயமனும் சுருதிகள் நான்கும்

வருணனும் வாயுவும் இருநிதிக் கிழவனும்
எட்டு நாகமும் அட்ட வசுக்களும்
மூன்று கோடி ஆன்ற முனிவரும்
வசிட்டனும் கபிலனும் அகத்தியன் தானும்
தும்புரு நாரதர் என்றிரு திறத்திரும்

வித்தகப் பாடல் முத்திறத்து அடியரும்
திருந்திய அன்பின் பெருந்துறைப் பிள்ளையும்
அத்தகு செல்வத் தவம்மதித் தருளிய
சித்த மார்சிவ வாக்கிய தேவரும்
வெள்ளை நீறு மெய்யிற் கண்டு

கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்தும்
ஓடும் பல்நரி ஊளைகேட்டு அரனைப்
பாடின என்று படாம்பல அளித்தும்
குவளைப் புனலில் தவளை அரற்ற
ஈசன் தன்னை ஏத்தின என்று

காசும் பொன்னும் கலந்து தூவியும்
வழிபடும் ஒருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை என்னைத் தின்னக் கண்டு
பிடித்தலும் அவன்இப் பிறப்புக்கு என்ன
இடித்துக் கொண்டவன் எச்சிலை நுகர்ந்தும்

---

வாம் – தாவிச் செல்லுகின்ற; வாவுதல் – தாவுதல். அருக்கர் – கதிரவர்கள். இருநிதிக் கிழவன் – குபேரன்; சங்கநிதி, பதுமநிதி ஆகிய இருவகைச் செல்வங்களையும் உடையவன். இந்தப் பாடலின் ஒவ்வொரு அடியிலும் முதல் சீரும் மூன்றாவது சீரும் எதுகை அல்லது மோனை கொண்டு அமைந்திருப்பது இதன் கவிச்சிறப்புக்களுள் ஓர் எழில் அணியாகும்.

முனிகணங்களோடு ஞானப் பாவாணர்கள் மூவரும், பெருந்துறைப் பிள்ளையாகிய மாணிக்கவாசகரும் முதலான பல சிவநேசச் செல்வர்களின் வரலாறுகளை இந்த அடிகள் நிகழ்த்துகின்றன.

சிவன்பால் இருந்த அன்பினால் இந்தச் சிவஞானச் செம்மல்கள் எத்தகைய வள்ளன்மை கொண்டு ஒழுகினார்கள் என்பதைப் புராண வரலாற்றிலிருந்து ஒவ்வொரு நிகழ்ச்சியாக வரிசைப் படுத்துகிறது இந்தப் பாடல்.

மருத வட்டத்து ஒருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
உம்மைப் போல எம்இத் தலையும்
கிடத்தல் வேண்டுமென் றடுத்தடுத்து இரந்தும்
கோயில் முற்றத்து மீமிசைக் கிடப்ப

வாய்த்த தென்று நாய்க்கட்டம் எடுத்தும்
காம்புஅவிழ்த்து உதிர்ந்த கனிஉருக் கண்டு
வேம்புகட்கு எல்லாம் விதானம் அமைத்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழல் தேவியைப் பரிவுடன் கொடுத்த

பெரிய அன்பின் வரகுண தேவரும்
இனைய தன்மையர் எண்ணிறந் தோரே
அனையவர் நிற்க யானும் ஒருவன்
பத்தி என்பதுஓர் பாடும் இன்றிச்
சுத்தன் ஆயினும் தோன்றாக் கடையேன்

நின்னை,
இறைஞ்சிலன் ஆயினும் ஏத்திலன் ஆயினும்
வருந்திலன் ஆயினும் வாழ்த்திலன் ஆயினும்
கருதி இருப்பன் கண்டாய் பெரும

---

இந்த அடிகள் சைவத்தோடு இணைந்த பெரியோர் வரலாறுகளிலும், இறைவனுடைய திருவிளையாடல் நிகழ்ச்சிகளிலும் விரிவாகப் பேசப்படுகின்ற நிகழ்ச்சிகளையும், சான்றோர்களையும், வள்ளல்களையும், ஞானிகளையும், சான்றோர்கள் நிகழ்த்திய அற்புதங்களையும் அடுக்கடுக்காக மொழிகின்றன.

சிவனிடம் அன்பு பூண்ட பெரியோர்கள் பெற்ற பேறுகளையும், இறையாற்றலும் திருவருளும் அவர்களுடைய வாழ்விலே வழங்கிய பேரின்பப் பேறுகளையும் சொல்லி, இந்தப் பாடல் இறைவனுடைய செயலுக்கு அடிகள் தம்மைத் தாம் உரிமையாக்குகிற தன்மையை உணர்த்துகிறது.

வரகுணதேவர் ஈறாகச் சொல்லப்பட்ட சிவனை மேவிய சான்றோர் எண்ணிறந்தோர். அப்படிப்பட்டவர்கள் நடுவில் நானும் ஒருவன். பக்தி என்ற ஈடுபாடு இல்லாமல் நிற்கிறேன்.

இறைஞ்சிலனாயினும் ஏத்திலனாயினும், வருந்திலனாயினும், வாழ்த்திலனாயினும் உன்னைக் கருதி இருக்கிறேன் நான். எல்லாம் நின் செயலே என்று அமைகிறேன் என்றவாறு.

நின்உலகு அனைத்தும் நன்மை தீமை
ஆனவை நின்செயல் ஆதலின்
நானே அமையும் நலம்இல் வழிக்கே. 28

வழிவிழைத்து நாம்எல்லாம் வந்தவா செய்து
பழிபிழைத்த பாவங்கள் எல்லாம்—பொழில்சூழ்
மருதுஇடத்தான் என்றுஒருகால் வாய்ஆரச் சொல்லிக்
கருதிடத்தான் நில்லா கரந்து. 29

கரத்தினில் மாலவன் கண்கொண்டு
நின்கழல் போற்றநல்ல
வரத்தினை ஈயும் மருதஅப்
பாமதி ஒன்றும்இல்லேன்
சிரத்தினு மாய்என்றன் சிந்தை
யுள்ஆகி வெண்காடன்என்னும்
தரத்தினு மாயது நின்னடி
யாம்தெய்வத் தாமரையே. 30

---

அடியார்களுடைய வரலாற்றை எல்லாம் பட்டினத்து அடிகளுக்கு முன்பும், அவர் காலத்துக்குப் பின்பும் பல ஞானக் கவிஞர்கள் நூல் வடிவில் வழங்கியிருப்பதோடு, மிகத் தொன்மையான காலத்திலிருந்தே தமிழகத்தில் கடவுள் அற்புதங்கள் பற்றிய பல நிகழ்ச்சிகள் வாய்மொழி இலக்கியங்களாகவும் வழங்கி வந்துள்ளன. எழுத்து வடிவிலுள்ள நிகழ்ச்சிகளைப் போலவே வாய்மொழிச் செய்திகளும் திருமுறைப் பாடல்களில் அங்கங்கே பயின்றுவருகின்றன. இப்பாடலிலும் அவ்வாறே.

29. வழி – நெறிமுறை. வந்தவா செய்து – தோன்றியபடி நடந்து. நாம் இழைத்த பாவங்க்ள் எல்லாம் அவனை நினைத்தாலே போதும் நில்லாமல் ஓடிவிடும், அவர் பெயர் சொல்லக்கூட வேண்டியதில்லை, நினைத்தாலே போதும் என்றவாறு.

30. கரத்தினில் – கையினால். திருமால் தனது அர்ச்சனையின்போது உன் பாதத்தில் குறைந்த தாமரைக்காகத் தன் கண்ணையே கொண்டு தாமரையாக அர்ச்சித்தபோது நீ அவனுக்கு வரம் தந்தாய். உன்னுடைய திருவடியாகிய தாமரை மதியற்றவனாகிய எனது சிரத்திலும் சிந்தையுள்ளும் வெண்காடன் என்னும் தன்மையாலும் ஆகி என்னை ஆட்கொண்டுவிட்டது என்றவாறு.

## 4. திருவேகம்பமுடையார் திருவந்தாதி

மெய்த்தொண்டர் செல்லும் நெறிஅறி
யேன்மிக நற்பணிசெய்
கைத்தொண்டர் தம்மிலும் நல்தொண்டு
உவந்திலன் உண்பதற்கே
பொய்த்தொண்டு பேசிப் புறம்புற
மேஉன்னைப் போற்றுகின்ற
இத்தொண்ட னேன்பணி கொள்ளுதி
யோகச்சி ஏகம்பனே. 1

ஏகம்ப னேஎன்னை ஆள்பவனேஇமை
யோர்க்கு இரங்கிப்
போகம்பல் நாளும் கொடுக்கின்றநாயக
பொங்கும் ஐவாய்
நாகம்பொன் ஆரம் எனப்பொலி
வுற்றுநல் நீறுஅணியும்
ஆகம்பொன் மாமலை ஒப்பவ
னேஎன்பன் ஆதரித்தே. 2

---

1. அந்தாதித் தொடையில் நூறு பாடல்களால் அமைந்தது இந்த நூல்.

திருவேகம்பம் என்னும் கோயில் காஞ்சிமாநகரில் உள்ளது. ஏகம்பமுடையான், திருவேகம்பன் முதலிய பல திருநாமங்கள் கொண்ட இந்த மூர்த்தியை ஏத்துகிற பாடல்கள் இவை.

மெய்த்தொண்டர் – தாசமார்க்கத்தார்கள். உடம்பினால் தொண்டு செய்கிற சரியை நெறியிலுள்ள நற்றொண்டர்கள். கைத்தொண்டர் – சற்புத்திர மார்க்கத்தார்; கைத்தொண்டு பூசெய்வினை முதலியன செய்கிற கிரியையாளர்கள்.

2. ஏகம்பனே – கச்சியேகம்பத்துப் பெருமானே போகம் – துய்ப்பினை. ஐவாய் நாகம் – ஐந்துதலைப் பாம்பு. ஆகம் – உடல்.

தரித்தேன் மனத்துஉன் திகழ்தரு
நாமம் தடம்பொழில்வாய்
வரித்தேன் முரல்கச்சி ஏகம்ப
னேஎன்றன் வல்வினையை
அரித்தேன் உனைப்பணி யாதவர்
ஏழைமை கண்டவரைச்
சிரித்தேன் உன்க்குஅடி யார்அடி
பூணத் தெளிந்தனனே. 3

தெளிதரு கின்றது சென்றென்
மனம்நின் திருவடிவம்
அளிதரு நின்அருட்கு ஐயம்
இனியில்லை அந்திச்செக்கர்
ஒளிதரு மேனிஎம் ஏகம்ப
னேஎன்று உகந்தவர்தாள்
தளிதரு தூளிஎன் தன்தலை
மேல்வைத்த தன்மைபெற்றே. 4

பெற்றுஉகந் தேன்என்றும் அர்ச்சனை
செய்யப் பெருகுநின்சீர்
கற்றுஉகந் தேன்என் கருத்துஇனி
தாக்கச்சி ஏகம்பத்தின்
பற்றுஉகந்து ஏறும் உகந்தவ
னேபட நாகக் கச்சின்
சுற்றுஉகந்து ஏர்விடை மேல்வரு
வாய்நின் துணைஅடியே. 5

---

3. தடம்பொழில்வாய் – பெரிய சோலையில். வரித்தேன் – வரிவண்டு, வரிகள் படர்ந்த வண்டு. முரல் – முரல்கின்ற. அரித்தேன் – கொன்றேன், வீழ்த்தினேன். ஏழைமை – மடமை, அறிவின்மை. அவரைச் சிரித்தேன் – அவரை நகைத்து நீங்கினேன். இத்தனையும் எதனால்? உன்னுடைய அடியவர்களின் அடியைத் தலையிலே சூடிக்கொள்ளத் தெரிந்து தெளிந்துகொண்டேன் என்பதனால்!

4. அளிதரு – குளிர்ச்சி தருகிற. தூளி – தூசி. பாததூளி – திருவடியின் அடிப்பொடி!

5. பற்று உகந்து – பற்றை விரும்பி. நாகக்கச்சின் சுற்று – பாம்பாகிய இடைக்கச்சின் சுற்றை! உகந்து – மிகவும் விரும்பி.

அடிநின்ற சூழல் அகோசரம்
மாலுக்கு அயற்கு அலரின்
முடிநின்ற சூழ்முடி காண்புஅரிது
ஆயிற்றுக் கார்முகிலின்
இடிநின்ற சூழ்குரல் ஏறுடை
ஏகம்ப யாம்எங்ஙனே
வடிநின்ற சூலப் படைஉடை
யாயை வணங்குவதே. 6

வணக்கம் தலைநன் திருவடிக்
கேசெய்யும் மையல் கொண்டோர்
இணக்குஅன்றி மற்றோர் இணக்குஅறி
வோம்அல்லம் வல்அரவின்
குணக்குன்ற வில்லி குளிர்கச்சி
ஏகம்பம் பாடின்அல்லால்
கணக்குஅன்று மற்றொரு தேவரைப்
பாடும் கவிநலமே. 7

நலம்தர நான்ஒன்று சொல்லுவன்
கேண்மின்நல் லீர்கள்அன்பு
கலந்துஅர னார்கச்சி ஏகம்பம்
கண்டு கனல்திகிரி
சலந்தரன் ஆகம் ஒழிக்கவைத்
தாய்தக்கன் வேள்விஎல்லாம்
நிலந்தர மாகச்செய் தாய்என்று
பூசித்து நின்மின்களே. 8

---

6. அடி நின்ற சூழல் – நின் திருவடி கீழே சென்று நின்ற அந்தப் பாதாளம். அகோசரம் – அறியமுடியாதது, திருமாலுக்கு. அலரின் முடி – கொன்றை சூடிய நின் திருமுடி. நின்றசூழ்முடி – உயர்ந்து சென்றுநின்ற உச்சியானது. காண்பரிதாயிற்று – காணமுடியாதபடி ஆயிற்று அயனுக்கு. கார்முகிலின் – மேகத்தின். இடிநின்ற சூழ்குரல் – இடியைப்போல் ஒலிக்கிற, இடியே குரலுக்குள் நின்று ஒலிப்பதாகிய! வடிநின்ற – கூர்மை பொருந்திய, கூரிய.

7. அரவே நாணாகவும், மேருமலையே வில்லாகவும் உடையவனே. வில்லி – வில்லையுடையோனே. கணக்கன்று – கணக்கில் அது சேர்த்தியில்லை. அதாவது, எண்ணத்தக்கது அன்று அது!

8. நலம்தர – நன்மையைத் துய்க்க வேண்டி.

மின்கள்என் றார்சடை கொண்டல்என்
றார்கண்டம் மேனிவண்ணம்
பொன்கள்என் றார்வெளிப் பாடுதம்
பொன்னடி பூண்டுகொண்ட
வென்கள்என் றாலும் பிரிந்துஅறி
யார்கச்சி ஏகம்பத்தான்
தன்கள்என் றார்உலகு எல்லாம்
நிலைபெற்ற தன்மைகளே. 9

தன்மையில் குன்றாத் தவத்தோர்
இமையவர் தாம்வணங்கும்
வன்மையில் குன்றா மதில்கச்சி
ஏகம்பர் வண்கயிலைப்
பொன்மயில் சாயலும் சேயரிக்
கண்ணும் புரிகுழலும்
மென்மயில் சாயும் மருங்குலும்
காதல் விளைத்தனவே. 10

தனம்இட்டு உமைதழு வத்தழும்பு
உற்றவர் தம்அடியார்
மனம்விட்டு அகலா மதில்கச்சி
ஏகம்பர் வான்கயிலைச்
சினம்விட்டு அகலாக் களிறு
வினாவிஓர் சேயனையார்
புனம்விட்டு அகலார் பகல்ஆம்
பொழுதும் பூங்கொடியே. 11

---

9. சடையைப் பொன் சரடுகள் என்றார். கழுத்தைக் கொண்டல், மேகம் என்றார். மேனியின் நிறத்தைத் தங்கத் தகடுகள் என்றார். இந்தப் பாடல் உருவெளித் தோற்றம் கண்டு தாபத்தில் உழல்கிற தலைவிக்குத் தோழி கூறியது என்பர்.

10. தன்மையில் குன்றாத் தவத்தோர் - இயல்பினில் குறையாத, தாழாத, தவஞானிகள். இமையவர் – தேவர்கள்.

11. இந்தப் பாடலின் பொருண்மை குறித்து, அறிஞர் குறிப்பு வருமாறு: யானை வினாவி வந்தார் ஒருவர் எனத் தோழியானவள் தலைவியிடம் சொல்லி, அவளது குறிப்பை உணர்ந்தது. உமையவளின் தனத்தழும்பு உடையவர். சேயனையார் – முருகக் கடவுளுக்கு இணையான அழகர். களிறு – ஆண்யானை. பகலாம் பொழுதும் என்று சொன்னதால், அவர் விசாரணை நிகழ்த்தியது இரவிலே என்ற உட்குறிப்பு துலங்கக் காணலாம்.

பூங்கொத்து இரும்தழை ஆர்பொழில்
கச்சிஏ கம்பர்பொற்புஆர்
கோங்கத்து இருந்த குடுமி
கயிலைஎம் பொன்ஒருத்தி
பாங்குஒத்து இருந்தனை ஆர்அணங்
கேபடர் கல்அருவி
ஆங்குஅத் திருந்திழை ஆடிவந்
தால்கண்டு அடிவருத்தே. 12

வருத்தம் தரும்மெய்யும் கையில்
தழையும்வன் மாவினவும்
கருத்தம் தரிக்கும் நடக்கஇன்று
ஐய கழல்நினையத்
திருத்தந்து அருளும் திகழ்கச்சி
ஏகம்பர் சீர்கயிலைத்
துருத்தந்து இருப்பதுஅன்று இப்புனம்
காக்கும் தொழில்எமக்கே. 13

எம்மையும் எம்மைப் பணிகொள்ளும்
கம்பர் எழிற்கயிலை
உம்மையும் மானிடம் இப்புனத்
தேவிட்டு வந்தமைந்தர்
தம்மையும் மானையும் சிந்தையும்
நோக்க கவர்வஎன்றோ
அம்மையும் அம்மலர்க் கண்ணும்
பெரியீர் அருளுமினே. 14

---

12. இரும்தழை – பெரிய தழை. குடுமி – உச்சி. பாங்கு – இயல்பு, பண்பு. ஆரணங்கு – திருமகள். கல் - ஒலி. இந்தப் பாடலுக்கு வேறுபாடு கண்டு வினாவிய பாங்கற்குத் தலைவன் ஏது கூறியது என்று பொருண்மை விளக்குவர்.

13. வன்மா – வலிமை பொருந்திய யானை. கருத்தந்தரிக்கும் என்பது கருத்து அந்தரிக்கும் எனப் பாகுபடும். கருத்து – எண்ணம். அந்தரிக்கும் – மாறுபடும். துரு – ஆராய்ச்சி. யானை வினாவி வந்த தலைவனுக்குத் தோழி கூறியது, எமக்குத் தொழில் தினைப்புனம் காத்தல் என்று!

14. இது கலைமான் வினாதல் என்னும் துறை. பாடல் மானை வினவி வந்தார்க்கு ஆயத்தார் கூறியது என்ப. எம்மையும் – எந்தப் பிறப்பிலும். எம்மையும் எம்மைப் பணிகொள்ளும் கம்பர் – எல்லாப் பிறவிகளிலும், எப்போதும், எம்மைப் பணி கொள்ளுகிற ஏகம்பமூர்த்தி.

அருளைத் தருகம் பர்அம்பொன்
கயிலையுள் எம்ஐயர்அம்பு
இருளைக் கரிமறிக் கும்இவர்
ஐயர் உறுத்திஎய்ய
வெருள்அக் கலைகளை தன்னொடும்
போயின வில்இமைக்கும்
அருளைத் தருசொல்லி எங்கோ
விலைஉண்டுஇவ் வையகத்தே. 15

வைஆர் மழுப்படை ஏகம்பர்
ஈங்கோய் மலைப்புனத்துள்
ஐயார் வருகலை ஏனம்
கரிதொடர் வேட்டைஎல்லாம்
பொய்ஆன ஐயர் மனத்தஎம்
பூங்கொடி கொங்கைபொறாப்
பைஆர் அரவிடை ஆயிற்று
வந்து பரிணமித்தே. 16

பருமுத்து உதிர்த்திடும் சீர்மத்த
யானைநுதல் பகுத்திட்டு
உரும்ஒத்த திண்குரல் சீயத்
திரிநெறி ஓங்குவைவாய்ப்
பொருமுத் தலைவேல் படைக்கம்பர்
பூங்கயி லைப்புனத்துள்
தருமுத்து அனநகைத் தன்நசை
யால்வெற்ப சார்வுஅரிதே. 17

---

15. கம்பர் – ஏகம்பர். உறுத்தி – வலிகொண்டு. வெருள – அச்சம் கொள்ள. கலை – கலைமான். கணை – அம்பு. வில்லிமை – வில்லின் ஆற்றல். மருள் – மயக்கம்.

16. ஏகம்பர் ஈங்கோய் மலைப்புனத்துள் வந்து வினாவிய மான், பன்றி, ஆனை அத்தனையும் பொய். இவற்றைத் தொடர்ந்து வேட்டையாடி வந்தது போன்ற அத்தனையும் பொய்வேட்டை என்று தோழி உண்மையை உணர்ந்து சொல்லிய பாடல் இது. வை – கூர்மை. வையார் மழுப்படை – கூர்மை பொருந்திய மழுவாயுதம். ஐ – அழகு. ஐஆர் – அழகான.

17. பருமுத்து நன்கு விளைந்த முத்து. மத்தயானை – மதம் பொருந்திய யானை. சீயம் – சிங்கம். நுதல் – மத்தகம். பகுத்திட்டு – பிளந்து. உரும்ஒத்த – இடியைப் போன்ற. முத்தன நகை – முத்துப் போன்ற பற்கள். நசை – விருப்பு. வெற்ப – மலைநாடனே.

அரிதன் திருக்கண் இடம்நிரம்பு
ஆயிரம் போதுஅணிய
அரிதன் திருவடிக்கு அர்ச்சித்த
கண்ணுக்கு அருளுகம்பர்
அரிதன் திருக்கு அங்குலியால்
அழிந்த கயிலைஅல்இங்கு
அரிதுஅன்று இருப்பதுஎம் பால்வெற்ப
எம்மையர்க்கு அஞ்சுதுமே. 18

அம்சரத் தான்பொடி யாய்விழத்
தீவிழித்து அன்புசெய்வோர்
நெஞ்சுஅரத் தாழ்வுகந் தோர்கச்சி
ஏகம்பர் நீள்கயிலைக்
குஞ்சரத் தாழ்வரை வீழநும்
கொம்புஉய்யக் கும்பம்மூழ்கும்
வெம்சரத் தாரன வோஅல்ல
வோஇவ் வியன்முரசே. 19

சேய்தந்த கைம்மை உமைகண
வன்திரு ஏகம்பத்தான்
தாய்தந்தை யாய்உயிர் காப்போன்
கயிலைத் தயங்குஇருள்வாய்
வேய்தந்த தோளிநம் ஊசலொ
டும்விரை வேங்கைதன்னைப்
பாய்தந்து பூசல்உண்டாம் கொண்டது.
ஓசைப் பகடுவந்தே. 20

---

18. திருமால் ஆயிரம் பூவிட்டு அர்ச்சிக்க முனைந்த காலை ஒரு மலர் குறையவே தன் கண்ணையே மலராக இட்ட நிகழ்ச்சி இங்கே பேசப் படுகிறது. போது - பூ. அரி – திருமால். திருக்கு – மாறுபாடு. அங்குலி – விரல்.

19. சரம் – அம்பு. அஞ்சரம் – அழகிய அம்பு; இங்கே மலரம்பு. தீவிழி – நெற்றிக்கண். தாழ்வு – தொண்டர்கள் இழைத்த குற்றமும் குறையும். உகப்பர் – குறையை நிறையாகவே கொள்ளுவார். குஞ்சரம் – ஆனை. கும்பம் – மத்தகம். வெஞ்சரம் – கொடிய அம்பு. வியன் – பெரிய. முரசு – திருமணக் கொட்டு.

20. சேய் – உயர்வு. பூசல் – போர். பகடு – யானை. இந்தப் பாடலின் துறையைத் 'தோழி தாய் துயில் அறியாது நிற்றல்' என்பர்.

வந்தும் மணம்பெறில் பொன்அனை
யீர்மன்னும் ஏகம்பர்தம்
முந்தும் அருவிக் கயிலை
மலைஉயர் தேன்இழிச்சித்
தந்தும் மலர்கொய்தும் தண்தினை
மேயும் கிளிகடிந்தும்
சிந்தும் புகர்மலைக் கச்சும்இச்
சாரல் திரிகுவனே. 21

திரியப் புரம்எய்த ஏகம்ப
னார்திக ழும்கயிலைக்
கிரியக் குறவர் பருவத்
திடுதர ளம்வினையோம்
விரியச் சுருள்முத லானும்
அடைந்தோம் விரைவிரைந்து
பிரியக் கதிர்முத்தின் நீர்பெற்றது
என்அங்குப் பேசுமினே. 22

பேசுகை யாவர் உமைக்கணி
யார்என்று பித்தர்எங்கும்
பூசுகை யார்திரு நீற்றுஎழில்
ஏகம்பர் பொற்கயிலைத்
தேசுகை யார்சிலை வெற்பன்
பிரியும் பரிசிலர்அக்
கூசுகை யாதும்இல் லாக்குலை
வேங்கைப் பெயர்நும்மையே. 23

---

21. பொன் – திருமகள். இழிச்சி – பிழிந்தெடுத்து. தண் – குளிர்ந்த. புகர் - புள்ளி. மலை – யானை, மலை போன்றது. கடிதல் - விரட்டுதல். இந்தப் பாடல் ஆயத்தை நோக்கித் தலைவி கூறியது என்பர்.

22. திரிய – சிதைந்துபட. புரம் – திரிபுரம். தரளம் – முத்து. இது தலைவியது வேறுபாடு கண்டு ஆயத்தார் வினாவியது.

23. 'தலைவி வேங்கையை வெறுத்துக் கூறியது' ஏன்னும் துறை இது. பித்து – வேட்கை. திருநீற்று எழில் ஏகம்பர் – திருநீறு பூசிய எழில் மிகுந்த ஏகம்பர்.

பெயரா நலத்துஎழில் ஏகம்ப
னார்பிறை தோய்கயிலைப்
பெயராது இருக்கப் பொறுகிளி
காள்புன மேபிரிவின்
துயரால் வருந்தி மணமும்இங்கு
ஒடித் தொழுதுசென்றது
அயராது உறையும் வெற்பற்கும்அடி
யேற்கும் விடைதம்மினே. 24

தம்மைப் பிறவிக் கடல்கடப்
பிப்பவர் தாம்வணங்கும்
மும்மைத் திருக்கண் முகத்துஎழில்
ஏகம்பர் மொய்கயிலை
அம்மைக் கருங்கண்ணி தன்னொடுஇன்
பம்தரும் தண்புனமே
எம்மைக் கவலைசெ யச்சொல்லி
யோவல்லி எய்தியதே. 25

இயங்கும் திரிபுரம் எய்தஏ
கம்பர் எழில்கயிலைத்
தயங்கும் மலர்ப்பொழில் காள்தையல்
ஆடுஅரு வித்தடங்காள்
முயங்கு மணிஅறை காள்மொழி
யீர்ஒழி யாதுநெஞ்சம்
மயங்கும் பரிசுபொன் னார்சென்ற
சூழல் வகுத்துஎமக்கே. 26

---

24. இது தலைவியின் கூற்று. பெயராது – நீங்காது. அயராது – மறவாது. வெற்பு – மலை. தம்மினே – தாருங்கள்.

25. கடப்பித்தல் – கடல்கடந்து கரையேறும்படி செய்தல். மும்மை – மூன்று. திருக்கண் முகத்து எழில் – திருக்கண்களையுடைய முகத்தெழில் நிரம்பிய. மொய்கயிலை – பொருந்திய கயிலை.

26. இந்தப் பாடல் பொழில், அருவித்தடம் முதலியன நோக்கித் தலைவி சென்ற இடத்தைக் கூறும்படி தலைவன் கோருவது. இயங்கும் – பரந்து செல்லும்.

இயங்கும் திரிபுரம் என்பது மாயம் வல்ல ஒன்னலாரின் திரிபுரங்கள் ஆகிய மூன்று கோட்டைகளும் மாயையினால் ஒரிடத்தில் நில்லாது திரிகின்ற கோட்டைகள்.

வகுப்பார் இவர்போல் மணத்துக்கு
நாள்மணம் தன்னொடுஇன்பம்
மிகுப்பார்கள் ஆர்உயிர் ஒன்றாம்
இருவரை விள்ளக்கள்வாய்
நெருப்பால் மலர்கொண்டு நின்றார்
கிடக்க நிலாவுகம்பர்
தொகுப்பால் மணிசிந்து அருவிக்
கயிலைஇச் சூழ்புனத்தே. 27

புனம்குழை யாதென்று மென்தினை
கொய்ததும் போகல்உற்ற
கனம்குழை யாள்தன் பிரிய
நமக்கு உறும் கையறவால்
மனம்குழை யாவரும் கண்கனி
பண்பல பாடும்தொண்டர்
இனம்குழை யாத்தொழும் ஏகம்பர்
இக்கயி லாயத்துள்ளே. 28

உள்ளம் பெரியர்அல் லாச்சிறு
மானுடர் உற்றசெல்வம்
கள்ளம் பெரிய சிறுமனத்
தார்க்குஅன்றிக் கங்கைஎன்னும்
வெள்ளம் பெரிய சடைத்திரு
ஏகம்பர் விண்அரணம்
தள்ளஅம்பு எரிகொண்டு அமைத்தார்
அடியவர் சார்வது அன்றே. 29

---

27. வகுப்பார் - வகுத்துச் சொல்லுவார். விள்ள – நீங்க. கள் – தேன். நெகுத்தல் – சொரிதல். வேங்கையானது மலர்வது கண்டு உவந்த தோழி, தன் நெஞ்சொடு கூறியது இப்பாடல்.

28. இந்தப் பாடல், தலைவனுடைய துயர் மொழியாகும். தலைவன் துயர் மிகுதியால் கூறுகிற துறை இது. குழையாதென்று – சிதையாது என்று. கனம்குழை – கனமான காதணி. நமக்கு உறும் கையறவான் – நமக்கும் உண்டாகின்ற துயரத்தினால். மனம் குழையா வரும் – மனமானது சிதைந்து போய்விடுகிறது.

29. கள்ளம – வஞ்சனை. அரணம் – கோட்டை. உள்ளத்தினால் பெரியராக இல்லாத சிறு மானிடரின் செல்வம் கள்ள மனத்தாருக்குத்தான் போய்ச்சேரும். மெய்யடியார்களைச் சாராது என்றவாறு.

அன்றும் பகைஅடர்க் கும்பரி
மாவும் மதஅருவிக்
குன்றும் பதாதியும் தேரும்
குலவிக் குடைநிழற்கீழ்,
நின்றும் பொலியினும் கம்பர்நல்
நீறு நுதற்குஇலரேல்
என்றும் அரசும் முரசும்
பொலியா இருநிலத்தே. 30

நிலத்துஇமை யோரில் தலையாய்ப்
பிறந்து மறையொடு அங்கம்
வலத்துஇமைப் போதும் பிரியார்
எரிவளர்த் தாலும் வெற்பன்
குலத்துஉமை யோர்பங்கர் கச்சியுள்
ஏகம்பம் கூடித்தொழும்
நலத்துஅமை யாதவர் வேட்டுவர்
தம்மின் நடுப்படையே. 31

படையால் உயிர்கொன்று தின்று
பசுக்களைப் போலச் செல்லும்
நடையால் அறிவுஇன்றி நாண்சிறிது
இன்றி நகும்குலத்தில்
கடையாய்ப் பிறக்கினும் கச்சியுள்
ஏகம்பத்து எங்களைஆள்
உடையான் கழற்குஅன்ப ரேல்அவர்
யாவர்க்கும் உத்தமரே. 32

---

30. அன்றும் – ஆரம்பத்திலேயே. பகை அடர்க்கும் – பகையைத் தாக்குகின்ற. பரிமாவும் – குதிரைப் படையும். மதஅருவிக் குன்றும் – மதநீர் சொரிகின்றதும், அருவி வீழும் மலை போன்றதுமான யானைப் படை, பதாதியும் – காலாட் படையும். தேரும் – தேர்ப்படையும். குலவி – கொண்டிருந்து.

31. இமையோர் – தேவர்கள். இந்த உலகில் இந்திரனைப் போல் பிறந்து வேதமும் அங்கங்களும் வல்லவராகி இமைப்பொழுதும் நீங்காமல் எரி வளர்த்து வேள்வி செய்தாலும், உமையோர் பங்கராகிய கச்சிஏகம்பம் சென்று தொழுகின்ற நலம் இல்லாதவரின் நிலை பரிதாபத்துக்குரியது என்பதைச் சித்திரிக்கின்றது.

32. உயிர்சொன்று தின்று மாடுகளைப் போலச் செல்கிற அறிவற்ற நகைப்புக்கிடமான இடத்தில் பிறந்தாலும் ஏகம்பனுக்கு அன்பராய் இருப்பரேல் அவர் யாவர்க்கும் உத்தமராம் என்றபடி.

உத்துங்க யானை உரியார்
விரலார் அரக்கன்சென்னி
பத்தும்அங்க ஆன இருபதும்
சோர்தர வைத்துஇலயம்
ஒத்தும்கை யால்அவன் பாடக்
கயிலையின் ஊடுகைவாள்
எத்தும்கை யான்என்று உகந்து
அளித்தார்கச்சி ஏகம்பரே. 33

அம்பரம் கால்அனல் நீர்நிலம்
திங்கள் அருக்கன்அணு
அம்பரம் கொள்வதுஓர் வேழத்து
உரியவன் தன்உருஆம்
எம்பரன் கச்சியுள் ஏகம்பத்
தான்இடை யாதுஅடைவான்
நம்பரன் தன்அடி யார்அறி
வார்கட்கு நல்துணையே. 34

துணைத்தா மரைஅடி யும்பவ
ளத்திரள் நல்குறங்கும்
பணைத்தோள் அகலமும் கண்டத்து
நீலமும் அண்டத்துமின்
பிணைத்தால் அனசடையும்திரு முக்கணும்
பெண் ஓர்பக்கத்து
அணைத்தார் எழில்கம்பர் எங்கள்
பிரானார்க்கு அழகியவே. 35

---

33. உத்துங்க யானை – மிகப்பெரிய யானை. இலயம் – தாளம். எத்தும் கையான் – திறலுடைய கையான்.

யானை உரி போர்த்தவரும், இராவணன் கைலை மலையை அசைத்தபோது அவனுடைய பத்துத் தலையும் இருபது கையும் நெரியும்படி விரலால் அழுத்திய எம்பெருமான், சுதி சேர்த்த யாழை இசைத்து அவன் பாடியதும் மனம் பரவசமாகி அவனுக்கு வாள் கொடுத்து உகந்தவர் கச்சி ஏகம்பரே.

34. முதல் அடியில் வரும் அம்பரம் வானம். இரண்டாவது அடியில் வரும் அம்பரம் ஆடை.

35. துணைத்தாமரை அடி – இரண்டு மலரடிகள். குறங்கு – தொடை. பணை – பெரிய. அகலம் – மார்பு. மின் பிணைத்தால் அன சடையும் – மின்னற் கொடியைப் பிணைத்தது போன்ற சடையும்.

அழகுஅறி பிற்பெரி தாகிய
　　ஏகம்பர் அத்தர்கொற்றம்
பழகுஅறி விற்பெரி யோர்தமைப்
　　பற்றலர் பற்றும்அன்பின்
குழகுஅறிவு ஏற்பினுள் ஒன்றுஅறி
　　யார்அறி யாமைதெய்வம்
கிழகுஎறி யப்பட்டு உலந்தார்
　　உலகில் கிடந்தனரே. 36

கிடக்கும் ஒருபால் இரைக்கின்ற
　　பாம்புஒரு பால்மதியம்
தொடக்குண்டு இலங்கும் அலங்கும்
　　திரைக்கங்கை சூடும்கொன்றை
வடக்குண்டு கட்டத் தலைமாலை
　　வாளால் மலைந்தவெம்போர்
கடக்கும் விடைத்திரு ஏகம்பர்
　　கற்றைச் சடைமுடியே. 37

கற்றைப் பவளச் சடைவலம்
　　பூக்கமழ் கொன்றைஅம்தார்
முற்றுஉற் றிலாமதி யின்கொழுந்து
　　ஏகம்பர் மொய்குழலாம்
மற்றைத் திசையின் மணிப்பொற்
　　கொழுந்து அத்தரம் கழுநீர்
தெற்றிப் பொலிகின்ற சூட்டுஅழகு
　　ஆகித் திகழ்தருமே. 38

---

36. அத்தர் – தலைவர். கொற்றம் – வெற்றி. குழகு – இளமை. கிழகு – முதுமை. உலந்தார் – அழிந்தார்கள்.

37. இரைக்கின்ற – சீறுகின்ற. அலங்கும் – அசையும். தொடக்கு – பிணிப்பு. வடம் – மாலை.

38. முற்று உற்றிலா மதியின் கொழுந்து – பூரணச் சந்திரனாய் முழுமை பெறாத இளம்பிறை.

தரும்அருள் தன்மை வலப்பால்
கமலக்கண் நெற்றியின்மேல்
திருமலர்க் கண்பிள வின்திக
ழும்தழல் செல்வக்கம்பர்
கருமலர்க் கண்இடப் பாலது
நீலம் கனிமதத்து
வருநுதல் பொட்டுஅணங் குக்குஉயர்ந்து
ஓங்கும் மலர்க்குழலே. 39

மலர்ந்த படத்துஉச்சி ஐந்தினும்
செம்சுடர் மாமணிவிட்டு
அலர்ந்த மணிக்குண் டலம்வலக்
காதினில் ஆடிவரும்
நலம்திரு நீள்வயி ரம்வெயிற்
பாய நகுமணிகள்
கலந்தசெம் பொன்மக ரக்குழை
ஏகம்பர் காதிடமே. 40

காதுஅலைக் கும்வலத் தோள்பவ
ளக்குன்றம் அங்குஉயர்ந்து
போதுஅலைக் கும்பனிப் பொன்மலை
நீற்றின் பொலிஅகலம்
தாதுஅலைக் கும்குழல் சேர்பணைத்
தோள்நறும் சாந்துஅணிந்து
சூதுஅலைக் கும்முலை மார்புஇடம்
ஏகம்பர் சுந்தரமே. 41

---

39. கருமலர்க்கண் – குவளை மலர் போன்ற கண். வலமும் இடமும் திகழ்கின்ற இருபாலின் அழகும் எடுத்து இயம்புகின்றது இப்பாடல்.

40. சுடர் – ஒளி. வெயிற்பாய – ஒளிவீச. இறைவனுடைய வலக் காதில் பாம்புக் குண்டலமும், இடக்காதில் மகரக் குண்டலமும் விளங்குகின்ற அழகை இந்த அடிகள் பாடுகின்றன.

41. பனி – குளிர்ச்சி. பொன்மலை – மேருமலை. தாது – பூந்துகள், மகரந்தப் பொடி.

கரம்பொற்பு அழியும் உலகுஅட்டி
எய்த்துத் தரம்தளரா
உரம்பொற்பு உடைய திருவயி
றாம்வலம் உம்பர்மும்மைப்
புரம்பொற்பு அழித்தகம் பர்க்குத்
தரத்துஇடு பூண்முலையும்
நிரம்பப் பொறாது தளர்இள
வஞ்சியும் நேர்வுஉடைத்தே. 42

உடைப்புலி ஆடையின் மேல்உர
கக்கச்சு வீக்கிமுஞ்சி
வடத்துஒரு கோவணம் தோன்றும்
அரைவலம் மற்றைஅல்குல்
தொடக்குஉறு காஞ்சித் தொடுத்த
அரசிலை தூநுண்துகில்
அடல்பொலி ஏறுடை ஏகம்பம்
மேய அடிகளுக்கே. 43

அடிவலப் பாலது செந்தாமரைஒத்து
அதிர்கழல் சூழ்ந்து
இடிகுரல் கூற்றின் எருத்திற
வைத்தது இளம்தளிரின்
அடிஇடப் பாலது பஞ்சுஉற
அஞ்சும் சிலம்புஅணிந்த
வடிவுடைத் தார்கச்சி ஏகம்ப
மேய வரதருக்கே. 44

---

42. தரம் – கூட்டம். பொற்பு – அழகு. அட்டி – படைத்து. எய்த்து – அடக்கி. உரம் – வலிமை. நேர் – ஒத்து.

43. உரகம் – பாம்பு. வீக்கி – இழுத்துக்கட்டி. முஞ்சி – தருப்பை. காஞ்சித் தொடுத்த அரசிலை – தங்கத்தினால் அரசிலைபோல் செய்து அமைத்த அரைமுடி.

44. எருத்து இற – பிடரி முறிய. பஞ்சு உற – செம்பஞ்சுக் குழம்பைப் பூசிய. சிலம்பு – பாதச்சிலம்பு. ஏகம்பருடைய திருவடிகளில் வலப் பக்கம் கழல், இடப்பக்கம் சிலம்பு என்பன போன்ற இருவகை அமைப்பையும் பாடியவாறு.

தருக்குஅவற் றான்மிக்க முப்புரம்
எய்துஅயன் தன்தலையை
நெருக்கஅற்று ஓட மழுவாள்
விசைத்தது நெற்கள்என்றும்
பருக்கவற் றாம்கச்சி ஏகம்பர்
அத்தர்தம் பாம்புகளின்
திருக்கயிற் றால்இட்டு அருளும்
அருளும் கடகத்திருக்கரமே. 45

கரத்துஅத் தமருகத்து ஓசை
கடுத்துஅண்டம் மீபிளப்ப
அரத்தத்த பாதம் நெரித்திட்டு
அவனி தலம்நெரியத்
தரத்தத் திசைகளுக்கு அப்புறம்
போர்ப்பச் சடைவிரித்து
வரத்தைத் தருகம்பர் ஆடுவர்
எல்லியும் மாநடமே. 46

நடனம்பிரான் உகந்து உய்யக்
கொண்டான் என்றும் நன்மறையோர்
உடன்வந்து மூஆயிரவர் இறைஞ்சி
நிறைந்த அன்பின்
கடன்அன்றி மற்றுஅறி யாத்தில்லை
அம்பலம் காளத்திஆம்
இடம்எம்பிரான் கச்சி ஏகம்பம்
மேயாற்கு இனியவனே. 47

---

45. தருக்கு – செருக்கு. அயன் – நான்முகன். கடகம் – காப்பு.

46. தமருகம் – உடுக்கை. அரத்தம் – சிவப்பு. எல்லியும் – இரவும். மாநடம் – மகத்தான கூத்து, இங்கு சித்திரிக்கப்படுகிற நடனம், ஊழிக் காலத்தின் கூத்து எனப் பொருள்கொண்டு, சித்தர் மரபின்படி இந்த நடன உருவகத்தை விளக்குவதே இப்பாடலின் உட்பொருளாம்.

47. மூவாயிரவர் – தில்லைவாழ் அந்தணர்களான மூவாயிரவர். இனியன – இன்பம் தருகிற தலங்கள்.

இனியவர் இன்னார் அவரைஒப்
பார்பிறர் என்னஒண்ணாத்
தனியவர் தையல் உடனாம்
உருவர் அறம்பணித்த
முனியவர் என்றும் உகந்தமுக்
கண்ணவர் சண்டிஅன்புக்கு
இனியவர் காய்மழு வாள்படை
யார்கச்சி ஏகம்பரே.

பரவித் தனைநினை யக்கச்சி
ஏகம்பர் பண்ணும்மையல்
விரவித் தணைஉள்ளது எங்குஅறிந்
தேன்முன் அவர்மகனார்
புரவித் தனைஅடிக்கு அக்கொடி
தாய்விடி யாஇரவில்
அரவித் தனையும்கொண் டார்மட
வார்முன்றில் ஆட்டிடவே. 49

இடவம் சுறுக்கெனப் பாயும்அம்
சென்னி நகுதலைகண்டு
இடஅஞ் சுவர்மட வார்இரி
கின்றனர் ஏகம்பத்தீர்
படம்அஞ்சு வாயது நாகம்
இரைக்கும் அதனுக்குமுற்
படஅஞ் சுவர்எங்ங னேபலி
வந்திடும் பாங்குகளே. 50

---

48. இன்னார் – வேண்டாதவர். முனியவர் – மும்மலங்களையும் முனிந்து அகற்றியவர். சண்டி – சண்டேசுவரர்.

49. இந்தப் பாடல் தலைவனைக் கண்டு மயல்கொண்ட தலைவி கூறியதாகும். பரவி – தொழுது. புரவி – குதிரை. அரவித்தனை என்பதை, அரவு – இத்தனை என்று பிரித்துப் பாம்புகள் இத்தனையும் கொண்டார் மாதர்களுடைய இல்லத்து முற்றத்தில் ஆட்டிடவே என்று பொருள் கொள்க.

50. இட – பிச்சை இட. இடவம் – எருது. இரைக்கும் – ஒலி செய்யும். இவர் ஊர்ந்து வருகிற எருது சுருக்கென்று பாயும். தலைமாலை நகும். அஞ்சுவாய் நாகம் சீறும். எனவே இவர் பிச்சை ஏற்க இல்லங்கள் தோறும் செல்லும்போது பிச்சை இடுதற்கு மாதர்கள் முற்படவே அஞ்சுகிறார்கள். இவருடைய ஓட்டில் பிச்சைவீழும் பாங்குகள் எங்ஙனே என்றவாறு.

பாங்குஉடைக் கோள்புலி யின்அதள்
கொண்டீர்நும் பாரிடங்கள்
தாங்குடை கொள்ளப் பலிகொள்ள
வந்தீர் தடங்கமலம்
பூங்குடை கொள்ளப் புனல்கச்சி
ஏகம்பம் கோயில்கொண்டீர்
ஈங்குஇடை கொள்அக் கலைகொள்ள
வந்தீர் இடைக்குமின்றே. 51

இடைக்குமின் தோற்கும் இணைமுலையாய்
முதியார்கள் தம்சொல்
கடைக்கண் நன்றுஆம் கச்சி
ஏகம்பர் ஐயங் கொளக்கடவும்
விடைக்குமுன் தோற்றநில் லேநின்று
இனிஇந்த மொய்குழலார்
கிடைக்குமுன் தோற்ற நஞ்சுஇது
ஓதுஅம் கிறித்துவமே. 52

கிறிபல பேசிச் சதிரால்
நடந்து விடங்குபடக்
குறிபல பாடிக் குளிர்கச்சி
ஏகம்பர் ஐயங்கொள்ள
நெறிபல வார்குழ லார்மெலி
வுற்ற நெடுந்தெருவில்
செறிபல வெள்வளை போயின
தாயர்கள் தேடுவரே. 53

---

51. இப்பாடல் தலைவனைக் கண்டு மையல் மீறினாள் கூறியது. பாங்கு – அழகு. கோள் – ஆற்றல், அதள் – தோல். பலி – பிச்சை. தடம் – நீர்நிலை. கலை – ஆடை.

52. இடை – இடுப்பு. இணை – இரண்டு. கிறித்துவம் – பொய்த் தன்மை. இறைவன் உலாவருதலைக் கண்டு தோழியருள் ஒருத்தி மற்றொருத்திக் கூறுவதாக அமைந்துள்ள பாடல் இது.

53. கிறி – பொய். விடங்கு – அழகு. போயின – கழன்று விழுந்தன, உலாவின்போது கண்டவளின் நிலையையும் தாயரின் நிலையையும் கூறுகிற பாடல் இது.

தேடுற் றிலகள்ளம் நோக்கும்
தெரிந்தில சொற்கள்முடி
கூடுற் றிலகுழல் கொங்கை
பொடித்தில கூறுமிவள்
மாடுற் றிலமணி யின்மட
அல்குலும் மற்றிவள்பால்
நாடுற் றிலஎழில் ஏகம்ப
னார்க்குஉள்ளம் நல்கிடத்தே.

நல்கும் புகழ்க்கட வூர்நன்
மறையவன் உய்யநண்ணிக்
கொல்கின்ற கூற்றைக் குமைத்தஎம்
கூற்றம் குளிர்திரைகள்
மல்கும் திருமறைக் காட்டுஅமிர்து
என்றும் மலைமகள்தான்
புல்கும் பொழில்கச்சி ஏகம்பம்
மேவிய பொன்மலையே. 55

மலையத்து அகத்தியன் அர்ச்சிக்க
மன்னி வடகயிலை
நிலையத்து அமரர் தொழஇருள்
தான்நெடு மேருஎன்னும்
சிலைஅத்தன் பைம்பொன் மதில்திரு
ஏகம்பத் தான்திகழ்நீர்
அலையத் தடம்பொன்னி சூழ்திரு
ஐயாற்று அருமணியே. 56

---

54. முடி கூடுற்றில – தெளிவாய்ப் புலனாகவில்லை. பொடித்தில – சரியாகத் தோன்றவில்லை. இந்தப் பாடல் தோழியின் கூற்று. தலைவியின் இளமைகூறி மறுத்தலாகும் இது.

55. உய்ய – பிழைத்து வாழ, மரணத்திலிருந்து தப்பிக்க. கூற்று – எமன். குமைத்தல் – பதைபதைக்கும்படி செய்தல். புல்குதல் – தழுவுதல். இதுவும் தோழியின் கூற்று.

56. மலையம் – பொதிகை மலை. தடம் – பெரிய, பரந்த. பொன்னி – காவிரியாறு.

மணியார் அருவித் தடஇ
  மயம்குடக் கொல்லிகல்லின்
திணியார் அருவியின் ஆர்த்த
  சிராமலை ஐவனங்கள்
அணியார் அருவி கவர்கிளி
  ஓம்பும்இன் சாரல்விந்தம்
பணிவார் அருவினை தீர்க்கும்ஏ
  கம்பர் பருப்பதமே. 57

பருப்பதம் கார்தவழ் மந்தரம்
  இந்திர நீலம்வெள்ளை
மருப்புஅது அங்குஆர்கரும் குன்றுஇயங்
  கும்பரங் குன்றம்வில்லார்
நெருப்புஅது அங்குஆகுதி நாறும்ம
  கேந்திரம் என்றுஇவற்றில்
இருப்பதுஅம் காஉகந் தான்கச்சி
  ஏகம்பத்து எம்இறையே. 58

இறைத்தார் புரம்எய்த வில்லிமை
  நல்இம வான்மகட்கு
மறைத்தார் கருங்குன்றம் வெண்குன்றம்
  செங்குன்றம் மன்னற்குன்றம்
நிறைத்தார் நெடுங்குன்றம் நீள்கழுக்
  குன்றம்என் தீவினைகள்
குறைத்தார் முதுகுன்றம் ஏகம்பர்
  குன்றென்று கூறுமினே. 59

---

57. குடக்கொல்லி – மேற்கில் இருக்கின்ற கொல்லிமலை. ஐவனம் – மலைநெல்.

58. கச்சி ஏகம்பத்து இறைவன் இந்த இடங்களிலும் அமர்ந்துள்ளான் என அந்த இடப்பெயர்களை அடையோடு இயம்புகிறது இந்தப் பாடல்.

59. இறைத்தார் புரம் – மிக்க செய்தாரின் திரிபுரம்; சிறந்த கொடிப் படையை உடையவரின் திரிபுரம் என்றும் கூறுவர். ஏகம்பருடைய குன்றுகளை அடுக்கிக் கூறியது என்க.

கூறுமின் தொண்டற்குற் றாலம்நெய்த்
தானம் துருத்திஅம்பேர்
தேறுமின் வேள்விக் குடிதிருத்
தோணி புரம்பழனம்
ஆறுமின் போல்சடை வைத்தவன்
ஆரூர் இடைமருதுஎன்று
ஏறுமின் நீர்எம் பிரான்கச்சி
ஏகம்பம் முன்நினைந்தே. 60

நினைவார்க்கு அருளும் பிரான்திருச்
சோற்றுத் துறைநியமம்
புனைவார் சடையோன் புகலூர்
புறம்பியம் பூவணம்நீர்
பனைவார் பொழில்திரு வெண்காடு
பாச்சில் அதிகைஎன்று
நினைவுஆர் தருநெஞ்சி னீர்கச்சி
ஏகம்பம் நண்ணுமினே. 61

நண்ணிப் பரவும் திருவா
வடுதுறை நல்லம்நல்லூர்
மண்ணில் பொலிகடம் பூர்கடம்
பந்துறை மன்னுபுன்கூர்
எண்ணற்கு அரிய பராய்த்துறை
ஏர்கொள் எதிர்கொள்பாடி
கண்ணுப் பிறைச்சடை யோன்கச்சி
ஏகம்பம் காண்மின்சென்றே. 62

---

60. தேறுமின் - தெரிந்து கொள்ளுங்கள். ஏறுமின் - சார்ந்து தொழுங்கள்.

61. நியமம் - திருப்பருதி நியமம். புறம்பயம் - திருப்புறம்பயம். பாச்சில் - திருப்பாச்சிலாச்சிராமம். இதுவும் திருத்தலங்களை வரிசை கூறும் முறையில் இயம்பியதாகும்.

62. இதுவும் தலமுறை பேசும் முறையில் ஏகம்பம் மேயோன் மேவிய இடங்களைக் கூறுவதாகும்.

சென்றுஏறி விண்உறும் அண்ணா
மலைதிகழ் வல்லம்மென்பூ
இன்தேறல் பாய்திரு மாற்பேறு
பாசூர் எழில்அழுந்தூர்
வன்தேர வன்திரு வின்பெறும்
பேறு மதில்ஒற்றியூர்
நின்றுஏர் தருகச்சி ஏகம்பம்
மேயார் நிலாவியவே. 63

நிலாவு புகழ்த்திரு வோத்தூர்
திருஆமாத் தூர்நிறைநீர்
சுலாவு சடையோன் புலிவலம்
வில்வலம் கொச்சைதொண்டர்
குலாவும் திருப்பனங் காடுநன்
மாகறல் கூற்றம்வந்தால்
அலாய்என்று அடியார்க்கு அருள்புரி
ஏகம்பர் ஆலயமே. 64

ஆலையம் கார்கரு காவைகச்
சூர்திருக் காரிகரை
வேலைஅங்கு ஏறு திருவான்மி
யூர்திரு ஊறல்மிக்க
சோலைஅம் கார்திருப் போந்தைமுக்
கோணம் தொடர்கடுக்கை
மாலையன் வாழ்திரு ஆலங்காடு
ஏகம்பம் வாழ்த்துமினே. 65

---

63. சென்றேறி விண்உறும் அண்ணாமலை – ஏறிச்சென்று வானளாவிய அண்ணாமலை. அங்கு ஏறிச்சென்று தொழுவது விண்பதத்துக்கு வழி என்ற கருத்து உட்கிடையாகும்.

64. அலாய் – அடா. 'இங்கு வருவதற்கு அலாய்' என்று சொல்லித் தடுப்பதும் ஆம். ஏகம்பருடைய ஆலய வரிசையை மேலும் கூறியவாறு.

65. ஆலை – கரும்பாலை. வேலை – கடல். போந்தை – திருப்பனையூர்.

வாழப் பெரிதுஎமக்கு இன்னருள்
செய்யும் மலர்க்கழலோர்
தாழச் சடைத்திரு ஏகம்பர்
தம்மைத் தொழாதவர்போய்
வாழப் பற்பரல்சுரம் ஆற்றா
தளிர்அடி பூங்குழல்எம்
ஏழைக்கு இடைஇறுக் கும்குய
பாரம் இயக்குறினே.

ஊறுகின்ற வெவ்அழல் அககடம்
இக்கொடிக்கு உன்பின்வரப்
பெறுகின்ற வண்மையி னால்ஐய
பேர்அருள் ஏகம்பனார்
துறுகின்ற மென்மலர்த் தன்பொழில்
கச்சியைச் சூழ்ந்துஇளையோர்
குறுகின்ற பூங்குவ ளைக்குறுந்
தண்பணை என்றுகொளே. 67

கொள்ளும் கடும்கதி ரில்கள்ளி
தீச்சில வேய்உலர்ந்து
விள்ளும் வெடிபடும் பாலைஎன்
பாவை விடலைபின்னே
தெள்ளும் புனல்கச்சி யுள்திரு
ஏகம்பர் சேவடியை
உள்ளும் அதுமறந் தார்எனப்
போவது உரைப்புஅரிதே. 68

---

66. எம் ஏழைக்கு – எம்பெண்ணுக்கு. இறுக்கும் – இற்றுப் போகும். குயபாரம் – கொங்கையின் கனம். இந்தப் பாடலின் துறை, உடன் போன தலைவியது மென்மை நினைந்து செவிலி கூறியது என்பர்.

67. கடம் – வனம், பாலை எனினும் ஆம். கொடிக்கு – கொடி போன்ற தையலுக்கு. குறுதல் – கொய்தல். இது, நெறியருமை கூறியாற்குத் தலைவியது அன்பு கூறி, உடன்கொண்டு செல்க எனத் தோழி கூறியது.

68. இது நற்றாய் கூற்று. வேய் உலர்ந்து – மூங்கில் காய்ந்து. விள்ளும் – பிறிந்து நிற்கும். விடலை – இளைஞனாகிய தலைவன். தெள்ளும் – தெளிந்த.

பரிப்புஅரும் திண்மைப் படையது
கானர் எனில்சிறகு
விரிப்பருந் துக்குஇரை யாக்கும்வெய்
யேன்அஞ்சல் செம்சடைமேல்
தரிப்புஅரும் திண்கங்கை யார்திரு
ஏகம்பம் அன்னபொன்னே
வரிப்புஅரும் திண்சிலை ஏய்உமர்
ஆயின் மறைகுவனே. 69

வனவரித் திண்புலி யின்அதள்
ஏகம்பம் மன்அருளே
எனவருபொன் அணங்குஎன் அணங்கிற்கு
என் எழில்கழங்கும்
தனவரிப் பந்தும் கொடுத்துஎனைப்
புல்லியும் இல்பிரிந்தே
இனவரிக் கல்அதர் செல்வதுஎங்
கேஒல்கும் ஏழைநெஞ்சே. 70

நெஞ்சுஆர் தரஇன்பம் செய்கழல்
ஏகம்பர் கச்சியன்னாள்
பஞ்சுஆர் அடிவைத்த பாங்குஇவை
ஆங்குஅவள் பெற்றெடுத்த
வெம்சார்வு ஒழியத்தன் பின்செல
முன்செல வெடுவெடுஎன்ற
அஞ்சா அடுதிறல் காளைதன்
போக்குஇவை அந்தத்திலே. 71

---

69. பரிப்புஅரும் – தாங்குதற்கு அரிய. கானர் – வேடுவர். வெய்யோன் – கடுமை உடையோன். உமர் – உம்மைச் சார்ந்தவர்கள். இது, தலைமகன் தனது வலிமை கூறி அஞ்சவேண்டாம் என்று சொல்லியது.

70. அதள் – தோலாடை. வரி – கோடு. தனவரிப்பந்து – கொங்கை போன்று வரியொடு செய்த பந்து. இந்தப் பாடல் நற்றாயின் மொழியாகும். பிரிவாற்றாமை காரணமாகத் தன் நெஞ்சொடு சொல்லியது.

71. நெஞ்சு ஆர்தர – இதயம் நிறைந்த பாங்கிலே. இன்பம் செய் – இன்பத்தைத் தருகிற. பஞ்சுஆர்அடி – செம்பஞ்சிக்குழம்பு பூசிய பாதம். இது செவிலி கூற்று. சுவடு கண்டு அஞ்சிக் கூறியதாம்.

இலவவெம் கான்உனை அல்லால்
தொழும்சரண் ஏகம்பரனார்
நிலவும் சுடர்ஒளி வெய்யவ
னேதன் மலர்மிதித்துச்
செலவும் பருக்கை குளிரத்
தளிர்அடி செல்சுரத்துஉன்
உலவும் கதிர்தணி வித்துஅருள்
செய்உன் உறுதுணைக்கே. 72

துணைஒத்த கோவையும் போஎ்எழில்
பேதையும் தோன்றலும்முன்
இணைஒத்த கொங்கையோ டேஒத்த
காதலொடு ஏகினரே
அணைத்தர் ஏறுஒத்த காளையைக்
கண்டனம் மற்றஅவரேல்
பிணைஒத்த நோக்குஉடைப் பெண்இவள்
தன்னொடும் பேசுமினே. 73

மின்நலிக் கும்வணக் கத்துஇடை
யாளையும் மீளியையும்
நென்னல்இப் பாக்கைவந்து எய்தினரேல்எம்
மனையில் கண்டீர்
பின்னர்இப் போக்குஅரும் குன்று
கடந்துஅவர் இன்றுகம்பர்
மன்அரி தேர்ந்து தொழும்கச்சி
நாட்டிடை வைகுவரே. 74

---

72. இலவு – இலவம்பஞ்சு. அல் – இரவு. வெய்யவன் – சூரியன். 'சுடரோடு இரத்தல்' என்ற மரபுப்படி செவிலி கதிரவனை வேண்டுகிற துறை இது. "ஏ கதிரவனே, என் மகள் தளிர் அடி மிதித்துச் செல்கிற பாலைவனத்திலே உன்னுடைய கதிரின் வெப்பத்தைத் தணித்து அருள் செய்ய வேண்டும்" என்றவாறு.

73. 'செவிலி புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினாதல்' என்னும் துறை இது. துணை – இணைபிரியாத இரண்டு. தோன்றல் – தலைவன். இணை – இரட்டை. அத்தர் – தந்தையாகிய சிவபெருமான். பிணை – மான்.

74. மின் – மின்னற்கொடி. நலிக்கும் – தோற்றுப்போகும். மீளி – ஆண்மை நிரம்பிய காளையாகிய ஆடவன். பாக்கை – சிற்றூர். தோழி தலைமகனது வரவு கூறிச் செவிலியை மறுத்துக் கூறியது.

உவரச்சொல் வேடுஉடைக் காடுஉகந்து
ஆடிய ஏகம்பனார்
அ(வ்)வரக்கன் போன விமானத்தை
ஆயிரம் உண்மைசுற்றும்
துவரச் சிரச் சிகவாலயம்
சூலம் துலங்குவிண்மேல்
கவரக் கொடிதிளைக் கும்கச்சி
காணினும் கார்மயிலே. 75

கார்மிக்க கண்டத்து எழில்திரு
ஏகம்பர் கச்சியின்வாய்
ஏர்மிக்க சேற்றுஎழில் நெல்நடு
போவார்ஒலி பொன்மலைபோல்
போர்மிக்க செந்நெல் குவிப்போர்
ஒலிகளும் பாலைஒலி
நீர்மிக்க மாக்கட லின்ஒலி
யேஒக்கும் நேரிழையே. 76

நேர்த்துஅமை யாமை விறல்கொடு
வேடர் நெடும்சுரத்தைப்
பார்த்தமை யால்இமை தீந்தகண்
பொன்னே பகட்டுஉரிவை
போர்த்தமை யால்உமை நோக்குஅரும்
கம்பர்கச் சிப்பொழிலுள்
சேர்த்தமை யால்இமைப் போதுஅணி
சீதம் சிறந்தனவே. 77

---

75. வேடுஉடைக் காடு – வேடுவர் உடைய காடு. சுற்று – மதில். கவர – நிறுத்திய. மீண்டு வரும் தலைமகன் தலைவிக்கு நகர் அணிமை கூறியது.

76. நீலகண்டரின் கச்சியிலே, நடவை செய்வார் ஒலியும், செந்நெற் போரைக் குவிப்பார் ஒலியும், கரும்பாலையின் ஒலியும் எல்லாம் சேர்ந்து மாகடலின் ஒலியே போன்றிருக்கும் என்றவாறு.

**"மலிதேரான் கச்சியும் மாகடலும்"**

என்னும் முத்தொள்ளாயிரத்தை ஒப்புநோக்குக.

77. நேர்த்து – எதிர்த்து. விறல் – வெற்றி. உரிவை – தோல். சீதம் – தண்மை. சுரம் – பாலை. பகடு – யானை. இப்பாடல் பொழில் மேம்பாடு கூறித் தளர்வு அகன்றோம் என்று தலைவன் கூறல்.

சிறைவண்டு பாடும் கமலக்
கிடங்குஇவை செம்பழுக்காய்
நிறைகொண்ட பாளைக் கமுகின்
பொழில்இவை தீங்கனியின்
பொறைகொண்ட வாழைப் பொதும்புஉவை
புன்சடை ஏகம்பனார்
நறைகொண்ட பூம்கச்சி நாடெங்கும்
இவ்வண்ணம் நன்னுதலே. 78

நல்நுத லார்கருங் கண்ணும்செவ்
வாயும்இவ் வாறுஎனப்போய்
மன்இத ழார்திரு நீலமும்
ஆம்பலும் பூப்பவள்ளை
என்னஎலாம் ஒப்புக் காதுஎன்று
வீறிடும் ஏகம்பனார்
பொன்நுத லார்விழி யார்கச்சி
நாட்டுள்இப் பொய்கையுளே. 79

உள்வார் குளிர நெருங்கிக்
கடுங்கிடங்கு இட்டநன்னீர்
வள்வா ளைகளொடு செங்கயல்
மேய்கின்ற எங்களைஆட்
கொளவார் பிறவி கொடாத
ஏகம்பர் குளிர்குவளை
கள்வார் தருகச்சி நாட்டுஎழில்
ஏரி களப்பரப்பே. 80

---

78. தலைமகன் தலைவிக்குத் தனது நகர்வளத்தைக் காட்டுகிறான். வண்டு பாடுகிற தாமரை நிரம்பிய குளங்கள் இவை. பாளைக் கமுகின் பொழில் இவை. தீங்கனியின் குலை நிரம்பிய வாழைப் பொதும்புகள் இதோ, என்று அவன் ஒவ்வொன்றாகக் காட்டுகிறான். நுதல் – நெற்றி. நறை – தேன். கமுகு – பாக்குமரம்.

79. ஆம்பல் – அல்லிப் பூ. பெண்களினுடைய கண்ணைப் போன்றுள்ள நீலமும், வாய் போன்ற ஆம்பலும், வள்ளை போன்ற காதும் என்று சொல்லிக் குளங்களிலுள்ள பூக்களைக் காட்டுகிறான் தலைவிக்குத் தலைவன்.

80. உள்வார் – நினைப்பவர்கள். பிறவி கொடாத – மறுபிறவியைக் கொடுக்காத, வீடுபேறு அருள்கிற. இது ஏரியின் பரப்பைத் தலைவிக்கு விளக்கிக் காட்டியதாகும்.

பரப்புஆர் விசும்பில் படிந்த
கருமுகில் அன்னநன்னீர்
தரப்பா சிகள்மிகு பண்பொடு
சேம்புஅடர் தண்பணைவாய்ச்
சுரப்புஆர் எருமை மலர்தின்னத்
துன்னுக ராஒருத்தல்
பொரப்பார் பொலிநுத லாய்செல்வக்
கம்பர்தம் பூங்கச்சியே. 81

கச்சார் முலைமலை மங்கைகண்
ணாரஎண் நான்குஅறமும்
வைச்சார் மகிழ்திரு ஏகம்பர்
தேவி மகிழவிண்ணோர்
விச்சா தரர்தொழு கின்ற
விமானமும் தன்மம்அறா
அச்சா வையும்பரப்பு ஆம்கணி
மாடங்கள் ஓங்கினவே. 82

ஓங்கின ஊரகம் உள்அகம்
உம்பர் உருகுஇடமாம்
பாங்கினில் நின்றது அரிஉறை
பாடகம் தெவ்இரிய
வாங்கின வாள்கண்ணி மற்றவர்
மைத்துனி வான்கவிகள்
தாங்கின நாட்டுஇருந் தாளது
தன்மனை ஆயிழையே. 83

---

81. பரப்புஆர் – விரிந்து பரந்த, கரா – முதலை.

82. கண்ணார – கண் நிரம்பி மகிழ. எண்நான்கு அறம் – முப்பத்திரண்டு தருமங்கள். விச்சாதரர் – வித்தியாதரர். அணி மாடங்கள் – அழகிய மாடமாளிகைகள். ஓங்கினவே – உயர்ந்து நின்றனவாம். வானவரும், வித்தியாதரரும் தொழுகின்ற விமானம், தருமம் நீங்காது நிகழ்கின்ற சாலை, அழகு மிகுந்த மாடங்கள் இவைஎன ஓங்கி நிற்கின்ற நகரத்தின் வளத்தைத் தலைவன் தலைவிக்குக் காட்டுகிறான்.

83. திருவூரகம், பாடகம் என்பன கச்சியிலுள்ள விண்ணகரங்கள், திருமாலின் கோவில்கள்.

இழையார் அரவுமணி ஏகம்பர்
நெற்றி விழியின்வந்த
பிழையா அருள்நம் பிராட்டியது
இன்ன பிறங்கல் உன்னும்
நுழையா வருதிரி சூலத்தள்
நோக்க அரும்பொன் கடுக்கைத்
தழையார் பொழில்உறு பொன்னே
நமக்குத் தளர்வு இல்லையே. 84

தளரா மிகுவெள்ளம் கண்டுஉமை
ஓடித் தமைத்தழுவக்
கிளையார் வளைக்கை வடுப்படும்
ஈங்கோர் கிறிபடுத்தார்
வளமாப் பொழில்திரு ஏகம்பம்
மற்றுஇது வந்துஇறைஞ்சி
உளர்ஆ வதுபடைத் தோம்மட
வாய்இவ் உலகத்துள்ளே. 85

உலவிய மின்வடம் வீசி
உரும்அதிர்வு உள்முழங்கி
வலவிய மாமதம் பாய்முகில்
யானைகள் வானில்வந்தால்
சுலவிய வார்குழல் பின்னர்என்
பாரிர் எனநினைந்து
நிலவிய ஏகம்பர் கோயில்
கொடிஅன்ன நீர்மையளே. 86

---

84. இழை – அணிகலன். நெற்றிவிழியின் வந்த – நெற்றிக்கண்ணில் தோன்றிய. பிராட்டி – உமையவள். பிறங்கல் – மலை.

85. பொங்கி வருகிற வெள்ளத்தைக் கண்டு அஞ்சிய உமை பதறி ஓடி, இறைவனைத் தழுவினாள் என்ற நிகழ்ச்சி இங்கே கூறப்பெறுகிறது. கிறி – மாயச்செயல். தலைமகள் தன் நகர் இதுவே எனக் கூறியது.

86. வீசி – எறிந்து. உரும் – இடி. அதிர்வு – பேரோசை. மாமதம் – மிக்குடைய மதம். அன்ன நீர்மையள் – அன்னத்தின் தன்மை உடையவள். கார்காலம் கண்டு வருந்திய தலைவி கூறியது என்னும் துறையைச் சார்ந்தது இந்தப் பாடல்.

நீர்என்னி லும்அழும் கண்முகில்
காள்நெஞ்சம் அஞ்சலைஎன்று
ஆர்என்னி லும்தும ராய்உரைப்
பார்அம ராவதிக்கு
நேர்என்னி லும்தரும் கச்சியுள்
ஏகம்பர் நீர் மதில்வாய்ச்
சேர்என் னிலும்தங்கும் வாள்கண்ணி
தான்அன்பர் தேர்வரவே. 87

வரம்கொண்டு இமையோர் நலம்கொண்டு
ஏகம்பர் கச்சிஅன்னாய்
பரம்கொங்கை தூவன்மின் நீர்முத்தம்
அன்பர்தம் தேரின்முன்னே
தரம்கொண்டு பூக்கொண்டு கொன்றைபொன்
ஆகத்தண் காந்தள்கொத்தின்
கரம்கொண்டு பொன்சுண்ணம் ஏந்தவும்
போந்தன கார்முகிலே. 88

கார்முகம் ஆரவண் கைக்கொண்ட
கம்பர் கழல்தொழுது
போர்முகம் மாப்பகை வெல்லச்சென்
றார்நினை யார்புணரி
நீர்முக மாக இருண்டு
சுரந்தது நேரிழைநாம்
ஆர்முக மாக வினைக்கடல்
நீந்தும் அயர்வுஉயிர்ப்பே. 89

---

87. அமராவதிக்கு ஒப்பு என்று சொன்னாலும் தக்கதாகிய கச்சி வினைமுற்றி மீளும் தலைமகள் காரை நோக்கிக் கூறியதாம்.

88. வரம் – பாரம். தூவல் – உதிர்த்தல். தரம் – உயர்வு. தோழி தலைவியிடம் கண்ணீர் சிந்தாதே என்று ஆறுதல் கூறுகிறாள். முகில் கண்டு அதன் தோற்றத்தில் வரவுக்குறியை ஏற்றிப் பேசுகிறாள். தலைவன் வருவான், நீ வருந்தாதே என்று தலைவியிடம் கூறுகிறாள் தோழி.

89. கார்முகம் – சிவபெருமானுக்கு உரிய பினாகி என்று பெயர் பெற்ற வில். தன்னைப் பிரிந்து சென்ற தலைவன் தன்னை நினையா திருக்கிறான் என்று வருந்துகிறாள் காதலி. கார்கண்டு துணைவயின் பிரிந்தார் வந்திலர் என்று வருந்திக்கூறியது என்னும் துறை இது.

உயிர்ஆ யினஅன்பர் தேர்வரக்
கேட்டுமுன் வாட்டம்உற்ற
பயிர்ஆர் புயல்பெற்றது என்னநம்
பல்வளை பான்மைகளாம்
தயிர்ஆர் பால்நெய்யொடும் ஆடிய
ஏகம்பர் தம்அருள்போல்
கையிரா வளைஅழுந் தக்கச்சு
இறுத்தன கார்மயிலே. 90

கார்விடை வண்ணத்தன் அன்றுஏழ்
தழுவினும் இன்றிதனிப்
போர்விடை பெற்றுஎதிர் மாண்டார்
எனஅண்டர் போதவிட்டார்
கார்விடை ஏகம்பர் கச்சிப்
புறவுஇடை தம்பொன்நண்பூண்
மார்விடை வைகல் பெறுவர்
தழுவ மழவிடையே. 91

விடைபாய் கொடுமைஎண் ணாதுமே
லாம்கன்னி வேல்கருங்கண்
கடைபாய் மனத்துஇளம் காளையர்
புல்குஒலி கம்பர்கச்சி
மடையாய் வயல்இள முல்லையின்
மான்கன்றொடு ஆன்கன்றினம்
கடைபாய் தொறும்பதி முன்றில்
கடல்போல் கலந்துஎழுமே. 92

---

90. தலைமகனுடைய தேர் வருகிறது என்ற செய்தியைக் கேட்கிறாள் தலைவி. அந்தத் தேரின் வரவை அறிந்ததும் அவளுடைய உள்ளம் மகிழ்ச்சி பொங்குகிறது. வாடிய பயிருக்கு மழை பொழிந்ததுபோல் உவகை பொங்க வளைகள் உடல் விம்முதலால் கையிலிருந்து தெறிக்கின்றன. கச்சு உடலின் பூரிப்பால் இறுகுகிறது.

91. விடை – இடபம். அண்டர் – முல்லை நிலத்து மக்கள், ஆயர். போதவிட்டார் – வரவிட்டார். புறவு – முல்லை நிலம். பூண் – அணி. வைகல் – நிலை பெறுதல். இது தோழி ஏறுகோள் கூறி வரைவு கடாதல் என்னும் துறையாம்.

92. கருங்கட்கடை – கன்னங்கரிய விழியின் கடைக்கண் பார்வை. புல்குஒலி – சேர்ந்த ஒலி. இந்தப் பாடலின் துறை; தோழி பிறர் வரையநேர்தல் கூறி வரைவு கடாயது.

எழுமலர்த் தண்பொழில் ஏகம்பர்
கச்சி இரும்கடல்வாய்க்
கொழுமணப் புன்னைத் துணர்மணல்
குன்றில் பரதர்கொம்பே
செழுமலர்ச் சேல்அல்ல வாள்அல்ல
வேல்அல்ல நீலம்அல்ல
முழுமலர்க் கூர்அம்பின் ஓர்இரண்
டாலும் முகத்தனவே. 93

முகம்பாகம் பண்டமும் பாகம்என்று
ஓதிய மூதுரையை
உகம்பார்த் திரேல்என் நலம்உயர்
ஏகம்பர் கச்சிமுன்நீர்
அகம்பாக ஆர்வின் அளவில்லை
என்னில் பவளச்செவ்வாய்
நகம்பால் பொழில்பெற்ற நாம்உற்ற
வர்கொள்க நன்மயலே. 94

மயக்கத்த நல்இருள் கொல்லும்
சுறவொடு எறிமகரம்
இயக்கத்து இடுசுழி ஓதம்
கழிகிளர் அக்கழித்தார்
துயக்கத் தவர்க்குஅரு ளாக்கம்பர்
கச்சிக் கடல்பொன்நூல்
முயக்கத்து அகல்வு பொறாள்கொண்க
நீர்வரும் ஊர்க்குஅஞ்சுமே. 95

---

93. எழுமலர்த்தண்பொழில் - மலர்கள் பூத்த குளிர்ச்சியான சோலை. துணர் - பூந்துணர், பூங்கொத்து. பரதர் - நெய்தல் நில மக்கள். இந்தப் பாடல் தலைமகன் பாங்கனுக்கு இயல் இடம் கூறுதலாம்.

94. அகம் - இடம். பண்டம் - செல்வம். ஆர்வின் - ஆர்வத்தின். நகம் - மலை. இப்பாடல் தோழி தலைவியை நோக்கிக் கூறியதாம்.

95. நல் - செறிந்த. சுறவு - சுறாமீன். மகரம் - முதலை. ஓதம் - நீர்ப்பெருக்கு. தார் - வரிசை. துயக்கம் - துன்பம். இப்பாடலின் துறை: தோழி ஏதம் கூறி, இரவுக்குறி மறுத்தல்.

மேய்இரை வைகக் குருகுஉண
ராமது உண்டுபுன்னை
மீஇரை வண்டுஓது
அமர்புகடிய விரிகடல்வாய்ப்
பாய்இரை நாகம்கொண் டோன்தொழும்
கம்பர்கச் சிப்பவ்வநீர்
தூய்இரை கானல்மற்று ஆர்அறி
வார்நம் துறைவர்பொய்யே. 96

பொய்வரும் நெஞ்சினர் வஞ்சனை
யாரையும் போகவிடா
மெய்வரும் பேர்அருள் ஏகம்பர்
க்ச்சி விரையினவாய்க்
கைவரும் புள்ளொடு சங்கின்ம்
ஆர்ப்பநம் சேர்ப்பர் திண்தேர்
அவ்அரு தாமங் கள்இனம்வந்து
ஆர்ப்ப அணைகின்றதே. 97

இன்றுசெய் வோம்இத னில்திரு
ஏகம்பர்க்கு எத்தனையும்
நன்றுசெய் வோம்பணி நாளைஎன்று
உள்ளி நெஞ் சேஉடலில்
சென்றுசெ யாரை விடும்துணை
நாளும் விடாதுஅடிமை
நின்றுசெய் வார்அவர் தங்களின்
நீள்நெறி காட்டுவரே. 98

---

96. குருகு – நாரை. உணரா – உணர்ந்து கொள்ளாத. புன்னைமீ – புன்னையின் மீது. இரைவண்டு – ஒலிக்கின்ற வண்டு. இப்பாடல் தலைமகனைப் பிரிந்துநின்ற தலைவி கடலை நோக்கி வருந்திக் கூறியது.

97. புள் – பறவை. தாமம் – யானை. சங்குகள் ஒலிக்க யானை இனங்கள் வந்து ஆர்ப்பத் தேர் வருகின்றது. இதைக் கண்ட தோழி தலைவியிடம் பேசுகிறாள். இப்பாடலின் துறை: தோழி தலை மகளுக்குத் தேர்வரவு கூறியது.

98. எத்தனையும் – அனைத்தையும். உள்ளி – எண்ணி.

காட்டிவைத் தார்தம்மை யாம்கடிப்
பூப்பெய்யக் காதல்வெள்ளம்
ஈட்டிவைத் தார்தொழும் ஏகம்பர்
ஏதும்இ லாதஎம்மைப்
பூட்டிவைத் தார்தமக்கு அன்புஅது
பெற்றுப் பதிற்றுப்பத்துப்
பாட்டிவைத் தார்பர வித்தொழு
வாம்அவர் பாதங்களே. 99

பாதம் பரவிஓர் பித்துப்
பிதற்றினும் பல்பிணியும்
ஏதம் புகுதா வகைஅருள்
ஏகம்பர் ஏத்தெனவே
போதம் பொருளால் பொலிந்த
புன்சொல் பனுவல்களும்
வேதம் பொலியும் பொருளாகும்எனக்
கொள்வர் மெய்த்தொண்டரே. 100

---

99. கடிப்பூ – மணம் கமழ்கின்ற மலர். பெய்ய – சொரிய. அவர் பாதங்களைப் பரவித் தொழுவோம் என்றவாறு. பதிற்றுப்பத்து – நூறு.

எம்மைப் பிணைத்து வைத்துக்கொண்டார். அப்படி நம்மைப் பூட்டி வைத்தாரிடம் அன்பு பெற்று நூறு பாடல்கள் பாடும்படி இயக்கினார். அவருடைய திருவடிகளைப் பாடித் தொழுவோம் என்றவாறு.

100. பித்துப் பிதற்றினும் – அன்பு வெறியிலே உளறினாலும். ஏதம் – குற்றம். ஏதம்புகுதா வகை – குற்றம் புகுந்து விடாதபடி. ஏத்து எனவே – தோத்திரமாகவே.

புன்சொல் பனுவல்களையும் மெய்த்தொண்டர்கள் பேசும் மொழியும் பொருள்போல ஏற்றுக்கொள்வர் என்றவாறு. ஏனென்றால் அவை ஏகம்பர் ஏத்தாகலின்.

## திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது

இருநில மடந்தை இயல்பினில் உடுத்த
பொருகடல் மேகலை முகம்எனப் பொலிந்து
ஒற்றி மாநகர் உடையோய் உருவின்
பெற்றிஒன் றாகப் பெற்றோர் யாரே

மின்னின் பிறக்கந் துன்னும்நின் சடையே
மன்னிய அண்டம்நின் சென்னியின் வடிவே
பாகவன் பரிதி பன்மதி தன்னொடும்
மூவகைச் சுடரும்நின் நுதல்நேர் நாட்டம்
தண்ஒளி ஆரம் தாரா கணமே

விண்ணவர் முதலா வேறுஓர் இடமாக்
கொண்டுஉறை விசும்பே கோலநின் ஆகம்
எண்திசை திண்தோள் இருங்கடல் உடையே
அணியுடை அல்குல் அவனிமண் டலமே
மணிமுடிப் பாந்தள்நின் தாள்இணை வழக்கே

ஒழியாது ஓடிய மாருதம் உயிர்ப்பே
வழுவா ஓசை முழுதும்நின் வாய்மொழி
வானவர் முதலா மன்உயிர் பரந்த
ஊனம்இல் ஞானத் தொகுதிநின் உணர்வே
நெருங்கிய உலகினில் நீர்மையும் நிற்றலும்

---

1. இந்த நூல் திருவொற்றியூரில் எழுந்தருளியுள்ள சிவன்மீது அந்தாதித் தொடையாகப் பாடப்பெற்ற பத்து ஆசிரியப் பாக்கள் கொண்டது. ஒற்றியூர்ப் பெருமானை நோக்கி மொழிவனவாக இப்பாடல்கள் அமைந்து சித்தர்களின் ஞானப் பொருளைத் தம்முள் பொதிந்து திகழ்கின்றன.

இருநில மடந்தை – பூமாதேவி. நின் சடை மின்னின் ஒளி. அண்டம் நின் சென்னியின் வடிவு. பரிதி, சந்திரன், தீ ஆகிய மூன்றும் உன்னுடைய மூன்று கண்கள். விண்மீன்கள் உன்னுடைய ஆரம். உன்தோள் எட்டுத் திசைகள்.

மாருதம் – காற்று, காற்றுத்தான் உன்னுடைய மூச்சு. அமைத்தலும், அழித்தலும், அவற்றுக்குரிய முயற்சியும் நின் இயல்பான இமைத்தலும் விழித்தலும் ஆகும்.

சுருங்கலும் விரிதலும் தோற்றும்நின் தொழிலே
அமைத்தலும் அழித்தலும் அங்குஅதன் முயற்சியும்
இமைத்தலும் விழித்தலும் ஆகும்நின் இயல்பே
என்றிவை முதலா இயல்புடை வடிவினோடு
ஒன்றிய துப்புஉரு இருவகை ஆகி

முத்திறக் குணத்து நால்வகைப் பிறவி
அத்திறத்து ஐம்பொறி அறுவகைச் சமயமொடு
ஏழ்உலகு ஆகி எண்வகை மூர்த்தியோடு
ஊழிதோறு ஊழி எண்இறந்து ஓங்கி
எவ்வகை அளவினில் கூடி நின்று
அவ்வகைப் பொருளும்நீ ஆகிய இடத்தே. 1

இடத்துஉறை மாதரோடு ஈர்உடம்பு என்றும்
நடத்தினை நள்இருள் நவிற்றினை என்றும்
புலிஅதள் என்பொடு புனைந்தோய் என்றும்
பலிதிரி வாழ்க்கை பயின்றோய் என்றும்

அருவமும் உருவமும் ஆனாய் என்றும்
திருஅமர் மாலொடு திசைமுகன் என்றும்
உளனே என்றும் இலனே என்றும்
தளரான் என்றும் தளர்வோன் என்றும்
ஆதி என்றும் அசோகினன் என்றும்

---

ஒன்றிய – ஒன்று சேர்ந்த. துப்பு – பவளம். ஆணும் பெண்ணும் இணைந்த என்றவாறு (இருவகையாகி ஒன்றிய).

முத்திறக் குணம் – சாத்துவிகம், இராசதம், தாமதம் ஆகிய மூன்று குணங்களும்.

2. இடத்து உறை மாதர் – உடம்பினில் பங்கு கொண்ட உமை அம்மை. ஈர்உடம்பு – வலப்பக்கம் ஆணாகவும், சிவனாகவும், இடப் பக்கம் பெண்ணாகவும், உமையாகவும். நடத்தினை – உன்னுடைய நடனத்தை. நள்இருள் நவிற்றினை – நடுநிசியில் நிகழ்த்தினாய். புலிஅதள் – புலித்தோல். என்பொடு – எலும்பொடு. புனைந்தோய் – அணிந்தவனே. பலிதிரி வாழ்க்கை – பிச்சை ஏற்றுத் திரிகின்ற வாழ்க்கை. பயின்றோய் – மேற்கொண்டோனே.

ஆதி – முதல்வன். அசோகினன் – நெட்டிலிங்க மரத்தின் அடியில் இருப்பவன்.

போதியில் பொலிந்த புராணன் என்றும்
இன்னவை முதலாத் தாம்அறி அளவையின்
மன்னிய நூலின் பன்மையுள் மயங்கிப்
பிணங்கும் மாந்தர் பெற்றிமை நோக்கி
அணங்கிய அவ்அவர்க்கு அவ்வவை யாகி
அடைபற்றிய பளிங்கு போலும்
ஒற்றி மாநகர் உடையோய் உருவே. 2

உருவாம் உலகுக்கு ஒருவன் ஆகிய
பெரியோய் வடிவின் பிறிதுஇங்கு இன்மையின்
எப்பொருள் ஆயினும் இங்குஉளது ஆம்எனில்
அப்பொருள் உனக்கே அவயவம் ஆதலின்

முன்னிய மூஎயில் முழங்குஎரி ஊட்டித்
தொல்நீர் வையகம் துயர்கெடச் சூழ்ந்ததும்
வேள்வி மூர்த்திதன் தலையினை விடுத்ததும்

---

போதி – அரசமரம். போதியிற் பொலிந்தபுராணன் – அரச மரத்தின் அடியில் அழகமர்ந்த தொன்மையான மூர்த்தி எனவும். இன்னவை முதலா – இப்படிப்பட்ட இலக்கணங்கள் முதலியவற்றை. தாம் அறி அளவையின் – தாம் அறிந்த அளவுக்குத் தக்கவாறு.

மன்னிய நூலின் – மொழிந்து நெருக்குகிற தோத்திர சாத்திரங் களின். பன்மையுள் மயங்கி – பலவகையான தன்மைகளில் மதியிழந்து. பிணங்கும் மாந்தர் – வேறுவேறு விதமாக மாறுபடுகிற மக்கள். பெற்றிமை நோக்கி – அந்த நிலையைப் பார்த்து.

அணங்கிய அவ்வவர்க்கு அவ்வவை ஆகி – மயங்குகிற பலவாறான மக்களுக்கும் அவரவர் கருத்தின்படி பலவாறான உருவாகி. அடை பற்றிய பளிங்குபோலும் – இலையைச் சார்ந்த பளிங்குக்கல் அந்த இலையையே காட்டுவது போல. அவரவர் கருத்தின்படி அந்தந்த வடிவமே ஆகின்ற தன்மைத்தே ஒற்றிமா நகரை உடையவனாகிய உன் உருவம்.

3. எல்லாப் பொருளும் உனது அவயவம். நீ முப்புரக் கோட்டைகளை எரியூட்டினாய். இவ்வாறே நீ செய்த அற்புதங்கள் பலவாம்.

இங்கே பட்டினத்தடிகள் பிரமன் தலையைக் கொய்தது, மன்மதனை எரித்தது, இராவணனை உறுத்தது, கூற்றினை அடர்த்தது ஆகியவற்றைச் சொல்லி, இந்த ஆள்வினைகள் எல்லாம் நின் செயல் என்கிறார்.

நீள்விசும்பு ஆளிதன் தோளினை நெரித்ததும்
ஓங்கிய மறையோற்கு ஒருமுகம் ஒழித்ததும்

பூங்கணை வேளைப் பொடிபட விழித்ததும்
திறல்கெட அரக்கனைத் திருவிரல் உறுத்ததும்
குறைபடக் கூற்றினைக் குறிப்பினில் அடர்த்ததும்
என்றிவை முதலா ஆள்வினை எல்லாம்
நின்றுழிச் செறிந்தவை நின்செயல் ஆதலின்

உலவாத் தொல்புகழ் ஒற்றி ஊர
பகர்வோர் நினக்கு வேறுஇன்மை கண்டவர்
நிகழ்ச்சியின் நிகழின் அல்லது
புகழ்ச்சியில் படுப்பரோ பொருள்உணர்ந் தோரே. 3

பொருள்உணர்ந்து ஓங்கிய பூமகன் முதலா
இருள்துணை யாக்கையில் இயங்கும் மன்உயிர்
உருவினும் உணர்வினும் உயர்வினும் பணியினும்
திருவினும் திறலினும் செய்தொழில் வகையினும்

வெவ்வேறு ஆகி வினையொடும் பிரியாது
ஒவ்வாப் பன்மையுள் மற்றவர் ஒழுக்கம்
மன்னிய வேலையுள் வான்திரை போல
நின்னிடை எழுந்தும் நின்னிடை ஆகியும்
பெருகியும் சுருங்கியும் பெயர்ந்தும் தோன்றியும்

விரவியும் வேறாய் நின்றனை விளக்கம்
ஓவாத் தொல்புகழ் ஒற்றி ஊர

---

உலவாத் தொல்புகழ் – என்றுமே நலியாத அன்றிலிருந்து இன்றுவரை தொடர்கிற நிலையான புகழ்.

4. பூமகன் – தாமரையில் உதித்த அயன். இருள்துணை யாக்கை – மலமயக்கில் அழுந்திய உடம்பு. வேலை – கடல்.

மண்உயிர் உருவிலும், உணர்விலும், உயர்விலும், பணியிலும், திருவிலும், திறலிலும், செய்தொழில் வகையில் மாறுபட்டதாகும். இந்நிலை அன்றிலிருந்து இன்றுவரை ஒன்றேயாம்.

பரம்பொருளும் மன் உயிரும் எங்ஙனம் என்பதை அடிகள் விளக்குகின்றன.

மூவா மேனி முதல்வ நின் அருள்
பெற்றவர் அறியின் அல்லது
மற்றவர் அறிவரோ நின்னிடை மயக்கே. 4

மயக்கஇல் சொல்நீ ஆயினும் மற்றவை
துயக்க நின்திறம் அறியாச் சூழலும்
உறைவிடம் உள்ளம் ஆயினும் மற்றது
கறைபட ஆங்கே கரந்த கள்ளமும்
செய்வினை உலகினில் செய்வோய் எனினும்
அவ்வினைப் பயன்நீ அணுகா அணிமையும்
இனத்திடை இன்பம் வேண்டிநின் பணிவோர்
மனத்திடை வாரி யாகிய வனப்பும்
அன்பின் அடைந்தவர்க்கு அணிமையும் அல்லவர்ச்
சேய்மையும் நாள்தொறும்
என்பினை உருக்கும் இயற்கைய ஆதலின்
கண்டவர் தமக்கே ஊன்உடல் அழிதல்
உண்டுஎன உணர்ந்தனம் ஒற்றி யூர
மன்னிய பெரும்புகழ் மாதவ
துன்னிய செஞ்சடைத் தூமதி யோயே. 5

தூமதி சடைமிசைச் சூடுதல் தூநெறி
ஆம்மதி யான்என அமைத்த வாறே
அறன்உருவு ஆகிய ஆன்ஏறு ஏறுதல்
இறைவன் யான்என இயற்று மாறே

---

கடலின் அலைகள் போல அவனிடம் இருந்து எழுந்து, அவனிடை ஆகி, பெருகியும், சுருங்கியும், பெயர்ந்தும், தோன்றியும், விரவியும் இருப்பினும் இவற்றிற் கலந்தும் கலவாமல் நிற்கிறான் இறைவன். இதையே 'வேறாய் நின்றனை' என்கிறார். இந்த மாயத்தை, இறைவனுடைய இந்த மயக்கை அவனுடைய அருள் பெற்றவர் அறியின் அல்லது மற்றவர் அறிவரோ, மாட்டார்கள் என்றவாறு.

5. துயக்கம் – தளர்ச்சி. கறை – குற்றம். அணிமை – நெருக்கம். அன்பால் அடைந்தவர்களுக்கு நீ நெருக்கமாய் இருக்கிறாய். அல்லவர்க்குச் சேய்மையானவன்.

6. தூமதி – வளர் பிறைச்சந்திரன். ஆன் ஏறு ஏறுதல், அவனுடைய இறைமையை உணர்த்துகிறது.

அதுஅவள் அவன்என நின்றமை யார்க்கும்
பொதுநிலை யான்என உணர்த்திய பொருளே
முக்கணன் என்பது முத்தீ வேள்வியில்
தொக்கது என்இடை என்பதோர் சுருக்கே
வேத மான்மறி ஏந்துதல் மற்றுஅதன்
நாதன் நான்என நவிற்று மாறே
மூஇலை ஒருநாள் சூலம் ஏந்துதல்
மூவரும் யான்என மொழிந்த வாறே
எண்வகை மூர்த்தி என்பதுஇவ் உலகினில்
உண்மை யான்என உணர்த்திய வாறே
நிலம்நீர் தீவளி உயர்வான் என்றும்
உலவாத் தொல்புகழ் உடையோய் என்றும்
பொருளுநற் பூதப் படையோய் என்றும்
தெருளநின்று உலகினில் தெருட்டு மாறே
ஈங்குஇவை முதல்ஆம் வண்ணமும் வடிவும்
ஓங்குநின் பெருமை உணர்த்தவும் உணராத்
தற்கொலி மாந்தர் தம்இடைப் பிறந்த
சொற்பொருள் வண்மையில் சூழலும் மாந்தர்க்கு
ஆதி ஆதிய அறுதொழி லாளர்
ஓதல் ஓவா ஒற்றி யூர
சிறுவர்தம் செய்கையிற் படுத்து
முறுவலித்து இருத்திநீ முகப்படும் அளவே. 6

அது, அவள், அவன் என்று நின்றது பொதுநிலையை உணர்த்திய பொருளாம். இதன் விரிவே சிவஞான போதவிளக்கம். முக்கணன் என்பது முத்தீ வேள்வியில் தொக்கி நின்றது என்பதாம்.

வேதங்களாகிய நான்மறைக்கும் நாதன் என்ற நிலையை உணர்த்துகிறது மான்மறி ஏந்திய நிலை. மூவிலைச்சூலம் மும்மூர்த்தியும் அவனே என்பதை மொழிகிறது. அட்டமூர்த்தி என்பது அவனே மெய்ப்பொருள் என்பதை உணர்த்துகிறது.

தொல்புகழ் – பழமையான புகழ். தெருட்டு மாறே – தெளிவிக்கும் பொருட்டு.

இவ்வாறு வண்ணமும் வடிவும் மெய்ப்பொருளை உணர்த்திய போதும் கூட, இதை உணராத மாந்தர்கள் தற்கொலி மாந்தரே. தற்கொலி மாந்தர் – தற்கொலை செய்துகொள்கிற மக்கள். தொன்மையான ஆறு தொழில் செய்கின்ற அந்தணாளர்கள் வேதம் ஓதுதலை இடையறாது இயற்றுகின்ற ஒற்றியூரனே என்று திருவொற்றியூர்ப் பெருமானை முன்னிலைப் படுத்துகிறது இந்தப் பாடல்.

அளவினில் இறந்த பெருமையை ஆயினும்
எனதுஉளம் அகலாது ஒடுங்கிநின் றுளையே
மெய்யினை இறந்த மெய்யினை ஆயினும்
வையகம் முழுதும்நின் வடிவுஎனப் படுமே

கைவலத்து இலைநீ எனினும் காதல்
செய்வோர் வேண்டும் சிறப்புஒழி யாயே
சொல்லிய வகையால் துணைஅலை ஆயினும்
நல்உயிர்க் கூட்ட நாயகன் நீயே
எங்கும் உள்ளோய் எனினும் வஞ்சனை
தங்கிய அவரைச் சாராய் நீயே

அஃதான்று
பிறவாப் பிறவியை, பெருகாப் பெருமையை,
துறவாத் துறவியை, தொடராத் தொடர்ச்சியை,
நுகரா நுகர்ச்சியை, நுணுகா நுணுக்கினை,
அகலா அகற்சியை, அணுகா அணிமையை

செய்யாச் செய்கையை, சிறவாச் சிறப்பினை,
வெய்யை, தணியை, விழுமியை, நொய்யை,
செய்யை, பசியை, வெளியை, கரியை,
ஆக்குதி, அழித்தி ஆன பல்பொருள்
நீக்குதி, தொகுத்தி, நீங்குதி, அடைதி

---

7. அளவினில் இறந்த – அளவு கடந்த. நின்றுளையே – நின்று கொண்டிருக்கின்றாய்.

துணையில்லாதவன் என்று சொல்லப் பெறினும் நீ நல்லுயிர்க் கூட்டத்தின் தலைவனாக நிற்கிறாய். எங்கும் உள்ளனை ஆயினும் வஞ்சனை யாளரைச் சாராதவன் நீ. அன்றியும் நீ பிறவாத பிறவி; பெருகாத பெருமை உடையவன். துறவாத துறவி; தொடர்ந்த தொடர்ச்சியானவன்; நுகராத நுகர்ச்சியும், நுணுகாத நுணுக்கும், அகலாத அகற்சியும், அணுகாத அணிமையும், செய்யாத செய்கையும், சிறவாத சிறப்பும் நின் பண்புகள். நீ வெம்மையன்; தண்மையன்; விழுமியன்; நொய்மையன்; நீ சிவப்பன்; பச்சையன்; வெள்ளையன்; கருப்பன். நீ ஆக்குவாய்; அழிப்பாய்; நீக்குவாய்; தொகுப்பாய்; நீங்குவாய்; அடைவாய்.

மேலே சொன்ன பண்புகள் தவிர, ஏனையவாகிய எண்ணற்ற பல குணங்களும் நிரம்பி, நினைக்க நினைக்க மயக்கம் தருகிற தன்மையன் நீ.

ஏனைய ஆகிய எண்ணில் பல்குணம்
நினைதொறும் மயக்கும் நீர்மைய ஆதலின்
ஓங்கு கடல்உடுத்த ஒற்றி யூர
ஈங்குஇது மொழிவார் யாஅர் தர்அம்
சொல்நிலை சுருங்கின் அல்லது
நின்இயல் அறிவோர் யார்இரு நிலத்தே. 7

நிலத்திடைப் பொறைஆய் அவாவினில் நீண்டு
சொலத்தகு பெருமைத் தூரா ஆக்கை
மெய்வளி ஐயொடு பித்துஒன்று ஆக
ஐவகை நெடுங்காற்று ஆங்குஉடன் அடிப்ப

நரைஎனும் நுரையே நாள்தொறும் வெளுப்பத்
திரைஉடைத் தோலே செழுந்திரை யாகக்
கூடிய குருதி நீரினுள் நிறைந்து
மூடிய இருமல் ஓசையின் முழங்கிச்
சுடுபசி வெகுளிச் சுறவுஇனம் எறியக்

குடர்எனும் அரவக் கூட்டம்வந்து ஒலிப்ப
ஊன்தடி எலும்பின் உள்திடல் அடைந்து
தோன்றிய பல்பிணிப் பின்னகம் கழலக்

---

கடலை உடுத்திய ஒற்றியூரின் தலைவா! இத்தன்மைகளைச் சரியாக மொழியக் கூடியவர் யார்? சொல்நிலை சுருங்குமேயன்றி உன்நிலை அறிந்தோர் யாரும் இல்லை இந்த நிலத்தே.

8. இப்பாடல் சித்தர் இலக்கியத்தின் ஞானப் பொருளை உள்ளடக்கி நிற்பதாகும். தூரா ஆக்கை என்பது தூர்க்கப்படாத உடம்பு. இதனுள் இயங்குகின்ற காற்றுக்கள் ஐந்து. இதனோடு சேர்ந்து பித்து ஒன்றி நின்று ஐந்து காற்றுக்களும் உடன் அடிக்கின்றன.

இந்தப் பாடலின் பொருண்மை உடலாகிய ஆழ்கடலிருந்து, இந்த உடலையே துணைகொண்டு வீடுபேறாகிய கரையில் ஏறவேண்டும் என்பதாம். அதனால் இந்த வரிகள் உடலின் இயல்பைக் கடலின் இயல்புகளோடு இணைத்துப் பேசுகின்றன.

நரையை நுரையாகவும், திரை உடைத் தோலை அலையாகவும், குருதியை நீராகவும், இருமலைக் கடலோசையாகவும், பசி, வெகுளி முதலியவற்றைச் சுறா மீன்காளகவும், குடரை அரவக் கூட்டமாகவும், எலும்பைத் திடலாகவும், கால்கை நரம்பைக் கண்டமாகவும், உருவகம் செய்கிறார் பட்டினத்தடிகள்.

கால்கையின் நரம்பே கண்டம் ஆக
மேதகு நிணமே மெய்ச்சால் ஆக

முழக்குடைத் துளையே முகங்கள் ஆக
வழுக்குடை மூக்குஆறு ஓதம்வந்து ஒலிப்ப
இப்பரிசு இயற்றிய உடல்இரும் கடலுள்
துப்புரவு என்னும் கழித்தலைப் பட்டுஇங்கு
ஆ ஆ என்று நின் அருளினைப் பெற்றவர்

நாவாய் ஆகிய நாதநின் பாதம்
முந்திச் சென்று முறைமையின் வணங்கிச்
சிந்தைக் கூம்பினைச் செவ்விதின் நிறுத்தி
உருகிய ஆர்வப் பாய்விரித்து ஆர்த்துப்
பெருகிய நிறைஎனும் கயிற்றிடைப் பிணித்துத்

துன்னிய சுற்றத் தொடர்கயிறு அறுத்து
மன்னிய ஒருமைப் பொறியினை முறுக்கிக்
கருமப் பார்எனும் கடுவெளி எற்ற
தூமச் சோதிச் சுடர்க்குஉற நிறுத்திச்
சுருங்கா உணர்ச்சித் துடுப்பினைத் துழாவி

நெருங்கா அளவில் நின்கரை ஏற்ற
வாங்க யாத்திரை போக்குதி போலும்
ஓங்கு கடல்உடுத்த ஒற்றியூ ரோயே. 8

ஒற்றி யூர உலவா நின்குணம்
பற்றி ஆரப் பரவுதல் பொருட்டா
என்இடைப் பிறந்த இன்னாப் புன்மொழி
நின்இடை அணுகா நீர்மைய ஆதலின்

---

இத்தன்மையுள்ள உடலாகிய கடலில் துப்புரவு, அதாவது, ஐம்புல நுகர்ச்சி என்னும் சுழியில் அகப்பட்டு, 'ஆ, ஆ' என்று ஓலமிட்டு உன் அருளைப் பெற்றவர்க்கு, உன் பாதமே மரக்கலமாகும். அதுவே இந்தக் கடலின் கரை சேர நாவாய்!

சிந்தைதான் பாய்மரம். ஆர்வம்தான் பாய். நிறை என்கிற கட்டுப்பாடு, ஒழுக்கம், பிணித்தற்குரிய கயிறாகும். சுற்றம் என்ற தொடர்கயிற்றை அறுத்து, இந்த நாவாய் பயணிக்க வேண்டும். அதற்குச் சுருங்கா உணர்ச்சி என்னும் துடுப்பினைக் கொண்டு துழாவ வேண்டும்.

இந்தக் கடல் யாத்திரையை இயக்குபவன் யார்? கடலை ஆடையாக உடுத்த ஒற்றியூரின் பெருமான்!

ஆவலித்து அழுதலில் அகன்ற அம்மனை
கேவலம் செய்மையில் கேளான் ஆயினும்
பிறித்தற்கு அரிய பெற்றியது ஆகிக்
குறைவினில் ஆர்த்தம் குழவியது இயல்பினை
அறியாது எண்ணில் ஊழிப் பிறவியின்

மயங்கிக் கண்ணிலர் கண்பெற்று ஆங்கே
தாய்தலைப் படநின் தாள்இணை வணக்கம்
வாய்தலை அறியா மயக்குறும் வினையேன்
மல்கிய இன்பத் தோடுஉடன் கூடிய
எல்லையில் அவாவினில் இயற்றிய வாகக்

கட்டிய நீயே அவிழ்க்கின் அல்லது
என்தனை ஆயினும் யான்அவிழ்க்க அறியேன்
துன்னிடை இருள்எனும் தூற்றுஇடை ஒதுங்கி
வெள்ளிடை காண விருப்புறு வினையேன்
தந்தையும் தாயும் சாதியும் அறிவும்நம்

சிந்தையும் திருவும் செல்கதித் திறனும்
துன்பமும் துறவும் தூய்மையும் அறிவும்
இன்பமும் புகழும் இவைபல பிறவும்
சுவைஒளி ஊறுஓசை நாற்றம் தோற்றம்
என்றுஇவை முதலா விளங்குவ எல்லாம்

---

9. உலவா – அழியாத. ஆர – நிரம்ப.

ஆவலித்து – கொட்டாவி விடுதல் போல வாய்பிளந்து. உனது தன்மை எவ்வாறு என்றால் என்னுடைய நாவின் புன்மொழிகள் நின்னை வந்து அணுகமுடியாத தன்மையன! அதாவது உன் குணத்தைப் பொருந்திப் புகழ எனது மொழிக்கு ஆற்றல் இல்லை. நீ அளவற்ற பெருமையன், என்மொழி புன்மொழி என்றவாறு.

கண்ணில்லாத குருடர் கண் பெற்றதுபோல, தாய் தலைப்பட நின் திருவடிக்கு வணக்கம்! நீதான் கட்டினாய். நீதான் அவிழ்க்கவேண்டும். என்னையே ஆனாலும் நான் அவிழ்க்க இயலாது! துன் – நெருங்கிய. இந்தப் பாடலின் விண்ணப்பமே சரணாகதி என்னும் தத்தவமேயாகும். இது ஒன்றே உய்தற்கு வழி என்பதைச் சித்தர் இலக்கியம் 'திருவடிப் பேறு' என்னும் தலைப்பிலே பற்பல முறைகளிலே பேசுகிறது.

ஐம்புல நுகர்வையும் உன் திருவடியிலே ஒன்றி நிற்கும்படியாக இட்டு நின்றேன். உன் திருவடிக்கு அப்பால் எனக்கு வேறு சார்பு இல்லை.

ஒன்றநின் அடிக்கே ஒருங்குடன் வைத்து
நின்றனன் தமியேன் நின்அடி அல்லது
சார்வுமற்று இன்மையில் தளர்ந்தோர் காட்சிச்
சேர்வுஇடம் அதனைத் திறம்பட நாடி
எய்தற்கு அரியோய் யான் இனிச்
செய்வதும் அறிவனோ தெரியும் காலே. 9

காலற் சீறிய கழலோய் போற்றி
மூலத் தொகுதி முதல்வ போற்றி
ஒற்றி மாநகர் உடையோய் போற்றி
முற்றும் ஆகிய முதல்வ போற்றி

அணைதொறும் சிறக்கும் அமிர்தே போற்றி
பிணைபிறிது இல்லா ஈச போற்றி
ஆர்வம் செய்பவர்க்கு அணியோய் போற்றி
தீர்வில் இன்சுவைத் தேனே போற்றி
வஞ்சனை மாந்தரை மறந்தோய் போற்றி

நஞ்சினை அமுதாய் நயந்தோய் போற்றி
விரிகடல் வையக வித்தே போற்றி
புரிவுடை வனமாய்ப் புணர்ந்தோய் போற்றி
காண முன்பொருள் கருத்துஉறை செய்மைக்கு
ஆணி ஆகிய அரனே போற்றி

வெம்மை தண்மைஎன்று இவைகுணம் உடைமையில்
பெண்ணொடு ஆண்எனும் பெயரோய் போற்றி
மேவிய அவர்தமை வீட்டினில் படுக்கும்

---

எய்துதற்கரியானே, எல்லாம் உன் திருவடியில் ஒப்பித்துவிட்டேன். இதற்குமேல் நான் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. இனிச் செய்வதும் நான் அறிவேனோ? இல்லை என்றபடி.

10. காலனைச் சீறிய கழற்காலனே வணக்கம் என்று தொடங்குகிறது இந்தப் பாடல். மூலத் தொகுதியின் முதல்வன், ஒற்றியூர் உடையோன், அணையுந்தோறும் இன்பந் தருகிற அமுதம், பந்தம் பிறிதில்லாத ஈசன், ஆர்வம் செய்வார்க்கு நெருங்கியவன், தீராத இன்சுவைத்தேன், வஞ்சனையாளரை மறந்தவன், நஞ்சினை அமுதாகக் கொண்டவன், உலகின் வித்து என்றெல்லாம் இயல்புகளை அடுக்கிப் பேசுகிறார் அடிகள்.

தீபம் ஆகிய சிவனே போற்றி
மாலோய் போற்றி மறையோய் போற்றி

மேலோய் போற்றி வேதிய போற்றி
சந்திர போற்றி தழலோய் போற்றி
இந்திர போற்றி இறைவ போற்றி
அமரா போற்றி அழகா போற்றி
குமரா போற்றி கூத்தா போற்றி

பொருளே போற்றி போற்றி என்றுஉனை
நாத்தழும்பு இருக்க நவிற்றின் அல்லது
ஏத்துதற்கு உரியோர் யார்இரு நிலத்தே.

---

பண்புகளை எல்லாம் ஒவ்வொன்றாகச் சொல்லி அர்ச்சிப்பதை யல்லாமல் ஏத்துதற்குரிய வல்லமை உடையோர் இந்த உலகில் யாருமே இல்லை.

மனவாக்கினில் தட்டாமல் நிற்கும் பரம்பொருளை, அதன் பண்புகளை மனத்தால் எண்ணுவதும், வாக்கினால் சொல்லுவதும், மனித முயற்சிகளாம். இவற்றுக்கு அடங்கி நிற்பதில்லை இறைவன். என்றாலும் உடம்பைக் கடந்து நிற்பவன் உடம்புக்குள்ளேயே உறைகிறான் அல்லவா? அவ்வாறே அறிவுக்கு அப்பாற்பட்ட பேரறிவை அறிவுக்கு அறிவும், உணர்வுக்கு உணர்வுமாகிய நிலையிலே வழிபடுவதே சித்தர்கள் கூறுகிற ஞானக்கல்வியாகும்!

# இன்னும் சில பாடல்கள்

பட்டினத்தார் அருளியவை என்று வழங்குகிற இன்னும் சில பாடல்களை இந்த ஆய்வின் அங்கமாக இப்போது காண முனைகிறோம்.

இந்தப் பாடல்களைச் சித்தர் இலக்கியமாகவும், கவிதைப் பண்புள்ள புனுவல்களாகவும் பார்ப்பதற்குமுன்பு ஒரு கருத்தை இங்கே வற்புறுத்த வேண்டுவது அவசியமாகும்.

'பிறன்மனை நயவாமை' என்று திருவள்ளுவர் ஓர் அதிகாரம் செய்தார். இதற்கு அவசியம் உண்டு. ஏனென்றால் பாவ புண்ணியம் என்ற அறநோக்கு ஒரு புறமிருக்க, மனித சமுதாய நெறி என்று ஒன்றைப் பாதுகாக்க வேண்டியது அறமாகும். சமுதாயக் கட்டுப்பாடுகள்தாம் மனித சமுதாயத்தை விலங்கு நிலையிலிருந்து உயர்த்தி, மானுட வாழ்வு என்ற கூட்டுவாழ்வை வாழ்வதற்குரிய நெறிமுறைகளைப் பேணுகின்றன. இந்தக் கட்டுப்பாட்டிலே 'பிறன்மனை நயவாமை' என்பது ஒரு தனி அதிகாரமாக அமைந்தது முக்கியமேயாகும்.

ஆனால், 'பெண்வழிச் சேறல்' என்றும், 'வரைவின் மகளிர்' என்றும் தனித்தனியாக இரண்டு வெவ்வேறு அதிகாரங்களை வகுத்து இருபது குறட்பாக்களை வழங்குவதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது? எண்ணிப் பார்க்கவேண்டும்.

சமுதாயத்தில் இல்லறம் ஓர் அங்கமாக உள்ளது. அவ்வாறே காதலும் காமக்கிழத்தியர், காதற் பரத்தையர், என்னும் அமைப்புகளும் இலக்கணம் பெறுகின்றன. என்றாலும் பெண்வழிச் சேறலையும் வரைவின் மகளிரையும் அத்தனை வலிமையோடு கண்டித்துப் பாடுவதற்குக் காமத்துப்பாலின் ஆசிரியர் ஏன் முன்வந்தார்?

ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

பெண்களை இழிவு படுத்தவேண்டும் என்பதன்று வள்ளுவரின் நோக்கம்! பெண்வழிச் சேறலின் விளைவுகளை இயம்புவது அறத்தின் பாற்பட்டது என்பதை மறப்பதற்கில்லை. அவ்வாறுதான் வரைவின் மகளிரது உறவு எத்தனை தீங்கானது என்பதை மேற்சென்று இடித்துக் கூறவேண்டியதும் அறநூல் செய்வோனது கடமையாகும்.

திருவள்ளுவர் பெண்மையை இழிவுபடுத்தி விட்டார் என்று இந்த இரண்டு அதிகாரங்களையும் வைத்துக் கொண்டு தீர்ப்புச் சொல்லி விடலாமா? காமத்துக்கு என்று ஒரு தனியான பாலே செய்த கவிஞர் பெருமான் இந்த இரண்டு அதிகாரங்களிலும் இருபது குறட்பாக்களிலே அழுத்தந் திருத்தமாகச் சில இயல்புகளை ஆணி அடித்தாற் போலே அடித்து இருக்கிறார். இந்தப் பாடல்கள் பெண்களிடம் கொண்ட வெறுப்பினால் வந்தவை என்று எண்ணிவிடக் கூடாது!

இவ்வாறே பட்டினத்தார் பாடல்களில், அவற்றிலும் முக்கியமாக, நாம் காணப்போகும் பாடல்களில் பெண்ணுறவு பற்றியும் பெண்களின் இயல்புகள் குறித்தும் வன்மையான பாடல்கள், கடுமையான, கசப்பான, மைகளுடன் பாடப் பெற்றிருப்பதைப் பார்க்கலாம்.

இந்தப் பாடல்களையும் வன்கண்மை என்றோ, கொடுமை என்றோ எண்ணிவிடலாகாது. சில உண்மைகளை மனத்தில் பதிய வைப்பதற்குக் ஞர்கள் சில கவி-உத்திகளைக் கையாண்டு தீமையில் வெறுப்பும் மையில் விருப்பும் உண்டாக்குவார்கள். இப்படிச் செய்வதும் ஒரு கவி தருமமேயாகும்.

இத்தகைய கவிஅறம் கொண்ட பட்டினத்தடிகளின் பாடல்கள் சில இனி வருகின்றன.

## 1. கோயில் திருஅகவல்

நினைமின் மனனே! நினைமின் மனனே!
சிவபெரு மானைச் செம்பொன்அம் பலவனை
நினைமின் மனனே! நினைமின் மனனே!
அலகைத் தேரின் அலமரு காலின்
உலகப்பொய் வாழ்க்கையை உடலைஓம் பற்க
பிறந்தன இறக்கும் இறந்தன பிறக்கும்
தோன்றின மறையும் மறைந்தன தோன்றும்
பெருத்தன சிறுக்கும் சிறுத்தன பெருக்கும்
உணர்ந்தன மறக்கும் மறந்தன உணரும்
புணர்ந்தன பிரியும் பிரிந்தன புணரும்
அருந்தின மலமாம் புனைந்தன அழுக்காம்
உவப்பன வெறுப்பாம் வெறுப்பன உவப்பாம்
என்றுஇவை அனைத்தும் உணர்ந்தனை அன்றியும்
பிறந்தன பிறந்தன பிறவிகள் தோறும்

---

1. பதினோராந் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ள பட்டினத்தடிகளின் பாடல்களை முன்பு பார்த்தோம். இந்தப் பாடல்கள் தமது போக்கிலும் பாங்கிலும் பிற பக்திப் பாடல்களிலிருந்து வேறுபட்டவை. காரைக்கால் அம்மையாரையும் மற்ற சித்தர்களையும் போல இந்தப் பனுவல்களும் சித்தர் இலக்கியப் பண்பு என்னும் தனித்தன்மையைத் தம்முள் பொதிந்து மிளிர்கின்றன.

இந்தப் பாடல்களைப் போலவே பதினோராந் திருமுறையில் சேர்க்கப் பெறாத பட்டினத்தடிகளின் பாடல்கள் வேறு சில தொகுப்புக்களிலே காணப்பெறுகின்றன. மூன்று பட்டினத்தாரா அல்லது இரண்டா அல்லது ஒரே ஞானிதானா என்ற ஆய்வுக்கு வேண்டிய புறச்சான்றுகளோ, வேறு ஆதாரங்களோ போதிய அளவில் இல்லை என்று முன்பு குறிப்பிட்டேன். இதுபற்றிய ஆய்வு ஒருபுறம் இருக்க, இந்தப் பாடல்களிலே சித்தரின் பண்பமைந்த பாடல்களின் உருக்கமும் கவிப்பண்பும் இணைந்து விளங்குவதால் அவற்றையும் பதினோராந் திருமுறைப் பாடல்களை ஒட்டியே காண்பது சாலப் பொருத்தம் என்று கருதுகிறேன்.

தனிப்பாடற் தொகுப்புக்களிலும், சில சில்லறைத் தொகை நூல்களிலும் காணப்படுகிற பட்டினத்தார் பாடல்களிலே இந்தக் கோயில் திருவகவல் மிகவும் முக்கியமானதாகும். 'அம்பரநாதனாகிய இறைவனை மனமே நீ நினை, நினை' எனத் தொடங்குகிறது இப்பனுவல். இதன் கருத்தும் பொருண்மையும் பதினோராந் திருமுறைப் பாடல்கள் சிலவற்றோடு ஒப்பு நோக்கத் தக்கனவே. சொற்றொடர் கூடச் சில இடங்களில் அவ்வாறே ஒத்துவருகிறது.

கொன்றனை அனைத்தும் அனைத்தும்நினைக் கொன்றன
தின்றனை அனைத்தும் அனைத்தும்நினைத் தின்றன
பெற்றனை அனைத்தும் அனைத்தும்நினைப் பெற்றன
ஓம்பினை அனைத்தையும் அனைத்தும்நினை ஓம்பின
செல்வத்து இருந்தனை தரித்திரத்து அழுங்கினை

சுவர்க்கத்து இருந்தனை நரகில் கிடந்தனை
இன்பமும் துன்பமும் இருநிலத்து அருந்தினை
ஒன்றுஒன்று ஒழியாது உற்றனை அன்றியும்
புற்புதக் குரம்பை துச்சில் ஒதுக்கிடம்
என்னநின்று இயங்கும் இருவினைக் கூட்டைக்

கல்லினும் வலிதாக் கருதினை இதனுள்
பீளையும் நீரும் புறப்படும் ஒருபொறி
மீளும் குறும்பி வெளிப்படும் ஒருபொறி
சளியும் நீரும் தவழும் ஒருபொறி
உமிழ்நீர்க் கோழை ஒழுகும் ஒருபொறி

வளியும் மலமும் வழங்கும் ஒருபொறி
சலமும் சீயும் சரியும் ஒருவழி
உள்உறத் தொடங்கி வெளிப்பட நாறும்
சட்டகம் முடிவில் சுட்டஎலும்பு ஆகும்
உடல்உறு வாழ்க்கையை உள்உறத் தேர்ந்து

---

நீ கொன்றவை உன்னையும் கொன்றன. நீ தின்றவை உன்னையும் தின்றன. நீ பெற்றவை உன்னைப் பெற்றன. ஓம்பிய அனைத்தும் உன்னை ஓம்பின. சுவர்க்கத்தில் இருந்தாய். நரகத்திலும் கிடந்தாய்.

இவ்வாறு செல்கிறது பாடல். கோயில் நான்மணிமாலை என்ற பனுவலிலும், இதைப் போலவே பதினோராந் திருமுறையிலுள்ள திருக்கழுமல மும்மணிக்கோவையிலும் இதே வரிகளை நினைவூட்டுகிற பாடல்கள் வந்துள்ளன. சில இடங்களில் சொல்லாட்சியுங்கூட ஒத்த தன்மைத்தாய் உள்ளது.

இவ்வாறேதான் பதினோராந் திருமுறையில் பட்டினத்தார் இந்த யாக்கையின் இழிவைப் பாடுகிற அடிகளை நினைவூட்டும் சொல்லாட்சியும் பொருண்மையும் 'பீளையும் நீரும்...' என்று வரும் பகுதியிலே பார்க்கிறோம்.

பட்டினத்தடிகள் இந்த மனித யாக்கையை அவருக்கே உரிய தனித்தன்மையோடு பாடுகிறார். அவர்கொண்ட அருவருப்பு, பாடலைப் படிப்போருக்கும் ஏற்படுகிறவாறு 'கூடுவிட்டுக் கூடு பாய்கிறது' அந்த அற்புதக் கவியாற்றலின் செயல்!

கடிமலர்க் கொன்றைச் சடைமுடிக் கடவுளை
ஒழிவுஅருஞ் சிவபெரும் போக இன்பத்தை
நிழல்எனக் கடவா நீர்மையோடு பொருந்தி
எனதுஅற நினைவுஅற இருவினை மலம்அற
வரவொடு செலவுஅற மருள்அற இருள்அற

இரவொடு பகல்அற இகம்பரம் அறஒரு
முதல்வனைத் தில்லையுள் முளைத்துஎழும் சோதியை
அம்பலத்து அரசனை ஆனந்தக் கூத்தனை
நெருப்பினில் அரக்கென நெக்குநெக்கு உருகித்
திருச்சிற்றம் பலத்து ஒளிரும் சிவனை

நினைமின் மனனே! நினைமின் மனனே!
சிவபெரு மானைச் செம்பொன்அம் பலவனை
நினைமின் மனனே! நினைமின் மனனே! 1

காதளவு ஓடிய கலகப் பாதகக்
கண்ணியர் மருங்கில் புண்உடல் நாடும்
காதலும் கருத்தும்அல் லால்நின் இருதாள்
பங்கயம் சூடப் பாக்கியம் செய்யாச்

சங்கடம் கூர்ந்த தமியேன் பாங்குஇருந்து
அங்கோடு இங்கோடு அலமரும் கள்வர்
ஐவர் கலகம்இட்டு அலைக்கும் கானகம்
சலமலப் பேழை இருவினைப் பெட்டகம்
வாதம்பித் தம்கோழை குடிபுகும் சீறூர்

ஊற்றைப் புன்தோல் உதிரக் கட்டளை
நாற்றப் பாண்டம் நான்முழத்து ஒன்பது
பீற்றல் துண்டம் பேய்ச்சுரைத் தோட்டம்

---

சுட்ட எலும்பாகச் சாம்பலாகப் போகிற இந்த உடல்உறு வாழ்வை உள்உறத் தேர்ந்து, சிவபோக இன்பத்தை நாடு மனமே என்கிறார். நெருப்பினில் அரக்கு உருகுவதுபோல் தில்லையில் முளைத்தெழுந்த சோதியிலே உருகிவிடவேண்டும் என்பதே ஞானக்கவிஞரின் மனக்கருத்து அதுகாரணம் பற்றியே 'நினைமின் மனனே நினைமின் மனனே' என்று அடுக்கியடுக்கிப் பாடுகிறார்.

2. காதளவு ஓடிய கண்கள். அவர்களைப் பாதகக் கண்ணியர் என்கிறார் துறவி! அதோடு நிறுத்தவில்லை. இந்த உடம்பு ஐவர் கலகமிட்டு அலைக்கழிக்கிற காடு; சலமலப் பேழை. மேலும் அடுக்கிக் கொண்டே போகிறார் கவிநடையிலே.

அடலைப் பெரிய சுடலைத் திடருள்
ஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரம்

ஓயா நோக்குஇடம் ஓடும் மரக்கலம்
மாயா விகாரம் மரணப் பஞ்சரம்
சோற்றுத் துருத்தி தூற்றும் பத்தம்
காற்றில் பறக்கும் கானப் பட்டம்
விதிவழித் தருமன் வெட்டும் கட்டை

சதுர்முகப் பாணன் தைக்கும் சட்டை
ஈமக் கனலில் இடுசில விருந்து
காமக் கனலில் கருகும் சருகு
கிருமி கிண்டும் கிழங்கஞ் சருமி
பவக்கொழுந்து ஏறும் வைக்கொழு கொம்பு

மணமாய் நடக்கும் வடிவின் முடிவில்
பிணமாய்க் கிடக்கும் பிண்டம் பிணமேல்
ஊரில் கிடக்க ஒட்டா உபாதி
கால்எதிர் குவித்த பூளை காலைக்
கதிர்எதிர்ப் பட்ட கடும்பனிக் கூட்டம்

அந்தரத்து இயங்கும் இந்திர சாபம்
அதிரும் மேகத்து உருவின் அருநிழல்
நீரில் குமிழி நீர்மேல் எழுத்து
கண்துயில் கனவில் கண்ட காட்சி
அதனினும் பொல்லா மாயக்களங்கம்

அமையும் அமையும் பிரானே அமையும்
இமய வல்லி வாழியென்று ஏத்த
ஆனந்தத் தாண்டவம் காட்டி
ஆண்டுகொண்டு அருள்கைநின் அருளினுக்கு அழகே. 2

---

'ஆசைக்கயிற்றில் ஆடும் பம்பரம்' என்ற வரி எத்தனை கவியழகோடு வருகிறது! அதுபோலவே ஒவ்வொரு வரியில் வெறுப்பிலிருந்து கவிதை பிறக்கும் முறைக்குச் சான்றாக, எழிலோடு 'காற்றில் பறக்கும் கானப் பட்டம்' போன்ற வரிகள் வருகின்றன. ஆம்; ஈடுபாடும் காதலுந்தானா கவிக்கு வித்து? வெறுப்பும் அருவருப்புமே கவிக்கு வித்தாக விளைகின்றன!

நான்முகன் என்னும் தையற்காரன் தைத்த சட்டையே இந்த உடம்பு என்பதில் எத்தனை கவியழகு! அந்தரத்திலே தெரிகிற வானவில் இந்த உடம்பு! அத்தனை நிலையாமை இதற்கு. ஆனால் அது அந்தரத்தில் தெரிவது! உடனே மறைவது! 'கண்துயில் கனவில் கண்ட காட்சி' என்பது போன்ற பல அடிகள் பட்டினத்தடிகளின் ஞானக்கவி மாண்புக்கு எழிற் சான்றுகள்!

பாற்கடல் கடையப் படும்கடு வெண்ணெயைத்
திருமிடற்று அடக்கிய சிவனே அடைக்கலம்
அடங்கலும் அடக்கிடும் கடும்கொலைக் காலனைக்
கால்எடுத்து அடக்கிய கடவுள்நின் அடைக்கலம்

உலகுஅடங் கலும்படைத்து உடையவன் தலைபறித்து
இடக்கையில் அடக்கிய இறைவநின் அடைக்கலம்
செய்யபொன் அம்பலச் செல்வநின் அடைக்கலம்
ஐயநின் அடைக்கலம் அடியன்நின் அடைக்கலம்
மனவழி அலைந்திடும் கனவெனும் வாழ்க்கையும்

விழுப்பொருள் அறியா வழுக்குறு மனனும்
ஆணவ மலத்துஉதித்து அளைந்துஅதில் உளைந்திடும்
நிணவைப் புழுவென நெளித்திடு சிந்தையும்
படிறும் பாவமும் பழிப்புறு நினைப்பும்
தவறும் அழுக்காறும் இவறுபொச் சாப்பும்

கவடும் பொய்யும் சுவடும் பெருஞ்சினம்
இகலும் கொலையும் இழிப்புஉறு புன்மையும்
பகையும் அச்சமும் துணிவும் பனிப்பும்
முக்குண மடமையும் ஐம்பொறி மயக்கமும்
இடும்பையும் பிணியும் இடுக்கிய ஆக்கையை

---

3. கடுவெண்ணெய் – நஞ்சாகிய வெண்ணெயை. நச்சு விடத்தை வெண்ணெய் போன்று உண்டதால் இவ்வாறு கூறினார் என்க.

உலகு அடங்கலும் படைத்து உடையவன் தலை – அயன்தலை. விழுப்பொருள் – உறுதிப் பொருளாகிய வீடுபேறு. விழுக்குறு – வழுக்கிக்கொண்டு போய்விடுகிற.

இந்த வாழ்க்கை என்பது கனவு என்பது மட்டுமன்று. மனத்தின் வழியே அலைந்து செல்கிற கனவு இது. மனத்தின் வழி எத்தகையது என்பதை மேல்வரும் அடிகள் விரிவாக இயம்புகின்றன.

முக்குண மடமையும் ஐம்பொறி இயக்கமுமே இந்த உடம்பின் செயல்கள். இந்த உடற்கூட்டுக்குள்ளே உயிராகியப் பறவை சிறை வைக்கப்பட்டுள்ளது.

இந்த உடம்பின் இழிவை வழக்கம்போல நம் பட்டினத்தடிகள் விரிவாக மொழியத் தொடங்குகிறார்.

உயிர்எனும் குருகுவிட்டு ஓடும் குரம்பையை
எலும்பொடு நரம்புகொண்டு இடையிற் பிணித்துக்
கொழுந்தசை வேய்ந்தும் ஒழுக்குவிழும் குடிலைச்
செழும்புஎழு உதிரச் சிறுபுழுக் குரம்பையை
மலஉடல் குடத்தைப் பலவுடல் புட்டிலைத்

தொலைவிலாச் சோற்றுத் துன்பக் குழியைக்
கொலைப்படைக் கலம்பல கிடக்கும் கூட்டைச்
சலிப்புறு வினைப்பல சரக்குக் குப்பையைக்
கோள்சரக்கு ஒழுகும் பீறல் கோணியைக்
கோபத் தீமூட்டும் கொல்லன் துருத்தியை

ஐம்புலப் பறவை அடையும்பஞ் சரத்தைப்
புலராக் கவலை விளைமரப் பொதும்பை
ஆசைக் கயிற்றில் ஆடுபம் பரத்தைக்
காசில் பணத்தில் சுழலும்காற் றாடியை
மக்கள் வினையின் மயங்கும் திகிரியைக்

கடுவெளி உருட்டிய சகடக் காலைப்
பாவச் சரக்கொடு பவக்கடல் புக்குக்
காமக் காற்று எடுத்து அலைப்பக்
கெடுவழிக் கரைசேர் கொடுமரக் கலத்தை
இருவினை விலங்கொடும் இயங்குபுற் கலனை

நடுவன்வந்து அழைத்திட நடுங்கிடும் யாக்கையைப்
பிணமெனப் படுத்தியான் புறப்படும் பொழுதுநின்
அடிமலர்க் கமலத்துக்கு அபயம்நின் அடைக்கலம்
வெளியிடை உரும்இடி இடித்தென வெறித்துஎழும்
கடுநடை வெள்விடைக் கடவுள்நின் அடைக்கலம் 3

---

ஏன் இத்தனை சொல்லவேண்டும் என்று கேட்கலாம். இந்த உலக இச்சையில் அருவருப்பு ஏற்படவேண்டும்; இந்தப் புலன்கள் திருவடியில் ஒன்றவேண்டும் என்பதே நோக்கமாகும்.

'ஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரம்' என்ற சொற்றொடர் இரண்டாம் பாடலிலும் பயின்று வந்துள்ளது.

நடுவன் – எமன். இடிஇடித்தாற் போல ஓசையுடன் எழுகிற எருது என்கிறார் விடை ஊர்தியை!

இமையா நாட்டத்து இறையே அடைக்கலம்
அடியார்க்கு எளியாய் அடைக்கலம் அடைக்கலம்
மறையவர் தில்லை மன்றுள்நின்று ஆடிக்
கருணைமொண்டு அலையெறி கடலே அடைக்கலம்
தேவரும் முனிவரும் சென்றுநின்று ஏத்தப்
பாசிழைக் கொடியொடு பரிந்தருள் புரியும்
எம்பெரு மான்நின் இணைஅடிக்கு அபயம்
அம்பலத்து அரசே அடைக்கலம் உனக்கே! [4]

## 2. கச்சித் திருவகவல்

திருமால் பயந்த திசைமுகன் அமைத்து
வரும்ஏழ் பிறவியும் மானுடத்து உதித்து
மலைமகள் கோமான் மலர்அடி இறைஞ்சிக்
குலவிய சிவபதம் குறுகாது அவமே
மாதரை மகிழ்ந்து காதல்கொண் டாடும்
மானுடர்க்கு எல்லாம் யான்எடுத் துரைப்பேன்
விழிவெளி மாக்காள் தெளிவுறக் கேண்மின்
முள்ளும் கல்லும் முயன்று நடக்கும்
உள்ளங் காலைப் பஞ்சென உரைத்தும்
வெள்ளெலும் பாலே மேவிய கணைக்கால்
துள்ளும் வரால்எனச் சொல்லித் துதித்தும்
தசையும் எலும்பும் தக்கபுன் குறங்கை
இசையும் கதலித் தண்டென இயம்பியும்
நெடுமுடை தாங்கி நின்றிடும் இடையைத்

---

4. அம்பலத்தரசுக்கு அடைக்கலம் புகுந்து பாடுகிறார் அடிகள். இமையா நாட்டத்து இறைவன் என்றும், அடியார்க்கு எளியவன் என்றும், கருணை மொண்டு அலைவீசுகிற கடல் என்றும் கூறி, அம்மையோடு நின்று அருள்கிற அம்பலத்தரசனுக்கு அடைக்கலம் என்று நிறைவோடு முடிக்கிறார் இந்தப் பாடலை.

5. திருமால் அயனைத் தந்தான். அவன் அமைத்த பிறவி இது. இந்த மனிதப் பிறவியில் ஞான சாதனமாகச் சித்தர்கள் கண்ட இரகசிய மையங்கள் நிரம்பிய இந்த மனித உடம்பைப் பயன்படுத்துகிற முறைகளைக் கற்காமல், வீணடிக்கிற செயல் எத்தனை மடமையானது!

பெண் போகத்துக்காகவேதான் இந்த உடம்பு பயன்படுமா?

சிவபதம் சேராது மாதரார் இச்சையில் காதல் கொண்டாடுகிற மானுடரை நோக்கிப் பேசுகிறார் இந்த ஞானி.

துடிபிடி என்று சொல்லித் துதித்தும்
மலமும் சலமும் வழும்பும் திரையும்
அலையும் வயிற்றை ஆல்இலை என்றும்
சிலந்தி போலக் கிளைத்து முன்எழுந்து
திரண்டு விம்மிச் சீப்பாய்ந்து ஏறி

உகிரால் கீற உலர்ந்துஉள் உருகி
நகுவார்க்கு இடமாய் நான்று வற்றும்
முலையைப் பார்த்து முளரிமொட்டு என்றும்
குலையும் காமக் குருடர்க்கு உரைப்பேன்
நீட்டவும் முடக்கவும் நெடும்பொருள் வாங்கவும்

ஊட்டவும் பிசையவும் உதவிஇங்கு இயற்றும்
அம்கையைப் பார்த்துக் காந்தள்என்று உரைத்தும்
வேர்வையும் அழுக்கும் மேவிய கழுத்தைப்
பாரினில் இனிய கமுகுஎனப் பகர்ந்தும்
வெப்பும் ஊத்தையும் மேவிய வாயைத்

துப்பு முருக்கின் தூய்மலர் என்றும்
அன்னமும் கறியும் அசைவிட்டு இறக்கும்
முன்னிய பல்லை முத்தென மொழிந்தும்
நீரும் சளியும் நின்றுநின்று ஒழுகும்
கூறிய மூக்கைக் குமிழ்எனக் கூறியும்

தண்ணீர் பீளை தவிராது ஒழுகும்
கண்ணைப் பார்த்துக் கழுநீர் என்றும்
முள்ளும் குறும்பி ஒழுகும் காதை
வள்ளைத் தண்டின் வளம்என வாழ்த்தியும்
கையும் எண்ணெயும் கலவாது ஒழியின்

---

கவிஞர்கள் வருணிக்கிற உவமையழகு மிகுந்த சொற்றொடர்களை மேற்கோள் காட்டுகிறார் அடிகள்! அவையெல்லாம் நிலையாமை என்ற கண்கொண்டு பார்க்கும்போது எத்தகையன என்பதை விளக்குகின்றன இந்த அடிகள்.

'காமக் குருடர்' என்று இந்தப் பாடலிலே வருவது 'Love is blind' என்ற ஆங்கில வாசகத்தை நினைவூட்டுகிறது. அதோடு உலக வாழ்வைத் துறந்த ஒரு ஞானி ஆசைக்கோட்டுக்கு மேல் நின்று பேசுகிற பொருண்மைகள் எத்தனை கசப்பாக இருந்தாலும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பட்டினத்தடிகளின் தமிழ்நடை பூசி மெழுகாமல் பேசுகிற மெய் நடையாகும். அதனால்தான், "கையும் எண்ணெயும்... சிக்கின் மயிரைத் திரள்முகில்" என்பன போன்ற சொற்கள் பொங்கி வருகின்றன.

வெய்ய அதரும் பேனும் விளையத்
தக்க தலையோட் டின்முளைத்து எழுந்த
சிக்கின் மயிரைத் திரள்முகில் என்றும்
சொற்பல பேசித் துதித்து நீங்கள்
நச்சிச் செல்லும் நரக வாயில்

தோலும் இறைச்சியும் துதைந்துசீப் பாயும்
காமப் பாழி கருவிளை கழனி
தூமைக் கடவழி தொலைபெறு வாயில்
எண்சாண் உடம்பு இழியும் பெருவழி
மண்பால் காமம் கழிக்கும் மறைவிடம்

நச்சிக் காமுக நாய்தான் என்றும்
இச்சித் திருக்கும் இடைகழி வாயில்
திங்கள் சடையோன் திருவருள் இல்லார்
தங்கித் திரியும் சவலைப் பெருவழி
புண்இது என்று புடவையை மூடி

உள்நீர் பாயும் ஓசைச் செழும்புண்
மால்கொண்டு அறியா மாந்தர் புகும்வழி
நோய்கொண்டு ஒழியா நுண்ணியர் போம்வழி
தருக்கிய காமுகர் சாரும் படுகுழி
செருக்கிய காமுகர் சேரும் சிறுகுழி

பெண்ணும் ஆணும் பிறக்கும் பெருவழி
மலம்சொரிந்து இழியும் வாயில் அருகே
சலம்சொரிந்து இழியும் தண்ணீர் வாயில்
இத்தை நீங்கள் இனிதென வேண்டா
பச்சிலை இடினும் பத்தர்க்கு இரங்கி

---

உணர்ச்சி வசப்படாமல் ஆழ்ந்து யோசித்தோமானால் "சொற்பல பேசித் துதித்து நச்சிச் செல்லும் நரக வாயில்" என்பதன் உட்பொருளை உணர்வோம்.

பாழி – பானை. கழனி – வயல். மறைவிடம் – ஒதுக்கிடம்.

மால்கொண்டு – மயக்கம் கொண்டு. தருக்கிய – ஆணவிகள் ஆசை மேலீட்டால் தவறிச் செல்கிற. காமுகர் – காமத் தீயில் வெந்து கொண்டிருப்போர்.

இத்தை நீங்கள் இனிதென வேண்டா – இப்படிப்பட்ட இழிதகைமையுடைய சிற்றின்பத்தை நீங்கள் இனிது என்று கொள்ள

மெச்சிச் சிவபத வீடுஅருள் பவனை
முத்தி நாதனை மூவா முதல்வனை
அண்டர் அண்டமும் அனைத்துள புவனமும்
கண்ட அண்ணலைக் கச்சியின் கடவுளை
ஏக நாதனை இணைஅடி இறைஞ்சுமின்
போக மாதரைப் போற்றுதல் ஒழிந்தே. 5

### 3. திரு ஏகம்ப மாலை

அறம்தான் இயற்றும் அவனிலும்
கோடி அதிகம் இல்லம்
துறந்தான் அவனில் சதகோடி
உள்ளத் துறவு உடையோன்
மறந்தான் அறக்கற்று அறிவோடு
இருந்துஇரு வாதனை அற்று
இறந்தான் பெருமையை என்சொல்லு
வேன்கச்சி ஏகம்பனே. 1

கட்டி அணைத்திடும் பெண்டிரும்
மக்களும் காலத்தச்சன்
வெட்டி முறிக்கும் மரம்போல்
சரீரத்தை வீழ்த்திவிட்டால்
கொட்டி முழக்கி அழுவார்
மயானம் குறுகி அப்பால்
எட்டி அடிவைப்ப ரோஇறை
வாகச்சி ஏகம்பனே. 2

---

வேண்டாம். விதம் விதமான மலர்களுக்குப் பதில் வெறும் பச்சிலை இட்டாலும் இரங்கி, அந்தப் பதர்களை மெச்சி, அவருக்குச் சிவபதம் தருகிற முத்திநாதனை இறைஞ்ச வேண்டும் என்று வருகிறது பாடல்.

கண்ட - அமைத்த, உளவாக்கிய.

1. இயல்பாக வாழ்க்கை வாழ்ந்துகொண்டு அறம் செய்கிறவனைக் காட்டிலும், கோடிப் பங்கு அதிக மதிப்புடையவன் இல்வாழ்வைத் துறந்தவன். அவனையும்விட நூறு கோடி உயர்ந்தவன், இந்தத் துறவைவிட உள்ளத் துறவு உடையவன். மறந்தான் அற - பாவம் நீங்கும்படி. இருவாதனை அற்று - இருவினைகளின் வாதனையு மில்லாமல்.

2. காலத்தை ஒரு தச்சன் என்கிறார். மரத்தச்சன்! அவன் வெட்டி முறிக்கிற மரந்தான் இந்த உடம்பு!

கைப்பிடி நாயகன் தூங்கையி
லேஅவன் கையைஎடுத்து
அப்புறம் தன்னில் அசையாமல்
முன்வைத்து அயல்வளவில்
ஒப்புடன் சென்று துயில்நீத்துப்
பின்வந்து உறங்குவாளை
எப்படிநான் நம்பு வேன்இறை
வாகச்சி ஏகம்பனே. 3

நல்நாரில் பூட்டிய சூத்திரப்
பாவைநல் நார்தப்பினால்
தன்னாலும் ஆடிச் சலித்திடு
மோஅந்தத் தன்மையைப்போல்
உன்னால் யானும் திரிவதுஅல்
லால்மற்று உனைப்பிரிந்தால்
என்னால் இங்கு ஆவதுண் டோஇறை
வாகச்சி ஏகம்பனே. 4

நல்லார் இணக்கமும் நின்பூசை
நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நிலைஉள
தோஅக முமபொருளும்
இல்லாளும் சுற்றமும் மைந்தரும்
வாழ்வும் எழில்உடம்பும்
எல்லாம் வெளிமயக் கேஇறை
வாகச்சி ஏகம்பனே. 5

---

3. சில தவறான இயல்புகளை இங்கே சீறுகிறார் பட்டினத்தடிகள். ஒழுக்கமும் மனைநலமும் இல்லாத மாதரின் செயலைச் சற்றுக் கடுமையாகவே சித்திரிக்கிறது இந்தப் பாடல். உண்மைதான், ஆனால், கொடிய உண்மை அது.

4. நாரிலே பிணைத்த கூத்துப்பாவை போன்று பின்னால் ஆட்டு வோனுடைய இயக்கத்தில் ஆடுகிறது இந்த உடம்பு! நார் அறுந்து விட்டால் ஆடிக் கீழே விழுந்துவிடுகிற அந்தப் பாவையாகிய பொம்மை போலவே, கச்சி ஏகம்பனே, உன்னைப் பிரிந்தால் என்ன ஆவது?

5. நல்லார் இணக்கம் - பெரியாரைத் துணைக்கோடல். வெளிமயக்கு - மயக்கமான புறத்தோற்றம்.

பொல்லா தவன்நெறி நில்லா
தவன்ஐம் புலன்கள்தீமை
வெல்லா தவன்கல்வி கல்லா
தவன்மெய் அடியவர்பால்
செல்லா தவன்உண்மை சொல்லா
தவன்நின் திருவடிக்கன்பு
இல்லா தவன்மண்ணில் ஏன்பிறந்
தேன்கச்சி ஏகம்பனே. 6

பிறக்கும் பொழுது கொடுவந்தது
இல்லை பிறந்துமண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவது
இல்லை இடைநடுவில்
குறிக்கும்இச் செல்வம் சிவன்தந்தது
என்று கொடுக்கஅறியாது
இறக்கும் குலாமருக்கு என்சொல்லு
வேன்கச்சி ஏகம்பனே. 7

அன்ன விசாரம் அதுவே
விசாரம் அதுஒழிந்தால்
சொன்ன விசாரம் தொலையா
விசாரம்நல் தோகையரைப்
பன்ன விசாரம் பலகால்
விசாரம்இப் பாவிநெஞ்சுக்கு
என்ன விசாரம்வைத் தாய்இறை
வாகச்சி ஏகம்பனே. 8

---

6. நெறிநில்லாதவன் – நன்னெறியில் ஒழுகாதவன். மெய் அடியவர் பால் செல்லாதவன் – மெய்யடியாருடைய தொடர்பில்லாதவன். இப்படிப்பட்ட நான் ஏன் பிறந்தேன் என்றவாறு.

7. குலாமர் – பணத்துக்கு அடிமைகளான முட்டாள்கள். பிறந்த போதும் இறக்கும்போதும் கூட வருவதில்லை செல்வம்! அது சிவன் தந்தது! ஈவதற்காகவே தரப்பட்டது!

8. அன்ன விசாரம் – உணவுக் கவலை. அது ஒழிந்தால் – உணவுக்கு வழி உண்டாகிவிட்டால். சொன்ன விசாரம் – பணக்கவலை. சொன்னம் – தங்கம்.

கல்லாப் பிழையும் கருதாப்
பிழையும் கசிந்துஉருகி
நில்லாப் பிழையும் நினையாப்
பிழையும்நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப்
பிழையும் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்
வாய்கச்சி ஏகம்பனே. 9

மாயநட் போரையும் மாயா
மலம்என்னும் மாதரையும்
வீயவிட்டு ஓட்டி வெளியே
புறப்பட்டு மெய்அருளாம்
தாயுடன் சென்றுபின் தாதையைக்
கூடிப்பின் தாயைமறந்து
ஏயும்அதே நிட்டை என்றான்
எழிற்கச்சி ஏகம்பனே. 10

வரிக்கோல வேல்விழி யார்அனு
ராக மயக்கில்சென்று
சரிக்குஓது வேன்எழுத்து அஞ்சும்சொ
லேன்தமி யேன்உடலம்
நரிக்கோ கழுகு பருந்தினுக்
கோவெய்ய நாய்தனக்கோ
எரிக்கோ இரைஎதுக் கோஇறை
வாகச்சி ஏகம்பனே. 11

---

9. கல்லாப் பிழை – ஞானக்கல்வியைக் கல்லாத குற்றம். கருதா – நினையாத. உருகிநில்லா – உருக்கத்தோடு மனம் ஒன்றி நில்லாத.

10. வீயவிட்டு – விட்டுப் பிரிந்தொழியும்வண்ணம், உதறிவிட்டு. அருளாம் தாயின் கருணையினால் இறையாற்றல் என்கிற தாதையைக் கூடுதல் நிகழ்கிறது. இதுவே ஞானயோக சித்தர்கள் சொல்கிற ஒடுக்கம் என்னும் நிட்டையாகும்!

11. அனுராக மயக்கு – மோக மயக்கு. ஐந்தெழுத்தை ஒப்பனைக் காகச் சொல்வதன்றி, சொல்லும் நுட்பம் தெரிந்து சொல்வதில்லை என்றபடி.

காதுஎன்று மூக்குஎன்று கண்என்று
　　காட்டிஎன் கண்எதிரே
மாதுஎன்று சொல்லி வரும்மாயை
　　தன்னை மறலிவிட்ட
தூதுஎன்று எண்ணாமல் சுகம்என்று
　　நாடும்இத் தூர்ப்புத்தியை
ஏதுஎன்று எடுத்துரைப் பேன்இறை
　　வாகச்சி ஏகம்பனே. 12

ஊரும் சதம்அல்ல உற்றார்
　　சதம்அல்ல உற்றுப்பெற்ற
பேரும் சதம்அல்ல பெண்டீர்
　　சதம்அல்ல பிள்ளைகளும்
சீரும் சதம்அல்ல செல்வம்
　　சதம்அல்ல தேசத்திலே
யாரும் சதம்அல்ல நின்தாள்
　　சதம்கச்சி ஏகம்பனே. 13

சீறும் வினையது பெண்உரு
　　ஆகித் திரண்டுஉருண்டு
கூறும் முலையும் இறைச்சியும்
　　ஆகிக் கொடுமையினால்
பீறும் மலமும் உதிரமும்
　　சாயும் பெருங்குழிவிட்டு
ஏறும் கரைகண்டி லேன்இறை
　　வாகச்சி ஏகம்பனே. 14

---

12. மறலி விட்ட தூது - எமன் விட்ட தூது.

13. சதம் அல்ல - நிலையில்லை. இறைவனுடைய திருவடிப்பேறு ஒன்றே நிலையானது; வேறு எதுவும் நிலையில்லை என்றவாறு.

14. சீறும் வினையது - தாக்குவதற்காகச் சீறிவருகிற அந்த வினை தான். ஏறும் கரை - கடந்து ஏறுகிற கரை.

பொருளுடை யோரைச் செயலினும்
வீரரைப் போர்க்களத்தும்
தெருள்உடை யோரை முகத்தினும்
தேர்ந்து தெளிவதுபோல்
அருள்உடை யோரைத் தவத்தில்
குணத்தில் அருளில் கண்டால்அன்பில்
இருள்அறு சொல்லினும் காணத்
தகும்கச்சி ஏகம்பனே. 15

பருத்திப் பொதியினைப் போலே
வயிறுபருக் கத்தங்கள்
துருத்திக்கு அறுசுவை போடுகின்
றார்துறந் தோர்தமக்கு
வருத்தி அமுதுஇட மாட்டார்
அவரைஇம் மாநிலத்தில்
இருத்திக்கொண்டு ஏன்இருந் தாய்இறை
வாகச்சி ஏகம்பனே. 16

பொல்லா இருள்அகற் றும்கதிர்
கூகைஎன் புட்கண்ணினுக்கு
அல்லாய் இருந்திடும் ஆறுஒக்கு
மேஅறி வோர்உளத்தை
வல்லார் அறிவார் அறியார்
தமக்கு மயக்கம்கண்டாய்
எல்லாம் விழிமயக் கேஇறை
வாகச்சி ஏகம்பனே. 17

---

15. செல்வந்தர் என்றால் செயலிலே காட்டினால்தான்! இல்லையென்றால் ஏழைக்கும் அவருக்கும் வேறுபாடு இல்லையல்லவா? அவ்வாறே வீரம் என்பது எதற்காக? போரிடுவதற்கு! அறிவுத்தெளிவு உடையோரை முகம் காட்டும். அதுபோலவே அருள் உடையோர் யார், ஏமாற்றுகிறவர் யார் என்பதைத் தவத்தில், பண்பில், கருணையில், இருளற்ற ஞானமொழியில் கண்டு கொள்ளலாம்.

16. பருத்திப்பொதி – பஞ்சு மூட்டை. துருத்தி – விரிந்து சுருங்குகிற வயிறு.

17. இருளை ஓட்டுகிற சூரியன் ஆந்தையின் கண்ணுக்கு இருட்டாகவே தெரியும்! அதுபோலவே அறிஞர்களுடைய உள்ளமானது வல்லவர்களுக்கே புரியும். மூடர்களுக்கு மயக்கமே! எல்லாம் விதியின் மயக்கம்; அறிஞர்களின் தவறில்லை.

வாதுக்குச் சண்டைக்குப் போவார்
வருவார் வழக்கு உரைப்பார்
தீதுக்கு உதவியும் செய்திடு
வார்தினம் தேடிஒன்றும்
மாதுக்கு அளித்து மயங்கிடு
வார்விதி மாளும்மட்டும்
ஏதுக்கு இவர்பிறந் தார்இறை
வாகச்சி ஏகம்பனே. 18

ஓயாமல் பொய்சொல்வர் நல்லோரை
நிந்திப்பர் உற்றுப்பெற்ற
தாயாரை வைவர் சதிஆயி
ரம்செய்வர் சாத்திரங்கள்
ஆயார் பிறர்க்குஉப காரம்செய்
யார்தமை அண்டினார்க்குஒன்று
ஈயார் இருந்துஎன்ன போய்என்ன
காண்கச்சி ஏகம்பனே. 19

அப்புஎன்றும் வெண்மைய தாயினும்
ஆங்குஅந் நிலத்துஇயல்பாத்
தப்புஇன்றி யேகுண வேற்றுமை
தான்பல சார்தலினால்
செப்பில் அபக்குவம் பக்குவம்
ஆய்உள்ள சீவனிலும்
இப்படி யேநிற்பன் எந்தை
பிரான்கச்சி ஏகம்பனே. 20

---

18. வாதுக்கு – வழக்குக்காக. தீதுக்கு – தீய காரியத்துக்கு. விதி மாளும் மட்டும் – விதி முடியும் மட்டும், மரணம்வரை.

19. நிந்திப்பர் – நிந்தை செய்வார். வைவர் – ஏசுவார்கள். சதி – சூழ்ச்சி, வஞ்சனை. ஆயார் – கற்று ஆராயமாட்டார்கள்.

20. தண்ணீர் வெண்மைதான். அதாவது வேறு நிறம் இல்லை அதற்கு என்றவாறு. அப்படியிருந்தும் சார்கிற நிலத்தைப் பொறுத்து மண்ணின் நிறம் அது பெறுகிறது. அப்படித்தான் எந்தைபிரான் பக்குவிகளிடமும் அபக்குவிகளிடமும் நிற்கிறான்.

நாயாய்ப் பிறந்திடினும் நல்வேட்டை
ஆடி நயம்புரியும்
தாயார் வயிற்றில் நர்ராய்ப்
பிறந்துபின் சம்பன்னர்ஆய்க்
காயா மரமும் வறள்ஆம்
குளமும்கல் ஆவும்என்ன
ஈயா மனிதரை ஏன்படைத்
தாய்கச்சி ஏகம்பனே. 21

ஆற்றில் கரைத்த புளிஆக்
கிடாமல்என் அன்பைஎல்லாம்
போற்றித் திருஉளம் பற்றும்ஐ
யாபுரம் மூன்றுஎரித்துக்
கூற்றைப் பணிகொளும் தாள்உடை
யாய்குன்ற வில்உடையாய்
ஏற்றுக் கொடிஉடை யாய்இறை
வாகச்சி ஏகம்பனே. 22

பெண்ணாகி வந்ததுஒரு மாயப்
பிசாசம் பிடித்திட்டு என்னைக்
கண்ணால் வெருட்டி முலையால்
மயக்கிக் கடிதடத்துப்
புண்ணாம் குழிஇடைத் தள்ளிஎன்
போதப் பொருள்பறிக்க
எண்ணாது உனைமறந் தேன்இறை
வாகச்சி ஏகம்பனே. 23

---

21. ஒருநாய்கூட வேட்டையாடி உதவும். நயம் – உதவி, நன்மை. சம்பன்னர் – செல்வர்கள். காயாத. மரம் கனி தருமா? வறண்ட குளத்தில் தண்ணீர் ஏது? கல்லால் செதுக்கிய பசு பால் கறக்குமா? இவ்வாறே ஈயாத மனிதரின் தன்மையும்!

22. ஆற்றில் புளி கரைத்தால், அதை எடுத்துக் குழம்பு வைக்க முடியுமா? வீணாகியவாறுதான். தாள் உடையாய் – திருவடி உடையவனே. ஏற்றுக்கொடி – இடபக் கொடி.

23. எண்ணாது உனைமறந்தேன் – உன்னை நினையாமலே இருந்து மறந்தேனே.

நாஆர வேண்டும் இதம்சொல்லு
வார்உனை நான்பிரிந்தால்
சாவேன்என் றேஇருந்து ஒக்கஉண்
பார்கள்கை தான்வறண்டால்
போய்வாரும் என்று நடுத்தலைக்
கேகுட்டும் பூவையருக்கு
ஈவார் தலைவிதி யோஇறை
வாகச்சி ஏகம்பனே. 24

கல்லார் சிவகதை நல்லோர்
தமக்குக் கனவிலும்மெய்
சொல்லார் பசித்தவர்க்கு அன்னம்கொ
டார்குரு சொன்னபடி
நில்லார் அறத்தை நினையார்நின்
நாமம் நினைவில்சற்றும்
இல்லார் இருந்துஎன் இறந்துஎன்
புகல்கச்சி ஏகம்பனே. 25

வான்அமு தத்தின் சுவைஅறி
யாதவர் வண்கனியின்
தான்அமு தத்தின் சுவைஎண்ணல்
போலத் தனித்தனியே
தேன்அமு தத்தின் தெளிவாய
ஞானம் சிறிதுமில்லார்க்கு
ஈன்அமு தச்சுவை நன்றல்ல
வோகச்சி ஏகம்பனே. 26

---

24. வேண்டும் இதம் சொல்லுவார் – வேண்டியபடியெல்லாம் நல்மொழி பேசுவார்.

நாஆர – நாக்கு நிறைந்து. கை தான் வறண்டால் – நாம் ஏழையாகி விட்டால்.

25. கல்லார் சிவகதை – சிவன் தன்மைகளைக் கற்றுணரார். குரு சொன்னபடி நில்லார் – ஆசான் உபதேசத்தைக் கடைப்பிடிக்க மாட்டார்கள்.

26. வான் அமுதம் – விண்ணவர் உண்ட தேவாமிருதம்.

ஊற்றைச் சரீரத்தை ஆபாசக்
கொட்டிலை ஊன்பொதிந்த
பீற்றல் துருத்தியைச் சோறிடும்
தோற்பையைப் பேசரிய
காற்றில் பொதிந்த நிலையற்ற
பாண்டத்தைக் காதல் செய்தே
ஏற்றுத் திரிந்துவிட் டேன்இறை
வாகச்சி ஏகம்பனே. 27

சொல்லால் வரும்குற்றம் சிந்தனை
யால்வரும் தோடம்செய்த
பொல்லாத தீவினைப் பார்வையில்
பாவங்கள் புண்ணியநூல்
அல்லாத கேள்வியைக் கேட்டிடும்
தீங்குகள் ஆயவும்மற்று
எல்லாப் பிழையும் பொறுத்தருள்
வாய்கச்சி ஏகம்பனே. 28

முட்டற்ற மஞ்சளை எண்ணெயில்
கூட்டி முகம் மினுக்கி
மெட்டுஇட்டுப் பொட்டுஇட்டுப் பித்தளை
ஓலை விளக்கியிட்டுப்
பட்டப்பகலில் வெளிமயக்கே
செயும் பாவையர்மேல்
இட்டத்தை நீதவிர்ப் பாய்இறை
வாகச்சி ஏகம்பனே. 29

---

27. இந்த இழிவான உடம்பின் தன்மைகளை இச்சித்த மாபெரும் மடமையைச் சாடுகிறார் என்றபடி.

28. சொற்குற்றம், சிந்தனைக் குற்றம் என்றால் குற்றமான சொல், குற்றமான சிந்தனை என்று பொருள். தீவினைப் பார்வையும் குற்றமேயாகும். புண்ணியமற்ற நூற்கேள்வியும் தீங்குதான்.

29. பசப்பு என்றும் மயக்கு என்றும் வழங்குகிற சொற்களுக்கு உரை தருவது போலே இந்தப் பாடலின் பொருண்மை!

பிறந்துமண் மீதில் பிணியே
குடிகொண்டு பேரின்பத்தை
மறந்துசிற் றின்பத்தின் மேல்மய
லாகிப்புன் மாதருக்குள்
பறந்துஉழன் றேதடு மாறிப்பொன்
தேடிஅப் பாவையர்க்குஈந்து
இறந்திட வேபணித் தாய்இறை
வாகச்சி ஏகம்பனே. 30

பூதங்கள் அற்றுப் பொறிஅற்றுச்
சார்ஐம் புலன்கள்அற்றுப்
பேதங்குணம் அற்றுப் பேராசை
தான்அற்றுப் பின்முன்அற்றுக்
காதங் கரணங் களும்அற்று
ஆனந்தக் காட்சியிலே
ஏதம் களைந்துஇருப் பேன்இறை
வாகச்சி ஏகம்பனே. 31

நல்லாய் எனக்கு மனுஒன்று
தந்தருள் ஞானம்இலாப்
பொல்லா எனைக்கொன்று போடும்
பொழுதுஇயல் பூசைசெபம்
சொல்லார் நல்கோயில் நியமம்
பலவகைத் தோத்திரமும்
எல்லாம் முடிந்தபின் கொல்லுகண்
டாய்கச்சி ஏகம்பனே. 32

---

30. பெண்ணாசையினால் ஏற்படுகிற விளைவுகளைக் கூறுகிறது இந்தக் கவிமொழி.

31. மிக உயர்ந்த சித்தர் பாடல் இது. பூதஉணர்வு, பொறியுணர்வு, திசை உணர்வு ஆகிய எல்லாம் அற நின்ற நிலை என்பதே சித்தர் ஞானம்! ஏதம் களைந்த காட்சி என்பது அதுவேயாகும்.

32. தனது பொல்லாமை எத்தகையது என்பதைக் கடுமையோடு வெளியிட்டிருக்கிறார் இந்தப் பாடல்களிலே! பாவிகளின் நிலையிலிருந்து அவர்களின் குரலாகவே வருகிறது பாடல்.

சடக்கடத் துக்குஇரை தேடிப்
பலஉயிர் தம்மைக் கொன்று
விடக்கடித் துக்கொண்டு இறுமாந்
திருந்து மிகமெலிந்து
படக்கடித் தின்றுஉழல் வார்கள்
தம்மைக்கரம் பற்றிநமன்
இடக்குஅடிக் கும்பொழுது ஏதுசெய்
வார்கச்சி ஏகம்பனே. 33

நாறும் உடலை நரிப்பொதி
சோற்றினை நான்தினமும்
சோறும் கறியும் நிரப்பிய
பாண்டத்தைத் தோகையர்தம்
கூறும் மலமும் இரத்தமும்
சோரும் குழியில்விழாது
ஏறும் படிஅருள் வாய்இறை
வாகச்சி ஏகம்பனே. 34

சொக்குஇட்டு அரண்மனை புக்குஉள்
திருடிய துட்டர்வந்து
திக்குஉற்ற மன்னரைக் கேட்பது
போல்சிவ நிந்தைசெய்து
மிக்குக் குருலிங்க சங்கமம்
நிந்தித்து வீடுஇச்சிக்கும்
எக்குப் பெருத்தவர்க்கு என்சொல்லு
வேன்கச்சி ஏகம்பனே. 35

---

33. அறவாழ்க்கை வாழாத புல்லர்கள் கடைசி வேளையில் என்ன செய்வார்கள்? அந்தோ என்று வருகிறது கவிதை.

34. ஏறும்படி – கடைத்தேறும்படி.

35. ஏமாற்றி உள்ளே சென்று திருடிவிட்டுப் பிறகு மன்னரைக் கேட்பது எப்படி? குரு, லிங்கம், சங்கமம் மூன்றையும் நிந்தனை செய்துவிட்டு வீடுபேறு இச்சித்தால் எங்ஙனம் அது கைகூடும்?

விருந்தாக வந்தவர் தங்களுக்கு
அன்னம் மிகக்கொடுக்கப்
பொருந்தார் வளம்பெற வாழ்வார்நின்
நாமத்தைப் போற்றி நித்தம்
அருந்தா முலைபங்கர் என்னாத
பாதகர் அம்புவியில்
இருந்து ஆவது ஏதுகண் டாய்இறை
வாகச்சி ஏகம்பனே. 36

எல்லாம் அறிந்து படித்தே
இருந்தும் எமக்கு உள்ளபடி
வல்லான் அறிந்துளன் என்றுஉண
ராது மதிமயங்கிச்
சொல்லான் மலைந்துஉறு சூழ்விதி
யின்படி துக்கித்துப்பின்
எல்லாம் சிவன்செய லேஎன்பர்
காண்கச்சி ஏகம்பனே. 37

பொன்னை நினைந்து வெகுவாகத்
தேடுவர் பூவைஅன்னாள்
தன்னை நினைந்து வெகுவாய்
உருகுவர் தாரணியில்
உன்னை நினைந்திங்கு உனைப்பூசி
யாத உலுத்தர்எல்லாம்
என்னை இருந்துகண் டாய்இறை
வாகச்சி ஏகம்பனே. 38

---

36. அறம் செய்ய ஒண்ணாதவர்கள் உலகில் இருந்து என்ன பயன்? அவர்களுக்கும் நற்கதி இல்லை, பிறருக்கும் உதவி இல்லை!

37. எல்லாம் படித்துத் தெரிந்த நூலறிவு உண்டு. என்றாலும் சுகதுக்கங்களில் மனமும் மொழியும் இயங்கும்படி வாழ்ந்து, பிறகு 'எல்லாம் சிவன் செயல்' என்று வாய் சொன்னால் எப்படி?

38. பொன்னாசை, பெண்ணாசை இரண்டுக்கும் ஈடுகொடுத்து உன்னை நினையாத பாவிகள் இருந்து என்ன?

கடுஞ்சொல்லின் வம்பரை ஈனரைக்
குண்டரைக் காமுகரைக்
கொடும்பாவ மேசெயும் நிர்மூடர்
தம்மைக் குவலயத்து
நெடும்பனை போல வளர்ந்து
நல்லோர்தம் நெறியறியா
இடும்பரை ஏன்வகுத் தாய்இறை
வாகச்சி ஏகம்பனே. 39

கொன்றேன் அநேக உயிரைஎல்
லாம்பின்பு கொன்றுகொன்று
தின்றேன் அதுஅன்றியும் தீங்குசெய்
தேன்அது தீர்களன்றே
நின்றேன் நின்சன்னிதிக் கேஅத
னால்குற்றம் நீ பொறுப்பாய்
என்றே உனைநம்பி னேன்இறை
வாகச்சி ஏகம்பனே. 40

## 4. திருஏகம்ப விருத்தம்

அன்னை எத்தனை எத்தனை அன்னையோ
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ
பின்னை எத்தனை எத்தனை பெண்டிரோ
பிள்ளை எத்தனை எத்தனை பிள்ளையோ
முன்னை எத்தனை எத்தனை சென்மமோ
மூடன் ஆய்அடி யேனும் அறிந்திலேன்
இன்னம் எத்தனை எத்தனை சன்மமோ
என்செய் வேன்கச்சி ஏகம்ப நாதனே.

---

39. பனைமரம் போல வளர்ந்திருக்கிறார்கள். நல்லோர்களுடைய நெறி தெரியாத இவர்களைக் கடவுளே ஏன் படைத்தாய்?

40. உயிர்க்கொலை செய்தேன், புலால் உண்டேன், இந்தப் பாவம் அனைத்தும் தீர்க்க உன்னை அண்டினேன் – இவ்வாறு வருகிறது பாடல். பாவிகளின் நிலையைத் தன்மீது ஏற்றிப் பாடியது என்க.

இந்தப் பாடல் முன்பிறவிகளின் அனுபவங்களை உள்ளடக்கிப் பாடியது. எத்தனை பிறவிகள் இதற்கு முன்பு நாம் எடுத்தோமோ? அந்தப் பிறவிகள் அனைத்திலும் தாய்மார்கள் எத்தனை, தந்தையர் எத்தனை, பெண்டிர் எத்தனை, பிள்ளைகள் எத்தனை, எனக்குத் தெரியவில்லை.

## 5. திருத்தில்லை முதலிய திருவூர்களில் திருவாய் மலர்ந்தருளியவை

### 1. திருத்தில்லை

காம்புஇணங் கும்பணைத் தோளார்க்கும்
பொன்னுக்கும் காசினிக்கும்
தாம்பிணங் கும்பல ஆசையும்
விட்டுத்தனித் துச்செத்துப்
போம்பிணம் தன்னைத் திரள்ஆகக்
கூடிப்புரண்டு இனிமேல்
சாம்பிணம் கத்துதுஐ யோஎன்செய்
வேன்தில்லைச் சங்கரனே. 1

சோறுஇடும் நாடு துணிதரும்
குப்பைதொண்டு அன்பரைக் கண்டு
ஏறிடும் கைகள் இறங்கிடும்
தீவினை எப்பொழுதும்
நீறுஇடும் மேனியர் சிற்றம்
பலவர் நிருத்தம் கண்டால்
ஊறிடும் கண்கள் உருகிடும்
நெஞ்சம்என் உள்ளமுமே. 2

---

1. பெண்ணுக்கும் பொன்னுக்கும் மண்ணுக்கும் ஆசைப்பட்டு, இப்போது அத்தனையும் இங்கே விட்டுவிட்டுத் தனியே செல்கிறது பிணம்! அதைச் சுற்றிக் கூட்டமாகக் கூடி, இனிமேல் சாகக்கூடிய பிணங்கள் கத்துகின்றன!

2. நாடு உணவு தருகிறது. குப்பையில் துணி கிடைக்கிறது. அன்பரைக் கண்டு கைகள் கூப்புகின்றன. தீவினை இறங்குகிறது. திருநீறு அணிந்த மேனியர், சிற்றம்பலவருடைய நட்டம் கண்டால் கண்ணீர் ஊறிவருகிறது, நெஞ்சம் உருகுகிறது! இதுவே சித்தர் கூறுகிற ஞானானந்தம்!

அழலுக்குள் வெண்ணெய் எனவே
உருகிப்பொன் அம்பலத்தார்
நிழலுக்குள் நின்று தவம்உஞற்
றாமல்நிட் டூரமின்னார்
குழலுக்கு இசைந்த வகைமாலை
கொண்டுகுற் றேவல்செய்து
விழலுக்கு முத்துலை இட்டுஇறைத்
தேன்என் விதிவசமே. 3

ஓடாமல் பாழுக்கு உழையாமல்
ஓரம் உரைப்பவர்பால்
கூடாமல் நல்லவர் கூட்டம்
விடாமல்வெம் கோபம்நெஞ்சில்
நாடாமல் நன்மை வழுவாமல்
இன்றைக்கு நாளைக்குஎன்று
தேடாமல் செல்வம் தருவாய்
சிதம்பர தேசிகனே. 4

பாராமல் ஏற்பவர்க்கு இல்லைஎன்
னாமல் பழுதுசொல்லி
வாராமல் பாவங்கள் வந்துஅணு
காமல் மனம்அயர்ந்து
பேராமல் சேவை பிரியாமல்
அன்பு பெறாதவரைச்
சேராமல் செல்வம் தருவாய்
சிதம்பர தேசிகனே. 5

---

3. நெருப்பில் இட்ட வெண்ணெய் போன்று உருகிப் பொன்னம்பலவர் நிழலில் தவமியற்ற வேண்டியதிருக்கப் பெண்மோகத்தில் உழலுவதன் விழல்வாழ்வை இயம்புகிறது இந்தப் பாடல்.

4. வாழ்வு வீணாகாதவாறு நல வாழ்விலே நின்று நல்லன செய்து நன்கு கழிக்கும்வண்ணம் அருட்செல்வம் கோருகிறது இப்பாடல்.

5. மேலும் இதே கருத்தை இன்னும் சில இயல்புகள் கூறி, வற்புறுத்தி வரம் வேண்டுகிறது இந்தப் பாடல்.

கொல்லாமல் கொன்றதைத் தின்னாமல்
சூத்திரம் கோள்களவு
கல்லாமல் கைதவ ரோடுஇணங்
காமல் கனவினும்பொய்
சொல்லாமல் சொற்களைக் கேளாமல்
தோகையர் மாயையிலே
செல்லாமல் செல்வம் தருவாய்
சிதம்பர தேசிகனே. 6

முடிசார்ந்த மன்னரும் மற்றும்உள்
ளோரும் முடிவில்ஒரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணா
வதுங்கண்டு பின்னும்இந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்
லால்பொன்னின் அம்பலவர்
அடிசார்ந்து நாம்உய்ய வேண்டும்என்
றேஅறிவார் இலையே. 7

காலை உபாதி மலம்சலம்
ஆம்அன்றிக் கட்டுஉச்சியிற்
சால உபாதி பசிதாகம்
ஆகுமுன் சஞ்சிதம்ஆம்
மாலை உபாதி துயில்காமம்
ஆம்இவை மாற்றிவிட்டே
ஆலம் உகந்துஅருள் அம்பல
வாஎன்னை ஆண்டருளே. 8

---

6. பொய்சொல்லாமல் சொற்களைக் கேளாமல் – பொய் நானும் பேசாமல், பிறர் பேசவும் கேளாமல்.

7. முடிசார்ந்த – முடிசூடிய. படிசார்ந்த வாழ்வு – இகஉலக வாழ்க்கை.

8. வினைப்பயனால் வருகிற உபாதியை அழுத்தம் கொடுத்துச் சொல்வதற்காக முந்திய அடிகளில் மற்ற உபாதிகளைப் பேசுகின்றார்.

ஆயும் புகழ்த்தில்லை அம்பல
வாணர் அருகில்சென்றால்
பாயும் இடபம் கடிக்கும்
அரவம்பின் பற்றிச்சென்றால்
பேயும் கணமும் பெருந்தலைப்
பூதமும் பின்தொடரும்
போய்என்செய் வாய்மன மேபிணக்
காடவர் போம்இடமே. 9

ஓடும் எடுத்துஅதள் ஆடையும்
சுற்றி உலாவிமெள்ள
வீடுகள் தோறும் பலிவாங்கி
யேநாதி யற்றவர்போல்
ஆடும்மருள் கொண்டுஇங்கு அம்பலத்
தேநிற்கும் ஆண்டிதன்னைத்
தேடும் கணக்குஎன்ன காண்சிவ
காம சவுந்தரியே. 10

ஊட்டுவிப் பானும் உறங்குவிப்
பானும்இங்கு ஒன்றொடுஒன்றை
மூட்டுவிப் பானும் முயங்குவிப்
பானும் முயன்றவினை
காட்டுவிப் பானும் இருவினைப்
பாசக் கயிற்றின்வழி
ஆட்டுவிப் பானும் ஒருவன்உண்
டேதில்லை அம்பலத்தே. 11

---

9. இது ஒரு வஞ்சப் புகழ்ச்சி. மனத்தை நோக்கிக் கூறியது. அம்பலவாணருடைய அருகில் போனால், இடபம் பாயும், அரவம் கடிக்கும், பின்தொடர்ந்தால் பேயும் கணமும் பெருந்தலைப் பூதமும் பின்தொடரும். போதாத குறைக்கு, அவர் செல்லுமிடம் எது? பிணக்காடு!

10. உமையம்மையைக் கேட்கிறது பாடல். அம்மை எதுகண்டு நீ அவரைத் தேடிப் பிடித்தாய் என்று! எடுப்பது ஓடு, உடுப்பது தோலாடை, வாங்குவது தெருப்பிச்சை, ஆட்டம் வேறு, அவன் ஆண்டி!

11. அற்புதமான பாடல் இது. ஞானியின் கவிதை என்ற சிறப்பு அனைத்தும் கொண்ட அரிய பாடல் இது. பொருளும் சொல்லாட்சியும் எளிமை தவழ்கின்றன. உட்பொருளோ ஞானப் பொருள்!

அடியார்க்கு எளியவர் அம்பல
வாணர் அடிபணிந்தால்
மடியாமல் செவ்வ வரம்பெற
லாம்வையம் ஏழ்அளந்த
நெடியோனும் வேதனும் காணாத
நித்தன் நிமலன்அவன்
குடிகாணும் நாங்கள் அவர்காணும்
எங்கள்குல தெய்வமே. 12

தெய்வச் சிதம்பர தேவாஉன்
சித்தம் திரும்பிவிட்டால்
பொய்வைத்த சொப்பன மாம்மன்னர்
வாழ்வும் புவியும் எங்கே
மெய்வைத்த செல்வம்எங் கேமண்ட
லீகர்தம் மேடை எங்கே
கைவைத்த நாடக சாலைஎங்
கேஇது கண்மயக்கே. 13

உடுப்பானும் பால்அனம் உண்பானும்
உய்வித்து ஒருவர்தம்மைக்
கெடுப்பானும் ஏதுஎன்று கேள்விசெய்
வானும் கெதிஅடங்கக்
கொடுப்பானும் தேகிஎன்று ஏற்பானும்
ஏற்கக் கொடாமல் நின்று
தடுப்பானும் நீயலையோ தில்லை
ஆனந்தத் தாண்டவனே. 14

---

12. அடியார்க்கு எளியவர் – அன்பர்க்கு எளிதாக வருபவர். மடியாமல் – நீங்காமல். அவனுடைய அருட்குடி மக்கள் நாங்கள். அவர் எங்கள் குலதெய்வம் என்பதில் சொற்கள் துள்ளி வருகிற நேர்த்தியே நேர்த்தி!

13. திரும்பிவிட்டால் – மாறிவிட்டால், மாறுபாடு கொண்டுவிட்டால். மண்டலீகர் – அரசர்கள், தலைவர்கள்.

14. கேள்விசெய்வானும் – ஆக்கினைகள் செய்கிறவனும். தேகி என்று – கொடு என்று (பிச்சை).

வித்தாரம் பேசினும் சோங்குஏ
றினும் கம்பம் மீதுஇருந்து
தத்தாஎன்று ஓதிப் பவுரிகொண்டு
ஆடினும் தம்முன்தம்பி
ஒத்தாசை பேசினும் ஆவதுஉண்
டோதில்லை உள்நிறைந்த
கத்தாவின் சொற்படி அல்லாது
வேறு இல்லை கன்மங்களே. 15

பிறவா திருக்க வரம்பெறல்
வேண்டும் பிறந்துவிட்டால்
இறவா திருக்க மருந்துஉண்டு
காண்இது எப்படியோ
அறம்ஆர் புகழ்த்தில்லை அம்பல
வாணர் அடிக்கமலம்
மறவாது இருமன மேஅது
காண்நல் மருந்துஉனக்கே. 16

தவியாது இருநெஞ்ச மேதில்லை
மேவிய சங்கரனைப்
புவிஆர்ந்து இருக்கின்ற ஞானா
கரனைப் புராந்தகனை
அவியா விளக்கைப்பொன் அம்பலத்து
ஆடியை ஐந்தெழுத்தால்
செவியாமல் நீசெவித் தால்பிற
வாமுத்தி சித்திக்குமே. 17

---

15. வித்தாரம் பேசினும் – ஆடம்பரமாகப் பேசினாலும். பவுரி கொண்டு – மண்டலமிட்டு (ஆடினும்). கத்தா – செயற்தலைவனாகிய இறைவன். கன்மங்கள் - செயல்கள்.

16. இறவாதிருக்கும்படி செய்கிற மருந்து அடிக்கமலம் மறவா திருத்தலேயாம்.

17. புராந்தகன் – புரம் எரித்தோன். செவியாமல் – செபம் செய்யாமல், செவியாமல் செவித்தல் என்பது சித்தர்களின் ஐந்தெழுத்துப் பயிற்சி முறையின் இலட்சியக் கல்வியாம்.

நாவின் மறைப்பொருள் அம்பல
வாணரை நம்பிஅவர்
பாலில் ஒருதரம் சேவிக்கஒணாது
இருப்பார் கருங்கல்
மேலில் எடுத்துஅவர் கைவிலங்
கைத்தைப்பர் மீண்டும்ஒரு
காலில் நிறுத்துவர் கிட்டியும்
தாம்வந்து காட்டுவரே. 18

ஆற்றோடு தும்பை அணிந்துஆடும்
அம்பல வாணர்தம்மைப்
போற்றா தவர்க்குஅடை யாளம்உண்
டேஇந்தப் பூதலத்தில்
சோற்றுஆவி அற்றுச்சுகம் அற்றுச்
சுற்றத் துணியும்அற்றே
ஏற்றாலும் பிச்சை கிடையாமல்
ஏக்கற்று இருப்பார்களே. 19

அத்தனை முப்பத்து முக்கோடி
தேவர்க்கு அதிபதியை,
நித்தனை, அம்மை சிவகாம
சுந்தரி நேசனைஎம்
கத்தனை, பொன்அம் பலத்துஆடும்
ஐயனை, காணக்கண்கள்
எத்தனை கோடி யுகமோ
தவம்செய்து இருக்கின்றனவே. 20

---

18. கடவுளை மறந்தவர் படுகிற நரக வாதனையைச் சித்திரிக்கிறது இப்பாடல்.

19. அம்பலவாணரைப் போற்றாதவரின் அடையாளம் என்ன? உணவற்று, சுகமற்று, ஆடையற்று, ஏற்றாலும் பிச்சை கிடையாமல் துன்புற்றிருப்பார்கள் அவர்கள்.

20. அத்தனை – அப்பனை. அதிபதியை – நாயகனை, தலைவனை. நித்தனை – என்றும் இருப்பவனை. கத்தனை – கர்த்தனாகிய படைப்பாளியை.

## 2. திருச்செங்காடு

நெருப்பான மேனியர் செங்காட்டில்
 ஆத்தி நிழல்அருகே
இருப்பார் திருவுளம் எப்படி
 யோஇன்னம் என்னைஅன்னை
கருப்பா சயக்குழிக் கேதள்ளு
 மோகண்ணன் காணரிய
திருப்பாத மேதரு மோதெரி
 யாது சிவன்செயலே. 1

## 3. திருவொற்றியூர்

ஐயும் தொடர்ந்து விழியும்
 செருகி அறிவுஅழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற
 போதுஒன்று வேண்டுவல்யான்
செய்யும் திருவொற்றி யூர்உடை
 யீர்திரு நீறும்இட்டுக்
கையும் தொழப்பண்ணி ஐந்தெழுத்து
 ஓதவும் கற்பியுமே. 1

சுடப்படு வார்அறி யார்புரம்
 மூன்றையும் சுட்டபிரான்
திடப்படு மாமதில் தென்ஒற்றி
 யூரன் தெருப்பரப்பில்
நடப்பவர் பொற்பாதம் நந்தலை
 மேல்பட நன்குஉருண்டு
கிடப்பது காண்மன மேவிதி
 ஏட்டைக் கிழிப்பதுவே. 2

---

1. பிறவிக்குத் தள்ளுவாரோ அல்லது திருவடி தருவாரோ, சிவன் செயல் எப்படித் தெரியும்?

1. அற்புதமான பாடல். ஐ – கோழை, கபம். 'ஆண்டவன்' என அழைக்கப்பெற்றவரும், என் ஆசிரியருள் ஒருவராக நான் மதிப்பவருமாகிய மூதறிஞர் நெல்லை ஆண்டியப்பபிள்ளை இந்தப்பாடலை மெய்ம்மறந்து பாடி விளக்குகிற குரல் அப்படியே கேட்கிறது.

2. அடியவர்கள் பொற்பதம் தலைமேல் படும்படி தெருப்பரப்பில் நன்கு உருண்டு கிடப்பதுதான் விதி ஏட்டைக் கிழிக்கிற வழியாகும்.

### 4. திருவிடைமருதூர்

காடே திரிந்துஎன்ன காற்றே
புசித்துஎன்ன கந்தைசுற்றி
ஓடே எடுத்துஎன்ன உள்அன்பு
இலாதவர் ஓங்குவிண் ணோர்
நாடே யிடைமரு தீசர்க்கு
மெய்அன்பர் நாரியர்பால்
வீடே இருப்பினும் மெய்ஞ்ஞான
வீட்டுஇன்பம் மேவுவரே. 1

தாயும் பகைகொண்ட பெண்டீர்
பெரும்பகை தன்னுடைய
சேயும் பகைஉற வோரும்
பகைஇச் செகமும்பகை
ஆயும் பொழுதில் அருஞ்செல்வம்
நீங்கில்இங்கு காதலினால்
தேயும்நெஞ் சேமரு தீசர்பொற்
பாதம் சுதந்திரமே. 2

### 5. திருக்கழுக்குன்றம்

காடோ செடியோ கடற்புற
மோகன மேமிகுந்த
நாடோ நகரோ நகர்நடு
வோநல மேமிகுந்த
வீடோ புறந்திண்ணை யோதமி
யேன்உடல் வீழும்இடம்
நீள்தோய் கழுக்குன்றில் ஈசா
உயிர்த்துணை நின்பதமே. 1

---

1. மெய்ஞ்ஞான வீட்டின்பம் மேவுகிறவர்களின் தன்மை வியந்து கூறியவாறு.

2. உலகத்தில் சுற்றியிருக்கும் அத்தனையும் பகையாம். மருதீசர் பொற்பாதம் ஒன்றே நமக்கு உரிமையாம், சுதந்திரமாம் என்றபடி.

1. மரணம் வரும் நேரமும், அது நிகழும் இடமும் யாருக்கும் புலனாவதில்லை. அந்த முன்னறிவு இருப்பதில்லை. ஈசனுடைய பதமே உயிர்த் துணையாம்.

### 6. திருக்காளத்தி

பததும்புகுந்து பிறந்து வளர்ந்துபட்
டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டுஓடி
ஆடி முடிந்தபின்பு
செத்துங் கிடக்கும் பிணத்தரு
கேஇனிச் சாம்பிணங்கள்
கத்தும் கணக்குஎன்ன காண்கயி
லாபுரிக் காளத்தியே. 1

பொன்னால்பிர யோசனம் பொன்படைத்
தார்க்குஉண்டு பொன்படைத்தோன்
தன்னால்பிர யோசனம் பொன்னுக்கங்கு
ஏதுஉண்டுஅத் தன்மையைப்போல்
உன்னால் பிரயோசனம் வேணதுஎல்
லாம்உண் டுஉனைப்பணியும்
என்னால்பிர யோசனம் ஏதுஉண்டு
காளத்தி ஈச்சுரனே. 2

வாளால் மகவுஅரிந்து ஊட்டவல்
லேன்அல்லன்; மாதுசொன்ன
சூளால் இளமை துறக்கவல்
லேன்அல்லன்; தொண்டுசெய்து
நாள்ஆறில் கண்இடந்து அப்பவல்
லேன்அல்லன்;நான் இனிச்சென்று
ஆளாவது எப்படி யோதிருக்
காளத்தி அப்பனுக்கே. 3

---

1. ஓடி ஆடி எல்லாம் முடிந்த பின்பு செத்துக் கிடக்கிறது உடம்பு. இந்தப் பிணத்தைச் சுற்றிச் சாம்பிணங்கள் கத்துகின்றன. இதை யொட்டிய சித்திரம் முன் பாடல்களில் வந்துள்ளமை காண்க.

2. தங்கம் கையிலிருந்தால் நமக்குப் பயன்! தங்கத்துக்கு நம்மால் என்ன பயன் உண்டு? அவ்வாறே காளத்தியப்பனே உன்னால் எனக்குப் பயன், என்னால் உனக்கென்ன பயன்?

3. நாயன்மார்கள், தமக்கு முன்னே சான்றோர்களை நினைவு கூர்ந்து வருகிறது இந்தப் பாடல்.

முப்போதும் அன்பைப் புசிக்கவும்
தூங்கவும் மோகத்தினால்
செப்போது இளமுலை யாருடன்
சேரவும் சீவன்விடும்
அப்போது கண்கலக் கப்பட
வும்அமைத் தாய்ஐயனே
எப்போது காணவல் லேன்திருக்
காளத்தி ஈச்சுரனே. 4

இரைக்கே இரவும் பகலும்
திரிந்துஇங்கு இளைத்துமின்னார்
அரைக்குஏய் அவலக் குழியரு
கேஅசும்பு ஆர்ந்தொழுகும்
புரைக்கே உழலும் தமியேனை
ஆண்டருள் பொன்முகலிக்
கரைக்கேகல் ஆலின் நிழற்கீழ்
அமர்ந்தருள் காளத்தியே. 5

நாறும் குருதிச் சலதாரை
தோல் புரைநாள் தொறும்சீ
ஊறும் மலக்குழி காமத்
துவாரம் ஒளித்திடும்புண்
தேறும் தசைப்பிளப்பு அந்தரங்
கத்துஉள சிற்றின்பம்விட்டு
ஏறும் பதந்தரு வாய்திருக்
காளத்தி ஈச்சுரனே. 6

---

4. இந்த உலக வாழ்விலேயே அழுந்தும்படி ஆகிவிட்டது. கடவுட் காட்சி எப்போது கிட்டப்போகிறது என்றபடி.

5. உணவுக்கும், சிற்றின்பத்துக்குமாக உழல்கிறது வாழ்வு. காளத்தி யான்தான் ஆண்டருள வேண்டும்.

6. சிற்றின்பத்தை விளக்கி, உடலில் அருவருப்பு ஏற்படும்படி சொல் லாட்சி செய்கிறது இந்தப் பாடல். இந்த இழிநிலையிலிருந்து கடைத் தேறும் பதம் தா என்றவாறு.

### 7. கயிலாயம்

கான்சாயும் வெள்ளி மலைக்கர
சேநின் கழல்நம்பினேன்
ஊன்சாயும் சென்மம் ஒழித்திடு
வாய்கர வூரனுக்காய்
மான்சாயச் செங்கை மழுவலம்
சாய வளைந்தகொன்றைத்
தேன்சாய நல்ல திருமேனி
சாய்த்த சிவக்கொழுந்தே. 1

இல்லம் துறந்து பசிவந்த
போதுஅங்கு இரந்துதின்று
பல்லும் கறைஅற்று வெள்வாயும்
ஆய்ஒன்றில் பற்றும்இன்றிச்
சொல்லும் பொருளும் இழந்து
சுகஆனந்தத் தூக்கத்திலே
அல்லும் பகலும் இருப்பதென்
றோகயி லாயத்தானே. 2

சினந்தனை அற்றுப் பிரியமும்
தான்அற்றுச் செய்கைஅற்று
நினைந்ததும் அற்றும் நினையா
மையும்அற்று நிர்ச்சிந்தனாய்த்
தனந்தனி யேஇருந்து அனந்த
நித்திரை தங்குகின்ற
அனந்தலில் என்றுஇருப் பேன்அத்த
னேகயி லாயத்தனே. 3

---

1. மிகமிக அற்புதமான பாடல்களில் இதுவும் ஒன்று. கான்சாயும் – வனம் சூழ்ந்த. ஊன்சாயும் – உடம்பு வீழ்கிற கரவூரிலே திருமேனி சாய்த்தது எப்படி? எழிலும் கவிநயமும் இணைந்து 'சாய சாய' என்று வெட்டித்து வருகிறது சொல்லாட்சி. பட்டினத்தடிகளின் இலக்கியத்திலே, ரசிகமணி டி.கே.சி. இந்தப் பாடலை ஆயிரந்தடவை பாடிப் பாடிப் பரவசப்படுவார்.

2. எல்லாப் பிணைப்புக்களிலுமிருந்து விடுபட்டு, சொல்லும் பொருளும் இழந்து, சுகானந்த உறக்கத்திலே இரவும் பகலும் இருப்பது என்பது சித்தர் வாக்காகும்.

3. முந்திய பாடலின் ஞான உறக்கத்தையே சித்தர்மொழியில் அடிகள் மேலும் தொடர்கிறார்.

கைஆர ஏற்றுநின்று அங்ஙனம்
　　தின்று கரித்துணியைத்
தையாது உடுத்துநின் சந்நிதிக்
　　கேவந்து சந்ததமும்
மெய்ஆர நிற்பணிந் துள்ளே
　　உரோமம் விதிர்விதிர்ப்ப
ஐயாஎன்று ஓலம் இடுவதுஎன்
　　றோகயி லாயத்தனே. 4

நீறுஆர்த்த மேனி உரோமம்
　　சிலிர்த்துஉளம் நெக்குநெக்குச்
சேறுஆய்க் கசிந்துகசிந்தே
　　உருகிநின் சீரடிக்கே
மாறாத் தியானம்உற்று ஆனந்தம்
　　மேற்கொண்டு மார்பில்கண்ணீர்
ஆறாய்ப் பெருகக் கிடப்பதுஎன்
　　றோகயி லாயத்தனே. 5

செல்வரைப் பின்சென்று சங்கடம்
　　பேசித் தினந்தினமும்
பல்லினைக் காட்டிப் பரிதவி
　　யாமல்பர ஆனந்தத்தின்
எல்லையில் புக்கிட ஏகாந்த
　　மாய்எனக்கு ஆம்இடத்தே
அல்லல்அற்று என்றுஇருப் பேன்அத்த
　　னேகயி லாயத்தனே. 6

---

4. எல்லாப் பற்றுகளும் அற்ற நிலையிலே, பரவசமாகி நின் சந்நிதியில் கூடி ஓலமிட்டு நிற்கும் நாள் எப்போதோ என்று கேட்கிறார் ஞானி.

5. முந்திய பாடலைப் போலவே மெய்ப்பரவச நிலையை மேலும் தொடர்கிறது இப்பாடல்.

6. ஏகாந்தம் என்றும், எனக்கு ஆம் சத்தே அல்லல் அற்று இருப்பது என்றும் சொல்வதே மெய்ஞ்ஞான நிலையாம். இதன் விளக்கம் சித்தரின் ஞானக் கல்வி என்ற பகுதியிலே விளக்கப்பட்டுள்ளது.

மந்திக் குருளைஒத் தேன்இல்லை
நாயேன் வழக்கு அறிந்தும்
சிந்திக்கும் சிந்தையை யான்என்செய்
வேன்எனைத் தீதகற்றிப்
புந்திப் பரிவில் குருளையை
ஏந்திய பூசையைப்போல்
எந்தைக்கு உரியவன் காண்அத்த
னேகயி லாயத்தனே. 7

வருந்தேன் பிறந்து பிறந்து
மயக்கும் புலன்வழிப்போய்ப்
பொருந்தேன் நரகில் புகுகின்
றிலேன்புகழ் வாரிடத்தில்
இருந்தேன் இனிஅவர் கூட்டம்
விடேன்இயல் அஞ்செழுத்தாம்
அருந்தேன் அருந்துவன் நின்அரு
ளால்கயி லாயத்தனே. 8

## 8. மதுரை

விடப்படு மோஇப் பிரபஞ்ச
வாழ்க்கையை விட்டுமனம்
திடப்படு மோநின் அருள்இன்றி
யேதின மேஅலையக்
கடப்படு மோஅற்பர் வாயிலிற்
சென்றுகண் ணீர்ததும்பிப்
படப்படு மோசொக்க நாதா
சவுந்தர பாண்டியனே. 1

---

7. மந்தி தனது குட்டியைத் தான் தாங்காது. குட்டி அதைப்பற்றிக் கொள்ளும். பூனைக்குட்டி அப்படியில்லை. தாய்ப் பூனைக்குட்டியைக் கவ்விக் கொள்ளும். அவ்வாறு 'எந்தைக்குரியவன் காண்' என்கிறார் அடிகள்.

8. இனி எனக்குப் பிறவித் துயரில்லை. நரக வாதனை கிடையாது என்று தொடங்கித் தன் பேரானந்த நிலையை விளம்புகிறார். அஞ்செழுத்தாகிய தேனை அருந்துகிற பேரின்பம் அது!

1. இந்த மோகம் தொலையுமா, தொலையாதா என்பதை அடுக்கி மொழிகிறார், மதுரைச் சொக்கநாதராகிய சவுந்தரபாண்டியனை நோக்கி!

## 9. பொது

உடைகோ வணமுண்டு உறங்கப்
புறந்திண்ணை உண்டுஉணஇங்கு
அடைகாய் இலைஉண்டு அருந்தத்தண்
ணீர்உண்டு அருந்துணைக்கே
விடையேறும் ஈசர் திருநாமம்
உண்டுஇந்த மேதினியில்
வடகோடு உயர்ந்துஎன்ன தென்கோடு
சாய்ந்துஎன்ன வான்பிறைக்கே. 1

வீடு நமக்குத் திருவாலங்
காடு விமலர்தந்த
ஓடு நமக்குஉண்டு வற்றாத
பாத்திரம் ஓங்குசெல்வ
நாடு நமக்குஉண்டு கேட்டதெல்
லாம்தரும் நல்நெஞ்சம்
ஈடுநமக்குச் சொலவோ
ஒருவரும் இங்கில்லையே. 2

நாடிக்கொண்டு ஈசரை நாட்டமுற்
றாய்இலை நாதரடி
தேடிக்கொண்டு ஆடித் தெளிந்தாய்
இலைசெக மாயைவந்து
மூடிக்கொண் டோம்என்றும் காமா
யுதங்கள் முனிந்தவென்றும்
பீடிப்பை யோநெஞ்ச மேஉனைப்
போல்இல்லை பித்தர்களே. 3

---

1. தமது துறவி வாழ்க்கையை எத்தனை உல்லாசத்தோடு பாடுகிறார் பட்டினத்தார். அற்புதமான பாடல்!

2. இதுவும் அதே உல்லாசத்தோடு வருகிறது. ஓடு நமக்கு உண்டு என்று சொல்லி அது வற்றாத பாத்திரம் என்றது எத்தனை நயமான கவிப்பண்பார்ந்த மொழி! ஆண்டவன் ஆண்டியப்ப பிள்ளைக்கு மிகவும் பிடித்த பாடல்களில் இதுவும் ஒன்று!

3. நெஞ்சத்தை வருந்திக் கூறிய பாடல் இது. நாட்டமுற்றாயிலை; தெளிந்தாயிலை; இந்நிலையில் பீடிப்பை போலும் என்று சோகந் ததும்ப வருகிறது பாட்டு.

கைஒன்று செய்ய விழிஒன்று
நாடக் கருத்துஒன்று எண்ணப்
பொய்ஒன்று வஞ்சக நாஒன்று
பேசப் புலால் கமழும்
மெய்ஒன்று சாரச் செவிஒன்று
கேட்க விரும்பும்யான்
செய்கின்ற பூசைஎவ் வாறுகொள்
வாய்வினை தீர்த்தவனே. 4

கண்டுஉண்டு காணக் கருத்துண்டு
நோக்கக் கசிந்துருகிப்
பண்டுஉண்டு பாடச் செவிஉண்டு
கேட்கப் பச்சிலையால்
எண்உண்டு சாத்த எதிர்நிற்க
ஈசன் இருக்கையிலே
மண்உண்டு போகுதுஐ யோகெடு
வீர்இந்த மானுடமே. 5

சொல்லிலும் சொல்லின் முடிவிலும்
வேதச் சுருதியிலும்
அல்லிலும் மாசுஅற்ற ஆகாயந்
தன்னிலும் ஆய்ந்துவிட்டோர்
இல்லிலும் அன்பர் இடத்திலும்
ஈசன் இருக்கும்இடம்
கல்லிலும் செம்பிலு மோஇருப்
பான்எங்கள் கண்ணுதலே. 6

---

4. பூசனை செய்யும்போது மூன்று கருவிகளும், உடம்பு, மனம், சொல் மூன்றும் ஒருமைப்படவேண்டும். அல்லாத நிலையை இயம்புகிறார் அடிகள்.

5. இத்தனை வசதிகளும் ஏற்பாடுகளும் எளியனவாகக் கிட்டுகிற சூழ்நிலையில் மானுடம் மண்கொண்டு போகிறது என்றால் என்ன கேடு இது?

6. ஈசன் இருக்கிற இடம் கல்லிலும் செம்பிலுமோ? இல்லை. இவ்வாறு சித்தர் மொழியிலே விளக்குகிறது பாடல்.

வினைப்போக மேஒரு தேகம்கண்
டாய்வினை தான்ஒழிந்தால்
தினைப்போது அளவும்நில் லாதுகண்
டாய்சிவன் பாதம்நினை
நினைப்போரை மேவு நினையாரை
நீங்கிஇந் நெறியில் நின்றால்
உனைப்போல் ஒருவர்உண் டோமன
மேஎனக்கு உற்றவரே. 7

பட்டைக் கிழித்துப் பருவூசி
தன்னைப் பரிந்துஎடுத்து
முட்டச் சுருட்டிஎன் மொய்குழ
லாள்கையில் முன்கொடுத்துக்
கட்டி இருந்த கனமாயக்
காரிதன் காமம்எல்லாம்
விட்டுப் பிரியஎன் றோஇங்
ஙனேசிவன் மீண்டதுவே. 8

•சூதுஉற்ற கொங்கையும் மானார்
கலவியும் சூழ்பொருளும்
போதுஉற்ற பூசலுக்கு என்செய
லாம்செய்த புண்ணியத்தால்
தீதுஅற்ற மன்னவன் சிந்தையில்
நின்று தெளிவதற்கோ
காதுஅற்ற ஊசியைத் தந்துவிட்
டான்என்றன் கைதனிலே. 9

---

7. வினைப் போகந்தான் உடம்பின் வாழ்நாள். வினை ஒழிந்தால் அந்தக் கணமே நில்லாது போய்விடும் இது. ஆகையினால் என்ன செய்யவேண்டும் மனம் என்பதை அறிவுறுத்துகிறது பாடல்.

8. காம அநுபவத்தைக் கூறி, அதை விட்டுப் பிரிவதற்கு என்றோ இவ்வாறு சிவன் மீண்டது என்றவாறு.

9. நிலையாமையை உணர்த்துவதற்குத்தான் போலும் காதற்ற ஊசியைத் தந்து மெய்யை அறிவித்தான் என்றவாறு.

வாதுஉற்ற திண்புயர் அண்ணா
மலையார் மலர்ப்பதத்தைப்
போதுற்றுஎப் போதும் புகலும்நெஞ்
சேஇந்தப் பூதலத்தில்
தீதுஉற்ற செல்வம்என் தேடிப்
புதைத்த திரவியம்என்
காதுஅற்ற ஊசியும் வாராது
காணும் கடைவழிக்கே. 10

வேதத்தின் உட்பொருள் மண்ஆசை
மங்கையை விட்டுவிடப்
போதித்த வன்மொழி கேட்டிலை
யோசெய்த புண்ணியத்தால்
ஆதித்தன் சந்திரன் போலே
வெளிச்சமது ஆம்பொழுது
காதுஅற்ற ஊசியும் வாராது
காணும் கடைவழிக்கே. 11

மனையாளும் மக்களும் வாழ்வும்
தனமும்தன் வாயில் மட்டே
இனமான சுற்றம் மயானமட்
டேவழிக்கு ஏதுதுணை
தினையாம் அளவுஎள் அளவுஆ
கிலும்முன்பு செய்ததவம்
தனைஆள என்றும் பரலோகம்
சித்திக்கும் சத்தியமே. 12

---

10. காதற்ற ஊசி கூட நம்மோடு வருவதில்லை. செல்வங்களால் என்ன பயன்?

11. முடிவு நிலையிலே எது கூட வரும்? காதற்ற ஊசியும் வாராது என்றபடி.

12. உருக்கமான பாட்டு. சத்தியத்தைப் பேசுகிறது. ஆனாலும் சத்தியம் எத்தனை கொடுமையாக இருக்கிறது!

அத்தமும் வாழ்வும் அகத்துமட்
டேவிழி அம்புஒழுக
மெத்திய மாதரும் வீதிமட்
டேவிம்மி விம்மிஇரு
கைத்தலம் மேல்வைத்து அழும்மைந்
தரும்சுடு காடுமட்டே
பற்றித் தொடரும் இருவினைப்
புண்ணிய பாவமுமே. 13

சீயும் குருதிச் செழுநீர்
வழும்பும் செறிந்துஎழுந்து
பாயும் புடைவைஒன் றில்லாத
போது பகல்இரவாய்
ஈயும் எறும்பும் புகுகின்ற
யோனிக்கு இரவுபகல்
மாயும் மனிதரை மாயாமல்
வைக்க மருந்துஇல்லையே. 14

சீதப் பனிக்குஉண்டு சிக்குஎனக்
கந்தை தினம்பசித்தால்
நீதுய்க்கச் சோறு மனைதோறும்
உண்டு நினைவுஎழுந்தால்
வீதிக்குள் நல்ல விலைமாதர்
உண்டு இந்த மேதினியில்
ஏதுக்கு நீசலித் தாய்மனமே
என்றும் புண்படவே. 15

---

13. இதுவும் அதுவே. உண்மையைப் பார்ப்பதற்கு இமைகளைத் திறந்து காட்டுகிறார் அடிகள்.

14. என்ன இழிவான ஆசையில் மனிதர்கள் உழல்கிறார்கள். இதற்கு மருந்து இல்லையா? இல்லையே!

15. என்னென்ன வசதிகள் எல்லாம் இருக்கின்றன இந்த உலகத்தில். அடடா! நீ சலிப்படைய வேண்டுவதே இல்லை. இவ்வாறு குத்தலாகப் பேசுகிறது பாடல்! உள்ளுறை நகைச்சுவை உட்கிடையைக் காட்டுகிறது.

ஆறுஉண்டு தோப்புஉண்டு அணிவீதி
    அம்பலம் தானும்உண்டு
நீறுஉண்டு கந்தை நெடுங்கோ
    வணம்உண்டு நித்தம்நித்தம்
மாறுண்டு உலாவி மயங்குநெஞ்
    சேமனை தோறும்சென்று
சோறுஉண்டு தூங்கிப்பின் சும்மா
    இருக்கச் சுகமும் உண்டே. 16

உடுக்கக் கவிக்கக் குளிர்காற்று
    வெய்யில் ஒடுங்கி வந்தால்
தடுக்கப் பழைய ஒருவேட்டி
    உண்டு சகம்முழுதும்
படுக்கப் புறந்திண்ணை எங்குளங்கும்
    உண்டு பசித்துவந்தால்
கொடுக்கச் சிவன்உண்டு நெஞ்சே
    நமக்குக் குறைவில்லையே. 17

மாடுஉண்டு கன்றுஉண்டு மக்கள்உண்டு
    என்று மகிழ்வது எல்லாம்
கேடுஉண்டு எனும்படி கேட்டுவிட்
    டோம்இனிக் கேள்மனமே
ஓடுஉண்டு கந்தைஉண்டு உள்ளே
    எழுத்துஐந்தும் ஓதவுண்டு
தோடுஉண்ட கண்டன் அடியார்
    நமக்குத் துணையும் உண்டே. 18

---

16. 'சும்மா இருத்தல்' என்ற நிலையின் சுகத்தைக் கோடிட்டுக் காட்டுகிறது பாடல்.

17. வாழ்க்கையை எதற்காகக் கடினமாக்கித் துன்புறவேண்டும்? எத்தனை எளிமையோடு வசதிகள் உள்ளன! படுக்கப் புறந்திண்ணை எங்கெங்கும் உண்டு என்பதில்தான் எத்தனை கவிநயம்!

18. எது கேடு, எது நன்மை என்பதைத் தெளிவிக்கிற சொற்கள். எழுத்து ஐந்தும் ஓத உண்டு, அடியார் துணையும் உண்டே என்பது தான் கவியின் உச்சம்.

மாத்தா னவத்தையும் மாயா
புரியின் மயக்கத்தையும்
நீத்தார் தமக்குஒரு நிட்டைஉண்
டோநித்தன் அன்புகொண்டு
வேர்த்தால் குளித்தும் பசித்தால்
புசித்து விழிதுயின்று
பார்த்தால் உலகத் தவர்போல்
இருப்பார்பற்று அற்றவரே. 19

ஒன்றுஎன்று இருதெய்வம் உண்டுஎன்று
இருஉயர் செல்வம் எல்லாம்
அன்றுஎன்று இருபசித் தோர்முகம்
பார்நல் அறமும் நட்பும்
நன்றுஎன்று இருநடு நீங்காம
லேநமக்கு இட்டபடி
என்றுஎன்று இருமன மேஉனக்
கேஉப தேசம்இதே. 20

நாட்டம்என் றேஇரு சற்குரு
பாதத்தை நம்பும்பொம்மல்
ஆட்டம்என் றேஇரு பொல்லா
உடலை அடர்ந்தசந்தைக்
கூட்டம்என் றேஇரு சுற்றத்தை
வாழ்வைக் குடம்கவிழ்நீர்
ஓட்டம்என் றேஇரு நெஞ்சே
உனக்குஉப தேசம்இதே. 21

---

19. பற்றற்றவர் நிலை என்ன என்பதை அழகாகச் சொல்கிறது பாடல். இந்தப் பாடலை முன்பகுதிகளில் ஞானிகள் எப்படி இருப்பார்கள் என்ற தலைப்பில் உள்ள விளக்கத்தோடு ஒப்பிடலாம்.

20. மனத்திற்குத் தருகிற உபதேசம்! முழுமையும் ஒரு சித்தனின் ஞானமொழியாகும்.

21. முந்திய பாடலைப் போலவே மனத்துக்கு ஒரு ஞானி சொல்கிற அறிவுரை இது.

என்செயல் ஆவது யாதுஒன்றும்
இல்லை இனித்தெய்வமே
உன்செய லேஎன்று உணரப்பெற்
றேன்இந்த ஊன்எடுத்த
பின்செய்த தீவினை யாதுஒன்றும்
இல்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோஇங்ங
னேவந்து மூண்டதுவே. 22

திருவேடம் ஆகித் தெருவில்
பயின்றுஎனைத் தேடிவந்து
பரிவாகப் பிச்சை பகரும்என்
றானைப் பதம்பணிந்தேன்
கருஆகும் ஏதக் கடற்கரை
மேவக் கருதும் என்னை
உருஆக்கிக் கொள்ளவல் லோஇங்ங
னேசிவன் உற்றதுவே. 23

விட்டேன் உலகம் விரும்பேன்
இருவினை வீணருடன்
கிட்டேன் அவருரை கேட்டும்
இரேன்மெய் கெடாதநிலை
தொட்டேன் சுகதுக்கம் அற்றுவிட்
டேன்தொல்லை நான்மறைக்கும்
எட்டேன் எனும்பர மன்என்னிடத்
தேவந்துஇங்கு எய்தியதே. 24

22. வாழ்விலே சில சமயம் இப்படிப்பட்ட எண்ணம் நமக்கு வருவதுண்டு; "அறிவு தெரிந்த நாள்முதல் கேடு செய்ததில்லை, நமக்கு ஏன் இந்தத் துன்பம்" என்று வாய்விட்டுச் சொல்லுகிறோம் அல்லவா? அப்படி வருகிறது பாட்டு.

23. சிவனுடைய செயலாகவே இந்த நிகழ்ச்சியை எண்ணி, அந்த எண்ணத்தை வெளியிடுவதே இப் பாடலின் பண்பாகும்.

24. 'சுய அநுபவம்' என்றும், 'அநுபூதி' என்றும், 'நான் அவன் ஆன நிலை' என்றும் சித்தர் இலக்கியம் பேசுகிற மெய்ஞ்ஞான நிலையை ஓவியம் வரைகிறது இந்தப் பாடல்.

அட்டாங்க யோகமும் ஆதாரம்
ஆறு அவத்தை ஐந்தும்
விட்டுஏறிப் போன வெளிதனி
லேவியப்புஒன்று கண்டேன்
வட்டுஆகிச் செம்மதிப் பால்ஊறல்
உண்டு மகிழ்ந்திருக்க
எட்டாத பேரின்பம் என்னை
விழுங்கி இருக்கின்றதே. 25

எரிஎனக்கு என்னும் புழுவோ
எனக்குஎனும் இந்தமண்ணும்
சரிஎனக்கு என்னும் பருந்தோ
எனக்குஎனும் தான்புசிக்க
நரிஎனக்கு என்னும்புள் நாய்எனக்கு
என்னும் இந்நாறு உடலைப்
பிரியமு டன்வளர்த் தேன்இத
னால் என்ன பேறுஎனக்கே. 26

அண்ணல்தன் வீதி அரசுஇருப்
பாகும் அணிபடையோர்
நண்ஒரு நால்ஒன்பது ஆம்அவர்
ஏவலும் நண்ணும் இவ்ஊர்
நுண்என் பசிக்கு மடைப்பள்ளி
யான சுகமும்எல்லாம்
எண்இலி காலம் அவமே
விடுத்தனம் எண்அரிதே. 27

---

25. அட்டாங்க யோகம், ஆறு ஆதாரம், ஐந்து அவத்தை வெளிதனிலே வியப்பு, மதியின் பால் ஊறுவது ஆகிய சித்தர் அநுபவங்களை முந்திய பகுதிகளில் இந்த ஆய்வு நூலில் விளக்கியுள்ள இடங்களை ஒப்பிடலாம்.

26. இந்த உடம்பு விழுந்ததும் இதைப் பங்குபோட எத்தனை உயிர்கள்! இதன்மீதா இத்தனை பிரியம்!

27. பூர்வ அநுபவம் கூறுதல் என்ற ஞான மரபுப்படி எழுந்த பாடல் இது.

என்பெற்ற தாயரும் என்னைப்
பிணம்என்று இகழ்ந்துவிட்டார்
பொன்பெற்ற மாதரும் போவென்று
சொல்லிப் புலம்பிவிட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம்
வந்து குடமுடைத்தார்
உன்பற்று ஒழிய ஒருபற்றும்
இல்லை உடையவனே. 28

கறைஅற்ற பல்லும் கரித்துணி
ஆடையும் கள்ளம்இன்றிப்
பொறைஉற்ற நெஞ்சமும் பொல்லாத
ஊணும் புறத்திண்ணையும்
தரையில் கிடப்பும் இரந்துஉண்ணும்
ஓடும் சகம்அறியக்
குறைவற்ற செல்வம்என் றேகோல
மாமறை கூப்பிடுமே. 29

எட்டுத் திசையும் பதினாறு
கோணமும் எங்கும்ஒன்றாய்
முட்டித் ததும்பி முளைத்துஓங்கு
சோதியை மூடர்எல்லாம்
கட்டிச் சுருட்டிக் கக்கத்தில்
வைப்பர் கருத்தில் வையார்
பட்டப் பகலை இரவுஎன்று
கூறிடும் பாதகரே. 30

---

28. இதுவும் முந்திய பாடலைப் போலவே. இறந்தபின் மைந்தர் குடம் உடைப்பதை இப்போதே சொல்லிப் பற்றின்மை கூறுகிறார்.

29. வேதவாக்கு என்பது என்ன? துறவியின் ஒன்றுக்கும் பற்றாத வாழ்க்கையின் எளிமையே என்பதை விளக்குகிறது இப்பா.

30. அழகான கவிதை இது. முட்டித் ததும்புகிற சோதியைக் கட்டிச் சுருட்டிக் கக்கத்தில் வைத்துக் கருத்தில் வையாத தன்மையை வேறு எப்படி வெளியிட முடியும்! ரசிகமணி டி.கே.சி. அடிக்கடி பரவசத்தோடு சொல்கிற பாடல் இது.

வாய்நாறும் மூழல் மயிர்ச்சிக்கு
நாறிடும் மைஇடும்கண்
பீநாறும் அங்கம் பிணவெடி
நாறும் பெருங்குழிவாய்ச்
சீநாறும் யோனி அழல்நாறும்
இந்திரியச் சேறுசிந்திப்
பாய்நாறும் மங்கையர்க் கோஇங்ஙு
னேமனம் பற்றியதே. 31

உரைக்கைக்கு நல்ல திருஎழுத்து
ஐந்துஉண்டு உரைப்படியே
செருக்கித் தரிக்கத் திருநீறும்
உண்டு தெருக்குப்பையில்
தரிக்கக் கரித்துணி ஆடையும்
உண்டு எந்தச் சாதியிலும்
இரக்கத் துணிந்துகொண் டேன்குறை
ஏதும்எனக்கு இல்லையே. 32

ஏதப்பட் டாய்இனி மேல்படும்
பாட்டைஇது என்றுஅறிந்து
போதப்பட் டாய்இல்லை நல்லோரிடம்
சென்று புல்லறிவால்
வாதைப்பட் டாய்மட மானார்
கலவி மயக்கத்திலே
பேதைப்பட் டாய்நெஞ்ச மேஉனைப்
போல்இல்லை பித்தருமே. 33

---

31. பெண்மையின் உடலிழிவை வெறுப்புத் தோன்றும் வண்ணம் சித்திரிக்கிற பாடல் இது.

32. பிச்சையும் ஆண்டிவேடமும் மெய்யான துறவும் கூடிவிட்டால் குறை ஏதும் இல்லை என்றவாறு.

33. ஏதப்பட்டதிலிருந்து பாடம் படித்துப் போதப்பட வேண்டும். வாதைப்பட்ட பின்னும் பேதைப்பட்டால் எப்படி? இதைப் பேசுகிறது பாடல்.

கரப்புஅற்று வல்வினை சுற்றமும்
அற்றுத் தொழில்கள் அற்றுக்
கரப்புஅற்று மங்கையர் கைஇணக்கு
அற்றுக் கவலை அற்று
வரப்புஅற்று நாதனை வாய்ஆர
வாழ்த்தி மனம்அடங்கப்
பரப்புஅற்று இருப்பதன் றோபர
மாபர மானந்தமே. 34

பேய்போல் திரிந்து பிணம்போல்
கிடந்துஇட்ட பிச்சைஎல்லாம்
நாய்போல் அருந்தி நரிபோல்
உழன்றுநன் மங்கையரைத்
தாய்போல் கருதித் தமர்போல்
அனைவர்க்குத் தாழ்மை சொல்லிச்
சேய்போல் இருப்பர்கண் டீர்உண்மை
ஞானம் தெளிந்தவரே. 35

விடக்கே பருந்தின் விருந்தே
கமண்டல வீணன்இட்ட
முடக்கே புழுவந்து உறைஇட
மேநலம் முற்றும்இலாச்
சடக்கே கருவி தளர்ந்துவிட்
டால்பெற்ற தாயும் தொடாத்
தொடக்கே உனைச்சுமந் தேன்நின்னில்
ஏதுசுகம் எனக்கே. 36

---

34. பரமானந்தம் என்பது எது? அதைப் பாடுகிறது இப்பா.

35. சீவன்முத்தர் நிலையைக் கூறுகிற கைவல்லியப் பாடல்கள் முன் பகுதிகளில் விளக்கப்பட்டுள்ளன. அவற்றோடு ஒப்புநோக்க வேண்டிய அழகிய பாடல் இது.

36. உடம்பொடு பேசல் இது! எப்படிப்பட்ட உன்னை இதுகாறும் சுமந்து வருகிறேன் என்றவாறு.

அழுதால் பயன்என்ன நொந்தால்
பயன்என்ன ஆவதுஇல்லை
தொழுதால் பயன்என்ன நின்னை
ஒருவர் சுடஉரைத்த
பழுதால் பயன்என்ன நன்மையும்
தீமையும் பங்கயத்தோன்
எழுதாப் படிவரு மோசலி
யாதுஇருஎன் ஏழைநெஞ்சே. 37

செல்வரைப் பின்சென் றுஉபசாரம்
பேசித் தினந்தினமும்
பல்லினைக் காட்டிப் பரிதவி
யாமல் பரானந்தத்தின்
எல்லையில் புக்குநல் ஏகாந்த
மாய்எனக்கு ஆம்இடத்தே
அல்லல்அற்று என்றுஇருப் பேன்ஆல
நீழல் அரும்பொருளே. 38

ஊரீர் உமக்குஓர் உபதேசம்
கேளும் உடம்புஅடங்கப்
போரீர் சமணைக் கழுஏற்றும்
நீற்றைப் புறந்திண்ணையில்
சாரீர் அனந்தலைச் சுற்றத்தை
நீக்கிச் சகம்நகைக்க
ஏரீர் உமக்குஅவர் தாமே
தருவர் இணையடியே. 39

---

37. அடிக்கடி எடுத்ததற்கெல்லாம் நொந்து பயனில்லை என்பதை விளக்கியவாறு.

38. இதே பாடலைக் கயிலாயம் பற்றிய ஆறாவது பாடலோடு ஒப்பு நோக்கலாம்.

39. உலகத்தாரை நோக்கி இறையடி தருபவரையும் அந்தத் திருவருளின் தன்மையையும் கூறியவாறு.

நீற்றைப் புனைந்துஎன்ன நீர்ஆடப்
போய்என்ன நீமனமே
மாற்றிப் பிறக்க வகைஅறிந்
தாய்இல்லை மாமறைநூல்
ஏற்றிக் கிடக்கும் எழுகோடி
மந்திரம் என்ன கண்டாய்
ஆற்றில் கிடந்தும் துறைஅறி
யாமல் அலைகின்றையே. 40

ஓங்கார மாய்நின்ற வத்துவி
லேஒரு வித்துவந்து
பாங்காய் முளைத்த பயன்அறிந்
தால்பதி னால்உலகும்
நீங்காமல் நீங்கி நிறையா
நிறைந்து நிறைஉருவாய்
ஆங்காரம் ஆனவர்க்கு எட்டாக்
கனிவந்து அமர்ந்திடுமே. 41

விதியார் படைப்பும் அரியார்
அளிப்பும் வியன்கயிலைப்
பதியார் துடைப்பும்நம் பால்அணு
காது பரமானந்தமே
கதியாகக் கொண்டுமற்று எல்லாம்
துயிலில் கனவுஎனநீ
மதியா திருமன மேஇது
காண்நல் மருந்துஉனக்கே. 42

---

40. 'மாற்றிப் பிறத்தல்' என்பதுவே சித்தர் ஞான இரகசியம். இதற்குரிய இரகசிய நிலையங்களைத் தெரிந்துக் கொள்ளாமல் எழுகோடி மந்திரங்களை வாய் ஓதிப் பயனில்லை என்றவாறு.

41. இது முற்றிலும் சித்தர் ஞானம். 'ஓங்காரம்' பற்றிச் சிவ யோகியார் விளக்கத்தோடு கூடிய தத்துவத் தெளிவை இந்த ஆய்வு நூலின் இரண்டாம் பகுதி விரிவான மேற்கோளுடன் தந்துள்ளது.

42. அயன், மால், சிவன் மூவருடைய படைப்பு, காப்பு, அழிப்பு ஆகியன நமக்கு எட்டாதவை. எல்லாம் துயிலின் கனவு என்று பொருட்படுத்தாமல் இரு மனமே என்றபடி.

நாய்க்குஉண்டு தொண்டு நமக்குஉண்டு
பிச்சை நமனைவெல்ல
வாய்க்குஉண்டு மந்திரபஞ்சாட்
சரம்மதி யாமல்வரும்
பேய்க்குஉண்டு நீறு திகைப்புஉண்டு
நின்ற பிறவிப்பிணி
நோய்க்குஉண்டு தேசிகன் தன்அருள்
நோக்கங்கள் நோக்குதற்கே. 43

நேமங்கள் நிட்டைகள் வேதங்கள்
ஆகம நீதிநெறி
ஓமங்கள் தர்ப்பணம் சந்தி
செபம்மந்திர யோகநிலை
நாமங்கள் சந்தனம் வெண்ணீறு
பூசி நலமுடனே
சாமங்கள் தோறும் இவர்செய்யும்
பூசைகள் சர்ப்பனையே. 44

நான்எத் தனைபுத்தி சொன்னாலும்
கேட்கிலை நல்நெஞ்சமே
ஏன்இப் படிக்கெட்டு உழலுகின்
றாய்இனி ஏதும்இல்லா
வானத்தின் மீனுக்கு வன்தூண்டில்
இட்ட வகைஅதுபோல்
போனத்தை மீள நினைக்கின்
றனைஎன்ன புத்திஇதே. 45

---

43. ஒவ்வொன்றுக்கும் ஒரு மாற்று, ஒரு மருந்து இருக்கிறது. அதை வரிசைப்படுத்திச் சொல்லி, பிறவிப்பிணி நோய்க்கு மாற்று தேசிகன் தன் அருள் என்கிறது ஞானியின் மொழி.

44. சர்ப்பனை - வஞ்சனை. ஆடம்பரமான சடங்குகளையும் படாடோபங்களையும் வரிசைப்படுத்திச் சொல்லி இவை வஞ்சனை என்பதை ஒரு சித்தரின் நோக்கிலிருந்து பேசுகிறார் பட்டினத்தடிகள்!

45. சென்றதையே கருதுவதும், எட்டாததற்கு ஏங்குவதும் வீணான செயல்கள் என்பதை உணர்த்தி, வானத்து மீனுக்குத் தூண்டில் போடாதே என்கிறார் ஞானி.

அஞ்சுஅக்கரம் எனும்கோ டாலி
கொண்டுஇந்த ஐம்புலனாம்
வஞ்சப் புலக்காட்டை வேர்அற
வெட்டி வளங்கள்செய்து
விஞ்சத் திருத்திச் சதாசிவம்
என்கின்ற வித்தைஇட்டுப்
புஞ்சக் களைபறித் தேன்வளர்த்
தேன்சிவ போகத்தையே. 46

தாயாரும் சுற்றமும் பெண்டிரும்
கைவிட்டுத் தாழ்ந்திடும்நாள்
நீயாரு நான்ஆர் எனப்பகர்
வார்அந்த நேரத்திலே
நோயாரும் வந்து குடிகொள்வ
ரேகொண்ட நோயும்ஒரு
பாயாரும் நீயும்அல் லால்பின்னை
ஏதுநட் பாம்உடலே. 47

ஆயும் பொழுது மயிர்க்கால்
கள்தொறும் அரும்கிருமி
தோயும் மலக்குட்டை ஆகிய
காயத்தைச் சுட்டுவிட்டால்
பேயும் நடன மிடும்கட
மாம்என்று பேசுவதை
நீயும் அறிந்திலை யோபொருள்
தேட நினைந்தனையே. 48

---

46. ஐந்தெழுத்தே கோடரி. வஞ்சப் புலக்காட்டை வேர்அற வெட்டிச் சரித்துத் திருத்திச் சதாசிவம் என்னும் வித்தை இட்டு உழவு செய்வதைப் பாடுகிறது இந்த ஞானப்பா.

47. உற்றாரும் சுற்றமும் கைவிடும்போது துணை யார்? கடினமான உண்மையை நினைவூட்டுகிறார் மகான்.

48. இந்த உடம்பை மிகவும் இழிவாகப் பேசுவது கேட்டும் இன்னும் பொருளாசை நீங்கவில்லையா என்றவாறு.

பூணும் பணிக்குஅல்ல பொன்னுக்குத்
தான்அல்ல பூமிதனைக்
காணும் படிக்குஅல்ல மங்கையர்க்கு
அல்லநல் காட்சிக்குஅல்ல
சேணும் கடந்த சிவன்அடிக்கு
அல்லஎன் சிந்தைகெட்டுச்
சாணும் வளர்க்க அடியேன்
படும்துயர் சற்றுஅல்லவே. 49

வெட்டாத சக்கரம் பேசாத
மந்திரம் வேறுஒருவர்க்கு
எட்டாத புட்பம் இறையாத
தீர்த்தம் இனிமுடிந்து
கட்டாத லிங்கம் கருதாத
நெஞ்சம் கருத்தின்உள்ளே
முட்டாத பூசையன் றோகுரு
நாதன் மொழிந்ததுவே. 50

எருமுட்டை பிட்கில் உதிர்ந்திடும்
செல்லுக்கு எவர்அழுவார்
கருமுட்டை புக்குக் கழலுமென்
றால்கன துக்கம்அதாய்ப்
பெருமுட்டுப் பட்டவர் போல்அழும்
பேதையீர் பேத்துகிறீர்
ஒருமுட்டும் வீட்டும் அவன்நாமம்
என்றைக்கும் ஓதுமினே. 51

---

49. ஏதோ மதிப்பான பயனுக்காக என்றில்லை, இந்தச் சாண் வயிற்றை வளர்க்க, அடடா, எத்தனை பாடு! இதுவும் நெல்லை ஆண்டவன் ஆண்டியப்ப பிள்ளை அடிக்கடி சொல்கிற பட்டினத்தார் பாடல்.

50. இந்தப் பாடல் நூற்றுக்குநூறு சித்தர் இலக்கியமாகும். வெட்டாத சக்கரமும், பேசாத மந்திரமும் (ஊமை எழுத்து), எட்டாத பூவும், இறைக்காத நீரும், கட்டாத லிங்கமும், கருதுதல் என்ற வினை இல்லாத கருத்தினுள் செய்கிற பூசையும் முன்பகுதிகளிலே விரிவாக விளக்கம் செய்யப் பெற்றுள்ளன.

51. எத்தனை அற்பமானது இந்த உடம்பு! கருவிலிருந்து கழலுகிறது என்றால் அதற்காகவா இத்தனை அழுகை!

மைஆடு கண்ணியும் மைந்தரும்
வாழ்வும் மனையும் செந்தீ
ஐயாநின் மாயை உருவெளித்
தோற்றம் அகிலத்து உள்ளே
மெய்யாய் இருந்தது நாள்செல
நாள்செல வெட்டவெறும்
பொய்யாய்ப் பழங்கதை யாய்க்கன
வாய்மெல்லப் போனதுவே. 52

ஆயாய் பலகலை ஆய்ந்திடும்
தூய அருந்தவர்பால்
போய்ஆ கிலும்உண்மை யைத்தெரிந்
தாய்இல்லை பூதலத்தில்
வேய்ஆர்ந்த தோளியர் காமவி
காரத்தில் வீழ்ந்து அழுந்திப்
பேய்ஆய் விழிக்கின் றனைமனமே
என்ன பித்துஉனக்கே. 53

அடியார் உறவும் அரன்பூசை
நேசமும் அன்பும்அன்றிப்
படிமீதில் வேறு பயன்உள
தோபங் கயன்வகுத்த
குடியான சுற்றமும் தாரமும்
வாழ்வும் குயக்கலங்கள்
தடியால் அடியுண்ட வாறுஒக்கும்
என்றுஇனம் சார்ந்திலரே. 54

---

52. இந்தப் பாடல் மிக அழகிய ஒரு கவிதை. தேசிய மகாகவி சுப்பிரமணிய பாரதியார் இதை மேற்கோள் காட்டுகிறார், தமது சுயசரிதைப் பாடல்களுக்கு முகப்பாக!

53. கலைகளை ஆயமாட்டாய்; ஆய்ந்திடும் அருந்தவர் பக்கம் சென்றாகிலும் உண்மை தெரிந்தாயா? அதுவும் இல்லை.

54. அடியாரைச் சேர்தலும், அரன்பூசை நேசமும், அன்பு செலுத்தலுமே உலகில் பயனுள்ள செயல்கள். தடியால் அடித்தால் சில்லுச் சில்லாகச் சிதறுகிற மண்பாண்டங்களே சுற்றமும் தாரமும் இவ்வுலக வாழ்வும் என்றவாறு.

ஆங்காரப் பொக்கசம் கோபக்
களஞ்சியம் ஆணவந்தான்
நீங்கா அரண்மனை பொய்வைத்த
கூடம்விண் நீடிவளர்
தேங்குஆர் பெருமதில் காமவி
லாசம்இத் தேகம்கந்தல்
பாங்காய் உனைப்பணிந்து எப்படி
ஞானம் பலிப்பதுவே. 55

ஒழியாப் பிறவி எடுத்துஏங்கி
ஏங்கி உழன்றநெஞ்சே
அழியாப் பதவிக்கு அவுடதம்
கேட்டி அநாதியனை
மழுமான் கரத்தனை மால்விடை
யானை மனத்தில்உன்னி
விழியால் புனல்சிந்தி விம்மி
அழுநன்மை வேண்டும்என்றே. 56

நாய்க்குஒரு சூலும் அதற்குஓர்
மருத்துவம் நாட்டில்உண்டோ
பேய்க்குஒரு ஞானம் பிடிபடு
மோபெரும் காஞ்சிரங்காய்
ஆக்குவர் ஆர்அது அருந்துவர்
ஆர்அது போல்உடம்பு
தீக்குஇரை ஆவதுஅல் லால்ஏதுக்கு
ஆம்இதைச் செப்புமினே. 57

---

55. இந்த உடம்புக்குப்பல இலக்கணங்கள், பட்டினத்தடிகளுக்கே உரிய தனிப்பாங்கில் வருகின்றன!

56. அழியாப் பிறவிக்கு அமுதம் ஏது? மால்விடை-யானை உன்னி உருகுவதே.

57. நாய்க்கு மகப்பேறு இல்லம் உண்டோ என்று கேட்கிறார் அடிகள். நமது நாட்டு மரபில் இல்லை அல்லவா?

கச்சில் கிடக்கும் கனதனத்
　　தில்கடைக் கண்கள்பட்டே
இச்சித்து இருக்கின்ற ஏழைநெஞ்
　　சேஇம வான்பயந்த
பச்சைப் பசும்கொடி உண்ணா
　　முலைபங்கர் பாதத்திலே
தைச்சுக் கிடமன மேஒரு
　　காலும் தவறுஇல்லையே. 58

மானார் விழியைக் கடந்துஏறி
　　வந்தனன் வாழ்குருவும்
கோன்ஆகி என்னைக் குடியேற்றிக்
　　கொண்டனன் குற்றம்இல்லை
போனாலும் பேறுஇருந் தாலும்நற்
　　பேறுஇது பொய்அன்றுகாண்
ஆனாலும் இந்த உடம்போடு
　　இருப்பது அருவருப்பே. 59

சற்றுஆகினும் தன்னைத் தான்அறி
　　யாய்தனை ஆய்ந்தவரை
உற்றுஆகிலும் உரைக் கப்பொருந்
　　தாய்உனக்கு ஆனநிலை
பற்றாய் குருவைப் பணியாய்
　　பரத்தையர் பாலில்சென்றுஎன்
பெற்றாய் மடநெஞ்ச மேஉனைப்
　　போல்இல்லை பித்தனுமே. 60

58. பச்சைப் பசுங்கொடி – பச்சையான பைங்கொடி உமை. தைச்சுக் கிட – மனத்தைத் திருவடியிலே வைத்துத் தைத்துவிடு!

59. சிற்றின்பத்தை வென்றேன். 'என் அரசே, என் ராஜா', என்று பரிவோடு தனது குடிமகனாக என் குருச் சக்கரவர்த்தி என்னை ஏற்றுக் கொண்டு விட்டான்.

60. மனத்தொடு வருந்திக் கூறுதல் என்க.

உளிஇட்ட கல்லையும் ஒப்புஇட்ட
சாந்தையும் ஊத்தைஅறப்
புளிஇட்ட செம்பையும் போற்றுகி
லேன்உயர் பொன்னனவே
ஒளிஇட்ட தாள்இரண்டு உள்ளே
இருத்துவது உண்மைஎன்று
வெளிஇட்டு அடைத்துவைத் தேன்இனி
மேல்ஒன்றும் வேண்டிலனே. 61

**10. திருவிடைமருதூர்**

மென்று விழுங்கி
விடாய்கழிக்க நீர்தேடல்
என்று விடியும் எனக்கு
என்கோவே— நன்றி
கருதார் புரம்மூன்றும்
கட்டுஅழலால் செற்ற
மருதாஉன் சந்நிதிக்கே வந்து. 1

**11. திருவொற்றியூர்**

கண்டம் கரியதாம்
கண்மூன்று உடையதாம்
அண்டத்தைப் போல
அழகியதாம்—தொண்டர்
உடல்உருகத் தித்திக்கும்
ஓங்குபுகழ் ஒற்றிக்
கடல்அருகே நிற்கும் கரும்பு. 1

---

61. செதுக்கிய (உளியிட்ட) கல்லையும், ஒப்பனை செய்த சுதையையும் (ஒப்பு இட்ட சாந்தையும்), களிம்பு நீங்கும்படி புளிகொண்டு தேய்த்த செம்பையும் போற்ற மாட்டேன். பொன் போன்று ஒளிவடிவான திருவடியை உள்ளத்தினுள்ளே இருத்தி இந்தப் புறவாசல்களைப் பூட்டி வைத்துவிட்டேன். இதுவே யோகிகளும் ஞானியரும் செய்கிற அக வழிபாடு!

1. இந்த இழிதகைமையான உலக வாழ்வில் என் இச்சை எப்போது நீங்கும் என்றபடி.

1. மிக அழகிய பாடல். ரசிகமணி டி.கே.சி. பாடிப் பாடிப் மெய்ம் மறந்து பேசுவார். இந்தப் பாடலை விளக்க ஆரம்பித்தால்! 'அண்டத்தைப் போல அழகியது' என்ற அடி உலக இலக்கியத்திலேயே ஒப்பற்ற கவிமொழியல்லவா!

ஓடுவிழுந்து சீப்பாயும்
ஒன்பதுவாய்ப் புண்ணுக்கு
இடுமருந்தை யான்அறிந்து
கொண்டேன்—கடுஅருந்தும்
தேவாதி தேவன்
திருவொற்றி யூர்த்தெருவில்
போவார் அடியின் பொடி. 2

வாவி எல்லாம் தீர்த்தம்
மணல்எல்லாம் வெண்நீறு
காவனங்கள் எல்லாம்
கணநாதர்—பூஉலகில்
ஈது சிவலோகம்
என்றுஎன்று மெய்த்தவத்தோர்
ஓதுந் திருவொற்றி யூர். 3

## 12. திருவாரூர்

ஆரூரர் இங்குஇருக்க
அவ்வூர்த் திருநாள்என்று
ஊர்ஊர்கள் தோறும்
உழலுவீர்—நேரே
உளக்குறிப்பை நாடாத
ஊமர்காள் நீவிர்
விளக்குஇருக்கத் தீத்தேடு வீர். 1

---

2. இதுவும் ரசிகமணிக்கு மிகவும் உகப்பான பாடல். புண்ணுக்குப் 'போரிக் பவுடர்' எது? ஒன்பது வாய்ப் புண்ணுக்கு இடுமருந்து, திருவொற்றியூர்த் தெருப்புழுதி. அது அடியார்கள் நடந்த மண் அல்லவா? அடியாரின் அடிப்பொடி அது! எத்தனை எழில்நிரம்பிய கவிதை இது!

3. இங்குற்ற குளங்கள் எல்லாம் புண்ணிய நன்னீர். மணலே திருநீறு. காடும் செடியும் கணநாதர்கள். இதுவே சிவலோகம், திருவொற்றியூர். எப்படிப்பட்ட அரிய கவி இது!

1. கையில் விளக்கு வைத்துக்கொண்டு நெருப்புக்காகத் தேடி அலைவதா!

எருவாய்க்கு இருவிரல்மேல்
ஏர்உண்டு இருக்கும்
கருவாய்க்கோ கண்கலக்கப்
பட்டாய்—திருஆரூர்த்
தேர்ஓடும் வீதியிலே
செத்துக் கிடக்கின்றாய்
நீர்ஓடும் தாரைக்கே நீ. 2

## 13. திருஏகம்பம்

எத்தனைஊர் எத்தனைவீடு
எத்தனைதாய் பெற்றவர்கள்
எத்தனைபேர் இட்டுஅழைக்க
ஏன்என்றேன்—நித்தம்
எனக்குக் களைஆற்றாய்
ஏகம்பா கம்பா
உனக்குத் திருவிளையாட் டோ. 1

## 14. திருக்கச்சிக் காரோணம்

அத்திமுதல் எறும்புஈ
றானஉயிர் அத்தனைக்கும்
சித்தம் மகிழ்ந்துஅளிக்கும்
தேசிகா—மெத்தப்
பசிக்குதையா பாவியேன்
பாழ்வயிற்றைப் பற்றி
இசிக்குதையா காரோண ரே. 1

---

2. சிற்றின்பத்திலா அத்தனை இச்சை உனக்கு! தேரோடும் வீதியிலே போய் அங்குள்ள வீடுகளில் மயங்கிப் பிணமாகக் கிடக்கிறாயே!

1. எத்தனை பிறவிகள்! ஆகையால் எத்தனை வீடுகள், ஊர்கள், தாய் தந்தையர், எத்தனைபேரிட்டு அழைக்க ஏனென்றேன்.

1. இந்த உடம்பின் வாதனை விடவில்லையே என்றபடி.

## 15. திருக்காளத்தி

பொய்யை ஒழியாய்
புலாலைவிடாய் காளத்தி
ஐயரை எண்ணாய்
அறம்செய்யாய்—வெய்ய
சினமே ஒழியாய்
திருஎழுத்துஐந்து ஓதாய்
மனமே உனக்குஎன்ன மாண்பு. 1

## 16. திருஇருப்பையூர்

மாதா உடல்சலித்தாள்
வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவும் கைசலித்து
விட்டானே—நாதா
இருப்பையூர் வாழ்சிவனே
இன்னம்ஓர் அன்னை
கருப்பைஊர் வாராமல் கா. 1

## 17. திருவையாறு

மண்ணும் தணல்ஆற
வானும் புகைஆற
எண்ணரிய தாயும்
இளைப்புஆறப்—பண்ணும்அயன்
கைஆற வும்அடியேன்
கால்ஆற வும்காண்பார்
ஐயா திருவையா றா. 1

---

1. நல்லன, உய்விப்பன எதையும் செய்கிறாயில்லையே என்றவாறு.

1. பிறவிகள் எண்ணற்றவை. எனவே பாடுகிறார், அன்னை ஈன்று ஈன்று உடல்சலித்தார். வினையின் வயமான நான் பிறவிதோறும் அலைந்தலைந்து கால்சலித்தேன். அவனும் (வேதா) படைத்துப் படைத்துக் கைசலித்தான்.

1. அதே கருத்து பிறிதொரு வடிவில் அழகுக் கவியாகி வந்தது.

## 18. திருக்குற்றாலம்

காலன் வருமுன்னே
கண்பஞ் சடைமுன்னே
பால்ஊண் கடைவாய்ப்
படும்முன்னே—மேல்விழுந்தே
உற்றார் அழுமுன்னே
ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு. 1

## 19. பொது

சிற்றம் பலமும்
சிவனும் அருகுஇருக்க
வெற்றம் பலம்தேடி
விட்டோமே—நித்தம்
பிறந்தஇடம் தேடுதே
பேதைமட நெஞ்சம்
கறந்தஇடம் நாடுதே கண். 1

தோடுஅவிழும் பூங்கோதைத்
தோகைஉனை இப்போது
தேடினவர் போய்விட்டார்
தேறிஇரு—நாடிநீ
என்னை நினைத்தால்
இடுப்பில் உதைப்பேன்நான்
உன்னை நினைத்தால் உதை. 2

---

1. ஆண்டவன் ஆண்டியப்பப்பிள்ளை அவர்கள் உருக்கத்தோடு விளம்பும் பாடல் இது. மரணத்தை ஒரு சொல்லோவியமாக வண்ணச் சொற்களிலே தீட்டுகிற கவிதை இது.

1. பிறந்த இடம் - கருக்குழி. கறந்த இடம் - பாலுண்ட மார்பு.

2. இது சிற்றின்ப சாதனத்தை நேருக்குநேர் தாக்குகிற ஒரு சொல் - உதையாகும்!

வாசல் படிகடந்து
    வாராத பிச்சைக்குஇங்கு
ஆசைப் படுவதுஇல்லை
    அண்ணலே—ஆசைதனைப்
பட்டுஇறந்த காலம்எல்லாம்
    போதும் பரமேட்டி
சுட்டுஇறந்த ஞானத்தைச் சொல். 3

நச்சரவம் பூண்டானை
    நன்றாய்த் தொழுவதுவும்
இச்சையிலே தான்அங்கு
    இருப்பதுவும்—பிச்சைதனை
வாங்குவதும் உண்பதுவும்
    வந்துதிரு வாயிலிலே
தூங்குவதும் தானே சுகம். 4

இருக்கும் இடம்தேடி
    என்பசிக்கே அன்னம்
உருக்கமுடன் கொண்டுவந்தால்
    உண்பேன்—பெருக்க
அழைத்தாலும் போகேன்
    அரனேஎன் தேகம்
இளைத்தாலும் போகேன் இனி. 5

---

3. இனி ஆசை இல்லை. அந்தக் காலம் எல்லாம் போய்விட்டது என்றபடி.

4. துறவியின் பற்றற்ற வாழ்வை முறையாகக் கூறுகிறவாறு.

5. அங்கிங்கு நகராமல் அமர்ந்துவிட்ட துறவியின் நிலை கூறியவாறு.

விட்டுவிடப் போகுதுஉயிர்
விட்டஉட னேஉடலைச்
சுட்டுவிடப் போகின்றார்
சுற்றத்தார்—பட்டதுபட்டு
எந்நேர மும்சிவனை
ஏத்துங்கள் போற்றுங்கள்
சொன்னேன் அதுவே சுகம். 6

ஆவியொடு காயம்
அழிந்தாலும் மேதினியில்
பாவிஎன்று நாமம்
படையாதே—மேவியசீர்
வித்தார மும்கடம்பும்
வேண்டாம் மடநெஞ்சே
செத்தாரைப் போலே திரி. 7

வெட்டவெளி யான
வெளிக்கும் தெரியாது
கட்டளையும் கைப்பணமும்
காணாதே—இட்டமுடன்
பற்றுஎன்றால் பற்றாது
பாவியேன் நெஞ்சில்அவன்
இற்றுஎனவே வைத்த இனிப்பு. 8

---

6. மரணம் காத்திருப்பதைச் சொல்லி எச்சரிக்கிறது இந்தப் பாடல்.

7. அமைதியோடு இருக்கவேண்டும். படாடோபங்களும் ஆடம்பரங்களும் வேண்டாம் என்பதை வற்புறுத்தியது.

8. இது தனக்குத் தானே காண்கிற இனிப்பாகிய தற்போத ஆனந்த நிலை என்னும் சித்தர் ஞானம்!

...ANDAVAR ... 371
A. No. 12849.
...RARY, KOVILOOR

இப்பிறப்பை நம்பி
இருப்பாரோ நெஞ்சமே
வைப்புஇருக்க வாயில்
மனைஇருக்கச்—சொப்பனம்போல்
விக்கிப்பல் கிட்டக்கண்
மெத்தப்பஞ்சு இட்டுஅப்பைக்
கக்கிச்செத் துக்கொட்டக் கண்டு. 9

மேலும் இருக்க
விரும்பினையே வெள்விடையோன்
சீலம் அறிந்திலையே
சிந்தையே—கால்கைக்குக்
கொட்டைஇட்டு மெத்தைஇட்டுக்
குத்திமொத்தப் பட்டஉடல்
கட்டைஇட்டுச் சுட்டுவிடக் கண்டு. 10

ஒன்பதுவாய்த் தோல்பைக்கு
ஒருநாளைப் போலவே
அன்புவைத்து நெஞ்சே.
அலைந்தாயே—வன்கழுக்கள்
தத்தித்தத் திச்செட்டை
தட்டிக்கட் டிப்பிட்டுக்
கத்திக்குத் தித்தின்னக் கண்டு. 11

---

9. மரணத்தின் தன்மைகளைப் பார்த்த பின்பும் இந்தப் பிறப்பிலே இத்தனை நம்பிக்கையா என்றவாறு.

10. இந்தப் பாடலின் கடைசி இரண்டு அடிகளை ரசிகமணி தான பாவத்துடன் பாடுவது இன்னும் என் செவியில் கேட்டுக் கொண் டிருக்கிறது.

11. இந்தப் பாடலில் உடல் அழிவு ஓசை விம்முகிற சொற்களிலே படம் பிடிக்கப்படுகிறது. வன்கழுக்கள் தத்தித்தத்தி, செட்டை தட்டி, கட்டி, பிட்டு, கத்தி, குத்தி தின்னக் கண்டு என்று பிரிக்க.

இன்னம் பிறக்க
இசைவையோ நெஞ்சமே
மன்னர்இவர் என்றுஇருந்து
வாழ்ந்தவரை—முன்னம்
எரிந்தகட்டை மீதில்
இணைக்கோ வணத்தை
உரிந்துஉருட்டிப் போட்டது கண்டு. 12

முதல்சங்கு அமுதுஊட்டும்
மொய்குழலார் தம்மை
நடுச்சங்கம் நல்விலங்கு
பூட்டும்—கடைச்சங்கம்
ஆம்போது அதுஊதும்
அம்மட்டோ இம்மட்டோ
நாம்பூமி வாழ்ந்த நலம். 13

எத்தனைநாள் கூடி
எடுத்த சரீரம்இவை
அத்தனையும் மண்தின்பது
அல்லவோ—வித்தகனார்
காலைப் பிடித்துமெள்ளக்
கங்குல்பகல் அற்றிடத்தே
மேலைக் குடிஇருப்போ மே. 14

---

12. பிணம் என்றால் அதில் அரசப் பிணத்திற்கும் மற்றப் பிணங்களுக்கும் ஈமச் சடங்கில் வேறுபாடு ஏது?

13. வாழ்வில் மூன்று முறை சங்கு வருகிறது. முதற்சங்கு குழந்தைக்குப் பாலூட்டும் சங்கு. இரண்டாவது சங்கு வளையலாகத் திருமணத்தை நடத்துகிறது. மூன்றாவது சங்கு ஓசையுடன் ஊதி வழி அனுப்புகிறது.

14. கங்குல் பகல் அற்ற இடத்திற்குக் காலைப் பிடித்துச் சென்று, அதாவது சுவாசப் பயிற்சியினால் சென்று மேலைக் குடியாகிய சகஸ்ர தளம் புகுவது அனைத்தும் சித்தர் ஞானக் கல்வி இரகசியங்களாம்.

எச்சில்என்று சொல்லி
இதம்அகிதம் பேசாதீர்
எச்சில் இருக்கும்
இடம்அறியீர்—எச்சில்தனை
உய்த்துஇருந்து பார்த்தால்
ஒருமை வெளிப்படும்பின்
சித்தம் நிராமயம்ஆமே. 15

எத்தனைபேர் நட்டகுழி
எத்தனைபேர் தொட்டமுலை
எத்தனைபேர் பற்றி
இழுத்தஇதழ்—நித்தம்நித்தம்
பொய்அடா பேசும்
புவியின்மட மாதரைவிட்டு
உய்அடா உய்அடா உய். 16

இருப்பதுபொய் போவதுமெய்
என்றுஎண்ணி நெஞ்சே
ஒருத்தருக்கும் தீங்கினைஉன்
னாதே—பருத்ததொந்தி
நம்மதுஎன்று நாம்இருப்ப
நாய்நரிகள் பேய்கழுகு
தம்மதுஎன்று தாம்இருக்கும் தான். 17

---

15. எச்சில் இடம் என்பது சித்தர் இலக்கியத்தில் வருகிற அண்ணாக்கின் தொடர்புள்ள ஞான மையமாம்.

16. பட்டினத்தடிகளின் யாக்கை நிலையாமை பற்றிய சொற்சித்திரம் அவருக்கே உரிய தனிப்பண்புடன் வருகிறது.

17. இதுவும் முந்திய பாடலைப் போலவே தனிப்பண்புடன் விளங்குகிறது. இதிலுள்ள நகைச்சுவை ஒப்பற்றது.

எத்தொழிலைச் செய்தாலும்
ஏதுஅவத்தைப் பட்டாலும்
முத்தர் மனம் இருக்கும்
மோனத்தே—வித்தகமாய்க்
காதிவிளை யாடிஇரு
கைவீசி வந்தாலும்
தாதிமனம் நீர்க்குடத்தே தான். 18

மாலைப் பொழுதில்நறு
மஞ்சள்அரைத் தேகுளித்து
வேலை மினக்கிட்டு
விழித்துஇருந்து—சூல்ஆகிப்
பெற்றாள் வளர்த்தாள்
பெயரிட்டாள் பெற்றபிள்ளை
பித்துஆனால் என்செய்வாள் பின். 19

### 20. அன்னையாருக்கு இறுதிக்கடன் இயற்றும்பொழுது பாடியவை

ஐயிரண்டு திங்களாய்
அங்கம்எலாம் நொந்துபெற்றுப்
பையல்என்ற போதே
பரிந்துஎடுத்துச்—செய்யஇரு
கைப்புறத்தில் ஏந்திக்
கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி. 1

---

18. காதி – ஒலிசெய்து. தாதிமனம் – தோழியின் மனம். நீர்க்குடம் கீழே விழாதவாறு அவளுடைய கருத்து எந்தக் கைவீச்சுக்கு நடுவிலும் குடத்திலேயே நிற்கும் என்றவாறு.

19. வேலை மினக்கிட்டு என்ற சொல் கவிஞனுடைய ஏளன நகைச் சுவையை நன்கு எடுத்துக்காட்டுகிறது.

1. ஐயிரண்டு திங்கள் – பத்து மாதம். இங்கே மாதம் என்பது சந்திரனை வைத்த கணக்கு. அதாவது திங்கள் என்ற சொல்லுக்கு ஏற்ப வளர்பிறை தேய்பிறை ஆகிய கணக்கின்படி பத்துமாதம் என்பது 267 முதல் ஐந்தாறு திதி நாள் முன்பின்னாக வருவது. இக்கால விஞ்ஞானக் கணக்கும் அதுவே.

முந்தித் தவம்கிடந்து
    முந்நூறு நாள்சுமந்தே
அந்திபக லாச்சிவனை
    ஆதரித்துத்—தொந்தி
சரியச் சுமந்துபெற்ற
    தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன். 2

வட்டிலிலும் தொட்டிலிலும்
    மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்துஎன்னைக்
    காதலித்து—முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச்
    சீராட்டும் தாய்க்கோ
விறகில்இட்டுத் தீமூட்டு வேன். 3

நொந்து சுமந்துபெற்று
    நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்துஎடுத்துத்
    தாழாமே—அந்திபகல்
கையிலே கொண்டுஎன்னைக்
    காப்பாற்றும் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன். 4

---

2. இங்கே நாள் என்றது நாழிகைக் கணக்கின்படி வருகிற திதியை யாகும்.

3. காதலித்து – தாயன்பு செலுத்தி.

4. முலைதந்து – பாலூட்டி.

அரிசியோ நான்இடுவேன்
    ஆத்தாள் தனக்கு
வரிசைஇட்டுப் பார்த்து
    மகிழாமல்—உருசிஉள்ள
தேனே அமிர்தமே
    செல்வத் திரவியப்பூ
மானே எனஅழைத்த வாய்க்கு. 5

அள்ளி இடுவது
    அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ
    கூசாமல்—மெள்ள
முகமேல் முகம்வைத்து
    முத்தாடி என்றன்
மகனே எனஅழைத்த வாய்க்கு. 6

முன்னை இட்டதீ
    முப்பு ரத்திலே
பின்னை இட்டதீ
    தென்இ லங்கையில்
அன்னை இட்டதீ
    அடிவ யிற்றிலே
யானும்இட்டதீ மூள்க மூள்கவே. 7

5. அரிசி -- பிணத்துக்கு வாயில் இடும் 'வாய்க்கரிசி'.

6. முத்தாடி - முத்தங்கள் சொரிந்து.

7. ஆறு வெண்பாக்களை அடுத்து வருகிற இந்த விருத்தம் வரலாற்றுப் புகழ்மிக்க நெருப்புக்களை நினைவு கூர்கிறது.

வேகுதே தீஅதனில்
வெந்துபொடி சாம்பல்
ஆகுதே பாவியேன்
ஐயகோ—மாகக்
குருவி பறவாமல்
கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்துஎடுத்த கை. 8

வெந்தாளோ சோணகிரி
வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை
மறந்தாளோ—சந்ததமும்
உன்னையே நோக்கி
உகந்துவரம் கிடந்துஎன்
தன்னையே ஈன்றுஎடுத்த தாய். 9

வீற்றிருந் தாள்அன்னை
வீதி தனில்இருந்தாள்
நேற்றுஇருந்தாள் இன்றுவெந்து
நீறுஆனாள்—பால்தெளிக்க
எல்லீரும் வாருங்கள்
ஏதுஎன்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம். 10

---

8. மாகக் குருவி பறவாமல் – பட்சி தோடம் பற்றாதவாறு.

9. சந்ததமும் – எப்போதும்.

10. பால்தெளித்தல் – சாம்பல் கரைக்கும் முன் நடக்கும் ஈமச் சடங்குகளுள் ஒன்று. தமிழ் மக்களின் சில மரபுகள் வழிவழியாக மாறுபாடின்றி வருகின்றமைக்கு இவை சான்றாம்.

## 21. திருவெண்காட்டுத் திருவிசைப்பா

பூதமும் கரணம் பொறிகள்ஐம் புலனும்
பொருந்திய குணங்கள்ஓர் மூன்றும்
நாதமும் கடந்த வெளியிலே நீயும்
நானுமாய் நிற்கும்நாள் உளதோ
வாதமும் சமய பேதமும் கடந்த
மனோலய இன்பசா கரமே
ஏதும்ஒன்று அறியேன் யாதுநின் செயலோ
இறைவனே ஏகநா யகனே. 1

யாவரே இருந்தும் யாவரே வாழ்ந்தும்
யாவரே எமக்குஉற வாயும்
தேவரீர் அல்லால் திசைமுகம் எனக்குத்
திருஉளம் அறியவேறு உளதோ
பாவலன் ஒருவன் செந்தமிழ்க்கு இரங்கிப்
பரவையார் ஊடலை மாற்ற
ஏவலாள் ஆகி இரவெல்லாம் உழன்ற
இறைவனே ஏகநா யகனே. 2

உண்டதே உண்டும் உடுத்ததே உடுத்தும்
அடுத்துஅடுத்து உரைத்ததே உரைத்தும்
கண்டதே கண்டும் கேட்டதே கேட்டும்
கழிந்தன கடவுள்நாள் எல்லாம்
விண்டதா மரைமேல் அன்னம்வீற்று இருக்கும்
விழவறா வீதிவெண் காடா
அண்டரே போற்ற அம்பலத்து ஆடும்
ஐயனே உய்யுமாறு அருளே. 3

---

1. இப்பாடலில் வருகிற நாதமும் கடந்த வெளி என்பது யோகப் பயிற்சியிலே கூறப்படுகிற சிதாகாசப் பெருவெளியாகும்.

2. மூன்றாம் அடியில் வருகிற பாவலன் தம்பிரான் தோழராகிய சுந்தரர்.

3. கடவுள்நாள் – இறைவன் தந்த வாழ்நாள். இந்த மூன்று பாடல்களும் திருவிசைப்பா என்ற தலைப்பில் கூறப்பெற்றமை, இவை பண்ணமைந்த பாடல்கள் என்பது பற்றியாம்.

## 22. தனிவிருத்தம்

நாப்பிளக்கப் பொய்உரைத்து நவநிதியம் தேடி
நலன்ஒன்றும் அறியாத
நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க வருகின்ற புற்றுஈசல் போலப்
புலபுலஎனக் கலகலஎனப்
புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவும் மாட்டீர்
கவர்பிளந்த மரத்துளையில்
கால்நுழைத்துக் கொண்டே
ஆப்புதனை அசைத்துவிட்ட குரங்கதனைப் போலே
அகப்பட்டீர் கிடந்துஉழல
அகப்பட் டீரே.

## 23. உடல் கூற்று வண்ணம்

ஒரு மடமாதும் ஒருவனும் ஆகி
இன்பசுகம்தரும் அன்பு பொருந்தி
உணர்வுகலங்கி ஒழுகியவிந்து
ஊறுசுரோணித மீதுகலந்து

பனியில்ஓர்பாதி சிறுதுளிமாது
பண்டியில்வந்துபு குந்துதிரண்டு
பதுமஅரும்பு கமடம்இதென்று
பார்வை மெய்வாய்செவி கால்கைகள்என்ற —

---

22. இக வாழ்வில் சிக்குண்டு தவிப்பதை மரத்துளையில் கால்நுழைத்த குரங்கு ஆப்பை அசைத்தமையோடு ஒப்பிட்டமை — என்றவாறு.

23. இந்தப் பாடல் ஒருவனும் ஒருத்தியும் கூடி, சிற்றின்பம் தோய்ந்து, அந்நிலையில் விந்து சுரோணிதங்கள் கலந்து கரு உண்டாவதைச் சொல்லி மரணம் வரை மனித ஆட்ட சாட்டங்களைப் படம் பிடிக்கிறது.

உருவமும்ஆகி உயிர்வளர்மாதம்
ஒன்பதும்ஒன்றும் நிறைந்துமடந்தை
உதரம்அகன்று புவியில்விழுந்து
யோகமும்வாரமும் நாளும் அறிந்து—

மகளிர்கள்சேனை தரஅணைஆடை
மண்டபஉந்திஉ தைந்துகவிழ்ந்து
மடமயில்கொங்கை அமுதம்அருந்தி
ஓர்அறிவுஈர் அறிவுஆகிவளர்ந்து—

ஒளிநகைஊறல் இதழ்மடவாரும்
உவந்துமுகந்திட வந்துதவழ்ந்து
மடியில்இருந்து மழலைமொழிந்து
வாஇருபோஎன நாமம் விளம்ப—

உடைமணிஆடை அரைவடம்ஆட
உண்பவர்தின்பவர் தங்களொடுஉண்டு
தெருவில்இருந்து புழுதிஅளைந்து
தேடியபாலரொடு ஓடிநடந்து
அஞ்சுவயதாகி விளையாடியே—

உயர்தருஞான குருஉபதேச
முத்தமிழின்கலை யும்கரைகண்டு
வளர்பிறைஎன்று பலரும்விளம்ப
வாழ்பதினாறுபி ராயமும்வந்து—

மயிர்முடிகோதி அறுபதநீல
வண்டுஇமிர்தண்தொடை கொண்டைபுனைந்து
மணிபொன்இலங்கு பணிகள்அணிந்து
மாகதர்போகதர் கூடிவணங்க—

---

பண்டி – கருப்பை. கரு சிசு வடிவில் வெளிவந்த நேரம் தொடங்கி ஐந்து வயதாகி விளையாடுகிற வரை, பிள்ளையின் பருவ வளர்ச்சியையும், அந்த வளர்ச்சியின் நிலைகளையும் விரிவு படுத்திக் காட்டுகிறது பாடலின் இப்பகுதி.

ஐந்து வயது தாண்டிப் பதினாறு வயதை எட்டுவதும், பிறகு குஞ்சியழகு பொலிவதும், பின்னர் பெண்கள் இவனை நாட இவன் அவரை நாட அதன் விளைவாய்ச் சிற்றின்ப மயக்கில் ஆழ்ந்து என்றவாறு.

மதனசொரூபன் இவன்எனமோக
 மங்கையர்கண்டும ருண்டுதிரண்டு
வரிவிழிகொண்டு சுழியஎறிந்து
 மாமயில்போல்அவர் போவதுகண்டு—

மனதுபொறாமல் அவர்பிறகுஓடி
 மங்கலசெங்கல சந்திகழ்கொங்கை
மருவமயங்கி இதழ்அமுதுண்டு
 தேடியமாமுதல் சேரவழங்கி—

ஒருமுதல்ஆகி முதுபொருளாய்இ
 ருந்ததனங்களும் வம்பில்இழந்து
மதனசுகந்த விதனம்இதுஎன்று
 வாலிபகோலமும் வேறுபிரிந்து—

வளமையும்மாறி இளமையும்மாறி
 வன்பல்விழுந்துஇரு கண்கள்இருண்டு
வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
 வாதவிரோதகு ரோதம்அடைந்து
 செங்கையினில்ஓர்த டியும் ஆகியே—

வருவது போவது ஒருமுதுகூறு
 மந்திஎனும்படி குந்திநடந்து
மதியும்அழிந்து செவிதிமிர்வந்து
 வாய்அறியாமல்வி டாமல்மொழிந்து—

துயில்வரும்நேரம் இருமல்பொறாது
 தொண்டையும்நெஞ்சும்உ லர்ந்துவறண்டு
துகிலும்இழந்து சுணையும்அழிந்து
 தோகையர்பாலர்கள் கோரணிகொண்டு—

கலியுகம்மீதில் இவர்மரியாதை
 கண்டிடும்என்பவர் சஞ்சலம்மிஞ்ச
கல்கலஎன்று மலசலம்வந்து
 கால்வழிமேல்வழி சாரநடந்து—

---

இளமை அத்தமிக்கத் தொடங்குகிறது. என்ன மாறுதல் ஏற்படுகிறது என்பதைப் படிப்படியாக ஒன்பான் சுவையும் தன்பால் பொதிந்து கவிமொழியாக வருகின்றன இந்த வரிகள்.

தெளிவும்இராமல் உரைதடுமாறி
சிந்தையும் நெஞ்சம்உ லைந்துமருண்டு
திடமும்அழிந்து மிகவும்அலைந்து
தேறிநல்ஆதரவு ஏதுஎனநொந்து—

மறையவன்வேதன் எழுதியவாறு
வந்ததுகண்டமும் என்றுதெளிந்து
இனியெனகண்டம் இனிஎனதொந்தம்
மேதினிவாழ்வுநி லாதினிநின்ற—

கடன்முறை பேசும் எனஉரைநாவு
தங்கிவிழுந்துகை கொண்டுமொழிந்து
கடைவழிகஞ்சி ஒழுகிடவந்து
பூதமுநாலுசு வாசமும்நின்று
நெஞ்சுதடுமா றிவரும்நேரமே—

வளர்பிறைபோல எயிறும்உரோம
முஞ்சடையும்சிறு குஞ்சியும்விஞ்ச
மனதும்இருண்ட வடிவும்இலங்க
மாமலைபோல்யம தூ தர்கள்வந்து—

---

முதுமையின் கொடுமை உடலை எவ்வாறு தாக்குகிறது பாருங்கள் என்று உடல்நிலையை நம்முன் காட்டுகிறது பாடலின் இந்தப் பகுதி.

உடம்பின் நிலையாமையை வற்புறுத்துவதற்காக, மனித வாழ்வின் தொடக்கத்திலிருந்து முடிவு வரை உண்டாகிற நிகழ்ச்சிகளை ஒரு ஞானியின் நோக்கில் இயம்புகிறது இந்தப் பாடல். இத்தனை வரிகளில் இவ்வளவு விரிவாக இந்தப் பாடலில் உடலின் கதையைக் கூற வேண்டியதன் நோக்கம் என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும்.

உடம்பிருக்கும் போதே நிலையான பேரின்பப் பெருவாழ்வுக்குரிய ஞான வினைகளைச் செய்யவேண்டும் என்பதைத் தெளிவுடன் உணர்த்துவதற்காக, இந்தச் சிற்றின்பச் சிறுவாழ்வின் புன்மையையும் நொய்ம்மையையும் தெளிவோடு படம் பிடித்துக் காட்டுகிறார் பட்டினத்தடிகள்.

வலைகொடுவீசி உயிர்கொடுபோக
மைந்தரும்வந்துகு னிந்தழநொந்து
மடியில்விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கினரேஇவர் காலம்அறிந்து

பழையவர்காணும் எனும்அயலார்கள்
பஞ்சுபறந்திட நின்றவர்பந்தர்
இடும்எனவந்து பறையிடமுந்த
வேபிணம்வேக விசாரியும்என்று

பலரையும்ஏவி முதியவர்தாம்இ
ருந்தசவம்கழு வுஞ்சிலர்என்று
பணிதுகில்தொங்கல் களபம்அணிந்து
பாவகமே செய்து நாறும்உடம்பை

வரிசைகெடாமல் எடும்எனஓடி
வந்துஇளமைந்தர்கு னிந்துசுமந்து
கடுகிநடந்து சுடலைஅடைந்து
மானிடவாழ்வென வாழ்வெனநொந்து

விறகுஇடைமூடி அழல்கொடுபோட
வெந்துவிழுந்துமு றிந்துநிணங்கள்
உருகிஎலும்பு கருகிஅடங்கி
ஓர்பிடிநீறும்இ லாதஉடம்பை
நம்பும்அடியேனை இனிஆளுமே.

---

எமதூதர்கள் வந்து 'வலைகொடு வீசி உயிர்கொடுபோதலே இறுதி முடிவு. அப்போது மைந்தர் வந்து குனிந்து அழுவதும், மடியில் விழுந்து மனைவி புலம்புவதும், இதனைத் தொடர்கின்ற நிகழ்ச்சிகளுமாக மனத்தை உருக்கும் அடிகளிலே பட்டினத்தாரின் பாடல் செல்கிறது. இறுதியாக வருகிற வரிகள் இதைச் சித்தரிக்கின்றன.

விறகு கொண்டு மூடி அழல்கொண்டு போட இந்த உடம்பு வெந்து, விழுந்து, முறிந்து, நிணங்கள் உருகி, எலும்பு கருகி, எல்லாம் சாம்பலாக அடங்கிவிடுகிறது. ஓர் பிடி நீறு தேறுமா? இப்படிப்பட்ட இந்த உடம்பை நம்புகிற அடியேனை இறைவனே நீர் இனிமேல் ஆண்டு வழிநடத்த வேண்டும் எனபது பட்டினத்து அடிகளின் சித்தர் மொழி ஆகும்.

# பட்டினத்தடிகளின் பாடல்கள்

இந்தத் தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ள பட்டினத்தார் பாடல்கள் திருமுறைகளில் உள்ளவை தவிர, வேறு சில தொகுப்புக்களிலும், சுவடிகளிலும் காணப் பெறுகின்றன. இவற்றின் காலத்தைப் பற்றி அறிஞர்களிடையே பல கருத்து வேற்றுமைகள் நிலவுகின்றன.

சித்தர்களிலேயே மக்களிடையே மிகவும் விரிவாகப் பரவியுள்ள சித்தர் பட்டினத்தார் என்று சொன்னால் பொருந்தும். தமிழகத்தில் வேறு எந்தச் சித்தரின் பாடல்களையும்விடப் பட்டினத்தாரின் பாடல்களே மக்களிடையே அதிகமாக வழங்கிவருகின்றன. இவற்றிலும் திருமுறையில் காணப்படுகிற பட்டினத்தாரின் பாடல்களைவிட, மற்றத் தொகுப்புக்களில் உள்ள பாடல்களே இன்னும் பரவலான புகழோடு விளங்கி வருகின்றன. அதோடு இந்த இரண்டு பாடற் தொகுப்புக்களையும் இயற்றியவர் இருவேறு கவிஞர்கள் என்ற கருத்தும் தமிழுலகத்திலே நன்கு நிலைபெற்றுள்ளது.

பட்டினத்தார் என்னும் பெயர் பெற்ற ஞானி ஒரே கவிஞரா, இருவரா அல்லது மூவரா என்னும் ஐயங்கள் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். இந்த வரலாற்றை ஆராய்ந்து புறச் சான்றுகளையும் அகச் சான்றுகளையும் இயைபுடன் பொருத்தித் தெள்ளத் தெளிவான முடிவை இதுகாறும் யாரும் அறுதியிடவில்லை. அந்த முடிவுக்குரிய போதிய சான்றுகள் நமக்குக் கிடைக்கவில்லை. என்றாலும் ஒரு சிலர் பட்டினத்தடிகள் இருவர் என்று ஓரளவு தெளிவோடு கூறியுள்ளார்கள். ஆனாலும் இவர்களுமே தக்க சான்றுகள் இல்லாத நிலையில், சில குழப்பமான ஊகங்களையும் தருகிறார்கள்! சான்றாக, நமது திருமுறைகளில் இடம் பெறுகிற பட்டினத்தார் பிற்காலத்தவர் என்றும், பிற தொகுப்புக்களிலே வருகிற தனிப்பாடல்கள் பலவற்றின் ஆசிரியரான பட்டினத்தார் அவருக்கு முந்தியவர் என்றும் சிலர் கூறுகிறார்கள். அதோடு, கோயில் நான்மணி மாலை பாடிய பட்டினத்தார் தேவார காலத்திற்குச் சற்றுப் பிந்தியவர் என்றும், திருமுறையில் இல்லாத பாடல்களைப் பாடிய பட்டினத்தார் இவருக்குப் பல நூற்றாண்டுகள் முந்தியவர் என்றும் கூறுவதற்குக் காரணம், இந்தப் பாடல்களின் அமைதியும், பொருள் வைப்பு முறையும் என்று கூறி அகச் சான்றுகளுக்கு முக்கியம் தந்து பேசுகிறார்கள்.

இருவரும் ஒருவரே என்ற கருத்தை வெளியிடுகிற சில அறிஞர்கள், ஆரம்பத்தில் சமயங்களையும் சடங்குகளையும் சாடிப் பாடிய பட்டினத்தார், பின்பு அவரே மெருகேறிச் சமயத் துதியிலே தமது ஞானத் தத்துவத்தை வடித்தார் என்று சொல்கிறார்கள்.

வரலாற்றுச் சான்றுகள் திட்டவட்டமான முடிவுக்குத் துணை செய்கிற அளவில் விரிவாக நமக்குக் கிடைக்காத காரணத்தால், இத்தகைய ஊகங்களும் ஐயந்திரிபற்ற முடிவுகளும் தவிர்க்க முடியாதவை. ஆனால் இவற்றை ஆய்வுக்கண் கொண்டு ஆராய்கிறவர்கள் அப்படியே ஒப்புக் கொள்ள இயலாது அல்லவா? எனவே இந்த ஊகங்களுக்குள் சென்று புகுந்து பார்ப்பதில் அத்துணை பயன் இல்லை.

வரலாற்றுக் குறிப்புக்கள் கிடைக்காவிட்டாலும், பாடல்கள் சிதைவின்றி முழுமையும் நமக்குக் கிடைத்திருப்பதே மகிழ்ச்சிக்குரியதாகும். கிடைத்துள்ள பாடல்களைக்கொண்டு பார்த்தால், பாடிய கவிஞர்கள் ஒருவரோ இருவரோ என்றிருந்தாலும், பாடல்களுக்குள்ளே பொருண்மையிலும் கவிச் செலவிலும் ஒருமைப்பாடான ஓர் இயைபு துலங்குகிறது!

இனி, பட்டினத்து அடிகளின் பாடல்கள் இந்த உடம்பு நிலையற்றது என்பதை உவமைகளுடனும், நேர்காட்சி ஓவியங்களுடனும், உள்ளதை உள்ளவாறு இயம்பி, சில இடங்களில் உடம்பில் நமக்கு அருவருப்பு ஏற்படும்படி செய்வதன் நோக்கம் என்ன? பகுத்தறிந்து பார்க்க வேண்டும்.

இந்த நொய்ம்மையான உடம்பையே யோக ஞானக் கருவியாகக் கொண்டு மரணமிலாப் பெருவாழ்வு பெறலாம் என்ற எண்ணத்தோடு சித்தர்களின் வழியிலே பயின்று கடைத்தேறுவதற்கு மக்கள் மெய்யான ஆசை கொள்ளவேண்டும். இந்த உடம்பைக் கொண்டு சிற்றின்பத்தைத் துய்ப்பது போலவே, பேரின்பத்தையும் துய்க்கலாம் என்பதை ஒருவன் உணர்ந்துவிட்டால், பிறகு இந்த உடம்பை வீணடிக்கமாட்டான் அல்லவா?

இந்த நோக்கத்துடன்தான் பட்டினத்து அடிகள் போன்ற ஞான சித்தர்கள் இவ்வாறு யாக்கை நிலையாமையை வற்புறுத்துகிறார்கள். இந்த உடம்பு வெறும் களிமண் என்பதை அழுத்தமாக அறிவுறுத்துகிறார்கள். எதற்காக என்றால், களிமண்ணினால் ஆகிய கலம்தான் நெருப்பில் இட்டதும் தண்ணீரில் கரையாததும் நெருப்பில் வேகாததுமான பானையாக மாறுகிறது. சாதாரணக் களிமண்ணைச் சாதாரண நெருப்பு இப்படி மாற்றிவிடுகிறது. அப்படியானால் 'கருக்குழி'யின் மண்ணாலாகிய இந்த உடம்பாகிய உயிர்ப்பு மட்கலம் ஞானத்தவம் என்ற கனலில் வேகும்போது, எத்தகைய மாறுதலுக்கு உள்ளாகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

திருமூலர் தமது திருமந்திரத்தில் இந்த உடம்பை இரசவாதம் செய்கிற அவசியத்தையும் அதற்குரிய வழிவகைகளையும் பேசுகிறார். உண்மையில் சித்தர் இலக்கியத்தின் குறிக்கோளே இதுதான். உடம்புக்குள்ளே இருந்த ஒன்றை உணர்ந்துகொண்டு, இந்த உடம்பைக் கொண்டே அந்த ஒன்றைப் பற்றி நின்று, நிலையான பேரின்பத்தைப் பெறவேண்டும் என்பதே சித்தர் இலக்கியத்தின் நோக்கமும் பயனும் ஆம்.

பட்டினத்தடிகள் இந்த நோக்கத்தையும் பயனையும் மனத்திற் கொண்டு, சிற்றின்ப வாழ்க்கையில் நமக்கு வெறுப்புத் தோன்றினால் நம் மனமானது பேரின்பத்தை நாடும் என்ற கருத்துடன், உலக வாழ்வின் நிலையாமையை வற்புறுத்தும் முறையிலே உலக இச்சைகளின் புன்மையைச் சாடி வெறுப்பை உண்டாக்குகிறார்!

அடிகளின் வாழ்வில் ஏற்பட்ட மனமாற்றம் இந்தச் சிற்றின்பச் சீற்றத்திற்கு வேகம் ஏற்றுகிறது என்ற அடிப்படையை நாம் மறந்துவிடக் கூடாது.

மண் ஆசையையும், பொன் ஆசையையும் ஓரளவு முயன்றால் விட்டு விடலாம். ஆனால் எளிதில் விடமுடியாத ஒரு மிகப்பெரிய ஆசை பெண் ஆசையே ஆகும்.

எத்தனையோ துறவிகளின் வாழ்வில் பெண் ஆசையானது விளைத்த விபரீதங்களைப் பார்க்கிறோம் அல்லவா? எனவேதான் பட்டினத்தடிகளின் பாடல்களில் பெண் ஆசையையும், சிற்றின்பத்தையும் காய்கிற கவிக்கனல் கடுமையாகக் கனன்று தீக் கங்கைக் கக்குகிறது!

தாயென்று வணங்கவேண்டிய மாதர் குலத்தைப் பேய் என்று பட்டினத்தார் சாடுகிறாரே என்று நமக்கு ஐயம் எழும்போதெல்லாம் ஓர் உண்மையை நாம் உள்ளத்தில் நினைவு கூர வேண்டும். அதாவது அடிகள் சாடுவது பாவிகள் மீது இல்லை. ஆனால், அவர்கள் இழைக்கிற பாவத்தின் மீதுதான்.

மனித குலத்தைப் பட்டினத்தடிகள் தூற்றவில்லை. ஆனால், மனித குலத்தின் ஒழுக்கக்கேட்டைத் தூற்றுகிறார். அவருடைய சினம் தீயவர்களைக் காய்வது போலத் தோற்றம் தந்து, தீமையைத்தான் காய்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இது ஒரு கவி உத்தி என்பது மட்டுமில்லை; அடிகளின் இதயத்தில் ஏற்பட்ட மாற்றம், வாழ்விலே அவர் கொண்ட துறவறத்தின் அடிப்படை, அவரது உள்ளப்பாங்கு அனைத்துமே கவிமொழியாக உருவம் கொள்கின்றன. எனவே கவிதையிலே நாம் கேட்பது அடிகளாரின் ஆன்மக்குரல் என்றே சொல்லவேண்டும். அந்த ஆன்மக் குரலுக்குச் செவி சாய்த்தோமானால், பட்டினத்தடிகள் அருளிய சித்தரிலக்கியப் பொருண்மையின் பயனை உணர்ந்து தெளிவடைவோம். அடிகளின் நோக்கமும் அதுவேயாகும்!

# கவிதை வேள்வியிலே பாட்டவி

சித்தர்களுடைய பயிற்சி முறைகளையும், அவர்களுடைய இலக்கிய வெளியீடுகளையும் ஆராய்ந்து பார்க்கும்போது, இந்த மகான்களுடைய வாழ்வே ஒரு நித்தியத் தவமாக விளங்குவதைக் காண்கிறோம்.

ஞான வாழ்வு என்பது ஒரு பெரிய வேள்வியேயாகும். அது மனத்திலே இயற்றுகிற ஒரு மாபெரும் யாகமாகும்.

யாகம் செய்வதற்கு முன்பு, அந்த வேள்வியைச் செய்கிற இடத்தை, நிலத்தை, எவ்வித அழுக்குமின்றி எவ்வாறு பெருக்கி மெழுகிக் கோல மிடுகிறோமோ, அவ்வாறே மனித மனத்திலிருந்து மாசுகளை அகற்றி, இன்னல் தருகிற சிற்றின்ப இச்சைகளைத் தூர்த்துத்தள்ளி, உள்ளத்தைத் துப்புரவாக்கிக் கொள்ள வேண்டும்.

இந்தத் துப்புரவுப் பணியைச் செய்வதற்காகத்தான் பல நீதி போதனைகளை ஆரம்ப நிலைப் பாடமாகச் சித்தர் இலக்கியம் நமக்கு உணர்த்துகிறது. இந்தத் தூய்மைப் பணியான தொடக்கப் பகுதியை நமது ஆய்வு நூலின் முதலாவது பகுதியிலே நாம் விரிவாகக் கண்டோம்.

நிலத்தை அழுக்கிலிருந்து சுத்தப்படுத்திய பிறகு, மெழுகிக் கோலமிட்டு அலகிட்டு வேள்விக் கூடம் சமைக்கப்படுகிறது அல்லவா? அந்த இரண்டாவது நிலைப் பணிக்குரிய இலக்கிய முறைகளையும், விதி கூறும் நூல் இலக்கணங்களையும், சான்று விரிவுகளையும், இரண்டாம் பகுதியிலே கண்டோம்.

யாக சாலை ஆயத்தமானதும் வேள்வி தொடங்குகிறதல்லவா? அந்த வேள்வியிலே தொண்டு நெறி, நன்மகவு நெறி, தோழமை நெறி, நன்னெறி என்கிற சரியையாளர்களின் அவி, கிரியையாளர்களின் அவி, யோகிகளின் அவி, ஞானிகளின் அவி என்று சொரிய வேண்டும் அல்லவா? இந்த முறையிலேதான் திருமுறைகளிலுள்ள சித்தர்களின் பாடல்களும், அதே நெறி தழுவிய இன்னும் சில பாடல்களும் சித்தர் இலக்கியத்தின் மூன்றாம் பகுதியாகிய இந்தத் தொகுப்பிலே சேர்க்கப் பட்டுள்ளன.

ஆம்; சித்தர்களுடைய ஞான வேள்வியானது ஒரு கவித்தவமாக மிளிர்கிற உலகமே சித்தர்களின் இலக்கிய உலகமாகும்!

ஆம்; சித்தர்களுடைய கவிதை இலக்கியம் ஒரு கவிதை வேள்வியே யாகும். அவர்களுடைய பாடல் ஒவ்வொன்றும் எம்பெருமானுக்குச் செய்கிற யாகத்திலே சொரிகிற பாடல் என்னும் அவிசாகும்!

திருமூலர் இந்த அவிசை எப்படி அழைக்கிறார்? பாட்டவி என்கிறார். அதாவது பாடலாகிய அவிசு! அதைச் சொரிந்து ஞான வேள்வியாகிய கவியாகத்தைச் செய்கிறாராம் சித்தர் பெருமானாகிய திருமூலர்.

திருமூலர் தாம் பெற்ற பேரின்பத்தை இந்த வையகம் முழுதும் பெற்றிடுமாக என்று தமது ஆசையாகவும் தமது வாழ்த்தாகவும் சொல்கிறார் அல்லவா. 'பெறுக இவ் வையகம்' என்று ஆசி தருகிறார் அல்லவா, அந்தத் திருமந்திரத்தை ஒரு வேள்வி என்றே இந்த மகான் குறிப்பிடுகிறார்!

இறைவனை நோக்கிக் கவிதையிலே அஞ்சலி செலுத்துகிற சித்தர்களின் பாடலுக்கும், பிற கவிஞர்களின் பாடலுக்கும் உள்ள அடிப்படையான வேறுபாடு இதுதான். ஒன்று மொழி வேள்வி, மற்றது மொழிப்படைப்பு. இரண்டும் சிறப்பானவைதாம். சந்தேகமில்லை. ஆனால் இரண்டும் இருவேறு நிலைகள் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இலக்கிய வேள்விக்கும், இலக்கியப் படைப்புக்கும் உள்ள அடிப்படையான அணுகுமுறையை வைத்தே ஞானியர்களின் கவிதைகளை நாம் நோக்க வேண்டும். ஏனென்றால் ஞானியர்களின் கவிதைகளிலே இலக்கிய மொழி மேம்பாடு அமைவதோடுகூட, மந்திர ஆற்றல் என்ற நுட்பமான ஒரு மேம்பாடும் கருவிலேயே அமைந்து காண்கிறது. காரணம், அவை நிறை மொழி மாந்தர்களின் ஆணையிலே பிறந்த மறை மொழிகள்!

திருமூலர் தமது கவிதை என்னும் சொல் — வேள்வியைப் பற்றி அற்புதமாகப் பாடுகிறார்:

**வேட்டவி உண்ணும்**
**விரிசடை நந்திக்கு**

வேள்வியிலே சொரியப் பெறுகிற அவிசாகிய அவிக்கு 'வேட்டவி' என்று பெயர். இந்த வேட்டவியை விருப்பத்தோடு ஏற்று உண்ணுகிற எம் பெருமானே விரிசடைக் கடவுளாகிய நந்தி பெருமான்! நந்தி—சிவன்.

**வேட்டவி உண்ணும்**
**விரிசடை நந்திக்குக்**
**காட்டவும் நாமிலம்**

[காட்டுதல் - நிவேதனமாக இடுதல். நாமிலம் - நம்மிடம் இல்லை. நம்மால் முடியாது.]

விரிசடைக் கடவுள் யாகத்திலே விரும்பி அவி உண்பவன்! நாங்களோ கண் மூடித் தவமியற்றுகிறவர்கள். எங்களிடம் அவியாக

யாகத்திலே சொரிவதற்குத் திரவியங்கள் இல்லை. சர்க்கரைப் பொங்கலுக்கோ அல்லது வேள்வியிலே ஆகுதியாகக் கொடுப்பதற்குரிய வேறு பொருள்களுக்கோ நாங்கள் எங்கே போவோம்? எங்களிடம் கிடையாது, நாம் இலம்!

**வேட்டவி உண்ணும்**
**விரிசடை நந்திக்குக்**
**காட்டவும் நாம்இலம்**
**காலையும் மாலையும்**
**ஊட்டவி ஆவன**

[ஊட்டவி – ஊட்டுகிற அவி. வேள்வித் தீயிலே இடுகிற அவிசாகிய பொருள். அதுவே எம்பெருமான் உண்ணுவதற்கு ஊட்டுகிற, சொரிகிற, அவி].

நாள்தோறும் காலையிலும் மாலையிலும் சொரிவதற்குரிய ஊட்டவியான வேள்விஅவி எங்களிடம் வேறு எதுவும் இல்லை! நாங்கள் சொரிகிற, இடுகிற, அதாவது நிவேதனமாகக் காட்டுகிற அவி எது?

**வேட்டவி உண்ணும்**
**விரிசடை நந்திக்குக்**
**காட்டவும் நாம்இலம்**
**காலையும் மாலையும்**
**ஊட்டவி ஆவன**
**உள்ளம் குளிர்விக்கும்**
**பாட்டவி காட்டுதும்**

எங்களிடம் வேட்டவியான ஊட்டவி வேறு எதுவும் இல்லை. காலையும் மாலையும் நாங்கள் மொழியினால் யாகம் செய்து, ஊட்டவியாகப் பாட்டவியைச் சொரிகிறோம்!—என்கிறார் திருமூலர்.

ஞான வேள்வியாக மொழியிலே செய்கிற ஒலித் தவம் இது! இந்தச் சொல் வேள்வியிலே ஊட்டவியாகச் சொரிகிறது எதை? பாடல்களையே!

ஆம், ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு கவளம் சர்க்கரைப் பொங்கல், அல்லது ஒவ்வொரு பிடி யாகத்துக்குரிய ஒரு நிவேதனப் பொருள்!

யாகம் நெருப்பினால் செய்கிற வேள்வி இல்லை. அது மொழியினால் இயற்றுகிற யாகம். அதற்குரிய அவி கவிதையாகிற ஊட்டவியே!

திருமூலர் தாம் தவத்திலிருந்து மோனம் கலைந்து வந்து உதடசைத்து மொழிந்த ஒவ்வொரு மந்திரமும் இந்தப் புனித வேள்வியிலே சொரிகிற அவியேயாகும்!

வேட்டவி உண்ணும்
விரிசடை நந்திக்குக்
காட்டவும் நாமிலம்
காலையும் மாலையும்
ஊட்டவி ஆவன
உள்ளம் குளிர்விக்கும்
பாட்டவி காட்டுதும்
பாலவி ஆமே

[உள்ளம் குளிர்விக்கும் – உள்ளத்தைத் தண்மை செய்கிற. பாலவி – பாலாகிய தூய அவி; இன்னொரு பொருள் விரும்பி ஏற்றுக்கொள்கிற விருப்பமான அவி.]

சிவபெருமான் சங்கப் புலவன், சங்கத் தலைவன், தமிழ் தந்த ஞானியரைத் தந்த தமிழ்த் தந்தை! அவனுக்கு விருப்பமான பாலவி எது? தமிழ்க் கவியே!

ஞானிகளாகிய சித்தர்களின் இலக்கியத்திலே, யாகத்தின் உச்ச கட்டமான அவி சொரிதல் என்னும் பூரண ஆகுதியிலே, ஞானப் பாடல்களே ஊட்டவி என்கிற பாட்டவியாக அமைகின்றன என்பது சித்தர் வாக்கு.

இந்த மாபெரும் சித்தரின் ஞான வாக்குக்கு இலக்கியமாகத் திகழ்கிற சில சித்தர்களின் பாடல்களை நமது ஆய்வு நூலின் பூரண ஆகுதிப் பகுதியான மூன்றாம் பகுதியிலே தொகுத்து வழங்கியுள்ளேன்.

இந்தத் தொகுப்பில் சேராத பதிகங்கள், பாசுரங்கள், அ... ப் பாடல்கள் நம் தமிழ் மொழியில் ஆயிரம் ஆயிரமாக உள்ளன. அவற்றில் தோத்திரப் பாடல்களும் உண்டு; மந்திர ஆற்றற் பாடல்களும் உண்டு. இரண்டுமே சான்றோர் அருளிய கவிதைகளே.

சித்தர்களாக வாழ்ந்த பெரியோர்களின் வாக்குக்குள்ள தனியான மந்திர ஆற்றலைப் பற்றி முந்திய பகுதிகளிலே விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால் இந்தப் பகுதியிலே சேர்க்கப்பட்டுள்ள பாடல்கள் அனைத்தும் ஞான யோக சித்தர்களான நிறைமொழி மாந்தரின் ஆணை மொழிகளாம். எனவே இவை மந்திரப் பாடல்களாக விளங்குபவை என்பதை உள்ளத்தில் நன்கு பதிய வைத்துக் கொள்ள வேண்டும். சொற்கள் அனைத்தும் தமிழ் அகராதியிலுள்ள சொற்களே. உரைநடைக்கும், கவிதைக்கும், மந்திரத்துக்கும், அனைத்துக்கும் இதே சொற்கள்தாம் பயன்படுகின்றன. ஆனால் அந்தச் சொற்கள் சேர்ந்து இணைகிற யாப்பமைதியிலே ஒன்றுக்கொன்று எப்படி மாறுபடுகின்றன என்பதை மறந்துவிடக் கூடாது. வெறும் மொழிச்சொல் எப்படித் தவமொழிச் சொல்லாகி மந்திரமாக ஒலிக்கிறது என்ற பெரிய நுட்பம் இதுவேயாகும்.

இந்த மந்திர உண்மையை உள்ளத்தில் உட்கொண்டு, சித்தர்களின் பாடல்களை ஞான பூசனைமுறையிலே ஓதினால் அவை சித்தர் நெறியிலே பயில்கின்ற ஆன்ம நேய மாணவர்களுக்கு ஆன்ம ஆற்றலை

வளர்ப்பதிலே பெரிதும் துணை செய்யும்! இதுவே குருநாதர்கள் ஞான யோகம் கற்கப் புகும் சீடர்களுக்கு அறிவுறுத்துகிற ஓர் இரகசிய நுட்ப உணர்வுரையாகும்!

சித்தர் இலக்கியங்களில் காண்கிற பற்பல பயிற்சி முறைகளையும், முக்கியமாக ஒலி முறையையும் ஒளி முறையையும், கற்று முன்னேறுகிற பயிற்சியாளர்கள் ஞானிகளின் தவப் பாடல்களை ஓதி ஓதி, ஆசான்களின் நேர்முகக் கண்காணிப்பிலே ஞானப் பாதையில் நடந்து செல்வார்களேயானால், தமிழகத்து மகான்கள் வழங்கியுள்ள ஒப்பற்ற ஞானச் செல்வங்கள் மெய்யான வழித் துணையாகத் திகழ்ந்து அவர்களை மேலும் மேலும் ஆன்ம நெறியிலே அழைத்துச் செல்லும்! விண்ணிலும் காற்றிலும் எவ்விச் செல்வது போன்ற ஞான ஆற்றல் ஒரு பெரிய வலிமையாகப் பொங்கிப் பெருகும். பேரின்பத்தைத் துய்ப்பதற்குரிய ஞான உடம்பாக இந்த மேனி ஒளியை உட்கொண்டு திகழும். அதோடு ஞானானந்தப் பெருவாழ்வு என்ற ஆனந்த நிலையை இந்த உடம்பிலேயே துய்த்து அமர வாழ்வு வாழ்வதற்குரிய சாதனை சித்திக்கும்.

வளர்கின்ற புதிய தலைமுறையானது விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் ஒன்றித் திகழ்கிற அறிவியற் களஞ்சியமே சித்தர்களின் இலக்கியங்கள் என்பதை நன்கு அறிந்துணர்ந்து, ஞான பூமி என்று அழைக்கப் பெறுகிற நமது புண்ணியத் திருநாட்டிலே சுத்த சன்மார்க்கப் பேரின்ப வாழ்வை வாழ்வதற்குரிய வாய்ப்புகளை அடையவேண்டும் என்று வேண்டுதல் செய்து, தமிழகத்துச் சித்தர் பெருமான்களின் திருவடிகளைப் பணிவன்புடன் இறைஞ்சி வழிபடுகிறேன்!

A. No. 12849
LIBRARY, KOVILOOR

# இந்த ஆய்விலே ஒப்பு நோக்கிய நூல்கள்


1. அபிதான சிந்தாமணி — ஆ. சிங்காரவேலு முதலியார்
2. அவ்வையின் குறள் (விளக்க உரை) — இரத்தினசபாபதியார்
3. அவ்வையின் குறள் (விருத்தி உரை) — சுந்தரமாணிக்க யோகீசுரர்
4. அன்புநெறியும் அருள்நெறியும் — இரெட்டியபட்டி சுவாமிகள்
5. ஆடல்வல்லான் — திருவாவடுதுறை ஆதீனம்
6. உபநிஷதப் பலகணி — ராஜாஜி
7. கணபதி — திருவாவடுதுறை ஆதீனம்
8. கம்பராமாயணம் — பி.என்.சி. வெளியீடு
9. கம்பராமாயணம் — ரசிகமணி வெளியீடு
10. கருணாமிருத சாகரம் (2 தொகுதிகள்) — எம். ஆபிரகாம் பண்டிதர்
11. கலைக்களஞ்சியத் தொகுதிகள் — தமிழ் வளர்ச்சிக் கழகம்
12. காயசித்தி — இரத்தினசபாபதியார்
13. காரியசித்தி — இரத்தினசபாபதியார்
14. குமரகுருபரர் பிரபந்தங்கள் — வி. சிதம்பர ராமலிங்க பிள்ளை கையேடு
15. கைவல்லிய நவநீதம் — தாண்டவமூர்த்தி சுவாமிகள்
16. சங்க இலக்கியம் (2 பகுதிகள்) — பாரி நிலைய வெளியீடு
17. சித்தர் ஞானக்கோவை — மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை பதிப்பு
18. பெரிய ஞானக் கோவை — இரத்தின நாயக்கர் அண்ட் சன்ஸ் பதிப்பு
19. சிவஞான சித்தியார் — திருவாவடுதுறை ஆதீனம்
20. சிவஞான போதச் சித்தாந்தக் கொத்து — திருவாவடுதுறை ஆதீனம்

21. சித்தர் பாடல்கள் — தா. கோவேந்தன் பதிப்பு
பூம்புகார் பதிப்பகம்

22. சித்தர் பாடல்கள் — ச. மெய்யப்பன்
மணிவாசகர் பதிப்பகம்

23. தமிழ் இலக்கிய வரலாறு — டி.வி. சதாசிவப் பண்டாரத்தார்
அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு

24. திருமந்திரம் — கயிலாயச் சித்தர் உரை

25. திருமந்திரம் — சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

26. திருமந்திரம் — பஞ்சாக்கர தீப உரை,
திருவாவடுதுறை ஆதீனம்

27. திருமந்திர சம்பிரதாயம் — இரத்தினசபாபதியார்

28. திருமுறை வெளியீடுகள் — தருமபுர ஆதீனம்

29. திருமுறை வெளியீடுகள் — திருப்பனந்தாள் காசி மடம்

30. திருவருட்பா — ஊரன் அடிகள் பதிப்பு,
இராமலிங்கர் பணிமன்றம்

31. திருவாசகமும் சிவராஜயோகமும் — இரத்தினசபாபதியார்

32. தொல்காப்பியம் — சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

33. நவமணிகள் — திருவாவடுதுறை ஆதீனம்

34. நன்னூல் — ஆறுமுக நாவலர் பதிப்பு

35. நாலடியார் — சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

36. பத்துப்பாட்டு — டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் பதிப்பு

37. பன்னிரு திருமுறைத் திரட்டு — சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

38. நாலாயிர திவ்வியப் பிரபந்தம் — தி லிட்டில் பிளவர் கம்பெனி

39. Tamil Studies — A.V. Subramania Aiyar
Manivasakar Noolakam

40. The Poetry and the Philosophy of the Tamil Siddhars — A.V. Subramania Aiyar
Manivasakar Noolakam

41. Spokesmen for God — Edith Hamilton

